# மதனகல்யாணி

முதல் பாகம்

BOOK LOVER CIRCULATING LIBRARY
Bng-21
Bng-2A

நூலாசிரியர் :

வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார், B. A.,

ஆறும் பதிப்பு

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
ஜி. டி., சென்னை.

காபிரைட்] 1956 [விலை ரூ. 2-8-0

PRINTED AT THE
THIRUMAGAL VILASAM PRESS,
G. T. MADRAS - 1.

Copy Right and Rights of Translation in any other Languages, are reserved by the Publishers.

THE MADURAI TAMIL SANGAM
BOOK LOVER CIRCULATING LIBRARY
Bng-21
Bng-2A

# மதன கல்யாணி

## 1-ம் அதிகாரம்

### உல்லாச புருஷர்கள்

சீமைச் சரக்குகளும் புதிய நாகரிகங்களும் அன்னிய நாடுகளி னின்று நேராக வந்திறங்குவதான சிறப்புவாய்ந்த சென்னைமா நகரின் தென்மேற்கு பாகம் தேனும்பேட்டை என்ற பெயரால் குறிக் கப்பட்டு வருகிறது. அது சுமார் இரண்டு மயில் நீள அகலம் பரவிய தாகவும் ஆயிரக் கணக்கான அழகிய பங்களாக்களைக் கொண்டதாகவு மிருக்கிறது. சென்னையில் பெருத்த உத்தியோக பதவியை வகித்த ஐரோப்பிய துரைமார்களும், இந்திய வக்கீல்களும், ஐரோப்பிய வர்த்தகர்களும் அந்த பங்களாக்களில் வசித்ததன்றி, சென்னை ராஜ தானியின் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள முக்கியமான சில சமஸ்தா னத்து ஜெமீந்தார்களும், போலி மகாராஜாக்களும் ஏராளமான தங் களது செல்வத்தைச் செலவிட்டு நவநவமான சுகபோகங்களை யெல் லாம் அநுபவித்து குதூகலமாகத் தங்களது பொழுதைப் போக்கும் பொருட்டு இங்கு வந்து பங்களாக்கள் வாங்கி அவற்றில் வசித்து வந் தனர். அவைகளில் மனோகரமான அழகிய பூச்செடிகள் நிறைந்த சோலைகளும், மரங்களடர்ந்த தோப்புகளும், தாமரை, அல்லி, நீலோற்பலம் முதலியவை தவழ்ந்த தடாகங்களும், வாவிகளும் பெரும்பாலும் சூழ்ந்து, அவற்றில் வசிப்போர் தாமிருப்பது மண் ணுலகத்திலோ விண்ணுலகத்திலோவென்று சந்தேகிக்குமாறு நறு மணந்தூவித் தீங்கனி உதிர்த்துக் குளிர்ச்சியும் இன்பமும் கொள்ளை யாகச் சொரிந்து சிங்காரமாய் விளங்கின. ரிஷியின் ஆசிரமமென் னத் தகுந்த இத்தகைய வனமாளிகை யொன்றனுள், ஒருநாள் மாலைப்பொழுதில் இந்தக் கதை தொடங்குகிறது.

அப்போது சூரியன் மேற்றிசையில் மறையும் தருணத்திலிருந் தான். அவனது அழகிய செங்கிரணங்கள் அந்தச் சோலையின் மரங் களிலும், செடிகளிலும், பழுத்துத் தொங்கிய கனிகளின் மீதும்

வாவியிலிருந்த தண்ணீரின் மேற்புறத்திலும் தவழ்ந்து அவற்றின் இயற்கை யழகைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டின. குயிலினங்கள் யாவும் அங்கிருந்த பழங்களை சுயேச்சையாகத் தின்று, பளிங்கெனத் தெளிந்த தண்ணீரைப் பருகி, செருக்கடைந்து ஆனந்த பரவசமுற்று மெய்ம்மறந்து தமது தீங்குரலை யெடுத்துப் பாடி இனிமையை அள்ளி இறைத்துக்கொண்டிருந்தன. கிள்ளைகளும், அணில்களும் தத்தம் பெண்டு பிள்ளைகளோடு கொஞ்சிக் குலாவிக் குதூகலமாகத் துள்ளிக் குதித்துப் பண்டிகை கொண்டாடின.

மாளிகைக்குள் நன்முக அலங்கரிக்கப்பட்டிருந்த விசாலமான ஒரு கூடத்தின் ஒரு புறத்தில் சாய்மான நாற்காலி யொன்றன் மேல், நாற்பத்தைந்து வயதடைந்த ஒரு ஸ்திரீ சாய்ந்து மூக்குக் கண்ணுடியணிந்த கண்களினுல் ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். இன்னெரு மூலையில் பிரம்புப்பாய் விரிக்கப்பட்ட தரையில் ஓர் அழகிய யௌவன மங்கை உட்கார்ந்து, தனக்கெதிரிலிருந்த வீணையை மீட்டி, ஹம்ஸத்வனி ராகத்தை எடுத்து அற்புதமாக ஆலாபனை செய்து, அந்த இனிய இசையோடு தனது மாதுரியமான குரலைப் புணர்த்தி அமிர்தத்துளிகளை வாரி ஜிலீர் ஜிலீரென்று வீசிக்கொண்டிருந்தாள். அவளது வயது பதினைந்து அல்லது பதினுறுக்குமேலிராது. அழகும் இளமையும் உருக்கொண்டு வந்தனவோவென அமைந்திருந்த அவளது அற்புதமேனி எவ்விதமான குற்றம் குறைபாடின்றித் தேஜோமயமாக விளங்கியது. உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுள்ள ஒவ்வோர் அங்கமும் சம்பூரணமான வளர்ச்சியும் உன்னத வனப்பும் பெற்று, காண்போர் மனதையும் கண்களையும் கவர்ந்து கலக்கின. சுருண்டு சுருண்டு நெளிந்து சென்றிருந்த சிரத்தின் உரோமமும், கயல்மீன் பிறழ்ந்த கண்களும் மாதுளை மலர் போலச் சிவந்து கனிந்து தேன் ததும்பிய அதரங்களும், முல்லையரும்பின் பத்திகளைப் போலிருந்த மாசற்ற பற்களும், தந்தத்தில் கடைந்தெடுத்த சிமிழ் போலக் கவிழ்ந்திருந்த கன்னங்களும் ஒன்று கூடிய சுந்தரவதனத்தில் மந்தஹாசமும் மகிழ்ச்சியும் இயற்கையிலேயே தவழ்ந்து, அவளது நற்குணத்தையும், கபடமற்ற சுபாவத்தையும் எளிதில் காட்டின. அவள் தனது வாயைத் திறந்தபோதெல்லாம் வலது கன்னம் அழகாகக் குழிந்து அவள் மேம்பட்ட சுகபோகங்களுக் குரியவளென்று

ஓயாமல் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தது. தங்கப் பதுமையைப் போலிருந்த அந்த உன்னத மடந்தையின் எந்த அங்கத்தை நோக்கி னும், மனம் தெவிட்டாமல் அதை விட்டு வேறொன்றிற் செல்ல மாட்டாமல் பிரமித்து அப்படியப்படியே அந்த அழகில் ஈடுபட்டு மயங்கி நின்றது. அவளது முடிமுதல் அடிவரையிலுள்ள எந்தபாகத் தைப் பார்த்தாலும் அற்புதமான அழகு ஜ்வலித்துக் கண்கொள் ளாக் காட்சியாக அமைந்து இன்பத்தையும் சஞ்சலத்தையும் உண் டாக்கியது. மிருதுத் தன்மையும், கற்பின் உறுதியும், பெருந்தன் மையும், நற்குல ஒழுக்கமும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென் னும் பெண்டிர் தன்மைகளும் சுடர்விட்டொளிர்ந்த அருங்குணமணி யான அப்பெண் பாவையைக் கண்டமாத்திரத்தில், உலகைத் துறந்த தபசிகளும் கலக்க மடைந்து "சுவர்க்க லோகமே பெண்ணுருவாகத் தோன்றி இவ்வுலகிலிருக்கையில் வீணிலே உலகைத் துறந்து விட் டோமே" என்று வருந்தத் தக்க சிறப்பு வாய்ந்தவளாக இருந்தாள்.

இத்தகைய ரூபலாவண்ணியம் பொருந்திய நங்கைக்கு அவளது பெற்றோர் கண்மணியம்மாள் என்று பெயர் சூட்டியது முற்றிலும் பொருந்துமல்லவா. அந்த அழகிய மடமங்கை கிருஷ்ணபுரம் சமஸ் தானத்து ஜெமீந்தாரது தம்பியின் புதல்வி; குழந்தைப் பருவத்தி லேயே தாய் தகப்பன்மாரை இழந்தவள்; தந்தையோடு பிறந்த அத்தையினால் மிகவும் அருமையாக வளர்க்கப்பட்டவள். மீனாக்ஷியம் மாள் என்று பெயர் பூண்ட அந்த அத்தையே, முன் கூறப்பட்டபடி சாய்மான நாற்காலியில் புஸ்தகம் படித்திருந்தவள்; மீனாக்ஷி அம்மா ளுக்கு, இறந்துபோன தனது கணவனது நிலங்களிலிருந்து வருஷம் ஒன்றுக்குப் பதினாயிரம் ரூபாய் வருமானம் வந்துக்கொண்டிருந்தது. அவளுக்கு சந்தானமில்லாமற் போனமையால், அவள் கண்மணியம் மாளையும் அவளுக்கு முன் பிறந்தவனான துரைராஜா என்றவனையும் தனது சொந்த மக்களைப்போல அன்பும் ஆதரவும் சுரக்க, செல்வ மாகவும் சிறப்பாகவும் வளர்த்து வந்தாள்; இருவருக்கும் நன்றாகக் கல்வி கற்பித்ததன்றி, கண்மணியை வீணை வாசிப்பதில் பயிற்றுவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு வீணைவித்துவா னொருவனையும் அமர்த்தி இருந்தாள்.

இந்தக்கதை தொடங்கிய மாலையில் கண்மணியம்மாள் ஹம்ஸத் வனி வாசித்தபோது, அந்த வீணைவித்துவான் அவளுக்குச் சற்று

தூரத்தில் மிகவும் மரியாதையாக விலகி உட்கார்ந்திருந்தான்; அவன் மைசூரி லிருந்த மகாவித்துவான் ஒருவரது மகனென்பதும், அவனும் தந்தையைப் போலவே கீர்த்தி வாய்ந்தவனென்பதும் எல்லோருக்கும் தெரியவே, ஜெமீன்தார்களின் பங்களாக்களிலுள்ள சிறுவர் சிறுமியர்களுக்கெல்லாம் வீணை கற்பிக்கும்படி அவனை ஏற்படுத்திக் கொண்டனர். மதனகோபாலன் என்ற அழகிய பெயர் கொண்ட வீணை வித்துவானாகிய அந்த யௌவனப் புருஷன் தனது பெயருக்குத் தக்கபடி மன்மதனை வென்ற அழகும் சிவந்த மேனியும் நற்குண நல்லொழுக்கமும் ஆண்மையும் கூரிய புத்தியும் கல்வித் திறமையும் முகத்திலேயே ஜ்வலிக்கப்பெற்றவனாக விளங்கினான். அவன் தனது நிலைமைக்குத் தகுந்தபடி மரியாதை பணிவு அடக்கவொடுக்கம் முதலியவற்றைப் பெரிதும் காட்டி மிருதுவாகவும் அழகாகவும் பேசி கண்மணிக்கு ராக ஆலாபனை பயிற்றிக் கொண்டிருந்தான். கண்மணியம்மாளோ, தான் ஜெமீந்தாரது வீட்டுப் பெண்ணென்ற நினைவினால் செருக்கடைந்து அவனை அசட்டை செய்தவளாய்க் காணப்படாமல் ஒரு குருவிடம் பணிவாகக் கல்வி கற்றுக்கொள்ளும் சிஷ்யனைப் போல பயபக்தியோடு ஒழுகி, அவனது வாக்குக்கு எதிர்வாக்கின்றி வித்தை கற்று வந்தாள்.

இவர்கள் இங்ஙனமிருக்க, அந்த மாளிகையின் மேன்மாடியில் கொலு மண்டபத்தைப் போல அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு விடுதியில் அதேகாலத்தில் இரண்டு யௌவனப் புருஷர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவன் கண்மணியம்மாளின் தமயனான துரைராஜா வென்பவன். அவனுக்கு இருபத்துமூன்று வயதிருக்கலாம். அவன் உயர்வான சிவந்த அழகிய மேனியைக் கொண்டவன். அவனோடிருந்தவன் மற்றவன் மாரமங்கலம் என்ற பெருத்த சமஸ்தானத்து ஜெமீந்தாரின் ஏகபுத்திரன்; அவன் தந்தையற்றவன்; வயது பதினேழிருக்கலாம். அவன் குள்ளமான கருத்த மேனியுடையவன். அவனுக்கே கண்மணியம்மாளை மணம்புரிவிப்பதென்று, அவனது தாயான கல்யாணியம்மாளாலும் மீனாக்ஷியம்மாளாலும் முடிவு செய்யப்பட்டிருந்தது.

துரைராஜாவென்பவன் நன்றாகப் படித்தவனானாலும், அவன் தனது கல்வியை நல்லவழியில் உபயோகிக்காமல், தீயவழிகளில் பயன்படுத்தும் துர்க்குணமுடையவன். நாணயம் நல்லொழுக்கம் என்

பவைகளுக்கும் அவனுக்கும் வெகுதூரம்; எத்தகைய துர்நடத்தைக்கும் அவன் பின்வாங்காதவன். மாரமங்கலம் மைனரோ பிஞ்சில்பழுத்தவன்; மூடபுத்தியும், அசட்டுத் துணிபும், அசங்கியமான மொழிகளையே உபயோகிக்கும் இழிகுணமும், கரைகடந்த செருக்கும், ஆணவமும், கோரரூபமும், கூனல் முதுகும், யாவரையும் தூஷித்து அலட்சியமாக எடுத்தெறிந்து பேசுந்தன்மையும் பெற்றவன். அவ்விருவரும் ஒரு நிமிஷநேரமும் பிரியாமல் மிகவும் அந்தரங்கமான நண்பர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் இணைபிரியாமலிருந்தது நட்பென்னும் உண்மையாக. வாத்சல்யத்தினால் கட்டுப்பட்டு இருந்ததன்று ஒரு துஷ்டனுக்கு இன்னொரு துஷ்டனது துணையும் உதவியும் அவசியமாக வேண்டி இருந்தன. துரைராஜாவின் விளையாட்டுச்செலவுக்கு மீனாக்ஷியம்மாள் சொற்பமானபணமே கொடுத்து வந்தாள். மைனருக்கோ பெருத்த பணத்தொகை மாதம்மாதம் வந்துக்கொண்டிருந்தது. துரை ராஜாவுக்கோ சென்னையிலுள்ள விலைமாதரிடமெல்லாம் நட்புண்டு. மைனருக்கு அந்த விஷயத்தில் அதிகமான பழக்கமில்லை. துரைராஜாவின் நட்பிருந்தால், அவனது நட்பினரான பெண்பாலார் யாவரும் தனக்கும் நட்பினராக ஆவார்கள் என்பது மைனரது கருத்து. மைனரது நட்பிருந்தால், அவனது பணப்பையில் எட்டியமட்டும் தனது கையை நுழைக்கலாமென்பது துரைராஜாவின் எண்ணம். நிற்க, துரைராஜா என்பவன் உலக விஷயங்களில் நன்றாக அடிபட்டவன்; உலகத்தில் என்னென்ன துன்மார்க்கங்கள் இருக்கின்றனவென்பதைக் கரைக்கண்டவன். சென்னையில் இன்னின்ன விடத்தில் இன்னின்ன திருவிளையாடல்கள் நடக்கின்றன வென்பது அவனுக்கு மனப்பாடம்; அவனுடனிருந்தால் தானும் அவனைப் போலவே தேர்ச்சியடையலா மென்பது மைனரது கருத்து. இவ்வாறு அவ்விரு தூர்த்த சிகாமணிகளும் ஒருவரையொருவர் துணையாகப்பற்றிக் கொண்டிருந்தனர்.

அவ்விருவரும் முதல்நாளிரவில், வி. பி. ஹாலில் நடந்த நாடகம் (Drama) பார்த்தவ ராதலின், அன்றைய பகலில் பன்னிரண்டு மணிக்கெழுந்து போஜனம் முடித்துக்கொண்டு படுத்தவர்கள் சற்று முன்னரே எழுந்து சிற்றுண்டி யருந்தி கையில் சிகரெட்டைப் பிடித்துக்கொண்டு சீட்டாட உட்கார்ந்தனர். முதல் நாளிரவில் பார்த்த நாடகக் காட்சிகளே அவர்களது அகக்கண்ணில் அப்போது வந்துக்

கொண்டிருந்தன. இன்பகரமான அந்த நினைவுகளிலேயே அவர்கள் ஈடுபட்டிருந்தமையால், அதைப்பற்றியே பேசத்தொடங்கினர். அப்போது மைசூரிலிருந்து பாலிகா மனமோகன நாடகக் கம்பெனி என்ற பெயருடைய ஒரு கூட்டத்தார் சென்னைக்கு வந்து, சில தினங்களாக வி. பி. ஹால் என்னும் கட்டிடத்தில் ஆடிக்கொண்டிருந்தார்கள். அந்தக் கம்பெனியின் சொந்தக்காரர் ஆண்பிள்ளையானாலும், அதில் தோன்றி நடித்தோர் யாவரும் பெண்பாலராகவே இருந்தனர். அவர்கள் யாவரும் நன்றாகப் படித்தவர்கள்; 8-வயது முதல் 25-வயதுக்கு மேல்படாத யௌவனப் பருவமும் ஒருவரைப் போல் எல்லோரும் கந்தருவ ஸ்திரீகளைப் போலத் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்கொள்ளாவனப்பு வாய்ந்த மனமோகன சுந்தர ரூபிணிகள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வேஷங்களை தத்ரூபமாக திறமையோடு நடித்ததன்றி ஒவ்வொருவரும் பார்சீ நாட்டியம், இங்கிலீஷ் டான்ஸ், பரதநாட்டியம் முதலியவற்றிலும் அற்புதமாகப் பயிற்றப்பட்டிருந்தனர். ஒவ்வொருவரும் தனித்தனியாக நாட்டியமாடினாலும், பலர் ஒன்றுகூடி நாட்டியமாடினாலும், எவ்வகையாலும் அந்த நடனம் மெச்சத் தகுந்ததாகவே இருந்தது. அவர்கள் சென்னைக்கு வந்த சொற்ப காலத்திற்குள் எத்தனையோ தங்கப் பதக்கங்களும் வேறுவிதமான பரிசுகளும் பெற்றுவிட்டதன்றி, நாடகம் பார்க்கச் சென்றோரின் மனதை மயக்கி அவர்கள் இரவு பகல் அதே நினைவைக் கொண்டு தவித்து நிற்கும்படி பித்தர்களாக்கி விட்டனர். அந்தப் பெண்மக்கள் யாவரிலும் மேலானவளுக்கு **மோகனாங்கி** என்று பெயர். அவள் மகாவிஷ்ணுவின் மோகனாவதாரத்தைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டிருந்தாள். அவள் மைசூர்க் கலாசாலையில் பி. ஏ. பரிட்சையில் படித்துத் தேறினவள்; அழகிலோ அவளுக்கிணை அவளேயன்றி மற்றவரை அவளுக்கு இணைசொல்வது சிறிதும் பொருந்தாது. அவள் ஸ்திரீவேஷம் போட்டு வந்துவிடுவாளானால் ஜனங்களின் மனதை முதலிலிருந்து கடைசிவரையில் காந்தம் போலக் கவர்ந்தவண்ணமிருப்பாள். ஒருநொடியில் ஜனங்களை சிரிக்கச்செய்வாள்; அடுத்த நொடியில் அவர்கள் கண்ணீர் சொரிந்து கதறியழும்படி செய்து விடுவாள், அவளது குரலோ குயிலையும் யாழையும் பாகையும் தேனையும் தோற்கச் செய்வது. நாட்டியத்திலோ ஊர்வசி, திலோத்தமை என்னும் இந்திரலோகத்து தாசிகள் எப்படிநடிப்பார்க

ளென்பதை பூலோகத்து ஜனங்கள் கண்டநுபவிக்கும்படி செய்பவள் அவளது தேகத்தின் அற்புதமான அமைப்பும் ஜாஜ்வல்லியமான வனப்பும் அவளைப் படைத்த சர்வ வல்லமையுள்ள ஈசுவரனையே மயக்கத்தக்கதா யிருந்தன. அவளிடத்தில் இத்தனை மேம்பாடுக ளிருந்தும், அவள் ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குமுன் வந்து நடிப்பவளானாலும், அவள் அந்தரங்கத்தில் மகாநற்குண நல்லொழுக்கம், அடக்க வொடுக்கம், பரபுருஷரை விஷமென மதிக்கும் பதிவிரதைக்குணம் முதலிய அரிய மேம்பாடுகளைப் பெற்றிருந்தாள். சென்னை முற்றிலும், அதைச் சுற்றி நெடுந்தூரம் வரையிலுமுள்ள நாடக விருப்பமுள்ள ஜனங்கள் எல்லோரும் அவளது சிறப்பைப் பற்றி புகழ்ந்துபேசி தங்களது பொழுதையெல்லாம் வீண் பொழுதாகப் போக்கிக் கொண்டிருந்தனர். பெருத்த பெருத்த மகாராஜர்களெல்லாம் அவளோடு தனிமையில் ஒரு வார்த்தை சொன்னாலும் தங்களது ஜென்மம் கடைத்தேறி விடுமென்று நினைத்ததன்றி, அவள் பொருட்டு தங்களது உடல் பொருள் ஆவி ஆகிய சகலத்தையும் அர்ப்பணம் செய்யத் தயாராக விருந்தனர். இவ்விஷயமாக அவளுக்கு ஒவ்வொரு நாளும் நூறு கடிதங்களுக்குமேல் தபால் மூலமாகவும் ஆட்கள் மூலமாகவும் அனுப்பப்பட்டு வந்தன. அவள் எதையும் திறந்துகூடப் பாராமல், அப்படியே அடுப்பிற்குள் எறிந்து விடுவாள். அவளை, பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு போய்விட வேண்டுமென்று பல சமஸ்தானதிபதிகள் நினைத்தனர். ஆனால் அவள் எந்த இடத்தில் தங்குகிறாளென்பதை ஈசுவரனும் காண முடியாம லிருந்தது. அந்த நாடகத்தில் நடித்த பெண்களில் முக்கியமான சில நடிகைகள்மாத்திரம் தமக்கு விருப்பமான வேறிடங்களில் சுயேச்சையாக வசிக்கும்படி அநுமதிக்கப்பட்டிருந்தனர். மற்ற சிறுமியர் யாவரும் புரசைப்பாக்கத்தில் ஒரு தனியான பங்களாவில் நாடகத்தின் எஜமானனுடன் கூடவே அவனது பார்வையிலிருந்தனர். இந்த நாடகம் சென்னைக்கு வந்த பிறகு அவர்கள் ஆடிய ஆட்டங்களுக் கெல்லாம் தவறாமல் போனவர்களுள் துரைராஜாவும் மாரமங்கலம் மைனரும் முக்கியமானவர்கள்.

கதைத் தொடக்கத்தில் இவ்விருவரும் சீட்டாட உட்கார்ந்தார்களல்லவா? அப்போது கீழே கண்மணியம்மாள் வீணையை மீட்டிப்

பாடிய இன்னிசை மேலே எட்டியது. அதைக் கேட்ட மைனர் ஜெமீந்தார், "துரைராஜா! மோகனங்கியின் பாட்டைக்கேட்ட காதுக்கு, இது எப்படி இருக்கிறது பார்த்தாயா? இது பாட்டாகவே இல்லே. ஒப்பாரி சொல்லி அழுவதுபோ லிருக்கிறது" என்று கூறி நகைத்தான். தனது தங்கையின் பாட்டை மிகவும் இழிவாக மைனர் தூஷித்ததைக் கேட்டும் துரைராஜா ஆயாசமென்பதே கொள்ளாத வனாய் அதை ஆமோதிப்பவன்போலப் புன்னகை செய்தவண்ணம் சீட்டாட்டத்தை கவனித்தான். அதன் பிறகு இரண்டொரு நிமிஷ நேரம் இருவரும் மௌனமாகவே தங்களது வேலையைப் பார்த்தனர். திரும்பவும் மைனர் துரைராஜாவைப் பார்த்து, "நமது கண்மணிக்கு வீணைகற்றுக்கொடுக்கும் மதனகோபாலன் எவ்வளவு அழகா யிருக் கிறான், பார்த்தாயா? அவனுடைய ஜாதி யென்னவென்று சொல்ல உன்னால் முடியுமா? எங்கே, உன் சாமர்த்தியத்தைப் பார்க்கலாம். என்றான்.

துரைராஜா புன்னகை செய்து, "இப்படித்தான் என்னுடைய சாமர்த்தியத்தைப் பார்க்கிறதா? ஒரு பெண்பிள்ளையைக் காட்டி, அவள் என்ன ஜாதி என்றால், பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என்ற ஜாதிகளுள் அவள் எதில் சேர்ந்தவளென்பதை நான் உடனே சொல்லி விடுவேன். ஆண்பிள்ளைகளுடைய ஜாதியைக் கண்டுபிடிக்க என்னாலாகுமோ" என்றான்.

அதைக்கேட்ட மைனர் குலுங்க குலுங்க நகைத்து, "இவ்வளவுதானா உன் சாமர்த்தியம்! இதற்கு முன் இவனைப்பற்றி நான் விசாரித்ததில்லை. இருந்தாலும், இவன் ஒரு தாசியின் மகனாய்த்தா னிருக்கவேண்டும். அதனாலேதான் வீணை வாசிப்பதில் இவ்வளவு திறமை இருப்பதோடு, உடம்பும் உருளைக்கிழங்குபோல மொழு மொழுவென்றிருக்கிறது. இவனுடைய முகக் களையும் முக வெட்டும் பெண்பிள்ளையினுடையதைப் போலவே இருக்கின்றன. அதனாலே தான் இவனை முதலில் பார்த்த அன்றைக்கே நான் ஆக்ஷேபித்தேன். என்னுடைய தங்கைக ளிருவருக்கும் இவன் வீணை சொல்லிக் கொடுக்கக்கூடாதென்று நான் அம்மாளோடு நேற்று சாயங்காலம்கூட சண்டைபோட்டேன். இவன் இங்கேயும் வந்து கண்மணிக்கு வீணை கற்றுக் கொடுப்பது எனக்குக்

கொஞ்சமும் சம்மதமாக இல்லை. நீ எப்படியாவது அத்தையம்மா ளிடம் சொல்லி இவன் வருவதை நிறுத்திவிடு. வீணை வாசிக்கா விட்டாலும், கண்மணியை நான் கண்மணியாகவே பாவிப்பேனென் பது உனக்குத் தெரியாதா?" என்றான்.

அதைக்கேட்ட துரைராஜா சந்தோஷப் பார்வையாக மைனரை நோக்கி, "அப்படியே செய்யலாம்; அதிருக்கட்டும், மாப்பிளை! கையில் செலவுக்கு ஒரு காசுகூட இல்லை. எங்கே போனாலும் கடன் காரர்கள் தொந்தரவு செய்கிறார்கள். பெரியப்பன் மாதாமாதம் எனக்கு அனுப்பும் ஐந்நூறு ரூபாய் ஐந்தே நாளைக்கு வருகிறது. அத்தையம்மாள் கொடுப்பது அடுத்த நாளே போய்விடுகிறது. ஒவ்வொரு மாசமும் பணத்தொல்லையே பெரிய தொல்லையாகப் போய்விட்டது. இப்போது எனக்கு மொத்தமாக இரண்டாயிரம் ரூபாய்வரையில் கடனிருக்கிறது. இந்தசமயம் நீ தான் என்னுடைய மானத்தைக் காப்பாற்றவேண்டும்." என்றான்.

**மைனர்:**—இப்போது பங்களாவை விட்டு வரும்போதுகூட எனக்கும் என்னுடைய அம்மாளுக்கும் பெருத்தசண்டை நடந்தது. பணம் கேட்டால் அவள் கொடுக்கிறதே இல்லை. நான் இவ்வளவு பெரிய சமஸ்தானத்தின் அதிபதி ஆகப்போகிறவன் என்பதை அவள் கொஞ்சமும் நினைக்கிறதில்லை. இன்னம் ஒரு வருஷம் போனால் நான் மேஜர் ஆகிவிடுவேன்; எல்லாரையும் கண்ணில் விரல் விட்டு ஆட்டிவிடுவேன். எனக்கு அம்மாள் ஒருத்தி, வேறே இரண்டு வக்கீல்கள் ஆகியமூவரும் கார்டியனாக அமைந்திருக்கிறார்களென்பது உனக்குத் தெரிந்த சங்கதி. அம்மாளையாவது மிரட்டி ஏதாவது பணம் வாங்கிவிடலாம். அந்த வக்கீல்கள் பரமலோபிகள். எனக்கு மாசம் ஒன்றுக்கு இரண்டாயிரம்ரூபாய்தான் கொடுப்போமென்றும் அதற்குமேல் ஒருகாசும் கொடுக்கமாட்டோமென்றும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். இனிமேல் வேறே வழியில்லை. நீ சொன்ன படி நாட்டுக்கோட்டைச் செட்டிகளிடத்தில் பாதித்தொகை வாங்கிக் கொண்டு முழுத்தொகைக்குப் பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டியது தான் வழி. இன்னம் ஒரு வருஷங்கழித்து பணத்தை வாங்கிக் கொள்ளட்டும்—என்றான்.

**துரைராஜா:**—அப்படியானால் அண்ணாமலை செட்டி என்று எனக்குத்தெரிந்தவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் இப்போதே

போய் காரியத்தை முடிப்போம். எனக்கு இரண்டாயிரம் வேண்டும். உனக்கு எவ்வளவு வேண்டும்?

மைனர்:—எனக்கு மூவாயிரமாவது வேண்டும்.

துரைராஜா:—சரி; மொத்தத்தில் ஐயாயிரம் வேண்டும். இரண்டு வட்டிபோட்டுபதினையிரத்துக்கு பத்திரம் எழுதிக்கொடுத்தால், பணம் வந்துவிடும்.

மைனர்:—போனல் போகிறது, அப்படியே எழுதிக் கொடுத்து விடுவோம். அதை மாத்திரம் முடிப்பது போதாது. இன்னொரு முக்கியமான காரியமிருக்கிறது. அதற்காகவே நான் சாப்பிட்டவுடனே இங்கே ஓடிவந்தேன். இல்லாவிட்டால், நேற்று ராத்திரி தூக்கமில்லாம லிருந்ததற்கு இன்று பகல் முழுதும் தூங்கி இருப்பேன். அந்த விஷயத்தை முடித்துக் கொடுப்பதும் உன்னுடைய பொறுப்பு. நீ மனசு வைத்தால் அந்தக் காரியம் அவசியம் முடியும்.

துரைராஜா:—(புன்சிரிப்போடு), அது என்னலாகக் கூடியதாக இருந்தால், அடுத்த நொடியிலேயே செய்துவிடுகிறேன். அது என்ன காரியம்? சொல்.

மைனர்:—ஓகோ! ஒன்றையு மறியாதவன்போலக் கேட்கிருயோ! அது இன்னதென்பது உனக்குத் தெரியாதோ?

துரைராஜா:—தெரியவில்லையே.

மைனர்:—பெருத்த பெருத்த கைகளை யெல்லாம் பார்த்த உனக்கு இது ஓர் அரிய விஷயமல்ல. நேற்று ராத்திரி மோகனுங்கி பாடிக்கொண்டு பார்சீ டான்ஸ் ஆடியதைக்கண்ட முதல் என் மனம் அப்படியே தவித்து டான்ஸ் ஆடிக்கொண்டே இருக்கிறது. தேகம் கொதித்து கட்டுக் கடங்காமல் பதறி நிற்கிறது. நான் படும் வாதையைக் கொஞ்சமும் சகிக்கவே முடியவில்லை. இதனல் உயிர் போனலும் சரி; என்னுடைய சொத்தெல்லாம் ஒழிந்தாலும் கவலை இல்லை. எப்படியாவது அந்தப் பெண்ணரசியிடம் ஒரு பேச்சாவது பேசினல் போதும். அவளோடு தனிமையில் பேசும்படியாக, நீ பழக்கம்செய்து வைத்துவிடவேண்டும். நீ மனசு வைத்தால், இது ஒரு பெரிய காரியமல்ல—என்ருன்.

துரைராஜா:—(ஆசியமாக) சரி; சரி; நல்லவேலைதான். இதுகண்மணிக்குத் தெரிந்தால், அவள் என்ன சொல்வாள் தெரியுமா? அவ

ளுடைய சொந்த தமயனுகிய நானே, மாப்பிள்ளைக்கும் கூத்தாடிச் சிக்கும் சிநேகம் செய்து வைக்கிறதென்றுல், அவளும் அத்தை யம்மாளும் என்ன செய்வார்கள் தெரியுமா? என்னை உடனே பங்க ளாவைவிட்டுத் துரத்திவிடுவார்கள்—என்றுன்.

மைனர்:—(புன்சிரிப்பாக) துரத்திவிட்டால் நல்லதாகிவிட்டது. என்னுடைய பங்களாவுக்கு வந்துவிடு. முதலில் இந்த சங்கதி அவர் களுக்குத் தெரியவே போகிறதில்லை. தெரிந்தாலும், அதனுல் குற்றமு மில்லை. நான் மேஜர் ஆக இன்னம் ஒருவருஷ காலத்துக்குமேலிருக் கிறது. அதன் பிறகே எனக்குக் கலியாணம் செய்யவேண்டுமென்று என் தகப்பனுருடைய மரண சாசனத்தில் எழுதி வைத்திருக்கிறுர். ஒன்றரை வருஷத்துக்குப்பிறகு கண்மணியை அடைவதை நினைத்து இப்போது முதல் நான் சந்நியாசியாக இருந்து தபசு பண்ண வேண் டுமோ?—என்றுன்.

அதைக் கேட்ட துரைராஜா, "இல்லை மாப்பிளை! நான் விளை யாட்டுக்குச் சொன்னேன். ஆண்பிள்ளை யென்றுல் ஆயிரம் ரகசியம் இருக்கும். இதென்ன துவாபரயுகமா? அந்த யுகத்திலேயே ராமர் ஒருவர்தானே ஏகபத்னி விரதராயிருந்தார். மற்றவர் இராவணனைப் போலத்தானே இருந்தார்கள். இந்தக் காலத்தில் கட்டுப்பாட்டில் நிற்கும்படி யாராவது சொன்னுல் புருஷர்கள் கேட்பார்களா? அது இல்லை. அதிலும் இந்த மோகனங்கியைக் கண்டால் யாருக்குத்தான் மனம் கலங்காது. அந்த ராமரே இவளைப் பார்த்திருந்தால், அவரு டைய ஏகபத்னி விரதமெல்லாம் பஞ்சாகப் பறந்து போயிருக்காதா; முதலில், நேற்றுமுதல் என் மனம் படும் பாட்டை நான் என்ன வென்று சொல்லப்போகிறேன். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போல நான் இன்று பகல் முழுதும் இன்பக் கனவு கண்டு கொண்டே தூங்கினேன். இந்த விஷயங்களில் அதிகமாக உழன்ற என் நிலைமையே இப்படி இருந்தால், அவ்வளவு அநுபோக மில்லாத உன்னைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இந்த விஷயத்தில் எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. ஆனுல் நம்முடைய ஆசை பலிக்க வேண்டுமே. அதுதான் யோசனையாக இருக்கிறது. அவள் சீனத்துச் சரக்காயிருக்கிருளே; முதலில், அவள் எங்கே இருக்கிரு ளென்பதை வெளியில் தெரியாமலல்லவா மறைந்து கொண்டிருக்கி

ருள். நாடகக் கம்பெனியின் எஜமானுக்கும், அதன் மானேஜருக்கும் அவளிருக்கும் இடம் தெரியுமாம். அவர்கள் உயிர் போவதானாலும் அதை வெளியிடமாட்டார்கள். அவளுடைய இருப்பிடத்தை முதலில் கண்டுபிடிக்க நாம் வழிதேட வேண்டும்."

மைனர் :—அதை எளிதில் கண்டுபிடித்து விடலாம். அவள் ராத்திரியில் நாடகம் முடிந்த பிறகு ஏதாவது ஒரு வண்டியில் ஏறிக்கொண்டுதானே தன்னுடைய வீட்டுக்குப் போவாள். பைசைகில் வண்டியோடு ஓர் ஆளைத் தயாராக வைத்திருந்து, வண்டியைத் தொடர்ந்து போகும்படி செய்தால், அவள் இறங்குமிடத்தை அவன் கண்டு பிடித்துக்கொள்ளுகிறான்.

துரைராஜா :— அது நல்ல யோசனைதான். அப்படியே செய்து விடலாம். என்னுடைய தவிசுப்பிள்ளை பொன்னம்பலத்தை இந்த விஷயங்களில் நான் நன்றாகப் பழக்கி வைத்திருக்கிறேன். இன்றைய ராத்திரி அவனை விட்டால், அவள் எமலோகத்துக்குப் போனாலும் அவன் கூடவேபோய் இடத்தைப் பார்த்துக் கொண்டு வந்துவிடுவான். அது போகட்டும். இடந்தெரிந்ததாக வைத்துக்கொள்வோம். அதன் பிறகு அவளிடம் எப்படி நெருங்குகிறது? அவளோடு கூடவே ஒரு கிழவி இருக்கிறாளாம்; யார் வந்தாலும் அவள் வேட்டை நாய்போல மேலே விழுந்து கடித்து அனுப்பிவிடுகிறாளாம்; தபால் மூலமாக கடிதம் அனுப்பினால். அதை உடைக்காமலே நெருப்பில் போட்டுவிடுகிறாளாம். நமக்கு முன் தப்பிலி சமஸ்தானத்து மகாராஜா எவ்வளவோ பாடுபட்டு அவமான மடைந்துவிட்டார். எருமைநாதபுரம் மகாராஜா ஆயிரம் ரூபாய் நோட்டை கடிதத்தில் வைத்து அனுப்பினாராம். அந்த நோட்டையும் நெருப்பில் போட்டுக் கரியாக்கிவிட்டாளாமே. அப்படிப்பட்ட பகட்டுக்காரியிடத்தில் நாம் எப்படி நெருங்குகிறது?

மைனர் :—(சிறிது ஆழ்ந்து யோசனை செய்து) முதலில் அவளுடைய இடத்தைக் கண்டுபிடிப்போம். அதன் பிறகு எப்படியாவது தந்திரம் செய்து, அவள் வீட்டிலுள்ள வேலைக்காரி, சமயற்காரி முதலிய எவளையாகிலும் பிடித்து, அவர்களுக்குச் சரியானபடி பணம் இளக்கினால், அவர்கள் தங்களுடைய எஜமானியை நம் வலையில் எப்படி வீழ்த்துகிற தென்பதற்கு ஏதாவது வழி காட்டுவார்கள். அதன்படி நாம் செய்வோம்; இன்றைக்கு பொன்னம்பலம் தவறாமல் இடத்

தைமாத்திரம் கண்டு பிடித்து விட்டால், நான் பிச்சைக்காரனைப் போலாவது, அல்லது, ஏதாவது பழம், புஷ்பம் முதலிய பொட்டைச்சி சாமான் விற்பவன் போலவாகிலும் வேஷம் போட்டுக் கொண்டு, அவளிருக்கும் இடத்துக்குள் நுழைந்து துப்பு அறிந்து வருகிறேன். அதன்மேல் நாம் யோசனை செய்து காரியத்தை முடிப் போம்—என்ருன்.

அதைக்கேட்ட துரைராஜா மகிழ்ச்சியடைந்தவனாய், "பலே! மாப்பிள்ளைக்குத் தெரியாதயோசனைக்கு நான்என்ன சொல்லப்போகி றேன். அப்படியே செய்வோம்" என்று கூறியவண்ணம் தவிசிப் பிள்ளை பொன்னம்பலத்தை அழைத்து, அன்றிரவில் அவன் செய்ய வேண்டிய காரியத்தை அவனுக்குத் தெரிவித்து, அதற்குத் தேவை யான தந்திர யுக்திகளை யெல்லாம் சொல்லிக் கொடுத்து, அவனை அனுப்ப, அதன்பிறகு இருவரும் எழுந்தனர். அன்றுமாலை ஏழுமணி முதல் ஒன்பதரை மணி வரையில் **குலேபக்காவலி** என்னும் நாடகம் வி. பி. ஹாலில் நடத்தப்படுமென்ற விளம்பரம் வெளியிடப்பட்டிருந்த தாகையால், செட்டியாரிடம் போய் கடன் விஷயத்தை முடித்துக் கொண்டு நேராக அப்படியே வி. பி. ஹாலுக்கு தாங்களும் முன்ன தாகவே போய்விட வேண்டுமென்னும் எண்ணத்தோடு அவர்களிரு வரும் பங்களாவைவிட்டு வெளிக் கிளம்பினர்.

---

## 2-ம் அதிகாரம்

## குலேபக்காவலி—மோகனங்கி

அன்று மாலை 6 மணி சமயமாயிற்று; நாடகம் நடத்தப்படும் வி. பி. ஹாலில் ஜனங்கள் அபரிமிதமாகக் கூடியிருந்தனர். அதன் கூடம் முழுதும் கூக்குரலும் குதூகலமுமே காணப்பட்டன. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யென்னும் மூன்று பெரும் பேய்கள் முற்றிலும் வெறிகொண்டு, கோபம், மோகம், லோபம், மதம், சண்டை, பொருமை, நட்பு, துயரம், தரித்திரம் முதலிய பலவகைப் பட்ட துர்க்குணங்களான பிள்ளை குட்டிகளோடு நிருத்தனம் செய்யும் நாடக மேடையாகிய வெளியுலகத்துக்கு முற்றிலும் மாருக, அந்த நாடகக் கும்பலாகிய சிறிய உலகம் சந்தோஷமே நிறைந்ததாகத் தோன்றியது. மிகவும் விசாலமாகவிருந்த அந்தக் கூட்டத்தில் எங்

கும் விண்மணிகளைப்போல சரம் சரமாகத் தொங்கிய மின்சார விளக்குகளின்ஜோதி கோடி சூரியப்பிரகாசமாக ஜ்வலித்தது. சப்த வர்ணங்களையுடைய காகிதங்களால், அழகழகாகச் சித்திரிக்கப்பட்ட தோரணங்களும் பூக்களும் வானவிற்களின் அணிவகுப்போ, தேவேந்திர சபையோ, அல்லது கந்தருவ உலகத்தில் மன்மதனும் ரதியும் கொலுவிருக்க அமைக்கப்பட்ட அற்புத அலங்காரமோ வெனத் தோன்றி, காண்போர் கண்களையும் மனத்தையும் கவர்ந்தன. ஆயிரக் கணக்கில் வரிசைவரிசையாகப் பரப்பப்பட்டிருந்த வழுவழுப்பான கருங்காலிநாற்காலிகளில் எங்குப்பார்த்தாலும் வைரக்கடுக்கன்களும், வைரக் கம்மல்களும், ஜரிகைகளும், பட்டாடைகளுமே மயமாகத் தோன்றின. பெருமையால் நிமிர்ந்த ராவ்பகதூர்களும் திவான் பகதூர்களும், செல்வத்தால் செருக்கிய செட்டிமார்களும், வாய்மையால் வலுத்த வக்கீல்மார்களும், அலங்காரப் பிரியர்களும், டாம்பீகர்களான கோலாகலப் புருஷர்களும், மனமோகன சுந்தர ரூபங்களைப் பெற்ற யௌவனப் பெண்டீரும், புருஷரும், சிரித்தமுகமும் இனித்த சொற்களுமாகக் காணப்பட்டு இன்பமயமாக இருந்தனர். ஆனால் வெளிமயக்கான அந்தப்பிரகாசத்திற்குள் நுழைந்து அவர்களது அந்தரங்கமான மனோ நிலைமையை ஆராயப் புகுந்தால், அங்கு உண்மையான ஆநந்தமும், திருப்தியும், சாந்தமான அமைதியுமிருக்கக் காண்பதுமாத்திரம் சந்தேகம். தாங்கள் உண்மையில் பரம ஏழ்மை நிலைமையிலிருக்கிறோ மென்பதை மறைத்து, தாங்கள் பெரிய முதலாளிகள் என்னும் எண்ணத்தை பிறர்மனதில் உண்டாக்கும் பொருட்டு ஜரிகை வேஷ்டிகளும் பட்டுச்சட்டைகளும் பெருத்த தலைப்பாகைகளும் அணிந்திருந்தவர் பல்லோர். மகா கொடிய பொறாமைகளையும் கவலைகளையும் கொண்ட தங்களது மனதை வெளியில் காட்டாமல் மறைப்பதன் பொருட்டு புன்னகை செய்தோர் பலர். ஜாதி ரோஜா மல்லிகை முதலிய புஷ்பங்களும் வைர ஆபரணங்களும் நிறைந்த சிரங்களுக்குள் பித்தமும் பேதைமையும் துர்க்குணங்களும் வெறியும் அஞ்ஞான இருளும் நிறைந்திருக்கப் பெற்றவர் அநந்தம். வேறு பலரிடத்தில் விலை மதிப்பற்ற பதக்கங்களும், முத்து மாலைகளும், வைர சரங்களும் அழகுசெய்த மார்புகளுக்குள் துராசைகளும் பலவகைப்பட்ட மோக விகாரங்களும் கொந்தளித்துக் கொண்டிருந்தன. புது நாகரிகம் கற்ற பலர் தங்களது முகங்களில் வெண்மையான மாவைப் பூசி நாடக

வேஷங்கள் போல மினுக்கி, காண்போர் கண்களுக்கு விருந்தாக அமைந்திருந்தனர்; ஆகவே, அந்த அழகிய மாளிகையில் இரண்டு வகையான நாடகங்கள் நடிக்கப்பட்டன. மேடை மீதிருந்த நாடகக் காரர்கள் குலேபக்காவலியும், கூடத்திலிருந்த ஜனங்கள் பிரபஞ்ச லீலா விநோதமும் நடத்திக் கொண்டிருந்தனர்.

முதல் வரிசையிலிருந்த ஸோபாக்களில் தேனாம்பேட்டை வாசிகளான சமஸ்தானாதிபதிகளும், மகா பிரபுக்களும் நிறைந்து கம்பீரமாக உட்கார்ந்திருந்தனர்; அவர்களினிடையில் நமது துரைராஜாவும் மாரமங்கலம் மைனர்துரையும் இருந்தனரென்று சொல்வது மிகையாகும். ஏனென்றால் அச்சில்லாமல் தேரோடாதல்லவா? அவர்களில்லாவிட்டால் அங்கே வந்திருந்தோருக்கு மகாஜனங்களென்ற பெயர் எப்படிப்பொருந்தும்? ஆகையால், அவர் மற்றவர் வருவதற்கு ஒரு நாழிகைக்கு முன்னரே வந்துவிட்டனர். உட்புறத்தில் நிற்கவும் இடமில்லையென்பது தெரிந்தும், நாடகக்காரர்கள் மேன்மேலும் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஜனங்களை உள்ளே தள்ளித்தள்ளி அடைத்துக்கொண்டே இருந்தமையால், எலிநுழைய இடம்போதாத இரண்டு இடுக்கு மூலை முடுக்குகளிளெல்லாம் ஜனங்கள் ஒடுங்கிக்கொண்டு, மோகனாங்கியைமாத்திரம் பார்த்தால் அது போதுமென்று ஒணானைப் போல தலைகளை நீட்டிக்கொண்டிருந்தனர். சிலருக்குக் கால்கள் நசுங்கித் துகையலாயின; சில பெண்டீரின் கம்மல் தொங்கிய காதுகள் அறுந்துபோயின. சிறிது தாமதமாக வந்த வக்கீல்களான மூன்று கிழவர்களது சிரத்தில் எலிவாலைப்போலத் தொங்கிய குடுமிகள் போனவிடம் தெரியவில்லை. அவர்கள் மோகனாங்கியை மறந்து தங்கள் குடுமிக் களவு இந்தியன் பீனல் கோடின் எந்தப் பிரிவில் சேர்ந்ததென்பதைப்பற்றி யோசிக்கிறார்கள். புதிதாக முறுக்கேற்றி தும்பை மலர்போல சலவை செய்யப்பட்ட மஸ்லின் சட்டைகள் சக்கை சக்கையாகக் கிழிந்து கோபித்துக் கொண்டு பலவிடங்களுக்கும் போயின. ஜரிகைத் தலைப்பாகைகளும், ஷோக் அங்கவஸ்திரங்களும் கீழே விழுந்து காலால் துகையுண்டன. சிகரெட்டுப்புகையின்பரிமளகந்தமும், மூச்சுக்காற்றின் கொதிப்பும், நெருக்கத்தினாலுண்டான வியர்வைச்சேறும் ஒன்றுகூடி, அது சுவர்க்கபோகமோ அல்லது நரக வேதனையோ என்ற சந்தேகத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

இத்தகைய லீலா விநோதங்களுக் கிடையில் குலேபக்காவலி நாடகம் ஆரம்பமாயிற்று. மோகனாஸ்திரம் பாய்வதுபோல மனதைக் கவரக்கூடிய இனிமையான பாடல்களோடும் ஸாகஸங்களோடும் ஒவ்வொரு பெண்மணியும் தோன்றி தனது திறமையைக் காட்ட வாரம்பித்தாள். கடைசியாக, தாசிவேஷம் தரித்துத் தோன்றிய மோகனாங்கியைக் கண்டவுடனே ஜனங்கள் அடக்கமுடியாத ஆவேசமும், வெறியும், கரைகடந்த குதூகலமும், பெருமகிழ்ச்சியும் கொண்டு தங்களை மறந்து, கைகொட்டி ஆர்ப்பரித்தனர். அவள் வரும்போதே யாவரும் கண்டு திகைக்கும்படியாக பார்சீ நடனமாடிய வண்ணம் ஓர் இந்துஸ்தானிப் பாட்டை எடுத்து ஜிலுஜிலென்று பன்னீர் தெளிப்பதுபோல மகா ஜனங்களின் செவிகளில் தூவிக்கொண்டு விண்ணுலகினின்று தெய்வ கன்னிகை இறகுகளோடு வந்திறங்குவதுபோல

"கற்றைவிரி பொற்கடை மயிர்த்துறு கலாபம்
சுற்றுமணி புக்கவிழை மிக்கிடை துவன்றி
விற்றவழ வாணிமிர மெய்யணிகள் மின்னச்
சிற்றிடை நுடங்கவொளிர் சீரடி பெயர்த்து"

மேடையின் மீது காட்சி கொடுத்தாள். ஆகா! அவளது அற்புத வடிவத்தை என்னவென்று சொல்வது! ஒப்புயர்வில்லாத அற்புத வனப்போடும் தோன்றிய அந்த அணங்கின் அழகை வருணிக்க தெய்வ பாஷையான வடமொழியிலும் தக்க சொற்கள் இல்லையென்றே கூறவேண்டும். அதுகாறும் கூக்குரல் செய்துகொண்டிருந்த மகாஜனங்கள் யாவரும் உயிரற்ற பதுமைகள்போல பேச்சுமூச்சின்றி வாயைப் பிளந்துகொண்டு அப்படியப்படியே திகைத்து, அவள்மீது சென்ற தங்களது நாட்டத்தையும் மனத்தையும் தங்களது வசம் திருப்பச் சிறிதும் வல்லமையற்றவராய் பிரமிப்படைந்து தேனில் வீழ்ந்த ஈக்கள்போல இன்பவெள்ளத்தில் கிடந்து தத்தளித்தனர்; எள் விழும் சப்தமும் நன்றாகக் கேட்கத் தக்கபடி நிச்சப்தம் குடிகொண் டிருந்தது.

அந்தப் பெண்பாவையின் வயது பதினெட்டுக்குமே லிராது. பதினான்கு லோகங்களிலுமுள்ள அழகிற் சிறந்த யௌவனமடந்தையரின் லக்ஷணங்களை யெல்லாம் அள்ளி ஒன்று சேர்த்துக் கடைந்தெடுத்த அமிர்த ஸாரமே அந்த வடிவமாக அமைந்து தோன்றி மனதைக் கொள்ளைகொண்டதோ வென விளங்கி,

"பொன்னெழுகு பூவிலுறை பூவையெழில் பூவைப்
பின்னெழில்கொள் வாள்இணை பிறந்தொளிர் முகத்தாள்
கன்னியெழில் கொண்டது கலைத்தட மணித்தேர்
மின்இழிவ தன்மையிது விண்இழிவ தென்ன,
கானின் உயர் கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி
மேனிகனி பெற்றுவிலை காமநெறி வாசம்
தேனின்மொழி யுற்றினிய செவ்விகனி பெற்றோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்"

ஆன, அத்தகைய அற்புத ஜோதி நிறைந்த பெண் வடிவத்தை இவ்வுலகில் கண்படைத்தவன் எவனும் கண்டிரானென்பது திண்ணம். சிருஷ்டி காலந்தொட்டு எத்தனையோ கோடி ரதி தேவிகளைப் படைத்த பிரம்மதேவனுக்கே மோகனங்கியின் அழகு அதுகாறும் காணாத புதுமையாக இருந்ததென்றால், மற்றவருக்கு அது எங்ஙனமிருந்திருக்கு மென்பது கூறாமலே விளங்கும். அங்கே கூடியிருந்தோர்களது மனதில் அதற்குமுன் வதைத்திருந்த கவலைகளும் துன்பங்களும் துயரங்களும் சஞ்சலங்களும் தெய்வாம்சம் பொருந்தியிருந்த அந்த மின்னற்கொடியின் தோற்றத்தால் மறைந்து, சூரியன் முன் இருள்போல ஓடி யொளிந்தன. கானகத்திலுள்ள மான்கன்றுகள் பூமியில் கால்கள் வைப்பது தெரியாமல் எவ்வாறு துள்ளிக் குதிக்குமோ அவ்வாறு, அவள் நடனம் செய்தபோது அவளது அற்புத மேனி நெட்டியாலானதோ, பஞ்சினாலானதோ, காற்றினாலானதோ, அல்லது அவையாவற்றினும், இலேசான சொர்பனத்தினால் ஆனதோ என்று ஐயுறும்படி மண்ணிலுமின்றி விண்ணிலுமின்றி பம்பரம் போலச் சுழன்றது. அவளது மனவேகத்துக்குச் சமமாகத் தொடர்ந்து சென்று வளைந்து கொடுத்த அவளது தேகம் நடுத்தர உயரமும், அழகிய பருமனும், அதனிடத்தில் அதிகம் குறைவு என்பதின்றி உன்னதமாக உயர்ந்து சரிந்த தசைபிடிப்பும், கவிந்த கன்னங்கள், வளைந்த கழுத்து, பரந்த மார்பு, துவண்ட இடை, கடைந்தெடுத்த கை கால்கள் முதலிய எல்லா அங்கங்களும் சாமுத்திரிகா லக்ஷணத்திற்கு ஓர் இம்மியளவும் பிசகாமல், பார்க்கப் பதினாயிரங் கண்கள் வேண்டிய அபார சிருஷ்டியாக இருந்தன. அவளது சரீரத்தின் மேற்புறம் சருமத்தாலானதோ, மெருகு கொடுத்த தங்கத்தகடாயினும் தந்தத்தகடாயினும் கொண்டு பொருத்தப்பட்டதோ

வென கண்ணுடிபோல வழுவழுப்பும் பளபளப்பு மமைந்து, காண் போர் முகம் அதில் பிரதிபிம்பித்தது. பூரண சந்திரோதயமோ, தளையவிழ்ந்து மலர்ந்து நகைத்த செந்தாமரை மலரோ, இனிமையை யும், குளிர்ச்சியையும் அள்ளி வீசிய அமிர்த கலசமோ வெனத் தோன்றிய அவளது சுந்தரவதனம்,

"கொண்டலின் குழவி யாம்பல் குனிசிலை வள்ளை கொற்றக்
கெண்டைஒள் தரள மென்றிக் கேண்மைய கிடந்த திங்கள்
மண்டில வதன மென்று வைத்தனன் விதியே நீயப்
புண்டரீ கத்தை யுற்ற பொழுதது பொருந்தித் தேர்வாய்"

என்று வருணிக்கத் தக்கதாய், ரதிதேவி தனது மோகனுஸ்திர பரி வாரங்களோடு கொலுவீற்றிருந்த வசீகர சபாமண்டபம்போல, வரு ணிக்க இயலாத வாமக் களஞ்சியமாய், அவளது தேகமானது பதி னுன்கு லோகங்களுக்கும் மேலே நின்ற சுவர்க்கலோகமாய் காணப் பட்டது.

சீதளாகரமான அத்தகைய வனத்தின் வசீகரத் தன்மையை பதினுயிர மடங்கு சிறப்பித்துக் காட்டிய அவளது சிரத்தின் அளக பாரமோ சொல்லிலடங்கா எழில் வாய்ந்ததாய்,

"காரினைக் கழித்துக் கட்டிக் கள்ளினே டாவி காட்டிப்
பேரிருட் பிழம்பு தோய்ந்து நெறிவுறிப் பிறங்கு கற்றைச்
சோர்குழல் தொகுதிச் சூழல் சும்மைசெய் தனைய தம்மா
நேர்மையைப் பருமை செய்த நிறைநறுங் கூந்தல் நீத்தம்"

என்ற லக்ஷணப்படி அமைந்திருந்தது. இத்தனை வைபவங்களுக் கிடையில் நின்ற அவளது கண்ணிணைகள் ஒருநொடியில் மனிதரை கொல்லும் விஷமாகவும், அதே நொடியில் தமது மலர்ச்சியால் உயிர் கொடுக்கும் அமிர்த சஞ்சீவியாகவும் அமைந்து முகத்தைக் காட்டி லும் விசாலமாய் காதளவு ஓடி நின்று,

"பெரியவாய்ப் பாவை யொவ்வா பிறிதொன்று நினைந்து பேச
அரியவாய் ஒருவ ருள்ளத் தடங்குவ வல்ல வுண்மை
தெரிய ஆயிரக்கால் நோக்கில் தேவர்க்கும் தெய்வ மென்னக்
கரியவாய் வெளிய வாகும் வாள்தடம் கண்கள் அம்மா"

என்று யாவரும் வியக்கும் வண்ணம் அமைந்து,

"நஞ்சிடை யமிழ்தங் கூட்டி நாட்டங்க ளான வென்னச்
செஞ்சவே நீண்டு மீண்டு சேயரி சிதறித் தீய

*வஞ்சமுங் களவு மின்று மழையென மதர்த்த கண்கள்*
*அஞ்சன நிறமோ கண்ணன் வண்ணமோ அறிதல் தேற்றும்."*

என்று, கள்ளம், கபடம் முதலிய எத்தகைய குற்றங்களுக்கும் இடமின்றிக் கூர்மையான புத்தியையும், மேன்மைக் குணங்களையும், பரிசுத்தமான மனத்தையும் வெளிப்படுத்தின.

இவ்வாறு உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுள்ள ஒவ்வோர் அங்கமும் மகா சிரேஷ்டமாக அமைந்திருந்தது. அத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்த வானுலகத்து மங்கையான மோகனாங்கி நாடக மேடையில் குயில் போலப் பாடி மயில் போல ஆடி அன்னநடை நடந்து கிள்ளை போல மொழிந்து தனக்கிணை தானேயென நடித்து, ஜனங்களின்மீது மோகனாஸ்திரப் பிரயோகம் செய்து, அவர்களது மதியை மயக்கிப் பித்தராக்கி பிரமிக்கச் செய்தாள். அங்கே கூடியிருந்த கிழவர் முதல் சிறுகுழந்தை வரையிலுள்ள சகலரும் கலங்கிப்போய் திக்பிரமை கொண்டு தடுமாறினர். தாங்களே அழகில் சிறந்தவரென்று அதுகாறும் நினைத்து செருக்குற்றிருந்த பெண்டீர் யாவரும் திகைத்து நெடுமூச்செறிந்தனர். அவளே யாவரினும் மேம்பட்ட ரதிதேவி என்ற நினைவை அத்தகைய மகளிர் தங்களது மனதிற்குள்ளாயினும் கொள்ள நேர்ந்தது. முன் வரிசையில் உட்கார்ந்திருந்த துரைராஜாவும், மாரமங்கலம் மைனரும் தேன் குடித்த நரிகள்போல மதியிழந்து அறிவழிந்து மோகாவேசங் கொண்டு எப்படியாகிலும் அவளது நட்பை சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்ற உறுதியை முன்னிலும் அதிகமாகக் கொண்டவர்களா யிருந்தனர். அங்கிருந்த ஆண்பாலார் ஒவ்வொருவரும் அத்தகைய துராசை கொண்டனரென்றே கூறவேண்டும். ஆனால் அங்கே ஒரு மூலையிலிருந்த வீணைவித்துவானான மதனகோபாலன் ஒருவனே அத்தகைய துராசை கொள்ளாமல், மோகனாங்கியின் மேம்பாடுகளைப் பற்றி உண்மையான பெருமையும், ஆநந்தமுமடைந்தவனாய் அவளிடத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான்.

குலேபக்காவலியின் ஒரு காட்சி முடிய, மறுகாட்சி தயாராகும் போது ஜனங்கள் கூச்சலிடுவார்கள்; மோகனாங்கி திரும்பவும் எப்போது வருவாள்வருவாளென்று ஆவலோடு காத்திருப்பார்கள்; மற்ற நடிகைகள் தோன்றினால், அவர்களை தூஷித்து, உள்ளே போகும்படி கூறி பதற்றமான மொழிகளை உபயோகிப்பார்கள்; மோகனாங்கி மறு

படி தோன்றினால் முன்போல வெறிகொண்டு தலைவிரித்து ஆடுவார்கள். இவ்வாறு அந்த ஜகன்மோகினி அன்றிரவு நெடுநேரம் வரையில் அந்த மகா ஜனங்களை குரங்குகள்போல ஆடச்செய்தனள். ஒவ்வொரு காட்சியிலும் அவளுக்கு எண்ணிறந்த தங்கப்பதக்கங்களும், புஷ்ப ஹாரங்களும், வைர மோதிரங்களும், பட்டாடைகளும் வந்து குவிந்துகொண்டிருந்தன. கரகோஷங்களும், சிரக்கம்பங்களும், சந்தோஷக் கூச்சல்களும் கடைசி வரையில் அதிகரித்துக் கொண்டே போயின. கடைசியில் நாடகம் முடிவடைந்தது. அதுகாறும் மூட்டைகள் போல ஒருவர்மேல் ஒருவராக அடுக்கிக்கொண்டு கிடந்த ஜனங்கள் யாவரும் சமுத்திர கோஷம்போல ஆரவாரித்து எழுந்து தாறுமாறாகப் புகுந்து ஒருவர்மீதொருவர் விழுந்து துகைத்த வண்ணம் வெளியிற் செல்ல வாரம்பித்தனர். சிலர் சிலராக உள்ளே சென்றதைவிட, யாவரும் ஒரே காலத்தில் வெளிப்பட முயன்றது மகா கோரமான காட்சியாக விருந்தது. குழந்தைகளை இழந்தோர் சிலர்; ஆபரணங்களைத் தொலைத்தோர் பலர். ஒருவர் தவறாமல் எல்லோரும் தமது மனத்தையும் மனதின் நல்ல நிலைமையையும் மோகனாங்கியிடம் பறிகொடுத்துத் திரும்பினோராகவே இருந்தனர்.

இவ்வாறு ஜனங்கள் எல்லோரும் வெளியில் போக அரை நாழிகை சென்றது. மோகனாங்கி தோன்றி ஆடிய இடத்தை விட்டு வெளியில் போக மனமற்றவராய் இன்னமும் சிறிது உள்ள நின்றோரான சிலர் பலவந்தமாக வெளிப்படுத்தப்பட்டனர். அந்த நாடகத்தில் நடித்த யாவரும் வெளியில் போவதற்கு மேடையின் பின்புறத்தில் ஒரு வழி இருந்தது. அந்த வழியின் வெளி வாசலில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் நடிகளெல்லோரும் போவதைப் பார்க்க வேண்டு மென்னும் ஆசையோடு நின்றனர். அவர்களுக்காக எண்ணிறந்த வண்டிகளும் சாரட்டுகளும் தயாராக நின்றன. அவ்விடத்தில் துரைராஜாவின் தவிசுப்பிள்ளையான பொன்னம்பலமும் ஒரு பைசைகில் வண்டியை வைத்துக் கொண்டு, உள்ளே இருந்து வந்தவரை உற்று நோக்கிய வண்ணம் இருந்தான்.

அரை மணி நேரம் சென்றது; அது வரையில் வேஷக்காரிகளில் ஒருத்தியும் வெளிப்படவில்லை யாதலால், அங்கே கூடி நின்ற ஜனங்களுள் பெரும்பாலோர் அவ்விடத்தை விட்டுச் சென்றனர். அதன் பிறகு, உட்புறத்திலிருந்து வேஷங் கலைத்த சிறுமிகளும்,

மடந்தையரும் தனியாகவும் இருவர் மூவராகக் கூடி சம்பாஷித்த வண்ணமும் வெளிப்பட்டனர். அவர்களை புரசைப்பாக்கத்திற்கு அழைத்துப் போகும் பொருட்டு குத்தகையாக அமர்த்தப்பட்டிருந்த ஆறு குதிரை வண்டிகள் தயாராக நின்றன. கொட்டகையின் வேலைக்காரர் இருவர் அந்தப் பெண்களோடு கூடவே வெளியில் வந்து ஒவ்வொரு வண்டியாக வாசற்படியண்டை கொணர்ந்து வண்டிக்கு நால்வர் வீதம் பெண்களை உட்காரவைத்து வண்டிகளை யனுப்பியவண்ண மிருந்தனர். பொன்னம்பலம் அருகில் நெருங்கி வண்டியண்டையில் ஏறிய பெண்டீரைக் கடைக்கண்ணால் உற்று நோக்கியவண்ண மிருந்தான் அதன் பிறகு வேறு சில மங்கையர் வெளிப்பட்டனர் அவர்கள் தங்களது சொந்த ஜாகைகளில் வெவ்வேறு திக்குகளில் இருந்தவர்களாதலால், அவர்களது உறவினரோ நட்பினரோ வண்டிகளோடு வெளியில் தயாராகக் காத்திருந்து அவர்களை அழைத்துச் சென்றனர். அவர்களிலும் மோகனுங்கி காணப்படவில்லை. அதன் பிறகு ஒரு நாழிகை கழிந்தது. வேறு எவரும் வரவில்லை. அதன் பிறகு இமை கொட்டாமல் கவனித்துக்கொண்டே யிருந்தான். அப்போது அவ்விடத்தில் ஒற்றைக் குதிரை பூட்டப்பெற்ற ஓர் அழகிய பெட்டி வண்டி வந்து நின்றது. அது ஜன்னல்களால் நன்ருக மூடப்பட்டிருந்தது; வண்டி புதியதுபோல பளபளவென மின்னியது. அந்த வண்டி வந்து கால் நாழிகையானவுடன் வி. பி. ஹாலுக்குள்ளிருந்து இன்னொரு ஸ்திரீ வெளிப்பட்டாள். அவள் பனாரீஸ்பட்டில் ஜரிகைப்புள்ளிகள் நிறைந்த சேலையையும் உயர்ந்த ஆபரணங்களையும் அணிந்திருந்ததாகத் தெரிந்தது. ஆனால் அவள் ஒரு பெருத்த சால்வையால் தலை முதல் கால் வரையில் நன்ருகப் போர்த்திக் கொண்டிருந்தமையால், அவளது முகம் சிறிதளவே வெளியில் தெரிந்தது. பொன்னம்பலம் அவளது முகத்தை உற்றுநோக்குவதற்குள் அவள் பெட்டி வண்டிக் கதவைத் திறந்துகொண்டு வண்டிக்குள் நுழைந்துவிட்டாள். ஆனால் அவளது உயரம் பருமன் நடையழகு முதலியவற்றினுல் அவளே மோகனுங்கி என்று பொன்னம்பலம் எளிதில் ஊகித்துக்கொண்டான். தவிர, அந்த நாடகத்தில் மானேஜரே மிகவும் மரியாதையாக அவளை அழைத்துவந்து வண்டியில் ஏற்றிவிட்டுக் கதவைச் சாத்தி தாளிட்டு வண்டியை ஓட்டும்படி கூற, வண்டி புறப்பட்டது. அதனுலும், அவளே மோகனுங்கியென்று உறுதி செய்து கொண்ட பொன்னம்

பலம், பெட்டி வண்டி சிறிது தூரம் போகும்படி விட்டு, தனது பைசைகிலின் மீதேறி உட்கார்ந்துகொண்டு பெட்டி வண்டியைத் தொடர்ந்து சென்றான். வண்டி மறைந்துபோக விடாமலும் பிறர் சந்தேகிக்கும்படி வண்டியிடம் அதிகமாக நெருங்காமலும் அவன் சற்று தூரம் பின்னாகவே தொடர்ந்தான்.

வி. பி. ஹாலிலிருந்து புறப்பட்ட பெட்டிவண்டி விசையாகவே ஓடியது. அப்போது இரவு 10-மணி சமயம். ஆதலால், ஜனங்களின் நடமாட்டமும் இல்லாதிருந்தது. பெட்டிவண்டி பெரியமெட்டு ரயில்கேட்டைக் கடந்து ரயில்பாதைக்கும் கூவம் ஆற்றுக்கும் இடையில் மேற்கு முகமாகச் செல்லும் பாதை வழியாக ஓடி எழும்பூரைக் கடந்து கோமளேசுவரன்பேட்டை வாராவதிக்கு வந்தது. அவள் கோமளேசுவரன் பேட்டையிலிருப்பவள் என்று ஐயமுற்ற பொன்னம்பலம் அவ்வளவு சுலபத்தில் தனது வேலை முடியப்போவது பற்றி தனக்குள் மகிழ்ச்சியடைந்தவனாய் மிகவும் ஜாக்கிரதையாகத் தொடர்ந்துவந்தான். வண்டி, கோமளேசுவரன்பேட்டைக்குள் நுழையாமல் கூவம் ஆற்றின் கரையோரமாகச் செல்லும் பாதையிலேயே ஓடி ஸ்பென்ஸர் தபாலாபீசுக்கருகில்வந்து மவுண்ட்ரோட்டை யடைந்தது. தான் எதிர்பாராத திக்கில் வண்டி போவதைக் குறித்து பொன்னம்பலம் வியப்படைந்தவனாய் பின்னால் வந்து கொண்டிருந்தான். பெட்டி வண்டியின்மேல் உட்கார்ந்திருந்த வண்டிக்காரன் இரண்டொரு முறை பின்புறம் திரும்பிப் பார்த்தானாதலால் அவன் தன்னைக் கண்டு கொண்டானோ வென்று ஒருவகையான அச்சம் பொன்னம்பலத்தின் மனதில் உண்டாகிக் கொண்டிருந்தது. மவுண்ட்ரோட்டின் இரு புறங்களிலும் பெருத்த மரங்கள் அடர்ந்திருந்தன. எங்கும் மின்சார விளக்குகள் நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஆங்காங்கு போலீஸ் ஜெவான்கள் நின்றுகொண்டிருந்தனர். நெடுந்தூரத்திற் கொரு மோட்டார் வண்டி வந்துகொண்டிருந்தது. ஆயிரம்விளக்கை நோக்கிப்போகும் கூலிக்கார ஆதி திராவிடர்கள் நன்றாகக் கள்ளைக் குடித்து ஆடி விழுந்து பாடிக்கொண்டு சென்றனர். இருபுறங்களிலும் வெள்ளைக்காரர் கம்பெனிகளின் பிரம்மாண்டமான கட்டிடங்கள் நிறைந்திருந்தன. அவ்விடத்தில் வந்த வண்டி மவுண்ட்ரோட்டிலேயே மேற்குப் பக்கம் செல்லவாரம்பித்தது. எதிரில் ஆயிரம்விளக்கு தேனும்பேட்டையின்வடபாகம் முதலிய ஊர்களிருந்தமையால் அந்த

வண்டி அங்கேதான் ஏதாவது பங்களாவிற்குப் போகிறதோ வென்று பொன்னம்பலம் பெரிதும் ஐயமுற்றவனுகச் சென்ருன்.

வண்டி, ஆயிரம்விளக்கைத் தாண்டி சர்க்கார் பூந்தோட்டம், வெள்ளாளத் தேனும்பேட்டை முதலிய இடங்களை யெல்லாம் கடந்து நான்கு மயில் தூரத்திலிருக்கும் சைதாப்பேட்டையை யடைந்தது. ஆனுல், வண்டி அந்த ஊருக்குள் நுழையாமல், பாட்டை வழியாகவே மேலும் சென்று அடையாற்றுப் பாலத்தைக் கடந்து அப்பாலும் சென்றது. அவள் சைதாப்பேட்டையிலிருக்கிருளென்று பொன்னம்பலம் நினைத்ததும் தவருக முடிந்தது. வண்டி சைதாப்பேட்டையைத் தாண்டி, கிண்டி யென்னும் ஊரையடைந்து, அதற்கு மேலும் பாட்டையிலேயே சென்று கடைசியாக ஆலந்தூரை யணுகியது. அவ்விடத்தில் பாட்டைக் கருகில் முன்புறத்தில் சிறிய பூஞ்சோலையைக் கொண்ட ஒரு பங்களாவிருந்தது. அதன் வாசலிற் போனவுடனே வண்டி நின்றது. வண்டிக்காரன் அண்டையில் நின்று "லச்சுமூ! லச்சுமூ!! கதவைத் தொற" என்று இரண்டு முறை கூவியழைத்தான்.

வண்டிக்குப் பின்னுக வந்த பொன்னம்பலம் அதுவே அவளது பங்களாவென்று உறுதிசெய்து கொண்டவனுய், பைசைகிலை நிறுத்திக் கீழே இறங்கி, அதன் ரப்பர் குழாய்க்கு காற்று அடித்துப் புகுத்துகிறவன்போலப் பாசாங்கு செய்தவண்ணம் வண்டியை நோக்கிக்கொண்டிருந்தான். இரண்டு நிமிஷ நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. பெட்டிவண்டி பங்களாவுக்குள் போய்விட்டது. கதவும் திரும்ப மூடப்பட்டு உட்புறம் பூட்டப்பட்டது. பொன்னம்பலம் திரும்பவும் தனது பைசைகில் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு மேலும் சிறிது தூரம் மேற்கில் சென்று அந்த பங்களாவின் முன்புறத்தில் நன்ருக அடையாளம் பார்த்துக்கொண்டு, அது இத்தனுவது மயில், இத்தனுவது பர்லாங்கு அப்பால் இருக்கிற தென்பதையும் சரியாக அறிந்துகொண்டு தனது துவிச்சக்கரவண்டியைத் திருப்பிவிட்டு இரவு ஒரு மணி சமயத்தில் துரைராஜாவின் பங்களாவிற்கு வந்து சேர்ந்தான்.

துரைராஜா மாரமங்கலம் மைனர் ஆகிய இருவரும் பொன்னம்பலத்தின் வருகையை எதிர்பார்த்தவண்ணம் மேன்மாடத்தில் கண்

விழித்து சீட்டாடிக் கொண்டிருந்தனர். மேன்மாடக்கதவும் தாளிடாமல் வெறுமையாக சாத்தி வைக்கப்பட்டிருந்தது. பொன்னம்பலம் மேன்மாடத்திற்குச் சென்று, தான் பெட்டி வண்டியைத் தொடர்ந்து சென்ற வரலாற்றையும், மோகனாங்கி ஆலந்தூருக் கருகிலுள்ள ஒரு பங்களாவில் இறங்கிய விபரத்தையும் விரிவாகக் கூறி அந்த பங்களாவின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பதற்குத் தேவையான குறிப்புகளை யெல்லாம் தெரிவித்துவிட்டு, அவர்களது அநுமதியின்மேல் படுக்கைக்குச் சென்றான்.

பொன்னம்பலம் ஜெயமடைந்து வந்ததைக் கேட்ட மாரமங்கலம் மைனர் அப்போதே புறப்பட்டுப் போகவேண்டுமென்னும் ஆவல்கொண்டு துடித்ததைக் கண்ட துரைராஜா "மாப்பிள்ளை! இப்போது போவதில் எவ்விதமான பயனும் ஏற்படாது. பொழுதுவிடிந்தவுடன் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு நான் முதலில் அங்கே போய் எப்படியாவது தந்திரம் செய்து, அவளுடைய சிநேகத்தை சம்பாதித்துக்கொண்டு வருகிறேன். அதன்பிறகு நீ போவதற்கு சௌகரியமாக இருக்கும்" என்றான்.

அதைக்கேட்ட மைனர், "ஓ! நல்லகாரியம் செய்தாய்! இன்று வி. பி. ஹாலிலிருந்து வந்தமுதல், நீ அவளைப்புகழ்ந்து பேசுவதைப் பார்த்தால், உனக்கும் அவள்மேல் ஆசை விழுந்திருக்கிற தென்பது நன்றாய்த் தெரிகிறது. நீபோய் அவளைப் பிடித்துக்கொண்டால் அப்புறம் என்னை மறந்துவிடுவாய்; ஆகையால், நானே போய் இதை முடித்துக் கொள்ளுகிறேன்" என்றான்.

துரைராஜா, புன்சிரிப்போடு, "நாம் ஒன்று செய்வோம்; எனக்கும் அவளிடத்தில் சிநேகம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசை மனதில் எழுந்து வருத்துகிறது. ஆகையால், நாம் திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்ப்போம். யாருக்கு பிரைஸ் விழுகிறதோ அவர்போக வேண்டியது" என்றான்.

மைனர் அதற்கு இணங்க, உடனே சீட்டுப்போடப்பட்டது. அதிர்ஷ்டம் மாரமங்கலம் மைனர் பக்கத்திலேயே இருந்தது. வெற்றி அவருக்கே கிடைத்தது; ஆதலால் அவரே மறுநாட்காலையில் ஆலந்தூருக்குப்போய் மோகனாங்கியிடத்தில் சிநேகம் செய்வதற்கு வேண்டிய அநுகூலங்களைத் தேடுவதென்று இருவரும் முடிவு

செய்து கொண்டனர்; மாரமங்கலம் மைனர் அன்றிரவு அந்த பங் களாவிலேயே சயனித்திருந்தானாலும், அவனுக்குத் தூக்கமென் பதே பிடியாமையால், பொழுது விடியும் வரையில் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்திருந்தான்; பொழுது விடியுமுன் எழுந்து அந்த பங்களாவைவிட்டு நடந்து அரைமயில் தூரத்திற்கப்பாலிருந்த தனது பங்களாவை யடைந்தான். அவனது தாயும் இளைய சகோ தரிகள் இருவரும் அந்த பங்களாவி லிருந்தனர். அவர்களுக்கும் தெரியாமல், வெளியில் போய்விட வேண்டுமென்னும் எண்ணத் தோடு அவன் தனிமையான தனது விடுதிக்குப்போய் தன்னை நன் றாக அலங்கரித்துக்கொள்ளத் தொடங்கினான்.

அப்போது அவனது மனம் மிகுந்த உற்சாகத்தினாலும் ஆவலி னாலும் பலவகைப்பட்ட நினைவுகளினாலும் துடித்துப் பொங்கிக் கொண்டிருந்தது. தான் எவ்விதமான தந்திரஞ் செய்து மோக னாங்கியின் நட்பை யடைவது என்பதைக் குறித்து அவன் யோசனை செய்தான்; அப்போதே நேராக அவளிருந்த பங்களாவிற்குள் போவது தவறென்று நினைத்தான்; அந்த பங்களாவின் சுற்றுப் புறங்களில் வசிப்போர் யாவரென்பதை ஆராய்ந்தறிந்து, அவர்க ளிடத்தில் தந்திரமாகப் பேசி மோகனாங்கியின் வரலாற்றையும், அவளது பங்களாவிலுள்ள வேலைக்காரிகளிடம் பழக்கம் செய்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். அவன் தனது அழகு, யோக்கியதை முதலியவற்றைப்பற்றி மிகவும் பிர மாதமான அபிப்பிராயம் கொண்டிருந்தான்; தன்னை நன்றாக அலங் கரித்துக் கொண்டவுடனே நிலைக் கண்ணாடிக்கெதிரில் நின்று குனி ந்து நிமிர்ந்து உதட்டை நீட்டி பல்லைக் காட்டிப் பார்த்துக் கொண் டான்; கண்ணாடிக்குள் விகாரமான ஒரு சிறுவனது வடிவம்தெரிந்த தாயினும், கண்ணாடி பூதக்கண்ணாடியாதலால் தனது சரியான வடி வத்தை அது உள்ளபடி காட்டவில்லை யென்று நினைத்து, தான் மிக வும் அழகுடைய மன்மதனென்றே மனதிற்குள் நினைத்துக்கொண் டான். தவிர, அவனது சமஸ்தானத்திலுள்ள குடியானவர்களும் அரண்மனையின் சிப்பந்திகளும் மற்றவரும் சிறு பிராயத்திலிருந்தே அவனை "மகாராஜா மகாராஜா" வென்று விளித்து, அவனுக்குக் கூழை கும்பிடுபோட்டு அவனது மனப்போக்கின்படி நடந்து கொண்டு வந்ததனால் அவன் தன்னை சர்வ வல்லமையுள்ள ஒரு சக்கர

வர்த்தி யென்றே நினைத்துக்கொண்டான்; அழகு, செல்வம், உன்னத பதவி முதலிய எவ்வகையிலும் தான் இணையற்றிருப்பதால், எந்த ஸ்திரீயையும் தான் வசியப்படுத்துவது எளிதென்று நினைத்தான். தான் ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதே தாமதம்; சொன்னால் எப்படிப் பட்டவளும், சலாம் செய்து கொண்டு, தனது இச்சைப்படி நடப்பாள் என்பது அவனது துணிபு. நிற்க பெண்பாலரின் கற்பி லேயே அவனுக்கு நம்பிக்கை கிடையாது. அதிலும் நாடகத்தில் வந்து ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு முன்னால் நடிப்பவளிடத்தில் கற் பென்பதே இராதென்பது அவனது உறுதியான கொள்கை. தவிர; அவளது வரலாறுகளை விசாரித்தறிந்த பின்பு, தன்து சமஸ்தானாதி பதி உடைகளை விலக்கிவிட்டு ஓர் ஏழையைப் போல உடையணிந்து அவளது பங்களாவிற் கருகிலிருந்து அவள் போகும்போதும் வரும் போதும் கண்ணில் பட்டுக்கொண்டிருந்தால், அவள் தன்னைக் கண்டு வியப்படைந்து ஏழை உடைகளுக்குள்ளிருப்பது ஒரு பெருத்த சமஸ் தானாதிபதி என்பதை எளிதில் கண்டு கொள்வாளென்றும், அதன் பிறகு தான் தனது கருத்தை தந்திரமாக அவளுக்கறிவுறுத்தினால், அவள் உடனே நிரம்பவும் வியப்படைந்து, அவளுக்காக தான் தனது மகா உன்னத பதவியைவிட்டு தாழ்ந்த நிலைமைக்கு வந்தது பற்றி, அவள் தன்மீது கரைகடந்த மையல் கொண்டு தனது பாதத்தில் சரணாகதி யடைந்து விடுவாளென்றும் நினைத்து மனப்பால் குடித்தவ னாய், ஒரு வகையான தீர்மானம் செய்துகொண்டு புறப்பட்டான். முதல்நாள் மாலையில் நாட்டுக்கோட்டைச் செட்டியிடம் வாங்கிய பணத்தில் தனது பாகமாகிய மூவாயிரம் ரூபாயும் நோட்டுகளாக ஒரு மணிபர்சில் வைக்கப்பட்டிருந்தன வாதலின், அதை எடுத்து அவன் தனது சட்டையின் உட்புறப் பையில் வைத்துக்கொண்டான்; வை ரக் கடுக்கன்கள், வைர மோதிரங்கள், தங்கக் கடிகாரம், தங்கச் சங் கிலி, காப்பு, கொலுசு முதலிய அலங்காரங்களோடு, வெளிப்பட்டு, பங்களாவி லிருந்த எவரது கண்ணிலும் படாமல் தெருவையடைந்து சிறிது தூரம் நடந்து அங்கே எதிர்ப்பட்ட ஒரு குதிரை வண்டியை ஆலந்தூர் வரையில் அமர்த்தி அதில் உட்கார்ந்து கொண்டான். வண்டி வேகமாக ஓடி, அரைமணி நேரத்தில், மோகனாங்கி யிருந்த பங்களாவிற்கு சிறிது தூரத்திற்கு அப்பாலிருந்த ஆலந்தூரை யடைந்தது. மைனர் ஜெமீந்தார் கீழே இறங்கினான். வண்டிக்காரன்

தனது கூலியைப் பெற்றுக்கொண்டு, வந்த வழியே திரும்பிப் போய் விட்டான்.

---

## 3-ம் அதிகாரம்

## அம்பட்டக் கருப்பாயி; கட்டையன் குறவன்

LOVER BOO Dng-21 Dng-2A

குதிரை வண்டியில் சென்றபோதே மோகனாங்கியின் பங்களா இன்னதுதானென்று அறிந்துகொண்டு போன மைனர் ஜெமீந்தார் ஆலந்தூரில் வண்டியிலிருந்து கீழே இறங்கியபின், மெள்ளநடந்து வண்டி சென்றபாதையின் வழியாகவே திரும்பிவந்தான். அந்த ஸ்திரீயின் பங்களாவிற்கு அரைக்கால் மயில் தூரத்தில் மைனர் நின்று, மிகுந்த மகிழ்ச்சியோடு அதை உற்று நோக்கினான். அந்த பங்களா பாதையை ஒட்டியதாக இருந்தாலும், பாதையிலிருந்து 50-கஜதூரம் வரையில் அழகான பூஞ்சோலை யிருந்தது. அதன் பிறகு இரண்டு மேன்மாடங்களையுடைய அழகிய புதிய கட்டிடமிருந்தது. பின்புறத்தில் தென்னை, மா, பலா முதலிய மரங்கள் தோப்புபோல அடர்ந்திருந்தன. பெட்டி வண்டி, குதிரை முதலியவை நிற்பதற்கு லாயங்களும், ஏற்றங்களைக்கொண்ட கிணறுகளும் காணப்பட்டன. ஓர் ஆள் உயரம் எழுப்பப்பட்டிருந்த ஒரு மதிள் நாற்புறத்திலும் அவற்றை வளைத்துக் கொண்டிருந்ததன்றி, அதன் முன்புறத்தில், பாதையில் இரும்புக் கம்பிகளாலான கதவும் வாசலுமிருந்தன. அதிலிருந்தவள் மற்ற நாடகக்காரிகளைப்போல ஏழையல்லவென்றும், தக்க செல்வமுடையவளென்றும், அந்தச் செல்வச் செருக்கினாலேயே அவள் எவர்க்கும் இடங்கொடாமல் அசட்டை செய்கிறாளென்றும் எண்ணிக்கொண்ட மைனர், நாற்புறங்களிலும் திரும்பி கண்கண்டதூரம் வரையில்நோக்கினான்; மனிதர் குடியிருக்கக்கூடிய வீடே காணப்படவில்லை. பங்களாவுக்கு எதிர்ப்புறத்தில் அரைக்கால் மயில் தூரத்திற்கப்பால், சில தென்னை மரங்களும் ஒரு பெருத்த வைக்கோல் போரும் ஒரு புளியமரமும் காணப்பட்டன. பூமி அதுவரையில் ஏற்றமானதாகவும் அதற்கப்புறம் இறக்கமானதாகவும் காணப்பட்டதாகையால் அதற்கப்பால் என்ன இருக்கிறதென்பதைப் பார்க்க வேண்டுமென்னும் ஒரு வகையான அவா அவனது மனதில் எழுந்து தூண்டியது. பாதையிலிருந்து அந்தத் தென்னந்தோப்பை நோக்கி ஓர் ஒற்றையடிப்பாதை சென்றதைக் காணவே, அதன் வழியாகச் சென்றால் தோப்பிற்கு அப்புறத்தில் காட்டுக் கொட்டகை முதலிய

மனிதரிருப்பிடம் ஏதாவது இருக்கலாமென்ற, ஒரு யூகம் தோன்றியது அவன் உடனே அந்த ஒற்றையடிப் பாதையைப் பின்பற்றி நடந்து தென்னந் தோப்பை யடைந்தன. அதற்கு அப்புறத்தில் இருந்த இறக்கத்தில் சற்று தூரத்தில் ஒரு சிறிய ஓட்டு வீடு காணப் பட்டது. அது தனிமையாக இருந்ததைக் காண, மைனருக்கு ஒரு வகையான மகிழ்ச்சி தோன்றியது. அவன் விரைவாக நடந்து அந்த வீட்டை யடைந்தான், அது நெடுங்காலத்திற்கு முன் கட்டப்பட்ட தாகவும், மிக்க எளியதாகவும் காணப்பட்டது. வாசற் கதவு மூடி உட்புறத்தில் தாளிடப்பெற்றிருந்தது. வெளிப்புறத்தில் எவரும் காணப்படவில்லை, உள்ளே யார் இருக்கிறார்களோ கதவைத் தட்டினால் கோபித்துக் கொள்வார்களோ என்ற நினைவினால் மைனர் அச்சங்கொண்டு தயங்கி திண்ணைமீது உட்கார்ந்து இரண்டு மூன்று முறை கனைத்துக்கொண்டு குரல் கொடுத்தான், உட்புறத்திலிருந்தோர் அவனைக் கவனித்ததாகத் தோன்றவில்லை. கால் நாழிகை கழிந்தது. கதவும் திறக்கப்படவில்லை. அவன் கையைக் கதவில்வைத்து மெதுவாக அழுத்திப்பார்த்தான்; உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது; இன்னொரு கால் நாழிகை நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்த பின் சிறிது துணிவடைந்து, "ஐயா! ஐயா!" என்று கூப்பிட்டவனாய், கதவை மெதுவாகத் தட்டினான். "ஆர் ஐயா! அது?" என்று கேட்டுக்கொண்டு, ஒரு பெண்பிள்ளை கதவைத்திறந்து மைனரை உற்று நோக்கினாள். அவள் சுமார் நாற்பத்தைந்து அல்லது ஐம்பது வயதடைந்த ஒரு ஏழை ஸ்திரீ; நன்றாகத் தடித்து உயர்ந்த விகாரமான சரீரத்தைக் கொண்டவள்; பலவிடங்களில் கிழிந்திருந்த, ஒரு கண்டாங்கிச் சேலையைக் கட்டிக்கொண்டு காதில் நாகபடம், கொப்பு, கையில் இரண்டு விரல்களில் பித்தளை மோதிரங்கள், கழுத்தில் பொன் வைரமணிமாலை, சிவப்பு நிறமுள்ள ஸ்படிகமணி மாலை ஆகிய அலங்காரங்களோடு காளிகாதேவிபோலக் காணப்பட்டாள். அவளைக் கண்டவுடனே மைனருக்கு தான் கோரிவந்த காரியத்துக்கு அவள் அநுகூலமானவளல்ல வென்ற நினைவும் அதிருப்தியும் ஏற்பட்டன. அவன் திண்ணையை விட்டுக் கீழே இறங்கினான். விலையுயர்ந்த ஆடையாபரணங்களோடு பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளையை போலவிருந்த அந்தச் சிறுவன், ஒரு மூலைக்காட்டிலிருந்த தனது வீட்டை நோக்கி நடுப்பகல் வேளையில் வந்ததைக் குறித்து வியப்பும் திகைப்பும் அடைந்து அம்பட்டக் கருப்பாயி

"சாமி ஒக்காருங்க; நீங்க எந்த ஊரு சாமி?" என்று ஒரு வகையான அன்போடு பேச, அதைக் கேட்ட மைனர், சிறிது துணிவடைந்தான். முதல் பார்வையில் அவளிடத்தில் கொண்ட அருவருப்பும் சிறிதளவு விலகியது. அவன் அவளை நோக்கி, "நான் இருப்பது தேனம்பேட்டை ; ஒரு காரியமாக சைதாப்பேட்டைக்கு வந்தேன். இந்த ஆலந்தூரில் என்னுடைய சிநேகிதர் ஒருவர் இருக்கிறார். அவரைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வேடிக்கையாக நடந்து வந்துவிட்டேன். நல்ல வெயில் வேளை. மிகவும் தாகமாக இருக்கிறது. இங்கே தென்னமரமிருப்பதைக் கண்டேன். இளநீர் விலைக்கு அகப்பட்டால், ஒன்று வாங்கி சாப்பிட்டுப் போகலாமென்று வந்தேன். அதுதான் வந்த காரியம்."

அதைக் கேட்ட கருப்பாயி விசனமடைந்து, "அடாடா! மரத்துலே ஏறிப் புடுங்கிப்போட மனிசரு இல்லையே! என்ன செய்யறது! பெரிய மனிசரு தாவமாயிருக்குதுன்னு சொல்லுறீங்களே! நான் அம்பட்டச்சி ; நீங்க எங்க ஊட்டுலே தண்ணி கிண்ணி சாப்பிடமாட்டீங்க. கொஞ்சம் இப்பிடியே திண்ணையிலே குந்துங்க. அதோ எதுக்கே தெரியுதே வங்களா ; அதுலே எவனாச்சும் தோட்டக்காரன் கீட்டக்காரன் இருந்தா, இட்டாறேன்." என்றாள்.

அதைக் கேட்ட மைனர், திண்ணையின்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டவண்ணம், "இல்லை அம்மே! நீ போகவேண்டாம், போய் வர நேரமாகும். திண்ணையிலே கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தால், தாகம் போய்விடும். அந்த பங்களாவிலே யாரிருக்கிறார்களோ என்னவோ! அங்கே போய் பகல் பன்னிரண்டுமணி சமயத்திலே தொந்திரவு செய்யக்கூடாது. போகவேண்டாம் அம்மே! நான்கூட அந்த பங்களாவுக்குள்ளே போய், தண்ணீர் இருந்தால் சாப்பிடலாமென்று பார்த்தேன். வெளிக்கதவு சாத்தி மூடப்பட்டிருக்கிறது. அதில் யார் இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா?" என்று நயமாகக் கேட்டான்.

கருப்பாயி, "தெரியுஞ் சாமி! யாரோ நாடவக்காரியாம் ; ஒரு சின்னப் பொண்ணு அதுலே இருக்கிறாளாம்." என்றாள்.

**மைனர்:**—நாடகக் காரியா? நீ அவளைப் பார்த்திருக்கிறாயா? உனக்கு அவள் சிநேகந்தானா?—என்றான்.

**கருப்பாயி:**—அவளை நான் பார்த்தே இல்லீங்க.

**மைனர்:**—அப்படியானல் இந்த இடத்துக்கு நீ புதியவளா அல்லது அவள் புதியவளா?

கருப்பாயி:—நான் எங்கப்பன் பாட்டங்காலமா இஞ்செத்தான் இருக்கறவ. அவ இந்த வங்களாவுக்கு வந்து ஒரு மாஷகாலமாச்சுங்க.

**மைனர்:**—அப்படியானல் அவளோடு கூட யார் யார் இருக்கிறூர்கள் என்பதாவது தெரியுமா?—என்றுன்.

அதைக் கேட்ட கருப்பாயி அவனது கருத்தை ஒருவாறு உணர்ந்து கொண்டவளாய்ப் புன்னகை செய்து, "ஒருத்தரையும் தெரியாதுங்க. வேணுமாஞ ஒரு சண நேரத்துலே தெரிஞ்சுக்கினு வந்து சொல்றேனுங்க. ஒங்க கருத்தெ நல்லா தெரியும்படி சொன்ஞ என்ஞலே என்ன ஆவணுமோ அதெ ஒடனே செய்யறேன்." என்று கூறிஞள்.

அதைக் கேட்ட மைனர், அவள் தனது கருத்தை நிறைவேற்றுவதற்கு நிரம்பவும் அனுகூலமா யிருக்கத் தக்கவளென்று கண்டு கொண்டான்; இருந்தாலும், அவளை உடனே நம்பிவிடக் கூடாதென்று சிறிது எச்சரிக்கையாகப் பேச வாரம்பித்து, "எனக்கு உன்ஞல் ஆகவேண்டிய காரியம் என்ன இருக்கிறது? அப்படி இருந்தாலும் அதை ஒழுங்காகச் செய்து முடிக்கும் திறமை உனக்கு இருக்கிறது என்பதை நான் எப்படி உறுதியாக நம்புகிறது?" என்றுன்.

கருப்பாயி சிரித்துக்கொண்டு, "இம்பிட்டுப் பெரிய மனிசரான நீங்க, அலுவலில்லாமெயா ராசபாட்டெயெ உட்டு இம்பிட்டுத் தூரம் வந்தீங்க! ஓட்டெச் சட்டியிலேதான் கொளுக்கட்டெ வேவும் இம்பாங்களே அது தெரியாதா? நீங்க வந்த சோலி இன்தூன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு; ஒங்கிளுக்கு என்னென்ன சங்கதி தெரியணுமோ அதெல்லாம் சொல்லிப்புட்டு, நீங்க போயிட்டு இன்னக்கிப் பொளுது சாய இஞ்சே வாங்க நான் எல்லா சங்கதியும் சொல்லிப்புட்றேன்" என்றுள்.

**மைனர்:**—சரி; அப்படியே செய்வோம். நீ மாத்திரம் இந்தக் காரியத்தை முடித்துக் கொடுப்பாயாஞல் உனக்கு நூறு ரூபாய் தருகிறேன். இந்த நாடகக்காரி யிடத்தில் சிநேகம் செய்துகொள்ள வேண்டுமென்பது என்னுடைய விருப்பம்; அதற்காகவே நான் இங்கே வந்தேன். அவளோடு யார் யார் இருக்கிறூர்கள்? வேலைக்காரி

களுள் எவளுடைய பேச்சை அவள் கேட்கிருள்? இன்னம் வேறே எவனிடத்திலாவது அவள் பிரியம் வைத்திருக்கிருளா? அவளுடைய வேலேக்காரியின் மூலமாக இதை முடிக்க முடியுமா? அவள் பங்களாவை விட்டு வெளியில் உலாவும் பொருட்டு எப்போதாவது வருவதுண்டா? அவள் பணத்தின்மேல் ஆசைப்பட்டால், எவ்வளவு பணம் கேட்பாள்? என்ற விவரங்களே யெல்லாம் நீ அறிந்து வைக்க வேண்டும். இதோ முதலில் உனக்குப் பத்து ரூபாய் கொடுக்கிறேன். இதை அச்சாரமாக வைத்துக்கொள்; காரியத்தை முடித்தால், ரூபாயாலேயே உனக்கு அபிஷேகம் செய்து விடுகிறேன்—என்ற வண்ணம் தனது பணப் பையை எடுத்து அவளுக்கெதிரில் ஆடம்பரமாகத் திறந்து பத்து ரூபா நோட்டு ஒன்றை எடுத்து அவளுக்கெதிரில் விசிறிப்போட்டான்.

உடனே கருப்பாயி, "பணம் குடுக்கிறது இருக்கட்டுங்க. இதுக்குன்னு ஒங்க மனசுக்கு சந்தோஷமான ஒரு அலுவலெ முடிச்சுக் குடுத்தா, எனும் சனும் குடுக்காமலா இருப்பீங்க. எல்லாத்துக்கும் நீங்க ஒண்ணு செய்யுங்க பொளுது சாய ஏளுமணிக்குள்ளற ராத்திரிச் சாப்பாட்டெ முடிசிக்கினு இஞ்சே வந்திடுங்க; அதுக்குள்ளற எல்லாச் சங்கதியெயும் வெசாரணே பண்ணி வைக்கறேன். சரிப்பட்டா அந்த வேலேக்காரியக்கூட இட்டாந்து இஞ்சே வச்சு வைக்கறேன். நீங்க நேருலே பேசி முடிச்சுக்கலாம்" என்ருள்.

**மைனர்:**—அப்படியானல் நான் ராத்திரி எங்கே படுத்துக் கொள்ளுகிறது!

**கருப்பாயி:**—அநேகமா நாடவக்காரி வங்களாவுக்கே போறத்துக்கு வளி சேஞ்சுப்புட்றேன். தவரினு, இஞ்சேயே படுத்திருங்க; புதுப்பாயி தலவாணி யெல்லாம் தயாருபண்ணி வைக்கறேன்—என்ருள்.

அதைக் கேட்ட மைனர் மிகவும் சந்தோஷ மடைந்தவனுய், அவளது பிரரேபணேக் கிணங்கினுன், தேடிப்போன மருந்து காலில் தட்டுப்பட்டதுபோல, தனது கருத்துக்கு நிரம்பவும் அநுகூலமான உதவி வெகு சுலபத்தில் ஏற்பட்டது பற்றி, அவன் தனது அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்து கொண்டதன்றி அந்தக் காரியம் அவசியம் பலிக்குமென்பதற்கு அது ஒரு நல்ல சகுனமென்று நினேத்தவனுய் தனது பணப்பையைத் திறந்து இன்னெரு பத்து ரூபா நோட்டை எடுத்து

அவளுக்கெதிரில் அலட்சியமாகப் போட்டு "இதோ இதையும் எடுத்துக்கொள். எனக்கு நல்ல படுக்கையாக ஒன்று தயாரித்து வை; உனக்கு அதன் பொருட்டு ஏதாவது செலவு ஏற்படும். ஆகையால் இதையும் எடுத்துக்கொள். வேலைக்காரி எவ்வளவு பணம் கேட்டாலும் கவலை இல்லை. இந்தக் காரியத்தை முடிக்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு. நான் போகலாமா? உன்னை நம்பி இருக்கலாமா? மறந்து போய் விடுவாயோ?" என்முன்.

அதைக் கேட்ட கருப்பாயி, கையெடுத்துக் கும்பிட்டு மிகவும் வணக்கமாக "சாயங்காலம் வந்துதான் பாருங்களேன். ஒங்க மனசு குளிரும்படி செஞ்சா சரிதானே" என்முள். அதைக்கேட்ட மைனர் அவளிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவனுய், திண்ணையை விட்டிறங்கிய வண்ணம், "நான் போய்விட்டு சாயுங்காலம் சரியாக 7-மணிக்கு இங்கே வந்து விடுகிறேன்." என்று கூறி அவளது வணக்கத்தைப் பெற்றுக்கொண்டு ஒற்றையடிப் பாதையின் வழியாக நடந்து, ஆநந்த பரவச மடைந்தவனுய் ராஜ பாட்டையை யடைந்து ஆலந்தூர் சென்று அவ்விடத்தில் ஒரு வண்டி யமர்த்திக் கொண்டு தேனும்பேட்டையை நோக்கிச் சென்முன்.

* * * * * *

அவ்வாறு மைனர் சென்றபின் அரை நாழிகை கழித்து, அம்பட்டக் கருப்பாயி தனது வீட்டின் கதவை மூடி வெளியில் பூட்டிக்கொண்டு அவ்விடத்தை விட்டு ஒற்றையடிப் பாதையின் வழியாக நடந்து ராஜபாட்டைக்கு வந்து அங்கிருந்த பங்களாவண்டையில் நின்று நெடுநேரம் காத்திருந்தாள். பங்களாவிற் குள்ளிருந்த தென்னை மரங்களில் கட்டப்பட்டிருந்த மொந்தைகளிலுள்ள கள்ளை இறக்கிக் கொள்ளும் பொருட்டு அவ்விடத்திற்கு வந்த சாணுர முத்துக்கருப்பனிடம் பேச்சுக்கொடுத்து, தனது பையைத் திறந்து வெற்றிலை புகையிலை முதலிய வசியமருந்தை எடுத்துக் கொடுத்து, கால் நாழிகை நேரம் வரையில் அவனேடு சம்பாஷித்திருந்த பிறகு அங்கிருந்து புறப்பட்டு ராஜபாட்டை வழியாகவே சைதாப்பேட்டையை நோக்கி நடந்து அதற்கு சமீபத்திலுள்ள ஈக்காட்டுத்தாங்கல் என்ற சிறிய ஊருக்கு வந்து சேர்ந்தாள். அவள் அந்த ஊருக்குள் நுழையாமல், அதற்கு அரைக்கால் மயில் மேற்கிலிருந்த ஒரு காட்டிற்குள் புகுந்தாள். அந்தக் காடு மலைபோல வளர்ந்த சப்பாத்துப் புதர்களும் புளியமரங்களும் நிறைந்து அதற்குள்

பார்வை நுழையாவண்ணம் அடர்ந்ததாகக் காணப்பட்டது. மலைத் தொடரைப் போல இரண்டு திக்கிலும் முடிபின்றி நெடுந்தூரம் சென்ற அந்த காட்டண்டை சென்ற அம்பட்டக் கருப்பாயி, தனது கூர்மையான விழியால், அதில் பிறருக்குத் தெரியா வண்ணம் மறைந்து வளைந்து வளைந்து சென்ற ஒரு சிறிய ஒற்றையடிப் பாதையை யடைந்து அதற்குள் நுழைந்து அரைக்கால் மயில் தூரம் சென்றாள். ஆகாயத்தை யளாவிய புளிய மரங்களும் கள்ளிப் புதர் களும் சப்பாத்து புதர்களும் ஒன்றோடொன்று பின்னிக் கொண் டிருந்த தோற்றம் மிக மிக பயங்கரமாக விருந்தது. அதற்குள் சென்ற ஒற்றையடிப் பாதை பழக்க முள்ளவர்க் கன்றி மற்ற வருக்குத் தெரியாததாய் மறைந்து கிடந்தது. சிறிதும் அச்சமின்றி அதன் வழியாகச் சென்ற கருப்பாயி நெடுந்தூரம் நடந்து அந்தக் காட்டின் முடிவை அடைந்தாள்.

அவ்விடத்தில, மறைந்திருந்த 15, 20-சிறிய வீடுகள் காணப் பட்டன. அவை யாவும் கூரை வீடுகளாக இருந்தன. அவற்றின் நடு வில் ஓட்டு வீடு ஒன்று இருந்தது. அந்த ஊர் குறவர்கள் வசிக்கும் ஒரு சிறிய குப்பமாகக் காணப்பட்டது. எங்கும் குறவர்களும் குறத்தி களும் சிறுவர்களும் சிறுமிகளும் மூங்கில் பிளந்து கூடை முறங்கள் பின்னுவோரும், கருவேப்பிலை சேகரிப்போரும், காட்டுப் பூனைகள் குத்துவோரும், பறவைகள் பிடிப்போரும், வேறு பலவகையான தொழில்களைச் செய்வோருமாகக் காணப்பட்டனர். ஆடுகளும், மாடு களும், கோழிகளும் ஏராளமாக இருந்தன. அவ்வூரிலிருந்த மனிதரது தொகையைக் காட்டிலும் நாய்களின் தொகையே அதிகமாக இருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஏழெட்டு நாய்கள் வேட்டைக்காக வளர்க்கப்பட்டன. கூரைகள் தோறும் சுரைக் கொடிகள் மூடிக்கொண் டிருந்தன. அவ்வாறு தோன்றிய அந்தச் சிற்றூர் தனியான ஓர் உலகமாய்க் காணப்பட்ட தாதலால், வெளி யூர்களி லிருந்து எவரும் அதற்குள் வருதலே அரிது. எப்போதாகி லும், போலீஸ் ஜெவான்கள் இருவர் மூவர் வந்தால் அவர்களது விஜயம் மகா ராஜர்களின் விஜயம் போலவே கொண்டாடப்படும். அவர்கள் ஒவ்வொருவருக்கும் கூடைகள், முறங்கள், கோழிகள், முட்டைகள், புருக்கள் முதலிய பாதகாணிக்கைகள் சமர்ப்பிக்கப் படும். அவற்றைப் பெற்றுக்கொண்டு அவர்கள் சந்தோஷமாகத் திரும்பிப் போய்விடுவார்கள். அந்த மகா ஜனங்களின் உபயோகத்

திற்காக அங்கு பிரத்தியேகமான ஒரு கள்ளுக்கடை இருந்தது. அதில் சாராயமும் சீமைச் சரக்குகளும் கூட விற்கப்பட்டு வந்தன. அதன் சொந்தக்காரனது பெயர் கந்தசாமி நாயக்கன். அவனும், கன்னியம்மாள் என்று பெயர் கொண்ட அவனது மனைவியும் அவ்விடத்தில் ஒரு பெருத்த வீட்டில் மேற் கூறப்பட்ட லாகிரி வஸ்துக்களை விற்றதன்றி, அந்த மகா ஜனங்களுக்குத் தேவையான பல சரக்குகள் முறுக்கு, மசாலைவடை முதலிய சிற்றுண்டிகள் ஆகிய சகலமான பொருட்களையும் விற்று அதனால் பெருத்த பொருள் சம்பாதித்து வந்தனர். அன்றி, அந்தக் குறவர்களுள் பெரும்பாலோர் இராக்காலங்களில் கன்னக்களவு வழிப்பறி முதலிய இன்பகரமான தொழிலையும் செய்துவந்தன ராதலால், அவர்களால் கொணரப்படும் திருட்டு சாமான்களுக்கும் ஒன்றிற்குக் காற்பங்கு விலை கொடுத்து கந்தசாமி நாயக்கன் வாங்கிக்கொள்வது வழக்கம். எல்லா விஷயங்களிலும் கந்தசாமி நாய்க்கன் அவ்வூர் மகா ஜனங்களுக்கு காமதேனுவைப்போல மிகவும் அனுகூலமாக இருந்துவந்தான்.

இத்தகைய சிற்றூருக்கு அம்பட்டக் கருப்பாயி வந்து சேர்ந்தாள். அவள் அடிக்கடி அவ்வூருக்கு வரும் வழக்க முடையவளாதலால், அவளைக் கண்ட ஜனங்களும் வியப்படையவில்லை. நாய்களும் வாயைத் திறவாமல் படுத்துக்கொண்டிருந்தன. அவள் மற்ற எந்த வீட்டிற்கும் போகாமல், நடுவிலிருந்த ஒட்டு வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். அதன் வெளிக்கதவு மூடி உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது. கருப்பாயி கதவண்டை போய் அதைத் தட்டினாள். உடனே "ஆர் அது?" என்று ஒரு பெண்பிள்ளையின் குரல் உட்புறத்திலிருந்து கேட்டது. "நாந்தான் கருப்பாயி" என்றாள் அம்பட்டச்சி.

அடுத்த நிமிஷம் கதவு திறக்கப்பட்டது; உட்புறத்தில் ஒரு ஸ்திரீ நின்றுக்கொண்டிருந்தாள். அவளுக்கு சுமார் இருபத்தைந்து வயதிருக்கலாம். அவள் முரட்டு உடம்பைப் பெற்றவளானாலும், மிகவும் கட்டான அழகிய தேகத்தையும், வசீகரமான முகத்தையும் உடையவளா யிருந்தாள். அவளைக் கண்டவுனே கருப்பாயி சந்தோஷமான பார்வையாகப் பார்த்து, "வள்ளியம்மா! ஒம்புருசன் இருக்கருணா"? என்றாள். இருக்கருவ. "ஒன்னெ உள்ளற இட்டாரச் சொன்னுவ" என்றாள் அவள். அதைக் கேட்ட கருப்பாயி உள்ளே நுழைந்தாள், வள்ளியம்மை திரும்பவும் கதவைமூடி உட்புறத்தில்

தாளிட்டுக்கொண்டு, கருப்பாயிக்குப் பின்னால் நடந்தாள்; உட்புறமெல்லாம் ஆடுகளும், கோழிகளும், காடைகளும், கவுதாரிகளும். அவற்றின் மல மூத்திரங்களும், அடுக்குப்பானைகளும், தொம்பைக் கூண்டுகளும், பலவகைப்பட்ட தானியங்களும், விசிப்பலகையும் நிறைந்து மூச்சுவிடவும் இடமின்றி இருந்தன. உட்புறத்தின் ஒரு மூலையில் கயிற்றுக்கட்டி லொன்றன்மேல், தடித்துக் கருத்த தேகமும், பயங்கரமான கொடிய தோற்றமும் கொண்ட ஒரு மனிதன் திண்டில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். வாய்நிறைய புகையிலை, வெற்றிலை முதலியவற்றைப் போட்டு மென்றுகொண்டும், பக்கத்திலிருந்த ஒரு படிக்கத்தில் சதக்கு சதக்கென்று எச்சிலை உமிழ்ந்துகொண்டுமிருந்தான். எங்குப்பார்த்தாலும் பானைத்தடிகளும், பட்டாக்கத்திகளும் சொருகப்பட்டிருந்தன. இன்னொருமூலையில் அடுப்பின்மேல், ஒரு சட்டியில் காட்டுப்பன்றியின் மாமிசம் வெந்துகொண்டிருந்தது. அவன் உட்கார்ந்திருந்த கட்டிலுக்கு அடியில் ஒரு மண் தோண்டியில் கள்ளும், சீசாபுட்டிகளில் சாராயம் முதலிய சீமைச்சரக்குகளுமிருந்தன.

அங்கே சாய்ந்திருந்த மனிதனுக்குச் சுமார் நாற்பது வயதிருக்கலாம். பெருத்த முகமும், அடர்ந்து கொம்புகள் போல நீண்டிருந்த மீசைகளும் அவன் மதுரைவீரனோ ஐயனாரப்பனோ முனீசுவரனோ என்ற அச்சத்தையு முண்டாக்கின. புஜங்களும், கைகளும், மார்பும் எஃகினால் ஆக்கப்பட்டனவோ வெனத் தோன்றி கத்தியால் வெட்டினாலும் கத்தியின் கூர்மையை மழுக்கி அதன் பற்களை உடைக்கத் தக்கவையாயிருந்தன. அவன் மனித இனத்தையும் சேராமல் விலங்கின் இனத்தையும் சேராமல் இரண்டிற்கும் இடையில் ஒரு புதிய சிருஷ்டியாக இருந்தான். அவனது அங்க அமைப்போ மனிதரைப் போல விருந்தது. தேகபலமும், குண அமைப்பும், கொடிய துஷ்ட விலங்குகளின் அமைப்பைப்போல விருந்தன. அந்தச் சிற்றூரில் அவனே எல்லோருக்கும் அதிபதியாகவும், மற்றவர் அவனது ஏவலை நிறைவேற்றும் நாய்களைப்போலவு மிருந்தனர். கதவைத் திறந்த வள்ளியம்மை என்பவள் அவனது ஆசை மணவாட்டி; அவ்வூரிலுள்ள கூரை வீடுகளிற்கு நடுவில் அவனது ஓட்டு வீடு எப்படி ஓர் அரண்மனை போல விருந்ததோ, அதுபோல, மற்ற குறத்திகளுக்கிடையில் வள்ளியம்மை ஒரு சக்கரவர்த்தினிபோலவும், அவளது ஆசை நாயகனான கட்டையன் குறவன் குறவர்களுக்குள் சக்கர

வர்த்தி போலவும் விளங்கினார்கள். ஒவ்வொரு வீட்டுக்காரரும் கிரமமான வழியிலும் அக்கிரமமான வழியிலும் சம்பாதிக்கும் பொருளில் பத்தில் ஒரு பங்கு கட்டையன் குறவனுக்குக் கொடுத்துவிட வேண்டும். அது நிற்க, கட்டையன் குறவன் கொள்ளையடிக்கச் சென்றால், அவன் எவர்களைக் கூப்பிடுகிறானோ அவர்கள் உடனே அவனோடு செல்லவேண்டும்; அவன் கொள்ளையடிக்கும் பொருள்களில் அவனாக மனதிரங்கி எதைக் கொடுப்பானோ அதையே அவர்கள் வாங்கிக் கொள்ள வேண்டும்; இத்தகைய ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த நம்பிராஜனது சன்னிதானத்திற்கே அம்பட்டக் கருப்பாயி வந்து சேர்ந்தாள்.

அவளைக்கண்டவுடனே கனைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து கட்டையன், "கருப்பாயியா? வா அம்மே! இப்படிக் குந்திக்க என்ன சொகமா? ஆறு மாஷகாலமா இந்தப் பக்கமே காணமே" என்றான்.

அதற்குள் அவனுக் கெதிரில் வந்து தரையில் உட்கார்ந்து கொண்ட கருப்பாயி மகிழ்ச்சியைக் காட்டிய முகத்தோடு "சொகந் தாப்பா! ஒங்கிட்ட வராமே யென்ன போகாமே யென்ன. வந்தாக்கா ஒனக்கு ஏதாச்சும் பலத்த வேட்டே கொண்டாரணும். இல்லாமெப் போனா, சொம்மா வாரத்துலே என்ன பெரயோசனம்? அதனாலே தான் வரல்லே" என்றாள்.

அதைக் கேட்ட கட்டையன், "அப்பிடியானா இப்ப பலத்த வேட்டெ கொண்டாந்திருக்கேன்னு ஆவுது. அப்படித்தானா?" என்று சுமுகமாகக் கேட்டான்.

**கருப்பாயி:**—கொண்டாந்துதான் இருக்கறேன். அது இருக்கட்டும். வள்ளியம்மா ஏழு மாஷமா முளுவாமெ இருக்கறான்னு சொல்லிக்கிட்டாவளே. பளைய செநேகிதகாரி? நான் ஒருத்தி இருக்கறேனே. எனக்குச் சொல்லியனுப்ப ஒனக்குத் தெரியாமெத்தானே போச்சு? என்னெ யெல்லாம் நீ மதிப்பியா அப்பா! நான் என்ன சின்னப் பொண்ணு! இருவது வருசத்துக்கு மின்னே இருந்த மாதிரியா இப்ப கொமரியா இருக்கறேன்—என்று நிஷ்டூரமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட கட்டையன், "பருப்பில்லாமெ கண்ணாளம்நடக்குமா! நீ தான் வந்திருந்து புள்ளெ பெத்து விடணும்; ஒனக்கு சேதி சொல்லியனுப்பணுமின்னு ரெண்டு நாளெக்கி மின்னதான் வள்ளிக்கிட்ட சொன்னேன். அதுக்குள்ளற நீயே வந்துட்டே. ஒனக்குத்

தான் நல்லா மருத்துவம் தெரியும். நீதான் வரணும்; அந்த சமயத் துலே சொல்லி யனுப்பறேன்; உடனே வந்து குதிச்சுடணும். தெரி யிதா? வராமெ இருந்துடப்போறே?" என்றான்.

கருப்பாயி, "அம்பிட்டுப் பிரியமாச்சும் வச்சிருக்கிறியே! அதுவே போதும்; ஒரு ்காக்கா காலுலே சீட்டு எழுதி அனுப்பினக் கூட ஒடனே ஓடியாந்துடமாட்டேனு? நீ மவராசா இல்லியா! ஒங்க ஊட்டு அவசரத்துக்கு வராமெப்போனு, கண்ணெப்புடுங்கிட மாட் டியா; பயப்படாதே. நான் இருக்கறேன் சமயத்துக்கு" என்றாள்.

அந்த முகஸ்துதியைக் கேட்ட கட்டையன் மகிழ்ச்சியும் தற் பெருமையும் அடைந்தவனாய், "கருப்பாயியொட பிரியம் எப்பவும் மாறாமே ஒரே மாதிரியா இருக்குது. மத்தவங்க அப்பிடி இல்லே. அது கெடக்கட்டும். கொஞ்சம் சோறு துன்றியா? ஆருடியது வள்ளி யம்மா! எங்கே அக்காளுக்குக் கொஞ்சம் கறியும் சோறும் சட்டி யிலே போட்டுக் கொண்டாந்து வை; லோட்டாவுலே தண்ணி கொண்டா" என்று அன்போடு கூறினான்.

அதைக் கேட்ட கருப்பாயி, "இல்லே அப்பா! வாணும் வா ணும்; இப்பதான் சாப்பிட்டு ஒரு அவசர சோலியா ஓடியாந்தேன். இதோ திரும்பி ஓடணும். வள்ளியம்மா! கொண்டார வாணும். அப்பா! கட்டையா! இன்னக்கி ராத்திரி பன்னண்டு மணிக்கு நீ எங்க ஊட்டுக்குக் கட்டாயமா வரணும். வரமுடியுமா?" என்றாள்.

**கட்டையன்:**—சங்கதி யென்ன? நல்லாத்தான் சொல்லேன். இஞ்சே வேறே யாருமில்லையே பயமென்ன?

**கருப்பாயி:**—"ஒண்ணுமில்லே. இன்னக்கி ராத்திரி எங்க ஊட் டுக்கு ஒரு மனிசன் வாரான். அவனெ காமரா உள்ளே படுக்கவைக் கப்போறேன். அவனெ ராத்திரியே ரகசியமா சரிப்படுத்திப் புட ணும். அவன் காதுலே இருக்கற வைரக் கடுக்கன், வைர மோதரம், தங்கக் கெடியாரம் எல்லாம் அஞ்சாயிரம் ரூபா தாளும். பணப் பையிலே ஒரு கட்டு நோட்டு சொருகி வச்சுக்கிறான். அது பத்தா யிரம் ரூபா இருக்கும். நல்ல வேட்டை காரியத்தெ முடிக்கறத் துலே கஸ்டமே இல்லே. அவன் 17, 18-வயசுப் பையன்; கோளிக் குஞ்சு கணக்கா இருக்கறான். மூக்கெப் பிடிச்சா உசிரு போயிடும். சொத்தெ ஆளுக்குப் பாதியா எடுத்துக்கலாம்" என்றாள்.

கட்டையன்:—அந்தப் பையன் ஒங்க ஊட்டுக்கு என்னத் துக்கு வாரான் ?

கருப்பாயி:—“எங்க ஊட்டுக்கிட்ட ஆலந்தூருப் பாதையிலே ஒரு வங்களா இருக்குதல்ல. அதுலே ஒரு கூத்தாடிச்சி வந்துக்கிரு. அவ நல்லா மூக்கும் முளியும் பலே டீக்கா இருக்கரு. அவளோடெ வலெயிலே பையன் உளுந்து கெடக்கருன். அவளே சரிப்படுத்தணு முன்னு எங்கிட்டச் சொன்னுன். அதுக்காவ வரச்சொல்லி இருக் கறேன். அவனெயே சரிப்படுத்திப்புட்டாப் போவுது.” என்ருள்.

அதைக் கேட்ட கட்டையன், “சரி ; அப்படியானு நல்ல வேட் டெதான். நான் மாத்தரம் வாறேன். பாளெ சீவற பிச்சாங்கத்தி, கைத்தடி ரெண்டும் போதும். ரெண்டையும் எடுத்தாறேன். நீ ஒரு மம்மட்டி மாத்தரம் தயாரா வச்சுவை. பன்னண்டு மணிக்கு அவன் நல்லா தூங்கற சமயத்துலே, ஆடறுக்கற மாதிரி கத்தியாலே ஒரே அறுப்பா ஊட்டியெ அறுத்து காமயிலுக்கு அன்னண்டே கொண்டு போயி குளிதோண்டி நல்லா பொதெச்சுப்புடுவோம். ஆனு, காமரா உள்ளே நெத்தம் கித்தம் படாமே சாக்கிரதெயா காரியத்தெ முடிக் கணும் ஏதுன்னு பின்னலே, அந்தப் போலீசுக்கார நாயிங்க ஏதாச் சும் தொந்தரவு பண்ணுவானுங்க. நீ கவலைப்படாதே. காரியத்தை ஒம் மனசுபோல முடிச்சுக் குடுக்கறேன். போய் ஆசரா இரு” என்ருன்.

கருப்பாயி:—சரி ; சந்தோசம். நீ தவருமெ வந்துடணும். நான் அவங்கிட்ட பொய் சொல்லி நம்பவச்சு படுத்திருக்க வைக்கறேன். நான் அவசரமாப் போவணும் ; போவட்டுமா ?—என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள்.

கட்டையன்:—சரி போயித்துவா ; கொஞ்சம் தாவத்துக் காச் சும் குடியேன் ; சொம்மாப் போறியே ; நல்ல புதுக்கள்ளு இருக்குது; கொஞ்சம் ருசிபார்க்கிறியா ?—என்று உற்சாகத்தோடு கேட்க, அவள் “இல்லேப்பா ; ராத்திரி காரியமெல்லாம் முடியட்டும். அப்பாலே கொடங்கொடமாகக் கள்ளுக் குடிச்சுக்கலாம். நான் போயித்துவா றேன் வள்ளியம்மா ! கதவெ மூடிக்கோ” என்று சொல்லிக்கொண்டு வாசலை நோக்கிச் செல்ல, வள்ளியம்மை விரைவாக வந்து வாசற் கத வின் தாளைத் திறந்து அவளை வெளியில் அனுப்பிவிட்டு திரும்பவும்

தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள். அவ்விடத்திலிருந்து புறப் பட்ட அம்பட்டக் கருப்பாயி விசையாகநடந்து தனது இருப்பிடத்தை யடைந்து அன்றிரவிற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து வைத்துக்கொண்டு மாரமங்கலம் மைனரது வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள்.

## 4-ம் அதிகாரம்

## பெரிய இடத்துக் குழந்தைகள்

மாரமங்கலம் மைனரது கதி எப்படி முடிந்த தென்பதைக் கூறு முன், மாரமங்கலம் சமஸ்தானத்தைப் பற்றிய விவரம் சிறிதளவு தெரிய வேண்டியது அவசியமாக இருக்கிறது. மாரமங்கலமென்பது தஞ்சை ஜில்லாவில் காவிரிக்கரைக்கு இருபுறங்களிலும் நெடுந்தூரம் பரவிய ஒரு பெருத்த சமஸ்தானம். அதன் ஜெமீந்தாருக்கு ஒவ்வொரு வருஷத்திலும் ஐந்து லக்ஷம் ரூபாய் வருமானம் வந்தது. இந்த ராஜதானிக்கே அதுதான் எல்லாவற்றிலும் பெருத்த சமஸ்தானமாகக் கருதப்பட்டு வருகிறது. இந்தக் கதை தொடங்குவதற்குப் பதினெட்டு வருஷங்களுக்கு முன் அந்த சமஸ்தானத்தைக் கடைசியாக ஒரு ஜெமீந்தார் ஆண்டுக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு வயது ஐம்பத்தைந்து; அவரது நாற்பத்தைந்தாவது வயதில் அவரது மனையாட்டி இறந்துபோய்விட்டாள். அப்போது அவருக்கு ஆண் பெண் ஆகிய எவ்வித சந்ததியுமில்லா திருந்தது. ஆதலால் அவர் ஏகாங்கியாக இருந்தார். ஆனால் அந்த ஜெமீந்தாருக்குத் தம்பிமகன் ஒருவனிருந்தான். அவனது பெற்றோர் அவன் குழந்தைப் பருவத்தினனா யிருந்தபோதே காலஞ்சென்றனர். ஆதலால் அநாதையாக இருந்த அந்தச் சிறுவனை ஏகாங்கியான மூத்த ஜெமீந்தார் தமது குழந்தைபோல் மதித்து மிகுந்த வாத்சல்யத்தோடு வளர்த்து அவனுக்கு நன்றாகக் கல்வி கற்பிக்க நினைத்து சென்னையிலிருந்த தமது பங்களாவில் கொணர்ந்து வைத்து சென்னைச் சர்வ கலாசாலையில் படிக்கும்படி ஏற்பாடு செய்து, அவனது பொருட்டு எண்ணிறந்த ஆள்மாகாணங்களை யெல்லாம் அமர்த்தி வைத்தார். அவன் வயதடைந்தவுடன், அவனுக்கே தமது சமஸ்தானம் முழுதும் சேரவேண்டு மென்ற விருப்பம் கொண்டவராய், அவர் தமது சொந்த மகனைக் காட்டிலும், நூறு மடங்கு விசேஷ

மான அருமை பாராட்டி செல்வமாகவும் சிறப்பாகவும் அவனை வளர்த்துவந்தார். அவன் பதினேழு வயதடைந்தான். சென்னையிலிருந்த பல துஷ்ட நண்பர்களது சகவாசத்தால் அவன் பற்பல தீய வழிகளில் நடந்து, துன்மார்க்கச் செயல்களில் பிரவேசித்தான். அவன் ஆறுமாத காலத்திற்குள் ஒன்றிலிருந்து இன்னொன்றாய் கெட்ட காரியங்களி லிறங்கி கூத்தி, குடி, சூதாட்டம் முதலிய சகலமான காரியங்களிலும் இறங்கி தினந்தினம் ஆயிரக்கணக்காகப் பணச் செலவு செய்யத் தொடங்கினான். பெரிய தகப்பனாரால் அனுப்பப்படும் பணம் அவனது பெருவாரிச் செலவிற்குச் சிறிதும் போதாததாய்ப் போகவே, அவன் கடன் வாங்கத் தொடங்கினான். கிழட்டு ஜெமீந்தாருக்கு சிறுவனது செயல்களெல்லாம் ரகசியமாக எட்டிக்கொண்டிருந்தன. அவர் மிகவும் வருந்தி அவனுக்கு அடிக்கடி கடிதம் எழுதி நயமாகவும் பயமாகவும் புத்தி சொல்லிப் பார்த்தார். அது அவனது செவிகளுக்கு ஏற்கவில்லை. பிறகு அவர் பணம் அனுப்புவதை நிறுத்திவிடுவதாக பயமுறுத்திப் பார்த்தார். பையன் அதற்கும் சரிப்படவில்லை. ஜெமீந்தார் மனமுடைந்தவராய் கடைசியாக ஒரு கடிதம் எழுதினார். அவன் தனது தீயசெயல்களையெல்லாம் விட்டு உடனே மாரமங்கலத்திற்கு வந்துவிட வேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிடில் தமது பங்களாவிற்குள் அவன் நுழையகூடாதென்றும் கண்டிப்பான கடிதமெழுதி, அவன் தமது சொற்படி செய்யாவிடில் பங்களாவைப் பூட்டி முத்திரை வைத்துவிட்டு வந்துவிடும்படி மானேஜருக்கும் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார். ஒரு நாள் பையன் இரவெல்லாம் குடித்து ஊரில் திரிந்துவிட்டு விடியற்காலம் முகத்தில் துணியைப் போட்டு மூடிக்கொண்டு பங்களாவிற்குள் நுழைந்தபோது மானேஜர் குறுக்கே நின்று கடிதத்தைக் கொடுத்தார். அதைப் படித்தவுடனே பையனுக்குப் பெரிதும் கோபம் பொங்கி யெழுந்தது. "கிழப் பையனுக்கு இவ்வளவு தைரியமா? நான் அவன் சொல்வதைக் கேட்கமாட்டேன். அவன் என்னை என்ன செய்ய முடியும்? அவன் இன்றைக்கோ நாளைக்கோ சாகப் போகிறான். அதன் பிறகு சொத்தெல்லாம் யாருடையது? அவன் தயவும் வேண்டாம். பிரியமும் வேண்டாம். அவன் சொற்படியும் நான் இனி நடக்கமாட்டேன்" என்று கூறிய வண்ணம் கடிதத்தை மானேஜரது முகத்தில் வீசி அடித்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டான். அவன் சொன்ன மறுமொழியை ஒரு வார்த்தை விடாமல்

மானேஜர் அப்படியே பெரியஜெமீந்தாருக்கு எழுதிவிட்டார். அதைக் கேட்டவுடனே கிழவருக்கு சகிக்கமுடியாத கோபமுண்டானதன்றி, அந்த விசுவாச காதகனுக்குச் செய்ததெல்லாம் வீணுயிற்றே என்ற நினைவினல் மனமுடைந்தவராய் அவர் கரைகடந்த விசனத்திலாழ்ந்தார்; எவ்வளவோ மேன்மையான சமஸ்தானம் அப்படிப்பட்ட அயோக்கியனுக்குப் போய்ச் சேருவதைப்பற்றி மிகுந்த சங்கடமடைந்து ஒரு வாரம் இரவு பகல் அதே நினைவாக விருந்து கடைசியாக ஒரு முடிவிற்கு வந்தார்; தாம் உடனே ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துக்கொள்ள வேண்டியதே தக்க காரியமென்று தீர்மானித்தார்; அவருக்கு அப்போது வயது ஐம்பத்தைந்தானதால், தமக்கு தக்க இடத்தில் பெண் கிடைக்காதென்பதை உணர்ந்தார். ஆதலால் ஓர் ஏழையின் வீட்டிலேதான் பெண் பார்க்கவேண்டுமென்று நினைத்து, தமது தூரபந்துவான ஒரு சிறிய மிராசுதாரை வரவழைத்தார். அவருக்குக் **கல்யாணி** என்று பெயர் கொண்ட மகா ரூபலாவண்ணியம் பொருந்திய ஒரு பெண்ணிருந்தாள். அப்போது அவளுக்கு வயது பதினன்காகி இருந்தது. அந்தப் பெண்ணைத் தமக்குக் கொடுக்கும்படி கேட்க, நித்திய தரித்திரனான அந்த மனிதன் உடனே இணங்கிவிட்டான். பெண்ணும் நன்றாகப் படித்த புத்திசாலி; மகா அற்புதமான அழகுவாய்ந்தவள். அவ்வளவு பெருத்த சமஸ்தானத்திற்கெல்லாம் தான் எஜமாட்டியாகப் போவதைக் கருதினளேயன்றி, புருஷன் கிழவனென்பதை நினையாமல் அவளும் முழுமனதோடு அதற்கு இணங்கினாள். ஒரு வாரத்திற்குள் கலியாணமும் முடிந்து, சோபனமும் நிறைவேறியது. யௌவன மங்கையான கல்யாணியும் வயோதிகரான ஜெமீந்தாரும் ஒன்று கூடி இரண்டுடலும் ஒருயிரும்போல அந்தரங்கமான காதலோடு இல்லறம் நடத்தலாயினர். எவருக்கும் கிடைக்காத உன்னத பதவியும் ஒப்பற்ற பெருத்த செல்வமும் தனக்குக் கிடைத்ததினல் உண்டான உற்சாகத்திலும் குதூகலத்திலும் கல்யாணி தனது கணவன் வயதான கிழவனென்பதையே நினையாதவளாய், தன்னை அவ்வளவு பெருத்த செல்வாக்கில் வைத்து உண்மையான வாத்சல்யத்தைச் சொரிந்த அந்த மனிதரிடம் உண்மையான விசுவாசமும் நன்றியறிதலும் காட்டி நிரம்பவும் பயபக்தியோடு நடந்துவந்தாள். யௌவனப் புருஷனிடத்தில் அடையக்கூடிய சுகம் தனக்கு இல்லையே என்ற நினைவாகிலும் ஏக்கமாகிலும் அவளுக்கு உண்டாகவில்லை. மற்ற எல்லா விஷயங்களிலும்

ஏற்பட்ட பெருமையினுலும், சுகபோகங்களினுலும் அவள் முற்றிலும் திருப்தியடைந்தவளாய்ப் பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக ஒழுகிவந்தாள். அவர்கள் இவ்வாறு சுகித்திருக்கையில், கிழவர் கலியாணம் செய்துகொண்ட சங்கதி அவரது தம்பி மகனுன சின்ன துரைக்கு எட்டியது. அவன் அதைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல், "சாகப் போகிற கிழவனுக்கு இனிமேல் ஆண்பிள்ளை பிறக்கப்போகிறதோ!" என்று கூறிப் புரளிசெய்தவனுய், கிழவருக்கு அவ்வளவு அகாலத்தில் குழந்தை பிறக்காதென்ற நம்பிக்கையினுல் சிறிதும் அஞ்சாதிருந்தான். ஆறுமாத காலத்திற்குப் பிறகு, புதிய ஜெமீந்தாரிணி கருப்பிணியாகி யிருக்கிருளென்ற செய்தி பரவியது. அப்போதும் சின்ன துரை அதை இலட்சியம் செய்யவில்லை. மேலும் நான்கு மாதங்களில் ஓர் ஆண் குழந்தை பிறந்ததென்ற சமாசாரம் பரவியது. பெரிய ஜெமீந்தார் குடிகள் முதலிய சகல ஜனங்களும் அதைக் குறித்துக் கரைகடந்த மகிழ்ச்சி யடைந்து அதை ஒரு திருவிழாப் போல கொண்டாடினுர்கள். அந்த விஷயம் சின்ன துரைக்கும் எட்டவே அவன் அப்போதே சிறிது கவலைக்கொள்ளத் தொடங்கினுன். அவனது மனதில் பலவகையான சந்தேகங்கள் தோன்றி வதைத்தன. அது உண்மையாகவே ஜெமீந்தாரது குழந்தையாயிருக்குமோ அல்லது மோசக் கருத்தான காரியமாயிருக்குமோ வென்று நினைத்தான். ஆனுல் அது மாந்தம் முதலிய இளம்பிராய நோய்களுக்கெல்லாம் தப்பிப் பிழைக்காதென்று அவனது மனதில் ஒரு நினைவுண்டாயிற்று; அதனுல் அவன் அதைப்பற்றி எவ்வித முயற்சியும் செய்யாமல் சும்மாவிருந்தான். அதன் பிறகு ஒன்றரை வருஷத்துக்கொருமுறை ஒவ்வொரு குழந்தையாக வேறு இரண்டு பெண் குழந்தைகள் கிழவருக்குப் பிறந்தன. அந்தச் செய்தியும் சின்னதுரைக்கு எட்டியது. முதலில் பிறந்த ஆண் குழந்தையும் மூன்று வயதடைந்து மிகுந்த அழகும், புத்தி கூர்மையும், தேகாரோக்கியமும் உடையதா யிருப்பதாகவும் கேள்வியுற்ற சிறிய ஜெமீந்தாருக்கு உண்மையில் அப்போதே பெருத்த அச்சமும் கவலையும் உண்டாயின. துஷ்டர்களான தனது நண்பர்களிடம் அவன் தனது நிலைமையை விரித்துக் கூறி அவர்களோடு மந்திராலோசனை செய்து பெரிய ஜெமீந்தாரது ஆண் குழந்தையைக் கொன்றுவிடுவதே தகுதியான காரியமென்று உறுதி செய்துகொண்டான். எப்படி அந்தக் கொடிய செயலை நிறைவேற்றுவதென்று அவர்கள் உடனே

யோசித்தனர்; திருட்டு, கொலை முதலியவற்றில் பெயர்பெற்று அஞ்சா நெஞ்சு படைத்த ஒரு குறவன் ஈக்காட்டுத் தாங்கலில் இருப்பதாகக் கேள்வியுற்று தக்க ஆளை அனுப்பி தந்திரமாக அவனைத் தருவித்து அவனுக்குத் தேவையான பொருள் கொடுத்து, அவன் மாரமங்கலம் போய் அரண்மனைக்குள் நுழைந்து ஆண் குழந்தையை எடுத்து வந்து கொன்று எறிந்துவிட வேண்டுமென்று அவனுடன் ஒப்பந்தம் செய்துக்கொண்டனர். அந்தக் குறவனுக்கு அப்போது இருபது அல்லது இருபத்திரண்டு வயதிருக்கலாம். அவனது பெயர் **கட்டையன்** குறவன் என்பதாம். அவர்களிடம் பாதிப்பணம் அப்போது பெற்றுக்கொண்ட கட்டையன் குறவன் மாரமங்கலம் சென்று நாலைந்து நாட்கள் வரையில் பதுங்கி இருந்து அரண்மனையின் ரகசியங்களையெல்லாம் அறிந்து ஒரு நாள் குழந்தைகள் மூவரையும் தாதிகள் அரண்மனைக் கடுத்த தோட்டத்தில் வைத்து விளையாட்டுக் காட்டியிருந்த சமயத்தில், உள்ளே புகுந்து வேலைக்காரிகளைத் தடியால் அடித்து வீழ்த்திவிட்டு ஆண் குழந்தையை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான். மூர்ச்சித்து வீழ்ந்துகிடந்த தாதிகள் ஒரு நாழிகைக்குப் பிறகு எழுந்து மூத்த குழந்தை காணுமல் போய்விட்டதைப்பற்றி பெருத்த ஆரவாரம் செய்து விஷயத்தை அரண்மனையில் தெரிவிக்க, ஜெமீந்தார் கல்யாணியம்மாள் குடிகள் ஆள் மாகாணங்கள் முதலிய சகலரும் விசனக்கடலில் மூழ்கினர். ஏராளமான ஆட்கள் எல்லாத் திசைகளிலும் சென்று எவ்விடத்திலாவது குழந்தை கிடக்கிறதோவென்று தேடி இரண்டு மூன்று நாட்கள் அலைந்து குழந்தையைக் காணுமல் திரும்பினர். மாரமங்கலம் அரண்மனையே துக்கமாகிய இருளில் ஆழ்ந்து விட்டது. கிழவரோ படுத்த படுக்கையாகி விட்டார். தாம் எண்ணிய எண்ணமெல்லாம் ஒரு நொடியில் மண்ணுகிப் போனதைக் கண்டு கரைகடந்த துன்பமடைந்து புத்திர சோகத்தி லாழ்ந்துவிட்டார். சின்னதுரையே அவ்வாறு சூழ்ச்சி செய்தவனென்பது ஜெமீந்தார், கல்யாணி, பிறர் ஆகிய எல்லோருக்கும் சந்தேகமற விளங்கியது. அந்த நிலைமையில் தனது மனோதிடத்தை இழக்காதிருந்த கல்யாணி கிழவரைத் தேற்றி தான் உடனே சென்னைக்குப் போய் குழந்தை உயிரோடிருக்கிறதா அல்லது கொல்லப்பட்டுப் போனதா என்பதை நிச்சயமாக அறிந்து வருவதாகச் சொல்லி அவரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தேவையான தாதிகள் சிப்பந்திகள் முதலியோருடன் புறப்பட்டு

மறுநாளே சென்னையை யடைந்து தமது பங்களாவில் இறங்கி மிக வும் ரகசியமாக விசாரணை செய்யத் தொடங்கினாள்.

அவர்களது செய்தி இங்ஙனமிருக்க, கட்டையன் குறவன் தனது காரியத்தை முடித்தபிறகு, இரண்டாம்நாள் சென்னையி லிருந்த சின்ன துரையிடம் வந்து, குழந்தையைக் கொணர்ந்து நடு இரவில் கழுத்தைத் திருகிக் கொன்று பக்கத்து ஊரிலுள்ள ஒரு வீட்டு வாசலில் போட்டுவிட்டு வந்ததாகக் கூறி, அதன்மேல் அணி யப்பட்டிருந்த அழகிய சிறிய ஆடைகளையும் ஆபரணங்களையும் காட்டியதன்றி, அந்த குழந்தையின் மார்பில் மாம்பிஞ்சுபோல ஒரு மச்சமிருந்ததைக் கண்டதாகவும் கூறினான். அதைக் கேட்ட சின்ன துரை திருப்தி யடைந்து, மிகுதித் தொகையையும் கொடுத்து அவனை அனுப்பிவிட்டான். இரண்டு நாட்களில் பத்திரிகைகளிலும் அந்தக் குழந்தை காணுமற் போனதைப் பற்றிய விவரம் வெளி யாயிற்று. அதைக் கண்ட சின்னதுரை மிகவும் சந்தோஷமடைந்து, இனி கவலையில்லை என்றும், கிழவன் அதிசீக்கிரத்தில் ஒழிந்து போவானென்றும், உடனே தான் ஜெமீந்தார் ஆகிவிடலாமென்றும் நினைத்து மனப்பால் குடித்திருந்தான். அதன் பிறகு ஒரு மாத கால மாயிற்று. மாரமங்கலத்தில் கிழவர் இன்னமும் படுத்த படுக்கை யாகவே இருந்தார். சென்னைக்கு வந்த கல்யாணியிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. குழந்தையைப் பற்றிய நிச்சயமான செய்தி எதுவும் கிடைக்கவில்லை யென்றும், அநேகமாக அகப்பட்டுப் போகு மென்ற நம்பிக்கை இருப்பதாகவும் கடிதத்தில் எழுதப்பட்டிருந் தது. அதைப் படித்த கிழவர் மிகுந்த மகிழ்ச்சியும் ஆவலும் கவலை யும் கொண்டு தத்தளித்தவரா யிருந்தார். அவ்வாறு இன்னொரு மாதகாலம் சென்றது. கடைசியாக கல்யாணியிடத்திலிருந்து வேறொரு கடிதம் வந்தது குழந்தை அகப்பட்டுவிட்டதாகவும், அது சரியான போஷணை இல்லாமையால் இளைத்துப்போய் நோய்கொண் டிருப்பதாகவும், ஒரு வாரத்தில் அது குணமடையுமென்று டாக்டர் சொல்லுவதாகவும், குணமடைந்தவுடன் குழந்தையை எடுத்துக் கொண்டு மாரமங்கலம் வந்து சேருவதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. எதிர்ப்பாராத அந்த சந்தோஷ சமாசாரம் கிழவருக்குப் பொறுக்க முடியாததாகி விட்டது. அளவு கடந்த மகிழ்ச்சிப் பெருக்கைத் தாங்கமாட்டாமல் அவர் கீழே சாய்ந்து விட்டார். அவரது இருதயம் அந்த மனவெழுச்சியைத் தாங்க

மாட்டாமல் உண்மையிலேயே படிரென்று வெடித்துவிட்டது. குழந்தையைத் திரும்பவும் கண்ணால் காணும் பாக்கியத்தை யடையாமல் அவர் ஒரே நொடியில் உயிர்துறந்தார். அதைக் கண்ட சிப்பந்திகள் யாவரும் அச்சமும், திகைப்பும், விசனமு மடைந்து, சென்னையிலிருந்த கல்யாணியம்மாளுக்கும், சின்னதுரைக்கும் தந்தியனுப்பினார்கள். அதைப்பெற்ற சின்னதுரை தான் நீண்டகாலமாக எதிர்பார்த்த அதிர்ஷ்டம் அப்போதே பலித்ததென்று நினைத்து கரை கடந்த சந்துஷ்டி யடைந்து, கிழவரது உத்தரகிரியைகளைச் செய்து, சமஸ்தானத்தை ஏற்றுகொள்ளுவதற்குத் தயாராகப் புறப்பட்டு மறுநாளே மாரமங்கலம் வந்துசேர்ந்தான். ஆனால், பிறர் தன்மீது சந்தேகிப்பார்களே என்ற நினைவு கொண்டவனாய், அவன் விசனமுற்றவன் போல நடித்து, ஜெமீந்தாரது பிணத்தின்மேல் வீழ்ந்து அழுது தனது துர்நடத்தையைப்பற்றியும், தான் அவரது மனதிற்கு அதிருப்தியுண்டாகும்படி நடந்து கொண்டதைப்பற்றியும் பிரலாபித்துத் தனது குற்றத்தை யுணர்ந்து சழிவிரக்கங் கொண்டவன்போலப் பாசாங்கு செய்தான். குழந்தை அகப்பட்டுவிட்டது என்ற விஷயம் கிழவரைத்தவிர மற்றவர்க்குத் தெரியாதாகையால், சின்னதுரையே இனி ஜெமீந்தாரென்றும், அவனே கிழவருக்குக் கருமம் செய்யவேண்டியவனென்றும், ஜனங்களெல்லோரும் முடிவுசெய்தனர்; கல்யாணியம்மாளது வருகையை நெடுநேரம் எதிர்பார்த்தனர். அவள் வரவில்லை ஆகையால் புரோகிதரை வைத்துக்கொண்டு சின்னதுரை தகனம் செய்வதற்குரிய சடங்குகளைத் தொடங்கினவனாய், இன்னம் சிறிது நேரத்தில் பிணம் ஒழிந்து போகுமென்றும், அபாரமான அவரது செல்வமெல்லாம் உடனே தனது வசம் ஆகிவிடுமென்றும் நினைத்து மனக்கோட்டை கட்டியவண்ண மிருந்தான். அவர்கள் கொட்டிமுழக்கிப் பிணத்தை எடுப்பதற்கு ஆயத்தமாக இருந்த தருணத்தில் கல்யாணியம்மாள் கதறிக்கொண்டு ஓடிவந்து தனது கணவன்மீது விழுந்து புரண்டழுது பிரலாபித்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு நெடுநேரம் அழுதாள். அதன் பிறகு ஜனங்கள் எல்லோரும் அவளைத் தேற்றி சவத்தைத் தகனம் செய்ய வேண்டுமென்று கூறி சின்னதுரையைக்கொண்டு மேலே ஆகவேண்டிய சடங்குகளைத் தொடங்கினார்கள். அதுகாறும் சின்னதுரையின் முகத்தையே காணாதவளான கல்யாணியம்மாள், யாரோ அன்னிய மனிதன் உத்தரகிரியைகளைச் செய்ய ஆரம்பித்ததை யுணர்ந்து, அந்த மனிதன் யாவனென வினவி

ளுள். அந்த சமஸ்தானத்திற்கு அடுத்த உரிமைக்காரனை சின்ன துரை அவனேயென்று அருகிலிருந்தோர் கூற, அதைக் கேட்ட கல் யாணியம்மாளுக்கு ரௌத்திராகாரமான கோபம் பொங்கி யெழுந் தது; "ஆகா; இந்தக் கொலைகாரனை உள்ளே யார் விட்டவர்கள்? பெரியவருடைய குழந்தை தங்கம்போல இருக்கையில் வேறு எவனுக் குப் பாத்தியதை இருக்கிறது? காணாமற்போன குழந்தை உயிரோடு அகப்பட்டுவிட்டது. அதைத் தாதி வைத்துக் கொண்டிருக்கிறாள். இந்த மனிதன் முகத்தில் விழிக்க எனக்கு மனம் கூசுகிறது. இவ னைப் போகச் சொல்லுங்கள்" என்று கண்டித்துக் கூறிவிட்டு, குழந் தையை வேறோர் அறையில் வைத்துக் கொண்டிருந்த தாதியை அழைக்க, அவள் மூன்று வயதடைந்த ஒரு குழந்தையோடு வந்து சேர்ந்தாள். அதைக் கண்ட ஜனங்களெல்லோரும் கரைகடந்த வியப் பும், மகிழ்ச்சியு மடைந்து குழந்தையை மாறிமாறி யெடுத்து முத்த மிட்டுக் கொஞ்சினார்கள். சரியான போஷணை யில்லாமையால், அது கருத்தும் இளைத்தும் தோன்றுகிறதென்று தாதி சமாதானம் கூறி னாள். எல்லோரும் அதை ஆமோதித்தனர். வேறுசிலர், அதன் மார்பி லிருந்த மாங்காய்வடு மச்சத்தை ஆராய்ந்து பார்த்தனர். மச்சம் அப்படியே காணப்பட்டது. யாவரும் திருப்தியடைந்தனர். அந்த விபரீதமான செய்தியைக் கேட்ட சின்னதுரை அவமானத்தினாலும், திகைப்பினாலும் குன்றிப்போய் வாய்திறந்து பேச மாட்டாமல் மெல்ல அப்பால் நழுவினான்.

அதன் பிறகு குழந்தையே கருமங்களைச் செய்யக் கடமைப் பட்டதாதலின், அதற்குப் பிரதிநிதியாக ஓர் உறவினன் தருப்பம் வாங்கிக் கருமங்களைச் செய்து தகனத்தை நிறைவேற்றினான். கல் யாணியம்மாள் நிரம்பவும் புத்திசாலியாதலால் சமஸ்தானத்தின் தலை மையைத் தானே வகித்துக்கொண்டாள். பெரிய ஜெமீந்தார் இறந்து போவதற்குச் சில நாட்களுக்குமுன்னால் ஒரு மரண சாசனம் எழுதி வைத்திருந்தார். குழந்தையின் மைனர்ப் பருவம் நீங்குகிறவரையில் கல்யாணியம்மாளும், சென்னையிலுள்ள அவரது நண்பர்களான வக் கீல் சிவஞான முதலியார், சோமனாதபுரம் ஜெமீந்தார் ஆகிய வேறு இருவரும் மைனருக்குப் போஷகராக இருந்து காரியங்களை நடத்த வேண்டுமென்ற விவரமும் வேறு பலவகையான விவரங்களும் அதில் எழுதப்பட்டிருந்தன. சென்னையிலிருந்த போஷகர்கள் இருவரும்

அடிக்கடி மாரமங்கலம் போவதில்லை யாதலால், கல்யாணியம்மாளே சகலமான அதிகாரத்தையும் நடத்தி வந்தாள். ஜெமீந்தாரது தகன தினத்திற்கு மறுநாட்காலையில் ஒரு விபரீதமான செய்தி பரவியது; அரண்மனைத் தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்த மரமொன்றில் கட்டப்பட்ட ஒரு மணிக்கயிற்றில் சுருக்கிட்டுக் கொண்டு சின்னதுரை தற்கொலை செய்துகொண்டு பிணமாகித் தொங்குகிறானென்ற பயங்கரமான சமாசாரம் தெரிந்தது. ஒழிந்தான் கொலைகாரன் என்று ஜனங்கள் யாவரும் வாழ்த்துப் பாடினர். போலீசாரும் மற்றவரும் பிணத்தை எடுத்து, அவன் தானாகவே தற்கொலை செய்துகொண்டிருந்தானென்று மகஜர் எழுதிய பிறகு பிணம் கொளுத்தப்பட்டது. அன்றோடே கல்யாணியம்மாளது கவலையும் அச்சமும் ஒழிந்தன. அவள் தனது மூன்று குழந்தைகளோடு மிகவும் சந்தோஷமாகக் காலங்கழிக்கத் தொடங்கி, மகோன்னத தசையிலிருந்து, பொருட்களை யெல்லாம் ஆண்டனுபவிக்கத் தொடங்கினாள் அவள் சென்னையிலிருந்த தங்களது பங்களாவில் சில மாதங்களும், மாரமங்கலம் அரண்மனையில் சிலமாதங்களுமாக மாறிமாறி இருந்து சகலமான சுகபோகங்களுடன் தனது குழந்தைகளை வளர்த்துவந்தாள். அவ்வாறு பதினான்கு வருஷங்கள் சென்றன. குழந்தைகள் மூன்றும் யௌவனப் பருவமடைந்தன. அவர்களில் மூத்தவனே இந்தக் கதையின் தொடக்கத்தில் மாரமங்கலம் மைனரென்று குறிக்கப்பட்டவன். அவன் துரைராஜாவின் நட்பினால் சகலவிதமான துர்க்குணங்களையும் கற்று, தனது தாயான கல்யாணியம்மாளின் சொல்லிற்குக் கீழ்ப்படியாத துஷ்டனாய் மாறி துன்மார்க்கங்களிலேயே சென்றுக் கொண்டிருந்தான்.

அவன் மோகனாங்கியினிடம் சிநேகம் செய்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தோடு ஆலந்தூரையடைந்து அம்பட்டக் கருப்பாயியின் நட்பை சம்பாதித்துக்கொண்டு மாலையில் வருவதாக உறுதி சொல்லிவிட்டுத் திரும்பிவந்தானல்லவா? அவன் தங்களுடைய பங்களாவை அடைந்து தனது தாயான கல்யாணியம்மாள் முதலியோரின் கண்ணில் படாமல் தனது பகற் போஜனத்தை முடித்துக்கொண்டு மாலையில் ஆலந்தூருக்குப் போவதற்குத் தேவையான உயர்ந்த ஆடையாபரணங்கள் முதலிய சாமான்களை யெல்லாம் எடுத்து ஆயத்தமாக வைத்துக்கொண்டிருந்தான். தனது எண்ணம் சுலபத்தில் பலிக்கப் போவதைக் கருதி மனக்கோட்டை கட்டி உலகத்தி

துள்ள அழகான பெண்கள் யாவரிலும் சிறந்தவளும் உலகத்தை
யாளும் மன்னாதி மன்னர்களுக்கும் கிடைக்காத பெண்கள் நாயகமு
மான மோகனாங்கி தன்னிடம் காதல் மொழி கூறிக், கொஞ்சிக்
குலாவி சரசசல்லாபம் செய்யும் பாக்கியம் அன்றிரவே தனக்கு ஒரு
கால் கிடைத்தாலும் கிடைக்கலாமென்று நினைத்து, பகற்கனவு கண்டு
கொண்டிருந்தான். பொழுது ஏற ஏற அவனது பித்தம் தலைக்கேறி
யது. ஆசையும் ஆவலும் மலைபோலப் பெருகி அவனது தேகத்திற்
கும் மனத்திற்கும் முறுக்கேற்றின வாதலால் அவன் ஒய்வின்றி எழு
வதும் உட்காருவதும் தனது விடுதியிலேயே உலாவுவதுமாக இருந்த
தன்றி அவனது மனம் முற்றிலும் ஆலந்தூர் பங்களாவிற்குள்
ளிருந்த இன்ப வடிவத்திலேயே லயித்துப் போயிருந்ததாகையால்,
அவன் தன்னையும் தானிருந்த உலகத்தையும் மறந்தவனாக இருந்
தான். கடிகாரம் அப்போதைக்கப்போது மணியடித்தபோதெல்லாம்,
அவன் அதைக் கவனித்து, "இன்னமும் பொழுது போகவில்லையே"
என்று தவித்து ஒவ்வோர் உடையாக அணிந்தணிந்து கழற்றி
நிலைக்கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டே இருந்தான்.
சரியாக மாலை ஆறு மணிக்குப் புறப்பட வேண்டுமென்று தீர்மானித்
துக்கொண்டு அதன்பொருட்டு தனது அலங்காரத்தை யெல்லாம்
பகல் மூன்று மணிக்கே செய்து முடித்துக் கொண்டவனாய் அவன்
கடிகாரத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். மணி ஐந்தா
யிற்று. அந்த சமயத்தில், அவனுக்கு முன்னால் ஒரு வேலைக்காரன்
தோன்றிக் குனிந்து வணங்கி "பெரிய எஜமானியம்மாள் அழைக்
கிறார்கள்" என்றான். அதைக் கேட்ட மைனருக்குக் கோபம் பிறந்
தது. தான் புறப்படப்போகும் நல்ல சமயத்தில் தனது தாய் எதற்
காக அழைக்க வேண்டுமென்ற நினைவும் ஆத்திரமு முண்டாயின.
அவன் உடனே எழுந்து தனது தாயின் அந்தப்புரத்தை நாடிச்
சென்றான்.

மாரமங்கலம் ஜெமீந்தாரினியான கல்யாணியம்மாளுக்கு அப்
போது முப்பத்து மூன்று வயது நிறைந்தது. அவள் மகா கம்பீர
மான அழகு வாய்ந்தவள் என்பது முன்னரே குறிக்கப்பட்டிருக்
கிறது. எவருக்கும் கிடைக்காத சுகபோகங்களிலும் அபரிமிதமான
செல்வத்திலும் தானே ஏக சக்ராதிபதியாக இருந்து, தேகத்தைப்
பாதுகாத்துக் கொண்டவளாதலால், அவளது அழகு அமோகமாகப்

பெருகி அவள் பூலோக சக்ரவர்த்தினியோ அல்லது இந்திராணியோ என்று எல்லோரும் திகைக்கும்படி ஜெகஜ்ஜோதியாக விளங்கினுள். சாமர்த்தியமாகவும் சாதுரியமாகவும் பேசும் வாக்குவன்மையும், எல்லோரையும் அடக்கியாளும் மேம்பாடும் திறமையும் பெற்றவளாய், அவளைக் கண்ட யாவரும் பயபக்தியும், மதிப்பும் கொள்ளும்படியாக விருந்தனள். அவள் இளமைப் பருவத்திலேயே விதவை நிலைமை யடைந்தவளாதலால், அவளது பாலியமும் உன்னத வனப்பும், சிதறிச் சீர்குலைந்து போகாமல், மெருகேற்றிய சுவர்ணம்போலவும், பட்டை தீர்த்த வைரம்போலவும் ஆயிரமடங்கு ஒளி பெற்றிருந்தன. வயதேறுவதனுல், சிலருக்குண்டாம் தசைப்பற்றைப்போல அவளுக்கு எவ்வித இழுக்கும் ஏற்படாமல், அவள் யெளவனப் பருவத்திலிருந்ததைவிட அப்போதே மிக்க வசீகரத் தோற்றமுடையவளாகத் தோன்றினுள். காண்போர், அவளுக்கு இருபது வயதே இருக்குமென்று மதித்தனரன்றி, முப்பத்துமூன்று வயதடைந்தவளாக அவளை எவரும் சொல்லத் துணியவில்லை.

அவள் பாலியப் பருவத்தினளாதலால் சகலமான ஆபரணங்களையும் அணிந்திருந்தாள். மைனர் அழைக்கப்பட்ட அந்த தினம் அவள் முற்றிலும் கருப்புப்பட்டில் ஜரிகைக்கரையுள்ள பகட்டான ஒரு சேலை யணிந்திருந்தாள். தந்தம்போலப் பளப்பளப்பாக இருந்த அவளது மேனிக்குக் கருப்புப் பட்டாடை நன்ருகப் பொருந்தி அவளது அழகை நிரம்பவும் சோபிக்கச் செய்தது. சாய்வான நாற்காலிபோ லிருந்த ஒரு சோபாவில் அவள் உட்கார்ந்துக் கொண்டிருந்தாள். அந்த அந்தப்புரத்தில் எங்கும் படங்களும் நிலைக்கண்ணுடிகளும், லஸ்டர்களும், சோபாக்களும், பூத்தொட்டிகளும், ஜாலர் வைத்த தொங்கல்களும் நிறைந்து நாடகக்காட்சிபோல அமைந்திருந்தன. அவள் சந்தோஷமற்ற வதனத்தோடு உட்கார்ந்திருந்ததைக் கண்ட மைனருக்கு ஒரு வகையான அச்சம் தோன்றியது. அவள் தன்னை எதற்காகவோ கண்டிக்கப் போகிருளென்பதை அவன் உணர்ந்து கோண்டான். என்ருலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், அவன் தனது தாய்க்கு முற்றிலும் அடங்கியவனல்ல வென்பது தோன்ற உள்ளே நுழைந்து அவளுக்கு நெடுந்தூரத்திற் கப்பால் எங்கேயோ ஒரு மூலையில் கிடந்த ஒரு சோபாவில் உட்கார்ந்து தனது தாயின் பக்கம் காலைநீட்டி உட்கார்ந்து இன்

ஒரு திக்கிலிருந்த படத்தைப் பார்த்தவண்ணம், "இம்; சரி; எனக்கு அவசரமாய்ப் போகவேண்டும். கூப்பிட்ட காரியம் என்ன" என்று அலட்சியமாகக் கேட்டான்.

அதைக் கண்ட கல்யாணியம்மாள் கோபமும், அன்பும் காட்டிய முகத்தோடு, "தம்பீ! நீ பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட மரியாதை இதுதானா? நான் கூப்பிட்டால் நீ ஒரு காத தூரத்துக்கு அப்பால் போய் ஒரு மூலையில் உட்கார்ந்து பாட்டியைப்போலக் காலை நீட்டிக்கொண்டு படத்தோடு பேசுகிறாயே? மற்ற எல்லா வரம்பையும் மீறி நடந்தாலும், மூத்தோர் கூப்பிட்டால், அவர்களுக்கருகில் போய், நின்றோ அல்லது உட்கார்ந்தோ, மரியாதையாக சம்பாஷிக்க வேண்டுமென்பதைக் கூடவா அநாவசியமென்று தள்ளிவிடுகிறது. தம்பீ! இப்படிப்பட்ட கேவலமான நடத்தையை யாரிடத்தில் பழகிக்கொண்டாய்? இனியாவது இதை விட்டுவிடு, பெரிய இடத்துப் பிள்ளைக்குத் தகுந்தபடி நடக்கக் கற்றுக்கொள்" என்றாள்.

அதைக் கேட்டவுடன் கோபத்தினால் மைனரது முகம் மாறிக் கருத்தது. அவன் "ஓகோ! மரியாதையில்லாமல்தான், கூப்பிட்டவுடனே ஓடி வந்தேனே! என்னைக் கண்டவுடன் ஏதாவது ஷராச் சொல்லி அதட்ட வேண்டியது. அதுதான் பெரிய எஜமானருக்குப் பெருமை போலிருக்கிறது" என்று குத்தலாக மொழிந்தான்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் மிகுந்த கோபத்தோடு உருட்டி விழித்து கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்து, "புதிது புதிதான வார்த்தைகளை யெல்லாம் சொல்லுகிறாயே! என்ன துர்ப்புத்தி இது? யாருடைய சகவாசதோஷம்? தம்பீ! வேண்டாம், இப்படி நடந்து கொள்வதனால் பெருமை வந்துவிடுமென்று நினைக்காதே; நீ உன் தாயினிடம் இப்படி நடந்து கொள்வதை யாராவது கண்டால் ஏளனம் செய்து சிரிப்பார்கள். அறியாத பையன் என்று நான் கொஞ்சம் பொறுத்துக்கொண்டால், தலைகால் தெரியாமல் உளறுகிறாயே!" என்று கடிந்து கூறினாள். அதைக் கேட்ட மைனர், புரளியாக "அம்மா! ஏழை மேலே இவ்வளவு கோபம் என்ன என்றான்.

கல்யாணி:—போதும் பிரசங்கம்; நிறுத்து. நீ மகா புத்திமானென்றே நினைத்துக்கொள்ளுகிறேன். நீ இந்த ஆறுமாச காலமாகக் கெட்டலைகிறதைப் பார்த்து ஊரெல்லாம் சிரிக்கிறது. அதைக் கேட்கக் கேட்க எனக்கு சகிக்க முடியாத தலைகுனிவாக இருக்கிறது.

மைனர்:—இந்தப் பழைய புராணத்தை ஓதத்தானா என்னை அழைத்தது? இதற்குமுன் இந்த ஆயிரம் தரம் சொல்லியாய் விட்டது. இது ஆயிரத்து ஓராம் தரம்.

கல்யாணி (கோபமாக):–என்ன துர்ப்புத்தி! எவ்வளவு துடுக்கு! ஏதேது இப்போதே இப்படி இருக்கிறதே! நீ எல்லாவற்றிற்கும் எஜமானுகிவிட்டால், கையால்பிடிக்க முடியாதுபோ லிருக்கிறதே! மேஜர் ஆக இன்னம் ஒரு வருஷத்துக்குமே லிருக்கிறது. அதற்குள் உன்னை நல்லவழிக்குக் கொண்டுவர வேண்டுமென்று நானும், வக்கீல்கள் இரண்டுபேரும் நினைத்து எவ்வளவோ பாடுபடுகிறேம். நான் உன்னிடம் நயமாகவும் பயமாகவும் கிளிப்பிள்ளைக்குச் சொல்வது போல எவ்வளவோ புத்தி சொல்லியாய்விட்டது. நீ ராத்திரி பகலாய் வீட்டுக்கே வராமல் திரிகிருய்! பணத்தை யெல்லாம் வாரி வாரி இறைத்துவிட்டு வருகிருய். எப்போதும் கெட்ட சகவாசமே செய்கிருய். நீ எப்போதும் இப்படித்தான் செய்யப்போகிருயா? அல்லது திருந்தப் போகிருயா? ஒன்றும் விளங்கவில்லையே!

மைனர்:—நான் எப்போதும் துரைராஜாவோடுதானே இருக்கிறேன். அவனுடைய சகவாசம் கெட்ட சகவாசமானுல் அவனுடைய தங்கை கண்மணியை எனக்குக் கலியாணம் செய்து வைக்க ஏன் ஏற்பாடு செய்யவேண்டும்?

கல்யாணி:—ஆகா! நீ பேசுகிறது எவ்வளவு அழகாயிருக்கிறது! கண்மணியும் அவனும் தவறுதலாக ஒரு வயிற்றில் வந்து பிறந்துவிட்டார்கள். மகா உத்தமியென்ருலும் அந்தக் குழந்தைக்கே தகும். எவருக்கும் கிடைக்காத மாசற்ற மாணிக்கமல்லவா கண்மணி. அவள் மேலான குணங்களும் நல்லநடத்தையும் உடைய பத்தரை மாற்றுத் தங்கம். அவனே சுத்த அயோக்கியன், குடியன், 'சூதாடி, தாசிவீடே கதியாய்க் கிடக்கும் மதிகேடன், அவனுடைய உண்மையான யோக்கியதை இன்னதென்பதை கண்மணி இன்னமும் அறிந்து கொள்ளவில்லை; அவன் விளையாட்டுப் புத்தியுடையவனென்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்கிருள். உண்மையில் அவனுடைய குணம் எனக்கே தெரியாமல் போய்விட்டது. தெரிந்திருந்தால், மீனுக்ஷியம்மாளுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கவே மாட்டேன். சொன்ன சொல்லுக்கு விரோதமாக இப்போது செய்ய எனக்கு மனமில்லை—என்ருள்.

மைனர்:—அப்படியானல், அந்தப் பேச்சையே எடுப்பதில் என்ன உபயோகம்? எனக்கு அவசரமாக ஓர் இடத்திற்குப் போக வேண்டும். கூப்பிட்ட காரியம் ஒன்றுமில்லைபோ லிருக்கிறது. நான் போகலாமல்லவா?—என்ருன்.

கல்யாணி;—(கோபத்தோடு) ஓகோ! அவசரமாய்ப் போக வேண்டுமோ! சரிதான். கண்மணி நல்ல தங்கமான பெண். இந்த துர்நடத்தையெல்லாம் அவளுக்குக் கொஞ்சமாவது பிடிக்காது. அவள் நிரம்பவும் அழகாயும் நற்குணவதியாயும் இருக்கிருளென்று நீ ஆசைப்பட்டதால், நான் இதை முடித்தேன். நீ கெட்டலைவது அவளுக்குத் தெரிந்தால், அவள் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளமாட்டாள். நீ மோசம் போகிறவன்தான்.

மைனர்:—ஒருநாளுமில்லை. அவளுக்கு என்மேல் எவ்வளவு பிரியம் தெரியுமா? அவள் எனக்காக உயிரைக் கூடக் கொடுத்து விடுவாளே. அதுவுமன்றி, அவளுக்கு சொத்துமில்லை; ஒன்றுமில்லை. இவ்வளவு பெரிய சமஸ்தானத்துக்கு எஜமானியாவதை எவளாகி லும் வேண்டா மென்பாளோ?

கல்யாணி:—சரி; அப்படியே இருக்கட்டும். நான் எதற்காக உன்னை வரவழைத்தே னென்பதை சொல்லுகிறேன்; கேள். உன் னுடைய போஷகர்களான சிவஞான முதலியாரும், சோமநாதபுரம் ஜெமீந்தாரும் நேற்று என்னிடம் வந்து நெடுநேரம் பேசிக்கொண் டிருந்தார்கள். மனிதர்களுடைய புத்தியைக் கெடுக்கக்கூடிய துர் விஷயங்கள் நிறைந்த இந்தப் பட்டணத்தில் நான் இருப்பது தவ றென்றும், அதனுல் குழந்தைகள் கெட்டுப்போக சந்தர்ப்பம் உண்டா கிற தென்றும் அவர்கள் சொன்னதன்றி, எல்லோரையும் அழைத் துக்கொண்டு மாரமங்கலத்துக்கு உடனே போவது நல்ல தென்றும் சொல்லுகிருர்கள். ஆகையால் நான் அப்படியே செய்யத் தீர் மானித்துவிட்டேன். உன்னுடைய கலியாண காலம் வரையில் நாம் அவ்விடத்திலேயே இருக்கவேண்டும். ஆகையால், நீயும் புறப்படத் தயாராக இருக்கவேண்டும். அதைச்சொல்லவே நான் உன்னை அழைத்தேன்.—என்ருள்.

மைனர்:—(ஆத்திரத்தோடு சோபாவை விட்டெழுந்த வண் ணம்) பலே பேஷ்! நீங்களெல்லோரும் போங்கள். என் உயிர் போனுலும் நான் அந்தப் பட்டிக்காட்டுக்கு வரமாட்டேன். அங்கே எனக்கு ஒரு நிமிஷங்கூடப் பொழுது போகாது—என்ருன்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள் கோபத்தோடு நிமிர்ந்து உறுதியான குரலில் "அப்படியானல் நாங்கள் போகிறோம். நீ இன்ஞென்று செய்; நம்முடைய சோமநாதபுரம் ஜெமீந்தார் வக்கீல் பரிட்சையில் தேறியவ ரென்பதும் சட்டத்தில் நல்ல அநுபோகமுள்ளவரென்பதும் உனக்குத் தெரியும். அவருக்கும் இந்த ராஜதானியின் கவர்னருக்கும் அன்னியோன்னியமான சிநேகமுண்டு; பம்பாய், கல்கத்தா, மத்தியமாகாணம் முதலிய ராஜதானிகளில் ஜெயில் நிர்வாகம் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி விசாரணை செய்வதற்காக கவர்னர், ஏழெட்டுப் பெரிய மனிதர்களை ஒன்றுக நியமிக்கப்போகிறாராம்; அதில் நம்முடைய சோமநாதபுரம் ஜெமீந்தாருக்கும் ஒரு ஸ்தானம் கிடைத்திருக்கிறதாம். அவர் உனக்கு அதில் கீழ் உத்தியோகங்களில் ஒரு கௌரவ உத்தியோகம் சம்பாதித்துக்கொடுத்து, உன்னையும் தம்முடன் கூட அழைத்துக் கொண்டு போக விரும்புகிறார். வட இந்தியாவிலுள்ள மகாராஜாக்களின் சமஸ்தானங்களுக்கெல்லாம் நீ போய்ப் பார்த்தால் உனக்கு உலக அநுபவம் ஏற்படுமென்று அவர் சொல்லுகிறார். ஆகையால் நீ அவரோடு போய்விட்டு வந்து சேர். அதற்குள் கலியாண காலமும் வந்துவிடும்.

**மைனர்:**—(குறும்பாக) என்னுடைய கலியாண காலம் இப்போது வரமாட்டேனென்கிறதோ? இதே நிமிஷத்தில் கலியாணம் செய்துகொள்ள நான் தயாராக இருக்கிறேன். பெண்ணும் சலாம் போட்டுக்கொண்டு கலியாணத்தை ஏற்றுக்கொள்ளும். அதை விட்டு மூக்கை நேராய்ப் பிடிக்காமல், தலையைச் சுற்றி பிடிக்கிறதுபோல், நான் ஊரை விட்டு ஒரு வருஷத்துக்குத் திண்டாட வேண்டுமோ? நான் போகவே மாட்டேன்.

**கல்யாணி:**—உன்னுடைய தகப்பனர் மரணசாசனத்தில் எழுதியிருக்கிறபடி கலியாணம் செய்கிறதா, அல்லது, நீ நினைத்தபடி செய்கிறதா?

**மைனர்:**—ஐயர் வருகிறவரையில் அமாவாசை காத்திருக்குமோ? என் தகப்பனர் அறுபது வயசில் கலியாணம் செய்துகொண்டால், நானும் அப்படியே செய்துகொள்ள வேண்டுமோ? அது முடியாது. ஒன்று இப்போது கலியாணம் செய்து வையுங்கள்; இல்லாவிட்டால், கலியாணம் ஆகிறவரையில் என்னை இங்கேயே விட்டு வையுங்கள். நான் வேறே எந்த ஊருக்கும் போகமாட்டேன்.

**கல்யாணி:**—சே! எவ்வளவு எடுப்பான பேச்சு! எவ்வளவு துடுக்கு! தம்பி! நீ இப்படி இருப்பாயென்று நான் நினைக்கவே இல்லை. நீ போகமாட்டே னென்றால், துரைத்தனத்தார் உன்னைக் கட்டாயப்படுத்திக் கொண்டு போவார்கள்.

**மைனர்:**—அப்படியே ஆகட்டும்; பார்க்கலாம் ஒரு கை.

**கல்யாணி:**—அது மாத்திரமல்ல. உனக்கு மாதமாதம் கொடுக்கிற பணத்தையும் நிறுத்தி விடுவார்கள்.

**மைனர்:**—கவலையில்லை. ஒன்றுக்கிரண்டாய் எழுதிக் கொடுத்துக் கடன் வாங்குகிறேன்—என்றான்.

அதைக் கேட்டவுடன், கல்யாணியம்மாளது கோபம் அடக்க முடியாத நிலைமையை யடைந்தது; அவள் தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று அவனை உருட்டி விழித்து, "இவ்வளவு தர்ப்புத்தியா உனக்கு? நீ என் சொல்லை மீறித்தான் நடக்கப்போகிறாயா?

**மைனர்:**—நான் இந்த ஊரிலேதான் இருக்கப் போகிறேன். என்னை வீணில் தொந்தரவு செய்ய வேண்டாம்;

**கல்யாணி:**—இது தொந்தரவல்ல உத்தரவு. நான் உத்தரவு செய்கிறேன். நீ கீழ்ப்படிய வேண்டும்—என்று அதட்டிக் கூறினாள்.

அதைக் கேட்ட மைனர், "ஆகட்டும். அப்படியே செய்வோம். உத்தரவுப்படி, மேல்படிகிறோம்" என்று குறும்பாக மொழிந்து அலட்சியமாக வேறு திக்கை நோக்கினான்.

அதைக் கண்ட கல்யாணியம்மாளது மனதில் கரைகடந்த கோபமும், விசனமும் பொங்கி யெழுந்தன. அவள் மிகவும் வெறுப்பாக அவனை நோக்கி, "சே! இவ்வளவு கேவலமான குணமுடைய மனிதனா நீ! ஆகா! நீ குழந்தையாயிருந்த போது உனக்காக நான் பட்டபாடுகள் இன்னின்னவை யென்று நீ அறிவாயானால்—உனக்கு நான் என்னென்ன செய்திருக்கிறே னென்பதை நீ உணர்வாயானால், நீ இப்படி நடந்து கொள்வாயா! ஆனால், அவைகளை நீ அறிந்தாலும், உன் புத்தி மாறாது;' என்று கூறினாள்.

**மைனர்:**—(மிகவும் அலட்சியமாக) சரி; மறுபடியும் பழைய கதை ஆரம்பமோ? நான் குழந்தையா யிருந்தபோது யாரோ என்னைத் திருடிக்கொண்டு போனானாம். என்னை மீட்டுக்கொண்டு வந்து

விட்டார்களாம். தொட்டத்துக்கெல்லாம் அந்தப் பெருமையையே எடுத்துப் பேசுகிறது. இல்லாவிட்டால், ஊரிலுள்ள தாய்களெல்லாம், குழந்தையைத் தேடாமலும், திரும்பவும் அது அகப்பட்டால், அதை அழைத்து வராமலும் தள்ளிவிடுவார்களோ—என்று சிறிதும் நன்றியறிவென்பதே இல்லாமல் கூறினன்; அவனது ஈவிரக்கமற்ற கொடிய சொற்களைக் கேட்டவுடனே கல்யாணியம்மாளது மனம் பொங்கியெழுந்தது, கண்களில் கண்ணீர் கலகலவென்று, உதிர்ந்தது. சொற்கள் தொண்டையிலிருந்து வெளியில் வரமாட்டாமல் அடைபட்டுப்போயின. கல்யாணியம்மாள் தனது சேலைத் தலைப்பை முகத்தில் மறைத்துக்கொண்டு இரண்டொரு நிமிஷம் கோவெனக் கதறியழுதவுடன், கண்களைத் துடைத்துக்கொண்டு, திரும்பவும், அவனைப்பார்த்து, "நல்லதப்பா! உன் இஷ்டம்போலச் செய். ஏதோ அவசரமென்றாயே; போய் அதைப் பார். இனிமேல் நான் உன்னை அழைப்பதுமில்லை, உன்னிடம் நயமாகக் கேட்பதுமில்லை. என்னுடைய அதிகாரத்தை எப்படிச் செலுத்த வேண்டுமோ அப்படிச் செலுத்துகிறேன்." என்று உறுதியாகக் கூறினாள்.

மைனர்:—சரி; இனி மல் யுத்தந்தான். யார் கட்சி ஜெயிக்கிறதென்பதைப் பார்க்கலாம்—என்று இறுமாப்போடு கூறிவிட்டு, முறுக்காக எழுந்து வாசற்படியண்டை போய், மூடப்பட்டிருந்த கதவை ஆத்திரத்தோடு காலால் உதைத்துத் தள்ளி திறந்து அப்பால் போய் திரும்பவும் கதவைப் படேரென்று மூடிக்கொண்டு, போய்விட்டான்.

அதைக் கவனித்துக்கொண்டே இருந்த கல்யாணியம்மாளுக்கு ரௌத்திராகாரமான கோபம் பொங்கியெழுந்தது; அவள் விறைப்பாகத் திரும்பிக் கதவைப் பார்த்தாள். கண்களில் தீப்பொறி பறந்தது; "ஆ! விஷப்பாம்பே! என் மார்பின்மேல் வளர்ந்து என்னையே கடிக்கிறாயல்லவா! சே! நீ மகா பாதகன்! உன் முகத்தில் விழித்தாலும் பாவம் சம்பவிக்கும். உன்னுடைய ஜாதிப் புத்தி எங்கே போகும்" என்று அவள் வாய்விட்டு வைது பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டாள். அந்த சமயத்தில் தனக்கு மிகவும் சமீபத்தில் யாரோ மனிதர் கொசகொச வென்று ரகசியமாகப் பேசிக்கொண்ட ஓசையைக் கேட்டு மான்போல மருண்டு திடுக்கிட்டு நிமிர்ந்து நாற்புறங்களையும் திரும்பிப் பார்த்தாள்; அந்த அந்தப்புரத்

திற்கு இரண்டு வாசல்களும் கதவுகளு மிருந்தன. மைனர் சற்று முன் சென்ற கதவிற்கு எதிரிலிருந்த இன்னொரு கதவிற்கு வெளிப் புறத்தில் அந்த ஓசை கேட்டதாக உணர்ந்த கல்யாணியம்மாள் விசையாக எழுந்துபோய் அந்தக் கதவைத் திறந்து பார்க்க, அவ ளது புதல்வியர் இருவரும் கதவிற்கு அப்புறத்தில் ஒளிந்து நின்ற தைக் கண்டாள்.

மூத்தவளான துரைஸானி யம்மாளுக்கு பதினைந்தரை வயதும், இளையவளான கோமளவல்லி யம்மாளுக்குப் பதினைன்கு வயதும் நிறைந்திருந்தது. இருவரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள் போல, தாயின் அற்புத வடிவத்தையும் வனப்பையும் கொண்டு இரண்டு சுவர்க்க லோகங்கள் ஜதையாகக் காணப்படுவதுபோல வந்து நின்றனர். ஆனால் துரைஸானியின் முகத்தில் உன்னதமான தோற்ற மும் அமர்த்தலான பார்வையும் தாயினுடையமுகத்தைப் போன்ற செருக்கிய கம்பீரமான நிமிர்வும் காணப்பட்டன. ஆனால் இளையவ ளிடத்தில் பெண் தன்மையும் அதிகமான கவர்ச்சியும் ஒரு வகை யான இளக்கமும் அடக்க வொடுக்கமும் நற்குண நல்லொழுக்கமும் தெள்ளிதில் விளங்கின. இருவரது அழகும் சாமுத்ரிகா லக்ஷணத் திற்கு ஒரு சிறிதும் பழுதின்றி ஒழுங்காக அமைந்திருந்தானலும் மூத்தவளது தேகம் திமிரையும் பக்குவ காலத்து முறுக்கையும் காட்டியது. சிறியவளது தேகமோ மிருதுத் தன்மையையும் உத்தம ஜாதி அமைப்பும் பெற்று விளங்கியது. துரைஸானியம்மாள் பூலோ கத்து சக்கரவர்த்தினிபோல விருந்தாள். கோமளவல்லியம்மாளோ வானுலகத்து தெய்வ கன்னிகை போல விருந்தாள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மடந்தையர் இருவரும் கதவின் மறைவில் ஒளிந்து நின்றதைக் கண்ட கல்யாணியம்மாள் அருவருப் போடு பார்த்து, "துரைஸானியம்மா! என்ன காரியம் இது? தாய்க் குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து வாதாடும் பிள்ளை யொருவன் எனக் கிருப்பது போதாதா? சாய் என்ன செய்கிருளென்று ஒளிந்து பார்க்கும் ரகசியப் போலீஸ்காரர்களான இரண்டு பெண்களையுமா நான் பார்க்கிறேன்?" என்று கடிந்து கூறினள்.

அதைக்கேட்ட துரைஸானியம்மாளின் முகம் ஆயாசத்தைக் காட்டியது. "போலீஸ்காரரா நாங்கள்?" என்று வியப்போடு கேட்டு நிறுத்தினள். "நாங்கள் அப்படி ஒன்றும் துஷ்டத்தனம் செய்ய வில்லை அம்மா!" என்று பணிவாகவும் உருக்கமாகவும் கூறிக்கண்ணீர்

விடுத்து அழுதுவிட்டாள் கோமளவல்லி. இருவரது குணத்தழகும் அதனால் நன்றாக வெளிப்பட்டது. மூத்தவள் பிறர்க் கடங்காத செருக்கும் பௌரஷமும் வாய்ந்தவளா யிருந்தாள். சிறியவளோ மிருதுத்தன்மை பயம் பக்தி வாத்சல்யம் முதலியவற்றின் வடிவ மாகவே தோன்றினாள்.

Bng-2

கல்யாணியம்மாள் மறுபடியும் நிமிர்ந்து துரைஸானியைப் பார்த்து, "என்ன காரியம் இது? ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று முறுக்காக கேட்க, துரைஸானி சடக்கென்று உடனே மறு மொழி கூற ஆரம்பித்து, "என்ன பிரமாதக் காரியம் செய்துவிட் டோம்? ஒன்றையும் காணோமே! உபயோகமற்ற சங்கதிகளுக்கெல் லாம் வீண் ஆடம்பரமாக இருக்கிறதே!" என்று கம்பத்தைப் பார்த் துக் கூறிய வண்ணம் சற்று தூரத்திலிருந்த ஒரு ஜன்னலண்டை போய், குழந்தை விளையாடுவதுபோல, அதன் தாழ்ப்பாளைப் பிடித்து ஆட்டிப் பார்த்துக்கொண்டு அலட்சியமாக நின்றாள்.

அதைக் கண்ட கல்யாணியம்மாள், தனது இரண்டாவது புதல் வியை நோக்கி, "கோமளவல்லி! நீயும் மற்றவரைப்போலவே மரி யாதை யில்லாமல் உன்னுடைய தாயினிடத்தில் நடந்துகொள்ளப் போகிறாயா? நீயாவது ஒழுங்கான மறுமொழி சொல்லப்போகிறா யா?" என்று முன்னிலும் சிறிது சாந்தமான குரலில் கேட்டாள்.

கோமளவல்லி மிகவும் பணிவாக, "நாங்கள் வேண்டுமென்று இங்கே வரவில்லை. வீணை வாத்தியார் வருவார் வருவாரென்று உட் கார்ந்துப் பார்த்தோம்; வரவில்லை. நேரமாய் விட்டதாகையால் நீங்கள் தேடிக்கொண்டு வரப்போகிறீர்களே என்று நினைத்து எழுந்து நாங் களே இங்கே வந்தோம், கதவருகில் வந்தவுடன், உள்ளே அண்ண னுடைய பேச்சுக்குரல் கேட்டது. அந்த சமயத்தில் நாங்கள் உள்ளே வந்தால் உங்களுக்கு ஆயாசம் உண்டாகுமென்று இங்கேயே நின்றோம். இது தற்செயலே யன்றி நாங்கள் வேண்டுமென்று கெட்ட எண்ணத்தோடு செய்ததல்ல" என்று அன்பாகக் கூறினாள்,

"அப்படியானால் உங்கள் அண்ணன் என்னை அவமதித்ததை யெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தீர்க ளல்லவா?" என்றாள்.

கோமளவல்லி அச்சமுற்றவளாய், "எல்லாம் காதில் விழவில்லை. நீங்கள் கேட்டதற்கு அண்ணன் சரியான மறுமொழி சொல்லாமல்

மரியாதைக் குறைவாகப் பேசினது மாத்திரம் தெரிந்தது. அதைக் கேட்டவுடனே, எங்களுக்கு உடம்பு கிடுகிடென்று நடுங்கிப்போய் துக்கமும் அழுகையும் வந்துவிட்டன. சகிக்கமுடியாத சங்கடப்பட்டுக் கொண்டிருந்தோம். அப்போதே நீங்கள் கதவைத் திறந்தீர்கள். அவ்வளவே நடந்தது.'' என்று துன்பகரமான குரலில் கூறினாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் தனது மூத்த குமாரியை அன்பாகப்பார்த்து "துரைஸானியம்மா! இப்படி வா! ஜன்னலண்டை போய் எதையோ கவனித்துக் கொண்டிருக்கிறாயே! நாங்கள் இங்கே பேசுவதில் உனக்கு எவ்வித சம்பந்தமுமில்லை யென்று நினைத்துக் கொண்டாயா? வா இப்படி'' என்று அழைத்தாள். அதை கேட்ட துரைஸானி "குற்றமில்லாத அற்ப சங்கதிகளுக்கெல்லாம் கோபித்துக்கொண்டால், எனக்கு சகிக்க முடியவில்லை; நான் ஒதுங்கி வந்து விட்டேன்'' என்று கூறிக்கொண்டே தாயிடம் திரும்பி வந்தாள். மைனரைப்போல அவள் முற்றிலும் பயமற்றவளாய்ப் போகாமல் தாயிடம் இன்னமும் சிறிது மரியாதையும் பயமும் உடையவளாக இருந்தமையால், தாய் அழைத்தவுடன் வந்துவிட்டாள், என்றாலும் கல்யாணியம்மாள் தனது முகத்தைச் சுளித்துக் கொண்டு, "ஆகா! கீழ்ப்படியாத பிள்ளைகளைப் பெறுவதைவிட அதிகமான துர்ப்பாக்கியம் உலகத்தில் வேறே எதுவுமில்லை.'' என்று விரக்தியோடு கூறித் தனது இளைய குமாரத்தியை வாத்சல்யத்தோடு பார்த்து, அவளது சிரத்தில் நிமிர்ந்திருந்த உரோமத்தைத் தடவி கொடுத்து, "செய்தது தவறென்று நீயாவது விசனப்படுகிறாய். தாயார் என்கிற மரியாதையை நீ கொஞ்சம் வைத்துக்கொண்டிருக்கிறாய். துரைஸானி, அவளுடைய அண்ணனைப்போலவே ஆங்காரங் கொண்டவளாக இருக்கிறாள். அவன்தான் ஆண்பிள்ளை; துஷ்ட சகவாசத்தினால் கெட்டு அப்படி நடக்கிறானென்றால், தாய்க்கடங்கியிருக்க வேண்டிய பெண் இம்மாதிரி அடங்காமலிருப்பது, பின்னால் கஷ்டத்தைத்தான் விளைவிக்கும்'' என்றாள். அதைக்கேட்டு துரைஸானி தாயை முறைத்துப் பார்த்துவிட்டு அப்பால் திரும்பிகொண்டாள். அந்த சமயத்தில் அறைக்கு வெளியில் ஒரு பெருத்த கூக்குரல் உண்டாயிற்று.

அதில் முக்கியமாக ஒரு பெண்பிள்ளையின் குரலே கேட்டது அடுத்த நிமிஷம் அந்த ஸ்திரீ தலைவிரிகோலமாக உள்ளே நுழைந்து கல்யாணியம்மாளுக் கருகில் நெருங்கி ஆத்திரத்தோடு கைகளை நீட்டி

நீட்டிக் கூச்சலிட்டு, "இன்னெயோடே ஒண்ணுரண்டு தெரிஞ்சு போவணும்; கெடக்கு கெடக்குன்னு பாத்தா, அந்தக் காலாடிப் பையன் தலைமேலே ஏர்றுன். நேத்துப் பையனுக்கு இம்பிட்டுக் குறும்பா! என்னெக் கண்டா அவனுக்கு எப்பபாத்தாலும் எளக்காரமாப் போச்சே! அந்தத் தறுதெலப் பையனே நீங்க கண்டிச்சா ஆச்சு. இல்லாமெப் போனு, நான் இனிமேலே சொம்மா இருக்கமாட்டேன். அம்மா! இத்தென நாளா ஒங்க மொவதாச் சனைக்காவப் பாத்தேன்'' என்று தைதாவென எண்ணெயில் அப்பம் குதிப்பதுபோல நாட்டிய மாடிக் கூக்குரல் செய்தாள்.

தனது தலைமை வேலைக்காரி அவ்வாறு தாறுமாருகப் பேசிக் கொண்டு வந்ததைக் கண்ட கல்யாணியம்மாள் அவளுக்கருகில் நெருங்கி "பொன்னம்மா! என்ன பைத்தியம் இது? ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறுய்? நிதானமாகப் பேசு. என்ன நடந்ததென்று சொன்னுல் அதற்குத் தக்கபடி நான் கண்டிக்கிறேன்; பதருதே'' என்று சாந்தமாகவும் அழுத்தமாகவும் கூறினுள்.

பொன்னம்மாள் முன்னிலும் அதிக ஆத்திரமாக, "ஒரு நாளா ரெண்டுநாளா! பாக்கற போதெல்லாம் திட்டுருன். நான் இந்த அரமனேலே ரொம்பகாலமா இருக்கறேனும்; பளய பெருச்சாளியாம். சடாயுவாம். கெயக்கொரங்காம். நீங்க எம்மேலே பிரியமா இருக்கிறீங்களாம்; அதுக்காவ, நான் துர்மந்திரியாம்; ஒரு நாளெக்கிமென்னுலே அடிவச்சு மிதிச்சுடப் போருனும். நாம்பாட்டுலே இப்ப ஒரு மூலையிலே படுத்திருந்தா, வழியோடே போன நாயி என் தலெ மேலே ஒதெச்சூட்டுப் போருனே; எம்பிட்டுத் துணிச்சங்கறேன்.''

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் மிகவும் தத்தளித்தவளாய் "பொன்னம்மா! பொன்னம்மா! அதிகப் பேச்சுப் பேசாதே. தம்பியை நான் கண்டிக்கிறேன். நாளைக்கு சமஸ்தானுதிபதி யாகப்போகும் தம்பியை நீ இப்படி இழிவாகப் பேசினுல், மற்றவருக்கு இளப்பமாகப் போய்விடும். பேசாமல், நீ போய்ப் படுத்துக்கொள். நான் விசாரிக்கிறேன்.'' என்றுள்.

கேவலமான அந்த சிப்பந்தி தனது அண்ணனை அவ்வளவு இழிவாகப் பேசியதைக் கண்ட துரைஸானியம்மாளுக்குப் பெருத்த கோபம் பொங்கி எழுந்தது. அவள் வேலைக்காரியைப் பார்த்து, "அடி பொன்னி! உன்னுடைய யோக்கியதை எவ்வளவு! நீ தாறுமாருகப்

பேசுகிறாயா? யாரைப் பேசுகிறோமென்பது தெரியவில்லைபோ லிருக் கிறது? பேசுவதை ஜாக்கிரதையாகப் பேசு; பல்லே உடைத்து விடச் சொல்லுவேன்'' என்று அதட்டிவிட்டு தனது தாயைப்பார்த்து "அம்மா! கொஞ்சநேரத்துக்கு முன் மிகவும் அற்பமான ஒரு பிழைக்காக எங்களிடத்தில் மிகவும் கடுமைகாட்டிக் கண்டித்த நீங்கள், மகா கேவலமான ஒரு வேலைக்காரி மிகவும் அவமானமாகத் தூஷிப்பதைப் பொருத்துக் கொண்டிருக்கிறது நிரம்பவும் ஆச்சரியமாக இருக் கிறது!'' என்றாள்.

அதைக்கேட்ட பொன்னம்மாள்' "ஓகோ! மகா கேவலமான வேலைக்காரியோ! என்னெ ஒங்க ஊட்டுப் புழுக்கச்சி இன்னு பாத் தியோ! அவன் ஒரு குறும்பன். நீ அதுக்குமேலே கிருவம் புடிச்சவ; ஒன்னெ எனக்குத் தெரியுமே'' என்றாள்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள் மிகவும் அதிகாரமான குர லில் "பொன்னம்மா! வாயை மூடு. வரவர உன் புத்தி என்ன இப் படி ஆய்விட்டது. மறுபேச்சுப் பேசாதே. அம்மா! துரைஸானி கோமளவல்லி! நீங்கள் உங்களுடைய அந்தப்புரத்துக்குப் போங் கள். பொன்னம்மாளிடத்தில் நான் கொஞ்சம் தனியாய்ப் பேச வேண்டும்'' என்றாள்.

பொன்னம்மாள், "தனியாப் பேசணுமோ! என்னோடே என்ன பேசறது! அவன் பண்ணற அக்கரமத்தெத் தடுக்கவழி செஞ்சு தான் ஆவணும். அவனெக்கண்டா எமனெப்போல இருக்குதே. வங்களாவுலே இருக்கிற ஒருத்தராச்சும் அவனே நல்லவன்னு சொல் லுறுங்களா! கெடையாது; பொல்லா துஷ்டன் அப்பா!'' என்றாள்.

அதைக்கேட்ட துரைஸானி பொங்கி எழுந்த கோபத்தோடு "அம்மா! காவற்காரனைக் கூப்பிட்டு இவளைக்கழுத்தைப் பிடித்து முதலில் தள்ளச் சொல்லப் போகிறீர்களா இல்லையா?'' என்றாள்.

கல்யாணியம்மாள் பெண்களை நோக்கி, "நீங்கள் இருவரும் அந் தப்புரத்துக்குப் போங்கள். மற்றக் காரியம் அப்புறம் ஆகட்டும்'' என்று அழுத்தமாக அதட்டிக் கூற, அங்கே நடந்த விபரீத சம்பாஷ ணையைக் கண்டு அஞ்சி நடுங்கிய கோமளவல்லி விரைவாக அப் பால் போய்விட்டாள். துரைஸானி மிகுந்த அருவருப்போடு பொன் னம்மாளை உருட்டி விழித்துப் பார்த்த வண்ணம் மிகவும் கம்பீர மாக நடந்து, அப்பால் போய் கதவை தடாரென்று சாத்தி தனது அதிருப்தியைக் காட்டிவிட்டு அப்புறம் சென்றாள்.

அதன் பிறகு தனிமையிலிருந்த பொன்னம்மாளை கல்யாணியம்மாள் சாந்தப்படுத்த ஒரு நாழிகை நேரமாயிற்று. ஜெமீந்தாரினிக்கும் பொன்னம்மாளுக்கும் அந்தரங்கமான சில விஷயங்களில் சம்பந்தமுண்டாதலால், ஜெமீந்தாரினி அவளிடம் நயந்துபோக நேர்ந்தது. அவளது தாட்சணியத்துக்காக, பொன்னம்மாள் ஒருவாறு சாந்தமடைந்தாளானாலும் மைனர் தன்னை இழிவாக நடத்தியதைப்பற்றிய ஆத்திரம் அவளது மனதிற்குள் பொங்கிக் கொண்டே இருந்தது.

இங்கு நிலைமை இப்படியிருக்க, சற்று முன் வெளியிற் சென்ற இளங்குமாரிகள் இருவரும் தாயின் அந்தப்புரத்திற் கப்பால் ஒவ்வொருவருக்கும் தனியாக அமைக்கப்பட்டிருந்த அந்தப்புரங்களை நோக்கிச் சென்றனர். அவர்கள் சென்ற இடத்திற்கு 50-கஜ தூரத்திற்கு அப்பாலிருந்த ஓர் அறையின் வாசலில் ஒரு யௌவனப் புருஷன் நின்றுக்கொண்டிருந்தான். குமாஸ்தாக்கள் இருந்து கணக்குகள் எழுதுவதற்காக விடப்பட்டிருந்த அந்த அறையின் வாசலில் நின்றவன் குமாஸ்தாக்களுள் ஒருவன். அவனது வயது பதினெட்டுக்கு மேலிராது. அவன் மன்மதனைப் போன்ற அற்புதமான அழகும் பளபளப்பான சிவந்த மேனியும் பெற்றவன். அடர்ந்து கருத்து வளைந்திருந்த புருவவிற்களும், உருண்டைக் கன்னங்களும், மூக்கும் விழியும், கரணை கரணையாயமைந்த கைகளும் கால்களும் மிக்க வசீகரமாய் அமைந்து, அவன் ஒரு யௌவனப் பெண்போல விருந்தான். அவனது உடம்பில் ஒரு சேலையை மாத்திரம் அணிந்துவிட்டால் அவன் உலகமெல்லாம் மோகிக்கும்படி செய்யத்தக்க அற்புத வடிவழகியான மோகினிபோலவே காணப்படுவான். அவனது குளிர்ந்த பார்வையும், மிருதுவான சொல்லும், அழகான நடையும், பதற்றமில்லாத செயல்களும், கபடமற்ற மனதும் தத்ரூபம் பெண்ணின் தன்மையைப் போலவே இருந்தன. சிருஷ்டி கருத்தாவான பிரம்மதேவன் அயர்ந்திருந்த தருணத்தில், பெண்ணுயமைந்த ஒரு வடிவத்திற்கு ஆணென்று பெயர்மாத்திரம் கொடுத்து அனுப்பிவிட்டானோ என்று சந்தேகிக்கத்தக்க அமைப்பாகவிருந்த மோகனரங்கன் என்னும் பெயர் கொண்ட அந்த யௌவனச் சிறுவன் வெளியில் நின்றதைக் கண்டவுடனே கோமளவல்லி தலையைக் கீழே குனிய வைத்துக்கொண்டு விரைவாக நடந்து தனது அந்தப் புரத்திற்குள் போய்விட்டாள். துரைஸானியோ அவனைக் கண்டவுடனே

தனது தங்கை உள்ளே போய்விட்டாளா வென்பதை ஆராய்ந்து பார்த்து விட்டு, அந்த அழகனை நோக்கி, தனது சுந்தரவதனத்தை மலர்த்திப் புன்னகை செய்து, தனது முழு ஆசையையும் கண்களில் புகுத்திக்காட்டி அவனை நன்முகப் பார்த்து நெடுமூச் செறிந்தாள். அவளது மார்பு உயர்ந்து தணிந்தது. அந்த நிலைமையில் அவள் அசைந்தாடி அழகு நடை நடந்து அந்தப்புரத்திற்குள் நுழைந்தாள். தன்மீது அம்புபோலப் பாய்ந்த அவளது பார்வையைக் கண்டு அச்சமும் நடுக்கமும் வெட்கமும் கொண்ட மோகன ரங்கன் தனது முகத்தைக் கீழே தாழ்த்திக் கொண்டான். அடுத்த நிமிஷத்தில், வீணை வித்துவானான மதனகோபாலன் அங்கே தோன்றினான்.

---

## 5-ம் அதிகாரம்

## சங்கடத்தின் மேல் சங்கடம்.

தனது தாயின் அந்தப்புரத்தினின்று வெளிப்பட்ட மாரமங்கலம் மைனர் நேராக துரைராஜாவின் பங்களாவை யடைந்தான். அப்போது மாலைநேர மாதலால், ராப்போஜனத்தை அப்போதே முடித்துக் கொள்ளக்கூடாமல் போனதுபற்றி அவன் பொன்னம்பலத்தை கடைக்கு அனுப்பி, சிற்றுண்டிகள் தருவித்து உட்கொண்டு துரைராஜாவினிடம் விடைபெற்றுக்கொண்டு தனது ஏற்பாட்டின் படி சரியாக ஏழுமணிக்கு கருப்பாயின் வீட்டையடைந்தான். அப்போது முன்னிருட் காலமாதலால், ஏழுமணிக்கே நன்முக இருண்டிருந்தது. மைனரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்த வண்ணம் கருப்பாயி திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். வாசலில் விளக்கு வைக்கப்படாமலிருந்தது வயல்களுக்கும் தோப்புகளுக்கும் நடுவில் தனியாக இருந்த இடமாதலால், அது மிகவும் பயங்கரமாக விருந்தது. மைனர் துணிவற்ற கோழை மனத்தினனாலும், மோகனாங்கியின் சிநேகம் தனக்கு ஏற்படப்போகிறதென்ற ஆசையினாலும், அவள்மீது கொண்ட மோகாவேசத்தினாலும் தூண்டப்பட்டவனாய், துணிவடைந்து அங்கேபோய்ச் சேர்ந்தான். அவனைக் கண்டவுடனே கருப்பாயி எழுந்து வாசலில் வந்து புன்னகையும் மகிழ்ச்சியும் காட்டிய முகத்தோடு அவனை வரவேற்று "வாங்க சாமி! வாங்க வாங்க" என்று உபசரித்து அழைக்க, அவனும் புன்னகை செய்தவனாய், திண்ணையில் உட்கார முயன்முன்.

உடனே கருப்பாயி, "சாமீ! உள்ளற போயிறலாம். இஞ்சே இருட்டுலே குந்துவானே? அம்பட்டச்சி வீடாச்சேன்னு ரோசனே பண்ணுமே வாங்க. உள்ளற அசிங்கம் கிசிங்கம் ஒண்ணுமில்லீங்க. சுத்தமா இருக்குது; வந்து பாருங்க" என்று தேன்போல மொழிந்து முன்னுகச் செல்ல, மைனர் அவளது வேண்டுகோளை மறுக்க மாட்டாமல், அவளுக்குப் பின்னுல் தொடர்ந்து சென்ருன். உள்ளே யிருந்த நடை, தாழ்வாரம் கூடம் முதலியவற்றைத் தாண்டி இருவரும் உள்புறம் சென்றனர். அது அதிக உயரமில்லாத சிறிய ஓட்டு வீடாதலால், இரண்டு மூன்று முறை நிலைப்படியிலும் மேல்மச்சிலும் பையனது தலை இடித்தமையால், அவன் குனிந்து செல்ல நேர்ந்தது. உன்னதமான பங்களாவிலும் அரண்மனையிலும் அலங்காரமான மண்டபங்களிலும் விடுதிகளிலும் இருந்து பழகிய தான் அவ்வாறு கேவலமான ஒரு குடிசைக்குள் நுழைய நேர்ந்ததைப்பற்றி அவன் வெட்கினுனுலும் வீரியத்தைவிடக் காரியமே பெரிதென்று மதித்து உள்ளே நுழைந்தான். மோகனுங்கியை வெல்லும் காரியம் தன்னுல் முடிய வில்லையென்று கருப்பாயி சொல்லி விடுவாளோ வென்ற சந்தேகத்தினுல் மிகுந்த சஞ்சலத்தோடு வந்த மைனர், அவள் சுமுகமாகத் தன்னை உள்ளே அழைத்துப் போனதிலிருந்து தனக்கு அவள் சந்தோஷ சமாசாரம் சொல்லப்போகிருளென்று நினைத்து மனவெழுச்சியும் உற்சாகமும் கொண்டவனுய் உள்ளே சென்ருன்.

முன்னுல் நடந்த கருப்பாயி கூடத்திலிருந்து காமரா வீட்டில் நுழைந்து "இப்படி வந்துறுங்க சாமீ!" என்று அழைக்க மைனரும் உள்ளே புகுந்தான். அது 10-அடி நீளம் 8-அடி அகலமுள்ள ஒரு சிறிய அறை. விளக்கெண்ணெய் விளக்கொன்று ஒரு மூலையில் எரிந்து கொண்டிருந்தது. அதன் வாசலிற் கெதிர்ப்பக்கத்தில் ஒரு மரஜன்னல் வைக்கப்பட்டிருந்தது. சுவர்களிலும் தரையிலும் மேடுகளும் பள்ளங்களும் பாழிகளும் காணப்பட்டனவாலுைம் குப்பை செத்தையில்லாமல் அந்த அறை அன்றைக்கே சுத்தமாகப் பெருக்கப்பட்டிருந்தது நன்ருகத் தெரிந்தது. அதற்குள்ளிருந்த அடுக்குப்பானைகள் துணிக்கொடி தொம்பைக்கூண்டு முதலியவைகள் யாவும் வேருேர் அறைக்குக் கொண்டுபோய் வைக்கப்பட்டனவாதலால், அந்த அறையில் எவ்வித சாமானும் காணப்படவில்லை. தரையில் சுவரோரமாக ஒரு கயிற்றுக் கட்டில் மாத்திரம் காணப்பட்டது. அதன்மேல் ஒரு

மெத்தையும் தலையணைகளும் போடப்பட்டிருந்தன. புதிதாக சலவை செய்யப்பட்ட வெள்ளைத் துப்பட்டியொன்று மெத்தையின்மேல் விரிக்கப்பட்டிருந்தது. கட்டிலின் அடியில், முகம் சீவப்பட்ட ஐந் தாறு இளநீர்களும் கத்தியும் காணப்பட்டன. ஒரு தட்டில் ஒரு சீப்பு பச்சை வாழைப்பழம், சர்க்கரை, வெற்றிலை, பாக்கு, ஏலக்காய், லவங்கம் முதலிய சாமான்கள் காணப்பட்டன. ஒரு சிறிய வெண் கலச் செம்பில் நன்றாகக் காய்ச்சப்பட்டிருந்த பால் வைக்கப்பட்டிருந் தது. சுவர்களில் வாசனை ஊதுவத்திகள் கொளுத்தி வைக்கப்பட் டிருந்தன வாதலால், அறை முழுதும் கமகமவென்ற வாசனை கமழ்ந் துக்கொண் டிருந்தது. எதிர்பாராத அந்த ஏற்பாடுகளை யெல்லாம் கண்டவுடன், மைனர் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவ னாய், ஒருகால் மோகனாங்கி அவ்விடத்துக்கே வரப்போகிறாளோ வென்று ஐயமுற்று சிறிது திகைத்து நின்றான். உடனே கருப்பாயி "கட்டிலுமேலே குந்துங்க சாமீ! என்ன ரோசனை பண்ணுறீங்க! ஒரு சாமானும் பளசில்ல. எல்லாம் புத்த புதுசு. ஒங்களுக்காவ இன்னக்கே வாங்கியாந்தது." என்று அன்போடு கூற, மைனரின் அருவருப்பு விலகியது. அவன் கட்டிலில் உட்கார்ந்து கொண்ட வனாய், "இதெல்லாம் சரிதான்; காரியம் பழமோ காயோ? அதை முன்னால் சொல். மனசுக்கு நிரம்பவும் ஆவலாக இருக்கிறது." என்றான்.

அதைக்கேட்ட பெண்பிள்ளை, "கருப்பாயி போனா, காயி பிஞ்சு எல்லாம் பளுத்துப் போவாதா; ஒண்ணும் ரோசனை பண்ணாதீங்க. காரியம் அநேகமா இன்னக்கி ராத்திரிக்குள்ளற தீர்ந்துபோவும் அப் பாலே ஐயாவும் அம்மாளும் சந்தோசமா இருக்கறபோது என்னெ நெனப்பீங்களா? என்று பரிகாசமாய்பேச, அதைக்கேட்ட மைனர் கரைகடந்த மகிழ்ச்சியும், மனவெழுச்சியும், பதைப்பும் கொண்டவ னாய் "சரி; என்ன நடந்தது? விவரமாகச் சொல். என் மனம் தவிக் கிறது" என்று உருக்கமாக நயந்து கேட்க, கருப்பாயி "பகல்லே நீங்க போன அப்பாலே நான் அந்த வங்களாவுக்குள்ளற தந்தரமாய் போயி பேச்சுக்கொடுத்தேன். அந்தப் பெண்ணுக்கு தாய்க்கிளவி ஒருத்தி இருக்கறா. அவளோடே மொள்ள செநேகம் பண்ணி, ஒரு பெரியமனிசர் ஊட்டுப் புள்ளெ அந்தப்பொண்ணுமேலே ஆசைப்படு துன்னு சொல்லி, காரியத்தை முடிச்சுக்குடுத்தா, அவளுக்கு அஞ்சு நூறு ரூபா குடுக்குறேன்னு சொன்னேன். அந்த ஐயா அந்தப்

பொண்ணு எம்பிட்டுப் பணம் ஒணுமின்னு கேட்டாலும் குப்பாரு இன்னு சொன்னேன். அவ, இன்னக்கே காரியத்தை முடிச்சுத் தாரேன்னு வாக்குக் கொடுத்திருக்கரு. இன்னக்கி நாடவமாம். அந்தப் பொண்ணு எட்டு மணிக்குப் பட்டணம் போயி ஆடிப்புட்டு, ராத்திரி ரெண்டுமணிக்கு வங்களாவுக்கு வருவாளாம்; இந்நேரம் பொண்ணுக்கிட்ட சொல்லி சரிப்படுத்தி இருப்பா. ரெண்டு மணிக்கு பொண்ணு பட்டணத்துலே இருந்து வங்களாவுக்கு வந்த ஒடனே, தாய்க்கிளவி இஞ்சேவந்து ஒங்களே வங்களாவுக்கு அளெச்சுக்கிட்டுப் போறேனுன்னு வாக்குக் குடுத்திருக்கரு.'' என்றுள்.

அதைக் கேட்ட மைனர் ஆனந்த பரவசமடைந்து மெய்ம் மறந்து அப்போதே சுவர்க்கபோக மநுபவிப்பவன் போலாய், "கட்டாயமாக வருவாள?" என்று கேட்டான். "சத்தியமா வருவா, ரோசனே பண்ணுதீங்க, அதிருக்கட்டும் நீங்க சோறு கீறு சாப்பிட்டீங்களா இல்லியா?'' என்று கருப்பாயி அன்போடு கேட்க, மைனர், "சாப்பாட்டையெல்லாம் முடித்துக்கொண்டே புறப்பட்டேன். படுத்துக்கொள்வது ஒன்றுதான் பாக்கி. வேறொன்றும் பாக்கி இல்லே '' என்றுன்.

கருப்பாயி:—இருந்தாலும், இம்பிட்டுத்தூரம் வந்தீங்களே, சாப்பிட்டதெல்லாம் போயிருக்கும். கட்டுலுக்குக்கீளே பளம், பாலு, எளநீரு எல்லாம் கொஞ்சம் வச்சிருக்கேன். சாப்பிட்டு, வெத்தலேப்பாக்குப் போட்டுக்கினு சொகமாப் படுத்துத் தூங்குங்க. சரியா ரெண்டு மணிக்கு வந்து எளுப்பறேன்—என்றுள். அதைக் கேட்ட மைனர், அவைகள் தனக்கு வேண்டாமென்று மறுக்க, அவள் வற்புறுத்த, மைனர் அதன்பிறகு கீழே இருந்த வஸ்துக்களில் புகுந்து, இரண்டு வாழைப்பழங்கள் ஓர் இளநீர் முதலிய வற்றை உட்கொண்டு தாம்பூலந் தரித்து சயனித்துக்கொண்டான். அப்போது கருப்பாயி அங்கே வந்து "சாமீ! படுத்து சொகமாத் தூங்குங்க. ஆனு கொஞ்சம் கொசுக்கடி இருக்கும். விளக்கு இல்லாமெப்போனு, கொசு கடிக்காது. ஒங்க மனசுபோல சேஞ்சுக்குங்க'' என்றுள்.

அதைக் கேட்ட மைனர் விளக்கை அணைத்து விடும்படி அநுமதிக்க, கருப்பாயி அப்படியே தீபத்தை நிறுத்திவிட்டு, அவரைப் படுக்கச்செய்து, அவ்விடத்தை விட்டு வெளியில் போய் வாசற் கதவை மூடிக்கொண்டு திண்ணையில் படுத்தாள் உட்புறத்தில் கட்டி

லில் படுத்த மைனர் மோகனாங்கியைக் குறித்து ஜெபம் செய்ய வாரம்பித்தான். தேஜோமயமான அவளது இன்பவடிவம், அவனது அகக்கண்ணில் காட்சிதந்து நிருத்தனம் செய்தது. அவளோடு தான் சம்பாஷணை செய்து கொஞ்சிக்குலாவி சரசசல்லாபம் புரிந்திருப்பதாகவும் பாவனைசெய்து மேன்மேலும் மனக்கோட்டை கட்டிக்கொண்டே தூக்கம் பிடியாமல் நெடுநேரம் வரையில் படுக்கையில் புரண்டுபுரண்டு கிடந்து எப்போது மணி இரண்டாகுமோ வென்று பெரிதும் தவித்துக் கிடந்தான். எட்டு மணிக்கே அவன் மெத்தையில் படுத்துவிட்டானாதலால், அவனது கண்ணிமைகள் பத்துமணிக்குள் சோர்ந்துபோய் மூடிக்கொண்டன. பத்தரை மணிக்குள் அவன் துயிலில் ஆழ்ந்து விட்டான். பதினொருமணி சமயத்தில் எழுந்த கருப்பாயி மெள்ள உள்ளே சென்று கையில் விளக்கை எடுத்துக்கொண்டு மைனரிருந்த அறைக்குள் நுழைந்து பார்க்க, அவன் ஆழ்ந்த நித்திரையிலிருக்கக் கண்டாள். அவள் ஓசைசெய்யாமல் அவ்விடத்தை விட்டு. மறுபடியும் வெளியில்வந்து திண்ணையில் படுத்துக் கொண்டாள். மேலும் பொழுது வளர்ந்து நடுநிசி வேளையாயிற்று; கட்டையன் குறவன் வரவில்லையே என்று நினைத்தவளாய் கருப்பாயி தனது தலையை நிமிர்த்தி நிமிர்த்தி ஒற்றையடிப் பாதையைப் பார்த்த வண்ணம் படுத்திருந்தாள். பாதையின் வழியாகவே நடந்தறியாத கட்டையன் குறவன், வயல்களின் வழியாக நடந்து கருமுனி போல அவளது காலடியில் வந்துநின்று, தனது கையிலிருந்த கட்டைத் தடியினால் அவளது காலில் மெதுவாகத் தட்டினான். இருளில் திடுக்கிட்ட கருப்பாயி சடக்கென்று எழுந்து உட்கார்ந்து, கட்டையன் வந்து நின்றதைக் கண்டாள்; உடனே திண்ணையைவிட்டுக் கீழே இறங்கி, கையைப் பிடித்து அவனை அழைத்துக்கொண்டு சிறிது அப்பால் போக, குடங்குடமாகக் கள்ளைக் குடித்து ஆடிக் கொண்டு வந்திருந்த கட்டையன், “ஆளு வந்திருக்கறானா? நீ சொன்ன படி கையிலே பலமாக ஏதேச்சும் சொத்துகித்து வச்சிருக்கறானா?” என்று கேட்டான்.

கருப்பாயி “வந்து படுத்து நல்லாத் தூங்கறான். கொறஞ்சது பத்தாயிரத்துக்கு மோசமில்லே.” என்றாள்.

**கட்டையன்:**—சரி; அந்த மம்புட்டியே இப்பிடி எடுத்தா. மொதல்லே குளியை வெட்டித் தயாரா வச்சுடுவோம். பாளெ சீவற கத்தி கொண்டாந்திருக்கறேன். ஒரே வீச்சுலே கழுத்தே அறுத்து

தூக்கிக்கினுபோயி அஞ்சுநிமிசத்துலே பொதச்சுடணும். அவன் எங்கே படுத்திருக்கான்?—என்ருன்.

**கருப்பாயி:**—கயித்துக் கட்டுலுமேலே பஞ்சுமெத்தெ போட்டு அதுமேலே படுத்திருக்கான்—என்ருள்.

**கட்டையன்:**—நல்லதாச்சு! வெட்டின பொறவாலே மெத்தெ யோடெ வச்சு சுத்தி அப்பிடியே கயிறுபோட்டுக் கட்டிப் பொதச் சுடணும். இல்லாமெப்போனு எடுத்துகிட்டுப் போறபோது நெத் தம் கித்தம் ஊட்டுக்குள்ளற சிந்தும். அதிலேருந்து அந்தத் தானுக் காரப் பயலுவ கண்டுக்கிடுவானுவ, தெரிஞ்சுச்சா?'' என்ருன்.

உடனே கருப்பாயி அதை ஆமோதித்தவளாய், அவனே அழைத் துக்கொண்டு தென்னந்தோப்பிற்குள் நுழைந்து, அங்கு முன்னு கவே வைக்கப்பட்டிருந்த மண்வெட்டியைக் காட்ட, கட்டையன் அதை யெடுத்துக்கொண்டு அரைக்கால் மயில் தூரத்திற் கப்பால் போய், தரையை வெட்டி மாரளவு குழி தோண்டிவைத்துவிட்டு, தனது பிச்சாங்கத்தி கட்டைத்தடி ஆகிய இரண்டு ஆயுதங்களேயும் எடுத்துக்கொண்டு கருப்பாயியோடு வந்து வீட்டை யடைந்தான். இருவரும் ஓசையின்றி மெள்ள அடிவைத்து உள்ளே நுழைந்து கூடத்தை யடைந்தனர். இருள் நன்ருக அடர்ந்திருந்தமையால் மைனர் எங்குப் படுத்திருக்கிருனென்பதை விளக்கின் வெளிச்சத்தி ஞல் பார்த்தால், அவனே வெட்டுவதற்குத் தோதாக இருக்குமென்று நினைத்த கட்டையன் விளக்கைக் கொளுத்தும்படி கருப்பாயியிடம் காதோடுகூற, வெளிச்சம் அறைக்குள் தெரியாமல், கருப்பாயி தாழ் வாரத்திற்குப் போய் விளக்கை ஏற்றினுள். விளக்கின் முன்புறத்தை கையால் மறைத்துக்கொண்டு உள்ளே நுழையும்படி கட்டையன் கருப்பாயிக்குச் சைகைகாட்ட, அவள் அப்படியே சென்ருள். கையி லிருந்த கத்தி பளபள வென்று மின்ன. கட்டையனும் உள்ளே நுழைந்தான். தூங்கின மனிதன் ஒருகால் விழித்துக்கொண்டா லும், தானிருப்பது தெரியாமலிருக்கவேண்டுமென்று நினைத்த கட் டையன் கருப்பாயிக்குப்பின்னுல் மறைந்து வந்தான். கருப்பாயி நன் ருகக் குறட்டைவிட்டு அயர்ந்து தூங்கிய மைனருக்கருகில் சென்று வெளிச்சத்தைக்காட்ட, அந்தமனிதன் எவ்விடத்தில் எப்படிப்படுத் திருக்கிருனென்று கட்டையன் பார்த்தான். நல்ல உடைகளோடு கடுக்கனும், மோதிரங்களும் தக தக வென்று மின்னப் படுத்திருந்த

மைனரைக் கண்டவுடனே அவன்யாரோ பிரபுவின்வீட்டுப் பிள்ளை யென்பதை யுணர்ந்த கட்டையன், அவன் இன்னான் என்பதை அறிந்துகொண்டால், அது பின்னால் எதற்காயினும் உபயோகமாக விருக்குமென்று நினைத்து, சிறிது நகர்ந்து முகத்தை நன்றாக உற்று நோக்கினான், நோக்கவே அந்தமுகம் அவனுக்கு அறிமுகமான தாகத் தோன்றியது. அவன் இன்னமும் சிறிது நெருங்கிப் பார்த் தான்; உடனே திடுக்கிட்டான். "மாரமங்கலம் மைனரல்லவா" என்றசொல் அவனது வாயிலிருந்து தானே வந்துவிட்டது. "மார மங்கலம் மைனர்" என்றசொல் கருப்பாயியின்காதில் பட்டவுடனே அவளும் திடுக்கிட்டு, "ஆ! மாரமங்கலம் மைனரா? அப்பிடீன்னா வெட்டவாணும்" என்று வாய்விட்டுக் கூறி, கட்டையனது கையைப் பிடித்துக்கொள்ள, அந்தச் சமயத்தில் மைனர் கண்களை விழித்துக் கொண்டான். அதைக்கண்ட கருப்பாயி சடக்கென்று வாயால் ஊதி விளக்கை அவித்துவிட்டாள். எங்கும் இருள் சூழ்ந்துக்கொண்டது. கருப்பாயி கட்டையனது கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியில் பக்கத்திலிருந்த தென்னஞ்சோலைக்குப்போய் நின்று, "அப்பா கட்டையா! இவனெ வெட்டவாணும்; நீ போ, நான் நாளெக்கி ராத்திரி ஒங்க ஊருக்கு வந்து பேசிக்கறேன்" என்று நயந்து வேண்டிக்கொள்ள, கட்டையனுக்கு ரௌத்ராகார மான கோபம் மீண்டது. "ஓகோ! எங்கிட்டவே கைவரிசெ காமிக் கிறியோ! எல்லாப் பணத்தையும் நீயே அடிச்சுக்கப் பாக்கிறியோ? அந்தக் குளிலே ஒங்க ரெண்டுபேரையும் சேத்துப்பொதெச்சுடுவேன் பத்திரம்; விடுகையெ; அவனெ வெட்டிப்புட்டுத்தான் மறுவேலே" என்றான் கட்டையன்.

அதைக்கேட்ட கருப்பாயி, "கட்டையா! ஆத்தரப்படாதே! ஒனக்குப் பணந்தானே ஒணும்? அவங்கிட்ட இருக்கரத்துலே பாதி அஞ்சாயிரம் ஒனக்குச் சேரவேணும். நாளெக்கிப் பொழுதுசாய அந்த அஞ்சாயிரம் ரூபாயெ நான் ஒங்கஊட்டுலே கொண்டாந்து தாறேன். நீ பேசாமே போ, நான் கொண்டாரமெப்போனா, நீ என்னக் கொன்னுப்புடு; சம்மதம்" என்றாள். அதைக்கேட்ட கட் டையன், "நீ இன்னக்கே பணத்தைச் சுருட்டிக்கினு ஊரைவிட்டு ஓடிப்போனா என்ன செய்யறது?" என்றான்.

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்க, உட்புறத்தில் விழித் துக்கொண்ட மைனரது நிலைமையை விவரிப்பதைவிட யூகித்துக்

கொள்வதே சுலபமானது. சமீபத்தில் பேச்சுக்குரல் கேட்டதனால் விழித்துக்கொண்ட மைனர், கையில் விளக்கோடு கருப்பாயி நின்ற தையும், பீச்சாங்கத்தியோடு ராக்ஷசன்போல ஒரு கருத்த ஆள் நின்றதையும் கண்டவுடனே பேரச்சங் கொண்டான்; விளக்கை அணைத்துவிட்டு அவர்கள் போனவுடனே எழுந்து உட்கார்ந்தான். கால்களும் கைகளும் வெடவெடவென்று ஆடுகின்றன. குலை நடுக்க மெடுக்கிறது. வியர்வை உடம்பிலிருந்து பொங்கி வழிகிறது. கருப்பாயி தன்னை வஞ்சித்து விட்டாளென்றும், தான் இனி உயிரோடு தப்ப முடியாதென்றும் நினைத்துக் கதிகலங்கி என்ன செய்வதென்பதை யறியாமல் தவித்தான்; அவ்வளவுதூரம் வந்தவர்கள் விளக்கை அவித்துவிட்டுப் போனதன் காரணமென்னவென்று ஆலோசித்தான்; தான் விழித்துக்கொண்டதனால், அவர்கள் போயிருக்கலாமென்றும், தான் மறுபடியும் தூங்கியவுடனே வருவார்களென்றும் நினைத்தான்; அவ்விடத்திலேயே இருந்து உயிரை இழப்பதைவிட, தப்புவதற்கு ஏதாவது முயற்சிசெய்ய வேண்டுமென்று நினைத்தான்; வீடு முழுதும் இருள் சூழ்ந்திருந்தது தனக்கு அநுகூலமென்று நினைத்தான்; அந்த வீட்டின் உட்புறத்தை வெளிச்சத்தில் நன்றாகப் பார்த்தவனாதலால், ஓசையின்றி மெல்ல எழுந்து சுவரோரமாக நெருங்கி நடந்து கூடத்திற்குப்போய், தாழ்வாரத்தின் வழியாக வெளியில் வந்துவிட்டான். அப்போது கட்டையனும் கருப்பாயியும் பக்கத்திலிருந்த தென்னஞ்சோலையில் சச்சரவு செய்துகொண்டிருந்தனராதலால், அந்தப் பக்கத்தில் மனிதரது பேச்சுக்குரல் சொற்பமாகக் கேட்டது. அவன் அந்தக் கள்வரிருந்த பக்கத்தில் செல்லாமல், அதற்கு எதிர்ப்புறமாக மெல்ல நடந்து, வயல்களுக்குள் புகுந்து, விரல்களைக் கீழே ஊன்றி, ஓசைசெய்யாமல் ஓட்டம் பிடித்தான். உயிர் போகக்கூடிய அந்தக் கொடிய ஆபத்திலிருந்து தப்பி எப்படியாகிலும் ஓடிவிட வேண்டுமென்னும் நினைவு அவனை மகாவேகமாகத் தள்ளியதாகையால், அவன் வாயுவேக மனோவேகமாய்ப் பறக்கிறான்; மேடுபள்ளம் புதர் சப்பாத்து பாம்பு என்பதைக்கூட கவனியாமல் தாண்டிக் குதித்துக்கொண்டு, தலை தெறிக்க, குடல் அறுக்க ஓடுகிறான்; அவர்கள் பின்னால் தொடர்ந்து வருகிறார்களோவென்று இடையிடையே திரும்பிப் பார்க்கிறான். புதர்களிலிருந்த நரி முதலியவை துள்ளிக் குதித்தால், திருடர்கள்தான் துரத்துகிறார்களென்று

நினைத்து அவனும் துள்ளிக் குதித்தோடுவான். அவ்வாறு கால்மயில் தூரம் ஓட, அவ்விடத்தில் ராஜபாட்டைவந்து குறுக்கிட்டது. வயல் களிலிருந்துபோய் ராஜபாட்டையை யடைந்தவுடனே, சிறிது துணி புண்டாயிற்று. தான் ஓடிவந்த திசையை நோக்கி திருடர் தொடர்ந்து வரவில்லையென்று அவனுணர்ந்தான். என்றாலும், அவர்கள் வீட்டிற்குள் போய், தான் ஓடிவிட்டதைக் கண்டால், எப்படியும் தொடர்ந்து வருவார்கள் என்று நினைத்தவனாய், அவ்விடத்தில் நிற்க மனமற்றவனாய் சைதாப்பேட்டையிருந்த திக்கில் அந்தப் பாதையிலேயே விசையாக நடக்க வாரம்பித்தான். அப்போது இரவு மணி ஒன்றிருக்கலாம்; இருள் சூழ்ந்திருந்ததானாலும், நக்ஷத்திரங்கள் நன்றாகப் பிரகாசித்தமையால், மரமென்பதும், பாதையென்பதும், தண்ணீரென்பதும், மனிதர் என்பதும் தெரியக்கூடிய வெளிச்சமிருந்தது. பாதையின் இருபுறங்களிலும் பெருத்த மரங்களிருந்தமையால், அவைகளில் அவன் அச்சத்தோடு மறைந்து மறைந்து ஓட்டமாக நடக்க வாரம்பித்தான்.

அவ்வாறு அவன் அரைக்கால் மயில் தூரம் சென்றிருப்பான்; அவனுக்குப் பின்புறத்தில், குதிரையின் காலடி ஓசை தடதடவென்று கேட்டது. அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்; தனக்குப் பின்னால், குதிரைமீது உட்கார்ந்துகொண்டு யாரோ ஒருவர் வந்ததைக் கண்டான். ஒருகால் திருடன் குதிரைமேலேறிக் கொண்டு தன்னைத் துரத்துகிறானோ என்ற அச்சத்தினால் அவனது உயிரில் முக்கால் பாகம் போய் விட்டது. இனி தான் தப்பமுடியாது என்று நம்பிக்கை யிழந்தவனாய் அவன் தத்தளித்திருந்த சமயத்தில் அந்தக் குதிரை அவனிருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தது. அதிலிருந்த மனிதன், மைனரைக் கண்டவுடன் குதிரையை நிறுத்தினான். நடுநடுங்கி நின்ற மைனர், குதிரைமீது வந்தது யாரென்று பார்க்க, அந்த மனிதர் அணிந்திருந்த உடைகளினால் அவர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று உணர்ந்தான்; எமனுலகம் சென்றிருந்த அவனது உயிர் திரும்பியது. ஈசுவரனே தன்னைக் காப்பாற்றும் பொருட்டு அந்த இன்ஸ்பெக்டரை அனுப்பி இருக்க வேண்டுமென்று நினைத்து அவன் மிகவும் பரிதாபகரமான பார்வையாக அவரை நோக்கினான். அவரும் மைனரைப் பார்த்து, "யாரையா நீர்? இந்த அகாலத்தில் இங்கே என்ன செய்கிறீர்?" என்றார்.

அதைக் கேட்ட மைனர் மேலும் துணிவடைந்து, "நான் நேற்று சாயுங்காலம் ஆலந்தூருக்குப் போய், அங்கே ஒரு வீட்டில் படுத்திருந்தேன். விடியற்காலம் ஐந்து மணிக்கே எழுந்து சைதாப் பேட்டைக்கு ஓர் அவசர காரியமாக வரவேண்டுமென்று படுத்துக் கொண்டேன். சற்று முன் விழித்துக்கொண்டு கடியாரத்தைப் பார்த்தேன். ஐந்து மணியாகி இருந்தது. உடனே புறப்பட்டு வந்து விட்டேன். இவ்வளவு தூரம் வந்தபிறகு இது நடு இரவென்பது தெரிந்தது. என்னுடைய கடியாரம் நேற்று சாயங்காலம் ஐந்து மணிக்கே நின்று போய்விட்டதென்பதை இப்போதுதான் கண் டேன். இருளில் தனியாய்ப்போக பயமாக இருக்கிறது. நான் இருப் பது தேனும்பேட்டை. நான் மாரமங்கலம் மைனர் ஜெமீந்தார்." என்றான்.


அதைக் கேட்டவுடனே போலீஸ் இன்ஸ்பெக்டர், மைனரை ஏற இறங்கப்பார்த்து, "சரி; என் பின்னால் குதிரையின்மேல் உட் கார்ந்துகொள்ளும்; இதோ சமீபத்தில் அடையாற்றுப் பாலத் தண்டை என்னுடைய பங்களா இருக்கிறது. அதற்குள் நீர் சுக மாகப் படுத்திருந்து பொழுது விடிந்தவுடன் போகலாம்" என்றார். அதைக்கேட்ட மைனர் சந்தோஷமும் நன்றியறிதலும் பிரகாசித்த முகத்தோடு அருகில் நெருங்க, இன்ஸ்பெக்டர் ஒருபுறத்து அங்க வடியிலிருந்த தமது காலை எடுத்து, அதில் மைனர் அவனது காலை வைத்தவுடன் கைகொடுத்துத் தூக்க, அவன் அவருக்குப் பின்புறத் தில் உட்கார்ந்து கொண்டு தனது கைகளை முன்னால் நீட்டி அவரது இடுப்பைச்சுற்றிக் கட்டிப்பிடித்துக்கொண்டான். உடனே அவர் குதிரையைத் தட்டிவிட, அது நாற்கால் பாய்ச்சலில் விசையாக ஓடத் தொடங்கியது. குதிரை யேற்றத்தில் மைனருக்கு அவ்வள வாகப் பழக்கமில்லை யாதலால், அவன் பெரிதும் அச்சங்கொண்டு இன்ஸ்பெக்டரது இடுப்பை இறுகப் பிடித்துக்கொண்டு முதுகோடு முதுகாய் ஒட்டிக்கொண்டான். அவர்கள் ஐந்து நிமிஷத்தில் சைதாப் பேட்டைத்தாலுக்காக் கச்சேரியண்டை வந்துசேர்ந்தனர். சேர்ந்த வுடன் நேராகப்போகாமல், அங்கிருந்து அடையாற்றுக்குப் போகும் பாட்டையில் இன்ஸ்பெக்டர் குதிரையைத் திருப்பி ஓர் அடி கொடுக் கவே அது ஒரே விசையாகப் பிடுங்கிக்கொண்டு ஓடியது. கால் நாழிகையில் மூன்று மயில் தூரம் சென்றது. எதிரில் அடையாற் றுப்பாலம் தென்பட்டது. அங்கே வந்தவுடன் குதிரையின் கடி

வாளவார் கைதவறிக் கீழே வீழ்ந்தமையால் இன்ஸ்பெக்டர் சடக்கென்று முன்புறத்தில் குனிந்து கடிவாளவாரை எடுத்துக்கொண்டு நிமிர்ந்தார். குதிரை போய்க்கொண்டே இருந்தது. இன்ஸ்பெக்டர் குனிந்து நிமிர்ந்தபோது அவரது இடுப்பைச் சுற்றிக்கொண்டிருந்த மைனரது கை மேலே நகர்ந்து இன்ஸ்பெக்டரது மார்புவரையில் சென்றது, சென்றவுடனே மைனர் திடுக்கிட்டு நிமிர்ந்தார். முன்னால் உட்கார்ந்திருந்தது, ஒரு பெண், என்பது அவரது மார்பின் புடைப்பினால் மைனருக்குச் சந்தேகமறத் தெரிந்தது அவன் பெரிதும் வியப்பும் அச்சமுங்கொண்டு தவிக்கலானான். அவனது உடம்பு வியர்த்து கிடுகிடென்று ஆடியது. உரோமம் சிலிர்த்து நிமிர்ந்து நின்றது. இன்பமும் துன்பமும் ஒன்று கூடி ஒரே காலத்தில் அவனை வதைக்க வாரம்பித்தன.

## 6-ம் அதிகாரம்

## சென்ற இடமெல்லாம் சிறப்பு

நடு இரவில், நிருமானுஷ்யமான பாதையில், போலீஸ் இன்ஸ்பெக்டர்போல உடைதரித்து, பிரம்மாண்டமான குதிரை மீது அமர்ந்து ஒரு பெண் தனியாக சவாரி செய்து வந்தாளென்பது மாரமங்கலம் மைனருக்குக் கனவாகத் தோன்றியதேயன்றி, உண்மையான நிகழ்ச்சியென்பதை அவரது மனம் நம்பவில்லை; அப்படிப்பட்ட மகாதுணிகரமான அந்த ஸ்திரீ யாராயிருக்கக்கூடுமென்ற சந்தேகமும், தான் அப்போது என்னசெய்வது என்ற சிந்தனையும் எழுந்து மைனரை வதைக்க வாரம்பித்தன அவளது இடையைச் சுற்றி அணைத்துக் கொண்டிருந்த அவரது கரங்கள் வெடவெட வென்று நடுங்கின; மிகவும் யௌவனப்பருவத்தினளாகக் காணப்பட்டவளும், இன்னாளென்பது தெரியாதவளுமான ஓர் அன்னியமங்கையைத்தான் கட்டி அணைத்துக் கொண்டிருந்தது அவனுக்குச் சுகத்தையும், கரைகடந்த ஸஞ்சலத்தையும் உண்டாக்கியது, அப்படிப்பட்ட பரமசங்கடமான நிலைமையில் மைனர் இரண்டொரு நிமிஷமிருக்க, அவனது தத்தளிப்பையும், தான் பெண்ணென்று அவன் அறிந்துகொண்டானென்பதையும் சுலபத்தில் யூகித்துக்கொண்ட அந்த வேஷதாரி ஸ்திரீ, அவன் சந்தேகப்படாதபடி, தனது இடது கையில் கடிவாள வாரைப் பிடித்துக்கொண்டு, பின்புறம் சடக்கென்று திரும்பி, வலக்கரத்தை




முன்னால் உட்கார்ந்திருந்தது ஒரு பெண் என்பது……மைனருக்கு சந்தேகமறத் தெரிந்தது. (72-வது பக்கம்)

மைனரது காலின் கீழ் கொடுத்து மிகவும் பலமாக அவனை அடியோடு தூக்கி இடப்புறத்தில் தள்ளிவிட, அதை எதிர்பாராத மைனர் பொறித்தட்டும் நேரத்தில் ஒரு குழந்தைபோய் விழுவதுபோல குதிரையிலிருந்து படேரென்று கீழே பாட்டையின்மேல் விழுந்தான். உடனே, அந்த வேஷதாரி இன்ஸ்பெக்டர் தனது குதிரையைப் பிடித்துச் சடக்கென்று நிறுத்திவிட்டு. குதிரையின் சேணத்திற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பிஸ்டல் என்னும் ஒரு கைத்துப்பாக்கியை எடுத்துத் தனது வலக்கரத்தில் பிடித்துக்கொண்டாள். கீழே வீழ்ந்த மைனர் கரைகடந்த திகிலையும் அச்சத்தையும் அவமானத்தையும் அடைந்தவனாய் தனது தேகத்தில் பட்ட அடியையும் இலட்சியம் செய்யாமல், தனக்கு அவள் இன்னமும் என்ன துன்பம் செய்வாளோ என்ற கவலையும் ஆவலும் கொண்டவனாய் விரைவாக எழுந்து நின்றான். அந்த ஒரு நிமிஷநேரமும் அவனுக்கு சகிக்க வொண்ணாத நரகவேதனையாக இருந்தது. அந்த சமயத்தில் அந்தப் பெண் தனக்கெதிரில் கைத்துப்பாக்கியை நீட்டி, தன்னைச் சுட்டுவிட ஆயத்தமாக இருந்ததைக் காணவே, அவனுக்குக் குலைநடுக்க மெடுத்தது. கைகால் தடதட வென்று ஆடின; உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும் குபீரென்று வியர்வைபொங்கி வெள்ளம்போல வழிந்தது. அடுத்தநிமிஷத்தில் அந்த வேஷதாரிப் பெண் அவனை நோக்கி, “மைனர் துரையே! பணப்பை, மோதிரங்கள், தங்கக் கடிகாரம் எல்லாம் இப்படிவரட்டும். சீக்கிரம் ஆகட்டும்” என்று அதட்டிக் கூறவே, அதைக் கேட்ட மைனர், அவள் ஒரு கொள்ளைக்காரியென்று உணர்ந்து கொண்டவனாய், அது கனவோ நினைவோவென்று பிரமித்துக் கல்லாகச் சமைந்து சிறிது நேரம் நிற்க, அதைக் கண்ட அந்த ஸ்திரீ, “இன்னமுமா தாமசம்? உயிரோடு நீர் கொடுக்கிறீரா? இல்லாவிட்டால், உம்மைப் பிணமாக்கி நானே எடுத்துக்கொள்ள வேண்டுமா? என்ன யோசனை? எடும் எடும்; நாழிகையாகிறது. நான் போகவேண்டும்” என்று அதட்டிக் கூறினாள்.

மைனர் கோழைத்தனத்தில் மிகவும் பேர் பெற்றவனாதலால், அவன் வாயைத்திறந்து பேச முயன்றபோது அவனது வார்த்தைகள் அவனைக் காட்டிலும் அதிகமாக அஞ்சி தொண்டைக்குள் ஓடி ஒளிந்துகொண்டன. என்றாலும், அவன் பெரும்பாடுபட்டுப் பேச முயன்றவனாய், “இது உண்மைதானா? அல்லது, என்னைப் பரிகாசம் செய்வதற்காக இப்படி வேடிக்கை செய்கிறாயா?” என்று

குழறிக் குழறிப் பேச, அதைக்கேட்ட போலி இன்ஸ்பெக்டரான பெண் "இன்னம் ஒரு நிமிஷம் நீர் தாமசம் செய்வீராளுல், நான் விளையாட வில்லை யென்பதை காரியத்திலேயே காட்டி விடுவேன் அப்புறம், அநியாயமாகத் தாய்க்குப் பிள்ளையில்லாமல் போய்விடும்; ஜாக்கிரதை" என்று மிகவும் அழுத்தமாகக் கூறினுள்.

அதைக் கேட்ட மைனர் மறுமொழியொன்றும் சொல்லமாட்டாமல் தத்தளித்து சுமார் மூவாயிரம் ரூபாய் நோட்டுகளடங்கிய பணப்பையையும், தங்கச் சங்கிலியோடு தங்க கடிகாரத்தையும், வைரமோதிரங்கள் கடுக்கன்கள் முதலியவற்றையும் எடுத்து அந்தத் திருட்டுத் தெய்வத்திற்கு மிகுந்த பயபக்தியோடு பாதகாணிக்கையாக வைக்க, அந்த வேஷதாரி மகிழ்ச்சியாலும் புன்னகையாலும் மலர்ந்த முகத்தோடு அவற்றை வாங்கித் தனது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, "சரி; உம்முடைய சட்டையில் வைரப் பொத்தான்கள் மின்னுகின்றன. ஆனுல், நீர் மிகவும் தயாள குணத்தோடு இத்தனை பொருள்களை எனக்கு வெகுமதி கொடுத்தீராகையால், பொத்தான்களை நீரே வைத்துக்கொள்ளும். உமக்கு இதுதான் வழி; இந்தப்பாலத்தின் வழியாகப் போனுல் நீர் உம்முடைய பங்களாவுக்குப் போய்ச்சேரலாம். இந்த சங்கதியை நீர் எவரிடத்திலும் வெளியிடமாட்டீரென்று நம்புகிறேன்; வெளியிடுவீராளுல், ஒரு பெண்பிள்ளைக்கு பயந்து எல்லாவற்றையும் கொடுத்து ஏமாறிப்போனதைப் பற்றி எல்லோரும் ஏளனமாகப் பேசி காறி எச்சிலை உம்முடைய முகத்தில் உமிழ்வார்கள். நீர் சொத்தையும் இழந்து அவமானமும் ஏன் அடையவேண்டும். இந்தப் பொருள், உம்முடைய ஐவேஜிக்கு ஒரு பெரிதல்ல. ஐயா! மைனரே! நமஸ்காரம்; போய்வாரும்; நீர் செய்த நன்றியை ஒரு நாளும் மறக்கமாட்டேன்" என்று அவரைப் புரளிசெய்த வண்ணம், அந்தத் திருமங்கையாழ்வார் தனது குதிரையை முடுக்கிவிட்டுக் கொண்டு. இரண்டொரு நிமிஷத்தில்மறைந்து போய்விட்டாள்.

மைனரோ பேச்சுமூச்சின்றி அசையாமல் திகைப்பே வடிவாய்க் கல்போல அந்த இடத்திலேயே கால் நாழிகை நேரம் வரையில் நின்ருன். அவனது உயிரில் முக்கால்பாகமும் போய்விட்டது. அவன் தனது பஞ்சேந்திரியங்களையும் நம்பாமல் அங்கு நிகழ்ந்த சம்பவம் மெய்யானதோ பொய்யானதோவென்று பெரிதும் திகைத்து வெட்கத்தினுல் முற்றிலும் குன்றிப்போய் நின்ருன். பயனில்லாத பெருத்த

கோபமும், அவமானமும், துக்கமும், அழுகையும் எழுந்து அவனை வளைத்துக்கொண்டன. அன்றிரவு, முதலில் அம்பட்டக் கருப்பாயி வீட்டிலும், பிறகு பாதையிலும், இரண்டு பெண்பிள்ளைகளிடத்தில் தான் ஏமாறிப்போனதை நினைக்க நினைக்க, தனது கேவலமான நிலைமையைக் குறித்து அவன் தன்னைத்தானே தூஷித்துக்கொண்டான். அன்றிரவு நடந்த சம்பவங்களை வெளியில் சொன்னால் தனக்கு அதனால் பெருத்த அவமானமும் இழிவும் ஏற்படுமென்று நினைத்து, அவன் அந்த விஷயங்களை, அந்த வேஷதாரி சொன்னபடி, வெளியிடாதிருப்பதே நல்லதென்று நினைத்துக்கொண்டான். அப்போது இரவு ஒரு மணிக்கு மேலிருக்குமென உணர்ந்த மைனர், அந்த நடு இரவில் அவ்விடத்திலேயே நிற்கவும் அஞ்சி, வழியோடு நடந்து செல்லவும் பயந்து, விவரிக்க இயலாவிதம் தவித்தான்; அச்சப்பட்டுக்கொண்டே அவ்விடத்தி லிருப்பதைவிட அச்சப்பட்டுக்கொண்டே போனால், தனது இருப்பிடமாவது சமீபிக்குமென்று நினைத்தவனாய், அவன் வந்தவழியாகவே திரும்பி நடக்கத் தொடங்கினான். வேஷதாரியான திருட்டுப்பெண் காட்டிய பாலத்தின் வழியாகப் போவது அவனுக்கு உசிதமாகத் தோன்றவில்லை. அதுகாறும், அவன் அந்தப் பாதையின் வழியாகச் சென்றவ னன்றாதலால், அது எங்கு போகுமோ, அதனால் இன்னமும் என்ன தீங்கு சம்பவிக்குமோ என்ற கவலை கொண்டவனாய், வந்த வழியிலேயே நடக்கலானான், பிள்ளையார் பிடிக்க, அது குரங்காய் முடிந்த கதைபோல தான் மோகனாங்கியின் நட்பையும் சிற்றின்ப சுகத்தையும், நாடிவர, தனக்கு கருப்பாயியின் நட்புண்டானதும், அவளது வீட்டிலிருந்து உயிர் தப்பி ஓட நேர்ந்ததையும், இடையில், வேஷதாரியான ஒரு கொள்ளைக்காரியிடம் அகப்பட்டு பொருளையெல்லாம் இழந்து நடு இரவில் இருளில் காட்டுப்பாதையில் தனியாக நடந்து செல்ல நேர்ந்ததையும் நினைத்த மைனர், அந்த வைராக்கியத்தில், இனி மோகனாங்கியைக் கனவிலும் நினைப்பதில்லை யென்று உறுதி செய்து கொண்டவனாய் மேலே நடந்தான். பாதையின் இருபுறங்களிலும் மரங்களும் சப்பாத்துப் புதர்களும் அடர்ந்திருந்தன. இரண்டோரிடத்தில் பிரமாண்டமான பாம்புகள் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்திற்குப் போனதைக் கண்டு அலறி யடித்துக்கொண்டு துள்ளி விழுந்தான். நரிகளும், நிசாசரங்களும் கூக்குரலிட்டு சரசரவென்று ஓசையுண்டாக்கியதைக் காண அவனது பேரச்சமானது

உச்சிமயிரைப் பிடித்து உலுக்கியது. அன்றிரவு முற்றிலும் ஏற்பட்ட உழைப்பினுல் அவனது தேகம் மிகவும் சோர்வடைந்துபோயிருந்தது. கால்கள் நடக்கமாட்டாமல்தள்ளாடின. தூக்கம் இமைகளை மூடின. அத்தகைய பரிதாபகரமான நிலைமையில் ஒரு நாழிகை நேரம் வரையில் மைனர் நடந்து சென்ருன். வந்த வழியே சைதாப் பேட்டைக்குப் போய் அவ்விடத்திலிருந்து தேனும்பேட்டைக்குப் போய்விட உத்தேசித்தவனுய் அவன் நடந்து போய்க்கொண்டிருந்தான். சுமார் மூன்று நான்கு மயில் தூரம் அவன் சென்றிருப்பான். அதுவரையில் எங்கும் வீடே காணப்பட வில்லையாறுலும், அப்போது பாட்டையினருகில் ஒரு பங்களா காணப்பட்டது. அதைக் கண்ட மைனர் பெரிதும் சந்தோஷமடைந்தவனுய் நாற்புரங்களையும் உற்று நோக்கி அது எந்த இடமென்பதை ஆராய்ந்து பார்த்தான். அது ஆலந்தூர் பாதைபோலத் தோன்றியது. அந்த பங்களா மோகனங்கி இருந்ததாகப் பொன்னம்பலம் காட்டிய பங்களாப் போலவிருந்தது. அவன் மிகவும் ஆச்சரியமடைந்தவனுய் தான் வழி தப்பித் திரும்பவும் கருப்பாயின் வீட்டண்டையிருந்த மோகனங்கியின் மாளிகைவாசலை யடைந்துவிட்டதாக நிச்சயித்துக் கொண்டான். தான் அதைவிட்டுப் போய்விட வேண்டுமென்று முயன்ருலும், அந்த இடமே திரும்பவும் குறுக்கிட்டதை நினைந்து மைனர் மிகவும் சஞ்சலமும் கவலையும் கொண்டு பங்களாப்பக்கம் திரும்பி அதை உற்று நோக்கினுன். அப்போது, பங்களாவினுள்ளே இருந்த வாசஸ்தானத்தின் வெளிக்கதவண்டை வெளிச்சம் தெரிந்தது. "இப்போது மணி இரண்டிருக்கும். இந்த சமயத்தில் வாசலில் வெளிச்சம் தெரியவேண்டிய காரணமென்ன? இன்றிரவு ஏதாவது நாடக மிருக்குமோ? வி. பி. ஹாலிலிருந்து மோகனங்கி ஒரு வேளை இப்போதுதான் பங்களாவுக்கு வந்திருப்பாளோ" என்று அவன் பலவாறு சிந்தனை செய்யத் தொடங்கினுன். மோகனங்கியின் மீது அவன் கொண்டிருந்த மையல் திரும்பவும் தலையெடுத்தது. அவனது கண்ணேக்கம் தானுகவே பங்களாவிற்குள் சென்றது. பாட்டைக் கருகிலிருந்த இரும்புக் கம்பிக் கதவண்டை அவன் நின்று கொண்டு, உள்ளே தோன்றிய விளக்கின் வெளிச்சத்தை நன்ருகக் கவனித்தான். உள்ளே கட்டிடத்தின் வாசலில் காணப்பட்ட வெளிச்சம், மரங்களின் வழியாக இரும்புக்கதவை நோக்கி நகர்ந்து வருவதாகத் தோன்றியது.

யாரோ அந்தவிளக்கைத் தமது கையில் எடுத்துக்கொண்டு வெளியில் வந்ததை மைனர் கண்டான். வெளிச்சம் சமீபத்தில் வரவர, அதைக் கையில் வைத்திருந்தது ஒரு கிழவியென்பதை அவன் கண்டுகொண்டான். அவள் ஒரு வேலைக்காரியைப்போலக் காணப்பட்டாள். அந்த அகால வேளையில் தான் அங்கே இருப்பதைக்கண்டு அவள் கூச்சலிடுவாளோ என்ற அச்சம் ஒருபுறத்தில் அவனை வதைத்தது. தனிமையில் வந்த அந்த கிழவியோடு தான் நேரில் பேசினால், ஒரு கால் அது தனக்கு அநுகூலமாக முடியுமோ என்ற சபலமும் இன்னொரு புறத்தில் வதைக்க வாரம்பித்தது. அந்த சமயத்தில் கிழவி இரும்புக் கதவண்டை நெருங்கி வந்தவள் அதை திறக்காமல், தான் வந்தவழியே திரும்பிப்போக வாரம்பித்தாள். அதைக் கண்ட மைனர் விரைவாக நடந்து கதவண்டை நெருங்கி நின்று தணிவான இனிய குரலில், 'பாட்டீ! ராத்திரி இரண்டு மணி இருக்குமே! இப்போதுதான் தோட்டத்தில் உலாவுகிறதா!'' என்றான்.

எதிர்பாராத அந்தக் குரலைக்கேட்ட கிழவி திடுக்கிட்டுத் திகைப்பும், அச்சமும் கொண்டு தனது கையிலிருந்த லாந்தரை இரும்புக் கதவுப்பக்கம் திருப்பியவண்ணம் வெளிப்புறத்தில் நோக்கி, அங்கே ஆடம்பரமாக உடையணிந்து, வயிரப் பொத்தான்கள் பளீர் பளீரென்ன மின்ன நின்றுகொண்டிருந்த மைனரைக் கண்டு, அவன் யாரோ பெரிய மனிதன் வீட்டுப்பிள்ளை என்று உடனே யூகித்துக் கொண்டு "ஒரு நாளுமில்லாமல் இந்த அகாலத்தில் வந்து நின்று கொண்டு திடீரென்று கூப்பிட்டு என்னை நீர் பயமுறுத்திவிட்டீரே! இந்த அகாலத்திலேதான் மனிதர் வழி நடக்கிறதா? அப்படி வழி நடந்தாலும், பக்கத்திலுள்ள வீடுகளிலிருப்பவரை யெல்லாம் கவனித்து அவரிடம் யோக க்ஷேமம் விசாரிக்கும்படி, எந்த நியாயம் சொல்லுகிறது!'' என்று நகைத்தவண்ணம் வேடிக்கையாகக் கேட்டாள். அவளது மகிழ்ச்சியைக் கண்ட மைனர், அவள் தன்னோடு அதிகமாகப் பேச்சுக் கொடுக்க விரும்புகிறாளென்று யூகித்துக் கொண்டு, "நீ இந்தக் கேள்வி கேட்பாயென்பது எனக்குத் தெரியும். இந்த நடுராத்திரியில் பிரயாணம் செய்யக் கூடாதென்பது எனக்குத் தெரிந்தும், முட்டாள் தனமாகப் புறப்பட்டு வந்ததன் பலன் கைமேல் பலித்துவிட்டது. நான் ஆலந்தூரிலிருந்து சைதாப் பேட்டைக்குப் போகலாமென்று புறப்பட்டு வந்தேன். இப்

போது விடியற்காலமென்று நினைத்து வந்துவிட்டேன்! வந்த இடத்தில் திருடர்கள் சூழ்ந்துகொண்டு என்னை அடித்துப் போட்டுவிட்டு மூவாயிரம் ரூபாய் நோட்டுகளையும், கடுக்கன்கள். மோதிரங்கள் முதலிய சமான்களையும் கொண்டுபோய் விட்டார்கள். இதோ சமீபத்திலேதான் அந்த வழிப்பறி நடந்தது. திரும்பி ஆலந்தூர் போகலாமென்று இப்படி வந்தேன் ; தற்செயலாக இங்கே திரும்பிப் பார்த்தேன்! நீ விளக்கோடு நின்றாய். இந்த நிர்மானுஷ்யமான இடத்தில் உன்னைக் கண்டது தெய்வத்தைக் கண்டதுபோல ஆய்விட்டது இப்போது என் கையில் மாத்திரம் பணமிருந்தால் உனக்கு நூறு ரூபாய் சன்மானம் செய்து, உள்ளே ஒரு தாழ்வாரத்தில் வந்து பொழுதுவிடியும் வரையில் இருந்துவிட்டுப் போக உன்னுடைய அநுமதி கேட்டிருப்பேன்" என்றான்.

அதைக் கேட்ட கிழவி சிறிது கவலைகொண்டு, "அடாடா! அப்படியா நடந்தது! இந்தப்பாதையில் அவ்வளவு திருட்டுப் பயமா? என்னுடைய எஜமானியம்மாள் பட்டணத்திலிருந்து நடு இரவில் வருவதை வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறாளே! அவளுக்கு ஏதாவது இப்படிப்பட்ட ஆபத்து நேருமோ என்று கவலையாக இருக்கிறதே! அவள் ஒவ்வொருநாளும் இந்நேரத்துக்குள் வந்துவிடுவாள். இன்றைக்கு இன்னம் வரவில்லையே என்று கவலை கொண்டு தூக்கம் பிடியாதவளாய் படுக்கையைவிட்டு எழுந்து வந்து பார்த்தேன். அதற்கு ஒத்ததாக நீரும் சங்கதி சொல்லுகிறீர்; ஒரு ராத்திரி தங்கி இருக்க நூறு ரூபாய் சன்மானம் கொடுப்பவர் ஒரு மகாராஜனாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். நீர் யார் என்பதை முதலில் எனக்குத் தெரிவியும்; அதன்மேல் மற்ற சங்கதியைப் பற்றிப் பேசுவோம்" என்றாள்.

அதைக்கேட்ட மைனர் முன்னிலும் அதிகமாகத் துணிவடைந்து "அப்படியானால் என் காட்டில் மழை பெய்ததாகவே நினைக்கிறேன். எனக்கு இடம் கொடுப்பதுமன்றி மேல்விஷயத்தையும் பேச நீ தயாராக இருப்பதைக்காண எனக்கு நிரம்பவும் சந்தோஷமுண்டாகிறது. ஆகா! இப்போது மாத்திரம் என் கையில் பணமிருந்தால் நூறல்ல, இருநூறு ரூபாய் உனக்குக்கொடுத்திருப்பேன்." என்றான்.

கிழவி புன்னகைசெய்து, "தங்களைப்போன்ற பெரிய மனிதர்கள் கொடுப்பதாகச் சொல்லுவதே போதுமானது. பணம் உங்களு

டைய பெட்டியிலிருந்தாலும் அது எங்களுடைய பெட்டியிலிருக்கிற மாதிரிதான். அதைப்பற்றி நான் சந்தேகப்படவில்லை. ஆனால், எனக்கு இப்போது இன்னொரு சந்தேகமுண்டாய்விட்டது. முதலில், ராப்பொழுதைக் கழிக்க இடம் மாத்திரம் கேட்டீர். இப்போது, மேல்சங்கதி என்று அதற்கு ஒரு வால் ஒட்டவைத்தீரே, அது இன்னதென்பது விளங்கவில்லை. தவிர, நீர் யாரென்பதையும் இன்னம் சொல்லவில்லை'' என்றாள்.

அதைக்கேட்ட மைனர், "பாட்டீ! நான் மாரமங்கலம் ஜெமீந்தார்; உன்னுடைய எஜமாட்டியை நான் நாடகத்தில் ஒவ்வொரு நாளும் பார்த்திருக்கிறேன். அவளைப் பார்ப்பது என்றால், ஆணாகப் பிறந்தவன் எவனாயிருந்தாலும், அப்படியே மதிமயங்கி, அவள்மீது மோகங் கொண்டே தீரவேண்டும். இந்த பங்களாவுக்கருகில் திருடர் கையில் அடிதான் தின்றேன்; அதற்குப் பிராயச்சித்தமாக, உன்னுடைய எஜமாட்டியின் சிநேகத்தையாவது சம்பாதித்துக் கொண்டு போகலாமென்று நினைக்கிறேன். அதற்கு ஏதாவது வழி பிறக்குமா? அவளுக்கு வேறே ஆசை நாயகன் எவனாவது ஏற்பட்டிருக்கிறானா? இல்லாவிட்டால் காரியம் பலிக்குமா?'' என்றான்.

கிழவி:—காரியம் பலிப்பதும் பலிக்காததும் உம்முடைய ஈகையைப் பொருத்ததாக இருக்கிறது. இதுவரையில் எத்தனையோ, மனிதர் பெரும் பெரும் தொகைகளைக் கொடுப்பதாகச் சொல்லி முயன்றனர். எதுவும் பலிக்கவில்லை. அவர்கள் எல்லாரும் குறித்த தொகையைவிட நீர் அதிகம் கொடுப்பதாகச் சொல்லி முயன்று பார்த்தால், ஒரு கால் பலிக்குமோ என்னவோ?

மைனர்:—அப்படியானால் அவள் பணத்தை மாத்திரந்தான் நாடுகிறவளா? வேறே எதையும் கவனிக்கிறவ ளல்லவா?

கிழவி:—அப்படியல்ல. பணத்தை விரும்பாத மனிதருமுண்டா? அதில்லாவிட்டால், மற்ற சுகங்கள் எப்படி உண்டாகும்? பங்களாவேண்டும், ஆள் மாகாணங்கள் வேண்டும், பெட்டிவண்டிவேண்டும், ஆடையாபரணங்கள் வேண்டும், சுகமான போஜனம் செய்ய வேண்டும், இவைகளெல்லாம் எப்போதும் நீடித்து நடப்பதற்கு, பெருத்த வருஷவருமானம் வந்துகொண்டிருக்கவேண்டும். நாடகத்தில் கொடுக்கிற சம்பளம் ஒன்றுக்கும் போதுமானதாக இல்லை.

நீர் பகலில் வந்து பேசிப் பார்க்கிறதுதானே; இந்த அகாலத்தில் இப்படி வருகிறது நன்ருக இல்லையே—என்ருள்.

அதைக்கேட்டு மிகவும் வியப்படைந்த மைனர், "நீர் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே! யாரா யிருந்தாலும், அவள் உள்ளே சேர்ப்பதில்லை யென்று சொல்லிக்கொள்ளுகிருர்களே. அப்படி இருக்க, நான் பகலில் எப்படி வரமுடியும்?" என்ருன்.

அதைக் கேட்ட அந்தக் கிழவி, "அது உண்மைதான்; ஆனல் மனிதருக்கு மனிதர் வித்தியாச மில்லையா? நீர் பெருத்த ஜெமீந்தார்; சிறுபிள்ளை; ஏதோ முயற்சிசெய்து பார்க்கலாமென்ற நம்பிக்கையின் மேல் சொன்னேன். ஆனல், அவள் இப்போது தனியாக வருவாளானல், அது நல்லது. அவளோடு இன்னெரு மனிதர் வருவார். அவர் வராமலிருந்தால், இப்போதே உம்மை நேரில்கொண்டு போய் அவளிடத்தில் விட்டுப் பழக்கம் செய்து வைக்கலாம்" என்ருள்.

அதைக்கேட்ட மைனர் கரைகடந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் ஆவலும் கொண்டவனுய் அன்றிரவில் சம்பவித்த துன்பங்களையெல்லாம் முற்றிலும் மறந்தவனுய் "அப்படிச் செய்ய சாத்தியப்படுமோ?" என்ருன்.

கிழவி:—இருக்கட்டும்; ஏதோ முயன்று பார்க்கிறேன். நீர் கொஞ்ச தூரத்திற் கப்பால்போய் மறைந்து கொண்டிருந்து, வண்டி உள்ளே நுழைந்துவிட்டவுடன் இந்தக் கதவண்டை வந்து நில்லும். அதற்குள் நான் சங்கதியை அவளிடம் தந்திரமாகச் சொல்லிப் பார்த்து அதன் முடிவை இங்கேவந்து உம்மிடம் தெரிவிக்கிறேன்—என்ருள்.

அதைக் கேட்ட மைனர் தனது செவிகளை நம்பாமல், இன்பக் கனவு கண்டு, ஆனந்தவெள்ளத்தில் மிதந்தவனுய் "நீ என்னைப் பரிகாசம் செய்கிருயோ என்னவோ? இதை மாத்திரம் நீ முடித்து வைப்பாயானல், நாளை சாயுங்காலம் உனக்கு ஐந்நூறு ரூபாய் வந்து சேர்ந்துவிடும். இதை நீ சத்தியமாக நம்பலாம்?" என்ருன்.

உடனே கிழவி "அதெல்லாம் உம்முடைய அதிர்ஷ்டத்தைப் பொருத்தது. அவளோடுகூட இப்போது வேருெரு மனிதர் வராமலிருந்தால், உமக்கு நட்புச்செய்து வைக்கிறேன். அவர் வந்தால் காரியம் பலியாது. நீர் போகவேண்டியதுதான் முடிபு" என்ருள்.

மைனர்:—அந்த மனிதர் யார்?

கிழவி:—அவர்தான் அந்த நாடகத்தின் சொந்தக்காரர். அவர் இந்தவிஷயத்தில் நிரம்பவும் ஜாக்கிரதையுள்ளவர். அவர் இவளை தம்முடைய சொந்த சம்சாரத்துக்குமேல் அதிகப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார். அநேகமாக ஒவ்வொரு நாளும் அவளோடு கூடவே அவரும் வந்துவிடுவார்; அதற்காகத்தான் நான் இவ்வளவுதூரம் கவலைப் படுகிறேன்—என்றாள்.

LOWER CIRCULATING B 21 B-2A

மைனர்:—அந்த மனிதனுக்கும் உன்னுடைய எஜமானிக்கும் ஏதாவது சொந்தமுண்டோ?—என்றான்.

அதைக்கேட்ட கிழவி புரளியாக நகைத்து "என்ன பைத்தியக் காரக் கேள்வி இது? நான் சொன்னதன் கருத்தை அறிந்துகொள்ள உம்மால் முடியவில்லையா? என் எஜமானியிடத்தில் நீர் எப்படிப் பட்ட உறவை சம்பாதித்துக்கொள்ள ஆசைப்படுகிறீரோ, அதே உறவுதான் அவர்களுக்குள்ளும் இருந்து வருகிறது" என்றாள்.

அதைக்கேட்ட மைனர், "என்ன ஆச்சரியம்! அவள் இன்னமும் கன்னிப்பருவம் கழியாதவ ளென்றல்லவா கேள்விப்பட்டேன். நாடகத்தின் சொந்தக்காரருக்கு அவள் வைப்பாக இருப்பது எவருக்கும் தெரியவில்லையே" என்றான்.

கிழவி:—அதையெல்லாம் வெளியில் காட்டிக்கொள்ளுவார்களா? பெண்டுகள் விஷயம் அப்படித்தானிருக்கும்; நீர் அதையெல்லாம் கவனித்தால், உம்முடைய காரியம் ஆகவே போகிறதில்லை; அது மிகவும் ரகசியமான சங்கதி; ஏதோ தவறுதலாக அதை நான் உம்மிடம் வெளியிட்டு விட்டேன். அதை அறிந்துகொண்டதாகவே நீர் காட்டிக்கொள்ளக் கூடாது—என்றாள்.

மைனர்:—அப்படியானால், நாடகத்தின் சொந்தக்காரரிடத்தில் அவளுக்கு அவ்வளவாகப் பிரியமில்லையோ?—என்றான்.

அதைக்கேட்ட அந்த புத்திசாலிக் கிழவி, "அதெப்படி இருக்கும்? குமரிக்கும் கிழவனுக்கும் உண்மையான காதல் ஒருநாளும் உண்டாகாது. வயிற்றுப்பிழைப்புக்காக ஒரு கிழவனை வைத்துக் கொண்டிருப்பவர்களெல்லாம், ஆசைக்காக ஒரு குமரனை வைத்துக் கொள்ளத்தான் விரும்புவார்கள்; இவளை வைத்துக்கொண்டிருக் கிறோமென்கிற வெறும் பெருமைதான் கிழவனைச் சேர்ந்தது. உண்மையான பிரியமும், அந்தரங்கமான காதலும், களங்கப்படாத சுக

போகங்களும் குமரனேயே சேர்ந்தவை யல்லவா'' என்று மொழிந்து கொண்டிருந்தபோது, சிறிது தூரத்தில் ஒரு வண்டிவந்த ஓசை கேட்டது. அதை யுணர்ந்த கிழவி உடனே மைனரை நோக்கி, "சரி; அதோ வந்துவிட்டாள். நீர் கொஞ்சநேரம் அப்பால் போய் மறைந்து கொண்டிரும்; அவள் உள்ளே போனபிறகு நான் மறுபடியும் திரும்பிவருகிறேன். சீக்கிரம் போம்; நிற்கவேண்டாம்'' என்று கூறியவண்ணம் இரும்புக்கதவின் உட்புறத்திலிருந்த பூட்டைத் திறந்தாள்.

அதைக் கண்ட மைனர் மிகுந்த மனேவெழுச்சியும் பூரிப்புமடைந்தவனுய் விரைவாகச் சிறிதுதூரம் நடந்து ஒருமரத்தின் மறைவில் ஒளிந்து வண்டி வந்ததைக் கவனித்துக் கொண்டிருந்தான். அதற்குள், இரும்புக்கதவு நன்ருகத் திறக்கப்பட்டது. அடுத்த நிமிஷத்தில், பெட்டிவண்டி பங்களாவிற்குள் நுழைந்துவிட்டது. கிழவி கதவைத் திரும்பவும் மூடிப்பூட்டிக்கொண்டு வண்டியோடு உள்ளே போய்விட்டாள். அந்த சமயத்தில் மைனரது மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. ஆவேசமும் ஆத்திரமும் ஒன்றுகூடி அவரது தேகத்தை முறுக்கின. இந்த உலகமே புகழ்ந்து கொண்டாடும் மோகனங்கியோடு தான் தனிமையில் பேசும் பாக்கியம் இன்னம் கால்நாழிகையில் பலித்துவிடுமென நினைத்து அவன் பெரிதும் அளவளாவினுன். எவ்வளவோ பெருத்த சமஸ்தானதிபதிகளேயும், தன்னைக்காட்டிலும் அழகிலும் செல்வத்திலும் மேம்பட்ட எத்தனையோ மன்மத புருஷர்களையும் சிறிதும் இலட்சியம் செய்யாத மகா உன்னதமான அந்த தெய்வ கன்னிகையின் நட்பையும், அவளது பிரியத்தையும், சுகபோகங்களேயும் தான் அதிசீக்கிரத்தில் அடையப் போவதைப்பற்றி கரைகடந்த வெறிகொண்டு நின்ற மைனர், வண்டி உள்ளே போனவுடனே தனது மறைவிடத்தைவிட்டு மெல்ல வெளிப்பட்டு கதவண்டை வந்து உட்புறத்தில் உற்று நோக்கிய வண்ணம் அதிக ஆவலோடு நின்று கொண்டிருந்தான்.

அதன் பிறகு கால் நாழிகை நேரம் கழிந்தது. உட்புறத்தில் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிருர்களோ வென்ற ஐயமும், கிழவி தனக்கு வாக்குக்கொடுத்தபடி திரும்பி வருவாளோ வென்ற ஐயமுமுற்ற வண்ணம் மைனர்

நின்று கொண்டிருந்தான். நாழிகை ஏறிக்கொண்டே இருந்தது. அவன் பொறுத்துப்பொறுத்துப் பார்த்தான்; அவனது மனோ வேதனை சகிக்கவொண்ணாத நிலைமையை யடைந்தது. தன்னை கிழவி ஏமாற்றி யிருப்பாளோ வென்றும், தன்னைப்பற்றி அவளும் மோக னாங்கியும் புரளியாகப் பேசி ஏளனம் செய்து கொண்டிருப்பார்களோ வென்றும் சந்தேகித்த மைனர் சஞ்சலத்திலும் துன்பத்திலு மாழ்ந் தான். தான் அன்றிரவு இரண்டிடங்களில் ஏமாறிப்போனதற்கு சிகரம் வைத்ததுபோல, அந்த மூன்றாவது இடத்திலும் தனக்கு ஏமாற்றம் ஏற்பட்டிருக்குமோ வென்று நினைத்து அவன் பலவாறு சிந்தனையிலாழ்ந்திருந்த சமயத்தில், திடீரென்று தாய்க்கிழவி இரும் புக்கதவண்டை வந்து நின்று கனைத்துக் குரல் கொடுத்தாள். அவள் வந்துவிட்டா ளென்பதைக் கண்டவுடனே, மைனரது சந்தேகமெல் லாம் பஞ்சாகப் பறந்தது; நம்பிக்கையும் மனோவிகாரமும் திரும்பவும் பொங்கி யெழுந்தன; அவன் முற்றிலும் மோகாவேசம் கொண்டவ னாய் அவளது முகத்தைக் கூர்ந்து நோக்கி, அது தனக்கு ஏற்படப் போகும் சுவர்க்கபோகத்திற்கு முன்னறிகுறியாக சந்தோஷத்தைக் காட்டியதைக் கண்டு ஆநந்த பரவச மடைந்து, "பாட்டீ! காரியம் பழமா காயா? என்ன விதமான செய்தி கொண்டுவந்தாய்?" என்று கேட்டான். அந்த ஒரு நொடியும் அவனுக்கு ஒரு யுகம்போல விருந் தது. அப்போது கிழவி, "நீர் கேட்ட கேள்விக்கு இதுதான் பதில்" என்று கூறியவண்ணம் இரும்புக் கதவின் பூட்டை விலக்கி, அதைச் சிறிதளவு திறந்து, அவன் உள்ளே வரும் பொருட்டு அவள் ஒரு பக்கமாக விலகி நின்றாள். அவளது கருத்தை உணர்ந்த மைனர் சடக்கென்று உள்ளே புகுந்தான். திரும்பவும் கதவைப் பூட்டிக் கொண்டே கிழவி, அவனை உட்புறத்தில் கட்டிடத்தை நோக்கி அழைத்துக்கொண்டு சென்றாள். தான் சுவர்க்க லோகத்துக்குப் போகும் பொருட்டு ஆகாசத்தில் மிதந்துகொண்டு செல்வதாக மை னர் நினைத்து தன்னையும், தனது நல்ல உணர்வையும் மறந்தவனாய், கனவு நிலைமையில் இருப்பவன்போல நடந்தான். இருவரும் கட்டிடத் தின் தாழ்வாரத்தில் ஏறியவுடனே, புன்சிரிப்போடு, ஆழ்ந்த கருத்தோடும் கிழவி மைனரது முகத்தை நோக்கி, "நீர் வரும் போது நரியின் முகத்தில் விழித்துவிட்டு வந்தீர்போ லிருக்கிறது. நீர் நல்ல அதிர்ஷ்டசாலிதான். ஆனால் மூலஸ்தான தெய்வத்தின் தயவு ஏற்பட்டவுடனே சுற்றுக்கோவில் தெய்வத்தை எவரும் கவ

ணிக்கிற வழக்கமில்லை; சொன்ன சொல்லை மறந்து விடாதேயும்; இப்படி வாரும்'' என்று அவரை நடத்திக்கொண்டு, ஓர் அறைக்குள் நுழைந்து, அதன் ஒரு மூலையில் காணப்பட்ட மெத்தைப்படிகளின் வழியாக ஏறி மேலே இருந்த உப்பரிக்கையை அடைந்தாள். அவ்விடத்தில் காணப்பட்ட ஒரு விடுதிக்குள் அவர்களிருவரும் நுழைந்தனர். அது மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸோபாக்கள், நிலைக்கண்ணாடிகள், மேஜை, நாற்காலிகள், படங்கள் பூத்தொட்டிகள், பதுமைகள் முதலிய சகலமான வசதிகளும் சௌகரியங்களும் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. இரண்டு மின்சார விளக்குகள் விண்மணிகள்போல சுடர் விட்டெரிந்து கொண்டிருந்தன. மின்சார விசிறி யொன்று சுழன்று, ஜிலுஜிலென்ற காற்றை சுகமாகக் கொடுத்துக் கொண்டிருந்தது. மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருந்த அந்த சயனக் கிரகத்தை அவர்க ளடைந்தவுடனே கிழவி மைனரை நோக்கி, "ஐயா! இதுதான் ரதிதேவியின் ஆஸ்தான மண்டபம்; ஸோபாவில் உட்கார்ந்துகொள்ளும். என்னுடைய எஜமானி, தன் உடைகளை மாற்றிக்கொண் டிருக்கிறாள்; இதோ வந்து விடுவாள்'' என்று கூறிய வண்ணம் அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டாள். தனிமையில் விடப்பட்ட மைனர், ஒரு ஸோபாவில் உட்கார்ந்து கொண்டான். அவனது அப்போதைய மனோநிலைமை யூகித்துக்கொள்ளத் தக்கதேயன்றி, அதை விவரித்துக் கூறுவது எளிய காரியமல்ல. அவனது ஹிருதயம் தடதடவென்று அடித்துக்கொண்டது. மோகாவேசத்தினால் கைகள் கால்கள் முதலிய அவனது அங்கங்கள் யாவும் வெடவெட வென்று நடுங்கின. வி. பீ. ஹாலில் நெடுந்தூரத்தில் ஜெகஜ்ஜோதி போலத் தோன்றித் தனது அறிவையும் பஞ்சேந்திரியங்களையும் கொள்ளை கொண்ட அந்தப் பேரின்ப வடிவம் அடுத்த நிமிஷம் தனக்கருகில் வரப்போவதையும், தான் அதற்குமேல் அடைய விருக்கும் நிகரற்ற சாயுஜ்ய பதவியையும் மனதில் பாவித்தவனாய் மதி மயங்கி, மூளை குழம்பி வாசற்படிமேல் வைத்த தனது விழியை வாங்காமல் உட்கார்ந்திருந்தபோது அவனுக்கெதிரில் ஓர் அழகிய மங்கை தோன்றினாள். அவளது வயது பதினெட்டிருக்கலாம். அழகிய சிவந்த மேனியும், வசீகரமான முகமும் பெற்று, உயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்திருந்த அந்த மடமாது புன்னகையும், குளிர்ச்சியும், அன்பும் கிரணங்களாகச் சொரிந்த

சந்திர பிம்பம் போன்ற முகத்தோடு அவனிடம் நெருங்கி, தனது கைகளை யெடுத்துப் பணிவாக ஒரு கும்பிடு போட்டு அவனை வணங்கினாள். அவளைக் கண்டு முற்றிலும் திகைப்படைந்த மைனர் அவள் மோகனாங்கியின் தங்கையோ வென்று ஐயமுற்றவனாய், அவளை நோக்கி மகிழ்ச்சியும் புன்னகையும் காட்டி, தனது கம்பீர மான தலை யசைப்பால் அவளது வணக்கத்தை ஏற்றுக்கொண்ட வனாய் மௌனம் சாதித்தான். அங்கேவந்த அந்தப் பெண்பாவை சிறிதுதூரத்திலிருந்த ஒரு மேஜையின்மீதிருந்த வாசனைத் தாம்பூலங் கள் குழம்புப்பால் முதலியவற்றைக் காட்டி, "இந்த மேஜைக்கு சமீபத்தில் வந்து உட்கார்ந்து கொள்ளுகிறதுதானே! தாம்பூலம் தங் களை வருந்தி யழைக்கிறதே" என்று மிகுந்த உற்சாகத்தோடும் சந் தோஷத்தோடும் கூற, அதைக்கேட்ட மைனர், "அதற்கென்ன ஆகட்டும். நான் எந்த தெய்வத்தை நாடிவந்தேனோ அது இன்னமும் தரிசனம் கொடுக்கவில்லையே. அந்த ஆநந்தத்தை யடைந்த பிறகு, தாம்பூலத்தை மறக்கவா போகிறோம்" என்றான். அவனது சொல் லைக் கேட்ட அந்தப் பூங்கொடியின் முகம் சடக்கென்று மாறுபட் டது. அவனுக்கருகில் நெருங்கி நின்று தனது அழகிய பல்வரிசை யில் சிறிதளவு வெளியில் தெரியும்படி அழகாக நகைத்தவண்ணம், அந்தப் பெண் அவனை நோக்கி, "இந்த வீட்டின் எஜமானியோடு தாங்கள் சிநேகம் செய்துகொள்ளப் பிரியப்படுவதாக, வேலைக்காரி யிடம் தாங்கள் சொன்னீர்க ளல்லவா?" என்றாள்.

மைனர்:—ஆம்; சொன்னதுண்டு; எஜமானி இன்னமும் வர வில்லையே!—என்றான்.

அதைக் கேட்ட மங்கை, நான்தானே இந்த வீட்டு எஜமானி தாங்கள் ஒருகால் வேறே யாரையாகிலும் தேடிவந்து அவள் இங்கே இருக்கிறாளென்று தவறுதலாக நினைத்துக்கொண்டீர்களோ?" என் றாள். அதைக் கேட்ட மைனர் திடுக்கிட்டு முற்றிலும் திகைப்பும் வியப்புமடைந்து, என்ன பேசுவதென்பதை யறியமாட்டாமல் சிறிது நேரம் தத்தளித்தபின், ஆனால் இந்த பங்களாவுக்கு உன்னைத்தவிர வேறே எஜமானியில்லையா? என்று திரும்பவும் சந்தேகத்தோடு வினவ அதைக் கேட்ட அந்த அணங்கு புன்சிரிப்போடும், அடக்கிக் கொண்ட அதிருப்தியோடும் அவரை நோக்கி, "நான் கொஞ்ச நேரத் துக்குமுன் சொன்ன வார்த்தையில் தங்களுக்கு நம்பிக்கையில்லையா? அல்லது, என்னைப் பார்த்தால் இந்த பங்களாவுக்கு எஜமானியா

யிருக்கும் யோக்கியதை என்னிடம் இல்லையென்று நினைக்கிறீர்களா? அல்லது, எனக்குத் தெரியாமல் இந்த பங்களாவுக்கு வேறே யாராவது ஓர் எஜமானியை ஏற்படுத்தி விட்டீர்களா? இந்த வீட்டின் எஜமானிப்பட்டம் எனக்குக் கொடுக்க தங்களுக்கு மனமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, உண்மையில் நான்தான் எஜமானி. தவறுதலாக இங்கே வந்துவிட்டதைப்பற்றி தாங்கள் கவலைப்பட வேண்டாம். தங்களுக்கு எங்கே போகவேண்டு மென்பதைச் சொன்னால், என்னுடைய பெட்டிவண்டியிலேயே வைத்துக் கொண்டு போய் விடச்சொல்லுகிறேன்'' என்று மிகவும் இனிமையாகக் கூற, அதைக் கேட்ட மைனர், அதற்குள் துணிவடைந்து, தனது ஏமாற்றத்தினால் ஏற்பட்ட சஞ்சலத்தையும் அதிருப்தியையும் அகற்றிக் கொண்டு, பெண்ணே! கோபித்துக்கொள்ளாதே! உண்மையில் இதில் ஒரு தவறு நடந்துவிட்டது. வேறொரு ஸ்திரீ இங்கே வசிக்கிறாளென்று எனக்கு சிலர் தெரிவித்தார்கள். ஆனால் இப்போது எனக்குக் காட்சி கொடுத்திருக்கும் ஸ்திரீ ரத்னம், நான் தேடிவந்த பெண்ணைவிட அழகில் குறைந்தவளல்ல. இது எப்படி இருந்ததென்றால் சுவர்க்கலோகத்தில் நான் ஒரு பக்கத்துக்குப் போக நினைத்தேன்; அதே லோகத்தில் இன்னொரு பக்கத்தில் வந்து சேர்ந்துவிட்டேன்; இதில் அதிக வித்தியாச மொன்றுமில்லை. பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல, காரியம் ஆகிவிட்டது. ஆகையால், இதைப்பற்றி, உனக்காவது எனக்காவது ஆயாசமே வேண்டாம். நான் உன்னைத் தேடிவந்ததாகவே நினைத்துக்கொள்ளுகிறேன். ஆனால் இதில் இன்னொரு விசேஷம் இருக்கிறது. தாசிகளின் குணம் என்னவென்றால், பணம் கையில் வைத்துக் கொண்டிருப்பவரைத்தான் அவர்கள் உள்ளே சேர்த்துக்கொள்ளுவார்கள். ஆனால் என்னைத் திருடர்கள் அடித்து என்னுடைய பொருளையெல்லாம் அபகரித்துக்கொண்டார்கள் என்பதை உணர்ந்தும், நீ என்னிடம் அன்பும் மதிப்பும் வைத்து என்னை மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடத்துவதைக் காண, நீ தக்க பெரிய மனுஷியென்பதையும், சிநேகம் செய்ய யோக்கியமானவ ளென்பதையும் நான் கண்டு கொண்டேன்.'' என்றான்.

அதைக் கேட்ட அந்த மங்கை மகிழ்ச்சியடைந்து தனது அழகிய பல்வரிசைகள் வெளியில் தெரியும்படி வசீகரமாகப் புன்னகை

செய்து, "தாங்கள் வயசில் மிகவும் பாலியமாக விருந்தாலும், ஏதோ தவறு நடந்து விட்டாலும் அதைப் பாராட்டாமலும் எதிராளியின் மனம் கோணுமலும் சாமார்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சமயோசிதமாக நடந்துகொள்வதைக் காண, எனக்குத் தங்கள் விஷயத்தில் உண்டாகும் மதிப்புக்கு அளவே இல்லை. இயற்கையிலேயே உயர்குடிப் பிறப்புள்ளவர்கள் இப்படித்தான் நடந்து கொள்ளுவார்கள். அதிருக்கட்டும்; தாங்கள் யாரைத் தேடி இந்த இடத்துக்கு வந்தீர்கள்?"

**மைனர்:**—உன்னிடம் உண்மையைச் சொல்லாமல் மறைப்பதில் என்ன பயன்? அந்த மோகனாங்கி இங்கே இருப்பதாகச் சொன்னார்கள். அவளையே தேடிக்கொண்டு வந்தேன்—என்றான்.

அதைக் கேட்ட அந்தப் பெண்ணின் முகம் சிறிது மாறுதலடைந்ததானாலும், அவள் தனது புன்னகையால் அதை மறைத்துக்கொண்டு "ஓகோ! அப்படியா! அந்த ஜெக ஜாலியையா நாடி வந்தது; சரிதான் சரிதான்; இப்போதுதான் உண்மை தெரிகிறது, நானும் அதே நாடகத்தில் இருப்பதால், இந்தத் தவறு ஏற்பட்டதென்பது நன்றாகத் தெரிகிறது."

அதற்குள் மைனர் தான் இருந்த இடத்தை விட்டெழுந்து, அவள் உட்கார்ந்திருந்த ஸோபாவிற்கு மெல்ல வந்து அவளுக்கு அண்டையில் நெருங்கினாற்போல உட்கார்ந்துகொண்டு, "நீயும் அதே நாடகத்தில் இருக்கிறேனென்கிறாயே! உன்னுடைய பெயரென்ன?" என்றான்.

அவள் "என்னை பாலாம்பாள் என்று சொல்லுவார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட மைனர் மிகவும் சந்தோஷமடைந்தவனாய் "அடாடா! என்ன என்னுடைய மௌடீகத்தனம். உன்னை நான் ஒவ்வொரு நாளும் நாடகமேடையில் பார்த்து ஆநந்தக் கூத்தாடியிருந்தும், இப்போது அடையாளங் கண்டுகொள்ளாமல் போய்விட்டேனே! ஆகா! என்னுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! ஜனங்களுள் பெரும்பாலோர் பாலாம்பாளுக்குத்தான் ஆட்டத்திலும் அழகிலும் முதன்மை கொடுக்கவேண்டுமென்று சொல்லி அடிக்கடி சச்சரவு செய்வதை நான் கண்டிருக்கிறேன்; மோகனாங்கி மேலானவளென்று

சிலர்தான் சொல்லுகிருர்கள். எனக்கு எப்படி இருந்ததென்ருல் அவளைக் காணும்போது அவளே மேலானவளாக இருந்தாள். உன்னைக் காணும்போது நீயே மேலானவளாக இருந்தாய். இருவரையும் ஒன்ருகக் காணும் போதெல்லாம் இருவரும் ஒருவர்க்கொருவர் தோற்றதில்லை. அப்படி இல்லாவிட்டால், அயன் ஸ்திரீ வேஷத்தில் உனக்கு ஒரு பாகமும் அவளுக்கு ஒரு பாகமும் கொடுத்து நடிக்கச் செய்திருக்க மாட்டார்களல்லவா" என்று கூறியவண்ணம் தனக்கருகில் வைரமோதிரங்கள் மின்ன தந்தக் குச்சிகள்போலக் காணப்பட்ட அழகிய விரல்களைக்கொண்ட அவளது இடக்கரத்தை மெதுவாகத் தனது வலக்கரத்தால் பிடித்தான்.

---

## 7-ம் அதிகாரம்

### நண்டுக்குத் திண்டாட்டம்

அதன் பிறகு அந்த பங்களாவில் நிகழ்ந்த அற்புத சம்பவங்களையும், மாரமங்கலம் மைனர் பொழுது விடியும்வரையில் அநுபவித்த பரமாநந்த சுகத்தையும் பற்றி விரிவாகக் கூறுமுன், வேருேரிடத்தில் நிகழ்ந்த சில விஷயங்களை வெளியிடுதல் அவசியமாகவிருக்கின்றது.

அன்று பகலில் மைனர், ஆலந்தூர் வரையிற் சென்று, அம்பட்டக் கருப்பாயியோடு பழக்கம் செய்துகொண்டு மாலை ஏழு மணிக்கு மறுபடியும் வருவதாக அவளிடம் ஏற்பாடு செய்துவிட்டு, தனது பங்களாவுக்கு வந்தானென்பது முன்னரே சொல்லப்பட்ட விஷயம். அன்று பகல் சரியாக இரண்டுமணி சமயத்தில் தேனும்பேட்டையில் மீனுக்ஷியம்மாளது பங்களாவண்டை நமது வீணைவித்துவானை மதனகோபாலன் வந்து வாசலிலிருந்த தோட்டக்காரனைக் கண்டு, "உள்ளே எல்லோரும் என்னசெய்கிருர்கள்?" என்று கேட்க, மீனுக்ஷியம்மாளும், துரைராஜாவும் கண்மணியம்மாளுக்கு சில முக்கியமான வைர ஆபரணம் வாங்குப்பொருட்டு டாக்கர் அண்டு சன்ஸ் என்ற கம்பெனிக்கு அப்போதே புறப்பட்டுப் போனதாகவும், கண்மணியம்மாள் மாத்திரம் மெத்தையின்மேல் வீணையுடன் தங்களது வருகையை எதிர்பார்த்திருப்பதாகவும் தோட்டக்காரன் மறுமொழி கூறினன்.

அந்தச் செய்தியைக் கேட்ட மதனகோபாலன் ஒருவகையான தடு மாற்றத்தை யடைந்து தத்தளித்தவனாய் இரண்டொரு நிமிஷநேரம் அப்படியே நின்றான். அதுகாறும் அவன் பாடங்கற்றுக் கொடுத்த போதெல்லாம் மீனாக்ஷியம்மாளும் கூடவே இருப்பது வழக்கமாத லால், அன்று கண்மணியம்மாள் மாத்திரம் தனிமையில் இருக்கும் போது, அன்னிய புருஷனான தான் போய் பாடங்கற்றுக் கொடுப் பது சரியல்லவென்று நினைத்து லஜ்ஜை யடைந்து திரும்பித் தனது வீட்டிற்குப் போய்விடலாமாவென்று யோசனை செய்தவனாய் நின் றான். அவள் வீணையோடு தனது வருகையை எதிர்பார்த்திருப்ப தாக தோட்டக்காரன் சொன்னதை ஆதாரமாக வைத்துக்கொண்டு தான் உள்ளே போகலாமா என்ற நினைவு மனதில் எழுந்தது. அன்று சரியாக இரண்டு மணிக்கு வரும்படி, முதல்நாளே கண்மணி யம்மாள் மீனாக்ஷியம்மாளுக்கெதிரில் தனக்குச் சொல்லியிருந்தது ஞாபகத்திற்கு வந்ததாகையால், மெத்தைமீது சென்று அந்த அணங் கைக் காண்பதில் பிசகில்லையென்றும், தான் தனியளாக இருப்பது பற்றி அவள் அப்போது பாடங்கற்றுக் கொள்ள விரும்பாவிடில் தனது பழியைக் கழித்துக்கொண்டு திரும்பிப் போய்விடலாமென் றும் தீர்மானம் செய்து கொண்டவனாய், பங்களாவின் கட்டிடத்திற் குள் நுழைந்தான், அவன் மகா அற்புதமான அழகு வாய்ந்த யௌவனப் புருஷனென்பது முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. அவனது தேகம் சிவந்ததாகவும் பளபளப்பும் செழுமையும் பொருந் தியதாகவும், இயற்கையான கம்பீரமும், வசீகரமும் பெற்றதாகவு மிருந்தமையால், அவனுக்கு வயது பத்தொன்பதிற் குள்ளாகவே இருந்ததானாலும் அவன் இருபது அல்லது இருபத்தொரு வய தடைந்த பக்குவ காலத்து யௌவனப் புருஷனாகவும், ஆண் பெண் பாலார் ஆகிய இருவகுப்பாரும் அவனைக் கண்டு மோகங்கொள்ளத் தக்க மனோகர வடிவத்தினனாகவும் காணப்பட்டான். விரிந்து உயர்ந்த நெற்றியும், கருத்தடர்ந்த புருவவிற்களும் செழித்துவளர்ந்து முழங்கால் வரையில் வந்து வீழ்ந்த கேசமும், நற்குணம் நல்லொ ழுக்கம், பெருந்தகைமை, கண்ணியபுத்தி, பராக்கிரமம், அடக்கம், பணிவு முதலிய சகலமான சிறப்புகளும் அவனது முகத்திலேயே ஜ்வலித்ததன்றி, இயற்கையான மகுடமோவென்னும்படி, அபார மான ஞானமும், அதிசூக்ஷ்ம புத்தியும் அவனது சிரத்தை அழகு செய்து கொண்டிருந்தன. வீணை வாசிப்பதிலோ அவனை வாணியின்

அவதாரமென்றே கொள்ளவேண்டும், அவனது வீணு கானத்தைக் கேட்டவண்ணம் அவனது தேக அமைப்பைக் கவனிப்போர் ஒவ்வொருவரும், கந்தருவலோகத்து மனிதனே தவறிப்போய் பூலோகத்தில் ஜனித்துவிட்டானென்று சொல்லிக் கொண்டே போவதுண்டு. மன்மதாகாரமான அவனது வடிவமும், மாதுரியமான அவனது குண வொழுக்கங்களும், ஆநந்த மயமான அவனது சங்கீதமும் ஒவ்வொருவரது மனதிலும் பசுமரத்தாணிபோலப் பதிந்து யாவரையும் இன்பக்கடலி லாழ்த்தின.

இத்தகைய சுந்தரரூபனுன மதனகோபாலன் சுத்தமான உடையணிந்து வெளிப்படுவானுயின், அவனைக் காண்போர் யாவரும், அவன், ஏதோ ஒரு சமஸ்தானத்தைச் சேர்ந்த ராஜவமிசத்து இளைஞன் என்ற நினைவும் மதிப்பும் இயற்கையிலேயே உண்டாவதன்றி, அவன் இன்னுனென்பதை அறியாதவரும், அறிந்தோரும், அவனிடம் மிகுந்த மரியாதையோடும் அன்போடும் நடந்துகொண்டனர்.

இத்தகைய புருஷ உத்தமனுன மதனகோபாலன், அநாகரிகமாக ஓசை செய்துகொண்டு செல்லாமல், மிகவும் அடக்க வொடுக்கமான தோற்றத்தோடு மெத்தையின் மீது ஏறினுன், அதில் பல கூடங்களும் மாடங்களும் நிறைந்திருந்தன. அவைகளுள் எந்த விடுதியில் கண்மணியம்மாள் வழக்கமாக இருந்து வீணை கற்றுக்கொள்ளுவாளோ அந்த இடத்தை நோக்கிச்சென்ற மதனகோபாலன், திடீரென்று உள்ளே நுழைந்து விடாமல் வெளியில் நின்றவண்ணம், உட்புறத்தில் மெல்ல நோக்கினுன்; சற்று தூரத்தில் போடப்பட்டிருந்த ஒரு ஸோபாவின்மேல் கண்மணியம்மாள் சுவர்ண விக்ரகம் போல உட்கார்ந்திருந்ததைக் கண்டான். ஆனுல் அவளது முதுகுப் பக்கமே அவனுக்கெதிரிலிருந்தமையால், அவன் வந்ததை அந்தவடிவழகி உணரவில்லை. ஏகாந்தத்திலிருந்த அந்த உன்னத மங்கையிடம் தான்சொல்லுவது அவளுக்கு ஆயாசமாக இருக்குமோ என்ற அச்சமும் தயக்கமும் திரும்ப எழுந்து அவனை வதைக்கத்தொடங்கின. அந்த மடமயிலாள் அப்புறத்தில் தனது பார்வையை வைத்துக்கொண்டு, தனது மனத்தையும் நினைவையும் ஒரே நிலையில் நிறுத்தி சிந்தனையி லாழ்ந்திருந்ததாகத் தோன்றியது. நிற்க அந்தப்பெண்மணி, தனக்கருகிலிருந்த ஒரு சிறிய சவுக்கத்தை அடிக்கடி எடுத்துத் தனது நாசியை சுத்தம் செய்து கொள்வதாகவும் தனது

கண்களிலிருந்து ஊற்றெடுத்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்வதாகவும் தெரிந்தது. அவள் விம்மி விம்மி யழுததால் எழுந்த ஓசையும் மதனகோபாலனது செவிக்கும் எட்டியது.

என்றைக்கும் காணுத அந்த விபரீதக் கோலத்தில் அவளைக் கண்டவுடனே, மதனகோபாலன் துடித்தான். அவனிடம் வீணைகற்றுக்கொண்ட பெண்பாலார் யாவரினும், அவளொருத்தியே அழகிலும் குணங்களிலும் நடத்தையிலும் மாசில்லா மாணிக்கம் போன்றவள் என்பது அவன் கொண்டிருந்த அபிப்பிராயம். அவளுக்கு அடுத்தபடியில் வைக்கத்தக்கவள் மாரமங்கலம் சமஸ்தானத்து இளைய பெண்ணுன கோமளவல்லி யென்பதும் அவனது நினைவு; அப்படிப்பட்ட மகா சிரேஷ்டமான அந்த தெய்வ கன்னிகை யிடத்தில், அவன் தனது அந்தரங்கமான அன்பையும் அபிமானத்தையும் வைத்திருந்தவனுதலால், அவளது கரை கடந்த துயரத்தைக்காண, அவனது தேகம் பதறியது. கபடமென்பதையே அறியாத மகா பரிசுத்த ஸ்வரூபிணியான அந்தப் பெண்மணியின் மனம் ஸஞ்சலப்பட, அந்த ஈசுவரனும் சகித்திருப்பானே என்ற எண்ணம் அவனது மனதில் தோன்றி முற்றிலும் வதைத்தது. அவன் தனது பகைவனது காலில் ஒரு முள் தைப்பதானுலும், அதைக் கண்டு இரக்கங் கொள்ளக் கூடிய பரமதயாளமும் இளக்கமுடைய மனத்தினனுதலால், அவனது தேகமும் மனமும் ஆடிப்போய்விட்டன. அப்போது அவளிடம் தான் நெருங்குவதும் சரியான காரியமாகப் படவில்லை. அந்தப் பரிதாபகரமான நிலைமையில் அவளைத் தேற்ருது விட்டுப் போய் விடவும், அவனது மனம் அநுமதிக்கவில்லை. என்ன செய்வான்? தான் என்ன செய்வதென்பதை யறியமாட்டாதவனுய், அவன் அசைவற்று அப்படியே கால்நாழிகைநேரம் நின்ருன். விசனமே வடிவாக உட்கார்ந்து உட்புறத்திலேயே தனது நாட்டத்தை நிறுத்தி யிருந்த கண்மணியம்மாள் தனக்கெதிரிலிருந்த சுவரில் ஆடியதை திடீரெனக் கண்டு, அது எங்கிருந்து உண்டாகிறதென்று கவனித்தாள். தனக்குப் பின்புறத்திலிருந்த வாசற்படியிலிருந்து அந்தச் சாயல் சுவரில்வந்து வீழ்ந்திருப்பதாக நினைத்த கண்மணி சடக்கென்று திரும்பி வாசற்படியைப் பார்த்தாள் அவளது கண்கள் கோவைப்பழம்போலச் சிவந்திருந்தன. அவற்றினின்று அருவிகள் போல இரு கன்னங்களின் வழியாக மார்பின்மீது கண்ணீர் வீழ்ந்த

படியே வாசலை நோக்கிய அந்த மடமாது, தனது வீணையாசான் வாசற்படியில் நின்றதைக்கண்டு திடுக்கிட்டு ஒரே நொடியில் தனது கண்களையும் கன்னங்களையும் துடைத்துக்கொண்டு அடக்க வொண்ணு நாணத்தோடும் மரியாதையோடும் எழுந்துநின்று, கீழே குனிந்தவண்ணம் தனது விசனக்குறிகளை முற்றிலும் விலக்க முயன்றவளாய் "ஏன், உள்ளே வரலாமே! அங்கே நிற்பதேன்?" என்று தணிவான குரலில் கூறினுள். அவள் உயர்குல ஒழுக்க முடையவளாதலால், தனது விகாரக்குறிகளை உடனே மாற்றி, இயற்கை யழகையும் சுமுகத்தையும் ஒருநொடிக்குள் உண்டாக்கிக் கொண்டாளென்பதை யுணர்ந்த மதனகோபாலன் தனக்குள் மௌனப்பேரின்பமடைந்தவனுய் அவளைக் கூர்ந்து நோக்காமல், "அத்தையம்மாள் வெளியில் போயிருக்கிறுர்கள்போ லிருக்கிறதே; வேண்டுமானுல், பாடத்தை நாளைக்கு வைத்துக் கொள்ளலாமா வென்று நினைத்தேன். உன்னுடைய பிரியப்படி செய்கிறேன்" என்றுன். புல்லாங்குழலின் ஒலிபோல இன்பம் பயந்த அவனது சொல்லைக்கேட்ட கண்மணி, "நீங்கள் வந்தால், பாடம் கற்றுக்கொள்ளும்படி, அத்தையம்மாள் சொல்லிவிட்டுப் போயிருக்கிறுர்கள். ஆகையால் பாதகமில்லை. வந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று கூறிய வண்ணம்; தரையில் விரிக்கப்பட்டிருந்த பிரம்புப் பாயினண்டையில் தனதுவீணையை எடுத்து வைத்தாள். அவளது சொல்லைக்கேட்டு ஒருவாறு திருப்தி யடைந்த மதனகோபாலன், தயங்கித் தயங்கி அடக்க வொடுக்கமாக உள்ளே நுழைந்து வீணைக்கு இரண்டு மூன்று கஜதூரத்துக்கப்பால் உட்கார்ந்து கொள்ள, கண்மணியும் கீழே குனிந்தபடியே வீணையண்டையில் வந்து உட்கார்ந்துகொண்டாள். அவள் அழுததைக் கண்டமுதல் மதனகோபாலனது மனம் சரியான நிலைமையில் இருக்கவில்லை. அவளது துயரத்தின் காரணம் என்னவென்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்று அவனது மனம் துடித்துக்கொண்டிருந்ததேயன்றி, அவனது கவனம் சங்கீதத்தில் செல்லவே இல்லை. கண்மணியம்மாள் ஐந்து நிமிஷத்தில் தனது வீணைக்கு சுருதி கூட்டிவைத்தாள். அதன் பிறகு, அவன் எதைப் பாடச்சொல்லுகிறுனே அதை அவள் பாடுவது வழக்கமாதலால், அவன் சொல்லுவானென்று, கண்மணி எதிர்பார்த்து சிறிதுநேரம் மௌனமாக உட்கார்ந்து, வீணையின் கம்பிகளோடு விளையாடிக்கொண்டிருந்தாள்; தனது நினைவு முழுதையும் வேறு விஷயத்தில்வைத்து சிந்தனையிலாழ்ந்திருந்த மதனகோபாலன்

அவள் சுருதிகூட்டி தனக்காகக் காத்திருக்கிறாளென்பதை கவனியாமலிருந்தான். அவ்வாறு, கால்நாழிகை நேரம் கழிந்தது. அப்போது கண்மணி மிருதுவான குரலில், "சுருதி கூட்டியாய் விட்டது. என்ன பாடுகிறது?" என்றாள். அதைக்கேட்ட மதனகோபாலன், தூங்கி அப்போதே விழித்தவன்போல திடுக்கிட்டு அவளை நோக்கி "சரி; சுருதி கூட்டியாய் விட்டதா? அதை நான் கவனிக்கவில்லை. என்னுடைய நினைவு எங்கேயோ போய்விட்டது. கண்மணியம்மா! என்மனம் என்னவோ ஸகிக்கமுடியாத ஸஞ்சலமடைகிறது. பாட்டிலேயே என் புத்தி செல்லவில்லை. உனக்கு எதில் விருப்பமோ அதைப் பாடு" என்று கூற, அவனது கண்கள் மிகவும் கலங்க, கண்ணீர் சரசரவென்று கன்னங்களில் வழிந்தது. அவன் உடனே கீழே குனிந்து, தனது வஸ்திரத்தால் கண்களைத் துடைத்துக் கொண்டான். அதைக்கண்ட கண்மணி தணலில் வீழ்ந்த புழுவைப்போலத் துடித்தவளாய்க் கீழே குனிந்தவண்ணம் "உங்களுக்கு உடம்பு சரியாக இல்லாவிட்டால், பாடுவதை நாளைக்கு வைத்துக் கொள்வோமா, இன்றையதினம் பாட்டில்லாவிட்டால் பரவாயில்லை" என்று அன்போடு கூறினாள். அதைக்கேட்ட மதனகோபாலன், பொங்கியெழுந்த தனது மனவெழுச்சியை யடக்கிக்கொண்டு, "ஒரு நாளும் கண்ணும் கண்ணீருமாகக் காணப்படாத மனிதர் அழுவதைக் காணவே; என்னை யறியாமல், என் தேகம் தவித்துப்போய் விட்டது; மனமும் குழம்பிவிட்டது. என்னைக்கண்டு நீ எப்படி உன்னுடைய அழுகையை அடக்கிக் கொண்டாயோ, அதுபோல உன்னைக் கண்டவுடனே நானும் அழுகையை அடக்கிக்கொண்டேன். வேறு எவ்விதமான தேக அசௌக்கியமுமில்லை. எங்களைப்போல கீழ்நிலைமையி லிருப்பவர்களுக்குத்தான் துன்பங்களும் விசனங்களும் உண்டாவது ஸகஜம். உன்னைப்போல இருக்கும் பெரிய இடத்துக் குழந்தைகளுக்கு என்னகுறை இருக்கப்போகிறது என்பதும், நீங்களெல்லாம் ஏன் விசனப்படவேண்டும் என்பதும் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றன. அத்தையம்மாள் உன்னை அவர்களுடைய ஹிருதய கமலத்தில் வைத்து அவர்களுடைய உயிரைவிட அருமையாகப் பாதுகாத்து வருகிறார்கள். சகலமான சௌகரியங்களும், ஆடையாபரணங்களும் குறைவில்லாமல் நிறைந்திருக்கின்றன. நீ தக்க பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டு, பெருத்த சமஸ்தானத்துக்கு எஜமாட்டி ஆகப்போகிறாய்; எவருக்கும் கிட்டாத பெருத்த வைபவங்களும்

உன்னதபதவியும், உன்னுடைய வழிபார்த்து நிற்கையில், நீ இப்படி விசனித்தழுவதைக் காண, எனக்கு இது கனவோ அல்லது நனவோ என்ற சந்தேகம் உண்டாகிறது.'' என்று மிகவும் உருக்கமாகவும், மனப்பூர்வமான வாத்ஸல்யத்தோடும் கூறவே, அதைக்கேட்ட கண் மணியம்மாள் நாணத்தினால் கீழே குனிந்துகொண்டாள். அவளது மனதில் மறைந்திருந்த பெருந்துயரமும், பலவகையான உணர்ச்சிகளும் பொங்கியெழுந்து அவளை மேற்கொண்டன; அவளது கண்களில் திரும்பவும் கண்ணீர் பெருகி வழிந்தது. மிகவும் மூர்க்கமாகக் கிளம்பிய தனது துயரத்தை அடக்கமாட்டாமல் அவள் தன்னை முற்றிலும் மறந்தவளாய்க் கோவெனக் கதறி யழுதுவிட்டாள். மதன கோபாலன் அவளது பரிதாபகரமான நிலைமையைக்காண ஸகியாதவனாய் தனது வஸ்திரத்தால், முகத்தை மூடியவண்ணம் தனது சங்கடத்தை மறைத்துக்கொண்டான்; அப்படி கால்நாழிகை நேரம் கழிந்தது. அதற்குள் தனது மனவெழுச்சியை யடக்கிக்கொண்ட மதனகோபாலன் அவளை நிரம்பவும் மரியாதையாகவும் பணிவாகவும் நோக்கி, "அம்மா! குழந்தாய்! என்ன நடந்தது? ஏன் விசனப்படுகிறாய்? எவராகிலும் உனக்கு ஏதேனும் துன்பம் செய்தார்களா? அல்லது, உடம்பில் அசௌக்கியம் ஏதேனும் உண்டா? அது என்னிடம் தெரிவிக்கக்கூடியதா யிருந்தால் வெளியிடம்மா! உன்னுடைய விசனத்தை ஒழிக்க, என்னால் ஏதேனும் உதவி ஆகக்கூடியதாயிருந்தால் அதைச் செய்கிறேன்'' என்று நிரம்ப உருக்கமாகவும் அன்போடும் கூற, அதற்குள் தனது துக்கத்தை அடக்கிக்கொண்ட கண்மணியம்மாள் தரையை நோக்கியவண்ணம், "பெரிய மனிதருக்கு என்ன துயரம் இருக்கப்போகிறது என்று கேட்டீர்களே, எல்லா விஷயத்திலும் மகா புத்திமானாகிய உங்களுக்குக்கூட இந்த விஷயத்தில் உண்மை தெரியாமல் போனது ஆச்சரியமாக இருக்கிறது. இந்த விஷயம் உங்களுக்குத் தெரியவில்லையென்று நினைக்க முடியாது. என்னைத் தேற்றுவதற்கு ஏதாவது சொல்லவேண்டுமல்லவா; அதற்காக இப்படிப் பேசி இருக்கலாம். பணக்காரர் என்று சொல்லப்படுவோருக்கே துன்பங்களும் துக்கங்களும் அதிகமின்றி சாதாரண ஜனங்களுக்கு அவ்வளவில்லை யென்றே சொல்லவேண்டும். உலகத்தில் பணமும், நிலமும், ஆடையாபரணங்களும் ஏராளமாக இருப்பதுதானா செல்வம்? செல்வமென்பது சிந்தையின் அமைதியல்லவா? அந்த திருப்திச் செல்வம் உண்மையில் எவர்க

களிடத்திலிருக்கிறதோ, அவர்களே உண்மையில் செல்வந்தர்கள். சாதாரண மனிதர் சுலபத்தில் திருப்தியடைந்து விடுகிறார்கள். பெரிய மனிதருக்கோ, அவரது பொருள்கள் பெருகப்பெருக அவர்களது அதிருப்தியும் பேரவாவும் அதனால் துன்பங்களும் துயரங்களும் பெருகிக் கொண்டே போகின்றன. பணத்தை அதிக மாகப் படைத்தவர்கள் என்ன செய்வார்கள்? அதைச் செலவு செய்து அழகான வாசஸ்தானம் ஏற்படுத்திக்கொள்வார்கள்; தங்களுடைய உடம்பை செழுமையாக ஊட்டி வளர்த்து அதற்கு மினுக்கேற்றிக் கொள்ளுவார்கள்; உயர்வான ஆடையாபரணங்களை வாங்கி யணிந்து அழகு படுத்திக்கொள்ளுவார்கள்; வெளித்தோற்றமான காரியங்களி லேதான், பெரியமனிதர் பெரியமனிதராக இருக்கிறார்கள். சாதாரண மனிதர், தங்களுக்கு வெளிப்பகட்டில்லாமையால், பிறர் தம்மை அலட்சியம் செய்து விடுவார்களோ வென்ற நினைவினால், நற்குணம், நல்லொழுக்கம், அடக்கம், ஒடுக்கம், பணிவு, நீதிநெறி தவறாமை முதலிய இணையற்ற ஆபரணங்களை அணிந்திருக்கிறார்கள். பணக் காரரிடம் ராஜஸ, தாமஸ குணங்கள் அதிகமாக இருக்கின்றன. சாதாரண மனிதரிடம் சாத்வீகதுணம் நிரம்பி இருக்கிறது. செல்வம் எவ்விடத்தில் அதிகமாக இருக்கிறதோ, அங்கே தானென்ற ஆணவ மும் செருக்கும் துர்குணங்களும் வந்து குடிகொள்ளுகின்றன. ஏழ்மைத்தனமுள்ள இடத்தில் அடக்கமும், தீயசெயல்களுக்கு அஞ்சுதலும் இருக்கின்றன. ஆகையால், பெரிய இடத்தில் வந்து பெண்ணாகப் பிறந்து விட்டோமே என்ற துயரமே பெருத்த துயர மாக என்னை வதைக்கிறது'' என்று கூறி நெடுமுச் செறிந்தாள். அதைக் கேட்ட மதனகோபாலன், 'குழந்தாய்! நீ இதுவரையில் அதிருப்தியான வார்த்தை ஒன்றுகூடச் சொன்னதை நான் கேட்ட தில்லை. அப்படிப்பட்ட நீ இவ்வளவு கசப்பான வார்த்தைகளையும் விரக்தியான சங்கதிகளையும் எடுத்துச்சொன்னது எனக்கு நிரம்ப வும் ஆச்சரியமாக இருக்கிறது. இன்ன காரணத்தினால் உன் மனம் இப்படி மாறி இருக்கிறதென்பது தெரியவில்லையே! நீ இனிமேல் இல்லறவாழ்க்கையில் புகுந்து அபாரமான வைபவங்களோடு சுவர்க்க போக மநுபவித்திருக்க வேண்டிய காலம் சமீபித்திருக்கையில், நீ இப்படி விரக்திகொண்டிருப்பது, உன்னுடைய இன்பகரமான வாழ்க்கைக்கு ஒரு பெருத்த இடையூறு ஆகிவிடுமே'' என்றான்.

அதைக்கேட்டவுடனே கண்மணியம்மாளது வதனம் முன்னி லும் அதிகமாக வாட்டமடைந்தது; கண்கள் கலங்கின; அவள் திரும் பவும் விரக்தியாகப் பேசத்தொடங்கி, "என்ன இல்லற வாழ்க்கை! என்ன வைபவங்கள்" என்னுடைய அதிஷ்டம் யாருக்கு வரும்! பெண்ணாய்ப் பிறந்தாலும் என்னைப் போலத்தான் பிறக்கவேண்டும்; தாய் தகப்பனில்லாத அநாதைகளெல்லாம் உயிரைவைத்திருப்பதே கூடாது. நாங்கள் கண் கலங்கி அழுதால், தாய் அதை ஒரு நொடி யும் ஸகித்திருக்கமாட்டாள். குழந்தைகளின் அந்தரங்கமான ஆசை களைப் பூர்த்தி செய்வதிலும், குழந்தைகளை தக்க இடத்தில் கொடுத்து க்ஷேமமாக வைப்பதிலும், தாய் தகப்பன்மாருக்கு இருக் கும் உண்மையான அக்கரையும் உருக்கமும் பகுத்தறிவும் மற்றவ ருக்கு இருக்குமா! அவர்கள் மாத்திரம் உயிரோடிருந்தால், இந்த மாரமங்கலத்தாருடைய முகத்தில் கூட விழிக்கமாட்டார்கள்; அடக்கு வோரான ஆண்பிள்ளையில்லாமல் இருபது வருஷமாக அந்தக்குடும் பம் சீர்குலைந்துகிடக்கிறது. தாய்க்கும் பிள்ளைக்குமே ஒத்துகொள்ளு கிறதில்லை. ஒருவர் போனவழி மற்றொருவர் போகிறதில்லை. தாய் ஒருவிதத்தில் கெட்டவளாக இருந்தால், பெண் நூறுவிதத்தில் கெட்டவளாக இருக்கிறாள். பிள்ளையோ ஆயிரம் விதத்தில் கெடுதலா யிருக்கிறார். ஒவ்வொருவரும் தாமே அரசு, தமது சித்தமே மந்திரி யென்றெண்ணி, தாம் தாம் நினைத்த காரியங்களை எவ்வித அச்சமு மின்றிச் செய்கின்றனர். எப்போது பார்த்தாலும் ஒருவருக்கொருவர் சண்டையும் சச்சரவும் மனஸ்தாபமும் வேற்றுமையுமாகவே இருக் கின்றன. அந்த மனிதருக்கிடையில், நான் போய் இல்லற வாழ்க்கை செய்து வைபவங்களை அநுபவிக்கப் போகிறேனோ, அல்லது புலி கரடிகள் நிறைந்த கூண்டிற்குள்ளிருந்து ஸதாகாலமும் நரகவேதனை அநுபவிக்கப் போகிறேனோ! அல்லது, அதற்குள் ஏதாவது ஒரு கிணற்றில் விழுந்து உயிரை விட்டு உண்மையான ஆநந்த மநுபவிக்கப் போகிறேனோ என் தலைவிதி எப்படி முடியப்போகிறதோ அநேகமாக கடைசியில் சொன்ன முடிவுதான் எனக்கு சமீபத்தில் ஏற்பட்டு விடுமென்று என் மனசுக்குள் ஓர் எண்ணம் உண்டாகிக்கொண்டே இருக்கிறது" என்று மிகவும் மனமாழ்கிக் கூற, அவ்ளது பரிதாப கரமான சொற்களைக்கேட்ட மதனகோபாலனது மனம் அனலிடு மெழுகாய் உருகி உட்கார்ந்தது. அவன் மாரமங்கலம் ஜெமீந்தாரது மாளிகையில் துரைஸானி அம்மாளுக்கும் கோமளவல்லி அம்மா

ளுக்கும் ஒவ்வொரு நாளும் வீணை கற்றுக்கொடுத்து விட்டு வருபவ ஞனுலும், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மனிதரது குணதிசயங் களைப்பற்றி நன்ருக அறியாதவனுகையால், கண்மணியம்மாள் கூறிய விஷயங்கள் அவனுக்கு நிரம்பவும் ஆச்சரியகரமாக இருந்தன. அவர் கள் அப்படிப்பட்ட துஷ்டர்களா என்று நினைத்து அவன் பெரிதும் திகைப்படைந்தான். கண்மணியம்மாள் சரியான காரணமின்றி, வீணுகத் துயரப்படுகிருளென்று முதலில் நினைத்த மதனகோபா லன், அந்தப் பெண்மணி ஆருத்துயரத்தில் ஆழ்ந்ததற்குத் தக்க முகாந்திரமிருப்பதாக அப்போது நினைத்து அவளது விஷயத்தில் பெரிதும் இரக்கம் கொண்டான். மகா ரூபலாவண்ணியமும் அருமை யான குணங்களும் வாய்ந்த கபடமற்ற அந்தப் பெண்மணியின் பிற் கால வாழ்வு மிகவும் துன்பகரமானதாக இருக்குமென்பதை யுணர வே அவனது தேகம் பதறியது. ஆவேசம் பொங்கி யெழுந்தது. அவள் தனது விரக்தியில் என்றைக்காகிலும் கிணற்றில் வீழ்ந்து தனது உயிரை மாய்த்துக் கொள்வாளோ என்ற அச்சமும் கவலையும் கொண்டவனுய், "குழந்தாய்! நீ மகா விவேகி என்பதை நான் நெடு நாளாக அறிவேன். நீ எதைச்செய்தாலும் கொஞ்சமும் ஆத்திரப் படாமல், பொறுமையாக நிதானித்துச் செய்கிற உத்தம குண முடையவளென்பதையும் நான் கண்டுகொண்டேன். அப்படி இருக்க, கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொள்ளப் போகிறே னென்ற வார்த்தை உன்னுடைய வாயிலிருந்து வரத் தக்கதல்ல. கேவலம் மூட ஸ்திரீகளே அப்படிச் சொல்ல நான் கேள்வியுற்றிருக்கிறேன். இப்படிப்பட்ட எண்ணத்தைக் கொள்ள, மகா கண்ணியம் பொருந் திய உன் மனம் எப்படி இடங்கொடுத்த தென்பது எனக்கே ஆச் சரியமாக இருக்கிறது. உனக்கு அந்த இடத்தில் வாழ்க்கைப்பட மனமில்லாவிட்டால், உன்னுடைய எண்ணத்தை, தக்க முகாந்திரங்க ளோடு அத்தையம்மாளிடம் துணிவாக நீ எடுத்துச் சொன்னல் அவர்கள் அதைக் கேட்கமாட்டேனென்று சொல்லக் கூடியவர்க ளல்ல. நான் பார்த்த வரையில், அவர்கள் உன்னுடைய க்ஷேமத்தி லேயே கண்ணும் கருத்துமாயுள்ளவர்க ளென்றே நினைக்கிறேன். கிளியை வளர்த்துப் பூனைக்கு இரையாக்குவதுபோல, தமது சொந்தக் குழந்தையாக மதித்து அரும்பாடுபட்டு மிகவும் செல்வமாக வளர்க் கும் உன்னை விசனக் கடலில் ஆழ்த்த அவர்கள் ஒருநாளும் சம்மதப் பட மாட்டார்கள். விஷயங்களை எடுத்துச் சொல்ல நீ ஒருகால் லஜ்

ஜைப் படலாம். இந்த விஷயம் உன்னுடைய ஆயுள் காலமெல்லாம் பாதிக்கக் கூடிய பெருத்த விஷயம். ஆகையால், நீ துணிந்து இந்த விவரங்களை எடுத்து அத்தையம்மாளிடம் தெரிவிப்பது மிகவும் அவசியமென்று நான் நினைக்கிறேன். அப்படிச் செய் அம்மா!" என்று அன்பொழுகவும் நயமாகவும் அவளது மனதில் படியும்படியாகவும் கூறினான்.

அதைக்கேட்ட கண்மணியம்மாள் அசட்டுநகை நகைத்தவளாய் "நான் அத்தையம்மாளிடம் சொல்லவேண்டியது ஒன்றும் பாக்கி இல்லை; அதெல்லாம் செவிடன் காதில் சங்கை ஊதின மாதிரி ஆகி விட்டது. அவர்களெல்லாம் பெரிய மனுஷத்தனத்திலேயே இருந் திருந்து, அதன் சுகங்களைப் பார்த்தவர்கள். ஆகையால் ஒருவருக் கொருவர் பிரியமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒற்றுமையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவைகள் பொருட்டல்ல; பணமே பிரதானம். எங்களுக்கு அதிகமான ஆஸ்தி இல்லையாம் ஆகையால் என்னை மாரமங்கலம் ஜெமீந்தாரினி ஆக்கப்போகிறார்களாம். மற்ற வர்கள் எப்படியாவது போகட்டுமாம். என்னுடைய புருஷன் எப் படியும் நாளடைவில் சரிப்பட்டு, என் சொற்படி அடங்கி ஒழுங்கான வழிக்கு வந்துவிடுவாராம். பெண்கள் இருவரும் எவரையாவது கட்டிக்கொண்டு அதிசீக்கிரத்தில் வேறிடங்களுக்குப் போய்விடக் கூடியவர்களாம். கல்யாணியம்மாள் பெண்களுடைய வீட்டுக்கு மாறி மாறிப் போய்விடுவார்களாம்; அல்லது அவர்கள் தனியாக அரண்மனையில் இருந்தாலும், அவ்வளவு துஷ்டத்தனத்தைக் காண் பிக்க மாட்டார்களாம். இம்மாதிரி அத்தையம்மாள் சொல்லுகிறார் கள்." என்றாள். அதைக்கேட்ட மதனகோபாலன் சிறிது ஆழ்ந்து யோசனை செய்தபின், "சரிதான். அவர்கள் சொல்லுவதும் நியாய மாகத்தான் இருக்கிறது. பெண்கள் இருவரும் சீக்கிரத்தில் வெளி யேறக்கூடியவர்கள் தானே! அவர்கள் போய்விட்டால், அப்புறம் என்ன துன்பமிருக்கப் போகிறது?" என்று நயமாகக் கூறினான்.

அதைக்கேட்ட கண்மணியம்மாள், "எனக்கு அந்தப்பெண்களைப் பற்றி அதிகமாகக் கவலை இல்லை. அவர்களுடைய தாயின் வீட்டுக்கு அவர்கள் வரவும், சுகப்படவும் கூடாதென்று யார்தான் சொல்லமுடி யும்? அப்படிச் சொல்வதும் நியாயமல்ல. கல்யாணியம்மாள் கிழவி யல்ல; யௌவனப் பருவமுடையவர்கள். அவர்கள் ஏக சக்ராதி

[library stamp]

பதியாக இருக்கிறார்கள். அவர்களுடைய அதிகாரமும் அட்டகாச மும் நீடித்து நிற்கக்கூடியவை. தவிர, பெண்கள் பெருத்த செல்வ வந்தர் வீட்டுப்பெண்களாகையால் தங்களுடைய புருஷர் வீட்டில் மூன்று நாளிருந்தால், தாய்வீட்டில் முன்னூறு நாள்கள் இருக்கக் கூடியவர்கள். அப்படி இருந்தாலும், அவர்கள் மூவரைப் பற்றியும் எனக்கு அவ்வளவாகக் கவலையில்லை. எனக்கு வாழ்க்கைத்துணை யாக வரப்போகும் சிமோனுடைய குணமும், காரியங்களும், அவரது மனப்போக்கும், வார்த்தைகளும் கொஞ்சமும் ஸகிக்கத்தகாதன வாக இருக்கின்றன. அவர் இந்த பங்களாவில் வந்து இரண்டு மூன்று வருஷகாலமாகப் பழகி வருகிறார். என்னுடைய அண்ண னோடு அவர் செய்யும் யோசனைகளும், பேசும் வார்த்தைகளும், கன்னகடூரமாக இருக்கின்றன, எங்களுக்குத் தெரியாமல் மிகவும் ரகசியமாகப் பேசுவதாக அவர்கள் நினைத்திருக்கிறார்கள். இரவு பக லாக அவர்கள் செய்யும் சதியாலோசனை யெல்லாம் எங்களுடைய காதில் படுகின்றன. இந்த உலகத்தில், அவர்களிருவரும் பார்க் காத தாசிகள் இல்லை. இப்போது மோகனாங்கி யென்று ஒரு நாடகக்காரி வந்திருக்கிறாளாம். அவள் எங்கேயோ ஆலந்தூருக்குப் பக்கத்தில் இருக்கிறாளாம். அவள் எவரையும் சேர்ப்பதில்லையாம். அவளோடு எப்படியாவது சிநேகம் செய்துகொள்ள வேண்டுமென்று உறுதி செய்துகொண்டு மைனர்துரை இன்று ஆலந்தூர்ப்பக்கம் போயிருக்கிறார்; இதே நேரத்தில் அவர் அந்த மோகனாங்கி யிடத் தில் சந்தோஷமாக சம்பாஷித்துக் கொண்டிருந்தாலும் இருக்கலாம்'' என்றாள். அப்போது அவளது மனதில் பொங்கி யெழுந்த உணர்ச்சிகளை அவளது அழகிய வதனம் நன்றாகத் தெரிவித்தது. அவளது சொல்லைக்கேட்ட மதனகோபாலனது முகம் சடக்கென்று மாறி வியப்பையும் திகைப்பையும் காட்டியது. அவன் "என்ன ஆச் சரியம்! அவர் நிரம்பவும் நல்ல குணமுடையவ ரென்றல்லவா நான் இதுவரையில் நினைத்திருந்தேன்! அடடா! அவர் இப்படிப்பட்ட மனிதரா? இந்த விஷயங்களுக்கு உன் தமையனார் எப்படி இடங் கொடுக்கிறார்? இந்த துர்நடத்தை யெல்லாம் அத்தையம்மாளுக்குத் தெரியுமா? சங்கதிகளைக் கேட்க கேட்க, எனக்கு நிரம்பவும் கஷ்ட மாக இருக்கிறதே'' என்று பெரிதும் ஸஞ்சலத்தோடு கூறினான்.

உடனே கண்மணியம்மாள், 'ஒரு குளைச் செங்கலும் பிடாரிகள்'' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள், அதுபோல, யாராவது

ஒருவர் யோக்யராக இருந்தால், அவர் இந்த நடத்தையைக் கண்டிக்க சாத்தியப்படும். என்னுடைய தமயனாரே அவரைக் கூட்டியனுப்பும்போது அவரிடம் நான் முறையிட்டுக்கொள்வது கசாப்புக்காரனிடம் ஆடுகள் முறையிடுவது போன்றதுதான். அவர்கள் இந்த விஷயமாகப் பேசிக்கொண்டிருந்த பல சமயங்களிலும் நான் அத்தையம்மாளிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களும் அந்த சம்பாஷணைகளைக் கவனித்திருக்கிறார்கள். கவனித்தும், அவர்கள் எனக்கே புத்திமதி சொல்லிவிட்டுப் பேசாமலிருந்து விடுகிறார்கள். இந்தக் கலியுகத்தில் ஏகபத்தினி விரதமுடைய மனிதனே இருக்கமாட்டானும். இவரை விட்டு வேறொரு யௌவனப் புருஷரை கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்தால், அவர் வெளிப்பார்வைக்கு யோக்கியராக இருப்பாராம். அவரோடு நெருங்கிப்பழகினால், அவரும் ஸ்திரீ விஷயத்தில் வரம்பில் நிற்பவராக இருக்க மாட்டாராம். தவிர, பெரிய சமஸ்தானத்துப் பிள்ளைகளெல்லாம் இப்படித்தான் இருப்பார்களாம். பெண்டுகள் அதை கவனிக்கக் கூடாதாம். கலியாணத்துக்கு முன், மைனர் துரை ஓடியாடிக் கெட்டலைந்து எல்லா சுகங்களையும் பார்த்துவிடுவதே நல்லதாம். ஏனென்றால், அதன்பிறகு அவருடைய மனசு வெளியில் செல்லாதாம். அப்போது அவர் என்னிடத்திலேயே உறுதியாக இருந்து விடுவாராம்; அத்தையம்மாள் தங்களுக்குத் தெரிந்த ஏதோ ஒரு நியாயத்தைச் சொல்லுகிறார்கள். அது என் மனசுக்குத் திருப்தி யுண்டாக்கவில்லை. இத்தனை வருஷகாலமாக இந்த பங்களாவில் பழகும் ஒரு மனிதரிடத்தில் எனக்கு ஓர் அணுவளவும் பிரியமும் மதிப்பும் உண்டாகாதிருந்தால் அது யாருடைய குற்றமென்று சொல்லுகிறது? நெடு நாளாக வாசலில் காத்திருக்கும் கேவலம் ஒரு நாயைக் கண்டால், அது நம்மோடு நெடுங்காலம் பழகிய ஜீவன் என்னும் ஓர் அன்பு நம்முடைய மனதில் உண்டாகிறது. அப்படி இருக்க, இத்தனை வருஷகாலம் பழகிய அவரைக் காண்பது விஷம்போல இருந்தால், அவரை மணந்து என்னுடைய ஆயுள்காலம் முழுதும், அவரோடு நான் கூடி எப்படி வாழ்ந்து என்னவிதமான சந்தோஷத்தை அடையப் போகிறேன்! வீட்டின் தலைவர்களா யிருப்பவர்கள் சிறியவர்கள் தமக்குள் அடங்கியவர்கள் என்னும் எண்ணத்தினால் பணம் ஒன்றையேகருதி இப்படிப்பட்ட பெருத்த அக்கிரமமான காரியத்தில் இறங்கி அவர்களை ஸகிக்க முடியாத இம்சைக்கு ஆளாக்குவார்களானால், அதைக்கேட்க

வேறே யார் இருக்கிறார்கள் ? தனிமையில் அழுது அழுது, கடைசியில் தற்கொலை செய்து கொள்வதே அதற்கு மருந்து'' என்று மிகவும் விசனமாகக் கூறினாள். அவளது பரிதாபகரமான சொற்களைக் கேட்ட மதனகோபாலன் அதற்குமேல் ஒரு வார்த்தையும் சொல்ல மாட்டாமல் சிறிது நேரம் தத்தளித்து மௌனமாக விருந்த பிறகு, “குழந்தாய்! கண்மணியம்மா! நீ மகா படிப்பாளி; உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. கடவுள் சர்வக்ஞன்; உலகில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் அவன் நன்றாக கவனித்துக்கொண்டே இருக்கிறான். அவன் துஷ்டனுக்கு தண்டனையும், சிஷ்டனுக்கு வெகுமதியும் தவறாமல் செய்து வைத்து விடுகிறான். கடவுளுடைய ராஜ்ய பரிபாலனத்தில், அக்கிரமம் என்பதே கிடையாது. அப்படி இருக்க, யாதொரு குற்றமுமற்ற புண்ணியவதியான உன்னை கடவுள் அக்கிரமமாக இம்சிக்கவே மாட்டார். இந்தக் கலியாணத்துக்கு இன்னம் ஒரு வருஷகாலத்துக்குமே லிருக்கிறது. அதற்குள் என்னென்ன விஷயங்கள் நேருமோ! என்னென்ன மாறுபாடுகள் உண்டாகுமோ! அதை எப்படி நாம் அறியக்கூடும். அடுத்த நிமிஷத்தில் இன்ன காரியம் நடக்குமென்பது நமக்குத் தெரியவில்லை. ஆகையால், நீ இதை நினைத்து வீணில் வருந்தாமல் பொறுமையோடிரு; தற்கொலை யென்னும் சங்கதியை மறந்துவிடு; இந்த உயிரை விலக்கவும் நிற்க வைக்கவும் நாம் அதிகாரியல்ல; ஒருவன் சாகவேண்டுமென்ற விதியிருந்தால். ஆயிரம்பேர் தடுத்தாலும், அவனுடைய உயிரைக் காப்பாற்ற முடியாது; அவன் பிழைத்திருக்க வேண்டுமென்பது விதியானால், அவன் எவ்வளவு தூரம் முயன்றாலும் அவனுடைய உயிர் நீங்காது. ஆகையால், அந்த நினைவை மாத்திரம் ஒதுக்கிவிடு. இந்த மாரமங்கலம் மைனரே, அவர் போகுமிடத்தில் ஏற்படும் பலவகையான துன்பங்களினால், நல்ல புத்தியடைந்து, ஒரு நொடியில் புதிய மனிதராக மாறிவிடலாம். நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுதலடைந்து கொண்டிருக்கும் இந்த உலகத்தில் எதுதான் நடக்கக்கூடாத அசாத்தியமான காரியம்?'' என்று மிகுந்த அன்போடும் உருக்கமாகவும் கூற, அதைக்கேட்ட கண்மணியம்மாள் கலங்கிக் கண்ணீர் சொரிந்த வண்ணம், “இந்த உடம்பு அழிந்து சாம்பலானால் கூட, அந்தச் சாம்பலைத் தீண்டுவதற்கும் இந்த மைனரை நான் விடமாட்டேன். அவருக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இதுவரை கிடையாது. இனியும் ஏற்படாதென்பது

உறுதி; என் மனதையும் உயிரையும் கொள்ளைக் கொண்ட சுந்தர புருஷர் எனக்குக் கிடைப்பாராகில், அதைவிட மேலான சாயுஜ்ய பதவி வேறொன்றுமில்லை. அவர் கிடைக்காவிட்டால், வேறொருவர் தொட்டு இந்தக் கழுத்தில் தாலி கட்டுவதற்குமுன் இந்த உடம்பு பிணமாகவே இருக்கும்.'' என்று, தன்னை முற்றிலும் மறந்து ஆவேசங் கொண்டவள்போல மொழிந்தாள்.

அந்த மொழியைக் கேட்ட மதனகோபாலன், பெரிதும் திகைப்படைந்து, அவளால் காதலிக்கப்படும் பாக்கியம் பெற்ற புருஷ உத்தமன் யாவனாயிருப்பான் என்று சிந்தனை செய்தவனாய் ஐந்து நிமிஷ நேரம் பேசாதிருந்து, "அப்படியானால் ஈசுவரனுடைய கிருபை உனக்குப் பூரணமாக ஏற்படும். அந்தப் புருஷர் எந்த ஊரிலிருக்கிறாரோ?'' என்றான்.

அதைக் கேட்ட கண்மணி பெரிதும் நாணமடைந்தாளானாலும் தனது ஆவேசத்தில் தன்னை முற்றிலும் மறந்தவளாய், "அந்தப் புருஷ சிங்கம் இங்கேதானிருக்கிறார். அவரை அடையாவிட்டால் நான் ஒரு நிமிஷமும் உயிர்வாழப் போகிறதில்லை என்பது பிரமாணமான வார்த்தை; ஆனால் அவருடைய மனம் என் விஷயத்தில் எப்படி இருக்கிறதோ வென்பது தெரியவில்லை. யாராவது அதை அறிந்து சொல்வார்களானால், அந்தப் பேருதவியை நான் என்னுடைய உயிருள்ளவரையில் மறக்கமாட்டேன்'' என்றாள்.

அதைக் கேட்ட மதனகோபாலன் சிறிது தயங்கியபின், "நீ உயர்வான மனப்போக்கையுடைய பேதையாகையால், நீ விரும்பும் புருஷன் எல்லா விஷயங்களிலும் மேம்பட்டவராகவே இருப்பாரென்பதைப் பற்றிக் கொஞ்சமும் சந்தேகமில்லை. அவர் யாரென்பதை என்னிடம் தெரிவிக்கலாமென்ற நம்பிக்கை உன் மனதில் ஏற்படுமானால், நீ விவரத்தைத் தெரிவிக்கலாம். இந்த விஷயத்தில் என்னால் இயன்ற உதவியைச் செய்ய நான் ஆயத்தமாக இருக்கிறேன்'' என்றான்;

அந்த சமயத்தில் வாசற்பக்கத்தில் திடீரென்று தோன்றிய மீனாக்ஷியம்மாள் மிகுந்த கோபத்தோடு கண்மணியையும், மதனகோபாலனையும் கூர்ந்து நோக்கி, "ஓஹோ! காரியம் இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டதா! அடே மதனகோபாலா! எழுந்திருந்து வெளியில் போ: உனக்குச் சேரவேண்டிய சம்பளத்தை சேவகனிடம்

கொடுத்தனுப்பி விடுகிறேன். இனிமேல் நீ இந்த பங்களாவுக்குள் அடிவைக்கக்கூடாது. பெண் உன்னிடம் வீணை கற்றுக்கொண்டதும் போதும். நீ அவளுக்குத் தரகுபோனதும் போதும்; எழுந்திரு'' என்று கண்டித்துக் கூறிக் கூச்சலிட அடுத்த நிமிஷம் துரைராஜாவும் அங்கே வந்து சேர்ந்தான்.

BOOK LOVER CIRCULATING LIBRARY Bng-21 Bng-2A

## 8-ம் அதிகாரம்

## விந்தையும் நிந்தையும்

மீனாக்ஷியம்மாளது எதிர்பாராத கொடிய சொற்களைக் கேட்ட மதனகோபாலன் திடுக்கிட்டு வியப்பும் திகைப்பும் அச்சமும் அடைந்தவனாய் சரேலென்று எழுந்து நின்று, அவர்களுக்கு என்ன மறுமொழி கூறுவதென்பதை யுணராமல் தயங்கித் தலைகுனிந்து சிறிதுநேரம் மௌனமாக நின்றான்; அதற்குள் அவனது மனதில் சிறிதளவு துணிபு ஏற்பட்டது. அவன் தனது சிரத்தை மெல்ல உயர்த்தி மீனாக்ஷியம்மாளை நோக்கிப் பணிவாக, "அம்மணி! மிகவும் பொறுமையோடு எந்தக் காரியத்தையும் செய்யக் கூடிய தாங்கள், இப்படிக் கோபித்துக் கொண்டது அபூர்வமாக இருக்கிறது! இது என்னுடைய பொல்லாத வேளையின் பலனென்றே நினைக்கிறேன் நானாகிலும் கண்மணியம்மாளாகிலும் எவ்விதமான தவறையும் செய்யவில்லை யென்பதை தாங்கள் நிச்சயமாக நம்பலாம். நான் வந்தபோது, கண்மணியம்மாள் அழுதுகொண்டிருந்ததைக் கண்டேன்; அது முற்றிலும் புதுமையான காரியமாக இருந்ததாகை யால், அதன் காரணமென்னவென்று நான் கேட்டேன்; கண்மணி யம்மாளுக்குத் தாங்கள் பார்த்திருக்கும் பர்த்தா துர்நடத்தை யுடை யவரென்றும், அவரைக்கட்டிக்கொள்ளத் தனக்குப் பிரியமில்லை யென்றும். ஆனால் தாங்கள் அவரையே கட்டிக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்துவதாகவும் சொல்ல, அதற்கு நான் சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் தாங்கள் வந்தீர்கள். இதில், தாங்கள் என்மேல் கோபித்துக் கொள்ளும்படியான தவறு என்ன இருக்கிறது?'' என்று விநயமாகக் கூறினான்.

அதைக் கேட்ட மீனாக்ஷியம்மாளது கோபம் முன்னிலும் அதி கரித்தது; அவள் அவனை முறைப்பாக நோக்கி, "ஓகோ! அப்படியா!

அவள் அழுதுகொண்டிருந்தால், இருந்துவிட்டுப் போகிறாள். அவளுக்கு சமாதானம் சொல்ல உன்னை யார் அழைத்தது ? உன்னுடைய வேலை வீணை கற்றுக் கொடுப்பது ; அதை விட்டு அவளுடைய கலியாணப் பேச்சில் நீ ஏன் தலையிடுகிறாய் ? நீங்கள் பேசியதை நான் கவனிக்கவில்லை யென்று நினைத்துக் கொண்டாயா ? இவள் வேறொருவன் மேல் ஆசை வைத்திருப்பதாகச் சொன்னாள். அவனுடைய பெயரைச் சொன்னால், அந்த விஷயத்தில் உன்னாலான உதவியைச் செய்வதாக நீ சொன்னாயே ; அதன் கருத்தென்ன ? எங்களுடைய மனதுக்கு விரோதமாக இவளுடைய கலியாணத்தை நிறவேற்றி வைக்க நீ உடந்தையாக இருப்பா யென்றல்லவா ஏற்படுகிறது ; எங்களுக்கு விரோதமான ஒரு விஷயத்தைச் செய்யக்கூடிய மனிதனாகிய உன்னை இந்த பங்களாவிலேயே சேர்ப்பது பிசகு. உங்களிருவரையும் தனியாகப் பேசவிட்டதே முதல் தவறு. இந்த விஷயத்தைப்பற்றி உன்னோடு அதிகமாக வாக்குவாதம் செய்ய எனக்கு இஷ்டமில்லை. நீ போகலாம். உன்னுடைய சமாதானம் எனக்குத் தேவை இல்லை," என்று கண்டிப்பாகக் கூறினாள்,

அதைக்கேட்ட மதனகோபாலன் அவமானத்தில் குன்றிப் போனானாலும், பணிவாக ஏதோ மறுமொழி கூற வாயைத் திறந்தான். அதற்குள், துரைராஜா மிகவும் மூர்க்கமாக அவனை முறைத்துப் பார்த்து, "அடே ! போ ஓய் வெளியிலே ; உன்னுடைய சமாதானம் யாருக்கு வேண்டும் ; மறுபேச்சுப் பேசாமல் மரியாதையாகப் போகிறாயா ? அல்லது, வேலைக்காரனைக் கூப்பிடட்டுமா ?" என்று மிகவும் அதட்டிக் கூற, அதைக் கேட்ட மதனகோபாலன் ஸகிக்க இயலாத சஞ்சலமடைந்தவனாய் வாசலை நோக்கி நடந்த வண்ணம் புன்னகையும் துன்பமும் பிரகாசித்த முகத்தோடு, "சரி ! உங்களிஷ்டம். இதோ போய்விடுகிறேன். கோபிக்க வேண்டாம். என்னுடைய சொந்தத் தங்கையைப் போல மிகவும் வாத்ஸல்யத்தோடு இதுவரையில் நான் பாராட்டி வந்த குழந்தை துயரப்பட்டு அழுகிறதைக் கண்டு சகியாமல், அதை சமாதானப் படுத்துவதற்கு ஏதோ எனக்குத் தெரிந்த இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லிவிட்டேன். அதில் ஏதாகிலும் பிழை இருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒரு விஷயம் நான் வெளியிட விரும்புகிறேன். இந்த விசனத்தைப் பொறுக்க மாட்டாமல் குழந்தை கிணற்றில் குளத்தில் விழுந்து தன்

னுடைய உயிருக்கே தீங்கு செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் வைத்திருக்கிறதாகத் தெரிகிறது. குழந்தையை சமாதானப் படுத்துங்கள்'' என்று அந்தரங்கமான அபிமானத்தோடு கூறிவிட்டு அப்பால் போய் மெத்தையிலிருந்து கீழே இறங்கி பங்களாவிற்கு வெளியில் போய்விட்டான்.

கீழே தாழ்த்தப்பட்ட சிரத்தோடு சித்திரப் பதுமைபோல அசைவற்று அதுவரையில் உட்கார்ந்திருந்த கண்மணியம்மாளை மீனாக்ஷியம்மாள் கோபத்தோடு பார்த்து, "ஓகோ! கிணற்றில் விழப் போகிறாயோ! நான் உன் விஷயத்தில் பட்டபாடுகளுக்கெல்லாம் இதுதான் நீ செய்யும் பதிலுதவிபோ லிருக்கிறது! நமக்கு அதிகமான ஐவேஜி யில்லையே, குழந்தை நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டு அமோகமாய் வாழவேண்டுமே என்று நினைத்து நான் இந்த ஏற்பாட்டைச் செய்தால், அதைவிட்டு ஆள் அழகா யிருக்கிறானென்று வீணைவித்துவானைக் கட்டிக்கொள்ள ஆசைப்படுகிறாயோ? உன் மனதிலிருப்பதெல்லாம் எனக்குத் தெரியும். இந்த துர்ப்புத்தியை விட்டுவிடு; வீணாய்க் கெட்டுப்போகாதே; நம்முடைய குலமென்ன! அந்தஸ்தென்ன! அவன் நம்முடைய ஜாதியானாக இருப்பதினாலேயே நம்முடைய சம்பந்தத்துக்கு அவன் அருகனாவானா? அவன் கேவலம் வாத்தியம் வாசித்து வயிறு வளர்ப்பவன், அவன்மேல் நீ ஆசைப் படுகிறாயென்பதைக் கேட்டால், ஊரார் சிரிக்க மாட்டார்களா? நீ படித்ததெல்லாம் இதற்குத்தான் உபயோகப்பட்டதா? அவனிடம் அழகிருக்கலாம்; நல்ல குணம், நல்ல நடத்தை எல்லாம் இருக்கலாம். ஆனால் அவன் நமக்கு சமமான அந்தஸ்துடையவனாக இருக்க வேண்டாமா? கலியாணம் நடக்கும்போது, அநாதையான இவன் மாத்திரம் வந்திருந்தால் அதைக்கண்டு ஜனங்கள் எவ்வளவு தூரம் ஏளனம் செய்வார்கள் என்பதை நீ கொஞ்சமாவது நினைத்தாயா? அப்படிப்பட்ட கலியாணத்தை இந்தக் கண்ணால் பார்க்க நேர்ந்தால், நான் உயிரை வைத்துக்கொண்டே இருக்கமாட்டேன். இத்தனை வயதாகியும், உன்னுடைய குழந்தைப் புத்தி போகவில்லையே! மற்ற எல்லா விஷயத்திலும், நீ பழுத்த ஞானம் பேசுகிறாய். இதில் மாத்திரம், அசட்டுத்தனமாக நடந்து கொள்ளுகிறாயே! இன்றோடே இந்த எண்ணத்தை விட்டுவிடு. தகாத காரியத்தில் வீணாகப் பிடிவாதம் பிடித்து என்னை அகால மரணத்துக்கு ஆளாக்காதே'' என்று நயமாகவும் அதிகாரமாகவும் அன்போடும் மொழிந்துவிட்டு துரை ராஜாவையும் அழைத்துக்கொண்டு கீழே சென்றாள்.

இங்ஙனம் நிலைமை இப்படி இருக்க, சிறிதுநேரத்திற்கு முன்னர் பங்களாவை விட்டு வெளிப்பட்ட மதனகோபாலன் தன்னையும் உலகத்தையும் அடியோடு மறந்து பைத்தியக்காரன் போல நடந்து, தான் இன்னவிடத்திற்குப் போகவேண்டு மென்பதையும் நினையாமல், எதிர்ப்படும் வீதிகளிலெல்லாம் போய் அலைந்து திரிந்துக் கொண்டிருந்தான். அன்று தனக்கு ஏற்பட்ட அவமரியாதையைப்பற்றி அவன் சிறிதும் விசனப்பட்டவனாகக் காணப்படவில்லை. ஆனால் தான் மற்ற யாவரிலும் சிறந்தவனாக மதித்துத் தனது வாத்ஸல்யம் முழுவதையும் வைத்த அருங்குணமணியான அந்தப் பெண்ணரசியின் துன்பங்களையும் துயரங்களையும் அவளது பரிதாபகரமான நிலைமையும் உணர்ந்தபின் அவன் தனது மற்ற உணர்வுகளை யெல்லாம் இழந்தவனாய், அத்தனை துன்பங்களும் தனக்கே சம்பவிக்கப் பெற்றவன்போல, சகிக்க இயலாத வேதனையிலாழ்ந்தவனாய்த் தத்தளித்துத் தளர்வடைந்து நெடுநேரம் நடந்துகொண்டே இருந்தான். விலை மதிப்பற்ற நிதிக்குவியலை யொத்த அந்தப் பெண்மணி, தனது விரக்தியில், தற்கொலை புரிந்து கொள்ளுவாளோ என்ற அச்சமும், தான் மறுபடி அவளிடம் நெருங்கி, அவளது மனதை மாற்ற முடியாமல் போனதே என்ற கவலையும் எழுந்து அவனைப் பெரிதும் உலப்பியது. பிற்பகல் நான்கு மணிக்கு தான் மாரமங்கலம் அரண்மனையில் வீணைகற்றுக்கொடுக்கப் போகவேண்டுமென்பதையும் அவன் மறந்து தெருத்தெருவாயலைய, கடைசியாக அவனது சுய உணர்வும் நல்ல அறிவும் படிப்படியாகத் திரும்பித் தெளிவடையவே, அவன் அப்போது எவ்வளவு மணியாயிற்றென்பதை உடனே கவனித்தான். மாரமங்கலம் அரண்மனைப் புதல்வியர் தனது வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பார்களாதலால், தான் போகாமலே நின்றுவிடின், அவர்களுக்குத் தன்மீது அருவருப்பும் கோபமும் உண்டாகும் என்ற நினைவு தோன்றியது. அப்போது மாலை ஐந்துமணி சமயமாதலால், தான் விரைவாக நடந்து சென்று, ஐந்தரை மணிக்காகிலும் அவ்விடத்தையடைய நினைத்து வேகமாக நடந்து மாரமங்கலம் பங்களாவை யடைந்து உள்ளே நுழைந்தான். இதற்கு முன் நான்காவது அதிகாரத்தில் கூறப்பட்டபடி கல்யாணியம்மாளிடம் கோபித்துக் கொண்டு மைனர் சென்ற பின் அவள் தனது புதல்வியருடனும், பொன்னம்மாளுடனும் சம்பாஷித்த பிறகு, புதல்வியர் தங்களது விடுதிகளுக்குள் நுழைந்த காலத்தில் மதனகோபாலன்

உள்ளே தோன்றினன். ஒவ்வொருநாளும் அவன் வந்ததைக் கண்ட வுடனே அங்கிருந்த வேலைக்காரருள் ஒருவன் விரைவாக உள்ளே சென்று இளங் குமரிகளுக்கும், கல்யாணியம்மாளுக்கும் அவனது வரவைத் தெரிவிப்பது வழக்கம். உடனே பெண்களும் தாயும் வீணை கற்றுக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ஓர் அழகான மண்டபத்திற்குச் செல்வார்கள். புதல்வியர் இரத்தின கம்பளம் விரிக்கப்பெற்ற தரையில் வீணைகளோடு உட்கார்ந்து கொள்ளுவார் கள். அதற்கருகில் ஒரு மறைவான இடத்தில் போடப்பட்டுள்ள ஒரு சாய்மான நாற்காலியில் கல்யாணியம்மாள் அமர்ந்துகொள்வாள்; பிறகு மதனகோபாலன் அவ்விடத்திற்கு வந்து மிகவும் மரியாதை யான தூரத்தில் உட்கார்ந்து கொண்டு அடக்கவொடுக்கமாக அவ் விரு சிறுமியருக்கும் வீணை பயிற்றுவிப்பான்; அப்போது கல்யாணி யம்மாள் திரையின் மறைவிலிருந்த வண்ணம் அவர்களது சங்கீதப் பயிற்சியைக் கவனித்துக் கொண்டிருப்பாள்; அல்லது தனது கையில் ஏதாகிலும் ஒரு புஸ்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருப்ப தாகக் காணப்படுவாள். அவள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு முன்னு லிருந்த திரையானது பெண்களை அநேகமாக மறைத்துக் கொண் டிருந்ததானாலும், மதனகோபாலனை மாத்திரம் அதிகமாக மறைக் காமலிருந்தது. அவன் வீணை கற்றுக்கொடுக்கத் தொடங்கிய நாள் முதலாக ஒவ்வொரு தினமும் அவர்கள் அவ்வாறே செய்து வந்தனர்.

ஆனால், ஒவ்வொரு நாளும், குறித்த காலம் தவறாமல், ஒழுங் காக வந்துகொண்டிருந்தவனான மதனகோபாலன் அன்று ஒன்றரை மணி நேரம் வரையில் வராமலிருந்தது, அந்த மூன்று ஸ்திரீகளுக்கும் அபூர்வமாக இருந்ததானாலும், சிறிது நேரத்திற்கு முன் நடந்த சம்பவங்களில் அதை அவ்வளவாகப் பாராட்டாமல் தங்களது நினைவை வேறிடத்தில் செலுத்தி இருந்தனர். கல்யாணியம்மாள் தனது புத்திரனது துர்ப்புத்தி, கீழ்ப்படியாமை முதலியவற்றைப் பற்றியும், தனது மூத்தகுமாரியின் அகங்காரத்தைப் பற்றியும், பொன்னம்மாளது நடத்தையைப் பற்றியும் நினைத்து, பலவகையான வாதனைகளால் உலப்பப்பட்டு சஞ்சலக் கடலிலாழ்ந்து மெய்மறந்து ஏகாந்தமாக உட்கார்ந்த தருணத்தில், வேலைக்காரன் மதனகோபால னது வரவை அவளிடம் அறிவிக்கவே, அவள், "பெண்களைப் போகச்சொல், நான் இதோ வந்து விட்டேன்" என்று செய்தி

சொல்லியனுப்ப, அவ்வாறே சிறுமியர் இருவரும் வீணைமண்டபத்தை யடைந்தனர். மதனகோபாலனும், அங்கே வந்து தனது வழக்கமான மூலையில் உட்கார்ந்து கொண்டான். அதற்குள் கல்யாணியம்மாள் சரேலென்றெழுந்து தண்ணீரால் தனது முகத்தை நன்ருக அலம்பித் துடைத்துக்கொண்டு மிகவும் பாடுபட்டுத் தனது முகத்தின் துன்பக்குறிகளை மாற்றிக்கொண்டு இரண்டொரு நிமிஷ நேரத்தில் வீணை மண்டபம் வந்து தனது நாற்காலியில் உட்கார்ந்த போது, மதனகோபாலன் தான் தாமதமாக வந்ததுபற்றி பெரிதும் லஜ்ஜை யடைந்தவனுய் நிரம்பவும் வணக்கமாகவும் கம்பீரமாகவும் கல்யாணியம்மாளை நோக்கி, "வழக்கம்போல சரியான காலத்தில் வரவேண்டுமென்றே நான் புறப்பட்டேன். இடைவழியில் உடம்பில் சில பாதைகள் ஏற்பட்டதனுல் நான் இங்கேவர கொஞ்சம் தாமதமாகி விட்டது. இன்றைக்கு வராமலே இருந்துவிட வேண்டிய நிலைமையில் நான் இருந்தேன். இருந்தாலும் தாங்கள் காத்திருப்பீர்களாகையால் நான் இங்கே வந்து காரணத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று வந்தேன்." என்று விநயமாகக் கூறினுன்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தவளாய்த் தனது மனதிலெழுந்த பலவகையான சங்கடங்களை மறைத்துக்கொண்டு, அவனை நோக்கி, "அடடா! உடம்பு அசௌக்கியமாயிருந்தால், நாளைக்கு வந்திருக்கலாமே; இப்போது என்ன அவசரம் முழுகிப்போகிறது? அப்படியானுல், இன்றைக்குப் பாடம் கற்றுக் கொடுக்க வேண்டாம். நாளைக்குப் பார்த்துக் கொள்வோம். பெட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு போய் உன்னுடைய வீட்டில் விடச் சொல்லுகிறேன். நீ போ அப்பா!" என்று மிகுந்த அன்போடும், உள்ளார்ந்த வாஞ்சையோடும் கூறவே, அதைக்கேட்ட மதனகோபாலன் "பாதகமில்லை; இப்போது உடம்பு வழக்கப்படி சரியான நிலைமைக்கு வந்துவிட்டது. வந்ததுதான் வந்தேன்; பாடத்தைச் சொல்லிக்கொடுத்துவிட்டுப் போகிறேன்" என்று மறுமொழி கூறிவிட்டு ஒவ்வொருவராக வீணையை வாசிக்கும்படி கூற, முதலில் கோமளவல்லி முதல் நாள் கற்றுக்கொண்ட பாடத்தை வீணையில் வாசிக்கத் தொடங்கினுள். மதனகோபாலன் தனது தொடையில் வலக்கரத்தால் தாளம்போட்டு இடக்கரத்தை நீட்டி, விரல்களால் தடவும் நயங்களைக் காட்டிக்கொண் டிருந்தான். அந்த சமயத்தில் கையில் புஸ்த

கத்தோடு நாற்காலியில் உட்கார்ந்திருந்த கல்யாணியம்மாள் தனது முழுக்கவனத்தையும் மதனகோபாலனது வடிவத்திலேயே செலுத்தி இமை கொட்டாது தனது கடைக்கண்ணால் அவனை நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

அவன் மகா அற்புதமான அழகு வாய்ந்த யௌவனப் புருஷனென்பது முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. அழகு வழிந்த முகமும், அதில், மிக்கவிசாலமாகப் பரவி, பளபளப்பும், தெளிவும், புத்தி கூர்மையும் கொண்டிருந்த சுந்தர விழிகளும், கபடமற்ற பார்வையும், மாதுரிய குணங்களும், மிருதுவான இனிய வசனமும், குற்றமற்ற ஒழுக்கமும், பிறரிடம் காட்டும் இயற்கையான அன்பும் இன்னம் அவனிடம் காணப்பட்ட எண்ணிக்கையற்ற பல கவர்ச்சிகளும் ஒன்றுகூடி மகா கொடிய விலங்குகளான கரடி புலி சிங்கம் முதலிய ஜந்துக்களும் அவனிடம் வசியமாய், தாசாநுதாசனாக அவனது காலடியில் வீழ்ந்து சரணாகதியடையச் செய்வனவாக இருந்தனவென்றால், அவைகளைக்கண்ட கல்யாணியம்மாளது மனம் சலனப்படாமலிருக்குமா? நிற்க, அவன் தனது புதல்வியருக்கு வீணை கற்றுக்கொடுக்க ஆரம்பித்த நாளிலிருந்தே மதனகோபாலனிடம் கல்யாணியம்மாளுக்கு இயற்கையான ஒருவித வாத்ஸல்யம் தோன்றி அது நாளுக்கு நாள் நொடிக்கு நொடி ஊற்றெடுத்துப் பொங்கியெழுந்து கொண்டே வந்தது. அவனும் தனது குமாரத்திகளும் ஒரே அச்சில் கடைந்தெடுக்கப் பெற்ற மூன்று பதுமைகள் போலவும், மூன்று சுவர்க்கலோகங்கள் போலவும் அழகே வடிவாக உட்கார்ந்திருந்த காலங்களில், கல்யாணியம்மாள் மதனகோபாலனது வதனத்தையும் பெண்களது வதனங்களையும் ஒத்திட்டுப் பார்த்த வண்ணம் கரைகடந்த மகிழ்ச்சியும் இன்பமு மடைந்து அந்த ஆராய்ச்சியிலேயே தனது மனம் லயப்பட விடுத்திருப்பாள். அவ்வாறு ஒவ்வொரு நாளும் அவனது வதனத்தைப் பார்க்கப் பார்க்க அவன் பேரழகு அவளுக்கு அதிகரித்துக்கொண்டு போவதாகத் தோன்றியதன்றி, அது எத்தனை வருஷங்களானாலும் தெவிட்டாத கண் காட்சியாகவும் விருந்தாகவு மிருந்தது; நிற்க, அவனது முகத்திற்கும் தனது பெண்களது முகங்களுக்கும், நெருங்கிய ஒற்றுமை காணப்பட்டமையால், அம்மூவரையும் புதிதாகக் காண்போர், அவர்கள் ஒரு தாயின் வயிற்றில் ஜனித்த குழந்தைகளென்றே நிச்சயமாக எண்ணிக்கொள்ளுவர். அந்த ஒற்றுமையைக் காணக்காண கல்யாணி


யம்மாளது மனம் பாகாய் இளகியது; உள்ளம் பூரித்தது. தேகம் புளகாங்கித மடைந்தது. "ஐயோ! இப்பேர்ப்பட்ட அழகன் என் வயிற்றில் பிறக்கக் கூடியவனல்லவா! இவன் கேவலம் ஓர் ஏழையின் வயிற்றில் பிறக்கும்படி நேர்ந்தது என்ன கொடுமை! பெருத்த சமஸ்தானத்துக்கு அதிபதியாக இருந்து சகலமான சுகபோகங்களையும் அநுபவிக்க அருகனான இந்த மன்மத புருஷன் கேவலம் கைத்தொழில் செய்து பிறர்வீட்டு ஸ்திரீகளிடம் அடங்கி ஒடுங்கி வயிறு வளர்க்கும் நிலைமையிலிருக்கிறானே! என்ன கடவுளின் அமைப்பு!" என்று கல்யாணியம்மாள் ஒரு நாளையில் ஆயிரம் தரம் நினைத்துப் பரிதாபமும் வியப்பும் இரக்கமும் கொண்டிருப்பாள். அவ்வாறு கல்யாணியம்மாள் அவனது ரூபலாவண்ணிய குணாதிசயங்களை மனனம் செய்து செய்து மௌனப் பேரானந்தத்தில் ஆழ்ந்திருந்த சமயங்களில், தனது புத்திரனான மைனரது விகார ரூபமும், துர்க்குணங்களும், துர்நடத்தைகளும் நினைவுக்கு வந்து அவளது மனத்திலுள்ள இன்ப ஊற்றைக் கலக்கி சீர்குலைந்து சின்னாபின்னமாக்கி, அவளைத் துன்பக் கடலிலாழ்த்திவிடும். அந்த சமயத்தில், அவள் "ஐயோ! எந்த தெய்வமாவது உலகத்தாருக்கு முன்வந்து, 'கல்யாணியம்மாளுடைய மகன் மைனரல்ல; மதனகோபாலனே' என்று விளம்பரப் படுத்திவிடுமானால், ஆகா! அதற்காக என்னுடைய உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் தானம்செய்து விடுவேன்!" என்று தனக்குத்தானே எண்ணமிட்டு மனமாழ்கி நெடு மூச்செறிவாள்.

அவள் நிரம்பவும் கட்டான தேகத்தையும், மகா உன்னதமான கனிந்த அழகையும் பெற்றிருந்தாளென்பது முன்னரே தெரிந்த விஷயம். அவள் தனது கணவனிடத்திலேகூட உண்மையான வாத்ஸல்யத்தையும் மோகத்தையும் கொண்டவளன்று. பெருத்த செல்வத்தையும், செல்வாக்கையும் விரும்பியே அவள் வயோதிகரான அந்த மனிதரை மணந்து கொண்டாளென்பதும் தெரிந்த விஷயம். உலகத்திலுள்ள எந்த மனிதரிடத்திலும் அவளது மனம் அபிமானத்தினால் இளகியறிந்த தன்று. தனது புத்திரிகளிடத்திலேகூட அவள் அந்தரங்கமான ஆழ்ந்த அன்பை அவ்வளவாகக் கொண்டவளன்று. அப்படிப்பட்டவளான கல்யாணியம்மாளது மனம் மதனகோபாலனைக் கண்ட மாத்திரத்தில் முதல் பார்வையிலேயே அனலில் வைத்த மெழுகுபோல உருகிப்போய்விட்டது. எங்ஙனமெனில், மைனருக்கும்

மதனகோபாலனுக்கும், தோற்றத்திலும், குணங்களிலும் நடத்தைகளிலும் காணப்பட்ட முழுவேற்றுமையும், தனது புதல்வியரது முகத்தோற்றத்திலும் மதனகோபாலனது முகத்தோற்றத்திலும் தோன்றிய ஒற்றுமையுமே அவளது மனத்தை முற்றிலும் இளக்கி விட்டதன்றி, அவள் ஒவ்வொரு நாளும் தவறாமல் அவனை உற்று நோக்கி நோக்கி அதே விஷயத்தில் தனது மனத்தையும் நினைவையும் செலுத்தி வந்தாளாதலின், அது படிப்படியாக அவளைப் புதுமனுஷியாக மாற்றிவிட்டது. சிலரது மனம் எதைக்கண்டும் இளகாத கற்பாறையாக இருக்கும். ஆனால், அது எதையாகிலும் கண்டு இளகிவிடுமானால், அது கட்டிலடங்காதபடி அவ்வளவு அதிகமாக இளகிவிடும். நமது கல்யாணியம்மாளது மனதும் அப்படிப்பட்டதே யாகையால், அத்தனை வருஷகாலமாக வெளியில் தெரியாமல் அவளது மனதில் மறைந்துகிடந்த அன்பானது ஊறி ஊறிப் பெருகி அணைபெயர்த்துவிடப்பட்ட எழு கடல்கள்போலப் பொங்கி வெள்ளமாக வழிந்தோடத்தலைப்பட்டதும், அவள் உருக்கமான பார்வைகளாலும், தேன்போல இனித்த குளிர்ந்த மொழிகளாலும் தனது மனநிலைமையை மதன கோபாலனிடம் வெளியிட்டு வந்தாள். ஒவ்வொரு நாளும் அவனைக் கண்டு அவனோடு ஒரு வார்த்தையாகிலும் பேசாவிடில் அவளது மனம் அமைதி யடையாது; அவன் வரும் வரையில், பொழுதுபோவது அவளுக்கு மகா வாதையாக இருக்கும். அவன் வந்துவிடுவானாகில், அந்தப் பொல்லாத பொழுதானது அதிசீக்கிரமாகப் போய்விடுவதாக அவளுக்குத் தோன்றும்; ஒவ்வொரு நாளிலும் அவன் வரும் சமயத்துக்கு நாலைந்து நாழிகைகளுக்கு முன்னிருந்தே அவளது மனம் ஆவலினாலும் ஆசையினாலும் துடித்துக்கொண்டிருக்கும்; தேகம் கட்டிலடங்காமல் தத்தளித்திருக்கும். அவள் நல்ல இளமையும் செழுமையும் பெற்ற மேனியினளாகையாலும், சிறுவயதிலேயே விதவையானது பற்றி தேகம் கட்டுத்தளராமலும் சீர் குலையாமலும் இருந்தமையாலும் அவளது மனதில் தோன்றிய இன்பமோ துன்பமோ அதிக உக்கிரமானதாகவும், அவளால் சகிக்கவொண்ணாத வலிமை யுடையதாகவும் அபாரமாகப் பெருகித் தோன்றியது. அவளிடம் மைனர் துடுக்காகவும் மரியாதைக் குறைவாகவும் நடக்க நடக்க, அவள் மதனகோபாலனிடத்தில் வைத்த வாத்ஸல்யம் வட்டியும் முதலுமாக வளர்ந்து அது பெருத்த பைத்தியமாக முற்றிக்கொண்டே போனது.

மேற் குறிக்கப்பட்ட தினத்தன்று, மைனர் அவளிடம் தாறு மாறாகப் பேசியதும், துரைஸானியம்மாள் கீழ்ப்படியாத குணத்தைக் காண்பித்ததும் ஒரு புறத்தில் கல்யாணியம்மாளது மனத்தை வருத்தினதன்றி, மதனகோபாலன் வழக்கத்துக்கு மாருக அன்று அது காறும் வாராதிருந்தது இன்னொரு புறத்தில் பெரிதும் வதைத்துக்கொண்டிருந்தது.

கடைசியாக, அவன் வந்து விட்டானென்ற செய்தியானது அவளது எண்ணிறந்த வேதனைகளுக்கெல்லாம் அபயஸ்தம் கொடுத்தது போல இருந்ததன்றி, அவனைக் காண்பது தெய்வத்தைக் காண்பது போல ஆகிவிட்டது. அன்று அவள் தனது நாற்காலியில் உட்கார்ந்து கால் நாழிகைக்குள் தனது கண்களைக்கொண்டு மதனகோபாலனது அற்புதமான அழகை அள்ளிப்பருகி, ஆநந்த பரவச முற்றவளானுள். அதுகாறும் அவளது மனத்தைப் புண்படுத்திய ஏனைய கவலைகளும் துன்பங்களும் ஒரு நொடியில் பறந்துபோயின. அவள் அதே தியானமாக அவனை உற்றுநோக்கிய வண்ணம் தனது முகத்தின் ஒரு பாகத்தை புஸ்தகத்தால் மறைத்தவளாய் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். அந்த சமயத்தில், பெண்கள் இருவரும் முதல் நாளில் கற்றுக்கொண்ட பாடங்களை ஒழுங்காக வீணையில் வாசித்து முடிக்கவே, மதனகோபாலன், அவர்களுக்கு ஒரு புதிய கீர்த்தனை கற்றுக் கொடுக்க நினைத்து, அவர்களது வீணைகளுள் ஒன்றை வாங்கித் தனக்கருகில் வைத்துக்கொண்டு, நாட்டைக்குறிஞ்சி என்ற அருமையான ராகத்தை எடுத்து மிகவும் உருக்கமாகவும் கர்ணமிருதமாகவும் ஆலாபனைசெய்து, அதே ராகத்தில் ஒரு கீர்த்தனையைத் தொடங்கி நிரம்பவும் சொகுஸாக அதை வீணையில் வாசிக்க ஆரம்பித்தான். வயதில் அவன் மிகவும் சிறியவனுக இருந்தானுனும், அபார ஞானத்தோடும், பூரணமான கைப்பழக்கத்தோடும், அவன் அந்த ராகத்தை மகா கம்பீரமாக உயர்த்தித் தணித்துப் பாடவே, அங்கிருந்த பெண்டீர் மூவருக்கும் தாமிருந்தது பூலோகமோ சுவர்க்கலோகமோ என்ற சந்தேகம் உண்டாகிவிட்டது. மூவருக்கும் உரோமம் சிலிர்த்தது. ஒவ்வோர் அங்கமும் ஆநந்தத் தாண்டவமாடியது. மூவரும் பிரம்மாநந்த சுகத்தில் மிதந்து தத்தளித்துக் குடிவெறியால் மயங்கி கிடப்போர்போல அப்படியப்படியே சொக்கிப்போயிருந்தனர். அம்மூவரில் கல்யாணியம்மாளது நிலைமையே கட்டிலடங்காத



தாகப் போய்விட்டது. அவளது செவிகளில் கொள்ளை கொள்ளையாக வந்து மோதி அவளது தேகத்தின் ஒவ்வோரணுவையும் பம்பரம் போலச் சுழற்றி, இன்பசாகரத்தில் ஆழ்த்திய மகா சிரேஷ்டமான அந்த இன்னொலி சகிக்கவொண்ணுத பரம இன்பமாய்ப் போகவே, அவள் மெல்ல எழுந்து திரையின் மறைவிலிருந்த ஒரு வாசற்படியின் வழியாகத் தனது அந்தப்புரத்திற்குப் போய்விட்டாள்; மதன கோபாலனே அந்தக் கீர்த்தனையின் பல்லவி, அநுபல்லவி, சரணம் முதலியவற்றைத் தானும் அநுபவித்தபடி மிகவும் பிரம்மாநந்தமாகப் பாடி முடித்தபின், தன்னிடமிருந்த வீணையை பெண்களிடம் கொடுத்து விட்டு, அந்தக் கீர்த்தனையின் பல்லவியைப் பாடும் விதத்தை இருவருக்கும் மாறி மாறிப் பயிற்றுவிக்கத் தொடங்கினுன். அப்பெண்களது நினைவு முற்றிலும் அந்தப் பாடலிலேயே சென்றிருந்த தாகையால், அவர்கள் தங்களது தாய் எழுந்துபோனதை கவனிக்கவில்லை. மதனகோபாலன், உள்ளே நுழைவது முதல், வெளியில் போகிறது வரையில், தனது சிரத்தை நிமிர்த்து, எந்தப்பக்கத்தையும் பார்ப்பதே என்றைக்கும் வழக்கமில்லையாதலால், அப்போதும் கல்யாணியம்மாள் நாற்காலியில் உட்கார்ந் திருக்கிருளென்றே அவன் நினைத்திருந்தான். இடை நடுவில் அவள் எழுந்துபோனது, அதுவே முதல் தடவையாதலால் புதல்வியரும் அதைப்பற்றி சிறிதும் சந்தேகியாமல், தங்களது அன்னை திரையின் மறைவி லிருப்பதாகவே எண்ணி இருந்தனர். அவ்வாறே அவர்களது அன்றைய சங்கீதப் பயிற்சி மாலை ஏழுமணி நேரம் வரையில் நடைபெற்று முடிவடைந்தது.

அப்போது, தான் போவதாக அந்த மடந்தையரிடம் சொல்லிக்கொண்டு எழுந்த மதனகோபாலன், வழக்கம்போல கல்யாணியம்மாளிடத்திலும் செலவு பெற்றுக்கொள்ளும் பொருட்டு நிமிர்ந்து திரைப்பக்கம் பார்க்கவே, அவள் போய்விட்டாளென்ற விஷயம் அவனுக்குத் தெரிந்தது. தான் தனது அற்புதமான அழகினுலும், சங்கீதத்தினுலும், மாதுரியமான குண ஒழுக்கங்களினுலும், கல்யாணியம்மாளது மன நிலைமையை எவ்வளவு தூரம் சின்ன பின்னமாக்கிச் சீர்குலைத்து விட்டோமென்பதை அவன் அதுவரையில் சிறிதும் சந்தேகித்தவனன்றுதலால், அவள் வேறு ஏதோ காரணம் பற்றி எழுந்து போய் விட்டதாக நினைத்துக்கொண்டு, துரைஸானியம்மாளின் பக்கம் திரும்பி "அம்மாளவர்கள் உள்ளே போய்விட்

டார்கள்போ லிருக்கின்றது. நான் அவசரமாய்ப் போகவேண்டும். அவர்களிடம் சொல்லிவிடு" என்முன். துரைஸானியம்மாள் அதற்கு இணங்க, அவன் அந்த மண்டபத்தைவிட்டு வெளிப்பட்டான்.

ஆனால் அந்த பங்களாவின் உட்புறக் கட்டிடம் அரைக்கால் மயில் சதுரம் பரவியதாய், ஒரு பெருத்த அரண்மனைபோல ஏராள மான மாடங்களையும், கூடங்களையும், மண்டபங்களையும், அந்தப் புரங்களையும் கொண்டிருந்த தாகையால் மதனகோபாலன் அவை களைக் கடந்தே வெளியிற் செல்லவேண்டி யிருந்தது. அவ்வாறே அவன் சென்று கொண்டிருந்தான்; அவனது காரியம் இப்படி யிருக்க, என்றைக்கு மில்லாமல், அன்று தங்களது தாய், சங்கீதப் பயிற்சி முடிவடைவதற்குள் எழுந்துபோனது, துரைஸானியம்மா ளது மனதில் வியப்பையும் திகைப்பையும் ஒரு வகையான சந்தேகத் தையும் உண்டாக்கி பலவகைப்பட்ட எண்ணங்களுக்கும் யூகங் களுக்கும் இடம் கொடுத்தது. ஆனால், கோமளவல்லியோ அதை சாதாரணமான சம்பவமாக மதித்து ஏதேனும் தேகபாதையின் பொருட்டு தங்களது தாய் எழுந்து போயிருக்கலாமென்று அபிப் பிராயப்பட்டு அதைப்பற்றி அதிகமாகச் சிந்தனை செய்யாமல் இருந்து விட்டாள். பக்கத்து அறையில், தயாராகக் காத்திருக்கும் இரண்டு தாதிகள் வீணைவித்துவான் எழுந்து சென்றவுடனே உள்ளே நுழைந்து அவர்களது வீணைகளை வாங்கி, அவைகளுக்கு உறைகள் போட்டு, அவற்றைப் பெட்டிகளுக்குள் வைத்துப் பூட்டுதல் வழக்க மாதலால், அன்றைய தினமும், அவர்கள் வழக்கப்படி வந்து தங் களது கடமையைச் செய்தபின் மடந்தையரிருவரையும், அங்கிருந்து அவரவரது அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஆனால், வீணைமண்டபத்திலிருந்து வெளிப்பட்ட மதனகோபா லன் இரண்டு மூன்று விடுதிகளைக் கடந்து அப்பால் போகுமுன்; அவன் அந்த மூன்று பெண்டீரைப்பற்றிய நினைவையும் மறந்து விட் டான். தான் மாரமங்கலத்தாரது மாளிகையில் செல்வதையும் மறந்து போனன்; கண்மணியம்மாளது நினைவும், அவளது சுந்தர ரூபமும் அவனது மனதில் எழுந்து அவனது கவனத்தை முற்றிலும் கவர்ந்து கொண்டன; கண்மணியம்மாள் விம்மி விம்மி யழுவதுபோலவும், தான் அதனைத் தேற்றுவது போலவும், அந்த சமயத்தில் மீனாக்ஷியம் மாளும், துரைராஜாவும் திடீரெனத் தோன்றி, தன்னை தூஷித்து பங் களாவிலிருந்து தன்னை வெளிப்படுத்துவதுபோலவும், அவனது அகக்

கண்ணில் ஒரு தோற்றம் உண்டாயிற்று; அவன் அதே நினைவிலும் கவலையிலும் தனது முழுகவனத்தையும் செலுத்தி மெய்மறந்தவனாய்ச் செல்லவே, அவனது கால்கள் பழக்கத்தினால் அவனை நடத்திக்கொண்டு சென்றன. அதுகாறும் நிரம்பவும் நற்குணத்தோடு ஒழுகிய மீனாக்ஷியம்மாளும் துரைராஜாவும் அன்று முரட்டு மனிதர் போலத் தன்னிடத்தில் நடந்து கொண்டது அவனுக்கு நிரம்பவும் வியப்பாக இருந்தது; அவர்கள் கண்மணியம்மாளிடத்திலும் அது போலவே முரட்டுத் தனமாக நடந்து, தங்களது இச்சைப்படியே கலியாணத்தை நடத்தப் பிடிவாதமாக முயன்றால் கண்மணியம்மாள் தனது உயிருக்கு ஏதேனும் தீங்கிழைத்துக் கொள்வாளோ என்ற கவலையே பெருங்கவலையாக எழுந்து அவனது மனத்தை வதைக்கத் தொடங்கியது; நிற்க, தான் வேறொரு புருஷனை மணந்துகொள்ள ஆசைப்படுவதாக அவள் வெளியிட்டதும் அவனுக்கு மனங் கொள்ளா ஆச்சரியமாக இருந்தது; ஒரு விஷயத்தையு மறியாதவள் போல அதுகாறும் காணப்பட்ட அந்தப் பெண்மணி தன் மனதில் முக்கியமான அத்தனை பெருத்த விஷயங்களை மறைத்து அடக்கி வைத்துக் கொண்டிருந்தது அவனுக்கு விந்தையிலும் அதிவிந்தையாக இருந்தது; அவளது மனத்தையும், காதலையும் கொள்ளைகொண்ட அந்தப் புண்ணிய புருஷன் யாவனோ என்ற ஐயமும் இடையிடையில் அவனது மனத்தை உலப்ப வாரம்பித்தது; மற்ற எந்த யௌவன மடந்தையிடத்தும் ஏற்படாத அவ்வளவு அதிகமான பிரேமையும் விலக்க வொண்ணாத கவர்ச்சியும் அவளொருத்தி யிடத்திலேயே தன் மனதில் ஏற்பட்டிருந்ததை நினைத்து நினைத்து அவன் தன் மனதைத் தானே கண்டித்துக் கொண்டான். தனது தாழ்ந்த நிலைமைக்கும் யோக்கியதைக்கும் எட்டாத பெருத்த அந்தஸ்திலுள்ள அந்தப் பெண்மணியிடத்தில் அவ்வளவு வலுவாகத் தனது மனம் சென்றது பெருத்த தவறென நினைத்து, அவன் அதை வேறு விஷயத்தில் செலுத்த முயன்றான். ஆனால் அந்த முயற்சியால், அவளது நினைவும் வடிவமும், முன்னிலும் அதிக உயரமாக வேரூன்றி ஆழப் பதிந்து நின்றன. அந்த நிலைமையில் மதனகோபாலன் தத்தளித்துத் தளர்வடைந்து தனது நினைவு முழுதையும் வேறிடத்தில் வைத்தவனாய்ச் செல்லவே, சிறிது தூரத்தில், அவனது வழி தவறிப்போய் விட்டது; வாசலைநோக்கிச் செல்லும் வழியைவிட்டு, அவன் பங்களாவின் நடுப்பக்கத்திற்குச் செல்லும் வழியிலே திரும்பி உள்ளே

போய்க் கொண்டிருந்தான். அப்படி இரண்டு மூன்று மண்டபங்களை யும் விடுதிகளையும் கடந்து, அவன் கடைசியில் காணப்பட்டதும், மிகவும் அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்ததுமான ஓர் அழகான அந்தப்புரத்திற்குள் நுழைந்து சிறிது தூரம் செல்லவே, கீழே போடப்பட்டிருந்த இரத்தின கம்பளத்தின் மிருதுவான நீண்ட உரோமத்தின்மீது அவனது கால்கள் பதிய, அது புதிய இடமென்ற உணர்வு அவனுக்கு அப்போதே ஏற்பட்டது. உடனே அவனது சுய நினைவும் திரும்பியது; தூக்கத்தி லிருந்து விழித்துக் கொள்பவன்போல அவன் தனது கண்களை நன்றாகத் திறந்து சிரத்தை உயர்த்தி இருபக்கங்களையும் நோக்க, இந்திரவிமானம் போன்ற ஒரு சிறந்த சயனமாளிகையில் தானிருந்ததைக் கண்டுகொண்டான். உடனே திகைப்பினாலும் அச்சத்தினாலும் அவனது தேகம் நடுங்கியது. அன்னியர் நுழையக்கூடாத அந்தரங்கமான ஓர் அந்தப்புரத்திற்குள் தான் தவறுதலாக நுழைந்து விட்டதாக அவன் உணர்ந்து கொள்ளவே, அவனது மனமும் தேகமும் சயிக்க இயலாத தவிப்பையடைந்தன; வந்தவழியாகவே திரும்பி விரைவில் நடந்து அந்த அந்தப்புரத்திற்கு வெளியிற் போய்விட நினைத்து அவன் மெதுவாகத் திரும்பவே, அதற்கு சிறிது தூரத்தில் பெருத்த பஞ்சு மெத்தைகள் பரப்பிய உன்னதமான ஒரு தந்தக்கட்டிலில் படுத்திருந்த கல்யாணியம்மாள், எவரும் நுழையாத தனது அந்தப்புரத்திற்குள் காலடியோசையுண்டானதை யுணர்ந்து திடுக்கிட்டு மருண்டு சரேலென எழுந்து பார்க்கவே, சிறிது தூரத்தில் மதனகோபாலன் சென்றதைக் கண்டு வியப்பும் திகைப்பு மடைந்தவளாய் ஒரு நிமிஷநேரம் ஸ்தம்பித்து உற்று நோக்கினாள்; தனது கண்களுக்கெதிரில் காணப்படுவது உண்மையான வடிவமோ, அல்லது, தனது மனத்திலிருந்த நினைவினால் பிரதிபிம்பித்த மானஸீகமான பொய்த் தோற்றமோ என்று சந்தேகித்தவளாய் அவள் சிறிதுநேரம் தயங்கினாள். அடுத்த நொடியில் அது உண்மையான காட்சியென்று நிச்சயித்தவளாய் அவள் சரேலென மஞ்சத்தை விட்டுக் கீழே இறங்கிய வண்ணம், தனது கையை, மெதுவாகத்தட்டி, “மதனகோபாலா! இப்படி வா, போகலாம்” என்று அதிகாரமாகக் கூறினாள்.

எதிர்பாராத அந்தக்குரலைக்கேட்ட மதனகோபாலன் திடுக்கிட்டு திக்பிரமை கொண்டு, அது கல்யாணியம்மாளது அந்தப்புரமென்பதை யுணர்ந்து கொண்டவனாய் தான் செய்த பெரும் பிழையைப்பற்றி

அவள் தன்னைத் திருடனென்றும் அயோக்கியனென்றும் மதித்து தன்னை எவ்விதமான அவமானத்திற்கு ஆளாக்குவாளோ என்ற அச்சம் எழுந்து அவனது உடம்பை முற்றிலும் குன்றச் செய்தது. அந்த தினம் தனக்கு மிகவும் பொல்லாத நாளென்ற ஓர் எண்ணம் மின்னல்தோன்றி மறைவதுபோல அவனது மனதில் தோன்றியது. கண்மணியம்மாளது பங்களாவில் சம்பவித்ததைப்போல அந்த மாளிகையிலும் தனக்கு ஏதாகிலும் தீங்கு நேருமோ என்ற பயத்தினால், அவனது சரீரம் கிடுகிடென்று ஆடியது. என்றாலும், தான் உடனே அப்பால் போய்விடுவது சந்தேகத்திற்கு இடங்கொடுக்குமென்று நினைத்தவனாய் அவன்கல்யாணியம்மாள் நின்றபக்கம் திரும்பி தனது சிரத்தைக் கீழே கவித்த வண்ணம், "அம்மணி! மன்னிக்க வேண்டும்; வழி தவறி இங்கே வந்து விட்டேன். உண்மையான சங்கதி" என்று நிரம்பவும் பணிவாகவும் அந்தரங்கமான விசனத்தோடும் கூறினான்; அதற்கு அவள் எவ்விதமான மறுமொழி கூறுவாளோ என்ற பெருந்திகிலினால் அந்த ஒரு நொடி நேரமும் பயங்கரமான ஒரு பெருத்த யுகம்போல விருந்தது அவனது சொல்லைக் கேட்ட கல்யாணியம்மாள் கோபம் கொண்டவள்போலக் காட்டிக் கொள்ளாமல், "ஓகோ! நீ சொல்வது கன்றுக் குட்டிக்குப் புல்பிடுங்க தென்னை மரத்தில் ஏறின கதையாக இருக்கிறதே! எங்கே? இப்படி சமீபத்தில் வந்து என்முகத்தைப் பார்த்துப் பேசு; பெண் பிள்ளையைப்போல முகத்தைக் கீழே போட்டுக்கொண்டு ஒருகாத தூரத்திலிருந்து ஏதோ கட்டுக்கதை சொல்லிவிட்டு ஓடிப்போக நினைக்கிறாயா? வா இப்படி" என்று அன்பாகவும் அழுத்தமாகவும் கூறினாள்; அவள் உபயோகித்த சொற்களின் கொடுமையை, அவளது அன்பான குரல் நயப்படுத்தி, குற்றமற்றதாகக் காண்பித்தது. உடனே மதனகோபாலன் சிறிது துணிவடைந்தவனாய், அந்த கட்டிலிற் கருகில் தயங்கித் தயங்கி நடந்து, அவளிருந்த இடத்திற்கு மூன்றுகஜ தூரத்திற்கு அப்பால் நிரம்ப மரியாதையாக நின்று "அம்மணி! நான் சொன்னது உண்மையான சங்கதி! நான் பிறந்தமுதல் இந்தக்ஷணம் வரையில், எந்த விஷயத்திலும்கூட பொய்யென்பதையே பேசியறியேன். நான் சொன்னதே வாஸ்தவம்!" என்றான். அதைக்கேட்ட கல்யாணியம்மாள், "ஓகோ! அப்படியா! இத்தனை வருஷமாகப் பொய்சொல்லிய தில்லையாகையால், அது எப்படி இருக்கிறது பார்க்கலாமென்று இப்போது சிறிதாக ஒரு பொய் சொல்லிப்

பார்க்கிருப்போ லிருக்கிறது!" என்று புன்சிரிப்பாக மறுமொழி கூறி ஞள். அது கோபமாகப் பேசியதைப் போலவின்றி சந்தோஷத்தி ஞல் அவனேடு பரிகாசம் செய்ததுபோல விருந்தது; அதைக்கேட்ட மதனகோபாலன் மறுமொழி கூற அறியாதவனுய் சிறிதுநேரம் தத் தளித்தபின்னர் பணிவாகவும் உண்மையான விசனத்தோடும், "இது என்னுடைய பேரல்லாத காலமென்றே நினைக்கிறேன். இந்தத் தவறை நான் என்னுடைய மனதறியச் செய்தவனன்று என்பதை நான் எப் படி ருஜுப்படுத்தப் போகிறேன்? இவ்வளவு நீண்ட காலமாக தாங் கள் என்னுடைய நடத்தைகளையும் குணத்தையும் கவனித்திருப்பீர் கள்; அந்த நன்னடத்தையை ஆதாரமாக வைத்துக்கொண்டு தாங் கள் என்னுடைய வார்த்தையை நம்பவேண்டும். நான் வழி தவறி வந்ததாக நினைக்காவிடில், இந்த அந்தப்புரத்தில் நான் நுழைவதற்கு வேறே என்ன காரணமிருக்கப்போகிறது? தாங்களே சொல்லுங்கள்" என்று மிகவும் சஞ்சலத்தோடு கூறவே, அதைக் கேட்ட கல்யாணி யம்மாள் கலக்கென்று நகைத்தவளாய், "நன்ருயிருக்கிறது நியாயம்! வேறே என்ன காரணத்தினுல் நீ இங்கே வந்தாயென்பதை நானு சொல்லுகிறது? நீயல்லவா சொல்லவேண்டும். எவ்வளவோ காலமாக இந்த மாளிகைக்குள் வந்து வீணை கற்றுக்கொடுத்துவிட்டு ஒவ்வொரு நாளும் வழியை அறிந்து கொண்டுபோன உனக்கு இன்று வழி தவறிப்போன தென்பதை உண்மையென்று யார்தான் உடனே நம்பி விடுவார்கள்? இதுவரையில் நீ மிகவும் யோக்கியமாக நடந்து வந்ததி லிருந்து, உன்னுடைய சொல்லை நான் உண்மை யென்று எடுத்துக் கொண்டாலும், என் மனசுக்குள்ளாக ஒருவகையான அவநம்பிக்கை இருந்துகொண்டுதா னிருக்கும். இருந்தாலும் பாதகமில்லை; போனது போகட்டும். ஏதோ தவறுதலாக வந்து விட்டாய், அது வழியின் தவறுதலோ, அல்லது, உன்னுடைய காலின் தவறுதலோ எப்படி யாவது இருக்கட்டும். இப்படி வந்தது வேறே எவராயிருந்தாலும் இந்நேரம் அவர்கள் அடையும் தண்டனை வேறு. உன் விஷயத்தில் எனக்குக் கோபமே உண்டாகவில்லை. ஏனென்ருல் நீ மிகவும் அருமையான குணமும், மேலான பிறப்பும் வாய்ந்தவனுகை யால், இந்த இடங்களுக்கு நீ வருவதை ஓர் அதிர்ஷ்டமாக எண்ண வேண்டும். உன்னை நிற்கவைத்து இவ்வளவு தூரம் கண்டிப்பாகப் பேசியதைப்பற்றி என்னுடைய மனம் நிரம்பவும் தவிக்கிறது; நீ நிற்பது எனக்குக் கொஞ்சமும் சகிக்கவில்லை. இந்த ஸோபாவில்

உட்கார்ந்துகொள். இன்று நீ வந்தபோதே, ஏதோ உடம்பு அசௌக்கியமென்று சொன்னாய். அதனாலேயே இந்தத் தவறும் நடந்திருக்கலாமென்று நான் நினைக்கிறேன்; நிற்கவேண்டாம்; உட்கார்ந்து கொள்ளப்பா!” என்று மிகவும் அன்பாகவும் குளிர்ந்த மொழியாகவும் கூறினாள்.

அவள் அவனை முதலில் தனது அந்தப்புரத்திற்குள் கண்டவுடனே, அவளுக்குண்டான வியப்பும் திகைப்பும் அவன் கூறிய அதிருப்திகரமான காரணத்தைக்கேட்க மிகவும் அதிகரித்தனவாதலால், அவள் தொடக்கத்தில், அவனிடம் சிறிது கடுமையாக மொழிந்தாளானாலும், அவன்மீது அவள்கொண்ட கரைகடந்த அன்பும் வாஞ்சையும் பொங்கியெழுந்து ஒரு நிமிஷநேரத்தில் அவளது மனதை நெகிழ்த்திவிட்டது. நிற்க அவனது அற்புதமான அழகைக் காண்பதனாலும், அருமையான சங்கீதத்தைக் கேட்பதனாலும் உணர்வு கலங்கி இன்ப மடைந்தவளாய், வீணமண்டபத்திலிருக்க மாட்டாமல் சங்கடப்பட்டுக் கடைசியில் எழுந்து ஓடிவந்து தனது பஞ்சணையில் படுத்து, அவள் வேதனையுற்றிருந்தவ ளாதலால், அவனால் ஏற்பட்ட மனப்புண்ணிற்கு அவனது வருகையே பெருத்த அமிர்தசஞ்சீவி போல இருந்தது. அவன் அதுகாறும் அவளோடு பேசியபோதெல்லாம் அவளது புதல்வியரிருவரும், அவளோடு கூடவே இருந்தனர்; அப்போது அவர்கள் இல்லாமல், தானும் அவனும் தனிமையிலிருந்தது அவளுக்கு ஒரு பெருத்த சுமையும் தொல்லையும் ஒழிந்ததுபோல இருந்தது. ஆதலால் அப்போது அவனை உட்கார வைத்து அவனோடு சிறிது நேரமாகிலும்பேசி ஆநந்தமடைய வேண்டுமென்னும் விலக்கவொண்ணாத அவாவினால் பெரிதும் தூண்டப்பட்டவளாய், கல்யாணியம்மாள் மிக உருக்கமான குரல்கொண்டும் அன்பு வெள்ளத்தைக் கண்பார்வையினால் ஓடவிட்டும், உட்கார்ந்து கொள்ளும்படி அவனை உபசரித்தாள். அதற்குமுன் தனது பெண்களின் முன்னிலையில் மிகவும் கம்பீரமான பார்வையாகப் பார்த்து அதிகமான அன்பை வெளியில் காட்டிக்கொள்ளாமல் இரண்டொரு வார்த்தையில் சுருக்கமாகப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்த அந்தச்சீமாட்டி, தான்செய்த பெருந்தவறைப் பற்றி, அதிகமாகக் கோபியாமல் அவ்வளவு எளிதில் தன்னை விட்டதன்றி வரம்பு கடந்த பட்சமும் உருக்கமும் காட்டி தன்னை உபசரித்து உட்காரச்

சொன்னதைக் கண்ட மதனகோபாலன் வியப்பும் திகைப்பும் அடைந்தவனாய், அவள் அன்று அவ்வளவுதூரம் மாறுபட்டு நடந்த தன் காரணமென்ன வென்பதை அறியமாட்டாமல் நிலைகலங்கி சிறிது நேரம் ஸ்தம்பமாக நின்றான். நீண்டகாலமாகத் தன்னிடத்தி லிருந்து சென்று அவளது மனதைசல்லடைக் கண்களாகத் துளைத்து வந்த தனது மோகனாஸ்திரங்களின் மகிமையை அவன் சிறிதும் உணராதவனாதலால், அவனுக்கு அது நிரம்பவும் புதுமையாக இருந்த தன்றி, அவனது மனதில் பலவகைப்பட்ட சந்தேகங்கள் தோன்றி உலப்ப ஆரம்பித்தன. அவன் தனது முகத்தையே கூர்ந்து நோக்கிய கல்யாணியம்மாளது இளகிய பெருத்த விழிகளை நிமிர்ந்து பார்க்க மாட்டாமல் நிரம்பவும் வெட்கமும் சஞ்சலமு மடைந்தவனாகக் கீழே குனிந்த வண்ணம், நடுநடுங்கித் தனது கடைக்கண்ணால் அவளது முகத்தோற்றத்தை மெல்ல நோக்கி அதை ஆராய்ந்தான். அவளது கண்கள் இளகிப் போய் ஒருவகையாக ஜ்வலித்தன. மிகவும் விசால மான இரண்டு விழிகளும் தெப்பங்களைப்போல மிதந்து கொண் டிருந்தன. அதுகாறும் கம்பீரமும் ஆண்மையும் நிறைந்து விளங்கிய அவளது தோற்றம் இளக்கமும் உருக்கமும் காட்டி, அவளது உள் ளம் ஆசையே வடிவாய், அன்பே நிறைவாகத் தத்தளிப்பதை உள் ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதில் வெளியிட்டது. ஒப்புயர் வற்ற வனப்பும் நிறைவும் நிமிர்வும் வாய்ந்த அவளது மார்பு விம்மி விம்மித் தணிந்தது. அந்தக் குறிகளினால் அவளது தேகம் சொல்லி லடங்காத வேதனைகளினால் உலப்பப்பட்டிருந்ததாகத் தெரிந்தது. அதைக்கண்ட மதனகோபாலன் ஒருவகையான அச்சம் கொண்டான்! அவனது கைகால்கள் வெட வெடவென்று நடுங்கின. கல்யாணியம் மாளுக் கெதிரில் தான் நின்று கொண்டிருந்தது அவனுக்கு நிரம்ப வும் வேதனையாக விருந்தது; அந்த இடத்தை விட்டு அப்பால் போய் விடலாமா என்ற ஒரு நினைவு அவனது மனத்தி லெழுந்ததானாலும் தான் அவ்வாறு செய்வது ஒழுங்கல்ல வென்றும், தெய்வீகமாகத் தனக்கு நேரும் துன்பங்களைத் தான் அநுபவித்தே தீரவேண்டு மென்றும் நினைத்தவனாய், அவன் தயங்கித் தயங்கி நின்றான்.

அவன் தனக்கெதிரில் ஸோபாவின்மேல் உட்கார்ந்து கொள்ள அஞ்சுகிறானென்று நினைத்த கல்யாணியம்மாள், முன்னிலும் அதிக அன்பாக அவனை நோக்கி, "மதனகோபாலா! என்ன யோசனை செய் கிறாய்? பாதகமில்லை; உட்கார்ந்துகொள்! ஏன் இப்படி பயப்படுகிறாய்?

இங்கே வந்ததைப்பற்றி நான் கோபித்துக் கொள்ளப் போகிறே னென்று கவலைப்படுகிருயா? என்னை அவ்வளவு அநாகரீகமான மனுஷியென்று நினைக்காதே; உன்னுடைய தங்கமான குணத்துக் கும், நல்ல நடத்தைக்கும், உன்னுடைய விரோதிகூட, உன்மேல் கோபங்கொள்ள மாட்டானே! அப்படி இருக்க நான் கோபித்துக் கொள்வேனு? ஒருக்காலுமில்லை. கவலைப்படாமல் உட்கார்ந்து கொள்; கால் நாழிகை நேரம் உட்கார்ந்து என்னோடு சந்தோஷமாகப் பேசி விட்டுப் போகலாம். உட்கார்ந்துகொள்'' என்று மிக மிக உருக்க மாகக் கூறிய வண்ணம், அவனிடத்தில் நெருங்கி வந்தாள்.

அவளது சொல்லைக் கேட்ட மதனகோபாலன் என்ன செய்வ தென்பதைத் தீர்மானிக்கமாட்டாமல் தவித்தவனுய் பலவாறு எண்ண மிடலானுன். அன்றைய பகலில் மீனுக்ஷியம்மாளது பங்களாவில் தனக்கு நேர்ந்த தீங்கைப்பற்றிய நினைவு அப்போதும் தோன்றியது. தான் எவ்விதமான குற்றமும் செய்யாதிருக்க, தனக்கு அநியாயமாக அவமானமும் தண்டனையும் ஏற்பட்டதைக் கருதி, பெரிய மனித ரது வீடுகளில் பழகுவது கத்திமுனையோடு பழகுவதைப் போன்ற தென்றும், ஆதலால், தான் கல்யாணியம்மாளிடத்தில் அந்த ஏகாந்த மான இடத்தில் இருந்து பேசுவதால் ஏதேனும் பெருந்துன்பம் சம்பவிக்கலாமென்றும் நினைத்தவனுய், மதனகோபாலன் மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலைப் பெரிதும் கொண்டவனு யிருந்தான். கல்யாணியம்மாளது விருப்பப்படி உட் கார்ந்து கொள்வதனுலும் துன்பம் ஏற்படக்கூடியதாகத் தோன்றி யது; அவளது விருப்பத்துக்கு மாருகத் தான் உடனே போக வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிவிட்டுப் போவதனுலும் விபத்து ஏற்பட வழி இருந்தது. தவிர, அன்றைய பகல் வரையில் மதன கோபாலன் மாரமங்கலம் ஜெமீந்தாரது குடும்பத்து ஜனங்களைப் பற்றி மிகவும் நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தான். அன்று கண் மணியம்மாள் வெளியிட்ட விஷயங்களைக் கேட்ட பிறகு, கல்யாணி யம்மாள், மைனர், துரைஸானியம்மாள், கோமளவல்லி ஆகிய நால் வரைப் பற்றியும் அவன் கொண்டிருந்த அபிப்பிராயம் முற்றிலும் மாறுபட்டுப் போனது; அவர்கள் துன்மார்க்கத்தில் செல்பவர்கள் என்ற எண்ணமும், அவர்களிடம் தான் நிரம்பவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டுமென்ற நினைவும், அவர்களுக்கு வீணை கற்

16

றுக் கொடுக்கும் அனுவலி லிருந்தே தான் அதிசீக்கிரத்தில் விலகிக் கொள்ள வேண்டுமென்னும் உறுதியும் அவனது மனதில் உண்டாகி விட்டன. அப்படிப்பட்ட நிலைமையில், தான் தவறுதலாக அந்த அந்தப்புரத்திற்குள் வந்துவிட்டதைப் பற்றியே அவன் பரமசங் கட மடைந்திருந்தவனுதலால், அதற்கு ஒத்ததாகவே கல்யாணியம் மாளது தோற்றமும் சந்தேகிக்கத் தக்கதா யிருந்ததைக் காண, அவள் துர்நடத்தையுள்ளவள் என்றும் தன் விஷயத்தில் அவள் ஏதோ தவருன விருப்பம் வைத்திருக்கிறுளென்றும் மதனகோபா லன் நினைத்துவிட்டான். ஆதலால் அவனது நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பினது நிலைமைபோல விருந்தது. அந்த இடத்தில் ஒரு நொடிநேரம் நிற்பதும் தவருகத் தோன்றியது; அவ்விடத்தை விட்டு உடனே போய் விடுவதும் பிசகா யிருந்தது. ஆதலால் மதன கோபாலன் தனது மனத் துன்பங்களையெல்லாம் ஒருவாருக அடக் கிக்கொண்டு கல்யாணியம்மாளை நோக்கி, "அம்மணி! மகா ஏழையும் கீழ்வகுப்பைச் சேர்ந்தவனுமான என் விஷயத்தில் தாங்கள் இவ் வளவு தூரம் அபிமானம் வைத்து, நான் அறிந்தோ அறியாமலோ செய்த பிழையைப் பாராட்டாமல் என்னை மன்னித்தது மன்றி, ஸோபாவில் உட்கார்ந்து கொள்ளும்படி எனக்கு உபசாரமும் செய் வதைக் காண, எனக்கு மகா சந்தோஷ முண்டாகிறது. ஆனல் என் னுடைய உடம்பு அஸௌக்கியமாக இருக்கிறதென்று நான் முன் னுகவே விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறேன். அதனுலும், இப் போது நான் செய்த தவறினுலும், என்னுடைய மனம் சரியான நிலைமையி லில்லை. நான் உடனே என்னுடைய ஜாகைக்குப் போய்ப் படுத்துக்கொள்ள வேண்டும்போ லிருக்கிறது. நான் போவதற்கு, தயவுசெய்து உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று நிரம்ப மரியா தையாகவும் பணிவாகவும் கூறினன்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாளது மனம் பதறியது; ஒரு தாய் தனது குழந்தையிடத்தில் எவ்விதமான வாத்ஸல்யமும், பிரே மையும் கொள்வாளோ, அவ்விதமாக அவள் மதனகோபாலனை மதித்திருந்தவளாதலால், அவனது உடம்பின் அசௌக்கியத்தை உணரவே, அவளது மனதில் மிகுந்த இரக்கமும் ஆதாரமும் சுரந்தன. அவள் அவனுக்கருகில் நெருங்கி நின்றவண்ணம், "அப்பா குழந்தாய்! உன்னுடைய உடம்பு அசௌக்கியமாக இருக்கிறதென் பது நன்ருகத் தெரிகிறது. உன்னுடைய ஜாகை மிகவும் தூரத்தி

லிருக்கிறதே; நீ இந்த நிலைமையில் அவ்வளவு தூரம் நடந்து போனால் அதனால் உனக்கு அதிகமான அசௌக்கியம் ஏற்படுமன்றி, சிரமபரிகாரம் கொஞ்சமும் உண்டாகாதே, ஆகையால் நீ ஒரு காரியம் செய்; இந்த ஸோபாவில் உட்கார்ந்து, அரைநாழிகை சாய்ந்துகொண்டிரு. அதற்குள் சுடச்சுட கொஞ்சம் காப்பி வரவழைக்கிறேன். அதை சாப்பிடு; அதற்குள் பெட்டிவண்டியைப் பூட்டச்செய்கிறேன் அதில் ஏறிக்கொண்டு நீ வீட்டுக்குப் போய்ச் சேரலாம்; அப்படியே செய்; நான் சொல்வதைக் கேள்; வெட்கப்படாதே; இது பெரிய மனிதர் வீடாயிற்றே என்று லஜ்ஜைப் படாதே; இதை உன்னுடைய சொந்த வீடென்றே பாவித்துக்கொள். நான் உன்னை வித்தியாசமாகவே நினைக்கவில்லை. நீ வேறு, என்னுடைய குழந்தைகள் வேறென்றே நான் எண்ணவில்லை. உண்மையைச் சொல்லுகிறேன். உன்னிடத்தில் எனக்கு இருக்கும் ஆசை என் குழந்தைகளிடத்திலே கூட இல்லை. ஆனால் நான் அதை இதுவரையில் உன்னிடம் காட்டிக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படாமல் இருந்தது; இன்றுதான் ஏற்பட்டது. ஏன் பேசாமல் நிற்கிறாய்? நீ நிற்க நிற்க, என்னுடைய உயிரே தள்ளாடுகிறது; வா; உட்கார்ந்துகொள்" என்று கல்லும் கரையும்படி அவ்வளவு உருக்கமாகக் கூறித், தனது பற்களைத் திறந்து நயமாக வேண்டிக் கொண்டாள். அவளது நடத்தையைக் குறித்து மதன கோபாலன் தவறான அபிப்பிராயம் வைத்திருந்தவனாதலால், அவள் தன்னை ஒரு புத்திரன்போல மதித்து அவ்வாறு உபசரிக்கிறாளென்பதை அவன் சிறிதும் நம்பாமல், அவள் ஏதோ கபடமான எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டே தன்னை இருக்கச் சொல்லுகிறாளென்று நினைத்தான். ஆனால் அவன் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், கீழே குனிந்தவண்ணம், "அடாடா! எனக்கும் இவ்வளவு உபசாரமா! இது, ஒரு நாயை முத்துப் பல்லக்கில் ஏற்றி வைப்பதுபோல இருக்கிறதே! நான் கேவலம் அனாதை; தங்களுடைய சேவகனுக்கு சமமானவன். எனக்கு உடம்பு அசௌக்கியமாக இருப்பதனாலேயே நான் என்னுடைய யோக்கியதையையும் உண்மையான நிலைமையையும் மறந்து; தங்களுக்கு சரிசமானமாக சோபாவில் உட்கார்ந்து கொள்ளலாமா! அது தகாது; அப்படி நான் செய்வேனாகில், என்னைவிட அதிகமான அயோக்கியனும், அகம்பாவம் கொண்டவனும் வேறே எவனு மிருக்கமாட்டான். வேண்டாம்; நான் நின்றுகொண்டே பேசுகிறேன்; தங்களுக்கு என்ன விஷயங்

கள் கேட்கவேண்டுமோ அவைகளைக் கேளுங்கள்; நான் நின்ற படியே பதில் சொல்லிவிட்டு, தங்களிடம் விடை பெற்றுக்கொண்டு என்னுடைய ஜாகைக்குப் போகிறேன்.” என்று உண்மையான பணிவோடு கூறி சிறிது நகர்ந்து கொண்டான்.

அவனது குணத்தழகையும் சொல்லழகையும் பணிவையும் புத்திசாலித்தனத்தையும் கண்டு பூரிப்படைந்த கல்யாணியம்மாள் பெருமகிழ்ச்சிகொண்டு தனது அதரங்களை மலர்த்தி அழகாக நகைத்து “ஆகா! என்ன குணம்! பிள்ளையிருந்தாலும் இப்படியல்லவா இருக்க வேண்டும்! என்னுடைய பிள்ளையும் இருக்கிறானே! அணிப்பிள்ளை தென்னம்பிள்ளை; அடே மதனகோபாலா! விலையில்லா மாணிக்கக்கட்டி யென்பதும் உனக்குத்தான் தகும். இந்த உலகத்தில் நான் இதுவரையில் கண்ட மனிதர்களிலெல்லாம், நீ ஒருவனே முதலாவது பீடத்தில் வைக்கத் தகுந்தவன். நீ ஓர் ஏழையின் வயிற்றில் பிறந்திருக்கலாம். அதனால் உன்னுடைய உண்மையான மேம்பாடுகள் போய்விடுமா? உனக்கு மரியாதைகள் ஏற்படக்கூடாதா? சேற்றுக்கும் தவளைகளுக்கும் நடுவில் மலர்ந்திருப்பதனால், தாமரைப் புஷ்பத்துக்கு ஏதேனும் இழிவு ஏற்படுமா! அது சர்வேசுவரனுடைய முடியில் போய் தங்கும் யோக்கியதையும் மகிமையும் உடையதா யிருக்கிறதல்லவா; ஆகையால், உன்னிடத்தில் எவ்வளவு அபாரமான சிறப்புகளும் மேன்மைகளும் இருக்கின்றன வென்பதை நீ அறிந்து கொள்ளவில்லை யென்றே நினைக்கிறேன்; அறிந்து கொண்டிருந்தால் “நாய்க்கு முத்துப் பல்லக்கு மரியாதையா? என்பது போன்ற தகாத வார்த்தைகளை நீ உபயோகித் திருக்கவே மாட்டாய். இந்த உலகத்தில் எந்த அம்சத்திலாகிலும் உன்னைக் காட்டிலும் சிறந்த மனிதன் வேறே இருக்கிறானென்று யாராவது சொல்ல முடியுமா? அழகை எடுத்துக்கொண்டால், உன்னை மன்மதனுடைய அவதாரமென்றே சொல்ல வேண்டும். இந்த உலகத்திலுள்ள ஆண்பெண்களின் அழகையெல்லாம் திரட்டி எடுத்தாலும், அது உன்னுடைய ஒரு கண்ணழகுக்கு இணை நிற்காது. குணத்தை எடுத்துக்கொண்டாலோ, எல்லோரும் உன்னிடத்தில் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். நடத்தையோ பதிவிரதாஸ்திரீகளின் நடத்தையைக் காட்டிலும் அதிக மனோரம்மியமானதாகவும் மாசற்றதாகவு மிருக்கிறது. வித்தையிலோ கலைவாணியே ஆணுருக்கொண்டு

வந்ததுபோல இருக்கிறாய்; ஒவ்வொரு அம்சத்திலும் உத்தமமான அமைப்பை பெற்றிருக்கும் உனக்கு மரியாதை செய்யாவிட்டால், பிறகு நாங்கள் வேறே யாருக்குத்தான் மரியாதை செய்யப் போகிறோம்? கேவலம் பிறப்பையும் பணத்தையும், மூட உலகமே பாராட்டுமன்றி விவேகிகளா யிருப்பவர் அவற்றை மதிக்க மாட்டார்கள். மற்றவர் உன்னை எப்படி மதித்தாலும் மதிக்கட்டும்; நான் உன்னைக் கண்டமுதல், உன்னை சாதாரணமாகவே மதிக்கவில்லை. நீ சகலமான நன்மைகளும் பூர்த்தியாக நிறைந்த ஒரு நிதிக்குவியல் என்றே நான் உன்னை நினைப்பதன்றி, நமக்கு இப்படிப்பட்ட குழந்தை ஒன்று இருக்கக்கூடாதா என்று எத்தனை தடவைகளில் நினைத்திருப்பேன் தெரியுமா! நீ கேவலம் தாழ்ந்தவனென்றும், மகா பெரிய மனிதர்களான எங்களுக்கு நெடுந்தூரத்துக்கப்பால் கைகட்டி வாய்புதைத்து நிற்கத் தகுந்தவனென்றும், நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் நான் உன்னை எங்கே வைத்துக்கொண்டிருக்கிறேன் தெரியுமா! என்னுடைய ஹிருதய கமலமாகிய கோவிலில் உன்னை ஒரு தெய்வம் போல வைத்து சதாகாலமும் பெருமைப்படுத்தி வருகிறேன். இன்று வீணை மண்டபத்திலிருந்து இடைநடுவில் எழுந்து வந்தபின் உன் நினைவே நினைவாக்கொண்டு நான் படுத்திருந்ததன்றி வேறே எந்த நினைவையும் கொள்ளவில்லை. நான் உன்னை என்னுடைய உயிருக்குயிராகவும், குழந்தைகளுக்கெல்லாம் மகா அருமையான குழந்தையாகவும் மதித்து வந்திருக்கிறேன்; மற்ற எவர்மேலும் ஏற்படாத அவ்வளவு அதிகமான ஒரு வாத்சல்யமும் பக்ஷமும் உன் விஷயத்தில் இத்தனை மாதகாலமாக ஏற்பட்டு நிமிஷத்துக்கு நிமிஷம் அது பெருகிக்கொண்டே இருக்கிறது. என்னுடைய மனதை அவ்வளவு தூரம் சின்னபின்ன மாக்கிவிட்ட மனிதனாகிய நீ என்னை யாரோ ஓர் அன்னிய ஸ்திரீயென்றும், மரியாதைக்கு அருகமுள்ள ஜெமீந்தாரினியென்றும் நினைத்து, முகமறியாதவன்போல நடந்து கொள்வது சகிக்க முடியாத துன்பமாக இருக்கிறது. நான் சொல்வதைக் கேள்; இன்று நீ அரை நாழிகையாவது இங்கே உட்கார்ந்து என்னோடு சந்தோஷமாகப் பேசிவிட்டுப் போகாவிட்டால், என் மனம் அமைதிப்படாது. நான் இன்றிரவு முழுதும் தூங்கவே போகிறதில்லை. நீ நிற்காதே; முதலில் வந்து உட்கார்ந்துகொள்; கண்மணி!" என்று மகா உருக்கமாகவும் மெய்மறந்த துணிபோடும் கூறியவண்ணம், கல்யாணியம்மாள் புன்னகையும் மகிழ்ச்சியும் பிரகாசித்த முகத்தின

ளாய், அவனிடம் நெருங்கி அவனது கரத்தைப் பிடித்து அவனை மெல்ல இழுத்து வந்து ஸோபாவில் உட்கார வைத்தாள். அவளது அபூர்வமான சொற்களைக் கேட்ட மதனகோபாலன் நிலைகலங்கி, அது உண்மையோ கனவோ என்று மதிமயங்கி மருண்டு நின்ற சமயத்தில் அவள் தனது கரத்தைப்பற்றி இழுக்கவே, அவன் தனது நல்லுணர்வையும் பஞ்சேந்திரியங்களையும் நம்பாமல் வியப்பும் திக்பிரமையும் கொண்டு இரண்டொரு நிமிஷம் வாய் பேசா ஊமைபோல அவளோடுகூடவே ஸோபாவரையில் நடந்தானாலும், அதன் மீது உட்காராமல், அதன் மரச்சட்டத்தை உறுதியாகப் பிடித்துக் கொண்டு நின்றான்.

அதற்குள் அவனது நல்ல உணர்வு திரும்பியது; தான் பெருத்த அபாயகரமான நிலைமையி லிருந்ததாக அவன் நினைத்து விட்டான். மீனாக்ஷியம்மாளது பங்களாவில் நேர்ந்த துன்பத்தைக் காட்டிலும், இது ஆயிர மடங்கு பெருத்த விபத்தாகத் தோன்றியது. அவளது சொற்களும் தோற்றமும் அன்னிய மனிதனை தன்னை அவள் நாணமின்றித் தொட்டு இழுத்ததும் அவனுக்கு ஒரே விஷயத்தை உறுதிப்படுத்தின. அவள் தன்மீது மோகங்கொண்டு, தனது சிற்றின்ப சுகத்தை நாடுகிறாள் என்ற எண்ணம் மதனகோபாலனது மனதில் பட்டது. கண்மணியம்மாள் அன்றைய பகலில் சொன்னதற்கு அநுசரணையாகவே, கல்யாணியம்மாளது நடத்தையும் இருந்ததைக்காணவே, அவன் "சே! இவர்கள் மிகவும் கேவலமான நடத்தை யுடையவர்கள். நாளை முதல் இவர்களுடைய முகத்தில் விழிக்கவே கூடாது. இந்தக் கண்டத்துக்கு நான் எப்படியாவது தப்பித்துக் கொண்டு போய்விட வேண்டும். ஈசுவரா! நீ தான் இந்த சமயத்தில் வந்து எனக்கு ஒரு துன்பமுமில்லாமல் என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று எண்ணமிட்டவனாய், பெரிதும் கலக்கமும் குழப்பமுமடைந்து சிறிதுநேரம் தவித்தபிறகு தனது சஞ்சலக் குறிகளை மறைத்துக்கொண்டு தனக்கெதிரில் ஒரு கஜதூரத்தில் விலகி நின்ற கல்யாணியம்மாளை நோக்கிப், புன்னகைபூத்த முகத்தோடு நயமாகப் பேசத்தொடங்கி, "அம்மணி! தாங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்துகையில், நான் உட்காராம லிருப்பது பிசகு; இதோ உட்கார்ந்து கொள்ளுகிறேன். ஆனால், உட்கார்ந்து கொள்வது மாத்திரம் போதுமா? தங்களோடு சந்தோஷமாகப் பேச வேண்டாமா? என்னுடைய உடம்பு சரியான நிலைமையிலில்லை; மனதோ வேறிடத்தி

லிருக்கிறது. இப்படிப்பட்ட அவஸ்தையில், நான் தங்களோடு சந் தோஷமாக எப்படிப் பேசப்போகிறேன்? இன்று மாத்திரம் தாங்கள் என்மேல் தயை புரிந்து மன்னித்துக் கொள்ளுங்கள்; கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது; நான் தங்களுடைய சேவகன்; ஒவ் வொரு நாளும் இந்த மாளிகைக்கு வரவேண்டியவன். தங்களுக்கு எந்தநேரம் ஸௌகரியப்படுமோ அதைக் குறிப்பிட்டால், அந்தப் படி வந்திருந்து, அரை நாழிகையல்ல, அரை நாள் வேண்டுமானாலும் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போகிறேன்; இந்த ஒருபொழுது மாத் திரம் தாங்கள் என்னை விட்டுப்பிடிக்க வேண்டும்'' என்று நயமாக இறைஞ்சி மன்றாடினான். அதைக்கேட்ட கல்யாணியம்மாளது முகம் மாறுபட்டது; அவள் அதுகாறும் ஏக சக்கராதிபதியாக இருந்து தனது சித்தமே சட்டமாக மற்ற எல்லோரும் நிறைவேற்றும்படி செய்து வந்தவள்; தான் சொல்வது சரியானதோ தவறானதோ பிறர் அதைச் செய்தே தீரவேண்டும் என்ற கொள்கையுடையவள்; எவரே னும், அதை மறுத்து மறுமொழி கூறினாலும், அல்லது, அதற்கு மாறான காரியம் செய்தாலும், அவளுக்கு ரௌத்திராகாரமான கோபம் வந்துவிடும்; அதன் பிறகு அவள், யானை தனக்குத் தீங் கிழைத்தவனை மனதிற்குள்ளாகவே பகைத்து சமயம் பார்த்து நசுக்கி விடுவதுபோல, விஷயம் அற்பமானதானாலும், அவள் அதை மன தில் வைத்துக்கொண்டு, தன்னிடம் முரணிய மனிதருக்குத் தீங் கிழைக்கவே வழி தேடுவாள். கல்யாணியம்மாள் அப்படிப்பட்ட குணமுடையவளா யிருந்தும், மதனகோபாலனது விஷயத்தில் அவ ளுக்கு விவரிக்கவொண்ணாத ஒருவகையான பிரேமையும் கவர்ச்சி யும் ஏற்பட்டு விட்டமையால், அவன் அவளது வேண்டுகோளை அவ்வளவு மறுத்ததற்கும், அவள் பொறுமையோடு மென்மேலும் தனது விருப்பத்தையே பிடிவாதமாக வெளிப்படுத்திக் கொண் டிருந்தாள். அவனோடு தனிமையில் அரை நாழிகை நேரமாகிலும் பேசவேண்டுமென்று அவள் நீண்டகாலமாக ஆவல் கொண்டிருந்த தன்றி, அவளது மனோவிகாரங்களோ, எந்த விதத்திலும் அதிக்கிரம மான பிடிவாதமுடையன வாதலால், தனது மனத்திலுண்டாம் வேட்கைகள் நிறைவேறினாலன்றி, அவளது மனமும் தேகமும் கட்டிலடங்குவது மகா துர்லபமாக விருந்தது. ஆதலால், மதன கோபாலன் மறுநாள் வருவதாகச் சொன்னதைக் கேட்ட கல்யாணி யம்மாள் தான் அவ்வளவு தூரம் கெஞ்சி மன்றாடியும், மிகவும் கீழ்

நிலைமையிலுள்ள அந்த மனிதன், தனது அவாவைப் பூர்த்தி செய்ய வில்லையே என்ற ஒருவகையான மனத்தாங்கல் சிறிது ஏற்பட்டது; மகா உரமான அவளது மனம் தான் பிடித்த பிடியை விடு கிறதா என்று பெரும்பாடு பட்டுத் துடிதுடித்து அடங்காமல் கொந் தளித்தெழுந்தது; தேகமோ அவளது கட்டிலடங்காமல் ஆகாயத்தில் பறக்கும் போலிருந்தது. அவளது கைகளும், மார்பும், தேகமும் அதிகமான படபடப்பினால் திமிறி கட்டிலடங்காமல் பதறின. உடனே கல்யாணியம்மாள் மிகவும் இளக்கமான பார்வையாக அவனைப் பார்த்து, "அடே மதனகோபாலா! என்ன பெருத்த காரியத்தைச் செய்யும்படி நான் உன்னிடம் கேட்டுவிட்டேன்? உன் விஷயத்தில் நான் எவ்வளவு ஆழ்ந்த பிரியம் வைத்திருக்கிறே னென்பதை நீ உணர்வாயானால், நீ என்னுடைய வேண்டுகோளை இப்படி அலட்சியம் செய்திருப்பாயா! ஆகா! என் மனமும் தேகமும் இப்போது எப்படி பதறுகிறது தெரியுமா! (சிறிது யோசனை செய்தபின் அவனிடம் நெருங்கி) நாளையதினம் வீணை கற்றுக்கொடுத்த பின் இந்த இடத்துக்கு அவசியம் வருவாயா? உன்னுடைய பேச்சை நம்பலாமா?" என்று மிகவும் அதிகரித்த நயத்தோடு வினவிய வண்ணம் அவனது அழகுவழிந்த முகத்தையும் விசாலமான வசீகரக் கண்களையும் உற்று நோக்கினாள். அவளது சொல்லைக்கேட்ட மதன கோபாலன் சிறிது தத்தளித்தவனாய்ப் புன்சிறிப்போடு மறுமொழி கூறி அவள் கேட்டுக் கொண்டபடி மறுநாள் அதே நேரத்துக்கு வருவதாக ஒப்புக் கொண்டான். அவனது சொல்லழகோடு பல்லழகும் ஒன்று கூடி, கல்யாணியம்மாளை வசியப்படுத்தி விட்டன. அவன் புன்னகை செய்தபோது அவனது வலது கன்னம் அழகாகக் குழிந்ததும், அவனது பெருத்த கண்கள் மலர்ந்ததும் அவளது உயிரைக் கொள்ளை கொண்டன. அவள் அதற்குமுன் அவனுக்கு அவ்வளவு சமீபத்தில் நெருங்கி அவனது அழகைக் கண்டவளன்றாதலால் அப்போது அவள் தன்னை முற்றிலும் மறந்து ஒருவகையான ஆவேசங் கொண்டவளாய், "சரி, நீ இப்போது போவதைப்பற்றி எனக்கு எவ்வித ஆக்ஷேபணையு மில்லை. ஆனால் உன்னிடம் ஒரு சிறிய வேண்டுகோளிருக்கிறது. அதைப் பூர்த்தி செய்துவிட்டுப் போய்விடு; அப்படிச் செய்யாவிடில் நான் உன்னை இன்று வெளியில் விடப்போகிற தில்லை; இந்த திரேகத்தினால் உன்னை நான் அப்படியே கட்டி எடுத்து மார்போடணைத்து, ஒரே ஒரு முத்தம் கொடுத்துக் கீழே விட்டுவிடு

கிறேன்; அதன் பிறகு நான் உன்னை வருத்துவதில்லை நீ உடனே உன்னுடைய ஜாகைக்குப் போய்விடலாம்" என்று கூறியவண்ணம், கரைகடந்த ஆசையோடும் ஆவலோடும் மனக்கொந்தளிப்போடும் தனது கைகளையும் மார்பையும் விரித்துக்கொண்டு அவன்மீது பாய்ந்தாள்.

அதைக்கண்ட மதனகோபாலன் கதிகலங்கிப்போய் முற்றிலும் திக்பிரமை கொண்டவனாய், அவ்விடத்தைவிட்டு சரேலென்று நாலைந்தடி தூரம் பின்னால் விசையாகப் பாய்ந்தவண்ணம் "அம்மணி! வேண்டாம், வேண்டாம்; அந்தக் காரியத்துக்கு மாத்திரம் நான் அருகமற்றவன்; இதனால் என்னுடைய உயிர் போவதாயிருந்தாலும் இப்படிப்பட்ட பாபகரமான காரியத்துக்கு நான் உடன்படமாட்டேன். இதுவரையில் தாங்கள் என்மேல் சாதாரணமான அபிமானம் வைத்தீர்கள் என்று நினைத்து நான் இவ்வளவு நேரம் தங்களோடு பேசிக்கொண்டிருந்தேன்; தாங்கள் இவ்விதமான நோக்கம் வைத்திருக்கிறீர்களென்பது எனக்குத் தெரிந்திருந்தால், இந்நேரம் நான் போயிருப்பேன்" என்று கூற, கல்யாணியம்மாள் அவனது சொல்லைக் காதில் வாங்காமல் முன்னிலும் அதிகரித்த வெறிகொண்டவளாய் "நில் நில்; போகவேண்டாம்; உன் அப்பன் மேல் ஆணை; நீ போகவே கூடாது; என்னை ஒருதரம் கட்டிக்கொள்ளாமல் போவாயானால், இப்போதே என் உயிர் போய்விடும்; அதற்கு நீ தான் உத்தரவாதியாவாய்; நில், நில்; ஏன் இப்படி ஓடுகிறாய்? நான் உன்னை ஏதேனும் துன்மார்க்கமான நினைவோடு கூப்பிட்டால் நீ ஓடவேண்டும்; உன்னை ஒரு குழந்தைபோல நினைத்து உன்மேல் பிரியப்படுகிறேன்; எங்கே வாசற்படியண்டை ஓடுகிறாய்? அடே! இப்படித்தான் செய்வாயா? நாளைக்கு நீ என்னுடைய முகத்தில் விழிக்க வேண்டாமா? ஐயோ! என் உடம்பு பறக்கிறதடா! அடே! ஓடாதே ஓடாதே' என்று கெஞ்சி நயந்து கொஞ்சி மன்றாடி அவனைத் துரத்த, அவன் "நில்லுங்கள், நில்லுங்கள், வேண்டாம் வேண்டாம்; இந்தக் காரியத்துக்கு மாத்திரம் நான் இணங்கவே மாட்டேன்; இது நமக்குத் தகாது" என்று சொல்லிக்கொண்டே வாசற்படியண்டை போய்விட்டான். அவனுக்கு ஒருகஜ தூரத்திற் கருகில் கல்யாணியம்மாள் அவனைப் பின்பற்றித் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும், நன்றாக வாய்விட்டு

பேசிக்கொண்டே ஓடினார்களாதலால், அவர்களது வாக்குவாதம் பக்கத்து அறையில் எவரேனும் இருப்பார்களானால், அவர்களது செவிகளுக்கு நன்றாக எட்டி இருக்கலாம். அவ்வளவு வெளிப்படையான குரலில் ஆக்ஷேபணை சமாதானம் செய்துகொண்டு அவர்கள் சேவலும் பெட்டையும்போல, முன்னும் பின்னுமாக வாசற்படியண்டை ஓடிய சமயத்தில், அந்த வாசலிற்கு எதிர்ப்பக்கத்து வாசலில் "என்ன அது? என்ன அது? யார் அவன்? ஏன் அவனை துரத்துகிறீர்கள்?" என்ற குரல் உண்டாயிற்று. அதைக்கேட்ட கல்யாணியம்மாள் இடியோசையைக் கேட்ட நாகமென அஞ்சி நடுங்கி திடுக்கிட்டுத் திரும்பி அந்த ஓசையுண்டான கதவுப்பக்கம் நோக்கி, அங்கே துரைஸானியம்மாளும், கோமளவல்லியும் பெரிதும் திகைப்பும் வியப்பும் கொண்டு நின்றதைக் கண்டாள். அவர்களைக் கண்ட கல்யாணியம்மாளது உயிரில் முக்கால் பாகமும் உடனே போய் விட்டதென்றே சொல்லவேண்டும். அவள் அப்படியே கல்லாய்ச் சமைந்து போனாள். அதற்குள் மதனகோபாலன் செத்தேன் பிழைத்தேனென்று வாசற்படிக் கப்பால் ஓடிப்போய்விட்டான்.

---

## 9-ம் அதிகாரம்

## பாணிக்கிரகணமும் சாந்தியும்

ஆறாவது அதிகாரத்தின் முடிவில் மாரமங்கலம் மைனர் இரவு இரண்டு மணி சமயத்தில் ஆலந்தூருக் கருகிலிருந்த ஒரு பங்களாவில், பாலாம்பாள் என்ற ஒருநாடகப் பெண்ணினிடம் பாணிக்கிரகணம் செய்துகொண்டிருந்தானல்லவா! அவ்விடத்தில் அதற்கு மேல் நிகழ்ந்த சம்பவங்களை கவனிப்போம். பாலாம்பாள் என்ற அந்த மங்கை நிரம்பவும் யௌவனப் பருவத்தினளாகவும், அழகில் அநேகமாய் மோகனாங்கிக்கு இரண்டாவதாகச் சொல்லத்தக்க அதி சுந்தரவதியாகவும் இருந்தாள் ஆனால் தேக சுத்தத்திலும் குணங்களின் மேம்பட்ட அமைப்பிலும் அவளுக்கும் இவளுக்கும் ஒற்றுமையே இல்லாதிருந்தது. மோகனாங்கி உண்மையிலேயே அன்னிய புருஷனிடம் பேசி யறியாதவள்; பாலாம்பாளோ வெளிப்பார்வைக்கு அளவுகடந்த நாணம், மடம், அச்சம் முதலிய உத்தம குணங்களை வகித்துக்கொண்டு, அந்தரங்கத்தில், ஒரு சமயத்தில் ஒரே புருஷனோடு பேசி, அவனது மனம் கோணாமல் நடந்துகொள்ளுவாள்

ஏனெனில், அந்த நாடகத்தின் சொந்தக்காரரான அறுவது வயது நிறைந்த ஒரு மனிதருக்கு அவள் ஆசை நாயகியாக இருந்தாள். அந்த யௌவனப் புருஷர், அவள்மீது ஆண்வாடை வீசக் கூடாதென்று, அவளை ஊருக்கு வெளியில் தனிமையான ஒரு பங்களாவில் ரகசியமாகக் குடிவைத்திருந்தார். அவர் தன்மீது சந்தேகம் கொள்ளாதிருக்கும் பொருட்டு, அவள் பலமாக வெளிவேஷம் போட்டு, அவரது பெருத்த வருமானங்களை யெல்லாம் பலவழிகளில் அவள் கொள்ளையடித்து வந்தாள். அவ்வாறு பெருத்த பணக் குவியலைக் காணக்காண, அதே பேராசையும் பெரும் பித்தமும் அவளது தலைக்கேற, அவள் இரவு பகல் பணம் பணம் என்று பணப் பேய் கொண்டலைந்து ஒவ்வொரு நாளும் எண்ணிறந்த ஆடுதன் ராஜாக்களின் தலைகளைத் தடவிக்கொண்டே வந்தாள்.

அவள் சென்னைக்கு வந்த ஆறுமாத காலத்திற்குள், அவளுக்கு சற்றேறக்குறைய ஆயிரம் சீமான்களது திருட்டு நட்பு ஏற்பட்டு விட்டது. ஒவ்வொரு வேளையிலும் ஒவ்வொரு சீமான் அவளது தரிசனத்திற்காக வந்து காத்திருந்து பாதகாணிக்கை சமர்பித்து, அவளது பரிபூரணமான அருளுக்கும் பிரசாதங்களுக்கும் பாத்திரராகித் திரும்பிப் போவதுண்டு; ஆனால் அவள் அவர்களைக்கொண்டு தனக்கு ஒவ்வொரு நாளும் தபால்மூலமாக பல கடிதங்கள் எழுதச் செய்வாள். எப்படியெனில், கடிதம் எழுதுபவர் வேறொரு ஜெமீந்தாரது பெயரை எழுதி, அவர் அவளிடம் மையல் கொண்டிருப்பதாகவும், அவள் தமக்கு ஆசை நாயகியாக இருக்க சம்மதித்தால், தமது சமஸ்தானத்தை அவள்பேரில் எழுதி வைத்துவிடுவதாகவும், அதைப்போலவே, வேறு பலவகையாகவும் எழுதி யனுப்பச் செய்வாள்; அவளும் நாடகத் தலைவரான கிழவரும் ஒன்றாக இருக்கையில் தபால்காரன் தனது கடிதங்களைக் கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்திருப்பாள். அவள் அவைகளை வாங்கி, இரண்டொன்றைக் கிழவருக்கெதிரில் பிரித்துப் படிப்பாள்; உடனே அவள் நிரம்பவும் கோபம் கொண்டவள்போல, அவைகளைத் தனது காலடியில் போட்டு உதைத்து மிதித்து அவற்றின்மீது எச்சிலை உமிழ்ந்து அவைகளையும் படிக்கப்படாத மிகுதிக் கடிதங்களையும் ஒன்றாகச் சேர்த்து நெருப்பில் எறிந்துவிடுவாள்; அல்லது கிழித்தெறிந்து விடுவாள். தவிர, இரண்டொரு முறை, நூறுரூபாய் நோட்டுகளை

வைத்தனுப்பச்செய்து, கடிதத்தைப் பிரித்து உள்ளே இருந்த நோட்டைப் பார்த்து, அதைக் கிழவரிடம் காட்டிவிட்டு நோட்டோடு கடிதத்தை நெருப்பில் போட்டு எரித்துவிடுவாள். இவ்வாறு, அவள் நிரம்பவும் தந்திரமாக நடந்துகொண்டு, எந்தப் புருஷனிடத்திலும் பக்ஷபாதமாக நடவாமல், எல்லோரையும் சமமாக சந்தோஷிப்பித்து, எல்லோரிடத்திலும் பெரும்பொருள் அபகரித்து வந்தாள். நாடகத் தலைவரான கிழவரோ அந்தப் பெண்ணழகி பதிவிரதா சிரோரத்தினமென்றும், அவளை அந்த ஜென்மத்தில் தீண்டும் பாக்கியம் பெற்ற ஆண்மகன் தாமொருவரே யென்றும் நினைத்து அளவளாவி, ஆநந்தக் கூத்தாடி, அவளை உச்சிமோந்து, உள்ளங்காலைத் தாங்கி. கன்னங்களைத் தடவி, காலைப் பிடித்துவிட்டு, ஒவ்வோர் இரவிலும் ஊரார் பொருளை யெல்லாம் அவர் எந்த வழியில் திரட்டுகிறாரோ அதே வழியாக அவளிடம் சமர்ப்பித்து, உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் வைர வைடூரியங்களால் அவளை அலங்கரித்து சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு எழுந்துநின்று பயபக்தியோடு ஹரஹரவென்று கன்னங்களில் அடித்துக்கொண்டு அவளிடம் பரமபக்தனைக ஒழுகி வந்தார். மற்ற நாடகர்கள் நடிகளுக்காகவும், நாடகக் காக்ஷியின் சாமான்கள் வைப்பதற்காகவும் புரசைப்பாக்கத்தில் அமர்த்தப்பட்டிருந்த ஜாகையில் அவர் இரவெல்லாம் பாதுகாப்பாக இருப்பார்; பொழுது விடிந்த பிறகு ஆலந்தூர் பங்களாவிற்கு வந்து விடுவார்; வந்து தமது நீராட்டம், சாப்பாடு, துயில் முதலியவற்றை நடத்திக்கொண்டு பிற்பகலில் திரும்பவும் புரசைப்பாக்கம் போய்விடுவார்; அதுவரையில் பாலாம்பாளிலும் மிஞ்சிய பதிவிரதா சிரோன்மணிகள் வேறே எவரும் இருக்கமாட்டார்கள் என்னும்படி அவள் நடந்துகொள்வாள்; கிழவரது தலை மறைந்த பிறகே, அம்பாள் பதிவிரதா வேஷத்தைக் கலைத்துவிட்டு தனது சுயரூபத்தோடு, சுயராஜ்ய பரிபாலனம் செய்யத் தொடங்குவாள். அதன் பிறகு அந்தச் சக்கரவர்த்தினியைக் காணும்பொருட்டு போலி ராஜாக்களான சிற்றரசர்கள் ஒருவர்பின் னொருவராகக் கப்பணங்கள், பல வகைப்பட்ட காணிக்கைப் பொருள்கள் முதலிய சிறப்புகளோடு வந்து சேருவார்கள்; கடிதப் போக்குவரத்துகள் நடைபெறும்; மணிக்கணக்கில் அவள் ஒவ்வொருவருக்கும் பேட்டி கொடுப்பாள்; ஆனால், அவள் ஒருவரோடு பேசும் சங்கதியை மற்றொருவரிடம் சொல்லவே மாட்டாள். அவனவனும் தான் ஒருவனே அவளோடு

நட்பாயிருப்பவன் என்று உறுதியாக நம்பி கடைசி வரையில் ஏமா றும்படி அவள் அவ்வளவு அபாரமான திறமையோடும், சாமர்த்தி யத்தோடும் தனது காரியங்களை நடத்திவந்தாள். விஷயங்களை மறைப்பதிலும், சமயோசிதமாக மாற்றுவதிலும், கூட்டிக் குறைத்துப் பேசுவதிலும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விஷயங்களை சம்பந்தப்படுத்திப் பேசுவதிலும், அவளது மூளைக்கு இணையானது இந்த உலகத்தில் இல்லையென்றே சொல்லவேண்டும்; அப்படிப்பட்ட மகா ஜால மலையாள பகவதியின் வலையிலேயே நமது மைனர் போய் அகப்பட்டுக்கொண்டு, அவளது அற்புதமான ரூபலாவண்ணியங் களைக் கண்டு மதிமயங்கி தான் நாடிவந்த மோகனாங்கியையும் மறந்து, அன்றிரவின் முற்பகுதியில் தான் அடைந்த பெருந்துன்பங்களை யெல்லாம் நினையாமல் அவளுக்கருகில் உட்கார்ந்து அவளது கரத்தைப் பற்றினான்.

அவன் தனக்கருகில் வந்து உட்கார்ந்துகொள்ளும் வரையில், தனது அழகிய வசனங்களினாலும், அதரங்கள், மார்பு முதலியவற் றின் சேஷ்டைகளான மோகனாஸ்திரங்களினாலும், கைகளின் சாக ஸங்களினாலும், அவனது மதியை மயக்கி அவனைத் தனது வலையில் வீழ்த்திய பாலாம்பாள், அவனிடம் தனது கையை மாத்திரம் தந்தி பேசும்பொருட்டு கொடுத்துவிட்டு, தனதுதேகத்தை சிறிது அப் பால் நகர்த்திக் கொண்டவளாய் மிகவும் நாணமடைந்தவள் போல நடித்து அவனைப் பாராமல் எதிர்ப்பக்கத்தில் வெறுவெளியில் தனது பார்வையை நிறுத்தி பெருத்த வேதாந்தம் பேசத் தொடங்கினவ ளாய், "அடாடா! கடவுளின் திருவிளையாட்டை என்னவென்று சொல்வது! அடுத்த நிமிஷத்தில் என்னவிதமான சம்பவம் நேரப் போகிறதென்பது மனிதருக்குத் தெரியாமலல்லவா ஈசுவரன் மறை த்து வைத்திருக்கிறான்? நான் பிறந்து பதினாறு வருஷகாலமாகி றது. எத்தனையோ மகா ராஜாதி ராஜர்களெல்லாம் இந்தக் கையைத் தொடுவதற்கு தங்களுடைய உடல் பொருள் ஆவி ஆகிய எல்லாவற் றையும் கொடுப்பதாகச் சொல்லி படாத பாடுபட்டுப் பார்த்துப் பய னற்றுத் திரும்பிவிட்டார்கள்; மன்மதனை பழித்த மகா சுந்தர புரு ஷர்களெல்லாம் என்னுடைய வாயிலிருந்து ஒருசொல் வராதா என்று என்னுடைய வீட்டு வாசலில் காத்திருந்து காலொடிந்து திரும்பிப் போகிறார்கள். இதோ இந்த நாடகத் தலைவர் என்னைத் தமது இரு

தய கமலத்தில் வைத்து சதா காலமும் பூஜித்து, இமைகள் கண்மணிகளைக் காப்பதுபோல என்னை அல்லும் பகலும் காத்து, ஆபரணங்களிலும் சுகபோகங்களிலும் செல்வத்திலும் செல்வாக்கிலும் என்னை மூழ்கச் செய்து, தாம் தேடும் பெருந்திரவியங்களை யெல்லாம் என் காலடியில் கொட்டி நான் காலாலிடுவதை தலையால் செய்து தாசாநுதாசனாக இருந்து வருகிறார்; ஆனால், அவருக்கு நான் ஆசை நாயகியாக இருந்து வருகிறேனென்று வெளியுலகம் நினைத்துக் கொண்டிருக்கிறது. அவ்வளவு தூரம் பாடுபடும் கிழவருக்கு அந்த ஒரு பெருமையாகிலும் இருக்கட்டுமென்று நானும் விட்டு வைத்திருக்கிறேன்; ஆனால் இந்த வெற்றிலை சாக்ஷியாகச் சொல்லுகிறேன், அந்தக் கிழவர், என்னுடைய உடம்பைத் தீண்டிக்கூட அறியார்; அவருடைய விஷயத்தில் கூட என் மனம் கொஞ்சமாகிலும் இளகவில்லை. அப்படி கவறிமான் போல உயிரைக் காட்டிலும் மானமே பெரிதாக இதுவரையில் காத்துவந்த நான் இப்போது என்ன காரியம் செய்து விட்டேன்! இது கனவோ நினைவோ என்ற சந்தேகங்கூட உண்டாகிறது. இப்போது பெட்டி வண்டியில் வந்தபோது கூட என்னை வி. பி. ஹாலில் ஏற்றிவிட்ட கிழவர், "நீ கடைசிவரையில் இப்படித்தான் இருக்கப் போகிறாயா? உன்னை நினைத்து நினைத்து என்னுடைய முக்கால் உயிரும் போய்விட்டது. இனி நிற்கும் கால் உயிர் உன்னை யடைய வேண்டுமென்ற ஆசையின் வலுவினாலேயே நிற்கிறது; இரண்டொரு தினத்தில் உண்டு இல்லை என்பது தெரியாவிட்டால் இந்த உயிர் நில்லாது போலிருக்கிறது" என்று சொல்லி என்னை யனுப்பினார். வழியில் வந்தபோது நான் அதே தியானமாக வந்தேன். "இந்தக் கிழவரை விட்டால், நமக்கு வேறே கதி இல்லையே; இவர் லக்ஷலக்ஷமாகப் பொருளை வாரி வாரிச் சொரிகிறாரே; இவரை வேண்டாமென்று தடுத்துவிட்டு என்ன செய்கிறது! இவரிடத்தில் காதலுண்டாக வில்லையே! என்ன செய்கிறது!" என்று யோசித்து யோசித்து சிந்தை கலங்கி கடைசியாக ஒருவகையான முடிவும் செய்யாமல் வந்து பங்களாவுக்குள் நுழைந்தேன். அதற்கு முன்னாகவே ஈசுவரன் என் விஷயத்தில் கவலை கொண்டு என்னென்னவோ ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறான்; ஆகா! இதை என்னவென்று சொல்வது! அந்தக் கடவுளை சர்வக்ஞன், சர்வவியாபி, சர்வபிதா, சர்வமாதா என்றே சொல்லவேண்டும்" என்று கூறி பிரம்மாண்டமாக ஐந்தாறு பெருமூச்சுகளை வரிசையாக வெளிப்

படுத்தினுள்; கண்களிலிருந்து கண்ணீரை ஓடவிட்டாள்; அப்படியே வெறுவெளியைப் பார்த்து அதில் மறைந்திருந்த கடவுள்மீது லயித்துப் போனவள் போலவும், அவனது விந்தையான திருவிளையாடல்களைக்கண்டு வியப்புற்று நகைப்பவள்போலவும் பாசாங்கு செய்தாள்.

அந்த வஞ்சக மொழிகளைக் கேட்டு, அவளது சாகஸங்களைக் கண்ட மைனர், அந்தக் கட்டுக்கதை முழுதையும் வேதவாக்கியமாக நம்பியதன்றி, அவளுக்கிணையான அருந்ததி இந்த உலகத்திலேயே இருக்கமாட்டாளென்றும், தான் அவளை அடைய, தனது உயிரையே அவள் கேட்பதாளுலும், அப்போதே அதை எடுத்து அவளது பாதத்தடியில் வைத்துவிட ஆயத்தமாக இருந்தான்; அவ்வாறு இரண்டொரு நிமிஷத்தில் தீர்மானித்துக்கொண்ட மைனர் புன்னகையோடும் வியப்போடும் அவளை நோக்கி, "அப்படியா! சரி; என்னுடைய முக்கியமான கவலை தீர்ந்தது; இந்த நாடகத்தின் சொந்தக்காரர் உன்னை ஆசை நாயகியாக வைத்திருக்கிருரென்று உன்னுடைய வேலைக்காரக் கிழவி தெரிவித்தாள். அதைப் பற்றியே நான் கொஞ்சம் கவலைகொண்டிருந்தேன்; இப்போது அது வெறும் நட்போடு நிற்கிறதென்பதை உன் வாயால் கேட்க, நிரம்ப சந்தோஷமாகிறது. உன்னுடைய வேலைக்காரர்களைக்கூட நீ நம்பி உண்மையையெல்லாம் சொல்லுகிறதில்லை யென்பது தெரிகிறது" என்முன்.

பாலாம்பாள் அலட்சியமாகவும் அபிநயத்தோடும், "இதையெல்லாம் வேலைக்காரரிடம் தெரிவிப்பார்களா? கிழவர் என்னேடு மிகவும் நெருங்கி அன்னியோன்னியமாகப் பழகுகிறதைக் கண்டு வேலைக்காரர்கள் அப்படி நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் அந்த சமாசாரத்தை வெளியிட்டுக் கொண்டிருந்தால், என்னைக் கண்டு ஆசைப்படும் வேறு எத்தனையோ பிரபுக்களெல்லாம், அருகில் நெருங்கிவந்து தொந்தரவு செய்யமாட்டார்களல்லவா; அந்தக் கருத்தோடுதான், வேலைக்காரர்கள் எப்படியாகிலும் நினைத்துக் கொள்ளட்டு மென்று பேசாமல் விட்டுவிட்டேன்" என்முள்.

அதைக்கேட்ட மைனர், "அப்படியானல், கிழவரிடம் உனக்கு அவ்வளவாகப் பிரியமில்லை யென்றே நினைக்கிறேன்" என்முன்,

பாலாம்பாள் புன்சிரிப்போடு, "அதைத்தான் முன்னமேயே சொல்லிவிட்டேனே. பிரியமிருந்தால், அவருடைய விருப்பப்படி

இருக்க, நான் இதுவரையில் ஏன் ஆக்ஷேபிக்கிறேன் ? தவிர, எனக்கு அவரிடம் பிரியமிருந்தால், அவரை விலக்கிவிட நான் நினைக்க முடியா தல்லவா ?''; என்ருள்.

அதற்குள் மைனர், அவளது இடக்கரத்தை நன்ருக எடுத்துத் தனது மடியின்மேல் வைத்துக்கொண்டு, அதனழகைக் கண்டு நிரம் பவும் சந்தோஷமும் ஆநந்தமுமடைந்தவனுய், அதை மெதுவாகத் தடவி, அதனோடு விளையாடிய வண்ணம் அவளிடத்தில் பேசத் தொடங்கினன்.

ஒரு வீட்டாரது குழந்தை அடுத்த வீட்டிற்குப் போனல், அவர் கள் அதை எடுத்துக் கொஞ்சிக் குலாவி அதனோடு பேசி ஆநந்த மடைவதும், அதன் பெற்ருேர், அது அண்டை வீட்டாரின் பாது காப்பில் பத்திரமாக இருக்கிறதென்று நினைத்து, அதைப்பற்றி கவலைகொள்ளாமல் இருப்பதும் உலக இயற்கையல்லவா! அதுபோல பாலாம்பாள் மைனரது மடிமீது சென்றிருந்த தனது இடதுகரம் இரு வரது நட்பையும் வளர்க்க ஒரு சாதனமாக, தன் விஷயத்தில் நல்ல அநுகூலம் செய்துகொண் டிருப்பதாக எண்ணி, அதைப்பற்றி முற் றிலும் மறந்தவள் போலவும் அவள் தனது மனத்தை வேறிடத்தில் வைத்திருப்பவள் போலவும் மொழிந்து கொண்டிருந்தாள்.

கடைசியாக அவள் கூறியதைக் கேட்ட மைனர், வீணையின் தந்திகளை மீட்டுவதுபோல அவளது கரத்தை நெருடியவண்ணம் "அப்படியானல், நீ கிழவருடைய சிநேகத்தை விலகிவிடத் தீர் மானித்து விட்டாய் என்பது ஏற்படுகிறது?'' என்று புன்னகை யாகக் கேட்டான்.

பாலாம்பாளும் புன்சிரிப்பாக, "இப்போது சிநேகம் இருந்தா லல்லவா அதை விலக்குகிற தென்கிற சங்கதி ஏற்படும். ஒரு கார்டி யன் ஒரு பெருத்த சொத்தைக் காப்பாற்றி, அதை அதன் சொந்தக் காரரிடம் ஒப்புவிப்ப துண்டல்லவா ; அதுபோல, அவர் என்னை இதுவரையில் ஊட்டி வளர்த்துக் காப்பாற்றி அழகு படுத்தி வைத் திருந்தார். இப்போது அதற்கு உரிமையுடையவர் வந்து விட்டபடி யால், அவரிடம் ஒப்புவித்துவிட்டு விலகிக்கொள்ளப் போகிருர் ; அவ்வளவுதான் காரியம்;'' என்று பெருமகிழ்ச்சியோடு கூறினுள்.

மைனர் அகமகிழ்ந்து தற்பெருமையால் பூரித்தவனுய் " சரி ; உரிமையுடையவர் வந்துவிட்டா ரென்கிருயே ; அவர் இப்போது

எங்கே இருக்கிருரென்பதை என்னிடத்தில் சொல்லலாமல்லவா? என்று தனது கண்களைச் சிமிட்டிக்கொண்டு பரிகாசமாகக் கேட்க, அவள் அவனை நோக்கி, "ஓ! அவசியம் சொல்லலாம்; இனி தங்களுக்குத் தெரியாத ரகசியமும் உண்டா? என்னை எப்போதும் ஆண்டநுபவிக்க உரிமையுடைய சீமான் இந்த பங்களாவுக்குள் நுழைந்து இந்த சயன அந்தப்புரத்துக்கு வந்தார்; அவர் மகா திருடர்; எல்லாத் திருடரும் சுவரில் கன்னம் வைத்து வழிசெய்து கொண்டு வீட்டிற்குள் நுழைந்தால், இவர் வழிசெய்து கொள்ளாமலே என்னுடைய இருதயம்வரையில் நுழைந்துவிட்டார். இவரை என்னசெய்கிறதென்பது தெரியவில்லை" யென்று மிகவும் கொஞ்சலாக மொழிந்தாள்.

அதைக் கேட்ட மைனர் பூரித்துப் புளகாங்கித மடைந்து மோகலாகிரி கொண்டவனாய், கலகலவென்று நகைத்து அவளிடம் இன்னம் சிறிது நெருங்கி உட்கார்ந்து, "வழி செய்யாமல் உள்ளே நுழைந்த கள்ளனென்று அவரை நினைக்கிருய்? அப்படி நினைக்காதே, பாலா! உன் மனதுக்கு திருப்தியாக என்னென்ன வழி செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அவர் இப்போதே செய்து கொடுக்கத் தயாராக இருக்கிருர். உன் மனதை வெளியிடலாம்; உனக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளைக் கேட்டுக்கொள்ளலாம்" என்ருன்.

பாலாம்பாள் "நான் வேறே எதைக் கேட்கப் போகிறேன்? ஒரு சுவாமியிடம் வரம் கேட்கிறவர்கள் என்ன கேட்பார்கள்? "எப்போதும் உன் காலடியை விட்டு நீங்காத பேரின்ப சுகமான முக்தியைக் கொடு" என்றுதான் கேட்பார்கள். அதுபோல நான் கேட்பது என்னவென்ருல், 'தாங்கள் இன்றிரவு மாத்திரம் எனக்கு உரிமையுடையவர்களல்ல. நானுள்ள வரையில் தாங்களுள்ள வரையில், எப்போதும் நிரந்தரமாக எனக்கு உரிமையுடையவர்களாக இருந்து என்னை அல்லும் பகலும் ஆண்டநுபவித்துக் கொள்ளவேண்டும்' என்பதுதான். இந்த வேண்டுகோளைப் பூர்த்தி செய்வதில் தங்களுக்கு ஆக்ஷேபனை ஏதாகிலும் உண்டோ?" என்று மகா குதூகலமாகப் பேசினுள்.

அதைக் கேட்ட மைனர் ஆநந்தசாகரத்தில் மிதந்து கிடந்து நீந்தியவனாய் மகிழ்வே வடிவாகச் சிறிது நிமிர்ந்து அவளுக்கருகில் நெருங்கி உட்கார்ந்து, "சரி; இது நல்ல வரம்; கரும்பு தின்ன எந்த மூடன் கூலி கேட்பான்? பரமபக்த சிரோன்மணியான

உனக்கு இந்தத் தெய்வம் நீ கேட்ட முதல் வரத்தை தாராளமாகக் கொடுத்துவிட்டது; இன்னும் என்ன வரம் வேண்டுமோ அதையும் கேட்டுக்கொண்டால், கொடுக்கத் தயாராக இருக்கிறது." என்று கூறியவண்ணம், தனது வலக்கரத்தை அவளது இடுப்பைச்சுற்றி அணைத்துகொள்ள மெதுவாகக் கொண்டுபோனான்.

அவனது கருத்தை உணர்ந்த அந்த யௌவனக் கன்னிகை, அவனது கையைத் தடுக்காமல் மிகுந்த கூச்சத்தினால் தனது தேகத்தை சுருக்கி நெளித்துக்கொண்டவளாய், "ஏதேது! என்னுடைய அநுமதி யில்லாமலேயே மோகனாஸ்திரங்கள் என்னைச் சுற்றி வளைக்கின்றனவே! நான் இன்றிரவு தப்பமுடியாதுபோ லிருக்கிறதே!" என்று கூற, அதற்குள் மைனர் துணிபடைந்து, தனது வலக்கரத்தால் அவளைக் கட்டியணைத்துத் தன்னிடம் ஆசையோடு இழுக்க, அவள் சும்மாவிருக்க மைனர் அவளை ஆலிங்கனம் செய்து முத்தமிடும் சமயத்தில், அவள் சடக்கென்று திமிறி சிறிது தூரம் அப்பால் நகர்ந்து உட்கார்ந்தவண்ணம், என்ன அவசரம் இது! சுவாமி வரம்கொடுத்துக்கொண்டே இருக்கும்போது இப்படித்தான் இடைஞ்சல் செய்கிறதா? எனக்கு இன்னொரு வரம் கொடுப்பதாகச் சொன்னீர்கள், அதைக் கேட்கிறேன். அதைக் கொடுத்தவுடன் இவ்வளவு காலமாக நான் காப்பாற்றி வைத்துள்ள எல்லாவற்றையும் தங்களிடம் ஒப்புவித்துவிடுகிறேன். அதுவரையில் குறுக்கிட்டால் தங்களுடைய காரியந்தான் தாமதப்பட்டுப் போகிறது" என்றாள்.

அதைக்கேட்ட மைனர் புன்சிரிப்போடு தனது வலக்கரத்தை வாங்கிக்கொண்டு அமைதியாக உட்கார்ந்தவண்ணம், "சரி; அப்படியே ஆகட்டும். உனக்கு வேண்டியதை சீக்கிரம் கேட்டுக்கொள்" என்று அவசரமாக மொழிந்தான்.

பாலாம்பாள் அவனை ஒய்யாரமாக நோக்கி "நான் கேட்பதிருக்கட்டும். எஜமானருக்குக் கலியாணம் ஆகிவிட்டதா இல்லையா என்பதை முதலில் அறிந்துகொள்ள எனக்கு ஆசையா யிருக்கிறது" என்றாள்.

அதைக்கேட்ட மைனர், "இது என்ன கேள்வி? நான் உன்னை நாடி இங்கே வந்ததிலிருந்தே, எனக்கு இன்னமும் கலியாணம் ஆகவில்லை யென்பது ஏற்படுகிறதல்லவா?" என்றான்.

அதைக்கேட்ட அந்த அணங்கு சந்தோஷமாக நகைத்தவண்ணம், "ஆம் ஆம்; ஏற்படுகிறது. நான் பெண்பிள்ளைதானே; தாங்

கள் சொல்லாமல் என்னுடைய மூளைக்கே அவ்வளவு தூரம் சுயமாக எட்டுகிறதா? ஆனால் தாங்கள் சொல்வதிலிருந்து இன்னொரு விஷயமும் ஏற்படுகிறது'' என்று அதற்கு ஒருவால் ஒட்டவைத்தாள்.

மைனர், "அது என்ன விஷயம்?'' என்றான்; பாலாம்பாள், "வேறொன்று மில்லை. தங்களுக்குக் கலியாணம் ஆகாதிருப்பதாலே தான் தாங்கள் இங்கே வந்ததாகச் சொன்னபடியால், தங்களுக்கு இனி கலியாணம் ஆகிவிட்டால் இங்கே வரமாட்டீர்களென்பதும் ஏற்படுகிறதே. தாங்கள் எதையோ சொல்லப் போய் எனக்குக் கொடுத்த முதல் வரத்துக்கு மாறான ஒரு சங்கதியை இப்போதே சொல்ல ஆரம்பித்து விட்டீர்களே!'' என்றாள்.

மைனர் மிகுந்த அன்போடு, "சேச்சே! நான் அப்படியா சொன்னேன்! நான் இறந்த காலத்து சங்கதியைச் சொன்னேன். நீ எதிர் காலத்து சங்கதியைச் சொல்லுகிறாய். நீயும் நானும் இனி எப்போதும் பிரிவதில்லையென்று நான் எப்போது உனக்கு வாக்குக் கொடுத்தேனோ, அப்போதே நான் உன்னைக் கலியாணம் செய்துகொண்ட மாதிரியல்லவா? அப்படியிருக்க, நான் இனி வேறொருத்தியைக் கலியாணம் செய்வேனென்கிற சந்தேகமே எதற்கு?'' என்றான்.

அதைக்கேட்ட பாலாம்பாள் அவனை மோகமான பார்வையாகப் பார்த்து, குழந்தைபோல மழலை மொழியாகப் பேசி, "ஆமாம்; புருஷர்கள், இப்படித்தான் முதலில் ஆளை ஏமாற்றுகிறது. காரியம் ஆகும் வரையில் கழுதையின் காலையும் பிடி என்ற பழமொழிப்படி, அவர்கள், தங்களுடைய புது மோகத்தில் இப்படித்தான் வாய் கொண்டமட்டும் உறுதிசொல்லி வெகு தாராளமாகப் பேசுகிறது வழக்கமென்று என்னுடைய வேலைக்காரக்கிழவி அடிக்கடி சொல்லுவாள்; அது இப்போது நினைவுக்கு வருகிறது பழகப் பழகப் பாலும் புளிக்குமென்று சொல்லுவார்கள் அதைப்போல ஒரு ஸ்திரீ எவ்வளவுதான் அழகாயிருந்தாலும், அவள் புருஷனுடைய மனம் கோணுதபடி நடந்துகொண்டாலும், பிள்ளைப்பேறு, வயசு அதிகரித்தல் முதலியவற்றால் அவளுடைய யௌவன காலத்து அழகும் கவர்ச்சியும் அதிசீக்கிரத்தில் போய்விடும். புருஷர்களுடைய ஆசையோ, அவர்கள் கிழவராகிறவரையில் பாலியமாகவே இருக்கிறது. நிற்க, அவர்கள் பிற மாதரை விரும்புவதைக் கண்டிப்பதற்கு, அவர்களுக்கு மேற்பட்டவர்களில்லை. ஆகையால் அவர்

கள் கிழவியாய்ப்போன தங்களுடைய முதல் பெண்சாதியை விட்டுப் புதிய புதிய யௌவன மடந்தையரை விரும்புகின்றனர். இது உலகத்தில் சாதாரணமாக நடக்கும் காரியம். அக்கினி சாக்ஷியாகத் தாலி கட்டின வளாயிருந்தால், தீராப்பொரியே யென்று, புருஷன் அவளுடைய கட்டுப்பாட்டில் நிற்கவேண்டியது அவசியமாய்ப்போகிறது. என்னுடைய சங்கதி அப்படியல்ல; இது அக்கினி சாக்ஷியாகச் செய்த கல்யாணத்தைப்போல உறுதியுள்ளதல்ல. இரண்டொரு மாதம் வரையில் தாங்கள் என்னோடு சந்தோஷமாக இருப்பீர்கள்; நாளைக்கு நான் நாலைந்து குழந்தைகளைப் பெற்றுவிட்டால், தாங்கள், அழுக்கான தங்களுடைய மேலங்கியை விலக்குவதுபோல, என்னை விலக்கிவிட்டு மோகனாங்கியிடம் போய்ச் சேர்ந்துவிடுவீர்கள். அதன் பிறகு என்கதி என்ன ஆகும்? என்னுடைய குழந்தைகளின் கதி என்ன ஆகும்? இந்த விஷயங்களை யெல்லாம் நாம் முன்னுகவே யோசிப்பது நல்லதல்லவா?'' என்று நயமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட மைனர் ஒருவாறு லஜ்ஜை யடைந்தவனாய் "பாலா! இதெல்லாம் என்ன சந்தேகம்? எனக்குக் குழந்தைகளும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்; நீ இப்போதிருப்பதுபோல எப்போதும் ஒரே குழந்தையாக என்னோடு இருக்கவேண்டு மென்று நான் ஆசைப்படுகிறேன். நீ ஏன் அனாவசியமான சந்தேகங்களை யெல்லாம் வரவழைத்துக்கொண்டு இப்போதே கவலைப்படுகிறாய்? நான் தான் ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டு வருகிறேனே. உனக்கு எவ்விதமான ஆதாரம் வேண்டுமானாலும் இப்போதே செய்துகொள்; மனதிலுள்ளதை வெளியிடாமல் ஏன் வளைத்து வளைத்துப் பேசுகிறாய்? நாம் அக்கினி சாக்ஷியாகக் கலியாணம் செய்துகொள்ள முடியாதென்பதை நீயே ஒப்புக்கொள்கிறாய். நான் உன்னையே சம்சாரமாக என் ஆயுசுகாலம் முடிய பாவிப்பேன் என்பது ஸத்தியம். அந்தப்படி எழுத்து மூலமாக ஒரு பத்திரம் எழுதிக் கொடுக்கச் சொன்னாலும் நான் அதை இப்போதே எழுதிக் கொடுத்துவிடுகிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட பாலாம்பாள், "வாய்பேச்சு காலக்கிரமத்தில் மறந்து போகக்கூடியது. எழுத்து மூலமான உறுதியே நிரந்தரமாக இருக்கக்கூடியது. அப்படி எழுதிக்கொடுப்பதில் வித்தியாசம் ஒன்றுமில்லை. நான் என்ன கேட்கிறேன்? தங்களுடைய அன்

பும் பக்ஷமும் எப்போதும் மாறாமல் இருக்கவேண்டுமென்று தானே நான் கேட்டுக்கொள்ளுகிறேன். வாய்மூலமாக இப்போது தாங்கள் சொல்வதை எழுத்து மூலமாக எழுதிக்கொடுக்கப் போகிறீர்கள். இதில் கெடுதல் என்ன இருக்கிறது? தாங்கள் சொன்ன சொல்லுக்குக் கட்டுப்பட வேண்டுமென்றே நிர்ணயம் உள்ளவர்களாக இருந்தால், இதைக் காகிதத்தில் எழுதிக் கொடுப்பதைப்பற்றித் தாங்கள் கொஞ்சமும் கவலைப்பட மாட்டீர்கள்." என்று வெண்ணெயில் ஊசியை நுழைப்பது போல நயமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட மைனர் மிகவும் ஆத்திரமாக "எங்கே? காகிதம் மைக்கூடு முதலியவை இருந்தால் எடு; இப்போதே எழுதிக் கொடுக்கிறேன். பேச்சை வீணாக வளர்க்கவேண்டாம்" என்றான்.

அவள் இரவில் பலரிடம் பிராமிசரி நோட்டுகளும் பத்திரங்களும் எழுதி யெழுதி வாங்கி நிரம்பவும் அநுபோக முள்ளவளாதலால், மேஜையில் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்த காகிதங்களிலிருந்து எட்டணா முத்திரைக் காகிதம் ஒன்று, மை, இறகு, அடியில் வைத்துக் கொள்ள ஓர் அட்டை முதலியவற்றை எடுத்து மைனரிடம் வைக்க, அவன் காகிதத்தையும் இறகையும் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, "எங்கே? நீயே சொல்; நான் அப்படியே எழுதித் தருகிறேன். நீ கொஞ்சமும் யோசனை செய்யாமல் உன் மனம் போல எழுதிக்கொள்ளலாம். உன் விஷயத்தில் வஞ்சகம் செய்ய வேண்டுமென்னும் நினைவிருந்தாலல்லவா எனக்குக் கவலை; எங்கே? சொல், எழுதுகிறேன்" என்று வற்புறுத்திக் கூறினான்.

அதைக் கேட்ட பாலாம்பாள் அதற்கு மனமில்லாதவள் போல சிறிது பாசாங்கு செய்தவளாய், "அடாடா! நானா சொல்லுகிறது? எனக்கென்ன தெரியும்? நான் ஒரே வாக்கியமாக முன்னமேயே சொல்லிவிட்டேன்; அதைத்தான் எழுதவேண்டும்; சரி; தங்களுடைய உத்தரவாகும்போது எனக்கு பயமென்ன? எங்கே? எழுதுங்கள் சொல்லுகிறேன்:—

சென்னை ஆலந்தூருக்கருகில், மவுண்டு ரோட்டிலுள்ள ஜெகன் மோகன விலாஸ் என்ற பெயர் கொண்ட பங்களாவிலிருக்கும் மைசூர் பாலாம்பாள் அம்மாளுக்கு, சென்னை தேனாம்பேட்டையிலுள்ள மாரமங்கலம் மைனர் ஜெமீந்தாரான——துரையவர்கள் எழுதிக்கொடுத்த விவாக ஒப்பந்தப் பத்திரம்.

நான் என் மனப்பூர்வமாக உன்மேல் காதல்கொண்டு, என்னுடைய ஆயுசுகால பரியந்தம் உன்னையே என்னுடைய பாரியாளாகவும், என்னுடைய மைனர் பருவம் நீங்கிய பிறகு பட்டமகிஷியாகவும் பாவிக்க நான் என் மனதார விரும்புகிறேன். நமது ஜாதிவித்தியாசத்தைக் கருதி, நான் உன்னை அக்கினி சாக்ஷியாகப் பாணிக்கிரகணம் செய்துகொள்ளக் கூடாதிருந்தாலும், இந்த ஒப்பந்தத்தையே அப்படிப்பட்ட கலியாணம் நடந்ததற்கு சமானமாக ஒப்புக்கொள்ள இதன் மூலமாக நான் கட்டுப்படுகிறேன் நான் உன்னைத் தவிர, என் ஆயுசு காலத்தில் வேறே எவளையும் இனி அக்கினிசாக்ஷியாகக் கலியாணம் செய்துகொள்ளுகிறதில்லை. தவறி செய்துகொண்டாலும், நீயே முதல் மனைவியாகவும், உன் வயிற்றில் பிறக்கும் முதல் புத்திரனே சமஸ்தானத்துக்கு பிந்திய வார்சாகவும் ஆக இதன் மூலமாய் உங்களுக்கு நான் உரிமை ஏற்படுத்தி யிருக்கிறேன் உன்னை நான் பாரியாளாக ஏற்றுக்கொண்ட இந்த நாள் முதல் மாதம் ஒன்றுக்கு உன்னுடைய தேக போஷணைச் செலவுக்காக ரூபாய் ஐயாயிரம் கொடுத்துவர நான் கட்டுப்படுகிறேன். உன்னுடைய வயிற்றில் குழந்தைகள் ஜனிக்குமானால் அவைகள் ஒவ்வொன்றுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்க ஒப்புக்கொள்ளுகிறேன்.

இன்னும் பத்து நாட்களுக்குள் இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு நீ கேட்கும் ஆபரணங்களை வாங்கித்தரக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தவிர, என்னுடைய மைனர் பருவம் நீங்கி, நான் சமஸ்தானத்தை ஒப்புக்கொள்ளும் தினத்தன்று, உனக்கு ஐந்து லக்ஷம் ரூபாய்க்கு ஆபரணங்கள் தரித்து சமஸ்தானத்து அரண்மனையில் பட்டமகிஷியின் ஸ்தானத்தில் கொண்டுபோய் உன்னை வைத்துக்கொள்ள இதன் மூலமாக நான் கட்டுப்படுகிறேன். இந்த நிபந்தனைகளில் எதையாகிலும் நான் செய்யத் தவறுவேனாகில், நீ சிவில் கிரிமினல் முதலிய நியாயஸ்தலங்களின் உதவியைக்கொண்டு இந்த நிபந்தனைகளை நிறைவேற்றிக்கொள்ள உனக்கு இதன் மூலமாக அதிகாரம் உண்டாக்கிக் கொடுக்கிறேன். இந்தப் பத்திரம், சட்டப்படி, விவாகத்துக்கு சமதையாக ஆகாதென்று கோர்ட்டார் தீர்மானித்தாலும், அல்லது, நான் இதற்கு மாறாக அக்கினி சாக்ஷியாக இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டாலும், அதுவரையில் உன்னுடைய கற்பை அழித்ததற்காக ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு கொடுக்க இதன்

மூலமாக நான் கட்டுப்படுகிறேன். இந்தப் பத்திரத்தை திரிகரண சுத்தியாக நான் நல்ல அறிவோடிருக்கையில் என் மனப்பூர்வமாக எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

இப்படிக்கு எழுதியதுள்பட

மாரமங்கலம் மைனர்—துரை.

என்று பாலாம்பாள் சொல்லிக்கொண்டே போனபடி மைனர் பத்திரத்தை எழுதி அதன் அடியில் தனது கையெழுத்திட்டு, அதை மடித்து, அவளிடம் நீட்டி, "இதோ இருக்கிறது பத்திரம்; இவ்வளவு தானே உனக்கு வேண்டியது? இனிமேல் கவலையில்லையே?" என்று கேட்க, பாலாம்பாள் மிகவும் மகிழ்ச்சியாகவும் குதூகலமாகவும் வசீகரமாகவும் நகைத்தவண்ணம் பத்திரத்தை அலட்சியமாக வாங்கிக் கொண்டவளாய், "தாங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே; என்னை இந்த காகிதத்தோடு விட்டுவிடுவீர்கள்போ லிருக்கிறதே; நான் கேட்பது தாங்கள் என்னைக் கைவிடாமல் எப்போதும் எனக்கு எஜமானராக இருந்து என்னை ஆண்டநுபவித்துக்கொள்ள வேண்டுமென்பதேயன்றி, இந்த வெறுங் காகிதத்தையா நான் கேட்டேன்? சரி சரி; நாளைக்கு என் வயிறு பசிக்கிறதென்றால், இந்தக் காகிதத்தையே பக்ஷணம் பண்ணும்படி தாங்கள் தாராளமாக உத்தரவு அளிப்பீர்கள்போ லிருக்கிறதே! ஓகோ மூர்த்தி சிறிதாயிருந்தாலும் கீர்த்தி பெரிதாயிருக்கிறதே! தாங்கள் வயதில் மிகவும் பாலியரா யிருந்தும் சாமர்த்தியத்தில் எல்லோரையும் வென்றுவிடுவீர்கள்போ லிருக்கிறதே! அவ்வளவு சாமர்த்தியம் இல்லாமலா இரவு இரண்டு மணிக்கு இந்த பங்களாவுக்குள் நுழைந்து முன்பின் பழக்கமில்லாதவளும் எப்படிப்பட்டவர்க்கும் மசியாதவளுமான ஒரு பெண்ணை ஒரே நொடியில் மயக்கி, ஆயுசுகால பரியந்தம் அடிமையாக்கிக் கொண்டுவிட்டீர்கள்!" என்று பரிகாசமாகக் கூறிக்கொண்டே எழுந்துபோய் சுவரிலிருந்த ஓர் அலமாரிக்குள் அதை வைத்து, தனது கழுத்து மணியிலிருந்த திறவுகோலால் அதைப் பூட்டிவிட்டு வந்து, பால் கூஜா, வெற்றிலைபாக்குத் தட்டு முதலிய சாமான்களிருந்த மேஜையை கட்டிலிற் கருகில் இழுத்து வைத்துவிட்டு, திரும்பி வந்து முன்னிருந்த இடத்தில் அவனிடம் மிகவும் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள். அவ்வளவு கண்டிப்பாக தான் அவனிடத்தில் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டதைப்பற்றி மைனரது மனதில் ஒருவகை

யான அதிருப்தி உண்டாயிருக்குமோ என்ற எண்ணம் கொண்டவ ளாய், அவன் ஊக்கமும் சந்தோஷமும் கொள்ளும்படி செய்ய நினைத்தே அவள் அவனை அதிகமாக முகஸ்துதி செய்தாள். அவ ளது மையலில் கண்தெரியாது மூழ்கி வெறிகொண்டு மதிமயங்கி யிருந்த மைனர் அவள் சொன்ன ஸ்தோத்திர மொழிகளை உண்மை யென்று மதித்து பெரிதும் ஆநந்தமும் உற்சாகமும் கொண்டவனாய் கலகலவென்று நகைத்து அவளை நோக்கி, "நீ மாத்திரம் சாதாரண மான ஆசாமியோ! இந்த வெறுங்காகிதத்தோடு நான் உன்னை விட்டு விட்டால், நீ தயைதாக்ஷணிய மில்லாமல் என்னைக் கொண்டுபோய் ஜெயிலில் அடைத்துவிட மாட்டாயா! இனிமேல் நான் எப்போதும் எஜமானியம்மாளுக்கு பயந்தல்லவா நடக்கவேண்டும்" என்று தானும் அவளை முகஸ்துதியாகப் புகழ்ந்தவண்ணம் மோகாவேசத்தோடு தனது கைகளால் அவளது அழகு வழிந்த மினுமினுப்பான சிவந்த தேகத்தை அணைத்துத் தழுவ முயன்றவனாய், "சரி! திருடன் வழி செய்யாமல் உள்ளே நுழைந்துவிட்டானென்று முன்பு சொன்னாயே இப்போதும் திருடனென்றே மதிக்கிறாயா? அல்லது சொந்தக்கார னென்று மதிக்கிறாயா?" என்றான், அதைகேட்ட பாலாம்பாள் மகிழ்ச்சியோடு நகைத்தவண்ணம், "சரி தயவுசெய்து எழுந்து வாருங்கள்; இந்தக் குடும்பத்துக்கு இனி தாங்கள் மகாராஜாவல்லவா; தங்களுடைய சிம்மாசனத்தில் தங்களை உட்கார வைத்தல்லவா தங் களுக்கு முடிசூட்டி ராஜ்யத்தை தங்களிடம் ஒப்புவிக்கவேண்டும்" என்று கூறியவண்ணம் ஸோபாவை விட்டெழுந்து, இடக்கரத்தால் அவனது இடையைச்சுற்றி அணைத்துக்கொண்டவளாய் அருகி லிருந்த வில்வைத்த ஸொகுசான பஞ்சணைக்கு அவனை அழைத்துச் சென்று, அதன்மேல் அவனை உட்காரவைத்து தானும் அவனுக் கருகில் உட்கார்ந்துகொள்ள, அப்போதே சாயுஜ்ய பதவியிலிருப் பவன் போல மைனர் தன்னை மறந்து பூரித்துப் புளகாங்கித மடைந்து ஆநந்த பரவசமுற்று மோகலாகிரி கொண்டு, மிகுந்த காம வெறியோடு அவளைக் கட்டித்தழுவி முத்தமிட முயல, அதற்குள் அவள் சிறிது விலகி "கொஞ்சம் பொறுங்கள்; சுவாமியின் நிவே தனத்துக்காக கிழவி, குழம்புப்பால், தாம்பூலம் முதலியவைகளை வைத்திருக்கிறாள். அவைகளின்மேலும் எஜமானருடைய கிருபா நோக்கம் கொஞ்சம் ஏற்படட்டும்" என்று கூறியவண்ணம், பால் இருந்த கூஜாவை யெடுத்து மைனரிடம் கொடுக்க, அவன் அன்றிரவு

முற்றிலும் ஓடியலைந்து தளர்வடைந்து போயிருந்தவனுதலால், அதை வாங்கி பால் முழுதையும் உள்ளே செலுத்திவிட்டான். அதன் பிறகு பாலாம்பாள் மிகவும் பட்சமாக அவனுக்குத் தாம்பூலம் கொடுக்கத் தொடங்கி வெற்றிலையை மடித்து சுருள்களை ஒவ்வொன்ருகக் கொடுத்துக்கொண்டே இருக்க, மைனர்து திரேகம் சுருதி கூட்டப்பட்ட வீணையைப் போல பிரம்மாநந்த வெள்ளம் கரை புரண்டோடத் தக்க நிலைமையில் இருந்து பாலாம்பாளை ஆலிங்கனம் செய்து கொள்ளும் பொருட்டு பறக்கிறது. தாம்பூலம் கொடுத்து அவள் எப்போது நிறுத்துவாளோ என்ற ஆவல் கொண்டவனுய், சொல்லவும் மாட்டாமல், சொல்லாமலிருக்கவும் கூடாமல், பல்லவி பாட விரும்பும் ஊமையனைப்போல, தத்தளித்து இன்பமோ துன்பமோ என்று அறிய இயலாத நிலைமையிலிருக்க, பாலாம்பாள் அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு பஞ்சணையிலேறி அவனுக்கருகில் உட்கார்ந்து சந்தோஷமாகப் புன்னகை செய்தவண்ணம், "இப்போது நம்மிருவரையும் பார்த்தால் யாரைப்போல இருக்கிறது? எங்கே? சொல்லுங்கள் பார்க்கலாம். நீங்கள் சரியான மறுமொழி சொல்லிவிட்டால் எவருக்கும் கிடைக்காத ஒரு பெருத்த வெகுமதி உங்களுக்குத் தரப்போகிறேன்." என்று கிள்ளைபோல மழலையாக பேசிக் கொஞ்சினுள். அவளது மொழியைக் கேட்ட மைனர் நகைத்து, "ரதியையும் மன்மதனையும்போல இல்லையா? அதற்கு சந்தேகமென்ன? எங்கே? வெகுமதியைக் கொடு" என்று தனது முழு ஆத்திரத்தையும் வெளியிட்டு, அவளைப் பிடித்தணைக்க முயல, அவள் அதற்கு மேலும் இடையூறு செய்வது கூடாதென நினைத்து, பேசாது, தனது தேகத்தை அவன் வசமாக்கிவிட்டாள்.

மைனரது துரதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வது! அதே நொடியில், சொல்லி வைத்ததுபோல, அந்த சயன அறைக்கு வெளியில் பங்களாவிற்குள் "திருடர்! திருடர்! ஐயோ! அப்பா! வெட்டுகிருர்களே! குத்துகிருர்களே!" என்ற பெருத்த கூக்குரல் திடீரென்று எழுந்தது. பாலாம்பாளது வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் மொத்தத்தில் அறுவர் அந்த பங்களாவிலேயே இரவில் படுத்திருப்பது வழக்கம். அந்த அறுவரும் ஒன்று கூடிப் பெருத்த ஆரவாரம் செய்வதாகத் தெரிந்தது. இரதியாகவும் மன்மதனுகவும் நடித்துக்கொண்டிருந்த மைனரும் பாலாம்பாளும் திடீரென்று உண்டான

அந்தக் கூக்குரலைக் கேட்டுப் பெருந்திகிலும் குலைநடுக்கமும் கொண்டு ஒருவரை ஒருவர் மறந்து பிரமித்து அசைவற்றுப் போயினர்; அவர்களது உடம்புகள் கிடுகிடென்று ஆடுகின்றன. பேரச்சம் உச்சி மயிரைப் பிடித்து உலுக்குகிறது. வியர்வை வெள்ளமாக ஒழுகுகிறது. ஒருவரோடொருவர் பேசவும், ஒருவர் பக்கம் ஒருவர் தமது முகத்தைத் திருப்பவும் அஞ்சி இருவரும் இரண்டு உயிரற்ற பதுமைகள் போல உட்கார்ந்திருந்தனர். மைனரது தேகத்தில் அதுகாறும் எழுந்து தகித்துக் கொண்டிருந்த காமத்தீயெல்லாம், தண்ணீரில் ஆழ்த்தப்பட்ட தணல்போல, இருந்த விடம் தெரியாமல் பறந்து போய்விட்டது. மைனரது துரதிர்ஷ்டம் எந்த விஷயத்தையும் முடியும் சமயத்தில் கத்திரித்து விடுவது வழக்கமாதலால், பாலம்பாளது விஷயத்தில் அவனது மனோரதம் நிறைவேறாமலே போய்விட்டது. அவ்வாறு இரதிதேவியின் ஆஸ்தான மண்டபத்தில் புதிய மணமகனும் மணவாட்டியும் இரும்புப் பொறியி லகப்பட்ட எலிகள் போல உட்கார்ந்திருக்க, அந்த பங்களாவில் உண்டான கூக்குரல் இரண்டொரு நிமிஷத்தில் அதிகரித்துத் தோன்றி, பிறகு அது அழுகையாகவும் அலறலாகவும் மாறி, சிறிது நேரத்தில் யாவும் ஒடுங்கிப் போய்விட்டது. அடிகளின் ஓசையும், கதவுகள் உடைபட்ட ஓசையும் நன்றாகக் கேட்டன. திருடர்கள் வேலைக்காரர்களை யெல்லாம் அடித்து சின்னாபின்ன மாக்கியதும் நன்றாக விளங்கியது. அதையுணர்ந்த காதலனும் காதலியும் என்ன செய்வதென்பதை யறியமாட்டாமல், பெருத்த திகில் கொண்டவராய் திருடர்கள் தாங்களிருந்த அறைக்கு வந்துவிட்டால், தாங்கள் என்ன செய்கிறது என்று நினைத்து பெரிதும் கதிகலங்கி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அதற்கு மெத்தைப் படிகளில் தடதடவென்ற ஓசை கேட்டது; தாங்களிருந்த இடத்திற்கே திருடர்கள் வருவதாக அவர்களுக்கு உடனே தோன்றவே, அவர்களிருவரும் சடக்கென்று கட்டிலை விட்டுக் கீழே இறங்கினார்கள். மைனர் கோழைத்தனம் நிரம்பிய அதிசூரனாதலால், அவனது உடம்பு கட்டிலடங்காமல் வெடவெடவென்று நடுங்குகிறது. அவன் நாற்புறங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்து, தப்பி ஓடிப்போவதற்காகிலும், மறைந்துகொள்வதற்காகிலும் வசதி இருக்குமோவென்று கவனிக்கிறான்; பாலாம்பாளின் பின் பக்கமாகப் போய் மறைந்துகொள்ளுகிறான்; ஐயையோ! திருடர்கள் இங்கே வந்துவிடுவார்கள்போ லிருக்கிறதே!

என்ன செய்கிறது! வெளியில் போக வேறே வழி ஏதாகிலும் இருக்கிறதா ?'' என்று கூறித் தவிக்கிறான். ஆனால் பாலாம்பாளோ நிரம்பவும் மனோதிட முடையவளாதலால், விசையாக ஓடி அந்த அறைக் கதவின் உட்புறத்திலிருந்த தாழ்ப்பாளை நன்றாக மாட்டி விட்டு, மைனரையும் அழைத்துக்கொண்டு சிறிது தூரத்திலிருந்த பளுவான பித்தளைக் கட்டிலை சகடைகளால் உருட்டித்தள்ளி கத வின் பக்கத்தில் குறுக்காக மறைத்து வைத்தாள் ; இன்னமும் ஸோபாக்கள் நாற்காலிகள் பூந்தொட்டிகள் முதலிய சாமான்களை யெல்லாம் கொணர்ந்து கட்டிலின்மீது வைத்து கதவு முழுதையும் மறைத்துவிட்டாள். திருடர்கள் கதவில் துளைசெய்து தாழ்ப்பாளை விலக்கிக்கொண்டு கதவைத் திறப்பது வழக்கமென்பதை அவள் கேள்வியுற்றிருந்தவ ளாதலால் அவர்கள் தாழ்ப்பாளை விலக்கினாலும் கதவை சுலபத்தில் திறக்க முடியாமல் செய்து வைத்துவிட்டு தாங் கள் வெளியில் போய்விடுவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா வென்று அவள் அங்குமிங்கும் ஓடிப் பார்த்தாள். நாற்புறங்களிலும் இரும்புக் கம்பிகள் வைத்த ஜன்னல்கள் இருந்தன. ஜன்னல்கள் மிகவும் உறுதியாக வைக்கப்பட்டிருந்தமையாலும், அவைகளை விலக்க கடப்பாரை முதலிய எவ்விதமான கருவியும் அந்த சயன அந்தப்புரத்தில் இல்லாம லிருந்தமையாலும், அவைகளின் வழியா கத் தப்பிப்போவது சாத்திய மில்லாததாக இருந்தது. ஆதலால், பாலாம்பாள் மிகவும் தத்தளித்தவளாய் மேலே நிமிர்ந்து பார்த்தாள். அவர்கள் இருந்த அறை முதல்மாடத்தி லுள்ளது. அதற்குமே லிருந்த மொட்டை மெத்தையிலிருந்து உட்புறத்தில் வெளிச்சம் உண்டாவதற்காக, மேல் மச்சில் இரண்டு கண்ணாடிகள் பதிக்கப்பட் டிருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டடி நீளமுள்ளவையாக இருந்தமையால் அவைகளின் வழியாக ஓர் ஆள் எளிதில் நுழைந்து போவதற்கு இடமிருந்தது அவைகளைப் பார்த்தவுடனே பாலாம் பாளுக்கு ஒரு யுக்தி தோன்றியது. அந்த இரண்டு கண்ணாடிகளில் ஒன்றை உடைத்து அதன் வழியாகத் தாங்கள் மொட்டை மெத்தைக் குப் போய்விட்டால், அங்கிருந்து படிகளின் வழியாகத் தோட்டத் திற்குள் இறங்கிவிடலாமென்று பாலாம்பாளுக்கு ஓர் எண்ண முண் டாயிற்று. அதை அவள் இரண்டொரு வார்த்தையாக மைனருக்குத் தெரிவிக்க, அவனும் அதை ஆமோதித்தான் ; ஆனால் அந்த மேல்மச்சு அவர்களிருந்த தரையிலிருந்து இரண்டாள் உயரத்தி

லிருந்தது. இரண்டு கண்ணுடிகளுள் ஒன்று அந்த சயன அறையின் நடுவி லிருந்தமையால், அதன் வழியாகப் போவ சாத்திய மில்லாததா யிருந்தது. மற்றொன்றோ, அதிர்ஷ்டவசமாக, அவர்கள் கதவண்டை இழுத்துவைத்த கட்டிலிற்குமேலே, ஒரு பக்கத்தில் சிறிது விலகினாற்போல இருந்தது. அந்தக் கட்டிலின்மேல் போடப்பட்டிருந்த மேஜைகள் ஸோபாக்கள் முதலியவற்றின்மேல் ஒரு மனிதன் ஏறி கொசுவலைச் சட்டத்தில் நின்றுகொண்டு அந்தக் கண்ணுடியை உடைத்து விடலாமென்பது தோன்றியது. அப்படி அதை மைனர் உடைத்து வழிசெய்த பிறகு, இருவரும் கட்டிலிலிருந்த சாமான்களின்மேல் ஏறுவதென்றும், மைனர் பாலாம்பாளை முதலில் தூக்கி துவாரத்தின் வழியாக மேலே ஏற்றி விடுவதென்றும், அதன்பிறகு அவன் தொற்றி ஏறிப் போய் விடுவதென்றும் அவர்கள் முடிவு செய்துகொண்டனர். மைனரது தேகம் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்த அந்த நிலைமையில், அவன் எவ்வித முயற்சியும் செய்ய வல்லமையற்றவனா யிருந்தானானாலும், திருடர்களிடம் அகப்பட்டு எவ்விதமான துன்பங்களுக்கு ஆளாக வேண்டுமோ என்கிற பேரச்சத்தினால் தூண்டப்பட்டவனாய், அவன் பக்கத்தில் கிடந்த பால் குடிக்கும் வெண்கலக் குவளையைக் கையில் எடுத்துக்கொண்டு கட்டிலின்மேல் பாய்ந்து, தாறுமாறாக நிரப்பப்பட்டுக்கிடந்த ஸோபாக்கள் நாற்காலிகள் மேஜைகள் முதலியவற்றின் மேல் காலை வைத்து ஏறுகிறான். கால்கள் வெடவெடவென்று நடுங்குவதால், அவை வைக்கப்படு மிடத்திலெல்லாம் தவறிப்போவதனால் இரண்டு மூன்று முறை அவன் கீழேவிழுந்து, கால்களிலும் கைகளிலும் தேகத்திலும் பலவிடங்களில் பித்தளைக்கட்டிலில் மோத, பெருத்த காயங்கள் பெற்றான்; பல இடங்களிலிருந்து இரத்தம் வழிந்தோடுகிறது. உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் வியர்வை வெள்ளமாக வழிகிறது; தேகம் நெருப்பாய்ப்பற்றி எரிகிறது; அந்த நிலைமையில் மைனர் மிகவும் பாடுபட்டு, கட்டிலின் சாமான்களின் மீதேறி, நிமிர்ந்து நின்று சிறிது தூரத்திற் கப்பாலிருந்த கண்ணுடிப் பக்கமாக வளைந்து, இடது கரத்தால் கண்ணுடிக்குக் கீழே இருந்த மேல்மச்சின் குடைவைத் தாங்கிக்கொண்டு வலக்கரத்திலிருந்த பாத்திரத்தால் கண்ணுடியை உடைத்துக் கொண்டிருந்தான். அந்தக் கண்ணுடி இரண்டு விரல் கனமுள்ளதாகவும், அழுத்தமானதாகவும் இருந்ததாகையால் எளிதில் உடையவில்லை.

அவன் ஓரத்தில் நின்று கொண்டிருந்தமையாலும், அவனது உதைவு உறுதியானதாக இல்லாதிருந்தமையாலும், அவன் கண்ணுடியை அதிக பலமாக அடிக்கக் கூடாமலிருந்தது. அவன் அந்த நிலைமையி லிருக்க, பாலாம்பாள், திருடர்கள் என்ன செய்கிறார்களென்பதை கவனிப்பதும், மேலே நிமிர்ந்து கண்ணுடியைப் பார்ப்பதுமாக நிரம்பவும் தத்தளித்து நின்றாள்.

கதவிற்கு வெளியிலிருந்த திருடர்களோ கதவை அழுத்திப் பார்த்து, அது உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்ததை உணர்ந்தனர். அப்படிப்பட்ட இடையூறுகளை விலக்குவதற்குத் தக்க ஆயுதங்களை அவர்கள் எடுத்து வந்திருந்தனராதலால் அவர்கள் ஒரு தமிரை எடுத்து தாழ்ப்பாள் இருக்கக்கூடிய இடத்திற்குக் குறிப்புப் பார்த்து ஓர் அழுத்தி அழுத்தித் திருகவே, கதவில் ஒரு கை நுழையும்படியான வட்டமான பாகம் அறுந்து கீழே வீழ்ந்துவிட்டது. அதனால் உண்டான துளையில் திருடர்களுள் ஒருவன் தனது கையை நுழைத்து, தாழ்ப்பாளை ஒரு நொடியில் திறந்துவிட்டுக் கதவைத் தள்ளினன்; அது சிறிதளவு திறந்துகொண்டு போய் கட்டில் முதலிய சாமான்களில் முட்டிக்கொண்டது; திருடரது தலை நுழைவதற்கு மாத்திரம் இடைவெளி ஏற்பட்டதன்றி, அவர்களது உடம்பு நுழைவதற்குப் போதுமான திறப்பு உண்டாகவில்லை. அதைக் கண்ட திருடர் உண்மையை உணர்ந்தனர்; உட்புறத்தில் சாமான்கள் தடபுடலாக உருட்டப்பட்டதனால் சிறிது முன் உண்டான ஓசை அவர்களுக்கும் எட்டியதாகையாலும், மைனர் கண்ணுடியை உடைத்துக்கொண்டிருந்த அடியோசை அப்போதும் வந்து கொண்டிருந்தமையாலும், தாங்கள் கதவைத் திறக்காமல் தடுக்கும் பொருட்டு உட்புறத்தில் ஏதோ ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவென்பதை யுணர்ந்த கள்வர் பெரிதும் ஆத்திரமும் வீராவேசமும் கொண்டனர். அவர்கள் நால்வரிருந்தமையாலும், யாவரும் அரக்கர் போன்ற முரட்டு மனிதர்களாக இருந்தமையாலும், நால்வரும் ஒன்று கூடித் தங்களது முழுபலத்தையும் வெளிப்படுத்தி கதவை உட்புறத்தில் தள்ளவே, கதவைத் தடுப்பதற்காக உட்புறத்தில் எழுப்பப்பட்டிருந்த பொய்க்கோட்டை தலைகீழாகக் கவிழ்ந்தது. கட்டில், ஸோபாக்கள், நாற்காலிகள், மேஜைகள், பூத்தொட்டிகள் முதலிய யாவும் தடதடவென்று அடியோடு அப்புறம் சாய்ந்து பெருத்த இடியோசையைப்போல திடீரென்ற ஓசையோடு கீழே வீழ்ந்தன.

சாமான்கள் யாவும் ஒடிந்தும் முறிந்தும் உடைந்தும் நொறுங்கியும் ஒன்றன்மேலொன்று குதிரைசவாரி செய்தும் ஒன்றையொன்று விடாமல் ஆசையோடு கட்டிப்பிடித்து ஆலிங்கனம் செய்துகொண்டும், எல்லாம் பிசரிக்கொண்டன. கட்டிலின் மேல் சட்டத்தில் நின்று கண்ணுடியை உடைத்துக் கொண்டிருந்த மைனரோ மாயமாக மறைந்து அந்தரத் தியானமாகி விட்டான்.

அடுத்த நிமிஷம் கதவு திறக்கப்பட்டது; உடனே கட்டையன் குறவனும் மூன்று திருடர்களும் கத்திகளையும் கட்டாரிகளையும் கையிலேந்திக்கொண்டு பனைமரங்கள்போல உள்ளே நுழைந்தனர். அந்த சயன அறையில் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு கண்ணுடி விளக்கு பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. கட்டிலும் அதன்மேலிருந்த சாமான்களும் மைனரும் தலைகீழாகச் சாய்ந்து பிரம்மாண்டமான ஓசையோடு வீழ்ந்ததைக் கண்ட பாலாம்பாள் கதி கலங்கிக் குலைநடுக்க மெடுத்துப் பெரிதும் தத்தளித்தாளானுலும், மிகவும் யூகம் நிறைந்த அவளது மனம் மாத்திரம் அதன் வல்லமையை இழந்துவிடவில்லை; கட்டிலும் சாமான்களும் கவிழ்ந்தவுடனே, அவள் விரைவாக ஓடி கண்ணுடி விளக்கை ஊதி அணைத்துவிட்டாள். அறைமுழுதும் இருள் சூழ்ந்துகொண்டது. அவள் உடனே ஓடி அலமாரியைத் திறந்து அதிலிருந்த மைனரது பத்திரத்தை யெடுத்து மடக்கி இரவிக்கைக்குள் பத்திரமாகச் செருகிக்கொண்டாள்; இன்னொரு மூலையிலிருந்த டெலிபோன் (Telephone) என்னும் செய்தியனுப்பும் இயந்திரத்தண்டைபோய் அதை எடுத்து வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குச் செய்தி யனுப்பலாமா வென்று யோசனை செய்தாள். அவற்றின் இலக்கம் அவளுக்குத் தெரியாதாகையால், அப்படிச் செய்ய சாத்தியப்படாமல் போய்விட்டது; மைனர் பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு, அவள் ஒருவிதமான முடிவிற்கு வந்திருந்தாள்; பொழுது விடிந்தவுடனே நாடகத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதி யனுப்பி, தான் வேறொருவரை மணந்து கொண்டபடியால், அவருக்கும் தனக்கும் இனி எவ்வித சம்பந்தமு மில்லையென்றும், தான் இனித் தனது ஜாகைக்கு வர வேண்டாமென்றும், தான் இனி நாடகத் தொழிலை விட்டுவிட்டதாகவும் தெரிவித்துவிட நினைத்திருந்தா ளாதலால், அவருக்கும் டெலிபோன் மூலமாகச் செய்தி சொல்லியனுப்ப வேண்டு

மென்று அவள் நினைக்கவில்லை. ஆனால் இப்போது தப்புவதற்கு வேறுவழி இல்லாமற் போகவே, உடனே புரசைப்பாக்கத்தி லிருந்த நாடகத் தலைவரது இலக்கத்தை டெலிபோனில் பேசாக்கும்படி செய்து அதன்மூலமாகக் கிழவரை எழுப்பித் தனது பங்களாவிற் குள் திருடர்கள் வந்திருப்பதாகவும், உடனே வந்து சேரும்படியாக வும் அவரிடம் தெரிவித்தாள். அவள் பேசி முடித்தபோதுதான் கள்வர் சாமான்களின்மீது வீழ்ந்து தட்டுத்தடுமாறி உள்ளே நுழைந் தனர். அதற்குமேலும் தான் பேசுவதும் தவறென்று நினைத்த பாலாம்பாள், ஒரு மூலையில் தொங்கிக்கொண்டிருந்த படுதாவின் மடிப்புகளுக்குள் நுழைந்து மறைந்துநின்றாள். உட்புறத்தில் நுழைந்த திருடர் எங்கும் இருளாயிருந்ததைக் கண்டு, தங்களது கையிலிருந்த நெருப்புப் பெட்டியினின்று ஒரு குச்சியை யெடுத்துக் கிழித்து நாற்புறங்களையும் நோக்கி, சுவரில் கண்ணாடி விளக்கிருக்கக் கண்டு, அதனிடம் சென்று, இன்னொரு குச்சியைக் கிழித்து, விளக்கைக் கொளுத்திக் கொள்ளவே, திரும்பவும் பளிச்சென்ற பிரகாசம் அறை யில் நிறைந்தது. அங்கிருந்த ஒவ்வொரு பொருளும் உடனே நன் றாகத் தெரிந்தது. ஆனால் மனிதர் எவரும் காணப்படாததைக் கண்ட திருடர் வியப்புற்றனர்; தாங்கள் வந்ததை யுணர்ந்து உட்புற த்திலிருந்தோர் சாமான்களைப் புரட்டிய ஓசையைக் கேட்டவர்களாத லால், உள்ளே இருந்த மனிதர் வேறே வழியாக வெளியிற் போயிருப் பாரோ என்ற சந்தேகம் அவர்களது மனத்தி லுதித்தது. அந்த அறையிலிருந்து வெளியில் போவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா என்று திருடர்கள் ஆராய்ந்து பார்த்தனர். எவ்விதமான வாசலும் காணப்படவில்லை. ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த படு தாவின் சுருளானது அசைவதாக உணர்ந்த கட்டையன் குறவன், மெல்ல அந்த படுதாவண்டையில் போய்த் தனது கட்டாரியால் அதைத் தள்ளிவிட, அதற்குள் நடுநடுங்கிக் குன்றிப்போய் ஒடுங்கி நின்ற பாலாம்பாள் வெளிப்பட்டு, "அப்பா! என்னை ஒன்றும் செய்ய வேண்டாம். இதோ திறவுகோ லிருக்கிறது. அதோ இரும்புப் பெட்டி யிருக்கிறது. உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போங்கள். என் உடம்பிலிருக்கும் நகைகளை யெல்லாம் கொடுக்கச் சொன்னாலும் இதோ கொடுத்துவிடுகிறேன்' என்று கூறியவண்ணம் தனது கழுத்திலிருந்த கொத்துசாவியை எடுத்து நீட்ட, அதைப் பெற்றுக்கொண்ட கட்டையன், "அதுதான் புத்தி

சாலிகளுக்கு அளகு; சரி ஒம்மேலே இருக்கிற நவெகிவெ யெல்லாத்தெயும் களட்டிக் கீளேவை'' என்று கூறியவண்ணம், இரண்டு திருடரை அவளண்டையில் நிறுத்திவிட்டு இன்னொருவனோடு இரும்புப்பெட்டிக்குப் போய், அதைத் திறந்தான். அதற்குள் இரண்டு தகரப் பெட்டிகள் காணப்பட்டன. இரண்டும் பூட்டாம லிருந்தமையால், கட்டையன் இரண்டையும் திறந்தான்; ஒன்று நிறையப் பவுன்களும் ரூபாய்களும் நோட்டுகளும் இருந்தன; மற்றொன்றில் வைரம், சிவப்பு, பச்சை, தங்கம், வெள்ளி முதலியவற்றாலான ஆபரணங்கள் நிறைந்திருந்தன. அந்தப் பெருத்த தனத்தைக் கண்ட கட்டையனது முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது; உள்ளம் பூரித்தது; அந்த இரண்டு பெட்டிகளையும் அவன் எடுத்து தன்னோடிருந்த திருடனிடம் கொடுத்துவிட்டு, இரும்புப் பெட்டியின் பக்கத்திலிருந்த இன்னொரு பெருத்த மரப்பெட்டியைத் திறந்தான்; அதற்குள், விலையுயர்ந்த ஜரிகைச் சேலைகளும், பட்டுச் சேலைகளும், பாவாடைகளும், தாவணிகளும், ரவிக்கைகளும் நிறைந்திருந்தன. உடனே கட்டையன் குறவன் அவற்றையெல்லாம் வாரியெடுத்து ஒரு பெருத்த மூட்டையாகக் கட்டி, அதையும் பக்கத்திலிருந்த திருடனிடம் கொடுத்த பின், பாலாம்பாள் தனது உடம்பிலிருந்த நகைகளை யெல்லாம் கொடுத்து விட்டாளா வென்று அவளது பக்கம் திரும்பிப் பார்க்க, அவள், அநேகமாக எல்லா ஆபரணங்களையும் கழற்றிக் கொடுத்துவிட்ட தன்றி கடைசியாகத் தனது கையிலிருந்த கெட்டிக்காப்பை விலக்க மாட்டாமல் தவிக்க, அதைக் கண்ட திருடர், அவளது கையைப் பிடித்து, ஒவ்வொரு காப்பாக விலக்க முயன்று கொண்டிருந்தனர். அதைக்கண்ட கட்டையன் குறவன், அவர்கள் கழற்றுகிற வரையில் தான் சும்மாவிருக்க மனமற்றவனாய், பணமிருந்த பெட்டியை வாங்கி அதைக் கீழே வைத்துக்கொண்டு அதிலிருந்த பவுன்களையும் ரூபாய்களையும் எண்ணத் தொடங்கினான். அதில் சுமார் ஐயாயிரம் பவுன்களும், 150-ரூபாயும் இரண்டாயிரம் ரூபாய்க்கு நோட்டுகளு மிருந்தன வென்று அவன் எண்ணி முடிக்க அரைநாழிகை நேரமாயிற்று. அதற்குள் திருடர்கள் பாலாம்பாளின் கைக்காப்புக ளிரண்டையும் விலக்கிவிட்டனர். அவள் மைனரை மயக்கும் பொருட்டு இருநூறு ரூபாய் பெறுமானமுள்ள உயர்ந்த ஜரிகைப் பட்டாடையை அணிந்திருந்தாளாகையால், திருடர்களது நாட்டம் அதன்மேல் சென்றது; அதையும் அவிழ்த்துக் கொடுத்துவிடும்படி ஒருவன் அதட்டிக்

கூற, பாலாம்பாள் மிகவும் வெட்கமும், சஞ்சலமுமடைந்தவளாய் "ஐயா! என்னுடைய எல்லா சொத்துக்களையும் நீங்கள் எடுத்துக் கொள்ளும்படி சந்தோஷமாக நானே கொடுத்துவிட்டேன்; இந்தச் சேலை விலையுயர்ந்த தாகையால் இதையும் நீங்கள் எடுத்துக்கொள்ள ஆசைப்படலாம். அந்த மூட்டையிலிருந்து, சாதாரணமான ஒரு சேலையை எடுத்துக் கொடுங்கள். அதை உடுத்திக்கொண்டு இதை நான் கொடுத்துவிடுகிறேன்." என்று நயமாகக் கூறி இறைஞ்சி மன்றாடினாள். அந்த வேண்டுகோள் கட்டையனது காதில் விழவே, அவன் மூட்டையை வாங்கி அதிலிருந்த ஒரு சாதாரணச் சேலையை எடுத்துப்போட, அவள் படுதாவைப்பிடித்து இழுத்துவிட்டு, அதன் மறைவில் போய் நின்றுகொண்டு தனது இடையிலிருந்த சேலையை மெதுவாக அவிழ்த்துவிட்டு, அவர்களால் கொடுக்கப்பட்டதை எடுத்து நிரம்பவும் தாமசமாக அணிய ஆரம்பித்தாள். கால் நாழிகை யாயிற்று; அரை நாழிகையாயிற்று. அப்போதும் அவள் வெளியில் வரவில்லை. அவ்வளவு நேரம் தாமதம் ஏற்படுவதைக் கண்டு பொறாத கட்டையன்; "என்ன இந்நேரமா! சீக்கிரம் ஆவட்டும்" என்று அதட்ட, "இதோ ஆய்விட்டது" என்று மறுமொழி கூறியவண்ணம் அவள் காலத்தைக் கடத்தினாள். மேலும் கால் நாழிகை சென்றது. கட்டையன் மிகவும் கோபங்கொண்டவனாய், "அடியாத்தே! என்ன இந்தக் குட்டி இம்பிட்டு நேரமா சேலை கட்டறா! சாலம் பண்ணறாடா; போயி இழுத்தாங்கடா" என்று அதிகாரத்தோடு கூற, அடுத்த நொடியில், பாலாம்பாள் ஜரிகைச் சேலையை எடுத்து அவர்களிருந்த இடத்தை நோக்கி வீசியெறிந்து, "உங்களுக்கு வேண்டியது இதோ இருக்கிறது. எடுத்துக்கொண்டு போங்கள்" என்றாள். அவளுடைய சொல்லைக் கேட்ட கட்டையன், "சரி; நல்லாச் சொன்னே? ஒன்னே இப்பிடியே விட்டுப்புட்டு போனா, நீ ஒடனே ஓடிப்போயி போலிசுக்காரப் பசங்களே இட்டாந்து எங்களைத் தொரத்தச் சொல்லிட மாட்டியா! அடேய்! இவளைப் புடிச்சு இந்த சன்னலுக்கம்பிலே கட்டி வாயிலே துணியெ அடச்சுடுங்க" என்றான்! அதைக் கேட்ட மற்ற திருடர்கள் மூவரும் சிறிதும் இரக்கமின்றி பாலாம்பாளைப் பிடித்து பர பர வென்று இழுத்து வந்து, ஜன்னலண்டையில் நிறுத்திவிட்டு, படுதாவின் மணிக்கயிற்றை அறுத்து வந்து, அவளது கைகளையும் கால்களையும் ஜன்னலின் கம்பியோடு சேர்த்து இறுகக் கட்டிய பிறகு, ஒரு

சிறிய துணியைச் சுருட்டி அவளது வாயில் அடைத்துவிட்டு, கட்டையன் குறவனிடம் வர, அவன் மூட்டைகளை எடுத்துக் கொள்ளும்படி உத்தரவு கொடுக்க, அவ்வாறே மற்றவர் எடுத்துக் கொள்ள, நால்வரும் வெளிப்பட்டு மெத்தைப்படிகளில் இறங்கிய போது, பங்களாவின் வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது; வெளியிலிருந்த இரும்புக் கதவைத் திருடர் திறந்து வைத்துவிட்டு வந்திருந்தவர்களாதலால், மோட்டார் வண்டி எவ்வித இடையூறுமின்றி உள்ளே வந்துவிட்டது; அதில் துப்பாக்கி கத்தி களோடு பத்து போலீஸ் ஜெவான்களும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும், நாடகத்தலைவரான கிழவரும் இருந்தனர். மோட்டார் வண்டி நின்ற வுடனே, போலீசார் தங்களது லாந்தர்களோடு கீழே இறங்கி பதுங் கிப் பதுங்கி மெல்ல உள்ளே செல்ல, அவர்கள் வந்ததைக் கண்ட திருடர்கள் மிகவும் தந்திரமாக மறைந்து பின்புறமிருந்த தோட்டத் திற்குள்போய் மூட்டைகளோடு மதிலிலேறி அப்பால்குதித்து ஓடிப் போய்விட்டனர். இன்னமும் திருடர் பங்களாவிலிருப்பதாக நினைத்த போலீசார் பங்களாவை ஆராய்ச்சி செய்ய, வேலைக்காரர் சிலர் இறந் தும், சிலர் அடிப்பட்டு மூர்ச்சித்தும் கிடக்கக் கண்டனர். பாலாம்பா ளின் கதி எப்படி ஆயிற்றோ என்பதை அறிய ஆவல்கொண்ட நாட கத்தலைவர் மெத்தைமேலேறும்படி போலீசாரைத் தூண்ட, அவர் கள் மிகவும் அச்சத்தோடும் எச்சரிக்கையாகவும் மேலே ஏறி, பாலாம் பாளது சயன அறையை அடைந்து அங்கே கட்டில்மெத்தை முதலிய சாமான்கள் தாறுமாறாக உருண்டு புரண்டு ஒன்றன்மேலொன்றுஏறிக் கொண்டு கிடந்ததையும், பாலாம்பாள் ஜன்னலில் கட்டுப்பட்டிருந்த தையும் கண்டு, திருடர்கள் தப்பியோடி விட்டதாக நினைத்தனர். ஒரு வர் ஓடோடியும் சென்று பாலாம்பாளை அவிழ்த்துவிட்டு அவளது வாயின் துணியை விலக்கிவிட, முக்கால் உயிரும் போன நிலைமையி லிருந்த பாலாம்பாள், "அப்பாடா!" என்று கதறிக்கொண்டோடி வந்து கிழவரைக் கட்டிக்கொள்ள, அவர் அவளை தைரியப்படுத்தி, நடந்த விவரங்களைக் கேட்க, அவள் மைனர் வந்ததையும் அவனுக் கும் தனக்கும் நடந்த வர்த்தமானங்களையும் மறைத்து, தான் நாட கக் கொட்டகையிலிருந்து வந்தவுடனே, உடையை மாற்றிக்கொண்டு தனியாக வந்து படுத்துத் தூங்கியபோது, வேலைக்காரர்கள் கூக்குர லிட்டதைக் கேட்டு விழித்துக்கொண்டு திருடர் கதவைத் திறக்காம லிருக்கும்படி தானே தனியாக கட்டில் முதலிய சாமான்களை குறுக்

தில் வைத்ததாகவும், திருடர்கள் தள்ளிக்கொண்டு வந்து சொத்துக் களையெல்லாம் எடுத்துக்கொண்டு தன்னைக் கட்டிப் போட்டுவிட்டு அப்போதே போனதாகவும் கூறி ஏராளமான சொத்துக்கள் போய் விட்டதாகையால் உடனே துரத்திக்கொண்டு போகும்படி வேண்டிக் கொண்டாள்; அந்த வரலாற்றைக் கேட்டவுடனே சப் இன்ஸ்பெக் டெர் தம்மோடு இரண்டு ஜெவான்களை வைத்துக்கொண்டு மற்றவரை நாற்புறங்களிலும் இருவரிருவராகத் துரத்திக்கொண்டு போகும்படி உத்தரவு செய்ய, அவர்கள் அவ்வாறே சென்றனர்.

அவ்விடத்தில் நின்ற நாடகத்தலைவரும், சப் இன்ஸ்பெக்டரும், போலீஸ் ஜெவான்களும் அங்கே வீழ்ந்துகிடந்த கட்டில் முதலிய சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்து ஒழுங்காக நிமிர்த்தி வைக்கத் தொடங்கி யாவற்றையும் எடுத்தபோது, கட்டிலின்மே லிருந்த மெத்தை தலைகீழாகக் கவிழ்ந்து சுருண்டு கிடந்ததைப்பிரிக்க, அதற் குள் ஒளிந்துகொண்டிருந்த ஓர் ஆள் காணப்பட்டான். அவனைக் கண்ட நாடகத் தலைவர் திடுக்கிட்டு, "இதோ ஒரு திருடன் ஒளிந்து கொண்டிருக்கிறான்; பிடித்துக்கொள்ளுங்கள்" என்றுகூற, போலீஸ் ஜெவானொருவன், "அடே! எங்கே ஒளிந்துகொண் டிருக்கிறாய்? எழுந்திரடா" என்று தனது பூட்ஸ்போட்ட காலால் ஓங்கி மைன ரது முதுகில் ஓர் உதை கொடுக்க, அந்த வலுவான உதையைத் தாங்கமாட்டாமல் மைனர், ஐயோ! அப்பா! என்னை அடிக்கவேண் டாம்; நான் திருடனல்ல" என்று சொல்லிக்கொண்டே சடக்கென்று எழுந்து நின்று, அங்கே இருந்த நான்கு ஆண்பிள்ளைகளையும், வெரித்து வெரித்து நோக்கி இரக்கமான பார்வையாக பாலாம்பாளை நோக்கினான். அதற்குள் பாலாம்பாள், "ஐயோ! எனக்கு மயக்கம் வருகிறதே! என்னைப் படுக்க வையுங்கள்" என்று அலறிக்கொண்டு கட்டிலை நோக்கி ஓட, அவர்கள் அவளை மெல்ல நடத்திக்கொண்டு போய், கட்டிலில் மெத்தைமீது படுக்கவைக்க, அவள் மூர்ச்சித் தவள்போல வீழ்ந்துவிட்டாள். அப்போது ஒரு போலீஸ்காரன், மைனரது கைகளுக்கு விலங்கிட்டு நிறுத்தினான். சப் இன்ஸ்பெக்டர் தமது பிரம்பைக் கையி லெடுத்துக்கொண்டு, "சரி; ஸ்டேஷ னுக்குப் போவோம்" என்று கூறினார். அதைக்கேட்ட மைனர், "ஐயா! என்னை ஏன் விலங்கிட்டு அழைத்துப் போகிறீர்கள்? நான் திருடனல்ல. இந்தப் பெண்ணினிடத்தில் சிநேகம் செய்துகொள்

வதற்காக வந்தவன் என்னை விட்டுவிடுங்கள்'' என்று கூறி மன்றாடினான்.

சப் இன்ஸ்பெக்டர்:—நீ இங்கே எப்போது வந்தாய்?

மைனர்,—திருடர் வருவதற்கு ஒரு நாழிகைக்குமுன் வந்தேன்.

சப் இன்ஸ்பெக்டர்:—திருடர் வந்தபோது நீ எங்கே இருந்தாய்?

மைனர்:—நானும் இவளும் கட்டிலின்மேல் உட்கார்ந்திருந்தோம்.

சப் இன்ஸ்பெக்டர்:—உனக்கும் இவளுக்கும் எவ்வளவு காலமாகப் பழக்கம்?

மைனர்:—இன்று ராத்திரி இரண்டுமணிக்குமேல் நான் இங்கே வந்து பழக்கம் செய்துகொண்டேன்.

சப் இன்ஸ்பெக்டர்:—இவள் திருடர் வந்தபோது தனியாகப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்ததாகச் சொன்னாளே?

மைனர்:—இவள் நாடகத்தலைவருக்கு பயந்து சொல்லி யிருக்கலாம்.

சப் இன்ஸ்பெக்டர்:—அது நமக்கு அக்கரை இல்லை. திருடர் வந்தபோது இவள் தனிமையிலிருந்ததாகச் சொல்லியிருப்பதால், நீ திருடரோடு வந்தவனென்றே ஏற்படுகிறது. இவள் மயக்கமாகப் படுத்திருப்பதால், இவளை இன்னமொருதரம் கேட்கவும் இப்போது சாத்தியப்படாது; அப்படிக் கேட்பதும் அநாவசியம். எல்லாவற்றிற்கும் உன்னை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகிறோம். நீ குற்றமற்றவனென்பதை ருஜுப்படுத்திக் கொள்.

மைனர்:—ஐயா! அதை நான் இப்போதே ருஜுப்படுத்துகிறேன். அதோ மரப்பெட்டியில் தொங்குகிற சாவிகளுள் ஒன்றால் அந்தச் சுவரிலிருக்கும் அலமாரியைத் திறவுங்கள்; அதில் ஒரு பத்திர மிருக்கிறது. அதை நான் சற்று முன்பாகவே இவளுக்கு எழுதிக் கொடுத்தேன். அலமாரி இன்னமும் பூட்டப்பட்டிருப்பதால் திருடர்கள் அதைத் திறக்கவில்லை யென்பது நன்றாகத் தெரிகிறது. ஆகையால், பத்திரம் அதில் அவசியம் இருந்தே தீரவேண்டும். இவள் என் கண்ணுக் கெதிராகவே அதை அதற்குள் வைத்தாள்— என்றான்.

அதைக்கேட்ட நாடகத்தலைவர், பெருத்த வியப்பும் திகைப்பும் அடைந்து, தமது ஆசை நாயகி அப்படியும் செய்திருப்பாளாவென்பதை நம்பமாட்டாமல், ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, "எங்கே

இதோ நானே அலமாரியைத் திறக்கிறேன். அதையும் பார்த்து விடுவோம். இது பெருத்த ஆச்சரியமான கதையாக இருக்கிறதே! இவள் அன்னிய புருஷனோடு பேசவேமாட்டாளென்பதை நான் ஆயிரம் விதத்தில் உறுதியாகச் சொல்லுவேன்'' என்று கூறியவண்ணம், உடுப்புப் பெட்டியில் தொங்கிய கொத்துச் சாவியை எடுத்து அவற்றுள் ஒன்றால் அலமாரியைத் திறந்தார். அவரும் சப் இன்ஸ்பெக்டருமாக அந்த அலமாரியை ஆராய்ச்சி செய்தனர். அதற்குள், கேசத்தை வளைந்து பின்னிக்கொள்வதற்குத் தேவையான கூந்தல் தைலங்கள், சாந்துக் கிண்ணிகள், மைச்சிமிழ், கண்ணாடி, ரோஸ் பவுடர், செரிபிளாஸம், ஸோப்புகள் முதலிய சாமான்களே காணப் பட்டனவன்றி காகிதமே காணப்படவில்லை. அந்தக் கண்கட்டு வித்தையைக் கண்ட மைனர் ஒன்றும் பேசமாட்டாமல் திருடனைப் போல விழித்துக்கொண்டு நிற்க, கிழவர் பாலாம்பாளது கற்பைக் குறித்து வாய்கொண்ட மட்டும் புகழ்ந்து ஆனந்தக் கூத்தாட, போலீஸ் கான்ஸ்டேபில்கள் இன்னொரு முறை முன்னிலும் அதிக மான பக்தியோடும் வலுவோடும் தங்களது பூட்ஸ் காலால் மைனரது துடையில் இடிக்க, சப் இன்ஸ்பெக்டர் பெரிதும் கோபங் கொண்டு, மைனரை நோக்கி, "ஓகோ! இதுவும் ஒரு சாமார்த்தியமோ! இந்த வித்தையை எங்கே கற்றுக்கொண்டாய்? போ; நாயே! நிற்காதே; மறுபேச்சுப் பேசினால் இந்த இடத்திலேயே பலிபோட்டு விடுவேன்'' என்று அதட்டிக் கூறியவண்ணம், தமது நேர்த்தியான மெல்லிய பிரம்பினால், மைனரது முதுகில் இரண்டு மூன்று பிரப்பம் பழங்கள் நிவேதனஞ்செய்ய, போலீஸ் ஜெவான்கள் அவனது கழுத்தைப் பின்னாலிருந்து தள்ளிக்கொண்டே பங்களாவின் வாசல்வரையில் வர, அதற்குமேல் தமது கக்ஷி ஓங்காதென்று கண்ட மைனர், "ஓ லக்ஷ்மணா!'' என்று தலையில் கையை வைத்துக்கொண்டு ஆலந்தூர் போலீஸ் ஸ்டேஷன் சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்தான்.

---

## 10-ம் அதிகாரம்
## ஜெகப்புரட்டு

மதன கோபாலனது விஷயத்தில் கல்யாணியம்மாளது மனத்தில் பொங்கியெழுந்த ஆவேச வெள்ளத்தை, அவளது புதல்வியரது வருகை அணைபோட்டதுபோல, ஒரே நொடியில் சடக்கென்று

தடுத்தது; அந்த யௌவனப் புருஷனை ஆலிங்கனம் செய்துகொள்ள வேண்டுமென்று மகா உக்கிரமாக அந்த சீமாட்டியின் மனதில் எழுந்து மிகவும் கடுமையாக வதைத்து அவளைத் தூண்டிய அன்பும் ஆதரமும், வெட்கமாகவும் ஏமாற்றமாகவும் துக்கமாகவும் கோபமாகவும் பகைமையாகவும் மாறினவெனினும், அந்த ஒரு நிமிஷ நேரமும், அவளது மனம் பட்டபாடு சொல்லி லடங்காததாக இருந்தது. மதனகோபாலனது விஷயத்தில் அவளது உள்ளத்தில் கொந்தளித்தெழுந்த கரைகடந்த பிரேமையினால், சகிக்க இயலாத வெறிகொண்டு தன்னையும் உலகையும் மறந்து அவள் அவனிடம் சம்பாஷித்தபோதும், அவனைக் கட்டியணைத்துக்கொள்ள முயன்று துரத்தியபோதும், பிறர் எவரேனும் தன்னைக் கவனிப்பார்களோ என்ற நினைவே அவளது மனதில் தோன்றாதிருந்தமையால், திடீரென்று பின்புறமாக அந்த சயன மாளிகைக்குள் தனது குமாரிகளிருவரும் வந்ததைக் காணவே, அவளது மனதில் பெரும் பீதி உண்டாகிவிட்டது. தான் செய்தது பெருத்த தவறு என்ற எண்ணமும் தனது நடத்தையைப் பற்றிப் புதல்வியர் என்ன நினைத்துக்கொள்வார்களோ என்ற கவலையும் அச்சமும் எழுந்து அவளை வளைத்துக்கொண்டன. தான் சிறிதும் துன்மார்க்கமான நினைவின்றி, மதனகோபாலனைத் துரத்தியிருந்தாலும், பிறர் தனது நடத்தையைத் தவறானதென்றே மதித்து விடுவார்களென்ற நினைவும், தான் உண்மையை உள்ளபடி எடுத்துச்சொல்லி எவ்விதமாக உறுதிப்படுத்தினாலும், தனது சொல்லை எவரும் நம்பமாட்டார்களென்ற நினைவும் தோன்றவே, கல்யாணியம்மாளது சரீரம் கிடுகிடென்று ஆடியது. தான் மதியீனத்தினால் செய்த ஓர் அற்பமான பிழையினால், என்றைக்கும் அழியாத இழிவும், தலை குனிவும், அபவாதமும், மானக்கேடும் தனக்கு உண்டாகக்கூடிய ஆபத்தான நிலைமையில் தான் இருந்ததைக் காண, அவளது மெய்யும் மனமும் கட்டிலடங்காமல் பதறின, தான் கேவலம் விபசார நடத்தை யுடையவளென்று தனது புத்திரிகள் நினைத்து விடுவார்களானால், அவர்களுக்குத் தன்னிடமுள்ள மதிப்பும் மரியாதையும் ஒழிந்து போய்விடுமென்ற கவலையும் எழுந்து வருத்தியது. அது நிற்க, தனது புதல்வியரைத் தவிர, வேலைக்காரர்களுள் எவரேனும் வந்து இங்கே நிகழ்ந்தவற்றைக் கவனித்திருப்பார்களோ என்ற பெருத்த திகிலும் அவளது மனத்தில் குடிகொண்டது. தனது வாழ்நாள் முழுதையும் பாதிக்கக்கூடிய மகா அபாயகரமான நிலைமை

யில் தான் இருந்ததை ஒரே நொடியில் கண்டுகொண்ட கல்யாணி யம்மாள் தனது மானத்தையும் நற்பெயரையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்று நினைத்தாளே யன்றி, மதனகோபாலனது மானுவமானத்தைப் பற்றி ஒரு சிறிதும் நினைக்கவில்லை. நிற்க, மகா உன்னதமான பதவியிலுள்ள தான் எவர்மீதும் வைக்காத பிரியத்தையும், வாத்சல்யத்தையும், மிகவும் கேவலமான நிலைமையிலிருந்த மதனகோபாலனிடம் வைக்க, அவன் அதன் அருமையைச் சிறிதும் உணராதவனும், தனது அன்பிற்கு அருகமற்றவனும் நடந்து, தனது விருப்பத்தின்படி செய்ய மறுத்து ஓடியதைப்பற்றி, அவன் மீது அவளது மனதில் பெருத்த சினம் கொதித்தெழுந்து, அவள் தனது குற்றத்தையெல்லாம் அவன்மீது சுமத்தி தனது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள அநுகூலம் செய்தது; தான் அந்த சந்தர்ப்பத்தில், ஒரு பெருத்த பொய்யைச் சொன்னாலன்றி தப்ப முடியாதென்பதை அவள் ஒரே நொடியில் உணர்ந்து கொண்டதன்றி, தான் எவ்வாறு தந்திரம் செய்வதென்பதைப் பற்றியும், அவள் ஒரு வகையான முடிவு செய்துகொண்டு மதனகோபாலனால் ஏற்பட்ட ஏமாற்றத்தினாலும், பெண்கள் வந்ததினால் திடீரென்று எழுந்த பீதியினாலும் உண்டான முககுறிகளை யெல்லாம் மறைத்துக் கொண்டு, சந்தோஷத்தினால் மலர்ந்த முகத்தோடு மெதுவாக நிமிர்ந்து தனது புத்திரிகளைப் பார்த்து, "இந்த ஆச்சரியத்தை என்னவென்று சொல்லுவேன்! நீங்கள் கால் நாழிகைக்கு முன் வராமல் போனீர்களே! வாருங்கள் முதலில் ஸோபாவுக்குப் போவோம்" என்று கூறி அங்கே நடந்த விஷயத்தை விளையாட்டுப்போலக் காட்டி நடித்து, கட்டிலண்டையி லிருந்த ஸோபாவை நோக்கி மெல்ல நடந்தாள்.

என்றைக்கும் காணப்படாத புதுமையான அந்த விபரீதக் காட்சியைக் கண்டு அதன் உண்மை இன்னதென்று உணரமாட்டாமல் முற்றிலும் வியப்பும் திகைப்பு மடைந்து சித்திரப்பதுமைகள் போல அசைவற்று நின்ற புதல்வியர் இருவரும், தாயுடன் கூடவே பின்தொடர்ந்து சென்றனர். கட்டிலண்டையிலிருந்து ஸோபாவினருகில் சென்ற கல்யாணியம்மாள் அதன்மேல் உட்கார்ந்து கொண்டாள். வாசற்படியிலிருந்து அந்த ஸோபாவிற்கு அவள் சென்ற அந்த ஒருநிமிஷ நேரத்திற்குள், பெண்களிடம் தான் எவ்விதமாகப் பேச

வேண்டுமென்பதை அவள் நன்ருக முடிவு செய்துகொண்டவளாய் இளங்குமரிகளை நோக்கி, "நீங்கள் எவ்வளவு நேரம் யோசனை செய்து பார்த்தாலும், இங்கே என்ன நடந்ததென்பதை கொஞ்சங் கூட யூகிக்க உங்களால் முடியாது. அப்படிப்பட்ட அதிசயமான விஷயம் நடந்தது" என்று மிகவும் அன்பான குரலில் கூறவே, அதைக் கேட்ட துரைஸானியம்மாள், "நீங்கள் கோபங்கொள்ளாமல் ஸந்தோஷமாக இருப்பதிலிருந்து, விபரீதமான விஷயம் எதுவும் நேரவில்லை யென்பது ஏற்படுகிறது. ஆகையால், எங்கள் மனதில் முதலில் உண்டான கவலை ஒருவாறு நீங்கியது." என்ருள்.

உடனே கல்யாணியம்மாள் "இந்த விஷயத்தை வாயில் வைத்துப் பேசவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. உங்களிடம் இதை வெளியிடாமல் இருக்கவும் முடியவில்லை; வெளியிடவும் அசங்கியமாக இருக்கிறது. சாகிறகாலத்தில் சங்கரா சங்கரா என்கிறபடி இவ்வளவு காலமும் இல்லாமல், எனக்கு இப்போது ஒருவன் கள்ளப்புருஷனுக இருக்க ஆசைப்படுகிருன்" என்று வேடிக்கை போலவும் புரளியாகவும் கூறியவண்ணம் தனது மூத்த புதல்வியின் முகத்தைக் கபடமாக நோக்கினுள். அந்த வார்த்தையைக் கேட்ட பெண்கள் இருவரும் பெருத்த திகைப்பும் ஆச்சரியமுமடைந்தவ ராயினர்; கோமளவல்லி தனது தாயை நோக்கி, "அப்படிக் கேட்ட துஷ்டன் யாரம்மா?" என்று கபடமின்றிக் கேட்க, துரைஸானியம்மாள் "பெண்டாட்டிக்கு ஏங்கிய கிழவன் எவனுவது தான் அப்படிச் செய்திருப்பான்?" என்ருள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாளது முகம் வெட்கத்தினுலும் கோபத்தினுலும் சடக்கென்று மாறுபட்டது. "துரைஸானியம்மா! உனக்கு இவ்வளவு வயதாகியும் இன்னதைத்தான் பேசுவது, இன்னதைப் பேசக்கூடாது என்று தெரிந்துகொள்ள வில்லையே! நீ சொல்வதிலிருந்து நான் ஒரு கிழவனே ஆசைப்படக்கூடிய கேவலமான ஒரு கிழவி யென்ற பொருள்பட நீ பேசுகிருயல்லவா; நான் கிழவிதான்; அதைப்பற்றி சந்தேகமில்லை. கிழவியோ, குமரியோ, என்னைப் பார்த்துப் பிறன் ஆசைப்படுவான் என்ற வார்த்தையை, உன்னைப் பெற்ற தாயாராகிய எனக்கெதிரிலேயே நீ வாய் கூசாமல் சொல்லுவது உனக்குக் கொஞ்சமும் அழகல்ல. இங்கே கொஞ்ச நேரத்துக்கு முன் நடந்ததுகூட எனக்கு அவ்வளவு சங்கட முண்டாக்கவில்லை.

நீ சொன்னதே மனசை அறுக்கிறது." என்று சிறிது கடுமையாக மொழிந்தாள்.

அதைக் கேட்ட துரைஸானி குறும்பாகக் கண் சிமிட்டி, "வேறே யார் எதைச் செய்தாலும் அம்மாளுக்கு சந்தோஷமாக இருக்கிறது; நான் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அதிலிருந்து இல்லாத அருத்த மெல்லாம் செய்து கோபித்துக் கொள்ளுகிறதே வழக்கமாகிவிட்டது; கிழவன் என்று நான் சொன்னது தவறு. குமாரனாகவே இருக்கட்டும்; இங்கே நடந்த விஷயம் என்னவென்பதை எங்களிடம் தெரிவிக்கலாமானால், தெரிவியுங்கள். வீண் ஆட்சேபனை சமாதான மெல்லாம் எதற்கு?" என்றாள்.

அப்போது கல்யாணியம்மாளுக்கருகில் நெருங்கி நின்ற கோமளவல்லி உண்மையான பயபக்தி விசுவாசத்தோடு தனது தாயை நோக்கி, "அம்மா! குழந்தைப் புத்தியினால் அக்காள் ஏதோ சொல்லி விட்டாள்; க்ஷமித்துக்கொள்ளுங்கள்" என்று பணிவாகவும் நயமாகவும் கூறினாள். அவளது நற்குணத்தையும் கபடமற்ற நடத்தையையும் கண்ட கல்யாணியம்மாளது கோபம் உடனே தணிவடையவே, அவள் கோமளவல்லியை நோக்கி, அன்பான குரலில் பேசத்தொடங்கி, வீணைமண்டபத்திலிருந்து மதனகோபாலன் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிக்கொண்டு புறப்பட்டு எவ்வளவு நாழிகை ஆயிருக்கும்?" என்று கேட்டாள்.

கோமளவல்லி, அந்தக் கேள்வியின் உட்கருத்தை யுணராமல் "இப்போதுதான் புறப்பட்டுப் போனான்; கால் நாழிகை ஆயிருக்கும்" என்று வியப்போடும் கூறினாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள், "சரி; அங்கே இருந்து புறப்பட்டவன் நேராக இங்கே வந்துவிட்டான்போ லிருக்கிறது!" என்றாள். அந்த வாக்கியத்தைக் கேட்ட மடந்தைய ரிருவரும் திடுக்கிட்டு வியப்பும் திகைப்பு மடைந்து, "ஆ! அவனா இங்கே வந்தவன்!' என்று ஆச்சரியத்தோடு வினவினார்கள். கல்யாணியம்மாள் உற்சாகத்தோடு நகைத்துக் கொண்டவளாய், "அவனே வந்தவன்! அவனே தாறுமாறாகப் பேசினவன்! அவனே இப்போது ஓடினவன்!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

கோமளவல்லி, "என்ன ஆச்சரியம்! வீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனவன் இங்கே எப்படி வந்தான்?" என்றாள்.

துரைஸானி, "தான் போவதாக அம்மாளிடம் தெரிவிக்கும்படி என்னிடம் சொல்லிவிட்டுப் போனவன் இங்கே வரவே காரணமில்லையே. ஒருகால் வேறே யாரையாவது அம்மாள் தூரப்பார்வையில் அவனென்று தவறுக நினைத்துக்கொண்டார்கள்போ லிருக்கிறது" என்ருள்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள் ஆத்திர மடைந்தவளாய் "விளக்கு பகல்போல எரிக்கும் இந்த இடத்தில் அப்படி ஆள் மாருட்டமாக நினைக்க, என்னுடைய கண்கள் இன்னமும் அவ்வளவு தூரம் கெட்டுப்போகவில்லை. இன்று வீணை மண்டபத்தில், இடை நடுவில், எனக்கு தலைநோய் உண்டாயிற்று. அந்த அற்ப விஷயத்தை உங்களிடம் அப்போதே எதற்காகத் தெரிவிக்கிறதென்று நினைத்துக்கொண்டு எவரிடமும் சொல்லாமல் நான் எழுந்துவந்து கட்டிலில் படுத்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டிருந்தேன். கால்நாழிகைக்கு முன் திடீரென்று கட்டிலண்டையில் மனிதருடைய காலடியோசை உண்டாயிற்று. நான் உடனே திடுக்கிட்டு விழித்துப் பார்க்கிறேன். மதனகோபாலன் கட்டிலைப் பிடித்துக்கொண்டு பக்கத்தில் வந்து நிற்கிருன்! என்னுடைய உடம்பு உடனே கிடுகிடென்று ஆடிப்போய்விட்டது. என் மனசில் பெருத்த திகில் உண்டாகி விட்டது; மெதுவாக எழுந்து உட்கார்ந்து, அவனைப் பார்த்து முதலில் தூரத்தில் நின்று பேசும்படி அதட்ட, அவன் கொஞ்சமே விலகிநின்ருன். "என்னடா? எங்கே வந்தாய்?" என்று நான் உடனே கேட்க, அவன் இஞ்சிதின்ற குரங்குபோலப் பல்லைப் பல்லைக் காட்டிக்கொண்டு பைத்தியக்காரன் போல விழித்து இரண்டொரு நிமிஷம் ஊமையன் போல நின்று தத்தளித்தபின் "நீங்கள் நடுவில் எழுந்திருந்து வந்துவிட்டபடியால், உங்களிடம் சொல்லிக்கொண்டு போகலாமென்று இங்கே வந்தேன்." என்ருன். அவனது முகக்குறிகளும், நடத்தையும், சொல்லும் எனக்கு பெருத்த வியப்பையும் சந்தேகத்தையும் உண்டு பண்ணினவாஞலும், விஷயத்தை நன்ருக அறிந்து கொள்ளாமல் ஆத்திரப்படக்கூடாதென்று நான் நினைத்து, "அதற்குத்தானே வந்தாய்? சரி; போய் விட்டுவா" என்றேன், அவன் புறப்பட்டுப் போகாமல் கட்டிலண்டை நெருங்கி வந்து என்னென்னவோ அசங்கியமான வார்த்தைகளைப் பிதற்றத் தொடங்கி விட்டான். அவன் அந்த விஷயத்தை எப்படி ஆரம்பித்தானென்பது இப்போது சரியாக நினைவுக்கு வரவில்லை. அவன் பேசியு

தைக் கேட்க, அது கனவோ, உண்மையில் நடந்த சம்பவமோ வென்று நான் உடனே சந்தேகித்து விட்டேன். என்னுடைய காது களைகூட நான் நம்பவில்லை. மகா யோக்கியன்போல நடந்துவந்த அந்தப் பையன் இப்படியும் பேசுவானு என்று மலைப்பு எனக்கு தோன்றி விட்டது. அவன் ஒருவேளை இன்றையதினம் குடித்து விட்டு வந்திருப்பானு வென்று நினைத்து, நல்ல யோக்கியமான பையன் குடித்துவிட்டதனுல் எவ்வளவு கேவலமாக நடந்துகொள்ளுகிருனென்று நினைத்து, அவன் விஷயத்தில் இரக்கங்கொண்டு நான் உடனே வேலைக்காரர்களைக் கூப்பிடாமல், நானே அதட்டி வெளியில் போகும்படி சொன்னேன்; அவன் போகாமல் என்னென்னவோ உளறுகிருன்; கொஞ்சுகிருன்; கூத்தாடுகிருன்; பல்லைக்காட்டுகிருன். அவன் சொன்னதை யெல்லாம், அப்படியே எடுத்துச் சொல்ல என் வாய் கூசுகிறது. அவனுடைய ஆசையெல்லாம் என்மேல் விழுந்து விட்டதாம். நான் அவன் விஷயத்தில் இரக்கங்கொண்டு அவனுடைய ஆசையைப் பூர்த்தி செய்யாவிட்டால், அவன் இன்றிரவே விஷத்தைத் தின்று உயிரை விட்டுவிடுவானும்; பிறகு அந்தப் பழிக்கு நானே ஆளாகவேண்டுமாம். அவன் இந்த மாதிரி பத்து நிமிஷ நேரம் பிதற்றினுன். உண்மையில் அவன் குடித்திருப்பதாகவே நினைத்து, நயமாக அவனை வெளியில் அனுப்பிவிடலா மென்ற எண்ணம்கொண்டு நான் அவனை அப்போது வீட்டுக்குப் போய் விட்டு காலையில் வரும்படி சொல்ல, அவன் மறுக்க, எனக்கு சகிக்க முடியாத கோபம் வந்து விட்டது. வேலைக்காரர்களை அழைத்து அவனைக் கட்டி வைத்து உதைக்கச் செய்வதாகச் சொல்லிக்கொண்டு கட்டிலை விட்டிறங்கி வாசற்படியண்டை போனேன். அதைக்கண்ட பிறகு அவன் பயமடைந்து ஓட ஆரம்பித்தான்; நான் பின்னுகத் துரத்தினேன். அதற்குள் நீங்கள் வந்தீர்கள். இது வேலைக்காரர்களுக்குத் தெரிவதைவிட, தெரியாமலிருப்பதே நல்லதென்று நினைத்து பேசாமல் வந்து விட்டேன். இவ்வளவு வயதான பெண்பிள்ளையான என்னிடத்திலேயே இவ்வளவுதூரம் வாலையாட்டிய இந்தத் துஷ்டன் ஒன்றையு மறியாத சிறிய பெண்களிடம் எப்படித்தான் நடந்து கொள்ளமாட்டான்'' என்ருள். அதைக்கேட்ட துரைஸானி, "இப்படியும் நடந்திருக்குமா?'' என்று வியப்போடு கேட்ட வண்ணம், அந்த வரலாற்றை நம்பாதவள் போல சந்தேகமான பார்வையாகத் தனது தாயின் முகத்தை உற்று நோக்கினுள்.

ஆனால் கோமளவல்லியோ தனது தாய் கூறிய ஒவ்வொரு வாக்கியத்தையும் வேதவாக்கியமாக நம்பி, "என்ன ஆச்சரியம்! அந்த மனிதனுக்கு இவ்வளவு திமிரா!" என்றாள்.

கல்யாணியம்மாள் தனது மூத்த குமாரியின் சந்தேகப்பார்வையைக் கவனித்தும் கவனிக்காதவள்போல நடித்து, "இது திமிர்மாத்திரமல்ல; அவனுடைய ஜாதிபுத்தி இது; தாசிகளுக்கும் வேசிகளுக்கும் நடுவிலிருந்து பாட்டுப்பாடும் கேவலமான ஒரு மனிதனை நாம் உள்ளே சேர்த்து அவனிடத்தில் மிகவும் அன்பாக நடந்து பிரியமாகப் பேசினோமல்லவா; அதிலிருந்து அவன் ஏதோ சந்தேகமாக நினைத்துக் கொண்டான்போ லிருக்கிறது. நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தமாதிரி அவன் செய்துவிட்டான்" என்றாள்.

கோமளவல்லி, "இத்தனைமாத காலமாக, அவன் இங்கே வந்துவிட்டுப் போனபோதெல்லாம் பரம யோக்கியன்போல பயபக்தி மரியாதையாக நடந்துகொண்டதைப் பார்த்தால், அவன் நல்ல உத்தம குணமுடைய மனிதனென்றல்லவா நினைக்கும்படியா யிருந்தது. இத்தனை நாளுமில்லாமல் இன்று மாத்திரம் அவனுக்கு என்ன கேடு வந்துவிட்டது!" என்று மறுபடியும் வியப்பாகக் கூறினாள்.

அதைக் கேட்ட துரைஸானியம்மாள், "அவனுடைய புத்திசாலித் தனமென்ன! அவனுடைய மரியாதை யென்ன! அப்படிப்பட்ட மனிதனா இந்த அசட்டுக் காரியத்தைச் செய்யக் கூடியவன்! அவனுடைய சுய புத்தியோடு. அவன் இப்படிப்பட்ட காரியம் செய்யக்கூடியவனல்ல வென்பதை நான் உறுதியாகச் சொல்லுவேன். இன்று வீணை மண்டபத்தி லிருந்து புறப்பட்ட பிறகு அவனுக்கு ஒருகால் கொஞ்சம் பைத்தியந்தான் உண்டாகி இருக்க வேண்டும்" என்று மறுபடியும் சந்தேகமாகப் பேசினாள்.

கல்யாணியம்மாள், "அப்படித்தானிருக்கும்; இல்லையானால் அவன் ஏன் அந்தப்புரத்துக்குள் வருகிறான். சரி; இதைப் பற்றிப் பேசுவதே அசங்கியமாக இருக்கிறது. இதோடு பேச்சை விடுங்கள். நாளைமுதல் இந்த பங்களாவின் அண்டையிலும் கால் வைக்கக் கூடாதென்று கண்டித்து அவனிடம் சொல்லி விட்டேன். நல்ல யோக்கியனான வேறொரு வீணைவித்துவானைப் பார்த்து நாம் சீக்கிரத்தில் அமர்த்திக்கொள்வோம். நீங்கள் போய் இலைபோடச் சொல்லுங்கள். சாப்பாட்டுக்கு நேரமாகிறது. நான் ஐந்து நிமிஷத்

தில் வருகிறேன்" என்று முடிவாகக்கூற, பெண்களிருவரும் உடனே அவளது உத்தரவிற்குக் கீழ்ப்படிந்தவர்களாய் அந்தச் சயன மாளிகையை விட்டு வெளியில் போய் போஜன மாளிகையை நோக்கி நடந்தனர்.

அவ்விருவரும் மறைந்தவுடனே கல்யாணியம்மாள் சகிக்க வொண்ணாத சஞ்சலமடைந்த மனத்தினளாய் தனது பஞ்சணையின் மீது படுத்தாள். தான் கூறிய கட்டுக்கதையை தனது மூத்த புதல்வி நம்பவில்லையென்பதை அவள் கண்டு கொண்டாளாதலால், முன்னிருந்த பற்பல வேதனைகளுக்குத் துணையாக அந்த வேதனையும் ஒன்றுகூடி அவளது மனத்தை உலப்ப வாரம்பித்தது அவளது நிலைமை அப்படி இருக்க, அந்த மாளிகையை விட்டு வெளிப்பட்ட மடந்தையர் இருவரும் இரண்டொரு விடுதிகளைக் கடந்து அப்பாற் சென்றவுடனே மூத்தவளான துரைஸானியம்மாள் நாற்புறங்களையும் உற்றுநோக்கி அண்டையில் அன்னியர் எவருமில்லை, யென்பதை உணர்ந்து கொண்டு, தனது தங்கையை நோக்கி, "கோமளவல்லீ! அம்மாள் சொன்ன கதை எப்படி இருக்கிறது பார்த்தாயா?" என்று தணிவான குரலில் வினவினாள். அதைக் கேட்ட கோமளவல்லி தனது அக்காளது சொல்லின் உட்கருத்தை நுட்பமாக அறிந்து கொள்ளாதவளாய், "மதனகோபாலனுடைய நடத்தையை நினைக்க நினைக்க, என்னுடைய உடம்பு நடுங்குகிறது, இதுவரையில் எவ்வளவோ யோக்கியமாக நடந்து வந்தவன் அவ்வளவு துணிச்சலான காரியம் செய்து விட்டான் பார்த்தாயா!" என்று வியப்போடு மொழிந்தாள்.

துரைஸானி:—நம்முடைய அம்மாள் சொன்னபடியே எல்லாம் நடந்திருக்குமென்று நீ நம்புகிறாயா?

கோமளவல்லி (மிகுந்த வியப்போடு):—என்ன அப்படிக் கேட்கிறாயே! நடக்காத சங்கதியை அம்மாள் சொல்லுவார்களா?

துரைஸானி:—சொல்லத்தான் கூடாது. அதிருக்கட்டும். இந்த மதனகோபாலன் நம்முடைய அம்மாளைக் காட்டிலும் வயதில் மிகவும் யௌவனப் பருவம் அழகும் வாய்ந்த எத்தனையோ பெண்களோடு பழகி வீணை கற்றுக்கொடுக்கிறானே. அவர்கள் எவரிடத்திலும் அவனுக்கு ஆசை உண்டாகாமல், இவ்வளவு வயதான நம்முடைய அம்மாள்மேல் அவன் ஆசைப்பட்டு இப்படிப் பைத்தியம் கொள்ளப் போகிறானா! அதை நீ யோசித்தாயா?

கோமளவல்லி:—அம்மாளென்ன அவ்வளவு வயதான கிழ வியா? இப்போதுதானே முப்பத்து நான்கு வயதாகிறது. அவ் வளவு வயதானாலும், அம்மாள் நம்மெல்லோரையும் விட அதிக அழகாக இருக்கிறார்களல்லவா?

துரைஸானி;—அதெல்லாம் உண்மைதான். மதனகோபால னுக்கு இப்போது சுமார் பதினெட்டு வயதிருக்கலாம். அவன் இயற் கையிலேயே மிகவும் நாணமுள்ள மனிதன்; பெண்பிள்ளைகளைக் கண் டால், நடுநடுங்கி நாலுகாத தூரம் ஓடுகிற சுபாவமுடையவன். நம் முடைய அம்மாளோ மகா கம்பீரமும் அமர்த்தலும் நிறைந்தவர்கள். அப்பேர்ப்பட்ட குணமுடைய சிறிய பையன் இப்படி தலைகால் தெரியாமல் மோகம்கொண்டு பிதற்றி, தான் கொலைசெய்து கொள் ளுவதாகச் சொல்லுவானா? இது ஒருநாளும் நடக்காத காரியம். இதில் என்னவோ சூது நடந்திருக்கிறது; அம்மாள் நம்மிடம் சரி யானபடி உண்மையைத் தெரிவிக்கவில்லை யென்றே நான் நினைக் கிறேன்.

கோமளவல்லி:—அப்படியானால், அம்மாள் நம்மிடத்தில் ஏன் பொய் பேசவேண்டும்?

துரைஸானி:—உன்னிடம் எதைச் சொன்னாலும், நீ ஏன் ஏன் என்றே கேட்கிறாய். சில சூசனைகளைக்கொண்டு ஒரு விஷயத்தில் நாம் சந்தேகப்படுகிறோம். அப்படி சந்தேகப்பட்டாலும், எல்லா வற்றிற்கும் திருப்திகரமான காரணம் சொல்ல முடியுமா? இதெல் லாம் காலக் கிரமத்திலேதான் நன்றாக விளங்கும். கேவலம் நம் முடைய பங்களாவில் குற்றேவல் செய்யும் பொன்னியைக்கண்டு அம்மாள் எவ்வளவு தூரம் பயப்படுகிறார்கள். அதன் காரண மென்ன? இவைகளிலெல்லாம் ஏதோ ரகசியம் இருக்கிறது. இல்லா விட்டால், இத்தனை மாதமுமில்லாமல், இன்று வீணை மண்டபத்தி லிருந்து, இடைநடுவில் அம்மாள் எழுந்து நமக்குத் தெரியாமல் சயன மாளிகைக்கு வரவேண்டிய காரணமென்ன?

கோமளவல்லி:—அதிருக்கட்டும்; தான் வீட்டுக்குப் போவ தாக அம்மாளிடம் சொல்லி விடும்படி உன்னிடத்தில் கேட்டுக் கொண்டு வெளியில் போன அந்த மனிதன், அம்மாளுடைய படுக்கை யறைக்கு ஏன் போனான்? அது அவனுடைய குற்றந்தானே?

துரைஸானி:—அவனாகப் போனானோ என்னவோ! அது யாருக் குத்தெரியும்? கச்சேரி முடிந்து அவன் போகும்போது அவனை சயன

மாளிகைக்கு அழைத்து வரும்படி எவனாவது வேலைக்காரனிடம் அம்மாள் சொல்லிவைத்திருக்கலாம். அதை உத்தேசித்தே அம்மாள் முன்னாக மண்டபத்திலிருந்து எழுந்து போயிருக்கலாம். தலைநோவினால் எழுந்து போனதாக அம்மாள் சொல்லுகிறார்களே. உண்மையில் தலைநோவிருந்தால், அதை நம்மிடம் சொல்லிவிட்டு எல்லோருமறியப்போவதை விட்டு, எவருக்கும் தெரியாதபடி கபட்டுத்தனமாக ஏன் மறைந்து போகவேண்டும்? அதுவும் தவிர, இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கவனித்தாயா? நாம் அம்மாளுடைய சயனமாளிகைக்குள் போனபோது, அவன் வெளியில் ஓடினனல்லவா; அவனைப் பிடிப்பதற்கு அம்மாள் துரத்திக்கொண்டு போகவேண்டிய காரணமென்ன? அப்படி உண்மையில் அவன் தாறுமாறாகப் பேசியிருந்தால், அவனை அதட்டி வெளியில் அனுப்பியிருக்கவேண்டும். அவன் வெளியில் போகாமல் அம்மாளைத் தொடமுயன்றிருந்தால், அவனைப்பிடித்து தண்டிக்கும்பொருட்டு கூச்சலிட்டு, வேலைக்காரர்களை அழைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், மௌனமாக அம்மாளே ஓடி அவனைப் பிடித்து அடிக்கப் போனார்களா? அல்லது, வேறே என்ன செய்யப் போனார்கள்? அவன் ஓடினால், சனியன் ஒழிந்தது நல்லதென்று அம்மாள் அதைப் பற்றி சந்தோஷப்பட்டு பேசாமலல்லவா இருக்கவேண்டும். அவன் ஓட, அம்மாள் துரத்தியதிலிருந்து, என் மனதில் இரண்டு வகையான சந்தேகங்கள் உதிக்கின்றன. அம்மாள் ஏதோ தவறான காரியத்தை செய்யச்சொல்ல, அவன் அதை செய்ய மறுத்து ஓட, அம்மாள் அவனைப் பிடிக்கும்பொருட்டு துரத்தி யிருக்கலாம். அல்லது, அவன் பலவந்தமாக அம்மாளிடத்தில் ஏதேனும் துன்மார்க்கமான காரியம் செய்துவிட்டு ஓட, அம்மாள் துரத்தி இருக்கவேண்டும். அவன் பலவந்தமாக ஏதாவது செய்யமுயன்றிருந்தால் அம்மாள் அவசியம் கூச்சலிட்டிருப்பார்கள். கூச்சலிடாததிலிருந்து முதல் சந்தேகமே உறுதியாக என் மனதில் படுகிறது—என்றாள்.

அதைக்கேட்ட கோமளவல்லியின் கபடமற்ற மனம், மிகுந்த கலக்கமும் குழப்பமு மடைந்தது. அதுகாறும் எந்த விஷயத்திலும் தனது தாய் பரிசுத்தமான நடத்தையுடையவளென்பதை நன்றாகக் கண்டு, அதே உறுதியை மாறாமல் கொண்டிருந்தவளாதலால் அந்தச் சம்பவம் எவ்விதமான சந்தேகத்தை உண்டாக்கியதானாலும், தனது தாய் விஷயத்தில் கல்மஷமாக நினைக்க அவளது மனம் இடந்

தரவில்லை. மூத்தவளோ தாய் விஷயத்தில் பெருத்த சந்தேகம் கொண்டுவிட்டாள். அவ்வாறு இளங்குமரிகள் இருவரும் தணிவான குரலில் சாம்பாஷித்தவண்ணம் போஜனமாளிகையை யடைந்தனர். அவ்விடத்தில் வேலைக்காரர்களும் தாதிகளும் இருந்ததைப்பற்றி, அவர்களது சம்பாஷணை அவ்வளவோடு முடிவுற்றது.

அதன் பிறகு கால் நாழிகை நேரத்தில் கல்யாணியம்மாளும் அவ்விடத்திற்கு வந்து சேர, அவர்களது இராப்போஜனம் வழக்கப்படி நிறைவேறியது. கல்யாணியம்மாள் தனக்கு இன்னமும் தலை நோவாயிருப்பதாகக் கூறி, சொற்ப போஜனமும் செய்யாமல், தான் சீக்கிரம் சயனித்துக்கொள்ள விரும்புவதாகக் கூறி எழுந்துபோய் விட்டாள். மடந்தையரிருவரும் தங்களது போஜனத்தை முடித்துக் கொண்டு தத்தம் சயன அந்தப்புரங்களுக்குப் போய் சயனித்துக் கொண்டனர்.

அந்த இரவு கல்யாணியம்மாளுக்கு மகா துன்பகரமான கொடிய இரவாக முடிந்தது. அன்று அவளுக்கு நேர்ந்த ஏமாற்றமும் இழிவும் அவமானமும் அவளது மனதில் பெருத்த விசனமாக நிரம்பி, கோபமாகப் பொங்கி, அவளது மனதைக் கொதிக்கச் செய்துகொண்டிருந்தன. அதனால், அவளுக்கு ஆகாரத்தின்மீதே விருப்பம் செல்லவில்லை. இருந்தாலும், தான் போஜன மாளிகைக்குப் போகாமலிருந்தால், அதைப்பற்றி தனது புதல்வியரும் பிறரும் ஏதேனும் வம்பு வளர்ப்பார்களென்ற நினைவினால், அங்கே போய்த் தலைநோய் கொண்டவள்போல நடித்து உணவருந்தாமல் திரும்பி சயன மாளிகைக்கு வந்தவள் ஜன்னல்களையெல்லாம் நன்றாக மூடி விட்டுத் தனது சப்பிரமஞ்சத்தில் சயனித்துக்கொண்டாள். அன்றைய ஆகாரம் எப்படி நிராகாரமாயிற்றோ, அப்படியே அன்றைய நித்திரையும் அவளுக்கு சத்துருவாகப் போய்விட்டது. அவள் படுத்திருந்த கட்டிலின்மீது மூன்று மெத்தைகள் ஒன்றன்மேலொன்றாகப் போடப்பட்டிருந்தன. அடியிலிருந்த மெத்தை ஒரு முழ உயரமுள்ளதாகவும், முற்றிலும் மிருதுவான உரோமங்கள் நிறைந்ததாகவு மிருந்தது. அதற்குமே லிருந்தது, சுத்தமாகக் கடைந்தெடுத்த பஞ்சு நிறைந்ததும், அரைமுழ உயரமுள்ளதாகவு மிருந்தது; அதன்மே லிருந்தது ஒரு சாணுயரம் பருத்ததாகவும், குள்ளவாத்துக்களின் உடம்பில் இறகிற்குள் முளைத்து பஞ்சைக் காட்டிலும் மகா நுட்பமாகவிருக்கும் பூமயிர்களை நிரப்பப்

பட்டதாகவும், வழுவழுப்பான மகமலால் போர்த்தப் பெற்றதாகவு மிருந்தது. அதன்மேல் வில்வெட்டினால் ஆக்கப்பட்ட எண்ணிறந்த தலையணைகள், திண்டுகள் முதலியவை பொருத்தப்பெற்றிருந்தன. அத்தகைய மகா ஸொகுஸான சயனத்தின் மீது சயனித்திருந்தாளானாலும், கல்யாணியம்மாளுக்கு அது, கல்களும், முள்களும், தேள்களும் நிறைந்த மகாகொடிய பாறைபோலத் தோன்றி வருத்தி, அவளது தேகத்தைப் புண்படுத்தினவாதலால், அபாரமான செல்வத்திலும் சுகபோகங்களிலும் ஆழ்ந்துகிடந்த அந்தச் சீமாட்டிக்கு, துயில் என்ற ஒரு பொருள்மாத்திரம் பஞ்சமாகப் போய் அவளை நரகவாதனையி லாழ்த்தியது. எவ்வாறெனில், அவளது மனமான களத்தில் மகா உக்கிரமான கொடிய யுத்தம் நடந்துகொண்டிருந்தது. அவள் பிறந்த நாள் முதல் அத்தனை வருஷகாலமாக ஏக சக்கராதிபதியாயிருந்து, தனது சித்தமே சட்டமாக நிறைவேற்றி வந்த அந்தப் பெண்ணரசியின் மனது என்றைக்குமில்லாதவாறு அன்று புண்பட்டு முறிந்துபோனது பற்றி அவள்கொண்ட ஆங்காரமும் கோபமும் மண்ணையும் விண்ணையும் நிரம்பக்கூடியதாக இருந்தன. அவளது உடம்பு அப்போதும் துடிதுடித்துக் கொண்டிருந்தது. மனமோ அடங்காமல் பொங்கி யெழுந்து கொந்தளித்தது; அதனால் அவளது ஹிருதயம் வெடித்துவிடுமோ வென்னும் நிலைமையி லிருந்தது. அவளது மனதில் பலவகைப்பட்ட எண்ணங்கள் தோன்றி மறைந்தன. அவள் நெடுமூச்செறிந்த ஒவ்வொரு முறையும், எழுந்து தணிந்த அவளது வனப்பு வழிந்த மார்பு படீரென்று தெறித்துக் கிழிந்துபோகுமோ வென்னலாம்படி கட்டுக்கடங்காத மூர்க்ககுணமுடையதாக இருந்தது. மதனகோபாலனது அதி சுந்தரவடிவம் அவளது மனதைவிட்டு நீங்காமலே பதிந்து நின்றுவிட்டது. அவன் மீது அவள் கொண்டிருந்த அன்பும் உருக்கமும் அப்போதும் அடிக்கடி தலைகாட்டினவானாலும் அவன் தன்னை அவ்வளவுதூரம் அலட்சியம்செய்து அவமரியாதையாக நடத்தும்படி ஆனதே என்ற ஆத்திரமும் கோபமும், அதற்காக அவனுக்கு ஏதேனும் தீங்கிழைக்க வேண்டுமென்ற பதைப்பும் விலக்கவொண்ணா வகையில் அவளது மனதில் பொங்கி யெழுந்து, அவனது விஷயத்தில் அவள் அதுகாறும் கொண்டிருந்த பிரியத்தையெல்லாம் சிதற அடித்தன. அது நிற்க, அவளது மனதில் இன்னொரு பெருத்த பீதியும் எழுந்து வதைக்க வாரம்பித்தது. தனக்கு சம்பந்தியாக வரப்

போகும் மீனாக்ஷியம்மாளது பங்களாவிலும், இன்னம் பல ஜெமீந்தார்களது பங்களாக்களிலும் அவன் சென்று வீணை பயிற்றுவிப்பவனாதலால், தனக்கும் அவனுக்கும் தனிமையில் நடந்த சம்பாஷணை முதலிய விவரங்களை அவன் ஒருகால் அவர்களிடம் வெளியிட்டு விடுவானோ என்ற கவலையே பெருத்த கவலையாக எழுந்து அவளைத் துயிலவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தது. அவன் அவ்வாறு விஷயங்களை வெளியிடுவானாகில் அதனால் தனக்குப் பெருத்த மானஹானி நேருவதன்றி தனது பிள்ளைக்கும் பெண்களுக்கும் கலியாணம் நடப்பதற்கு அது பெருத்த இடையூறாக முடியுமேயென்றும், நினைத்து நினைத்து அவள் பெரிதும் கவலைகொண்டு அன்றிரவு நெடுநேரம் வரையில் மஞ்சத்தில் புரண்டு புரண்டு தவித்தவளாய், கடைசியில் ஒருவித முடிவிற்கு வந்தாள். மதனகோபாலன் பாடம் கற்பிக்கப்போகும் ஜெமீந்தார் வீடுகளிலுள்ள பெண்டீரில் சிலர் அவளுக்கு உறவினராயும், மற்றவர் நட்பினராயுமிருந்தமையால், அவன் அவர்களிடத்தில் உண்மையை வெளியிடுவதற்கு முன்னர், தான் ஒவ்வோர் இடத்திற்கும் சென்று, தனது பெண்களிடம் தான் சொன்ன கட்டுக்கதையை அவர்களிடமும் தந்திரமாக வெளிப்படுத்தி வைத்தால், பிறகு எவரும் அவனது சொல்லை நம்பமாட்டார்களென்றும், அவனை யாவரும் தங்களது பங்களாக்களில் சேர்க்க மாட்டார்களென்றும், அவள் நினைத்ததன்றி, அத்தனை பங்களாக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் முற்றிலும் இல்லாமல் போமாயின், அவன் இந்த ஊரைவிட்டு வேறு ஊருக்குப் போய்விட நேருமாதலால், அதன் பிறகு அவனால் தனக்கு எவ்விதமான இடரும் நேராதென்று நினைத்து, அந்த நினைவின்படி காரியத்தை நிறைவேற்றிவிடத் தீர்மானித்துக் கொண்டவளாய்; மிகவும் பாடுபட்டு விடியற்காலை நான்குமணிக்குத் துயிலில் ஆழ்ந்தவள், காலை ஏழுமணிக்குத் தனது பஞ்சணையைவிட் டெழுந்தாள். எழுந்தவள் கட்டிலின்மேல், கால்பக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த நிலைக்கண்ணாடியில், தனது வடிவம் தெரிந்ததைப்பார்க்க, தனது முகத்தில் பெருத்த மாறுபாடு தோன்றியிருக்கக் கண்டு "இந்த ஒரு நாளைய கவலையில் முகம் ரத்தம் செத்து வெளுத்துப்போய்விட்டதே! கண்கள் இப்படிக் குழிந்துபோய்விட்டனவே! அடாடா! நமக்குப் புதிய புதிய கவலைகளும் துன்பங்களுமல்லவா உண்டாகின்றன. முன்னமேயே இருக்கும் கவலைகளுக்கு இது வட்டியா! சே! இந்தப் புதிய கவலையை சீக்கி

ரத்தில் ஒழித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் இது பெருத்த தீம்பாக வளர்ந்துவிடும். நகத்தால் கிள்ளி யெறிவதைவிட்டு, பிறகு கோடாறி கொண்டு பிளக்க நேரும்'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டு எழுந்து பிறர் தன்னைப் பார்த்து சந்தேகம் கொள்ளாதிருக் கும்படி, அன்றைய காலைக்கடன்களையும் பகற் போஜனத்தையும் வழக்கப்படி முடித்துக்கொண்ட பிறகு சிறிது நேரம் படுத்திருந்து பிற்கபல் மூன்று மணிக்குத் தனது பெட்டி வண்டியைப் பூட்டச் செய்து, அதற்குள் உட்கார்ந்துகொண்டு மீனாக்ஷியம்மாளது பங்களா விற்கு வந்து சேர்ந்தாள்; சேர்ந்தவள் வண்டியை விட்டிறங்கி, மீனாக்ஷி யம்மாள் மேன்மாடத்தி லிருப்பதாக காவல் காரனிடம் கேட்டறிந்து கொண்டு படிகளின் வழியாக மேலே ஏறினாள்; அப்போது தனது முகத்தை ஒருவாறாக மாற்றிக்கொண்டாள். மிகவும் அசட்டுத்தன மான ஒரு சம்பவத்தை கண்டு அதிருப்தி யடைந்து புரளிசெய்பவ ரது முகம் எவ்வாறு காணப்படுமோ அவ்வாறு அவள் தனது முக த்தை வைத்துக்கொண்டு மேன்மாடத்திற்குள் சென்று மீனாக்ஷி யம்மாளும், கண்மணியம்மாளும் உட்கார்ந்திருந்த ஒரு விடுதிக் குள் நுழைந்தாள். அப்போது மீனாக்ஷியம்மாள், தனது சாய்மான நாற்காலியில் சாய்ந்து துயிலில் ஆழ்ந்து விழித்தவளாய் உறங்கிக் கொண்டிருந்தாள். கண்மணியம்மாள் ஏதோ ஒரு புஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு மூலையாகத் திரும்பி தனது முழு மனதையும் ஒரே நிலையில் நிறுத்தி வெறுவெளியை நோக்கிய வண் ணம் ஏதோ விசனத்தில் மூழ்கியிருப்பவள் போலவும், ஏக்கங் கொண்டவள் போலவும் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். தாங்க ளிருந்த விடுதிக்குள் யாரோ மனிதர் நுழைந்த ஓசையைக் கேட்ட மீனாக்ஷியம்மாளும், கண்மணியும் திடுக்கிட்டு வாசற்படிப் பக்கம் நோக்கி, கல்யாணியம்மாள் வந்ததைக் கண்டனர். அவளது வருகை எதிர்பார்க்கப்படாததும், அருமையானதுமாக இருந்த மையால், அவர்களிருவரும் வியப்புற்று தடபுடலாக எழுந்தனர். மீனாக்ஷியம்மாள் நிரம்பவும் ஆசையோடும் மரியாதையோடும் எதிர் கொண்டு சென்று, "வரவேண்டும்; வரவேண்டும்; இப்படி சாய் மான நாற்காலியில் உட்காரவேண்டும்'' என்று மிகுந்த அன் போடு உபசரித்து வரவேற்க, கல்யாணியம்மாள், பலவந்தமாகப் புன்னகை செய்த முகத்தினளாய், அருகிலிருந்த ஒரு ஸோபா வின்மீது உட்கார்ந்துகொள்ள, மீனாக்ஷியம்மாளும் சிறிது தூரத்தில்

கிடந்த ஒரு சாதாரண நாற்காலியில் அமர்ந்தாள். கல்யாணியம்மாளைக் கண்டு எழுந்த கண்மணியம்மாள் தனக்கு மாமியார் ஆகப்போகும் அந்த அம்மாளிடத்தில் நிரம்பவும் மரியாதை, பணிவு முதலியவற்றைக் காட்டுகிறவள் போல நாணிக்கோணி அவளைப் பேணிப் பாராட்டுபவள் போல நடித்து, இங்கே இருந்த பொருளை அங்கே வைத்து அங்கே இருந்த பொருளை இங்கே வைத்து ஏதோ வேலை செய்பவள்போல அதிக சுருசுருப்பைக் காட்டி அங்குமிங்கும்போய் வந்துகொண்டிருந்தாள். ஸோபாவில்உட்கார்ந்த கல்யாணியம்மாளும் நாற்காலியில் உட்கார்ந்த மீனாக்ஷியம்மாளும் ஒருவரையொருவர் அன்பாக க்ஷேமம் விசாரித்துக்கொண்ட பின்னர், மீனாக்ஷியம்மாள், மாரமங்கலம் ஜெமீந்தாரிணியின் முகத்தை ஒருவாறாக உற்றுநோக்கி, "என்ன உங்களுடைய முகம் ஒரு மாதிரியாக இருக்கிறதே! ஏதேனும் விசேஷமுண்டா?" என்றாள். மீனாக்ஷியம்மாள் அந்தக் கேள்வி கேட்டதைக் குறித்து கல்யாணியம்மாள் அதிசயித்தவள் போல நடித்து, "விசேஷமா! என் முகம் மாறுபட்டா தெரிகிறது? நான் இங்கே வரும்போது வண்டியில் ஒரு விஷயத்தைப்பற்றி சிந்தனை செய்து கொண்டே வந்தேன். அதனால் ஒரு வேளை முகம் மாறுபட்டிருக்கலாம். நான் எந்த விஷயத்தை உங்களிடம் சொல்லக் கூடாதென்று நினைத்து வந்தேனோ அதே விஷயம் முன்னால் வந்து நிற்கிறது. நாம் மறைத்தாலும், நம்முடைய முகம் காட்டிக் கொடுத்து விடுகிறது. உங்களிடம் அதை ஏன் மறைக்க வேண்டுமென இப்போது தோன்றுகிறது" என்று கூறியவண்ணம், வேடிக்கைபோல நகைத்தாள். அதற்குள் கண்மணியம்மாள் ஒரு கட்டிலிற்கருகில் மெல்ல நழுவி, மறைவாக உட்கார்ந்துகொண்டாள். அவளது முகம் மாத்திரம் அப்பால் மறைந்திருந்தது. முதுகு முதலிய மற்ற பாகங்கள் யாவும் கல்யாணியம்மாளுக்குத் தெரிந்தது. மிகவும் அபூர்வமாக அன்று கல்யாணியம்மாள் வந்தது அவளது மனதில் பலவகையான யூகங்களுக்கு இடங்கொடுத்தது. முதல் நாள் தனது கலியாண விஷயத்தைப்பற்றி தான் மதனகோபாலனிடம் சம்பாஷித்திருந்த விஷயமாக, மீனாக்ஷியம்மாளும், துரைராஜாவும் ஏதேனும் யோசனை செய்து, அதன்பொருட்டு கல்யாணியம்மாளை வருவித்திருப்பார்களோ வென்றும், தனது கலியாணத்தை அதிசீக்கிரத்தில் முடித்து விடும் விஷயமாக அவர்கள் பேசுவார்களோ என்றும் கண்மணிபெரிதும் கவலை கொண்டவளாய், அவர்களது சம்பாஷணையை நன்றாக

உற்றுக் கேட்கலானாள். ஆனால், புஸ்தகம் வாசிப்பவள் போல அதைப் பிரித்து முகத்திற்கெதிரில் பிடித்துக் கொண்டாள். அப்போது மீனாக்ஷியம்மாள் சிறிது சிந்தனை செய்தபின் கல்யாணியம்மாளை நோக்கி, "என்னிடம் வெளியிடக்கூடாமல் அப்படி மறைக்கக்கூடிய விஷயம் என்னவாக இருக்கலாமென்று நான் எவ்வளவோ யோசனை செய்தும் ஒன்றும் புலப்படவில்லையே! விஷயம் நிரம்பவும் விபரீதமானதல்லவே?" என்றாள்.

கல்யாணியம்மாள், "அப்படி ஒன்றும் விபரீதம் நடக்கும்படி நான் விட்டுவிடவில்லை; அது ஒரு பைத்தியக்காரனுடைய சங்கதி. அதை வாயில் வைத்துப் பேசுவதே அசங்கியமாக இருக்கிறது. அதை வெளியிடுவதனால், நமக்கு அவமானம் உண்டாகப் போகிறதில்லை. அதை எப்படி வெளியிடுகிறதென்பதே எனக்குத் தெரியவில்லை; ஆனால் அதைக் கேட்பவர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா? இவள் ஏதோ சம்சயப்படும்படியாக நடந்துகொண்டிருக்கிறாள். அதனாலேதான், அவன் அவ்வளவு தூரம் துணிந்து கேட்டிருக்கிறான், என்று எண்ணிக் கொள்ளலாம்."

மீனாக்ஷி (மிகவும் வியப்படைந்து):—விடுகதை போடுவது போல நீங்கள் மறைத்து மறைத்துப் பேசுகிறீர்கள். எனக்கு ஒன்றும் புரியவே இல்லை. நன்றாகத்தான் சொல்லுங்களேன். இங்கே வேறே யாரிருக்கிறார்கள்? நாங்களெல்லோரும் அன்னியர்களல்லவே; நான் உங்களுடைய பழைய சிநேகிதை. கண்மணியம்மாளோ உங்களுடைய மருமகள். நீங்கள் வெட்கப்படாமல், விஷயத்தைச் சொல்லுங்கள்—என்றாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள், கண்மணியின் பெயரைக் கேட்டவுடன், அப்போதே ஒரு விஷயத்தை நினைத்துக்கொண்டவள் போல நடித்து, அவளிருந்த பக்கம் சடக்கென்று திரும்பி, "ஏன் குழந்தாய் கண்மணீ! நீயும் வீணை கற்றுக் கொள்ளுகிறாயென்பது இப்போதுதான் ஞாபகத்துக்கு வந்தது. உனக்கும் அந்த மதனகோபாலன் என்ற பையன்தானே கற்றுக்கொடுக்கிறான்?" என்றாள்.

எதிர்பாராத அந்தக் கேள்வி கண்மணியின் செவியில் பட்டவுடனே, அவள் திடுக்கிட்டு வியப்பும் திகைப்பும் கொண்டவளாய், சடக்கென்று தனது முகத்தை கல்யாணியம்மாளிருந்த பக்கம்

திருப்பினுள். திடீரென்று ஒரு பெரும் பூதம் தோன்றியதைக் கண்டிருந்தால் கூட, அவள் அவ்வளவு அதிகமாகப் பயந்திருக்கமாட்டாள். அவளது மனதின் குழப்பத்தையும் சஞ்சலத்தையும் அவளது முகம் கண்ணுடிபோல நன்ருகக் காட்டியது; கேட்கப்பட்ட கேள்விக்கு மறுமொழி சொல்ல வேண்டுமென்பதையும் உணராமல், கண்மணியம்மாள் சிறிது தடுமாறி அதன் பிறகு, "ஆம்" என்று மெதுவாக மறுமொழி கூறினுள். கல்யாணியம்மாள் நல்ல நுட்பமான புத்தியுடையவளாதலால், கண்மணியின் மனது சரியான நிலைமையிலில்லையென்பதை உடனே உணர்ந்து கொண்டதன்றி, மதனகோபாலனது பெயரைச் சொன்ன மாத்திரத்தில் அவள் திடுக்கிட்டு சஞ்சலமடைந்ததிலிருந்து, அவனிடத்தில் அவள் நிரம்பவும் அதிகமான அபிமானம் வைத்திருக்கிருளென்பதை யூகித்துக்கொண்டாள்.

அப்போது மீனுக்ஷியம்மாள், "சரி; நீங்கள் பேசுவதைப் பார்த்தால், அந்த மதனகோபாலனைப் பற்றியே ஏதோ சொல்லப்போகிறீர்கள்போ லிருக்கிறது. நம்முடைய வீடுகளிலெல்லாம், அவனைச் சேர்த்ததே பிசகாய்ப் போய்விட்டது! வந்த ஆரம்பத்தில் பரம யோக்கியன்போல நடந்துகொண்ட பையன், வரவர கழுதை நிறத்துக்கு வந்துவிட்டானே! அவன் இங்கேதான் அயோக்கியத்தனமாக நடந்து கொண்டானென்ருல் அங்கேயும் ஏதோ வாலை யாட்டியிருக்கிருன்போ லிருக்கிறதே!" என்ருள்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள் ஒருவாறு வியப்படைந்தவளாய், கண்மணியிருந்த பக்கம் திரும்பி மிகவும் கூர்மையாகவும் சம்சயத்தோடும் அவளை உற்று நோக்கியவண்ணம், "சரி; அப்படியானுல், இங்கேயும் ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது! பெரிய மனிதருடைய வீடுகளிலெல்லாம் தன்னை அழைத்து பெருத்த பணத்தொகையைக் கொடுத்து அபிமானமாக நடத்துகிருர்களென்பதைக் கண்டவுடனே, பையனுக்கு கொழுப்பும் குறும்பும் ஏறிவிட்டாற் போலிருக்கிறது. ஆனுல், நல்லவேளையாக அவன் அங்கே என்னுடைய குழந்தைகளினிடத்தில் தன்னுடைய அயோக்கியத் தனத்தைக் காட்டவில்லை; மூலஸ்தான தெய்வத்தினிடத்திலேயே தன்னுடைய கை வரிசையைக் காட்டிவிட்டான்! அவன் இங்கே என்ன செய்தானே தெரியவில்லையே! அவன் இங்கே ஏதாவது தாறுமாருக நடந்துகொண்டிருந்தால், எனக்கு ஒரு வார்த்தை

சொல்லியனுப்பி இருக்கக்கூடாதா! நான் முன்னுடியே அவனை வேலையைவிட்டு நீக்கியிருப்பேனே! நேற்று சாயுங்காலம், எனக்கு அவனால் ஏற்பட்ட இழிவு இல்லாமல் போயிருக்குமே!" என்று கூறிய வண்ணம் மிகவும் கபடமான பார்வையாக, மீனுக்ஷியம்மாளையும், கண்மணியம்மாளையும் மாறிமாறிக் கூர்ந்து நோக்கினுள்.

அப்போது கண்மணியம்மாளது மனநிலைமை விவரிக்க இயலாததாக ஆகிவிட்டது. கல்யாணியம்மாள் மதனகோபாலனது பெயரைக் குறித்ததுமுதல், அந்த இரண்டு நிமிஷநேரத்தில், அவளது மனதில் கோடாநுகோடி எண்ணங்களும் சம்சயங்களும் உதித்து உதித்து மறைந்தன. மதனகோபாலனைப்பற்றி கல்யாணியம்மாள் எவ்விதமான விபரீத சமாசாரம் சொல்லப்போகிருளோ என்ற கவலையும் அச்சமும் எழுந்து அவளது மனத்தை வருத்திப் புண்படுத்தின; விஷயம் இன்னதென்பதை உடனே வெளியிடாமல், கல்யாணியம்மாள் வளர்த்துப் பேசப்பேச கண்மணியம்மாளது மனம் கட்டிலடங்காதபெருத்த ஆவலினுல் புண்பட்டு வேதனைக்கடலில் ஆழ்ந்து தவித்தது. நிற்க, தனது அத்தை தனது பங்களாவில் முதல் நாள் நிகழ்ந்த சம்பவத்தை வெளியிடமாட்டாளென்று தான் நினைத்ததற்கு மாருக அவளும் அதைத் தெரிவிக்கத் தொடங்கியதைக் காணவே, கண்மணியம்மாளது நிலைமை பரமசங்கடமானதாக ஆய்விட்டது. அதனுல் அவளது மனமும், மெய்யும் வெட்கத்தினுலும், துக்கத்தினுலும் குன்றிப்போய்விட்டன. இருந்தாலும் அவள் தனது வதனத்தை அப்புறம் திருப்பி இருந்தமையால் அவளது துன்பகரமான நிலைமையை மற்றவர் இருவரும் அவ்வளவாக கவனிக்கவில்லை.

அப்போது கல்யாணியம்மாளது மனதில் உற்சாகமும் ஒருவகையான மகிழ்ச்சியும் உண்டாயின. ஏனெனில், அவள் அங்கே வந்தபோது, தனது கட்டுக்கதையை மீனுக்ஷியம்மாள் நம்புவாளோ மாட்டாளோவென்ற பெருத்த கவலையோடு வந்தவளாதலால், மீனுக்ஷியம்மாளே அவன் மீது குற்றம் சுமத்தியதைக் காணவே, இனி தனது வேலை சுலபத்தில் நடந்துவிடும் என்ற ஒரு துணியும் நம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டன. நிற்க, தான் முதல் நாள் மதனகோபாலனை ஆலிங்கனம் செய்ய முயன்றபோது, அவன் அது தவருன காரியமெனக் கூறி, அவ்வாறு செய்ய மறுத்துப்போனபின், தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு அவன்மீது அபாண்டமான குற்றம்

சுமத்தி அவனை இழிவாகப்பேசினளானலும், அவளது மனமோ அந்தரங்கத்தில் அவன் மகா நற்குணம் வாய்ந்த உத்தம புருஷனென்றும், அன்னிய ஸ்திரீகளை விஷமென மதிக்கும் ஏகபத்தினி விரதனென்றும் நினைத்து, அவனது மேம்பாட்டைப்பற்றி வியப்புற்றிருந்தது. ஆனல், அவன் மீனக்ஷியம்மாளது பங்களாவில் ஏதோ தவறு செய்திருக்கிறனென்பதைக் கேட்டவுடனே, அவள் கொண்டிருந்த நல்ல அபிப்பிராயம் மாறிவிட்டது. எப்படியெனில், மீனக்ஷியம்மாள் வயதான கிழவியாதலால், மதனகோபாலன் அவள்மீது விருப்பம் வைத்திருக்க மாட்டானுதலால் அவனுக்கும் கண்மணிக்குமே அந்தரங்கமான நட்பு ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கல்யாணியம்மாள் யூகித்துக்கொண்டு அதையே உறுதியாக நம்பினள். நல்ல யௌவனமும் உயர்ந்த அழகும் வாய்ந்த கண்மணியிடத்தில் அவன் ஆசைவைத்திருப்பது பற்றியே, தனது ஆலிங்கனத்தை வித்தியாசமாகவும் அசட்டையாகவும் கருதநேர்ந்தது என்ற நினைவும் உடனே தோன்றியது. உலகத்தில் மனிதன் தான் தவறு செய்பவனனலும், அது அவனது புத்தியில் படுகிறதில்லை. பிறர் தவறு செய்யக்கூடாது என்பதும், அப்படி எவரேனும் செய்தால், அதைக்கண்டு தூஷித்துப் புரளி செய்வதும் பெரும்பாலோரது இயற்கையாக இருக்கின்றதல்லவா! அதற்கிணங்க கல்யாணியம்மாள், தனக்கு மருமகளாக வரிக்கப்பட்டுள்ள கண்மணியம்மாள் மதனகோபாலன்மீது ஆசைகொண்டதாக தனக்குத்தானே நிச்சயித்துக்கொண்டு, அதைக்குறித்து, ஆத்திரமும், அதிருப்தியும், அவளது குணத்தைப்பற்றி இழிவான அபிப்பிராயமும் கொள்ளத்தொடங்கியே முன் கூறப்பட்ட கேள்வியைக் கேட்டாள்.

உடனே மீனக்ஷியம்மாள், "இங்கே அப்படி ஒன்றும் விபரீதமான காரியம் நடந்துவிடவில்லை. நேற்று சாயுங்காலம் அவன் இவளுக்கு வீணை கற்றுக்கொடுக்கும்போது, நான் ஏதோ அவசரமான காரியத்தின்பொருட்டு கொஞ்சநேரம் வெளியில் போக நேர்ந்தது. போய்விட்டுத் திரும்பிவந்து பார்க்கையில், அவன் தன்னுடைய வேலையாகிய வீணை கற்றுக்கொடுப்பதை மாத்திரம் செய்துவிட்டுப் போகாமல், தனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களிலெல்லாம் தலையிட்டு இவளிடம் அதிகப் பிரசங்கமாக ஏதேதோ உளறிக்கொண்டிருந்தான். அவன் பேசியது அவ்வளவு பெரிய விஷயமல்லவானலும்

அந்த அதிகப்பிரசங்கியை உள்ளே சேர்க்கக்கூடாதென்று நினைத்து, நான் உடனே அவனை இனி இங்கே வரவேண்டாமென்று சொல்லி வெளியில் அனுப்பிவிட்டேன். இந்த விஷயத்தை உங்களுக்குச் சொல்லியனுப்பினால் நீங்கள் ஏதேனும் வித்தியாசமாக நினைத்துவிடப் போகிறீர்களே என்று நினைத்தே, சொல்லியனுப்பவில்லை. இப்போது நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அவன் எதையும் செய்யக் கூடிய அயோக்கியனென்றும், இங்கே இன்னும் சிலநாட்கள் வந்திருந்தால் அவன் உங்களிடம் நடந்து கொண்டதுபோல, இங்கேயும் அயோக்கியத்தனம் செய்திருப்பானென்றும் நம்பவேண்டி யிருக்கிறது; நல்ல வேளையாய்ப் போய்விட்டது. அது போகட்டும்; அவன் உங்களிடத்தில் ஏதோ வாலையாட்டினு னென்பதுதான் எனக்கு நிரம்ப ஆச்சரியமாக இருக்கிறது!" என்றாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள், "நீங்கள் இப்போதே இவ்வளவு ஆச்சரியப்படுகிறீர்களே! நான் முழு விவரத்தையும் சொன்னால், அது கனவோ நினைவோ என்றுகூட நீங்கள் சந்தேகித்துவிடுவீர்கள். இருந்து இருந்து அவன் நல்ல ஆளைப் பொறுக்கி எடுத்தான்! உலகத்தில் அவனுக்குத் தகுந்த சிறு பெண்கள் எத்தனையோ பேர்கள் இருக்க, அவர்களையெல்லாம் விட்டு, சாகிறகாலத்தில் சங்கரா சங்கரா என்றபடி அவனுடைய ஆசையெல்லாம் ஒரு கிழவி இடத்திலா ஏற்படவேண்டும்! ஆளைப் பார்த்தால் சித்திரப்பதுமை போல மகா ஒழுங்காக இருக்கிறான். அவனுடைய துர்ப்புத்தியோ அசாத்தியமாக இருக்கிறது! ஒவ்வொரு நாளும் அவன் வந்து போகும்போது, "நான் போய்விட்டு வருகிறேன்" என்று என்னிடம் சொல்லிக்கொள்ளுவான். நான், சரி என்பேன். அதைத் தவிர அவனிடத்தில் நான் வேறே வார்த்தையே வைத்துக் கொண்டதில்லை; அவனுடைய முகத்தை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. அப்படி இருக்க, அவனுக்கு இவ்வளவு துணிச்சல் எப்படி உண்டாயிற்றென்பது தெரியவில்லை" என்று பெருத்த பீடிகை போடத் தொடங்கினாள்.

அதைக் கேட்ட மீனாக்ஷியம்மாள், "சரி; நீங்கள் சொல்வதிலிருந்து, விஷயம் இன்னதென்பது அநேகமாகத் தெரிந்துபோய் விட்டது. ஆனால், காரியம் இப்படியும் நடக்குமா என்பதே எனக்கு முழுதும் ஆச்சரியமாக இருக்கிறது" என்று வியப்போடு கூறினாள். கல்யாணியம்மாள், "நேற்றுசாயுங்காலம் ஏழரைமணிக்கு அப்படியே

நடந்தது.'' என்று மிகவும் அழுத்தமாகவும் உறுதியாகவும் மறு மொழி கூறினாள்.

அந்தப் பெண்டீர் இருவரும் பேசிய வார்த்தைகள் கண்மணியம் மாளது மனத்தை ஆயிரம் வாள்கள் கொண்டு அறுப்பதுபோல இருந்தன. அவள் சகிக்கவொண்ணு வேதனையால் தவித்துத் தடு மாறிக்கொண்டிருந்தாள். கல்யாணியம்மாளும் அவளது நிலைமையை அறிந்து கொண்டதன்றி, அவற்றிலிருந்து மதனகோபாலனுக்கும் கண்மணிக்கும் அந்தரங்கமான காதல் ஏற்பட்டிருக்கிறதென்று எளி தில் உணர்ந்து கொண்டாள்; ஆதலால் விஷயத்தை எடுத்து விரிவாக உடனே சொல்லிவிடாமல் மறைத்து மறைத்துப் பேசி, கண்மணியை சித்திரவதை செய்யத் தொடங்கினாள். ஏனெனில், தனக்கு மரு மகளாக வரிக்கப்பட்ட அவள் வேருெருவன்மீது ஆசைகொண் டாளே என்பதனுல் உண்டான பதைபதைப்பும், தான் அவன்மீது கபடமற்ற பிரேமைகொண்டு ஆலிங்கனம் செய்துகொள்ள விரும்பி யதை மறுத்துத் தன்னை வெறுத்த மதனகோபாலன். அவள்மீது தவருன விருப்பங்கொண்டானே என்ற பொருமையும் ஒன்றுகூடி எழுந்து கல்யாணியம்மாளது மனதில் சான்னித்தியம் செய்தன வாதலால், அவள் விஷயத்தைச் சொல்லாமலே மறைத்துப் பேசிப் பேசி, கண்மணியம்மாளை கொன்றுகொண்டே இருந்தாள்.

மீனுக்ஷியம்மாள், "அவனை நான்புத்திசாலி என்று சொல்லமாட் டேன். அவன் பொறுக்கி யெடுத்த மடையன். 'பார்ப்பதற்கு அழ காக இருக்கிறேமே; ஜெமீந்தார் வீடுகளுக்குள் நம்மைச் சேர்த்து சரிசமானமாக வைத்துக்கொண்டு அன்பாக நடத்தி பணத்தை வாரி வாரிக் கொடுக்கிருர்களே நம்முடைய அழகைக் கண்டு மோகித்தே அப்படிச் செய்கிருர்கள்.' என்று நினைத்துவிட்டான்போ லிருக் கிறது. நீங்கள் பாலியத்தில் புருஷரை இழந்தவர்கள் என்பதை அவன் தெரிந்துகொண் டிருக்கிறுன்; நீங்கள் புருஷருக்கு ஏங்கிப்போயிருப் பீர்களென்று தவருக எண்ணியே, இப்படி அயோக்கியத்தனமாக நடந்து கொண்டிருக்கிறுன். பிஞ்சில் பழுத்த தறுதலை. ஏதோ கொஞ்சம் வீணையில் தேர்ச்சி யடைந்திருக்கிறுனென்று எல்லோரும் புகழ்கிருர்களல்லவா! இதற்குள் அகம்பாவம் வந்து மூடிவிட்டது. இப்படிப்பட்ட துர்ப்புத்தி கொண்டவன் இனி உருப்படமாட்டான்.

இனி அவனுடைய வித்தை வாணவித்தைதான்'' என்று முற்றிலும் அருவருப்பாகக் கூறினாள்.

கல்யாணியம்மாள், "ஆம்; ஆம்; இனிமேல் அவன் குட்டிச் சுவர் ஏறிக் குதிக்கும் வித்தைதான் கற்றுக்கொள்ளப் போகிறான். இனி அவனுக்கு விருத்தியாவது புத்திராபிவிருத்திதான். அவனை நான், அறியாத குழந்தைப் பையனென்றே மதித்திருந்தேன். அவனுடைய முகத்தில் இன்னம் மீசைகூட முளைக்கவில்லை யானாலும், அவனுக்குள் ஒரு பெருத்த போக்கிரி ஆள் நுழைந்துகொண் டிருக்கிறானென்பதை நேற்றுதான் கண்டேன். நான் என்னுடைய பெண்களின் விஷயத்தில் எப்போதும் ஜாக்கிறதையாகவே இருந்துவந்தேன். அவன் வந்தால், நானும் பெண்களோடு கூடவே இருந்து அவன் போன பிறகு, அவர்களை அழைத்துக்கொண்டு போவேன். நேற்று இடைநடுவில் எனக்குத் தலைவலி வந்துவிட்டது. அப்போது தான் அவன் ஏதோ புதிய பாடம் ஆரம்பித்து சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தான். 'சரி; வழக்கம்போல சொல்லிக்கொடுத்து விட்டுப் போய்விடுவான்' என்று நினைத்துக்கொண்டு, நான் அவனுக்குத் தெரியாமலே எழுந்து என்னுடைய சயன மாளிகைக்குப் போய் கட்டிலில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டிருந்தேன். கால் நாழிகைக்குப் பிறகு கட்டிலண்டை யாரோ வந்த காலடி ஓசை கேட்டது. நான் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு பார்க்கிறேன். இந்தத் தறுதலை பல்லைப் பல்லைக் காட்டிக்கொண்டு நிற்கிறான். அவனுடைய முகத்தில் அசடு வழிகிறது. திக்கித் திக்கி என்னவோ பேச வாயெடுக்கிறான்; அச்சம் நெஞ்சை யடைக்கிறது. உடம்பை விகாரப் படுத்திக்கொள்ளுகிறான். அதைக் கண்ட நான், அவன் தன்னுடைய சம்பளத்தில் ஏதாகிலும் கொஞ்சம் முன் பணமாகக் கேட்க வந்து அதை வெளியிடமாட்டாமல் அப்படித் தவிக்கிறானோ என்று அதை சாதாரணமாக நினைத்தேன். ஆனாலும், என்னுடைய அநுமதி யில்லாமல், அவன் என்னுடைய சயன மாளிகைக்குள் வந்தது, என் மனதில் பெருத்த ஆத்திரத்தை உண்டுபண்ணிய தானாலும், அவன் அறியாத மூடப்பையன் என்ற நினைவினால், அதை அடக்கிக் கொண்டு, வந்த காரிய மென்னவென்று கேட்கிறேன்; அவன் என்னென்னவோ தாறுமாறாகப் பேச ஆரம்பித்துவிட்டான். நாடகங்களில் ராஜா வேஷக்காரன் ஸ்திரீ வேஷக்காரியை முதலில் கண்டு

அவளுடைய அழகை வர்ணித்து, தான் அவளிடத்தில் காதல் கொண்டதாகப் பன்னிப் பன்னி வெளியிட்டு அசங்கியமாகப் பேசு கிறதுபோல, அவன் பெரிய ராமாயணமாக ஆரம்பித்து விட்டான். அவன் ஏதாவது புஸ்தகத்திலிருந்து கதை வாசிக்கிறானோ, அல்லது, அவனே என்னிடத்தில் பேசுகிறானா என்ற சந்தேகம் என் மனதில் உதித்துவிட்டது. அவன் என்னைப் பார்த்து கண்ணே என்கிறான்; கண்மணியே என்கிறான்; என்னுடைய காலில் விழுந்து நமஸ்காரம் வேண்டுமானாலும் செய்கிறேனென்கிறான்; அவன் அன்றிரவு பிழைக் கிறதும் சாகிறதும் என்னுடைய ஒரு வார்த்தையில் அடங்கியிருக் கிறது என்கிறான். இந்த மாதிரி பைத்தியங்கொண்டவன் போல வாயில் வந்தபடி அவன் பிதற்றினான். எனக்கு உடனே வேறொரு சந்தேகம் உண்டாகிவிட்டது. "சரி; இவன் இன்றைக்கு நன்றாகக் குடித்துவிட்டு வந்திருக்கிறானென்று நான் நினைத்துக்கொண்டேன். அதற்கு ஒத்தபடியே, கள்ளின் நாற்றமும் கொஞ்சம் வீசியதாகப் புலப்பட்டது. நான் மெய்ம்மறந்து என்னுடைய காதுகளையே நம் பாமல், என்ன செய்வதென்பதையும் அறியாமல் ஸ்தம்பித்து இரண் டொரு நிமிஷநேரம் மௌனமாக இருந்துவிட்டேன். அதைக் கண்ட அவன் இன்னம் அதிகமான துணிபடைந்து, என்னுடைய காலடி யில் வந்து நின்று காலைத் தொட்டு வணங்கிக் கெஞ்சவாரம்பிக்கவே, எனக்கு சகிக்கமுடியாத ரௌத்திராகாரமான கோபம் பொங்கி யெழுந்துவிட்டது. அடாடா! நான் மாத்திரம் கொஞ்சம் மரியாதை பார்க்காதிருந்தால், என்ன செய்திருப்பேன் தெரியுமா? அவன் எட்டுக் குட்டிக்கரணம் போடும்படி, அவனை அந்தக் காலாலேயே உதைத்திருப்பேன். அவன் மகா கெட்டவனானாலும், ஆண்பிள்ளை ஆயிற்றே; நாம் கேவலம் விதவை ஜென்மமாயிற்றே என்று நினைத்து என்னுடைய பதப்பை யெல்லாம் அடக்கிக்கொண்டேன்" என்று கூறிச் சிறிது நேரம் நிறுத்தினாள்.

அந்த வரலாற்றைக் கேட்ட மீனாக்ஷியம்மாள் சகிக்க இயலாத வியப்பும் திகைப்புமடைந்து. "ஆ! என்ன ஆச்சரியம்! நான் பிறந்தது முதல் இப்படிப்பட்ட அதிசயத்தை என் காதாலும் கேட்டதே இல்லை. அடாடா! அந்த மனிதனுடைய உண்மையான யோக்கி யதை இப்படிப்பட்டதென்பதை அறிந்துகொள்ளாமல், அவனை நம் முடைய பெண்குழந்தைகளுக்குப் பாடம் கற்றுக்கொடுக்க வைத்

திருந்தோமே! என்ன காரியம் செய்துவிட்டோம்'' என்று பரம சங்கட மடைந்தவளாகக் கூறினாள்.

கல்யாணியம்மாள் மிகுந்த விசனத்தோடு, "ஆம் ஆம்! நேற்றிரவு முழுதும் நானும் அதைப்பற்றியே நினைத்து நினைத்து நிரம்பவும் சங்கடப்பட்டேன். ஆனால் அவன் என்னுடைய பங்களாவில் ஒன்றையு மறியாத குழந்தைகளிடத்தில் போய் இப்படிப்பட்ட காரியம் செய்யாமல், என்னிடத்தில் வந்து இப்படி நடந்துகொண்டானே; அதுவே எனக்கு ஓர் ஆறுதலாக இருந்தது அவன் போகும் ஒவ்வோரிடத்திலும் இப்படித்தான் செய்வான்போ லிருக்கிறது. அவன் இன்னும் யார் யார் இடத்தில் இப்படிப் பிதற்றி மரியாதை பெற்றுக்கொண்டு வந்திருக்கிறானோ தெரியவில்லை. (கண்மணியை நோக்கி) கண்மணியம்மா! அவன் நேற்று இங்கே வந்திருந்தபோது, அவனுடைய குடிவெறியில் நல்ல வேளையாக உன்னிடத்தில் ஒன்றும் விஷமம் செய்யாமல் போனானே! அதுவும் நல்ல காலந்தான்'' என்றாள்.

அப்போது கண்மணியம்மாள் நரகவேதனை யடைந்துகொண்டிருந்தாளென்று சொல்வது குறைவாகக் கூறியதாகும். அவள் அநுபவித்த எண்ணிறந்த வேதனைகளைக் காட்டிலும், அவைகளை அழுகையின் மூலமாகவோ சொற்களின் மூலமாகவோ வெளியில் காட்டிக் கொள்ள மாட்டாமல் அடக்கிக்கொள்ள முயன்ற துன்பமே அசாத்தியமான துன்பமாக இருந்தது. அவள் மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல், நெருப்பின்மேல் கிடந்த புழுவைப் போல, பொறுக்கமாட்டாது தத்தளித்து உயிர்சோர்ந்து ஊமைபோல உட்கார்ந்திருந்தாள். அவளது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றிப்போய்விட்டது.

மீனாக்ஷியம்மாளோ, கல்யாணியம்மாள் கூறிய வரலாற்றில் முற்றிலும் ஆழ்ந்து, தனது முழுமனதையும் அதிலேயே செலுத்தியிருந்தமையாலும், கண்மணியம்மாள் அவளது முதுகுப்பக்கத்தில் உட்கார்ந்திருந்தமையாலும் அந்த மடந்தையின் பரமசங்கடமான நிலைமையை அவள் கவனிக்காதவளாய் கல்யாணியம்மாளை நோக்கி, "பிறகு இந்தக் கூத்து எப்படித்தான் முடிந்தது?'' என்று ஆவலோடு கேட்க, கல்யாணியம்மாள், "அது எப்படி முடியவேண்டுமோ அப்படியே முடிந்தது. உடனே நான் கட்டிலைவிட்டுக் கீழே இறங்கி மிகவும் கோபத்தோடு அவனை நோக்கி, "அடே நாயே! மரி

BOOK LOVER CIRCLE

யாதையாக வெளியில் போகிருயா? வேலைக்காரனைக் கூப்பிட்டு கழுத்தைப்பிடித்து வெளியில் தள்ளச் சொல்லட்டுமா? ஆகா! அவ்வளவு கொழுப்பா உனக்கு! யாரடா வேலைக்காரன்?" என்று கூறி வேலைக்காரனைக் கூவியழைக்க, அதற்குள் பையன் வெளியில் நழுவிவிட்டான்; போனபோது அவன் மிகவும் வெட்கித் தலையைக் கீழே குனிந்துகொண்டு போனுைகிலும், தான் ஏதோ செய்துவிடுவதாக முணுமுணுத்துப் பௌரஷம் கூறிக்கொண்டே போயிருக்கிருன். அவன் கேவலம் மூடத்தனம் நிறைந்த அறியாத பையனுகையால் அவனை நாம் சரிசமானமாக மதித்து அவனது விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வது ஒரு கொசுவை உலக்கை கொண்டு அடிப்பதைப் போலாகும். ஆகையால், என்னுடைய வேலைக்காரர்களுக்குக்கூட நான் இதைச் சொல்லவில்லை. ஆனுல், நம்முடைய சொந்தக்காரர்களுடைய வீடுகளிலும், சிநேகிதர்களுடைய வீடுகளிலும், அவன் சிறு பெண்களிடம் பழகுவதற்கு இனிமேலாவது இடங்கொடுக்காமல் தடுத்துவிட வேண்டும். ஏனென்ருல், அவன் சும்மா இருக்கமாட்டான்" என்று கூறினுள்.

மீனுக்ஷியம்மாள், "ஒகோ! குதிரை கீழே தள்ளியதுமன்றி புதைப்பதற்குக் குழியும் தோண்டியது என்பார்கள். அதுபோல, அவன் இந்த அயோக்கியமான காரியம் செய்ததுமல்லாமல், தான் உங்களுக்கு ஏதோ தீங்கு செய்வதாகவும் சொல்லிவிட்டா போனுன்! சங்கதி நன்ருக இருக்கிறது!" என்ருள்.

கல்யாணியம்மாள், "அதனுல்தான், அற்ப சகவாசம் பிராண சங்கடம் என்ற பழமொழி சொல்லுகிருர்கள். அவனிடம் பெரும் புத்தி யிருந்தால், அவன் இந்தத் தவறையே செய்திருக்கமாட்டான். ஏதோ அறியாமையினுல் தவறு செய்துவிட்டாலும், அப்படிப்பட்ட மனிதன் அதைப்பற்றி விசனப்பட்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்வான். தான் பிழையும் செய்துவிட்டு, அந்தப் பிழைக்குப் பிறர் இணங்கிவராவிட்டால் அதற்காக மேலும் பழிக்குப்பழி வாங்க நினைப்பது கேவலம் அதமாதமர்கள் செய்யும் காரியமல்லவா, இந்த மதனகோபாலன் அந்த ஜாப்தாவின் சேர்ந்தவன்தானே" என்ருள்.

மீனுக்ஷியம்மாள், கேவலமான இந்த ஏழைப் பையன் பார்த்து நம்மை என்ன செய்யக் கிடக்கிறது? இது சூரியனைப் பார்த்து நாய் குலைக்கிற மாதிரித்தான். உங்களுடைய யோக்கியதை யென்ன!

செல்வாக்கென்ன ! பெருமையென்ன! புருஷர் இறந்துபோய் சுமார் 15-வருஷகால மாகிறது. எவ்வளவு பரிசுத்தமான நடத்தையோடு நீங்கள் காலந்தள்ளி வந்திருக்கிறீர்கள். உங்களைப் பற்றி எப்படிப் பட்ட அவதூருன வார்த்தையையும் எவராகிலும் சொல்லமுடி யுமா? அப்படிச் சொன்னுலும் எவராகிலும் அதை நம்புவார்களா? அப்படி இருக்க, இந்த அற்ப நாய் என்ன செய்யப்போகிறது? அவ ணுல் ஆனதைச் செய்துகொள்ளட்டும். அவன் செய்த காரியத்தை நாம் நம்முடைய தனிதர்களிட மெல்லாம் வெளியிட்டு விட்டால், அவன் வீணை கற்றுக்கொடுக்கும்போது ஒவ்வோரிடத்திலும் துடைப்பக்கட்டைப் பிரயோகம் செய்து அவனை வெளியில் விரட்டி விடப் போகிருர்கள். அதன் பிறகு அவன் சோற்றுக்கே திண்டா டப்போகிருன். அப்போதல்லவா தன்னுடைய உண்மையான யோக் கியதையும் மதிப்பும் எவ்வளவென்பது அவனுக்குத் தெரியப்போகி றது!" என்ருள்.

கல்யாணியம்மாள், "மைசூரிலிருந்து வந்த ஆரம்பத்தில் ஒரு சூதும் அறியாமல் குழந்தைபோல இருந்த பையன் இந்த ஏழெட்டு மாத காலத்துக்குள் எவ்வளவு பெருத்த காரியம் செய்யத் துணிந்து விட்டான் பார்த்தீர்களா ! அப்படி யிருந்தமையாலேதான், அவன் அன்னிய புருஷனுயிற்றே என்பதையும் நாம் கவனியாமல் நம்மு டைய குழந்தைகளிடம் பழகி வீணை கற்பிக்கும்படி அவனை வைத் தது; முதலில் அவனைப்பற்றி நீங்கள்தானே சிபாரிசு செய்து எங்க ளுடைய பங்களாவிலும் மற்ற பங்களாக்களிலும் அவனை வேலைக்கு அமர்த்தியது. அன்னமிட்டவர் வீட்டிலேயே கன்னமிடுவது போல, அவன் உங்களிடத்திலேயே ஏதோ தாறுமாருக நடந்துகொண் டிருக்கிருனென்கிறீர்களே! அதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக் கிறது." என்ருள்.

மீனுக்ஷியம்மாள், "என்னுடைய மைத்துனர் அவனுக்குக் கொ டுத்தனுப்பிய சிபாரிசுக் கடிதத்தை ஜாக்கிரதையாக இன்னமும் நான் பெட்டியில் வைத்திருக்கிறேன். வேண்டுமானுல் அதை எடுத்துத் தருகிறேன். நீங்களே படித்துப் பாருங்கள்; அவர் அவனை இந்திரன் சந்திரன் என்றும், ஒரு பானைக்கஞ்சியை உப்பில்லாமல் குடிக்கக்கூடி யவனென்றும் வாய்கொண்ட மட்டும் புகழ்ந்து எழுதி இருக்கிருர். மைத்துனர் பதினைந்து இருபது வருஷகாலமாக மைசூரிலேயே இருக் கிருரே; அவருக்கு அவனுடைய குணுதிசயங்கள் நன்ருகத் தெரிந்

திருக்குமே; அவர் அவ்வளவுதூரம் எழுதும்போது, பையன் யோக்கியனுகவே இருப்பானென்று நம்பியே நான் என்னுடைய பங்களாவிலும், மற்றவர்களுடைய பங்களாவிலும் அவனை அமர்த்தியது. அவன் இப்படிக் கழுதை நிறத்துக்கு வந்து விடுவானென்பதை யார் கண்டார்கள்?'' என்ருள்.

கல்யாணியம்மாள்:—உங்களுடைய மைத்துனர் என்ன செய்வார்! அவனுடைய மேல் வேஷத்தைக் கண்டு நாம் இதுவரையில் அவனை யோக்கியனென்று நம்பி மோசம்போகவில்லையா? அதைப் போலவே, அவன் அவரிடத்தில் இருந்தவரையில் பரமயோக்கியனுக நடந்துகொண்டிருப்பான். அவரிடத்தில் யௌவனப் பருவமுள்ள பெண்கள் இருந்து, அவன் அங்கே பழகி இருந்தால், அப்போது அவனுடைய உண்மையான யோக்கியதையை அவர் அறிந்து கொண்டிருப்பார். அவரோ ஏகாங்கி; அவனுடைய குணத்தை அறிந்துகொள்ள அவருக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிராது. இப்போது அதையெல்லாம் நினைத்து வருத்தப்படுவதில் என்ன உபயோகம்? அவனை நாம் இதுவரையில் வைத்துக்கொண்டு இருந்துவிட்டோம். அவனும் தான் எப்பேர்ப்பட்ட மனிதன் என்பதை சந்தேகமறக் காட்டிவிட்டான்; எனக்கு நேரமாகிறது; நமக்கு வேண்டிய மனிதர்களுடைய பங்களாக்களுக் கெல்லாம்போய் இந்த விஷயத்தைத் தெரிவிக்கவேண்டு மென்கிறீர்களே அந்த விஷயத்தில் நீங்கள் எனக்கு ஓர் உதவிசெய்ய வேண்டும். இந்த சங்கதியைப் பிறரிடம் நானே எடுத்துச்சொல்வது எனக்கு நிரம்பவும் லஜ்ஜையாக இருக்கிறது. ஆகையால், நீங்களும் என்னோடு கூடவே இப்போது வாருங்கள். நாம் இருவரும் போய் சொல்லிவிட்டு வருவோம்; இதில் இன்னொரு விஷயம் இருக்கிறது, நீங்களே அவனை முதலில் புகழ்ந்து அந்த இடங்களில் சிபார்சு செய்து அமர்த்தியவர்களாகையால், அவனைப் பற்றிய விரோதமான அபிப்பிராயமும் உங்களுடைய வாயிலிருந்து வருமானல் அதற்கு அதிகமான மதிப்புண்டு. நானே போய் இதைச் சொல்ல, என் சொல்லின்மேல் அவனை விலக்கினல், சிபார்சு செய்த உங்களுக்கு அது வருத்தமாக இருக்குமோ என்று அவர்கள் நினைத்தாலும் நினைக்கலாம். ஆகையால் நீங்களும் வரவேண்டும். என்னுடைய பெட்டி வண்டியிலேயே ஏறிக்கொண்டு போவோம்; இப்போது இங்கே நீங்கள் கவனிக்கவேண்டிய அவ்சர காரியம் ஒன்றுமில்லையே?'' என்ருள்.

அதைக் கேட்ட மீனாக்ஷியம்மாள், "ஓ! வருகிறேன். எனக்கு பிற்பகலில் என்ன வேலை இருக்கிறது. ஒன்றுமில்லை. போவோம் வாருங்கள்." என்று கூறியவண்ணம் மிகவும் துடிப்பாக எழுந்து நின்றாள்.

அதைக் கண்ட கல்யாணியம்மாள் மகிழ்ச்சியோடு புன்னகை செய்து, "சரி; சந்தோஷம்; போவோம் வாருங்கள்" என்று சொல்லியவண்ணம் எழுந்தவள், கண்மணியை நோக்கினாள். அவள் தனது பக்கத்தில் முகத்தைக் காட்டாமல் வேறு பக்கத்தில் திரும்பிக் கொண்டிருந்தது, கல்யாணியம்மாளுக்கு நிரம்பவும் சம்சயமாக இருந்தது; தான் போய்வருவதாக அவளிடம் சொல்லிக்கொள்ளப் போகிறவள் போல நடித்து, குழந்தாய்! கண்மணீ! நான் போய் விட்டு வருகிறேன். அந்தத் தறுதலை போனால்போகிறான். அதைப் பற்றி கவலைப்படாதே; யோக்கியனான மனிதனைப் பார்த்து வேறே ஒரு வீணை வித்துவானை அமர்த்திவிடுவோம்; நான் போய்விட்டு வருகிறேன்." என்று கூறியவண்ணம் கண்மணியின் முகத்தை உற்று நோக்கினாள். அதுமகா துக்ககரமாக இருந்ததைக் காணவே, அவள் மதனகோபாலனைப்பற்றி வருந்துகிறாளென்றும், அவளை அதன்பொருட்டு தான் தண்டிக்க வேண்டுமென்றும் ஓர் எண்ண முதித்தது. கல்யாணியம்மாளது மனதில் உடனே ஒரு தீர்மானம் ஏற்பட்டது. அவள் அப்போது கண்மணியைப் பார்த்தபோது தான் ஏதோ புதிய விஷயத்தை நினைத்துக்கொண்டவள் போல நடித்து, மீனாக்ஷியம்மாளை நோக்கிக் கைகொட்டி நகைத்தவளாய் நடந்துவந்து, தான் முதலில் உட்கார்ந்திருந்த ஸோபாவில் மறுபடியும் உட்கார்ந்துகொண்டு, "நினைக்க நினைக்க, எனக்கே சிரிப்பு உண்டாகிறது. இன்று நான் புறப்பட்டு இங்கே வந்ததன் காரணமே வேறு. நான் அதை சுத்தமாக மறந்துவிட்டேன். என்னுடைய முகம் ஒரு மாதிரியாக இருக்கிறதென்று நீங்கள் கேட்டதிலிருந்து நம்முடைய சம்பாஷணை வளர்ந்து, முழுதும் வேறு விஷயத்தைக் குறித்ததாகவே போய்விட்டது. கொஞ்சம் உட்காருங்கள்; நான் என்ன கருத்தோடு வந்தேனென்பதைச் சொல்லுகிறேன்" என்றாள்.

அதைக் கேட்ட மீனாக்ஷியம்மாளும் சந்தோஷமாக நகைத்தவண்ணம், "ஆம் ஆம் உண்மைதான்; அந்தத் தறுதலையின் பேச்சில், இதைப்பற்றிக் கேட்க நானும் சுத்தமாக மறந்துவிட்டேன்" என்று

கூறியவண்ணம் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு கல்யாணியம்மாள் எதைப்பற்றிப் பேசுவாளோ என்று ஒருவித ஆவல்கொண்டவளாய் அவளது வாயைப் பார்த்திருந்தாள்.

கல்யாணியம்மாள், "வேறொன்றுமில்லை. இந்தப் பட்டணத்தைப் போல கெட்டுப்போன ஊர் இந்த ராஜதானிக்குள் எங்குமே இல்லையென்பது உங்களுக்குத் தெரியாததல்ல. எப்பேர்ப்பட்ட பரமயோக்கியனாக இருந்தாலும், அவன் இந்த ஊரில் வந்து தொடர்ச்சியாக மூன்று மாதகாலம் இருந்தால், அவன் புதுமனிதன் ஆகிவிடுகிறான். அவன் கெட்டுப்போகிறதற்கு எத்தனையோ மார்க்கங்களும், இடங்களும், சந்தர்ப்பங்களும் ஒவ்வொரு தெருவிலும் இருக்கின்றன. அதிலும், சிறுபிள்ளைகளாயிருந்து, அவர்களுக்குப் பணமும் அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருந்தால், அவர்களைப் பலவகையான துன்மார்க்கங்களில் கொண்டுபோய் நுழைத்துவிட்டு அடியோடு கவிழ்த்துவிட, எத்தனையோ அயோக்கியர்கள் நண்பர்களாக ஏற்பட்டுவிடுகிறார்கள். இதோ இந்த மதனகோபாலனையே நீங்கள் திருஷ்டாந்தமாகப் பார்த்துக்கொள்ளலாம். அவன் இந்த ஊருக்கு வந்தபோது, எவ்வளவு நற்குண நல்லொழுக்க முடையவனாக இருந்தான்! இந்த சொற்பகாலத்துக்குள் எப்படி மாறிவிட்டான் பார்த்தீர்களல்லவா! அவன் இப்படி மாறியது அவனுடைய குற்றமல்ல; அது இந்தப் பட்டணத்து மண்ணின் குணம்; இவைகளையெல்லாம் கவனித்துப் பார்க்கப்பார்க்க, என்னுடைய மனதில் ஒரு பெருத்த கவலை இன்றைக்குத்தான் உண்டாயிற்று, நம்முடைய மைனர் பையன் பலரிடத்தில் சிநேகம் வைத்துக்கொண்டு, நாடகம் முதலிய பல இடங்களுக்கும் நினைத்தபடி போய்க்கொண்டிருக்கிறானே! அவனும் இப்படி துன்மார்க்கங்களில் இறங்கிவிட்டால், அதனால், அவமானமும், துன்பங்களும், வியாதிகளும், இன்னும் பலவகையான உபத்திரவங்களும் சம்பவித்துவிடுமே என்ற நினைவு என் மனதை வதைக்க ஆரம்பித்துவிட்டது. இறந்துபோன என்னுடைய எஜமானர் மரணாந்த சாஸனத்தில் எழுதிவைத்திருக்கிறபடி செய்வதானால், அவனுடைய கலியாணத்தை இன்னம் ஒரு வருஷகாலம் நிறுத்தவேண்டியிருக்கிறது. நீங்கள் என்னைக் கேட்டு, நான் இந்தக் கலியாணத்துக்கு இணங்கியபோது, அதை உத்தேசித்தே கலியாணத்தை அடுத்த வருஷம் செய்வதாக நாம் தீர்மானித்திருந்தோம், இப்போது நம்முடைய

கண்ணுக்குமுன் நடக்கும் விநோதமான சம்பவங்களைப் பார்க்கவும், பையனுடைய நடத்தைகளை கவனிக்கவும், என்னுடைய உறுதியே மாறிவிட்டது தவிர இன்று பையன் என்னோடு பேசிய சில வார்த்தைகளிலிருந்து, அவன் கலியாணத்தை சீக்கிரம் செய்துகொள்ள ஆசைப்படுகிறு னென்பதும் தெரிந்தது. அவனுடைய மனதுக்கு விரோதமாக, ஒரு வருஷகாலம் இதை நாம் தாமதப்படுத்தினல், பையனுடைய புத்தி எப்படி இருக்குமோ ; இந்த நீண்ட காலத்தில் அவனுக்கு யார் யாருடைய சிநேகம் ஏற்படுமோ ; பிறகு இந்தக் கலியாணம் வேண்டாமென்று அவன் சொன்னலும் சொல்லிவிடுவான் ; ஆகையால் கலியாணத்தை இப்போதே நடத்திவிட்டால், பையன் கெட்ட வழியில் போகாமலிருப்பதற்கு அது ஒரு தடையாக இருப்பதன்றி, அவன் ஆசைப்படும்போது அந்த ஆசையைப் பூர்த்தி செய்ததாகவும் இருக்கும். அவனுடைய மனம் முறிந்துபோன பிறகு செய்வதைவிட அவன் ஆசைப்படும்போது செய்தால், இவர்களிருவருக்கும் அதிக ஒற்றுமையும், பரஸ்பரம் பிரேமையும் ஏற்பட்டுவிடுமென்று நினைக்கிறேன். இந்த விஷயம் உங்களுடைய மனதுக்கு எப்படி இருக்குமோ? உங்களோடு கலந்து பேசி இதை முடித்துக் கொண்டுபோகவே வந்தேன்'' என்ருள்.

அவள் சொன்ன வார்த்தையைக் கேட்ட மீனுக்ஷியம்மாள், மிகுந்த மகிழ்ச்சியும் புன்னகையும் காட்டி "நான் என் மனதுக்குள்ளேயும் இதே எண்ணத்தைக் கொண்டிருந்தேன். ஆனல், நீங்கள் உங்களுடைய எஜமானரின் உத்தரவுப்படியே இதை நடத்த வேண்டுமென்று சொன்னதைக் கருதி, நான் உங்களை வற்புறுத்தவில்லை. உங்கள் இஷ்டம் எதுவோ அதுபோல நான் எந்த விஷயத்திலும் நடக்கத் தயாராகக் காத்திருக்கிறேன். இந்தக் குழந்தையை நான் ஆயிரம் பாடுபட்டு கிளிபோல மகா அருமையாக வளர்த்து வந்திருக்கிறேன். உங்களுடைய இரண்டு பெண் குழந்தைகளோடு மூன்ருவது குழந்தையாக இவளையும் நீங்கள் பாவித்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இனி உங்களுடையது. குழந்தை மகா நற்குணவதி. வீட்டிலுள்ள பெரியோர்களது மனம் கோணுமலும், ஒரு வார்த்தையும் அதிர்ந்து பேசாமலும் மகா புத்திசாலித்தனமாக நடந்துகொள்வாள். எந்த தினத்தில் கலியாணத்தை நீங்கள் வைத்துக் கொண்டாலும், அது எனக்கு சந்தோஷம். குழந்தைக்கும் இது

சரியான பக்குவகாலம். சரியான காலத்தில் இவள் தன்னுடைய புருஷனை யடைந்து சந்தோஷப்பட்டு வாழவேண்டும். நான் இவ்வளவு காலமும் வளர்த்ததற்கு, நான் இவளுக்குக் கொடுத்தனுப்ப என்னிடம் பெருத்த ஐசுவரியம் இல்லாவிட்டாலும், பெருத்த ஐசுவரிய மிருக்கும் யிடத்திலாவது இவளைக் கட்டிக் கொடுத்துவிட்டுப் போனால், என்னுடைய மனம் ஏழேழு ஜென்மத்திலும் குளிர்ந்திருக்கும். ஆனால், இதில் இன்னொரு விஷயமிருக்கிறது மைனருடைய மற்ற போஷகர்கள் சாஸனப்படியேதான் கலியாணத்தை நடத்த வேண்டுமென்று சொல்லுவார்களோ என்னவோ?" என்றாள்.

கல்யாணியம்மாள், "அவர்களே முன்னொருதரம் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். பையன் அதிகமான பணச்செலவு செய்கிறதைக் கண்டு அவர்களே என்னிடம் வந்து, நாங்களெல்லோரும் மாரமங்கலத்துக்காவது போகவேண்டும், அல்லது, கலியாணத்தையாவது செய்துவிடவேண்டும்; இப்படி விட்டிருந்தால் பையன் கெட்ட வழியில் இறங்கிவிடுவான் என்று கூறினார்கள். அதை நான் பையனிடம் தெரிவித்தேன். அவன் இந்த ஊரை விட்டே போக மாட்டானும்; கலியாணம் செய்துகொள்ளுவானும். ஆகையால், போஷகர்கள் இதற்கு எளிதில் இணங்கி விடுவார்கள். இந்த விஷயத்தில் ஆட்சேபனை செய்பவர்கள் என்னைத் தவிர, வேறே ஒருவருமில்லை. போஷகர்களை வரவழைத்து, நான் ஒரு வார்த்தை சொன்னால், அவர்கள் அதற்கு உடனே இணங்கி விடுவார்கள். அதில் கொஞ்சமும் கஷ்டமில்லை" என்றாள்.

அதைக் கேட்ட மீனாக்ஷியம்மாள், "நிரம்ப சந்தோஷம். பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி ஆகிவிட்டது, இந்த விஷயத்துக்கு நீங்கள் எப்போது இணங்குவீர்களோ என்று நான் காத்திருக்கிறேன்" என்றாள்.

கல்யாணியம்மாள், சரி; செய்வதை எப்போதாவது செய்து தானே தீரவேண்டும். பையனுடைய மனதையும் பெண்ணினுடைய மனதையும் அநாவசியமாகவருத்துவதில் என்னஉபயோகம்; இறந்து போன என்னுடைய எஜமானர் இதை எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? பையனுடைய மைனர் பருவம் நீங்குவதற்குள், கண்மணியம்மாள் என்ற பெண் அவனுக்கு சம்சாரமாக ஆவதற்கு தயாராக இருப்பாளென்பதை அவர்கள் எதிர்பார்க்க நியாயமுமில்லை. அவர்கள்

இப்போது உயிரோடிருந்தால், போனவருஷமே இந்தக் கலியாணத் தை முடித்துவைத் திருப்பார்கள். ஆகையால், அவர்களுடைய விருப்பத்துக்கு மாருக நாம் எதையும் செய்தோமென்ற தவறும் அவ்வளவாக ஏற்படாது. அவர்களுடைய இந்த வருஷத்து திதி இன்றைக்குப் பதினைந்தாம் நாள் வருகிறதென்பதைச் சொல்லிவிட்டுப் போவதற்காக புரோகிதர் நேற்றைக்கு முந்திய நாள் பங்களாவுக்கு வந்திருந்தார். அந்த சமயத்தில் அவரோடு நான் பேசிக் கொண்டிருந்தபோது, நாளையதினம் முகூர்த்த நாளென்றும், நாளைக்கு இரவில் மாத்திரம் இந்த ஊரில் பத்து வீடுகளில் கலியாணம் செய்துவைக்க அவர் போகவேண்டுமென்றும் சொன்னதாக, எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், நாம் நாளைய இரவில், எல்லோரையும் அழைத்து விருந்துசெய்து நிச்சய தாம்பூலம் மாற்றிக்கொள்வோம். இன்னம் ஒரு வாரத்தில் ஏதாகிலும் முகூர்த்த நாளிருந்தால், அதில் கலியாணத்தை முடித்துவிடுவோம்" என்று மிகுந்த மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் கூறியவண்ணம் கண்மணியை நோக்கினாள்.

அப்போது கண்மணி எவ்விதமான நிலைமையிலிருந்தாளென்பதை எடுத்துச் சொல்வதைவிட யூகித்துக்கொள்வதே தக்கதாகும். மரணதண்டனை விதிக்கப்பெற்ற ஒருவன் தூக்குமேடையின்மீது ஏறும்போது என்னபாடுபடுவானோ அதைக்காட்டிலும் கோடிமடங்கு அதிகமாக அந்தப் பெண்மணி வாதைப்பட்டு தனது சரீரம் மண்ணிலிருந்ததோ விண்ணிலிருந்ததோ என்பதையுணரமாட்டாமல், மதிமயங்கி, திக்பிரமைகொண்டு, உணர்வு கலங்கி, உயிரழிந்து சித்திரப் பாவைபோல அசைவற்று உட்கார்ந்திருந்தாள். பரமயோக்கியனென்று மிகவும் உறுதியாக தான் எண்ணியிருந்த மதனகோபாலன் கல்யாணியம்மாளிடத்தில், காமாதுரனாக நடந்துகொண்டானென்ற செய்தியும் தனக்கும் மைனருக்கும் அதிசீக்கிரத்தில் கலியாணம் ஆகப்போகிறதென்ற செய்தியும், மறுநாள் இரவில் நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறதென்ற செய்தியும், மூன்று பெருத்த இடிகள் போல அவளது மனத்தைத் தாக்கவே, வேடனது கூறிய அம்பு பாய்ந்து ஊடுருவிச் செல்வதனால், உயிரிழந்து விழும் மணிப்புருவைப் போலவும், உயிரற்ற ஓவியம் போலவும், நெருப்புத் தணல்களுக்குள் புதையுண்டு கிடப்பவள் போலவும், அவள் வேதனையே நிறைவாக உட்கார்ந்திருந்தாள். அவளது மனம், எண்ணாத எண்ண

மெல்லாம் எண்ணியெண்ணித் தவித்தது. மறுநாள் தன்னையும் மாரமங்கலம் மைனரையும் ஒன்ருக மணைமீது உட்கார வைத்து நிச்சயதார்த்தம் செய்வார்களே யென்றும், தான் அதிலிருந்து எவ்வாறு தப்புவது என்றும் அவள் பலவாறு எண்ணமிடலாளுள். தான் மீனாக்ஷியம்மாளிடம் எவ்வளவு நயமாக வேண்டினாலும் அவள் அந்த சம்பந்தத்தை விடவேமாட்டாளாதலால், அந்த மணத்தில் தனக்கு விருப்பமில்லை யென்பதை கல்யாணி யம்மாளிடத்திலேயே அப்போது சொல்லிவிடலாமா என்ற ஓர் எண்ணம் அவளது மனதில் உதித்தது. ஆனால், அவள் மிகவும் மிருதுத்தன்மையும் நாணமும் வாய்ந்தவளாதலால், அவ்வாறு துணிந்து கூற அஞ்சினதன்றி, தான் அவ்வாறு கூறினால், மீனாக்ஷியம்மாளுக்குத் தன்மீது கோபம் பிறக்குமென்ற நினைவும், தான் அவளது மனத்தை வருத்தலாகாதென்ற நினைவும் உண்டாயின. தனது குழந்தைப் பருவத்திலிருந்து, தன்னை சீராட்டிப் பாராட்டி வளர்த்து எண்ணிறந்த பாடுகள் பட்டு தன்னை மனுஷியாக்கி, இன்னமும் தனது நன்மையொன்றையே கருதும் அத்தையின் மனம் வருந்தும்படி தான் நடப்பதுபற்றி, அவள் தனக்குத்தானே பெரிதும் துன்புற்று விசனித்தாள். இருந்தாலும் மிகுதியுள்ள தனது ஆயுட்காலம் முழுதையும் அந்தக் கலியாணம் பாதித்து, தன்னை துயரக்கடலில் ஆழ்த்தக்கூடிய தென்பது நிச்சயமாக விளங்கியதாகையால், தனது அத்தை செல்வமொன்றையே கருதியதன்றி தனது சந்தோஷ வாழ்க்கையைச் சிறிதும் கருதவில்லையே என்ற கவலையும் ஏக்கமும் கொண்டவளாய், கண்மணி, தனது பேருபகாரியான அத்தையின் மனம் கோணும்படி நடந்துகொள்வதைவிட தனது உயிரை மாய்த்துக் கொள்வதே தக்க காரியம் என்ற ஓர் முடிபையே தனது மனதில் ஏற்படுத்திக் கொண்டாள். அடுத்த நாள் இரவில் நிச்சயதார்த்தம் செய்வதற்கு தன்னை அவர்கள் அழைக்குமுன் தான் கிணற்றில் விழுந்தோ, அல்லது, விஷத்தைத்தின்றோ இறந்துபோக வேண்டுமென்ற ஓர் உறுதி செய்துகொண்டவளாய், கண்மணியம்மாள் உட்கார்ந்திருந்தாள்.

கல்யாணியம்மாள் கடைசியாகச்சொன்ன வார்த்தையைக்கேட்ட மீனாக்ஷியம்மாள் கரைகடந்த மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்தவளாய், "சரி; அப்படியே செய்யலாம்; நாளைக்கு இரவில் ஒன்பது ஒன்பதரை மணிக்குள் விருந்தை முடித்துக்கொண்டு, பத்து மணிக்குள் நிச்சயதார்த்தத்தை நடத்தி விடுவோம். ஏன்? நாம் இன்னொரு காரி

யம் செய்தாலென்ன? இப்போது நாம் நம்முடைய பந்துக்களுடைய பங்களாக்களுக்கும், சிநேகிதர்களுடைய பங்களாக்களுக்கும் போகிறோமே; நாளை இரவில் நடக்கும் விருந்துக்கும் நிச்சயதார்த்தத்துக்கும் வரும்படி எல்லோரையும் நேரில் அழைத்துவிட்டு வருவோமே. இன்னொருமுறை போவதற்கு நமக்கு அவகாசம் எங்கே இருக்கிறது" என்றாள். கல்யாணியம்மாள், "அதுவும் நல்ல யோசனை தான். அப்படியே செய்வோம். அதில் இன்னொரு விஷயமும் இருக்கிறது; நாம், இந்த மதனகோபாலனுடைய விஷயத்திற்காக மாத்திரம் வந்தோமென்று பிறர் நினைப்பது நமது யோக்கியதைக்கும் கண்ணியத்துக்கும் தகாத காரியம். அவர்களை அழைக்கப் போனதுபோலப் போய் இந்த விஷயத்தையும் நடுவில் மெதுவாகத் தெரிவித்துவிடுவோம்." என்றாள்.

மீனாக்ஷியம்மாள், "ஆம் நிஜந்தான்; நாம் அப்படிச் செய்தால், அந்த விஷயத்தில், எல்லோருக்கும் நம்பிக்கை அதிகமாக ஏற்படும். நம்முடைய வேலையும் சுலபமாக முடிந்துபோகும்" என்றாள்.

அவ்வாறு அவர்களிருவரும் தீர்மானம் செய்து கொண்டவர்களாய், தங்களது ஆசனங்களை விட்டு எழுந்தனர். மீனாக்ஷியம்மாள் போய் அதி சீக்கிரத்தில் திரும்பி வருவதாகவும், அதுவரையில் ஜாக்கிரதையாக இருக்கவும் கண்மணியிடம் கூற, அதன்பின் இருவரும் மேன்மாடத்தை விட்டுக் கீழே இறங்கினார்கள். கீழே இருந்த வேலைக்காரி யொருத்தியை யழைத்து மேன்மாடத்திலுள்ள கண்மணிக்குத் துணையாயிருக்க அவளை மேலே அனுப்பிவிட்டு மீனாக்ஷியம்மாள் பெட்டி வண்டிக்குள் ஏறி உட்கார, கல்யாணியம்மாளும் தான் எதிர்பாராத வெற்றி தனக்கு உண்டாவதை நினைத்து நினைத்து உள்ளார்ந்த குதூகலம் கொண்டவளாய் வண்டியில் ஏறி உட்கார, வண்டி புறப்பட்டது.

---

## 11-ம் அதிகாரம்

## ஏழையழுத கண்ணீர்

அந்த இரண்டு பெண்டீரும் அன்றைய மாலைப் பொழுதிற்குள் சுமார் இருபது பங்களாக்களிற்குள் நுழைந்து, அவற்றிலிருந்தோரை தாம் மறுநாள் நடத்த எண்ணியிருந்த விருந்திற்கும்

நிச்சயதார்த்தத்திற்கும் அழைத்துவிட்டு, மதனகோபாலனைப்பற்றிய கட்டுக்கதையை மிகவும் தந்திரமாகவும் சம்சயத்திற்கு இடமின்றியும் வெளியிட்டு, அவர்களுக்கெல்லாம் அவன்மீது பெருத்த கோபமும், அருவருப்பும், பகைமையும் உண்டாகும்படி செய்தவராய், இரவு ஏழரை மணிக்குத் திரும்பினர். அதன்பிறகு மீனாக்ஷியம்மாளை அவளது பங்களாவில் இறக்கிவிட்ட கல்யாணியம்மாள் மைனரது போஷகர்களான வக்கீல் சிவஞானமுதலியார், சோமநாதபுரம் ஜெமீந்தார் ஆகிய இவர்களது மாளிகைகளுக்கும் சென்று, நிச்சயதார்த்த விஷயமாகப் பேசி அவர்களது சம்மதியைப் பெற்றவளாய், அன்றிரவு எட்டரை மணிக்குத் தனது பங்களாவிற்கு வந்து சேர்ந்தாள். தனது மனம் குளிரும்படி அவ்வளவு அதிகமாக மதனகோபாலனுக்கு தான் அன்று தீங்கிழைத்து, தனது கட்டுக்கதையை உண்மையென்று எல்லோரும் நம்பும்படி எளிதில் செய்துவிட்டு வந்ததைப்பற்றியும், அதிசீக்கிரத்தில் கண்மணியின் கலியாணத்தை முடித்து, அவளைத் தனது பங்களாவிற்குக் கொணர்ந்து, அவள் மதனகோபாலன்மீது பிரியம் வைத்ததைப்பற்றி, தனது புத்திரனை ஏவி, தக்கபடி அவளைத் தண்டிக்கலா மென்பதுபற்றியும், பரம சந்தோஷமும் குதூகலமு மடைந்த கல்யாணியம்மாள் முதல்நாளிரவில் தான் பட்ட பாடுகளை யெல்லாம் முற்றிலும் மறந்தவளாய், தனது அந்தப்புரத்திற்குள் நுழைந்தாள். அன்று அவளுக்கெதிரில் குறுக்கிட்ட வேலைக்காரர் வேலைக்காரிகளிட மெல்லாம், அவள் மிகவும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் பேசி, மறுநாள் நிச்சயதார்த்தமென்ற செய்தியை வெளியிட்டதன்றி, தனது புத்திரிகளை உடனே தனது அந்தப்புரத்திற்கு அழைத்துவரும்படி ஒரு வேலைக்காரியை அனுப்பினாள்.

புதல்வியர் இருவரும், பகல் மூன்றுமணிக்கு வெளியில்சென்ற தங்களது தாய், இரவு எட்டரைமணி நேரம்வரையில் திரும்பி வாராதிருந்ததுபற்றி பெரிதும் வியப்பும் கவலையும் கொண்டிருந்தனராதலால் தங்களது தாய் திரும்பிவந்து அழைத்துவரச் சொன்னாளென்ற செய்தியைக்கேட்கவே, அவர்கள் விரைவாக எழுந்து மிகுந்த ஆவலோடு வந்து தாயின் அந்தபுரத்தை யடைந்தனர். கல்யாணியம்மாள் சென்றிருந்ததன் காரணம், மதனகோபாலனது முதல்நாளைய நடத்தையைக் குறித்ததாக இருக்குமோ என்று சந்தேகித்திருந்த மடந்தையர், அவ்வளவு நேரங்கழித்து வந்த தாய் தங்களிடம்

சுமுகமாகப் பேசமாட்டாளென்று நினைத்து ஒருவாறு அச்சம் கொண்டு வந்தனர். ஆனால் தங்களது நினைவிற்கு மாறாக, அவள் மகா சந்தோஷத்தோடும் கரை கடந்த அன்போடும் தங்களோடு பேசத் தொடங்கியதைக் காணவே, அவர்களிருவருக்கும் அது எதிர்பார்க்கப்படாத இன்பமாக இருந்ததன்றி, தங்களது தாய் எவ்விதமான சந்தோஷ சமாசாரம் சொல்லப்போகிறாளோ என்று நினைத்து, மிகுந்த ஆவல் கொண்டவராய், தங்களது தாய்க்கருகில் நெருங்கி நின்றனர்.

அவர்களைக் கண்ட கல்யாணியம்மாள் கோமளவல்லியையும், துரைசானியம்மாளையும் மாறி மாறி நோக்கிப் புன்னகையும் மகிழ்ச்சியும் காட்டி, "நான் சீக்கிரம் வந்துவிடலாமென்று நினைத்து உங்களிடத்தில்கூட விவரத்தைச் சொல்லாமல் போனேன். போனவிடத்தில் ஒரு முக்கியமான காரியத்தினால் இவ்வளவுநேரம் ஆகிவிட்டது. நீங்கள் எட்டு மணிக்கே சாப்பிடுகிறவர்கள்; அம்மாள் வரவில்லையே என்று பட்டினியாகக் காத்துக்கொண்டிருப்பீர்களே என்று நினைத்தே நான் என்னுடைய வேலைகளைக் குறைத்துக்கொண்டு ஓட்டமாக ஓடிவந்தேன். நான் என்ன காரணத்தினால், இவ்வளவு நேரம் வெளியில் தங்கினேனென்பதை நீங்கள் யூகித்துச் சொல்ல முடியுமா? எங்கே உங்களுடைய சாமர்த்தியத்தைப் பார்க்கலாம். கோமளவல்லிக்கு அவ்வளவு யூகம் உண்டாகாது. துரைஸானியம்மாள் புத்திசாலி; அவள் சொல்லிவிடுவாள்" என்று தனது ஆநந்த பரவசத்தில் தன்னை மறந்தும், தனது புதல்வியரை சந்தோஷப்படுத்த முயன்றும், துரைஸானியம்மாளை வஞ்சகப் புகழ்ச்சி செய்தும் பேசினாள்.

உடனே கோமளவல்லி தனது தாயினிடத்தில் மிகுந்த பயபக்தி வாத்சல்யத்தோடு பேசத்தொடங்கி, "இவ்வளவுநேரம் ஆயிற்றே! ஒரு நாளும் நீங்கள் இப்படி வெளியில் தங்கினதில்லையே! வழியில் போனபோது ஏதாகிலும் விபத்து நேர்ந்ததோ என்னவோ ஒன்றும் தெரியவில்லையே என்று நாங்கள் இவ்வளவு நேரம் எவ்வளவுதூரம் பயந்துவிட்டோம் தெரியுமா! நீங்கள் அந்த மதனகோபாலன் விஷயமாகவே எங்கேயோ போயிருக்கிறீர்களென்று அக்காள் சொல்லிக்கொண்டே இருந்தாள்; அதற்காகப் போயிருந்தால் இவ்வளவுநேரம் தாமதிக்க வேண்டியதில்லையே என்று நான் மாத்திரம் சந்தேகித்துக்கொண்டே இருந்தேன். இரண்டாவது

வேளைக்குக்கூட நீங்கள் தாகத்துக்கு சாப்பிடவும் வரவில்லை யாகை யால், என் மனசு பலவகையில் பயந்துவிட்டது" என்றாள்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள், அவளது அன்பையும் பேதமையையும் கண்டு நகைப்பவள்போல இரக்கமாக நகைத்து "சேச்சே, அப்படி ஒன்றும் வழியில் ஏற்படவில்லை. நான் இந்த அற்ப நாயான மதனகோபாலனை ஒரு பொருட்டாக மதித்து, அதற் காக ஒரு பகல் நேரத்தையெல்லாம் வீணாக்குவேனா? நான் இப் போது சொல்லப்போகும் சங்கதி உங்களுக்கு நிரம்பவும் ஆச்சரிய கரமாக இருக்கும். இந்த மதனகோபாலன் இங்கே நம்முடைய பங்களாவில் மாத்திரம் அயோக்கியத்தனமாக நடந்தானென்று நாம் நினைத்தோமே. அவன் பல இடங்களில் இப்படியே செய்தி ருக்கிறானாம். நேற்று சாயுங்காலம் அவன் இங்கே வந்ததற்கு முன், மீனாக்ஷியம்மாளுடைய பங்களாவிலும் இப்படி நடந்துகொண் டானாம்; கண்மணியம்மாளுக்கு அவன் வீணை கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தபோது மீனாக்ஷியம்மாள் ஏதோ ஓர் அவசரக்காரியமாக எழுந்து தோட்டத்துக்குப் போனார்களாம்; அவர்கள் திரும்பி வந்த போது, அவன் கண்மணியம்மாளிடத்தில், ஏதேதோ தகாத வார்த் தைகளையெல்லாம் பேசத்தொடங்கினானாம். அதையுணர்ந்த மீனாக்ஷி யம்மாள் அவனைத் திட்டி, துடைப்பக்கட்டையால் அடிக்காதது குறையாக, அவனை வெளியில் அனுப்பிவிட்டார்கள் அவன் நேற்று தினம், நல்ல பனங்கள்ளில் சரியாக ஒரு குடம் குடித்துவிட்டு வந் தானாம், அந்த வெறியினாலேதான் அவன் ஏதோ உடம்பு அசௌக்கியமாக இருக்கிறதென்று சொல்லி பாசாங்கு செய்ததன்றி தலைகால் தெரியாமல் மயங்கி, கண்ட பெண்பிள்ளைகளை யெல்லாம் பிடித்திழுக்கத் தொடங்கி விட்டான். நானாவது, பேசாமல் இருந்து விட்டேன்; மீனாக்ஷியம்மாள் என்ன செய்தார்கள் தெரியுமா? அவசரமாக அவர்களுடைய பங்களாவுக்கு வரும்படி எனக்கு இன்று பகலில் செய்தி சொல்லியனுப்பினார்கள். நான் உங்களி டத்தில்கூட சொல்லிக்கொள்ளாமல் புறப்பட்டுப்போய்ப் பார்க் கிறேன். அதற்குள் மீனாக்ஷியம்மாள், அந்த மதனகோபாலன் வீணைக் கற்றுக்கொடுக்கும் பங்களாக்களுக்கெல்லாம் செய்தி சொல்லியனுப்ப, எல்லோரும் வியப்பும் கோபமும் கொண்டார்க ளாம்; சிலர் அதைப்போலவே அவன் தங்களுடைய ஜாகையி லும் நடந்துகொண்டானென்று மறுமொழி சொல்லியனுப்பி

ணர்களாம். இந்த விவரத்தை யெல்லாம் மீனுக்ஷியம்மாள் எடுத்து என்னிடம் சொன்னார்கள். எனக்கு இந்த விஷயம் நிரம்பவும் ஆச்சரியமாக இருந்ததன்றி அவன் என்னிடத்தில் மாத்திரம் அப்படி ஏன் நடந்துகொள்ளவேண்டுமென்று நான் அடைந்திருந்த சந்தேகமும் கவலையும் உடனே தீர்ந்துபோயின. அவன் என்னிடத்தில் நடந்துகொண்டது முன் யோசனையின்மேல் செய்ததல்லவென்றும், அது தற்செயலாக நடந்த காரியமென்றும் நான் உடனே கண்டு கொண்டேன். நேற்றோடு அவனுடைய வாயில் மண் விழுந்து விட்டது. அவனை யின்றையதினம் ஒரு வீட்டிலும் சேர்க்காமல் மீனுக்ஷியம்மாள் செய்துவிட்டார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட கோமளவல்லி "ஐயோ பாவம்! இத்தனைநாளும் அவன் நிரம்பவும் யோக்கியன்போல காணப்பட்டானே; அவன் கள் குடிக்கிறவனா! அடாடா! அவனுக்கு மாதம் ஒன்றுக்கு முன்னூறு ரூபாய் கிடைக்குமென்று முன்னொரு தரம் அவன் உங்களிடம் தெரிவித்தானே. அவ்வளவு பணமும் போய்விடுமே! இனிமேல் அவன் சாப்பாட்டுக்கு என்னசெய்வான்?" என்று இரக்கத்தோடு கூறினாள்.

கல்யாணியம்மாள், "அவனுக்கு சாப்பாட்டைப்பற்றிக்கூட அவ்வளவு கவலை இல்லை. கள்ளைக் குடித்துக் கண்டவன், ஒரு நாளைக்கு அது இல்லாமல் போனால், சும்மா இருக்கமாட்டான்; எங்கேயாவது திருடியாவது முடிச்சவிழ்த்தாவது, குடித்தே தீருவான். ஆனால் பலநாளைய திருடன் ஒரு நாளைக்குப் பிடிபட்டு சிறைச்சாலைக்குப் போவது நிச்சயம். அந்த அயோக்கியன் எப்படியாவது ஒழியட்டும். இனிமேல் அவனுடைய பேச்சு நமக்கு எதற்காக? அவன் என்னிடத்திலும் மற்ற இடங்களிலும் செய்த தவறுக்கு சுவாமியே பார்த்து அவனை நன்றாக தண்டித்துவிட்டார். உங்களிடம் நான் இன்னொரு சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறேன். நம்முடைய தம்பியின் கலியாணத்தை இன்னம் ஒரு வாரத்துக்குள் முடித்துவிடத் தீர்மானம் ஆகிவிட்டது. நாளைய தினம் இங்கே விருந்தும் நிச்சயதார்த்தமும் நடக்க ஏற்பாடு செய்து விட்டோம். இனிமேல், கண்மணியம்மாள் அதிசீக்கிரத்தில் நம்முடைய புங்களாவுக்கு வந்துவிடுவாள்" என்றாள்.

அதைக் கேட்ட மடந்தையரிருவரும் பெரிதும் வியப்பும் மகிழ்ச்சியும் இன்பமும் அடைந்து தங்களது செவிகளையே நம்பாமல் நின்ற

ணர்; உடனே கோமளவல்லி, "நம்முடைய ஐயா மரண சாஸனத் தில் ஏதோ எழுதியிருப்பதாகவும், அதனுல் இன்னம் ஒரு வருஷ காலம் போகவேண்டுமென்றும், நீங்கள் சொன்னீர்களே;" என்ருள்.

கல்யாணியம்மாள், "அது உண்மைதான். நம்முடைய தம்பி நேற்று சாயுங்காலம் என்னிடத்தில் இதைப்பற்றித்தான் பேசினுன். தனக்கு உடனே கலியாணத்தைச் செய்துவைக்க வேண்டுமென்று அவன் பிடிவாதமாக என்னிடம் பேசினுன். இந்த ஊரோ நிரம்பவும் கெட்டுப்போன ஊர். கெட்டவழியில் பையனைக் கொண்டுபோய் விட எத்தனையோ துஷ்டர்கள் சேருவார்கள். ஆகையால் அவன் ஆசைப்படும்போதே, கலியாணத்தை முடித்து அவனையும் கண்மணி யையும் ஒன்ருக வைத்துவிட்டால், அவனுடைய புத்தி வெளியில் அவ்வளவாக நாடாது. அதுவும் தவிர, அவன் அடிக்கடி மீனுக்ஷியம் மாளுடைய பங்களாவுக்குப் போய் கண்மணியம்மாள் தனிமையி லிருக்கும் இடங்களில் அவளிடம் விஷமங்களெல்லாம் செய்கிருனும். அதையும் கேள்விப்பட்டேன். ஆகையால், அநாவசியமான தாமதம் செய்தால், ஒரு வருஷத்துக்குள் என்னென்ன விபரீதங்கள் நேருமோவென்று நினைத்து, நானும் மீனுக்ஷியம்மாளும் கலியா ணத்தை உடனே முடித்து விடவேண்டுமென்று முடிவுகட்டிவிட் டோம். நாளையதினம் முகூர்த்தநாளாகையால், நாளைய ராத்திரி நம் முடைய ஜனங்களுக்கெல்லாம் விருந்து நடத்தி, நிச்சயதாம்பூலம் மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஏற்பாடு செய்திருக்கிருேம். இன்று பகல் முழுதும் அதே வேலையாக நானும் மீனுக்ஷியம்மாளும் அலைந்து, நம்முடைய பந்து ஜனங்களையெல்லாம் அழைத்துவிட்டு வந் தோம். அதன் பிறகு நான் நம்முடைய சிவஞான முதலியாரையும், சோமநாதபுரம் ஜெமீந்தாரையும் பார்த்துவிட்டுவர இந்நேரம் ஆகி விட்டது" என்ருள்.

அந்த வரலாற்றைக் கேட்ட கோமளவல்லியின் கபடமற்ற அதி சுந்தரவதனம் பெருங்களிப்பினுல் தாமரைமலர்போல மலர்ந் தது. கண்களிரண்டும் ஆநந்தத் தாண்டவம் புரிந்தன. அவ் வாறே, துரைஸானியம்மாளும் கலியாணம் அதிசீக்கிரமாக நடக்கப் போவதுபற்றி பெரு மகிழ்ச்சி யடைந்தாளேனும், மதனகோபாலனைப்பற்றி தங்களது தாய் வெளியிட்ட வரலாற் றைக் கேட்டதனுல் ஏற்பட்ட பெருத்த வியப்பும் திகைப்பும் அப்போதும் அவளது மனதில் நின்று மிகுந்த சஞ்சலமும்

சந்தேகமும் உண்டாக்கிக்கொண் டிருந்தமையால், அவள் கலியாணத்தைப் பற்றிய சந்தோஷத்தை அவ்வளவாக வெளியிடவில்லை. மகாகூர்மையான அவளது மனம் பலவகையில் யூகங்கள் செய்து கொண்டிருந்தது. அவள் கடைசியாக கோமளவல்லியை நோக்கிய வண்ணம், "சரி; இப்போதுதான் நம்முடைய சந்தேகம் நிவர்த்தியாயிற்று. இதற்குமுன் நம்முடைய பங்களாவில் நடந்த விசேஷங்களுக்கெல்லாம் ஜனங்களை அழைக்க அம்மாளே நேரில் போகாமல் இதற்கு மாத்திரம்போன காரணமென்னவென்று நீ சந்தேகப்படுவதாக உன்னுடைய முகம் காட்டுகிறது. அந்த மதனகோபாலனுடைய அயோக்கியத்தனத்தை எல்லோருக்கும் எடுத்துச்சொல்லி, அவர்களுடைய வீடுகளிலும் அவன் வராமல் செய்யவேண்டுமல்லவா. அதற்காகத்தான் அம்மாளும் மீனாக்ஷியம்மாளும் நேரில் போய்விட்டு வந்திருக்கிறார்கள்; இல்லாவிட்டால், இவ்வளவு நேரம் தாமதம் ஆக என்ன காரண மிருக்கிறது. இந்த விஷயத்தை நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவனை நான் கிருஷ்ணபகவான் என்றே நினைக்கிறேன். அவர் பதினாயிரம் கோபிகாஸ்திரீகளை விரட்டியடித்ததைப்போல இந்த மதனகோபாலன் இத்தனை வீட்டுப் பெண் பிள்ளைகளின் மேலும் துராசை கொண்டு அவர்களையெல்லாம் பிடித்திழுத்திருக்கிறான். நீயும்நானுமே அதிர்ஷ்டமில்லாதவர்கள். அவன் நம் இரண்டுபேரிடத்தில் மாத்திரம் மரியாதையாக நடந்துவந்திருக்கிறான். பெரிய பெரிய மனிதர்களாகிய இத்தனை சீமாட்டிகள் அவன் அயோக்கியனென்று நற்சாக்ஷிப்பத்திரம் கொடுக்கையில், அதற்கு மாறாக நீயும் நானும் சொன்னால், அதை யார் நம்புவார்கள். இதனால் ஒரு சங்கதி நிச்சயமாகிறது. அவன் வீணை கற்றுக்கொடுக்கப்போன வீடுகளிலுள்ள எல்லாப்பெண்டுகளிலும், நீயும் நானுமே அழகில்லாத ரூபிகளாகையால், அவனுடைய கிருபா நோக்கமும் அருளும் நமக்கில்லாமல் போய்விட்டனவென்று நான் துணிந்து சொல்லுவேன்; இதில் நமக்கு இன்னொரு துரதிர்ஷ்டம் பார்த்தாயா? நேற்று அவன் வீணை கற்றுக்கொடுத்தபோது, அவனுக்கருகில் நானே முன்னால் உட்கார்ந்திருந்தேனல்லவா. அவன் ஒரு குடக்கள்ளைக் குடித்துவிட்டு வந்திருந்தும், அதில் ஒரு துளிக் கள்ளாவது வாசனையாவது எனக்காவது எனக்குப் பக்கத்திலிருந்த உனக்காவது கிடைக்கவில்லையே! அவன் எழுந்து என்னிடம் சொல்லிக்கொண்டு போனபோது அவன் முன்னிலும் அதிக

சமீபத்தில் நெருங்கி வந்து பேசினன். அப்போதும், அந்த பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லை. அவன் வயிற்றிற்குள் ஒரு குடக் கள்ளை மறைத்து வைத்திருந்தது மற்றவருடைய கண்ணுக்கு மாத்திரம் தெரிந்திருக்கிறது பார்த்தாயா! என்னவோ அந்தப் பையனுக்கு நேற்றையதினம் பொல்லாத நாள்போ லிருக்கிறது. இல்லாவிட்டால், இத்தனை பெரிய மனிதர்களுடைய கோபமும், பகைமையும் ஒரே காலத்தில் அவன்மேல்விழ நியாயமில்லை யல்லவா. ஆணிலும் சரி, பெண்ணிலும் சரி, அழகு அதிகமாக இருந்தால் அவர்களுடைய பாடு துன்பந்தான்.'' என்று புரளியாகவும் குத்தலாகவும் வேடிக்கையாகவும் அடங்கிய விசனத்தோடும் கூறினாள். அந்த வார்த்தைகள் கல்யாணியம்மாளது ஹிருதயத்தில், மிகவும் கூர்மையான அம்புகள் போலப் பாய்ந்து அறுக்கத் தொடங்கின. அவள் மிகுந்த வெட்கமடைந்தா ளென்பதை அவளது வதனம் சடேரென்று காண்பித்தது; ஆனால், அவள் அதை உடனே மறைத்துக்கொள்ள முயன்று, வேறு எதையோ கவனிப்பவள்போல அப்பால் திரும்பினாள்; அதற்கு என்ன மறுமொழி சொல்வதென்பதை அறியாதவளாய் கல்யாணியம்மாள் தத்தளித்தவளாய், தனது மூத்த புதல்வி எந்த விஷயத்திலும் உண்மையை அதிநுட்பமாக கிரகித்துக்கொள்வதில் அபார வல்லமை வாய்ந்தவளென்பதை அவள் நாளடைவில் கண்டவளாதலால், அவளிடத்தில்தான் அதிகமான பேச்சை வளர்த்தால், தனக்கே அவமானம் ஏற்படுமென்பதை யெண்ணி மௌனம் கலகம் நாஸ்தி என்று பேசாதிருந்தாள். துரைஸானியம்மாளது உள் கருத்தை சிறிதும் உணராதவளும் கபடமற்றவளுமான கோமளவல்லி, தனது அக்காளை நோக்கி, "அம்மாள் இவ்வளவுநேரம் வரவில்லையே, என்று நாம் இதுவரையிலும் கவலைப்பட்டிருந்ததற்கு, அவர்கள் கடைசியில், எப்படிப்பட்ட சந்தோஷ சமாசாரம் கொண்டுவந்தார்கள் பார்த்தாயா? நாளைக்கு நிச்சயதாம்பூலம் என்பதைக் கேட்க, என்னுடைய உடம்பு அப்படியே பூரித்துப் போகிறது. என் மனம் வேறே எதிலும் செல்லாமல் சந்தோஷத்தினால் பொங்குகிறது. என்னுடைய பசிகூட அடங்கிவிட்டது.'' என்று மிகுந்த மனவெழுச்சியும் களிப்புமடைந்தவளாகக் கூறினாள். அதைக்கேட்ட துரைஸானியம்மாள், "அப்படியானால், நீ அதிர்ஷ்டசாலிதான். என்னுடைய மனதிலோ ஒருவிதமான உணர்வும் ஏற்படவில்லை'' என்றாள். கோமளவல்லி, "ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? கண்மணியம்மாள் நம்முடைய பங்க

ளாவுக்கு வரப்போகிறாளென்ற சந்தோஷ சங்கதியை அம்மாள் கொண்டுவந்திருக்கிறார்கள். அப்படி இருக்க, நீ, உன் மனதில் சந்தோஷம் உண்டாகவில்லையென்று சொல்லுகிறாயே! அது நியாயமா?" என்றாள்.

துரைஸானியம்மாள், "அம்மாள் துக்கத்தையும் சந்தோஷத்தையும் கலந்துகொண்டு வந்திருக்கிறார்களல்லவா. அபூர்வமான நற்குண நல்லொழுக்கம் வாய்ந்தவனும் சிறந்த வீணைவித்துவானுமான மதனகோபாலனையும், அவனிடம் வீணைகற்றுக்கொள்ளும் பாக்கியத்தையும் நாம் இழப்பதனால் உண்டாகும விசனமும், கண்மணியம்மாள் வருகிற சந்தோஷமும் ஒன்றையொன்று கொன்றுவிட்டன. அருமையான ஒருபொருளை யிழந்தோம்; அருமையான இன்னொரு பொருள் வரப்போகிறது. ஆகையால் லாபமுமில்லை நஷ்டமுமில்லை. ஒரேகாலத்தில் சந்தோஷமும் விசனமும் எப்படி உண்டாகும்? ஆகையால் என் மனதில் எவ்வித உணர்ச்சியும் ஏற்படவில்லை. கண்மணியம்மாள் நாளைக்கு வராவிட்டால், இன்னம் ஒருவருஷம் கழித்தாகிலும் வந்தேதீருவாள். தள்ளிவிடப்பட்ட மதனகோபாலன் இனிமேல் திரும்பிவர மாட்டானல்லவா; ஆகையால் என்னுடைய மனதில் இப்போது சிறிதளவு விசனமே மிஞ்சி நிற்கிறதென்று சொல்லவேண்டும்" என்றாள். அவளது வார்த்தைகள் கல்யாணியம்மாளுக்கு முற்றிலும் கன்னகடூரமாக இருந்தன; அவர்கள் மேன்மேலும் சம்பாஷிக்கும்படி தான் விட்டிருந்தால், துரைஸானியம்மாள் குத்தலாகவும் மறைபொருளாகவும் பேசிப்பேசி தன்னை மேன்மேலும் வருத்திக்கொண்டே இருப்பாளாதலின், அவர்களது வாயை அவ்வளவோடு அடக்க நினைத்தாள்; தான் தனது விருப்பத்திற்கு மாறாக நடந்த மதனகோபாலனை மிகவும் கடுமையாகவும் தனது மனங்குளிரவும் தண்டித்து, அதனால் பூரிப் படைந்திருந்த சமயத்தில், துரைஸானியம்மாள், அவனைப் புகழ்ந்து பேசியது, அவளுக்கு சகிக்கவொண்ணாத துன்பமாக இருந்தது. ஆகலால் கல்யாணியம்மாள் தனது இயற்கையான நிமிர்வையும் கம்பீரத்தையும் அதிகாரத் தோற்றத்தையும் காட்டி, "சரி; அதிகநேரம் ஆகிவிட்டது. முதலில் நாம் சாப்பாட்டுக்குப் போவோம்; அதிகப் பிரசங்கமெல்லாம் இவ்வளவோடு நிற்கட்டும்" என்று கூறிய வண்ணம் அமர்த்தலாகவும் அலட்சியமாகவும் எழுந்தாள். அந்த

வார்த்தை துரைஸானியம்மாளை நேருக்குநேர் காட்டிப் பேசியதாக இல்லாவிட்டாலும், அது அவளது கன்னத்தில் பளீரென்று அறைந்ததுபோல இருந்தது. ஆனால் அந்த வார்த்தை கோமளவல்லியைக் குறித்த தென்றபினும், அவள் நடுங்கி அடங்கி ஒடுங்கி தனது வாயை இறுக மூடிக்கொண்டாள்; துரைஸானியம்மாளோ, தனது தாய் தன்னையே அவ்வாறு கண்டித்தாளென்பதை உணர்ந்தாளானாலும், அவளது கோபத்திற்கு தான் அவ்வளவாக அஞ்சவில்லையென்பதை தனது அசட்டையான பார்வையால் காட்டி, வேறு எதையோ பார்ப்பவள்போல, சிறிதும் பயமற்றவளாக நின்றாள். அப்போது அந்த சயனமாளிகையின் கதவு திறக்கப்பட்டது. பொன்னம்மாள் என்னும் வேலைக்காரி உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்ட கல்யாணியம்மாள், "ஏ! பொன்னம்மா! போய் சீக்கிரமாக இலைபோடச் சொல்; நாங்கள் இன்னம் ஒரு நிமிஷத்தில் வருகிறோம்" என்று சிறிது அதிகாரத்தோடு கூற, பொன்னம்மாள் உடனே திரும்பிப் போகாமல், கல்யாணியம்மாளுக்கு மிகவும் சமீபத்தில் நெருங்கினாள்.

அதைக் கண்ட கல்யாணியம்மாளது மனதில், அவள் மறுபடியும் ஏதோ புகார்சொல்ல வந்திருக்கிறாளென்ற சந்தேகம் தோன்றவே, அவள் உடனே தனது பொறுமையை இழந்து, "என்ன நான் சொல்லுகிறேன்! காதில் வாங்காமல் வருகிறாயே! மற்ற சங்கதியெல்லாம் அப்புறம் ஆகட்டும். எனக்குப் பசியாக இருக்கிறது. போ சீக்கிரம்" என்று அதிகாரமாகவும் அன்பாகவும் கூறினாள். அதைக்கேட்ட பொன்னம்மாள், அவளிடத்தில் ரகசியமான ஏதோ சங்கதி "சொல்லவந்தவள் போலவும், அவள் தடுப்பதால், தான் வந்த காரணத்தை வெளியிட மாட்டாமல் தவிப்பவள் போலவும், தோன்றி, "போறேன் அம்மா! நம்ப பங்களா வாசல்லே, ஒருத்தி வந்திருக்கிறு. அவ ஒங்களோடே இப்பவே அவசரமாய் பேசணுமாம்" என்றாள்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள், மிகுந்த ஆத்திரம் கொண்டவளாய், "அவள் யாரடி அவ்வளவு கண்டிப்பாக உத்தரவு செய்கிறவள்? அவள் யாரென்பதையும், என்ன வேலையாக என்னிடம் பேச வந்தா ளென்பதையும், கேட்டுக்கொண்டு வா; நாங்கள் அதற்குள் போய் போஜனம் செய்துவிட்டு வருகிறோம்" என்றாள்.

7487

அதைக் கேட்ட பொன்னம்மாள் சிறிதும் அசையாமல் நின்ற படியே, "அவ இஞ்சே ரெண்டு நிமிசத்துக்கு மேலே நிக்க முடியாதாம். ஒடனே நீங்க வரச்சொன்னா ஆச்சு; இல்லாமெப்போனா அவளே உள்ளற வந்துவிடுவாளாம்" என்றாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாளுக்கு ரௌத்திராகாரமான கோபம் பிறந்தது. அவள் தனது பசியிலும் கோபத்திலும் தன்னை முற்றிலும் மறந்து, "அது யாரடி அவ்வளவு தூரம் துணிந்து பேசுகிற நாய்? வெளியில் யாராவது வேலைக்காரன் இருந்தால், அவளை செருப்பாலடித்து பங்களாவுக்கு வெளியிலே கொண்டு போய் விடச் சொல்" என்று மிகவும் கண்டிப்பாக உத்தரவு செய்தாள். பொன்னம்மாள் அதற்கும் அசையாமல் நின்று, "நீங்கோ இப்போ பேச முடியாதுன்னு சொன்னாக்கா, தம் பேரு அம்பட்டக் கருப்பாயி இன்னு சொல்லச் சொன்னா" என்று தணிவான குரலில் கூறினாள்.

அந்தப் பெயரைக் கேட்டவுடனே கல்யாணியம்மாள் பெரிதும் திகைப்பும், வியப்பும், திகிலும் அடைந்தவளாய், "யார் அது? அம்பட்டக் கருப்பாயா? அவள் எங்கே வந்தாள் இந்த சமயத்தில்?" என்று கேட்டாள். தனது படத்தை விரித்துச் சீறும் நாகப்பாம்பு மந்திரவாதியின் மாத்திரக் கோலைக் கண்டு படத்தைச் சுருக்கிக்கொண்டு கீழே விழுந்து ஒடுங்கிப் போவதுபோல, அம்பட்டக் கருப்பாயி என்ற பெயரைக் கேட்டவுடனே கல்யாணியம்மாளது கோபம் முழுதும் பறந்தது. ஆனால் அந்தப் பெயரைக்கேட்டு தான் அஞ்சுவதாகத் தனது புத்திரிகளுக்கெதிரில் காட்டிக் கொள்ளக் கூடாதென்ற எண்ணம் கொண்டவளாய் பொன்னம்மாளை நோக்கி, "சரி; அந்த அம்பட்ட நாயை இங்கே அழைத்து வா; அவளுடைய குறும்புக்குத் தக்கபடி நன்றாக தண்டித்து அனுப்புகிறேன்" என்று கூறிவிட்டு, தனது புதல்வியரிருந்த பக்கம் திரும்பி "குழந்தாய் கோமளவல்லீ! நீயும் அக்காளுமாக முன்னால் போய் இலை போடச் சொல்லுங்கள்; நான் இதோ ஒரே நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று மிகவும் அன்பாகவும் அழுத்தமாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட கோமளவல்லி தனது கையில் ஸைரஸானியம்மாளை மெதுவாகத் தொட்டு, "நாம் போவோம்" என்று கூற, அவள் நடக்க வாரம்பித்தாள். அப்போது பொன்னம்மாள் அவ்விடத்தைவிட்டு வெளியில் நடக்க, புதல்வியரிருவரும் தான உத்தர

வின்படி போஜன மாளிகைக்குப் போகும் நோக்கத்தோடு வெளியில் சென்றனர். அவ்வாறு வெளியிற் சென்ற இரண்டு இளநங்கைய ரும் இரண்டொரு விடுதிகளைக் கடந்து சென்றனர். அதுகாறும் வாய் பேசா ஊமைபோலவும் ஆழ்ந்து யோசனை செய்பவள் போல வும் நடந்த துரைஸானியம்மாள் தனது தங்கையை நோக்கி, "கோமளவல்லி! பதில் பேசாமல் என்னோடு கூடவே வா; ஏன் ஏன் என்று கேட்காதே; இப்போது அம்மாளுடைய சயன மாளி கையில் ஏதோ ஒரு பெருத்த ரகசியம் வெளியாகப்போகிறது. நாம் இப்படியே பின்புறத்தில் போய் இருந்து என்ன நடக்கிறதென் பதை கவனிப்போம்" என்று கூறவே, அதைக்கேட்ட கோமள வல்லி, பெரிதும் அச்சமும் கவலையும் கொண்டு "அக்கா! வேண் டாம். அம்மாள் கோபித்துக் கொள்வார்கள். அவர்களிடம் ஆயி ரம் ரகசியங்கள் இருக்கும். அதை நாம் ஏன் கவனிக்க வேண்டும்? அவர்கள் இலைபோடுவிக்கச் சொன்னபடி நாம் செய்யாமல் இதெல் லாம் நமக்கென்ன? நம்முடைய அம்மாளின் உத்தரவுக்கு நாம் கீழ்ப்படியாமல், அவர்களுடைய மனதுக்குப் பிடிக்காத காரியத்தை நாம் செய்வது எனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை" என்றாள். "இதனால்தான் நான் உன்னை சுத்தப் பட்டவர்த்தனம் என்று சொல்லுகிறது. அங்கே நடப்பதை பொன்னம்மாள்கூட இருந்து கேட்கப்போகிறாள். நமக்கு மாத்திரம் அது தெரியக் கூடாதோ? நாம்போய் சங்கதி என்னவென்பதை அறிந்துகொண்டு, அம்மாள் புறப்படுவதற்கு முன் போய் இலை போடச் செய்வோம்" என்று மிகவும் பதைபதைப்பாகக் கூறினாள். கோமளவல்லி தாம் செய்ய நினைக்கும் காரியம் அம்மாளின் விஷயத்தில் தாம் பெருத்த தவறு செய்வது போன்றதென்பதை அறிந்தாளானாலும்; அக்காளின் மனம் கோணும்படி தான் நடந்து கொள்ளக் கூடாதென்ற வினை வினால், இருதலைக்கொள்ளி எறும்புபோல, எதையும் துணிந்து செய்யமாட்டாமல் தயங்கினாள். அதைக் கண்ட துரைஸானியம் மாள்; "சரி; நீ மீனமேஷம் பார்த்துக்கொண்டிரு; நீ வரவேண் டாம்; நான் போகிறேன்" என்று கூறிய வண்ணம் விசைவாக நடந்து ஒரு குறுக்கு வழியில் சென்றாள். பேதைமையே நிறை வாக இருந்த கோமளவல்லி, தனிமையில் போஜன மாளிகைக்குப் போக மாட்டாமல், தனது மனதிற்கு விரோதமாக, அக்காளைப்

பின் தொடரலானுள். அவ்வாறு அந்த இளங்குமரிகளிருவரும் விரைவாக நடந்து வேறு வழியாகச் சென்று, கல்யாணியம்மாளது சயன மாளிகையின் பின்புறமாகச் சென்று, அங்கிருந்த தாழ்வாரத்தில் நின்ற படியே, ஒரு ஜன்னலில் தொங்கிய விளாமிச்சம் வேர்த் தட்டியிலிருந்த இடுக்கின் வழியாக உட்புறத்தை நோக்கினர், அந்த ஜன்னல் அந்த மாளிகையின் உட்புறத்தில் ஒரு மூலையிலிருந்தமையால், கல்யாணியம்மாள், தான் அம்பட்டக் கருப்பாயியோடு சம்பாஷிப்பதை தனது புதல்வியராகிலும் பிறர் எவராகிலும் கவனித்து விடுவார்களோ என்ற அச்சத்தினுலும் முன்னெச்சரிக்கையாலும், அந்த ஜன்னலிருந்த மூலையில் போடப்பட்டிருந்த ஒரு ஸோபாவிற்கு வந்து அதன்மேல் உட்கார்ந்திருந்தாள். அவள் அந்த ஜன்னலின் பக்கம் தனது முதுகைத் திருப்பி உட்கார்ந்திருந்தமையால் பின்புறத்தில் தட்டியின் மறைவில் தனது புத்திரிகள் இருந்து தன்னை உற்றுக் கவனிக்கிறுர்கள் என்பதைப்பற்றி அவள் சந்தேகிக்கவும் கூடாமலிருந்தது.

அவ்வாறு புதல்வியர் நின்ற இரண்டு நிமிஷத்திற்குப் பிறகு, பொன்னம்மாள் முன்னும், அம்பட்டக் கருப்பாயி பின்னுமாக கல்யாணியம்மாளிருந்த ஸோபாவிற்கு வந்து அவளுக்கெதிரில் நின்றுர்கள். கருப்பாயியைக் கண்ட கல்யாணியம்மாள் தான் மிகுந்த கோபம் கொண்டிருப்பவள்போல நடித்து, அவளை ஏற இறங்கப் பார்த்து, அவள் யாரென்பதை அறிந்துகொள்ள மாட்டாதவள் போல சந்தேகமான பார்வையாகப் பார்த்து, “யார் நீ? ஓகோ! நீயா! உன்னைப் பார்த்து அநேக வருஷங்களாகின்றன வாகையால், சீக்கிரத்தில் அடையாளம் தெரியவில்லை. அதிருக்கட்டும்; நீ வந்தால் என்னை ஒரு பெருத்த கவர்னர் பெண்டாட்டி வருவதைப்போல மகா ஆடம்பரம் செய்கிறுயே! என்னிடம் பேச வேண்டுமானுல், சரியான சமயம் பார்த்து, என்னுடைய செளகரியத்தை அறிந்து, அதற்கு ஒத்தபடி வருகிறதா! அல்லது, வாசலில் வந்து நின்றுகொண்டு, உடனே உள்ளே வரச்சொல்லா விட்டால், நீயே வந்து விடுவதாக மிரட்டுகிறுயாமே; நீ திருடுவதற்காக வந்தாயென்று சொல்லி உன்னை உடனே போலீசாரிடம் நாங்கள் ஒப்புவித்துவிட்டால் நீ என்ன செய்வாய்? இனிமேல் இம்மாதிரி, மற்றவர் சந்தேகிக்கும்படியாக ஆடம்பரம் செய்யாதே; தெரிகிறதா? அப்படிச் செய்தால், நான்

உனக்குமேல் போக்கிரியாக நடந்து கொள்வேன்" என்று நயமாகவும் அதிகாரமாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட கருப்பாயி மிகவும் புரளியாக, "அடியாத்தே ஒனக்குவார கோவத்தப்பாறேன்! என்ன போலீசுலே வச்சுடுவியோ! எங்கே? கொஞ்சூண்டு வச்சுத்தான் பாரேன்; அப்புறம் ஒன்னே நான் இந்த வங்களாவுலே வச்சுடுவேன்னு பாத்துக்கினியா? அந்த உறும்பலெல்லாம் இஞ்சே உறும்பாதேங்கறேன். ஒன்னோடெ உசிருநெலே யெல்லாம் எங்கிட்ட இருக்குதுங்கறத்தெ மறந்துவிட்டியோ? ஒங்கவூட்டு வாசல்லே வந்து காத்துக்கிட்டுக் கெடக்க, நான் என்ன ஒங்க வூட்டு எச்சிக்கலே திங்கற நாயின்னு ரோசனே பண்ணிக்கிட்டியா! சவாசு! சவாசு! நல்லாச்சொன்னேன்! நான் என்னமோ மின்னெப்பின்னே ரோசனே பண்ணி, நம்ப மனிசியாச்சே; அவளுக்குக் கெடுதவந்துடுமேன்னு இம்புட்டுத்தூரம் ஓடியாந்தா, சுத்தமா நன்னி கெட்டவளாய்ப் பேசிறியே!" என்று நொண நொணவென்று சரமாரியான சொல்லம்புகளை எடுத்துப் பிரயோகம் செய்யத்தொடங்கினாள். அதைக் கேட்ட கல்யாணியம்மாள் தனது கோபத்தையெல்லாம் உடனே விலக்கி, பெட்டிப்பாம்பாக அடங்கிப் புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு "ஏது கருப்பாயிக்கு இன்று இவ்வளவு கோபம் வருகிறது? ஊரிலிருந்து நடந்துவந்த அலுப்புபோலிருக்கிறது. ஒரு வண்டியிலாவது வரக்கூடாதா? அதற்காகும் செலவை நான் கொடுத்திருப்பேனே; அதிருக்கட்டும்; நீ நிற்காதே; உட்கார்ந்துகொள்; அப்புறம் பேசுவோம்" என்று மிகவும் அன்பாக கூறி அவளை உபசரித்தாள். அப்போது பொன்னம்மாள் சிறிதும் சலனமின்றி பேசாமல் பக்கத்தில் நின்றுகொண்டே இருந்தாள். ஆனால் ஜன்னலிற்கு வெளியில் நின்ற இளங்குமரிகளிருவரும் அந்த விபரீதமான சம்பாஷணையைக் கேட்டு, தமது கண்களையும் செவிகளையும் நம்பாமல் அது கனவோ, அல்லது நனவோ என்ற ஐயமும் திகைப்பும் குழப்பமும் அடைந்து, கல்லாகச் சமைந்து நின்றனர். அப்போது கருப்பாயி நின்றபடியே, "ஓ இப்பத்தான் புத்தி தெளிஞ்சிச்சோ; காரியம் ஆவணுமின்னு களுதையோடே காலெயும் புடீன்னு சொல்லுவாங்க; அதப்போலெ நீயும் செய்யிறியே. ஒன்னோடெ வேல ஆவற வரையிலே கெஞ்சாதெல்லாம் கெஞ்சினே; எங்காலெக்கூடப் புடிச்சுக்கினே; இப்ப இன்னடான்னு

என்னெப் பிச்செக்காரியெப்பேலே நெனெச்சு உடாக்கிறே! நேத்து ராத்திரியே ஒம்மவன் செத்திருந்தா இந்நேரம் அம்மா பட்ற பாடு தெரிஞ்சிருக்கும். வங்களா கிங்களா, செமீன் கிமீன் எல்லாம் அடியோடே கோயிந்தான்னுபோயிருக்கும்; இந்தக் கருப்பாயியாலே ஒம்மவன் தப்பினான்" என்றாள்.

அந்த வார்த்தையைக் கேட்டவுடனே கல்யாணியம்மாளது தேகம் பதறியது. அவள் பெரிதும் வியப்பும் திகைப்பும் அடைந் தவளாய், "என் மகனுடைய உயிரையா காப்பாற்றினாய்? எப்போது? அவன் எங்கே வந்தான்? அவனுடைய உயிருக்கு என்ன அபாயம் வந்தது? நீ எப்படிக் காப்பாற்றினாய்? அவன் இப்போது எங்கே இருக்கிறான்? சீக்கிரமாகத் தெரிவி" என்று மிகுந்த ஆவலோடு கேட்க, அம்பட்டக் கருப்பாயி, "எங்க வூட்டுக்குப் பக்கத்துலே ஆலந்தூருப் பாட்டே மேலே ஒரு வங்களா இருக்குது. அதுலே ஒரு நாடவக்காரப் பொண்ணு இருக்கறா. ஒம்மவனுக்கு அவமேலே பிரியமாங்காட்டியும். அவன் என்னு சேஞ்சான். நேத்துப் பகல்லே அவன் வேவற வெய்யில்லே ஊரெல்லாம் திரிஞ்சுப்புட்டு, வேத்து விருவிருத்து எங்க வூட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் இன்னான்னு எனக்கு அப்ப தெரியல்லே. நீ யாரப்பா? எங்கனே வந்தேன்னு கேட்டேன். அவன் அந்த நாடவக்காரி யெப்பத்தின சங்கதியெல்லாம் அறிஞ்சு சொன்னு எனக்கு எனும் தாறென்று சொன்னான்; தான் ஒரு செமீந்தாரு வீட்டுப் புள்ளே இன்னும் சொன்னான். சரி, அப்படியே ஆவட்டும்; சாயந்தரம் வாடாப்பா இன்னு நான் சொல்லியனுப்பினேன். அந்த மாதிரியே பையன் நேத்து ராத்திரி எங்க வூட்டுக்கு வந்து சேர்ந்தான். அப்பவும் அவன் யாருன்னு எனக்குத் தெரியலே. அந்த வங்களாவுலே வாசப் பெருக்கறவளே எனக்குத் தெரியும்; அவளெக் கேட்டுப் பார்க்கலாம்; இஞ்செயே படுத்திருன்னு சொல்லிப்புட்டு நான் போயித்தேன். பையன் காதுலே வைரக் கடுக்கன், வெரலெல்லாம் வைர மோதரம், கையிலே நாலாயிரம் அஞ்சாயிரம்ரூபா நோட்டு எல்லாம் வைத்திருந் தானுங்காட்டியும்; அவன் அலஞ்சி திரிஞ்ச காலத்துலே அதை ஆரோ எப்பிடியோ பாத்துப்புட்டாங்கபேலே இருக்குது; நான் ராத்திரி 12-மணிக்கு வூட்டுக்கு வந்து பார்க்கறேன் நாலஞ்சு திரு டரு எங்க வூட்டே வளச்சுக்கினுங்க; எல்லாரெங்காட்டியும் பெரிய

திருடன் கத்தியெ உருவி கையிலே புடிச்சுக்கினு ஒரே வெட்டா வெட்டறதூன்னு உள்ளற நொளஞ்சுட்டான். நானும் துணிஞ்சு உள்ளற நொளஞ்சி அந்தத் திருடனெக் கெஞ்சாதெல்லாம் கெஞ்சி, பையனெ தொடவாணுமுன்னு அவனோடே காலெக் கெட்டியாய்ப் புடிச்சுக்கினு, அவனெ மொள்ள வெளியே இட்டாந்து எங்க ஊட்டுக்குப் பக்கத்துலே தென்னந்தோப்புலே நிறுத்திக்கினு "பையனெ வெட்ட வாணும்; அவங்கிட்ட இருக்கிற சொத்தெயெல்லாம் வாங்கித் தந்துட்றேன்" இன்னு கெஞ்சாதெல்லாம் கெஞ்ச, அவன் சரிதான்னு ஒப்பிக்கினன். உடனே நான் உள்ளற நொளஞ்சு பார்க்கறேன்; பையனெக் காணும். அவன் எப்படியோ தப்பிச்சு மாயமா மறஞ்சு ஓடிப்புட்டான். எனக்கு நடுக்கம் எடுத்துக்கிச்சு; ஒடனே வூடுமுளுதும் தேடிப்பாத்தா, பையன் ஓடியே பூட்டான். ஒடனே அந்தத் திருடன் என்ன சேஞ்சான்? எங்கிட்ட வந்து என்னோடெ கொரவளெயெக் கெட்டியா புடிச்சுகினன். "ஒன்னோடே கைவரிசெயெ எங்கிட்டவா காட்டறே? இப்ப பையனெக் கொண்டாறியா இல்லாமெப்போனா ஒரே வெட்டுலே ஒன்னோடே ஊட்டியே அறுத்துப்புடுவேன். அந்தப் பையனெ இதோடெ உட்டுடுவேன்னு ரோசனெ பண்ணுதே. அவன் மாரமங்கலம் செமீந்தாருவூட்டுப் பையன். இன்னக்கி இல்லாமெப் போனாலும், நாளெக்குள்ளற அவனெக் கண்டு புடிச்சி அவன் இன்னெக்கி ஏமாத்தின சொத்தெப் புடுங்கிக்கினு அவ்வனெ ஆடறுக்கறாப்பலே அறுத்துப் போட்டுட்றேன்" இன்னு பயமுறுத்தினன். அந்தப் பையன் ஒன்னோடெ மவனின்னு சொன்ன ஒடனே எனக்கு நடுக்கம் உண்டாயிடிச்சு; ஏன்னுன்னா? அந்தத் திருடன் மொரட்டு ராக்கசன். அவன் மனசு வச்சான்னா, இந்திரன் சந்தரனாயிருந்தாலும், கொன்னே போட்டுடுவான். அன்னியாயமா அவன் ஒம்மவனே கொன்னு போட்டுட்டான்னா, அப்பறம் ஒனக்கு ஒண்ணுமில்லாமெ பூடுமேன்னு எனக்குபயம் வந்திடுச்சு; ஒடனே என்னா செஞ்சேன் தெரியுமா? அவன் காலுலே வுளுந்து கெட்டியாப்புடிச்சுக்கினு "அப்பா! ஒனக்கு எம்பிட்டுப் பணம் ஒணுமானாலும் சொல்லு; நாளெ ராத்திரி அவுங்க அம்மாக் கிட்டப்போயி வாங்கியாந்து தாறேன். நீ இன்னமே அந்த பையனுக் கிட்டப் போவாதே" இன்னு கெஞ்சா தெல்லாம் கெஞ்ச, அவன் ஆறாயிரம் ரூவா நாளெ சாயந்தரம் கொண்டாந்து வைக்காமெப் போனா, என்னெயும் ஒம்மவனெயும் கொன்னுப்புடுவேனுன்று

சொல்லி, அவுங்க கொலெ தெய்வத்துமேலே ஆணெ வச்சுப்புட்டுப் போயிருக்கருன். அதுக்காவத்தான் நான் வந்தேன். இன்னெக்கிப் பகலு நேரத்துலே வந்தா ஆராச்சும் என்னமாச்சும் நெனெச்சுகு வாங்கன்னு, இப்ப இருட்டுலே வந்தேன். நாளெ சாயந்தரம் நான் அவங்கிட்டப் பணத்தெச் சேக்கணும்; இல்லாமெப்போனு நானும் ஒளிஞ்சேன்; ஒம்மவனேயும் நீ அப்பாலெ பாக்கமுடியாது. ஒனக்குப் பிரியமானு பணங்குடு; இல்லாமெப்போன அதெயும் சொல்லிப் புடு; நான் போறேன்" என்ருள்.

அந்தவரலாற்றைக்கேட்ட கல்யாணியம்மாள் வியப்பும் திகைப்பும் விசனமும் கொண்டவளாய் என்ன செய்வதென்பதை உணராமல் கீழே குனிந்து இரண்டொரு நிமிஷநேரம் சிந்தனை செய்த பின்னர் நிமிர்ந்து, "நீ சொல்வதெல்லாம் சரிதான். இப்போது என்னுடைய பையன் எங்கே இருக்கிருன்?" என்றாள். உடனே கருப்பாயி வியப்படைந்து "அவன் இஞ்சே இன்னம் வரலியா? நேத்துராத்திரி எங்க வூட்டிலிருந்து தப்பிச்சு ஓடியாந்தவனெ நான் அப்பாலெபாக்கவே இல்லே. அவன் இஞ்சே வந்திருப்பானல்ல நெனெச்சேன்." என்ருள். கல்யாணியம்மாள் பெரிதும் கவலைகொண்டு, நேற்று சாயுங்காலம் போன பையன் இன்னமும் பங்களாவுக்கே வரவில்லையே! அவன் எங்கே போயிருப்பான்? ஒருவேளை அந்தத் திருடர், அதற்குப் பிறகு, அவனைக் கண்டுபிடித்து ஏதாகிலும் தொந்தரவு செய்திருப்பார்களோ என்னவோ தெரியவில்லையே!" என்று கூறினுள். அதைக் கேட்ட கருப்பாயி, "அப்பிடி இருக்காது; அந்தத் திருடன் பணத்துக்கு ஆசெப்பட்டவன். நான் பணம் குடுக்கறேனுன்னு சொல்லியிருக்கச்சே, பையனெ என்னுத்துக்கு அவன் தொந்தரை செய்யருன். பையன் வேறே எந்தத் தேவிடியா வூட்டுலே படுத்துக் கெடக்கிருனே; அவனுக்கே சலிச்சுப்போனு, இன்னக்கி ராத்திரியாச்சும் காலமேயாச்சும் வந்துற மாட்டானு, அப்பிடியானு, நீ பணங்குடுக்க மாட்டியா? எனக்கு நேரமாவுது. நான் அவசரமாப் போவணும். நொம்ப அவசரம்" என்று நெருப்பின் மேல் நிற்பவள்போல மிகவும் தவிப்பாகக் கூறினுள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் மிகவும் சலிப்பாக, "ஆகா! நமக்கு நல்லபிள்ளை வந்து வாய்த்தான்! அணிப்பிள்ளை தென்னம்

பிள்ளே! அவனல் இன்னும் என்னென்ன மானக்கேடு வரப்போகிறதோ தெரியவில்லேயே! ஊரிலிருக்கும் பிள்ளே யெல்லாம் அன்னியப்பெண்பிள்ளே கையைப் பிடித்து இழுத்தாலும், அதற்கு இணங்காமல் பயந்து ஓடுகிறது. நம்முடைய பிள்ளே எந்த எலிப்பாழியில் எந்தத் தேவடியாள் ஒளிந்து கொண்டிருக்கிருள் என்று அலேந்து திண்டாடி எல்லோரையும் சந்தியில் இழுத்துவிடுகிறது. இதெல்லாம் என்னுடைய தலே யெழுத்து" என்று மிகுந்த வெறுப்போடும் விசனத்தோடும் தனக்குத்தானே வெளிப்படையாகக் கூறியவண்ணம் மெதுவாக எழுந்து, அருகிலிருந்த இரும்புப் பெட்டியண்டை போய் அதன் கதவைத் திறந்து ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக ஆறு நோட்டுகளே எடுத்துவந்து, கருப்பாயிடம் கொடுத்து, "இந்தா இதோ இருக்கிறது ஆருயிரம் ரூபாய்; எடுத்துக்கொண்டு போய்க் கொடு. அவன் பையனுக்கு எப்படிப்பட்ட துன்பமும் செய்யாமல் பார்த்துக்கொள். நீ என்னேடு பழகிய பழைய மனுஷியாயிற்றே யென்று உன்னுடைய சொல்லே நிஜமென்று நம்பி நான் இவ்வளவு பெருத்த தொகையை உடனே கொடுக்கிறேன். நீ பொய் சொல்லி இதை என்னிடத்திலிருந்து அபகரித்துக் கொண்டுபோனதாக பின்னல் எனக்கு சங்கதி தெரியுமானல், நான் உன்னே லேசில் விடமாட்டேன்; அந்தத் திருடனுக்கு நானே இன்னம் எவ்வளவு பெருத்த பணத்தொகை வேண்டுமானலும் கொடுத்து உன்னே சித்திர வதை செய்து உயிரோடே புதைத்துவிடச் சொல்லுவேன். நான் முட்டாளென்றும் என்னே இப்படி அடிக்கடி ஏமாற்றலாமென்றும் நினேத்துக்கொள்ளாதே; சரி; நோட்டை எண்ணிக்கொண்டாயா? ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாய் நோட்டு; ஆறு நோட்டு இருக்கிறது. வேறே யாராவது பார்க்கப்போகிருர்கள்; நீயும் அவசரமாகப் போக வேண்டுமென்கிருய்; நீபோய்விட்டு இன்னெருசமயம்வா" என்ருள்.

அவளால் கொடுக்கப்பட்ட நோட்டுகளே வாங்கி மடித்து தனது சேலேத்தலேப்பில் முடிந்துகொண்ட கருப்பாயி, "பையனேக் காப்பாத்தணுமின்னுதானே நான் இப்பிட்டுத் தூரம் ஓடியாந்தேன்; எனக்கு அதுலே கவலே இருக்காதா. தெரியாதவளுக்குச் சொல்லுருப்பல ஆயிரம்தரம் எனக்குச் சொல்லணுமா! சரி; எனக்கு நேரமாவது; நான் போயித்துவாறேன்; இன்னமேயாச்சும், நான் வந்தா ஒன்னேடெ அதியாரத்தெயெல்லாம் காட்டாதே" என்று சொல்லிக்

கொண்டே வாசற்படியை நோக்கி நடக்க, பொன்னம்மாளும் அவனைத் தொடர்ந்து சென்றாள்.

தான் அதிகமாகத் தாமதித்தால், தனது புதல்வியர் சந்தேகம் கொள்ளுவார்களென்று அஞ்சிய கல்யாணியம்மாள் உடனே எழுந்து தனது அந்தப்புரத்தைவிட்டு வெளியில்வந்து போஜன மாளிகையை நோக்கி விசையாக நடக்கலானாள். ஜன்னலின் வெளிப்புறத்தில் தட்டியின் மறைவில் நின்றவண்ணம், உள்புறத்தில் நிகழ்ந்த சம்பவத்தையும் சம்பாஷணையையும் முற்றிலும் நன்றாகக் கவனித்திருந்த இளநங்கையரிருவரும் தங்களது தாய்க்குமுன் தாங்கள் போஜன மாளிகைக்குப் போய்விட வேண்டுமென்னும் நினைவைக் கொண்டவர்களாய், குறுக்கு வழியாக ஓட்டமாக ஓடி, மூவருக்கும் இலைகள் போடச்செய்து, ஒன்றையும் அறியாத பேதைப் பெண்கள்போல இருந்து தங்களது தாயின் வருகையை எதிர்பார்த்தனர். அதன் பிறகு இரண்டு நிமிஷநேரத்தில் கல்யாணியம்மாள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தாள். சயன மாளிகையில் சிறிது நேரத்திற்கு முன்னர் நடந்த அசங்கியமான சம்பவத்தைப்பற்றிய நினைவினால் அவளது மனம் பெரிதும் துன்புற்றிருந்ததெனினும், அவள் தனது துன்பத்தையும் கவலையையும் வெளியில் காட்டாமல் அடக்கிக்கொண்டு போஜன மாளிகையை அடைந்தாள். அவள் தனது முகத்தோற்றத்தை மாறுபடுத்திக் கொண்டாளாயினும், தனது புத்திரனைப்பற்றிய கவலை மிக உரமாக எழுந்து மனத்தை வதைத்தமையால், அவளது நினைவு முழுதும் வேறிடத்தில் சென்றிருந்தது. தான் மதனகோபாலனை நன்றாகத் தண்டித்ததுபற்றியும், கண்மணியம்மாளைத் தண்டிக்கப்போவது பற்றியும் தான் அடைந்திருந்த பெருங்களிப்பும் குதூகலமும் நீடித்து நிற்காதபடி செய்து, தனது புத்திரனது சம்பவம் துன்பத்தை யுண்டாக்கி விட்டதையும், தனது மூத்த குமாரி தனது ரகசியங்களையெல்லாம் நுட்பமாக அறிந்து தன்னை ஜாடை ஜாடையாக இடித்திடித்துப் பேசுவதையும் நினைக்க நினைக்க அவளது மனம் பெரிதும் சஞ்சலமுற்றுத் தளர்வடைந்ததன்றி, தனது மூத்த புத்திரியாலும், புத்திரனாலும் இனி தனது வாழ்நாள் முழுதும் துன்பங்களுக்கு இலக்காகிக் கசந்துபோகுமென்பது நிச்சயமாகப்பட்டது. அவள் மைனரது துர்க்குணத்தை நினைக்க நினைக்க, மதனகோபாலனது நற்குணமும், நன்னடத்தையும் அவளது மனதில் தோன்றி, அவ

ளது கோபம், துயரம், வயிற்றெரிச்சல் முதலியவற்றை அதிகரிக்கச் செய்தன. மதனகோபாலனது விஷயத்தில், அக்கிரமமான கொடுமை செய்துவிட்டோமே என்ற எண்ணம் அவளது மனதில் அடிக்கடி தோன்றிமறைந்து நெஞ்சை அறுத்துக்கொண்டே இருந்தது. அதற்காகத் தன்னை தண்டிக்கும் பொருட்டே ஈசுவரன் தனது புத்திரன் மூலமாக இழிவையும் துன்பங்களையும் உண்டாக்கிஞனே என்ற அச்சமும் கழிவிரக்கமும் கொண்டவளாய், அவள் போஜனத்தை அதிகமாக நாடாமல் உள்ளூற வருந்தியவளாய், வெளி வேஷமாக இலைக்கருகில் உட்கார்ந்துக்கொள்ள, இரண்டு செல்வியரும் அவ்வாறே தத்தம் இலைகளுக்கருகில் உட்கார்ந்து கொண்டனர். தாயும் பெண்களும் ஒருவரோடொருவர் வாய்திறந்து பேசாமல் மௌனம் சாதித்தவர்களாயிருக்க, சிறிது தூரத்தில் ஆயத்தமாக நின்றுகொண்டிருந்த சமயற்காரி பக்குவ பதார்த்தங்களையும் அன்னத்தையும் ஒன்றன்பின் ஒன்ருக எடுத்து வந்து பரிமாறத் தொடங்கிஞள். அந்த மூன்று சீமாட்டிகளும், அதற்கு முன் போஜனம் செய்யுங்காலங்களில், சந்தோஷமாகவும் வேடிக்கையாகவும் சம்பாஷித்தவண்ணம் உட்கார்ந்து போஜனம் செய்துவிட்டுப் போவது வழக்கமாதலால், அதற்கு மாருக அன்றையதினம் ஒருவரும் வாய்திறவாமலும் கவலையில் ஆழ்ந்துபோயும் இருந்ததைக் காண, சமயற்காரிக்கு அது விபரீதமான காட்சியாகக் காணப்பட்டதஞல், அன்றையதினம் ஏதேனும் துன்பகரமான சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டுமென்று அவள் யூகித்துக்கொண்டு, மிகுந்த பயபக்தி அடக்க வொடுக்கத்தோடு மிகவும் சுருசுருப்பாகவும் ஜாக்கிரதையாகவும் பரிமாறிஞள். கல்யாணியம்மாள் வெளியுலகத்தை அடியோடு மறந்து, தனது மனமாகிய வேறு உலகத்தின் பாரதப் போரில் ஆழ்ந்து மெய்ம்மறந்தவளாய், முன்னது பின்னது பாராமல், கையிலகப்பட்டதை எடுத்து உண்ணத் தொடங்கிஞள். அவ்வாறு அவள் ஒருகவளம் சாப்பாட்டை எடுத்து வாயில் வைக்குமுன் அந்தக் கூடத்தில் சிறிது தூரத்திற்கப்பாலிருந்த வாசற்படியின் வழியாக திடீரென்று தோன்றிய பொன்னம்மாள் சனியன் போல மறுபடியும் அவளுக்கெதிரில் வந்து நிற்க, அடுத்த நிமிஷம் வக்கீல் சிவஞான முதலியார் வாசற்படிக்கப்பா லிருந்தவண்ணம் தமது பாதி உடம்பை காட்டி உட்புறத்தில் எட்டிப்பார்த்து, “ஓகோ! போஜன சமயம்போ லிருக்கிறது” என்று வற்புறுத்தி

வருவித்த புன்சிரிப்போடு கூறினர். உடனே பொன்னம்மாள் கல்யாணியம்மாளைப் பார்த்து, "வக்கீலையா வந்திருக்காங்க சாப்பாட்டுவேளை; நாக்காலிலே குந்தியிருங்க இன்னு சொன்னேன். குந்த நேரமில்லெ. அவசரமாக ஒரு பேச்சிப் பேசிப்புட்டுப் போவணுமின்னு சொன்னாரு. இஞ்சேயே இட்டாந்தேன்" என்று அவரது எதிர்பாராத வருகைக்கு முகவுரை கூறினாள்.

அந்த இருவரது வருகையும், அவர்களது வாக்கியங்களும், தூங்குவோரைப்போ லிருந்த அந்த மூன்று சீமாட்டிகளையும் தட்டியெழுப்பின. உடனே மூவரும் திடுக்கிட்டு நிமிர்ந்து, தாங்கள் போஜனம் செய்கையில் சிவஞான முதலியார் வந்ததினால் மிகுந்த லஜ்ஜையடைந்து சிறிது தத்தளிக்க, அவர்களுள் கல்யாணியம்மாள் அவரை நோக்கி வாருங்கள்; வாருங்கள். உங்களுடைய ஜாகையிலிருந்து புறப்பட்டவுடனே நான் சோமநாதபுரத்தாருடைய பங்களாவுக்குப் போய் நேராக வந்து இப்போதுதான் இலையில் உட்கார்ந்தேன்; இதோ ஆகிவிட்டது. அடீ பொன்னம்மா! சீக்கிரமாகப் போய் ஒரு நாற்காலி கொணர்ந்து போடு; ஐயா இப்படியே உட்கார்ந்துகொள்ளட்டும்." என்றாள்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார், "இருக்கட்டும், இருக்கட்டும். நீங்கள் சாப்பிடுங்கள். எனக்கு நாற்காலி வேண்டாம்; நான் வாசற்படிக்கு அப்புறத்தில் நின்றுகொண்டிருக்கிறேன், நீங்கள் சீக்கிரமாக சாப்பிட்டுவிட்டு வாருங்கள். எனக்காக அவசரப்பட்டு, சாப்பாட்டை குறைத்துவிட வேண்டாம்." என்று மிகுந்த கிலேசத்தோடு கூறியவண்ணம் வாசற்படியை நோக்கி இரண்டோரடி நடந்தாராலும், அவர்களது சரீரமும் முகஜாடையும் பதை பதைத்து மிகுந்த அவசரத்தைக் காட்டின.

அவரது நிலைமையைக் கண்ட கல்யாணியம்மாள், அதன் காரணம் என்னவென்பதை யூகித்துக்கொள்ள மாட்டாமல், மிகுந்த திகில் கொண்டவளாய்ப் பெரிது பெரிதாக இரண்டு மூன்று கவளங்களை எடுத்து உள்ளே செலுத்த முயல, அது உள்ளே நுழையமாட்டாமையால், அவளது விழி பிதுங்குவதுபோல ஆகிவிட்டது; விக்கல் எடுத்தது; அவள் தனது வாயில் போட்ட கவளத்தைக் கீழே உமிழ்ந்து விட்டுத் தண்ணீரருந்தினாள். தான் அரை நாழிகைக்கு முன் அவரது ஜாகைக்குப் போய்வந்திருக்க, அவர் அதற்குள் அவசரமாக வந்ததிலிருந்தும், என்றைக்குமில்லாமல் அன்றையு

தினம் அவர் போஜன மாளிகைக்கே வந்ததும் அவளது மனதில் பெருத்த வியப்பையும், திகைப்பையும் உண்டாக்கியதன்றி, தனக்கு ஏதோ பெருத்த துன்பம் வந்திருப்பதுபற்றி அவர் அவ்வளவு தூரம் பதைக்கிருரென்ற நினைவும் அச்சமும் தோன்றின ; அதற்கு மேல், அவளுக்கு சாப்பாட்டிலேயே புத்தி செல்லவில்லை. அவள் உடனே தனது கையை உதரிவிட்டு, "சரி; எனக்குப் போதும் ; நான் முன்னுல் போகிறேன் ; நீங்கள் சரியாக சாப்பிட்டுவிட்டு நிதானமாக வாருங்கள்" என்று கூறியவண்ணம் எழுந்து பக்கத்திலிருந்த முற்றத்தில் கையலம்பிக் கொண்டாள். அதைக்கண்ட சிவஞான முதலியார், "அடாடா ! உங்களுடைய சாப்பாட்டுக்கு சத்துருவாக நான் வந்து சேர்ந்தேன். நீங்கள் இன்னும் ஐந்து நிமிஷநேரம் இருந்து சாப்பிட்டு வருவதற்குள், தலைபோய்விடாது" என்று அவளுக்கு உபசார வார்த்தை சொல்ல, கல்யாணியம்மாள், "இல்லை இல்லை ; நான் சாப்பிட்டாகிவிட்டது ; போதும்" என்று கூறியவண்ணம்; அவரிருந்த இடத்திற்கு வந்தாள். அவள் அப்போதே போஜனத்திற்கு ஆரம்பித்தாளென்பதும், அவள் ஒரு கவளமேனும் உண்ணவில்லை யென்பதும், அவருக்கு நன்ருகத் தெரிந்தனவாதலால், அவர் அதைப்பற்றி இரக்கங் கொண்டாராலும், இரண்டொரு உபசார வார்த்தைகளோடு நிறுத்திவிட்டு, "சரி ; எழுந்துவிட்டீர்கள்; இனிமேல் நான் எவ்வளவு தூரம் சொன்னுலும் நீங்கள் மறுபடியும் உட்கார்ந்து சாப்பிடப் போகிறதில்லை. உங்களிடம் அவசரமான ஒரு சங்கதியைப்பற்றிப் பேசவேண்டும்; உங்களுடைய அந்தப்புரத்துக்கே போய்விடுவோமா ?" என்ருர். கல்யாணியம்மாள், "சரி ; போவோம்" என்று மறுமொழி கூறிய வண்ணம் மிகவும் சுருசுருப்பாகவும் விசையாகவும் அவருக்கு முன்னுல் நடக்கலாஞள். அவளது மனமோ அதிவேகமாக எங்கேயோ பறந்து சென்று எண்ணுததை யெல்லாம் எண்ணித் தவித்தது, அவர் தன்னை அவ்வளவுதூரம் அவசரப்படுத்தும் படியாக நேரக்கூடிய விபரீதமான சம்பவம் என்னவிருக்கப் போகிறது என்று நினைத்து நினைத்து அவள் பலவித யூகங்கள் செய்து செய்து பார்க்கிருள். எதுவும் நிச்சயமாக விளங்கவில்லை. குற்றமுள்ள மனது குறுகுறுக்கு மென்றபடி, அன்று மதனகோபாலனது விஷயத்தில் தான் செய்த தவறுகளிலிருந்து தனக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்திருக்குமோ வென்றும், தான் முதல் நாள்

அவனை ஆலிங்கனம் செய்துகொள்ள முயன்றதைப்பற்றி அவன் தன் மீது அவதூறான செய்தி பலரிடம் வெளியிட, அது அப்போதே சிவஞான முதலியாருக்கு எட்ட, அவர் அதன்பொருட்டு வந்திருப்பாரோ என்று அவளது சந்தேகம் முழுதும் மதனகோபாலன்மீதே சென்றது. அன்று அவள் மீனாக்ஷியம்மாளோடு பல இடங்களுக்குச் சென்று மதனகோபாலனைப்பற்றிய கட்டுக்கதையைக் கூறிய பின்னர் போஷகர்களது வீடுகளுக்குச் சென்றவள், அவர்களிடத்தில் நிச்சய தாம்பூலத்தைப்பற்றி மாத்திரம் தெரிவித்து, அவர்களது சம்மதியைப் பெற்றுவந்தாளே யன்றி மதனகோபாலனைப்பற்றி அவர்களிடம் எந்த விஷயமும் சொல்வது அநாவசியமென்று நினைத்து வந்துவிட்டாள். மற்றவர்களிடம் தெரிவித்ததுபோல அவர்களிடமும் முன் ஜாக்கிரதையாக அந்த விஷயத்தைச் சொல்லி வைக்காமல் வந்ததைப்பற்றி அவள் தனது மூடமதியை இகழ்ந்துகொண்டாள். சிவஞான முதலியார் மதனகோபாலனது விஷயத்தைக் கேட்பாரோ என்ற நினைவினால் அவளது உடம்பு அவமானத்தினாலும் வெட்கத்தினாலும் அப்போதே குன்றியதன்றி, அவளது மனோதைரியமும், எடுப்பான சொல்லும் ஒடுங்கிப்போய், முற்றிலும் தளர்வும், நடுக்கமும், ஆவலும், கவலையும், அச்சமும் உண்டாயின. அந்த நிலைமையில், அவள் அவரை அழைத்துக்கொண்டு தனது அந்தப்புரத்தை யடைந்து, ஒரு ஸோபாவில் உட்கார்ந்துகொள்ளும்படி, அவரை உபசரிக்க, அவர் அப்படியே உட்கார்ந்துகொள்ள, அவரது வாயிலிருந்து என்னவிதமான செய்தி வரப்போகிறதோ என்ற பெருத்த ஆவலோடும் பீதியோடும் அவரது முகத்தில் வைத்த தனது விழியை வாங்காமல் உற்றுநோக்கி, "விசேஷம் என்ன? சீக்கிரம் சொல்லும். அது இன்னதென்பது தெரியாமையால், என் மனம் நிரம்பவும் பாடுபடுகிறது" என்றாள்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார் தமது சட்டைப்பையிலிருந்த சுதேசமித்திரன் பத்திரிகை யொன்றை எடுத்தவண்ணம் அவளை நோக்கி, "இது இன்றைய சுதேசமித்திரன் பத்திரிகை; நீங்கள் என்னுடைய ஜாகைக்கு வந்திருந்தபோதே இந்தப்பத்திரிகை வந்திருந்தது. ஆனால் நான் இதை அப்போது பிரித்துப் பார்க்காமல் வைத்திருந்தேன். நீங்கள் புறப்பட்டு வந்த பிறகு போஜனத்தை முடித்துக்கொண்டு தாம்பூலம் போட்டுக்கொண்டு இதைப் பிரித்துப் பார்த்தேன். இதில் ஒரு விபரீதமான சங்கதி வந்திருக்கிறது; இது

நமக்கு சம்பந்தப்பட்ட விஷயமென்பது நிச்சயமாகத் தெரிவதால் இதை உங்களிடம் காட்டி இதற்குத் தக்கபடி முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஓடிவந்தேன். இதோ இந்த விஷயத்தைப் படியுங்கள்" என்று கூறியவண்ணம் அந்தப் பத்திரிகையைப் பிரித்து நீதிஸ்தலம் என்ற தலைப்பின் கீழிருந்த ஒரு பாகத்தை மடக்கியபடி அவளிடம் நீட்ட, அவள் நெருப்பின்மே லிருப்பவள்போலப் பதறிய வண்ணம், "நீங்களே படியுங்கள்; என்னிடம் கொடுப்பதேன்" என்று கூறினாள். அவளது உடம்பும், கைகளும், கால்களும் அப்போது கட்டுக்கடங்காமல் வெடவெடவென்று நடுங்கின. அச்சத்தினால் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் வியர்வை குபீரென்று பொங்கி யெழுந்தது. அவளது சொல்லைக்கேட்ட சிவஞானம் முதலியார் உடனே அதை விளக்கிற்கருகில் பிடித்துக்கொண்டு அடியில் வருமாறு படிக்கலானார்:--

# பெருத்த கூட்டுக் கொள்ளை!

## மூன்று படுகொலைகள்

### திருடர்களுள் ஒருவன் பிடிபட்டான்

ஆலந்தூருக் கருகில், ராஜபாட்டையின்மேலுள்ள மோகன விலாஸ் என்ற பங்களாவில் நேற்றிரவு மூன்று மணிக்கு ஒரு பெருத்த பயங்கரமான கூட்டுக் கொள்ளை நடந்ததாம். அவ்விடத்தில் பாலாம்பாள் என்ற ஓர் அழகிய பெண் இருந்து வருகிறாள். மைசூரிலிருந்து வந்துள்ள பாலிகா மனமோகன நாடகக் கம்பெனியிலுள்ள முக்கியமான பெண் வேஷக்காரிகளுள் அவள் ஒருத்தியாம். அவளது அழகையும் திறமையையும் கண்டு மோகித்து, அவளை அடையமாட்டமல் ஆயிரக்கணக்கில் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகள் மதிமயங்கி அலைகிறார்களாம். அவர்களுள் ஒருவனான யௌவனப் புருஷன் ஒருவன் சென்ற இரண்டு தினங்களாக அந்த பங்களாவுக் கருகில் காத்திருந்து அவளிடம் தனது ஆசையை வெளியிட, அவள் அதற்கு இணங்கவில்லையாம். அதனால் அவள்மீது கோபங்கொண்ட பையன் அவளை பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு போகும் கருத்தோடு சுமார் பத்து ஆள்களுடன் அவளது பங்களாவில் நுழைந்தானாம். அங்கே கூச்சலிட்ட மூன்று வேலைக்காரிகளை ஸ்மரணை தப்பிப்போகும்படி அடித்துப் போட்டு விட்டு, பாலாம்பாளிருந்த மேன்மாடத்திற்குள் போய் சுமார் ஐம்

பதினாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஆடையாபரணங்களை அபகரித்துக்கொண்டு, அவளை பலவந்தமாகத் தூக்குமுன், அவளால் டெலிபோன் மூலமாக அனுப்பப்பட்ட செய்தியைக் கேட்ட ஆலந்தூர் போலீஸார் மோட்டாரில் சென்று உள்ளே நுழைய, திருடர்கள் எல்லோரும் தப்பியோடி விட்டனர். அவர்களை அழைத்து வந்த யௌவனப் புருஷன் மாத்திரம் ஓடமாட்டாமல் படுக்கையின் கீழே ஒளிந்துகொள்ள, அவனை போலீஸார் எவ்வளவு வற்புறுத்தியும், அவன் தனது பெயரையும், தான் யாவனென்பதையும் சொல்ல மாட்டேனென்கிறான். தான் அன்றிரவு இரண்டு மணிக்குத்தான் அந்த பங்களாவுக்குள் நுழைந்து அவளோடு சிநேகம் செய்து கொண்டதாக அவன் தாறுமாறாகப் பேசுகிறான். அவள் தான் மாத்திரம் தனிமையிலிருந்ததாகச் சொல்லிவிட்டு மூன்று மணிக்கு ஸ்மரணை தப்பிப் படுத்தவள் இன்னமும் எழுந்திருக்கவில்லை; டாக்டருடைய பார்வையில் இருந்து வருகிறாள். அந்த யௌவனப் புருஷனுக்கு வயது இருபதிற்குமேலிராது; அவன் குள்ளமாகவும் கருப்பாகவும் மெலிந்தும் காணப்படுகிறான். முதுகு சிறிது கூனலாக இருக்கிறது. தலைமயிர் கிராப் செய்யப்பட்டிருக்கிறது. அவனுடைய மார்பில் மாம்பிஞ்சு போன்ற வடிவமுள்ள ஒரு மச்சம் இருக்கிறது. தேனாம்பேட்டையிலுள்ள பங்களாக்களில் அவனை எங்கேயோ பார்த்திருப்பதாக சில போலீஸ் ஜெவான்கள் சொல்லுகிறார்கள். அவன் தேனாம்பேட்டையிலுள்ள யாரோ ஒரு ஜெமீந்தாரது வீட்டுப் பையன் என்று போலீஸார் சந்தேகித்து பல விடங்களிலும் விசாரித்து வருகிறார்கள். பாலாம்பாள் வாய் பேசும்படியான நிலைமைக்கு வந்தபிறகு, போலீஸார் அவளிடம் சரியான வாக்குமூலம் வாங்கப் போகிறார்கள்.

—என்று எழுதப்பட்டிருந்த செய்தியை சிவஞான முதலியார் தணிவான குரலில் தெளிவாக வாசிக்க, அதைக்கேட்ட கல்யாணியம்மாளது நிலை கலங்கியது. மூளை குழம்பியது. குலை நடுங்கியது. கை கால்கள் வெடவெடவென்று ஆடியது. அந்தச் சயன மாளிகையும் அதற்குள்ளிருந்த பொருட்களும் சுழன்று ஆகாயத்தில் கிளம்புவனபோலத் தோன்றின. அது கனவோ நினைவோவென்று சந்தேகித்து அவள் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். வாய் குழறியது; தேகம் பதறியது; வெட்கமும் துக்கமும் பொங்கி வளைத்து அவளது

எண்சாண் உடம்பையும் ஒரு சாணுகச் சுருக்கின. அவ்வாறு அவள் உணர்வு தடுமாறியிருந்தபோது, சிவஞான முதலியார், "என்ன அம்மா ! படித்ததை கவனித்தீர்களா ? இதில் குறித்திருக்கும் யௌவனப் புருஷன் யாரென்பதை நீங்கள் சொல்லக்கூடுமா ?" என்று கேட்க, அதற்குள் சிறிது தெளிவடைந்த கல்யாணியம்மாள், "இதில் சந்தேகம் என்ன இருக்கிறது ! நம்முடைய குலத்தைக் கெடுக்கவந்த கோடாறிக்காம்புதான் மாட்டிக்கொண் டிருக்கிறுன். இதில் எழுதப் பட்டிருக்கிறபடி அவன் செய்யக்கூடியவன்தான். சந்தேகமில்லை. அடாடா! ஈசுவரன் எனக்கென்று எப்பேர்ப்பட்ட பிள்ளையைப் படைப்பித்தான் பார்த்தீர்களா! இவனுல், நமக்கு ஏதேனும் பெருத்த துன்பமும் மானஹானியும் நேருமென்று நான் நிரம்ப காலமாக நினைத்திருந்தேன். அந்த நினைவு இன்றைக்குப் பலித்தது ! அவன் சுகப்பட வேண்டுமென்று நாம் நாளையதினம் நிச்சயதாம்பூலம் மாற்ற நினைத்ததென்ன ! அவனுடைய துரதிஷ்டமென்ன! கண்மணியம்மாள் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய பெண்ணு ! மகா லக்ஷ்மி என்பதும் அவளுக்குத் தகும். அப்பேர்ப்பட்ட உத்தமியை அடைய அவன் பாக்கியம் செய்யவில்லையே! ஆகா ! என் வயிறு பற்றி எறிகிறதே ! என்ன செய்யப் போகிறேன் ?" என்று கூறித் தனது அடிவயிற்றில் பலமாக அறைந்துக்கொண்டு கண்ணீர் விடுத்துக் கலங்கி அழவே, அதைக்கண்ட சிவஞான முதலியார், "அவன்மேல் ஏற்பட்டிருக்கும் குற்றங்களோ சாதாரணமானவையல்ல. கூட்டுக்கொள்ளை கொலை முதலிய பெருத்த குற்றங்களுக்கு மரண தண்டனையல்லவா சம்பவிக்கும். அதனுல் இந்தக் குடும்பத்தாருக்கு என்றைக்கும் அழியாத மானக்கேடு வருவதோடு, இந்த சமஸ்தானமே அநியாயமாக பங்காளிகளுக்குப் போய்விடுமே. உங்களுடைய செல்வாக்கும், செல்வமும், ஜெமீந்தார் என்ற பட்டப்பெயரும், அவன் ஒருவனிடத்திலடங்கியிருக்கையில் அவன் நினைத்த விடங்களில் கெட்டலைந்து இப்படிப்பட்ட துன்பங்களில் மாட்டிக் கொள்ளலாமா ?" என்று துன்பகரமாகவும் கலக்கமாகவும் கூறினுர்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள், "அப்படியாளுல் பையன் இதிலிருந்து தப்ப முடியாதென்று நினைக்கிறீர்கள் ? இதனுல் நமக்கு எத்தனை லக்ஷம் ரூபாய் செலவாளுலும் பாதகமில்லை. பையனை மீட்கும்படியான வழி ஏதாவது இருந்தால், அதைச் செய்யுங்கள்." என்று மிகுந்த கவலையோடும், விசனத்தோடும் கூறி இறைஞ்சினுள்.

சிவஞான முதலியார் சிறிது யோசனை செய்து "இந்தப் பத்திரிகையில் வந்திருக்கும் விவரங்களைப் பார்த்தால், பையன் தப்புவது அந்த பாலாம்பாளுடைய கையிலிருக்கிறது. அவளை நாம் சரிப்படுத்தி, பையனுக்கும் தனக்கும் சிநேகமுண்டென்றும், அவனுக்கும் திருட்டுக்கும் எவ்வித சம்பந்தமு மில்லையென்றும் அவள் வாக்குமூலம் கொடுக்கும்படி நாம் செய்யமுடியுமானால், பையன் தப்பலாம். இல்லாவிட்டால், அவன் தப்பமுடியாதென்று நினைக்கிறேன். அவள் எப்படிப்பட்ட மனுஷியோ? அவள் வேறே யாருக்காவது வைப்பாக இருப்பவளோ? நாம் சொல்வதை அவள் கேட்பாளோ மாட்டாளோ? சரி; வேறே வழி இல்லை. அவள் மூலமாகத்தான் தப்ப வழி செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும், நீங்கள் கையில் கொஞ்சம் பணம் எடுத்துக்கொண்டு புறப்படுங்கள். என்னுடைய பெட்டிவண்டி வாசலில் நிற்கிறது. நாம் இருவரும் உடனே ஆலந்தூருக்குப் போய், அவன் நம்முடைய பையன் தானென்பதை நிச்சயித்துக்கொண்டு அந்த பாலாம்பாளிடம் போய்ப் பேசிப் பார்ப்போம்." என்று கூற, அந்த யோசனையை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட கல்யாணியம்மாள், "சரி; அப்படியே செய்வோம்; நான் இதோ வந்துவிட்டேன்" என்று கூறிய வண்ணம் மிகவும் விரைவாக இரும்புப் பெட்டியண்டை ஓடி, அதைத் திறந்து, அதற்குள்ளிருந்து ஆயிரம் ரூபாய் நோட்டுகளில் ஒரு கற்றை நோட்டுகளை எடுத்துத் தனது மடியில்கட்டிக் கொண்டு, பெட்டியைப் பூட்டிவிட்டுத் திரும்பி வந்து "போகலாம் வாருங்கள்" என்றாள்.

உடனே சிவஞான முதலியார் எழுந்தார். இருவரும் நிரம்ப துரிதமாக நடந்து வெளியில் வந்தனர். கல்யாணியம்மாள் தான் ஓர் அவசர காரியமாக வெளியிற் போவதாகவும், வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படியாகவும் பொன்னம்மாளிடம் கூறிவிட்டு, சிவஞான முதலியாரோடு பங்களாவிற்கு வெளியில் வந்தாள். அங்கே ஆயத்தமாக நின்றுகொண்டிருந்த முதலியாரது பெட்டிவண்டியில் இருவரும் அமர்ந்துகொண்டு விசையாக ஆலந்தூருக்கு ஓட்டும்படி உத்தரவு செய்ய, வண்டிக்காரன் சவுக்கை நன்றாக நீட்டி சடேரென்று இரண்டு அடிகள் கொடுக்க, குதிரை வாயுவேக மனோவேகமாகப் பறக்க வாரம்பித்தது.

---

## 12-ம் அதிகாரம்

### புதிய மருமகள்

பெட்டிவண்டிக்குள்ளிருந்த சிவஞானமுதலியாரும், கல்யாணியம்மாளும் வண்டி இரண்டொரு மயில் தூரம் செல்லும் வரையில் ஒருவரோடொருவர் பேசாமல் முற்றிலும் சிந்தனையிலாழ்ந்திருந்தனர். அந்த அபாயகரமான பெருத்த தீங்கிலிருந்து மைனரை எப்படித் தப்புவிக்கலா மென்பதைப்பற்றியே சிவஞான முதலியார் யோசனை செய்திருந்தார். கல்யாணியம்மாளது மனதோ முற்றிலும் கலக்கமும் குழப்பமும் துன்பமும் சஞ்சலமும் நிறைந்ததாய், சொல்லொணு வகையில் வதைப்பட்டுக் கொண்டிருந்தது. தாம் மறுநாள் நிச்சயதார்த்தம் ஏற்படுத்தி பெரிய மனிதர்களான பலரை அழைத்திருக்க, அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் மைனர் நிரம்பவும் தலைகுனிவான பெருத்த சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டது சகிக்க இயலாத விசனகரமான நிகழ்ச்சியாக இருந்ததன்றி, அது ஒரு பெருத்த அபசகுணமாகவும் தோன்றியது. மதனகோபாலனது விஷயத்தில் தான் செய்த பெருத்த சதியே தனக்கு அத்தகைய மீளாத்துன்பமாக வந்து நேர்ந்துவிட்டதென்னும் எண்ணம் அடிக்கடி அவளது மனத்திலெழுந்து அவளைக் கண்டித்து ஈட்டியால் குத்துவதுபோல அவளது மனதை வதைத்துப் புண்படுத்திக்கொண்டிருந்தது. இருந்தாலும், மைனர் மரணதண்டனை முதலியவற்றிலிருந்து தப்பித்து வரவேண்டுமே என்ற கவலையும், தப்பி வராவிட்டால், ஏராளமான தனது செல்வமும் செல்வாக்கும் தாயாதிகளுக்குப் போய்ச் சேர்ந்துவிடுமே என்ற பேரச்சமும் அவளது மனத்தை முற்றிலும் கவர்ந்துகொண்டமையால் மதன கோபாலனது விஷயம் மறைந்து மறைந்து நினைவிற்கு வந்து கொண்டிருந்தது. அந்தவிஷயத்தில் எத்தனை லட்சம் ரூபாய் செலவு செய்ய நேர்ந்தாலும், அதை இலட்சியம் செய்யாமல், பணத்தை வாரி இறைத்து போலீசாரையோ, அல்லது, பாலாம்பாளையோ, அல்லது, இருவரையுமோ சரிப்படுத்தி, மைனரை அன்றிரவு அந்த வண்டியிலேயே அழைத்து வந்துவிட வேண்டுமென்ற உறுதியே கல்யாணியம்மாளது மனதில் வேரூன்றி நின்றது.

ஆனால், அவளது மனதில் ஒரு விஷயத்தில் மாத்திரம் குழப்பம் இருந்துகொண்டே வந்தது. எவ்வாறெனில், கருப்பாயி கூறிய வரலாற்றிற்கும் பத்திரிகையில் வந்திருந்த வரலாற்றிற்கும் ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாமலும் தோன்றியது; இரண்டும் முரண்படுவதாகவும் தோன்றின. இரவு பன்னிரண்டு மணிக்கு கருப்பாயியின் வீட்டிலிருந்து தப்பியோடிய மைனர், அதன் பிறகு இரண்டு மணிக்கு பாலாம்பாளது பங்களாவுக்குப் போவது சாத்தியமான காரியமாகத் தோன்றியது. ஆனால் அவன் அங்கே இருந்து தப்பித்து ஓடிய பிறகு திருடர்களைச் சேர்த்துக்கொண்டு பாலாம்பாளது பங்களாவில் நுழைவது அவனுக்கு எப்படி சாத்தியப்பட்டது? அவனோடு பங்களாவில் நுழைந்த திருடர் வேறே திருடர்களா, அல்லது, இதே திருடர்களா என்ற ஐயம் அவளது மனதில் உண்டாயிற்று; நிற்க அவன் பாலாம்பாளைப்பற்றிய விவரங்களை யெல்லாம் அறிந்து சொல்லும்படி கருப்பாயியிடம் கேட்டு, அதன் பொருட்டே அவளது வீட்டிற்கு வந்திருந்தானென்று கருப்பாயி சொன்னதிலிருந்து, அதற்குமுன் அவனுக்கும் பாலாம்பாளுக்கும் எவ்விதமான சம்பாஷணையும் நடக்கவில்லை யென்பது தெரிவதால், அவன் திருடர்களை முன்பாகவே அமர்த்திவைத்து அவளை பலாத்காரமாக எடுத்துப்போக முயன்றானென்பது அசம்பாவிதமாகவிருந்தது. தன்னிடம் கருப்பாயி பொய்சொல்லி, தன்னை ஏமாற்றி ஆறாயிரம் ரூபாயைப் பிடுங்கிக்கொண்டு போயிருப்பாளோ என்ற சந்தேகமும் கல்யாணியம்மாளது மனதில் தோன்றியது. தங்களிடம் அவள் அவ்வாறு நடந்துகொள்ள மாட்டாளென்ற ஒருவகையான உறுதியும் இடையிடையில் தோன்றி மனதைக் குழப்பியது. ஒருகால் மைனர் திருடர்களை அமர்த்தி வைத்துவிட்டு, இரவு 2-மணி வரையில் தான் தங்கி இருப்பதற்கு இடம் கிடைக்குமென்ற நினைவினால் ஒன்றையு மறியாதவனைப்போல, கருப்பாயியிடம் பாசாங்கு செய்து, அவளது வீட்டில்போய் படுத்திருப்பானோ வென்றும், அப்போது தற்செயலாக, வேறு திருடர்கள் அவனது பொருட்களைக் கொள்ளையடிக்க முயன்றிருப்பார்களோ வென்றும் கல்யாணியம்மாள் ஐயமுற்றாள். அவ்வாறு கருப்பாயின்மீதும், மைனரின் மீதும், திருடர்களின்மீதும், மாறி மாறி சந்தேக முற்றவளாய், கல்யாணியம்மாள் எவ்விதமான முடிவிற்கும் வரமாட்டாமல் தத்தளித்திருந்தாள். ஆனால், கருப்பாயி சிறிது நேரத்திற்குமுன்

கூறிய வரலாற்றையும், அவள் ஆறுயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டு போன செய்தியையும் அவள் சிவஞான முதலியாரிடம் சொல்லாமலே இருந்துவிட்டாள்.

அவ்வாறு பெட்டிவண்டி இரண்டுமயில் தூரம் போக, அதன் பிறகு, அவர்கள் மைனரைத் தப்புவிக்கும் விஷயமாக ஒருவரோடொருவர் பேசி ஆக்ஷேபனை சமாதானம் செய்துகொள்ள வாரம்பித்தனர். அந்த விவரங்களையெல்லாம் இப்போது கூறுவது அவசியமன்றாதலால், அவர்கள் ஆலந்துரை யடைந்தபிறகு நடந்த விஷயத்தை கவனிப்போம். தேனும்பேட்டை பங்களாவிலிருந்து ஒன்பதேகால் மணிக்குப் புறப்பட்ட அவர்கள் சரியாகப் பத்துமணிக்கு ஆலந்தூர்ப் போலீஸ் ஸ்டேஷனை யடைந்தனர். ஆனால் ஸ்டேஷனுக்குச் சிறிது தூரத்திற்கப்பால் பெட்டிவண்டி நிறுத்தப்பட்டது. கல்யாணியம்மாளை வண்டிக்குள்ளேயே உட்கார்ந்திருக்கச் செய்து, சிவஞான முதலியார் மாத்திரம் கீழே இறங்கி ஸ்டேஷனுக்குள் நடந்தார். அதற்குள் சப் இன்ஸ்பெக்டர் தமது தினசரி டைரியை எழுதிக்கொண்டிருந்தார். அவருக்கு சமீபத்தில் ஐந்தாறு ஜெவான்கள் நின்றுகொண்டிருந்தனர் திடீரென்று ஸ்டேஷனுக்குள் ஒரு மனிதர் நுழைந்ததைக் கண்ட சப் இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் திரும்பி வாசற்பக்கம் நோக்க, சிவஞான முதலியார் அதற்கு முன் சப் இன்ஸ்பெக்டருக்கு அறிமுகமானவராதலால், புன்சிரிப்போடு சப் இன்ஸ்பெக்டரை நோக்கி, "நமஸ்காரம் வருகிறது; சர்க்கார் உத்தியோகஸ்தர் தமது வேலையைச் செய்யும்போது தடுக்கும் குற்றத்தை நான் இப்போது செய்துகொண்டே உள்ளே வருகிறேன். தயவுசெய்து இந்தியன் பினல்கோட் 186-வது பிரிவின்படி என்மேல் குற்றம் சுமத்த மாட்டீர்களென்று நினைக்கிறேன்" என்று வேடிக்கையாக இங்கிலீஷில் பேசிக்கொண்டு உள்ளே நுழைந்தார். அப்படி வந்தவர் இன்னாரென்பதை சப் இன்ஸ்பெக்டர் உணர்ந்துகொண்டாராலும், அந்த அகாலவேளையில் வந்ததிலிருந்து, அவர் ஏதோ ஒரு கேஸ் விஷயத்தில் தமது தயவை எதிர்பார்த்தே வந்திருக்கிறாரென்பதை சுலபத்தில் யூகித்துக் கொண்டவராய், அவருக்கும் தமக்கும் அதற்குமுன் இருந்த பழக்கத்தை அவ்வளவாகக் காட்டிக்கொள்ளாமலும், எவ்வித முகமாறுதலும் தோற்றாமலும், சந்தேகமான பார்வையாக அவரைக் கூர்ந்து நோக்கி, "ஓகோ! நீங்களா! வாருங்கள்; என்ன விசேஷம்?

இந்த அகாலத்தில் எங்கே இவ்வளவுதூரம் வந்தது?" என்று கேட்டவண்ணம் திரும்பவும் கீழே குனிந்து எழுதத் தொடங்கினார். உட்கார்ந்து கொள்ளும்படி தம்மை அவர் உபசரிக்காததுபற்றி சிவஞான முதலியார் தமது மனதிற்குள் சிறிது வருந்தினாரானும் அதை வெளியிற் காட்டிக்கொள்ளாமல், "வேறொன்றுமில்லை; ஒரே ஒரு நிமிஷம் உங்களோடு தனிமையில் பேசவேண்டு மென்பது; என்னுடைய வருகையால் உங்களுடைய வேலைக்குக் குந்தகம் ஏற்படுகிறதோ என்னவோ?" என்று நயமாக மறுமொழி கூறினார். அதைக் கேட்ட சப் இன்ஸ்பெக்டர், "நீங்கள் சொல்வதும் உண்மைதான். ஒரு முக்கியமான கேஸின் சம்பந்தமாக நான் இதுவரையில் கெட்டலைந்துவிட்டு இப்போதுதான் வந்து டைரியை எழுத எடுத்தேன். இதை எழுதி முடிக்க, குறைந்தது ஒருமணியாவது பிடிக்கும். நீங்கள் என்னோடு சாவகாசமாகப் பேசவேண்டுமானால், நாளையதினம் காலையில் வந்தால் சௌகரியமாகப் பேசலாம்" என்றார். அதைக் கேட்ட சிவஞான முதலியார் நிரம்பவும் கிலேசமடைந்தவர்போலக் காட்டிக்கொண்டு, "இல்லை இல்லை; நான் ஒரு நிமிஷத்துக்குமேல் அதிகமாக உங்களைத் தாமதப்படுத்துவதில்லை. விஷயம் அவசரமானதாகையால் அதை காலை வரையில் நிறுத்திவைக்கக் கூடாமையால் உங்களுக்குக் கொஞ்சம் சிரமம் கொடுக்கவேண்டி யிருக்கிறது; ஒரே நிமிஷம்" என்று மிகவும் நயமாக மன்றாடிக் கேட்டுக்கொள்ள, சப் இன்ஸ்பெக்டர் அரை மனதோடு, "சரி; இதோ வருகிறேன்" என்று மறுமொழி கூறியவண்ணம் தமது ஆசனத்தை விட்டெழுந்து ஸ்டேஷனுக்கு வெளியிலிருந்த திண்ணைக்குவர, சிவஞான முதலியாரும் பின்தொடர்ந்து அங்கே வந்து சேர்ந்தார்.

தமது வேலை முடிய வேண்டுமென்ற நினைவினால் மிகுந்த பதைபதைப்பையும் பொறுமை யின்மையையும் காட்டி நின்ற சப் இன்ஸ்பெக்டர், "என்ன சங்கதி? சீக்கிரமாகச் சொல்லுங்கள்" என்று கேட்க, சிவஞான முதலியார் தமது சட்டைப்பையிலிருந்த சுதேசமித்திரன் பேப்பரைக் கையிலெடுத்தவண்ணம், "ஒன்றுமில்லை; இது இன்றைய சுதேசமித்திரன் பத்திரிகை. ஒரு பெருத்த கொள்ளை நடந்ததாக ஒரு செய்தி இதில் வெளியிடப்பட்டிருக்கிறது." என்று கூறி மேலே எவ்வாறு பேசுவதென்பதைப் பற்றி யோசித்தவராய் சிறிது தயங்கினார்.

அதற்குள் சப் இன்ஸ்பெக்டர், "ஆம் ஆம். அந்தக் கொள்ளைக் கேஸைப்பற்றியே நான் இன்று இவ்வளவு நேரம் அலைந்துவிட்டு வந்தேன். ஏன்! அந்த விஷயமாகப் பேசத்தான் நீங்கள் வந்தீர்களோ? பாலாம்பாளைப் பற்றி ஏதாவது சொல்லவேண்டுமோ?" என்றார்.

சிவஞான:—இல்லை, இல்லை; இதில் யாரோ ஒரு பையன் சம்பந்தப்பட்டிருப்பதாக எழுதப்பட் டிருக்கிறதே; அந்தப் பையன் இன்னானென்பது தெரிந்ததா?

சப் இன்ஸ்:—இல்லை. நாங்கள் நயமாகவும், பயமுறுத்தியும் எவ்வளவோ கேட்டுப் பார்த்தும், பையன் அதை மாத்திரம் வெளியிட மாட்டேனென்று பிடிவாதம் செய்கிறான். அவனைப்போல புகைப்படம் தயாரித்து, இரண்டு சேவகர்களிடம் கொடுத்து அனுப்பி இருக்கிறேன். அவன் யாரென்பதை விசாரித்து அறிந்து கொண்டு வரும்பொருட்டுப் போன அவர்கள் இன்னம் வரவில்லை.

சிவஞான:—அப்படியானால், நீங்கள் போய் அலைந்துவிட்டு வந்தது பையனைப்பற்றி விசாரிக்க அல்லவோ?

சப் இன்ஸ்:—இல்லை. நான் மற்ற திருடர்களையும் சொத்துக்களையும் கண்டுபிடிக்கும்பொருட்டு போயிருந்தேன். அது இருக்கட்டும். நீங்கள் வந்த காரியம் இன்னதென்பதைத் தெரிவியுங்கள்; எனக்கு நேரமாகிறது.

சிவஞான:—அந்தப் பையன் இப்போது இங்கேதான் இருக்கிறானா? அல்லது, அவனை சப்ஜெயிலுக்கு அனுப்பி விட்டீர்களா?

சப் இன்ஸ்:—எப்படி அனுப்புகிறது? அவனைப்பற்றிய விவரத்தை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். அதோடு அந்த பாலாம்பாள் இன்னமும் நன்றாகத் தெளிவடையவில்லை. அவளிடத்திலும் நாங்கள் இன்னொருதரம் நன்றாக வாக்குமூலம் வாங்கவேண்டும். நாளைய காலையிலேதான் பையனை சப்ஜெயிலுக்கு அனுப்பப் போகிறோம். ஒருவேளை இந்தப் பையன் உங்களுக்குத் தெரிந்தவனாயிருப்பானோ? தெரிந்தால், சொல்லுங்கள்.

சிவ ஞான:—இல்லை இல்லை. அவன் யாரென்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாது.

சப் இன்ஸ்:—அப்படியானால், அவனிடம் பேசி, அவனுடைய பக்கத்தில் உங்களை வக்கீலாக வைத்துக்கொள்ளும்படி கேட்கவந்தீர்கள் போலிருக்கிறது. அதற்கு நாங்கள் அநுமதிகொடுக்க முடியாது.

நாளைய காலையில் நாங்கள் அவனை சப்ஜெயிலுக்கு அனுப்பிவிடுகிறோம்; அதன்பிறகு நீங்கள் மாஜிஸ்டிரேட்டின் அநுமதி பெற்றுக் கொண்டுபோய் பார்த்துக்கொள்ளுங்கள். இவ்வளவுதானே? நான் போகலாமல்லவா ?

சிவஞான:—நான் என்னுடைய உத்யோக முறையிலே வரவில்லை. என்னுடைய நண்பரான ஒருவருடைய வீட்டுப்பையன் நேற்று முதல் காணுமல் போயிருக்கிறுன் என்று சொன்னுர்கள். இவன் அவனுயிருப்பானே என்ற சந்தேகம் உண்டாயிற்று. அவனு அல்லவா என்பதை பார்த்து நிச்சயித்துக்கொண்டு போகவே வந்தேன்.— என்றுர்.

சப் இன்ஸ்:—ஓகோ அப்படியா! காணுமல் போயிருப்பவன் யார் வீட்டுப்பையன் ?—என்றுர்.

அதைக்கேட்ட சிவஞானமுதலியார் உண்மையை உடனே சொல்லிவிடக் கூடாதென்றும் முன்னெச்சரிக்கையினுல் சிறிது இழுப்பாகப் பேசத்தொடங்கி, “அவர்கள் இருப்பது வெளியூர். அவர்கள் யாரென்பதை நான் சொன்னுல்கூட உங்களுக்குத் தெரியாது. பையனோடு நான் பேசமாட்டேன். தூரத்தில் நின்று அவன் நான் தேடும் பையன் தானு என்பதை நிச்சயித்துக்கொண்டு போய்விடுகிறேன். நீங்கள் சட்டப்படி உங்களுடைய கடமையை நடத்திக்கொள்ளுங்கள். நான் அதில் தலையிடுவதே இல்லை” என்றுர்.

அதைக்கேட்ட சப் இன்ஸ்பெக்டர், “பையன் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறுன். கதவுக்கு வெளியிலிருந்து பார்க்க உங்களுக்கு அநுமதி கொடுக்கிறேன். ஆனுல், அவன் நீங்கள் தேடும் பையனுயிருந்தால், அவனுடைய பெயர், ஊர், தகப்பன் பெயர் முதலிய விவரங்களை எனக்குச் சொல்லிவிட்டுப் போகவேண்டும். அதற்கு சம்மதமானுல், நீங்கள் வந்து பார்க்கலாம்” என்றுர்.

அதைக்கேட்ட சிவஞான முதலியார், “ஆகட்டும். அப்படியே செய்கிறேன்” என்று கூறி இணங்க, உடனே சப் இன்ஸ்பெக்டர் “சரி; வாருங்கள் காட்டுகிறேன்” என்று கூறியவண்ணம் உள்ளே செல்ல, சிவஞான முதலியார் பின்னுல் தொடர்ந்து சென்றுர். சப் இன்ஸ்பெக்டர், தமது மேஜையின் மீதிருந்த ஒரு லாந்தரைக் கையிலெடுத்துக்கொண்டு மைனர் அடைப்பட்டிருந்த அறையை நோக்கி நடந்து, வெளிச்சத்தை உட்புறத்தில் திருப்பி நன்றுகக்காட்ட, சிவஞான முதலியார், இரும்புக் கம்பிகளான கதவிற்கு வெளியில்

நின்றவண்ணம் உட்புறத்தில் படுத்திருந்த மனிதனை உற்று நோக்கினார்; அலுத்துப்போய் நித்திரையி லாழ்ந்திருந்த பையனை நோக்கி சிவஞான முதலியார், அவன் மாரமங்கலம் மைனர்தானென்பதை ஒரே விநாடியில் நிச்சயமாகக் கண்டுகொண்டார். ஆனால், அவன் இன்னானென்பதை அப்போது வெளியிடுதல் கூடாதென உறுதி செய்து கொண்டவராய், அவர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை நோக்கி, "சரி; நான் உங்களுக்கு வீணில் இவ்வளவு தூரம் சிரமம் கொடுத்ததன்றி, உங்களுடைய எழுத்து வேலைக்கும் தடை செய்து விட்டேன். இவன் நான் தேடி வந்த பையனல்ல. தயவுசெய்து மன்னிக்கவேண்டும்; நான் உத்தரவு வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று கூறியவண்ணம் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார். சிறிதும் சந்தேகிப்பதற்கு இடங்கொடாமல் முதலியார் மிகவும் தந்திரமாக நடந்து கொண்டாராதலால், சப் இன்ஸ்பெக்டர், அவரது மொழியை உண்மையான தென்று நம்பிவிட்டார். உள்ளே அடைப்பட்டிருந்த பையன் யாவனென்பதை அவர் மூலமாக அறிந்து கொள்ளலாமென்பதை ஆவலோடு எதிர்பார்த்த அவரது எண்ணம் ஏமாற்றமடையவே, அவர் அதற்குமேலே வார்த்தை யொன்றும் சொல்லமாட்டாமல் மௌனம் சாதித்தவராய்த் தமது மேஜையை நோக்கி நடந்தார்.

சிவஞான முதலியார் இன்னொருமுறை அவரிடம் மன்னிப்புக் கேட்டு விடைபெற்றுக்கொண்டு, ஸ்டேஷனை விட்டு வெளிப்பட்டார். வெளிப்பட்டவர், விசையாக நடந்து தமது பெட்டிவண்டி நின்ற இடத்திற்கு வந்து, அதில் ஏறி உட்கார்ந்துகொண்டு, வண்டியைத் திருப்பிவிடும்படி வண்டிக்காரனிடம் கூற, அவன் அவ்வாறே திருப்பி, வந்த வழியிலேயே ஓட்ட வாரம்பித்தான். அவர் எவ்விதமான செய்தி கொண்டுவருவாரோவென்று பெரிதும் ஆவல் கொண்டு தவித்திருந்த கல்யாணியம்மாள் அவரது முகத்தைப் பார்த்தவண்ண மிருந்தாள். வண்டி சிறிது தூரம் சென்றவுடனே, சிவஞான முதலியார், பின்னால் திரும்பிப்பார்த்து போலீஸ்காரன் எவனும் தொடர்ந்து வரவில்லையென்பதை ஆராய்ந்து பார்த்துக் கொண்டு, கல்யாணியம்மாளை நோக்கி, "சரி; அவன்தா னிருக்கிறான். வேறே வழி இல்லை; அந்த நாடகக்காரியிடம் போய் முயற்சி செய்தாலல்லது பையன் தப்பமுடியாது. அவளிடம் போவோம்" என்று மிகுந்த கவலையோடு கூறினார்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் சகிக்கவொண்ணாத சஞ்சலமடைந்து, "அப்படியானால், பையனும் உங்களைப் பார்த்தானா? என்ன சொன்னான்?" என்று மிகுந்த விசனத்தோடு கேட்க, முதலியார் "அலுத்துப்போய்த் தூங்கிக்கொண்டிருக்கிறான். தான் யாரென்பதை அவன் இன்னமும் வெளியிடவில்லையாம். அவனுடைய புகைப்படத்தோடு சில ஜெவான்கள் அவனைப்பற்றி விசாரிக்கப் போயிருக்கிறார்களாம். இந்த பாலாம்பாள் நோயாகப் படுத்திருக்கிறாளாம். போலீஸார், நாளைக் காலையில் இவளிடம் வாக்குமூலம் வாங்கியவுடன், அவனை சப் ஜெயிலுக்கு அனுப்புவார்கள். அதற்குள் நாம் முற்பட்டு இவளை சரிப்படுத்த வேண்டும். பையன் இன்னானென்பதை வெளியிடாமல், நான் தந்திரமாகப் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். ஆனால் இந்த நாடகக்காரி இப்போது என்ன நிலைமையிலிருக்கிறாளோ, இவளை நாம் இப்போது பார்க்க முடியுமோ முடியாதோ, அதுதான் கவலையாக இருக்கிறது." என்று மிகுந்த கவலையோடு கூறினார்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள், "அவளுடைய பங்களா எங்கே இருக்கிறது? அதை நீங்கள் இதற்குமுன் பார்த்திருக்கிறீர்களா?" என்றாள்.

சிவஞான முதலியார், "அந்த பங்களா இங்கேயிருந்து அரைக் கால் மயில் தூரத்திலிருக்கிறது. இந்தப் பாதையில், அந்த ஒரு பங்களாவே இருக்கிறது; அதைத் தவிர, வேறே பங்களா இல்லை" என்றார்.

அதன் பிறகு பத்து நிமிஷ நேரத்தில் அவர்களது பெட்டி வண்டி பாலாம்பாளிருந்த பங்களாவின் வாசலில் வந்து நின்றது. உடனே சிவஞான முதலியார் வண்டியை விட்டுக் கீழே இறங்கி, மூடப்பட்டிருந்த இரும்புக் கம்பிக் கதவண்டை சென்று, அதைத் தள்ளித் திறக்க முயல, அது பூட்டப்பட்டிருந்ததென்பது உடனே தெரிந்தது; பாலாம்பாள் தனிமையில் அந்த பங்களாவிலிருக்க அஞ்சி, அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்குப் போயிருப்பாளோ வென்ற சந்தேகம் அவரது மனதில் எழுந்தது; அவர் பூட்டை இன்னொருமுறை தொட்டு நன்றாகத் தடவிப் பார்த்தார்; வெளிப்புறத்திலிருந்து பூட்டினாலும், உட்புறத்திலிருந்து பூட்டினாலும் அந்தப் பூட்டு அதே இடத்திலிருக்கக்கூடியதாகக் காணப்பட்டது.

இராக்கால மாதலால், அவள் கதவை உட்புறத்தில் பூட்டிக்கொண் டிருப்பாளோ என்ற ஒரு நினைவும் உண்டாயிற்று. அவர் உடனே நிமிர்ந்து, உட்புறத்திலிருந்த கட்டிடத்தை உற்று நோக்கினர்; கத விற்கும் கட்டிடத்திற்கும் இடையில் தென்னம்பிள்ளைகளும், பாக்கு மரங்களும் வரிசையாக வைத்து வளர்க்கப்பட் டிருந்தமையால் அவற்றின் பச்சை மட்டைகள் வழியை மறைத்து இருளுண்டாக் கிக் கொண்டிருந்தன. அப்படி இருந்தும், உட்புறத்தில் வெளிச்சம் இருப்பதாகக் காணப்பட்டது, அதிலிருந்து, அதற்குள் மனிதர் அவசியம் இருக்க வேண்டுமென்று அவர் உறுதி செய்துகொண்டு, பெட்டிவண்டிப் பக்கம் திரும்பி வண்டிக்காரனைக் கீழே இறங்கி வரும்படி கூற, அவன் உடனே கீழே இறங்கிக் கதவண்டை வந்து சேர்ந்தான். சிவஞான முதலியார், "அம்மா அம்மா" என்று கூப்பிடும்படி கூற, அவன் மிகவும் உரத்த குரலில், "அம்மா அம்மா" என்று கூவி, சவுக்கின் கோலால் இரும்புக் கம்பியில் லொட லொடவென்று ஓசை செய்தான். கால் நாழிகைநேரம் வரையில் எவ்வித மறுமொழியும் கிடைக்கா திருந்தமையால், அவன் முன்னி லும் அதிகமாக ஓங்கிக் கூவத் தொடங்கினன். அப்போது சுமார் பத்தரை மணிநேர மிருக்கலாமாதலால், உள்ளே இருந்தோர் அயர் ந்து தூங்கியிருப்பார்களோ வென்ற நினைவோடு சிவஞான முதலியார் விடாமல் கூப்பிடும்படி வண்டிக்காரனைத் தூண்ட, அவன் அவ்வாறே செய்துகொண்டிருந்தான். மறுநாட் காலையில் எப்படியும் சப் இன்ஸ் பெக்டர் பாலாம்பாளிடத்தில் வாக்குமூலம் வாங்கிவிடுவா ராதலால் தாம் எப்பாடு பட்டாகிலும் அன்றிரவிற்குள் அவளைக் கண்டு அவளை சரிப்படுத்தி, மைனர் சப் ஜெயிலுக்குப் போகாமல் தடுத்து அவனை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய்விட வேண்டுமென்ற உறுதி செய்துகொண்டிருந்தவ ராதலால், சிவஞான முதலியார், விடாமல் அவனது தொண்டை எட்டியவரையில் ஓங்கி அழைக்கும்படி வண் டிக்காரனைத் தூண்ட, அவன் அவரிடம் மாதச்சம்பளம் வாங்கும் ஆளாதலால், தனது கன்னத்தில் கையை வைத்துத் தொண்டை கிழி ந்து போகாமல் முட்டுக்கொடுத்துக் கொண்டு, "ஏ அம்மோ! ஓ அம் மோ!" என்று கூச்சலிட்டு எழும்பி எழும்பிக் குதித்தான். அவ்வாறு அரை நாழிகைநேரம் கழிய, கட்டிடத்தில் ஒரு விளக்கு நகருவது போலக் காணப்பட்டது அதுவரையில் மிகுந்த ஏக்கம் கொண்டு தளர்வடைந்து நின்ற சிவஞான முதலியாரது மனதில் அப்போதே

பெருத்த உற்சாகமும் மகிழ்ச்சியும் உண்டாயின. விடாமல் கத்திக் கொண்டே இருக்கும்படி அவர் அப்போதும் வண்டிக்காரனைத் தூண்டிக்கொண்டே இருந்தார். அந்த வண்டிக்காரனது நிலைமையோ மகா பரிதாபகரமாக ஆகிவிட்டது. ஏனெனில், அவன் தனது தொண்டையை எவ்வளவுதூரம் கிழித்துக்கொள்ள முடியுமோ அவ்வளவும் கிழித்துக்கொண்டு கூச்சலிட்டுக் கூததாடி ஆரவாரம் செய்ய கடைசியில் லாந்தர் கைத்தடிகளோடு இரண்டு மனிதர்கள் கதவின் உட்புறத்தில் தோன்றி மிகவும் அஞ்சிய பார்வையாக வெளியில் நின்றோரைப் பார்த்து, "யாரையா அது? நடு இரவில் வந்து ஏனையா இப்படிக் கூச்சலிடுகிறீர்கள்?" என்று அதட்டி வினவ, அதைக் கேட்ட சிவஞான முதலியார், மிகவும் நயமான குரலில் அவர்களை விளித்து, "யாரப்பா அது? இப்படிக் கொஞ்சம் வாருங்கள்; நேற்று திருடர்கள் வந்தபடியால், இந்த அகாலத்தில் இருளில் நாங்கள் வந்தது உங்களுக்கு சந்தேககரமாயிருப்பது இயற்கைதான்; திருடர்களாயிருந்தால், மதில்மேலேறி இந்நேரம் உள்ளே வந்திருப்பார்கள் அல்லவா; வெளிக்கதவை நீங்கள் திறந்து விடுகிறவரையில் கூச்சலிட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள். நாங்கள் இவ்வளவு அதிகமாகக் கூச்சலிட்டு உங்களை அழைத்ததிலிருந்தே, நாங்கள் வித்தியாசமான மனிதர்கள் அல்லவென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். நீங்கள் கொஞ்சமும் யோசனைசெய்ய வேண்டாம். நாங்கள் தக்க மனிதர்கள். ஒரு முக்கியமான சங்கதியைப்பற்றி, இந்த வீட்டு அம்மாளிடத்தில் பேசிவிட்டுப் போக வந்தோம். நாங்கள் பலர் வரவில்லை. நானும் இன்னொரு அம்மாளுமே வந்திருக்கிறோம். இந்த பங்களாவிலிருக்கும் பாலாம்பாள் அம்மாளுக்கு உடம்பு இன்னமும் அசௌக்கியமாக இருக்கிறதென்று போலீஸார் சொன்னார்கள். இருந்தாலும், நாங்கள் கருதிவந்த காரியம் மிகவும் அவசரமானதாகையால், அந்த அம்மாளுக்குக் கொஞ்சம் சிரமம் கொடுப்பதாயிருந்தாலும் பாதகமில்லையென்று நினைத்து வந்தோம். தயவுசெய்து நீங்கள் உள்ளே போய் நாங்கள் வந்திருப்பதாகவும், உள்ளே வர வேண்டுமென்று பிரியப்படுவதாகவும் சொல்லுங்கள்" என்று மிகுந்த அன்போடு கூறினர்.

உட்புறத்தில் நின்ற மனிதர் இருவரும் முதலியார் பேசி முடிப்பதற்குள், தமது லாந்தரை வெளிப்பக்கம் நன்றாகத் திருப்பி, சிவஞான முதலியாரையும், அருகில் நின்ற பெட்டிவண்டியையும், அதற்

குள் உட்கார்ந்து தனது முகத்தை வெளியில் நீட்டிக்கொண்டிருந்த கல்யாணியம்மாளையும், வண்டிக்காரனையும் ஏற இறங்க நோக்கி, அவர்கள் யாரோ தக்க பெரிய மனிதர்கள் என்பதை சந்தேகமற உணர்ந்துகொண்டன ராதலால், முதலியாரது சொல் நம்பத்தக்கதாக இருந்ததன்றி அவர்களது மனதில் துணிவையும் உண்டாக்கியது.

இருவருள் ஒருவன் "இங்கே நேற்று ராத்திரி கொள்ளை நடந்ததுமுதல் இதுவரையில் இந்த வீட்டு எஜமானியம்மாள் படுத்த படுக்கையா யிருப்பதால், எவர் வந்தாலும் உள்ளே விடவேண்டா மென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். டாக்டர் மாத்திரம் வந்து விட்டுப் போகிறார். ஆனால் நீங்கள் தக்க பெரிய மனிதர்களாகக் காணப்படுவதாலும், மிகவும் அவசரமான காரியமாக வந்திருப்பதாகச் சொல்லுவதாலும், நாங்கள் போய் அம்மாளிடம் சொல்லுகிறோம். அவர்கள் அழைத்துக்கொண்டு வரும்படி அநுமதி கொடுத்தால் அழைத்துப்போகிறோம் அதுவரையில் இங்கேயே இருங்கள்" என்று கூற, சிவஞான முதலியார் "அப்படியே செய்யப்பா!" என்று நயமாக மறுமொழி கூறினார். உள்ளே இருந்து பேசிய மனிதன், மற்றவனை லாந்தரோடு அங்கேயே நின்றுகொண்டிருக்கும்படி சொல்லிவிட்டு விரைவாக உள்ளே சென்றான்.

அவ்வாறு சென்றவன் பத்து நிமிஷநேரத்தில் திரும்பி வந்து சேர்ந்தான். பாலாம்பாள் அப்போது தங்களோடு பேச இணங்குவாளோ மாட்டாளோ என்றும், அவளுக்கு ஆசைநாயக னுண்டானால், அவன் அப்போது அந்த பங்களாவில் இருப்பானோ என்றும் பெரிதும் கவலைகொண்டு நின்றிருந்த சிவஞான முதலியார், அவன் எவ்விதமான மறுமொழி சொல்வானோ வென்ற ஆவலோடு அவனது முகத்தை நோக்கினார். அந்த மனிதன் கதவண்டை நெருங்கி வந்து மிகவும் பணிவான குரலில், "நான்போய்ச் சொன்னேன். நேற்றைய பயத்தினால், கதவைத் திறப்பதற்கே அம்மாள் பயப்படுகிறார்கள். இருந்தாலும், வந்திருப்பது யார் என்பதைக் கேட்டுக்கொண்டு வரச் சொன்னார்கள். நீங்கள் யார், எங்கிருந்து வருகிறீர்கள் என்பதை சொல்லுங்கள். நான் போய்ச் சொல்லிப் பார்க்கிறேன்" என்றான்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார் சிறிது யோசனை செய்தவராய், "அந்த விவரத்தை அவர்களிடத்தில் நேரிலேயே சொல்லிக் கொள்ளலாமென்று உத்தேசித்தேன். இருந்தாலும் பாதகமில்லை.

தேனும்பேட்டையிலிருந்து ஒரு ஜெமீந்தாரினியம்மாளும், மைலாப்பூரிலிருந்து ஒரு வக்கீல் ஐயாவும் வந்திருப்பதாகத் தெரிவி; அதுவே போதும். அவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள்." என்றார். அந்த மனிதன் அவர் சொன்ன விவரத்தைக் கேட்டுக்கொண்டு, மறுபடியும் உள்ளே ஓடினான். அவன் அவ்வாறு சென்றபின் இரண்டொரு நிமிஷநேரம் கழிந்தது. சிவஞான முதலியார், உட்புறத்தில் லாந்தரோடு நின்றுகொண்டிருந்த மனிதனை நோக்கி, "ஏனப்பா! இப்போது உள்ளே அம்மாள் மாத்திரம் இருக்கிறார்களா? அல்லது, அவர்களுடைய பந்துக்கள் யாராகிலும் கூட இருக்கிறார்களா?" என்று சந்தேகத்திற்கு இடமின்றி அலட்சியமாகக்கேட்டார். அதைக் கேட்ட அந்த மனிதன் "அம்மாள் மாத்திரந்தான் இருக்கிறார்கள். துணைக்காக, நாங்கள் ஆண்பிள்ளைகள் நான்கு பேரும் பெண்பிள்ளைகள் மூன்றுபேரும் இருக்கிறோம்." என்றான்.

சிவஞான முதலியார், "நேற்று கொள்ளை நடந்தபோது நீயும் இங்கே இருந்தாயோ?" என்றார். அந்த மனிதன், "இல்லை இல்லை. நாங்கள் ஏழுபேரும் புரசைப்பாக்கத்திலிருந்து இன்று காலையிலே தான் வந்தோம். இதற்குமுன் வேறே மூன்று ஆண்பிள்ளைகளும், மூன்று பெண்பிள்ளைகளும் இருந்தார்கள். நேற்றைய கொள்ளையில் மூன்று ஆண்பிள்ளைகளும் இறந்துபோய்விட்டார்கள். மூன்று பெண்பிள்ளைகளும் அடிபட்டு வைத்தியசாலையில் கிடக்கிறார்கள். இங்கே ஒரு ஆள்கூட இல்லையென்று எஜமான் எங்கள் ஏழுபேரையும் துணைக்காக இங்கே அனுப்பினார்." என்றான்.

சிவஞான:—எஜமான் அனுப்பியதாகச் சொல்லுகிறாயே; அவர் யார்? இந்த அம்மாளுடைய புருஷனோ?

அந்த மனிதன்:—இல்லை இல்லை. இந்த அம்மாளுக்கு இன்னம் கலியாணமே ஆகவில்லை. இவர்கள் நாடகக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள்; நாடகத்தின் சொந்தக்காரர், மற்ற எல்லா வேஷக்காரர்களையும் புரசைப்பாக்கத்தில் வைத்திருக்கிறார். இந்த அம்மாள் வேறே துணையில்லாமல் ஏகாங்கியாக இருப்பதால், இவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் அவரே செய்துவருகிறார். அவர் தான் எங்களை அனுப்பியது.

சிவஞான:—ஓகோ அப்படியா! அவர் இந்த பங்களாவுக்கு எப்போதாவது வருவதுண்டா?

அந்த மனிதன்:—பகல் வேளைகளில் வந்து ஆகவேண்டிய சங்கதிகளைப் பேசிவிட்டுப் போய்விடுவார்.

சிவ ஞான:—இந்த நாடகத்தில் ஆடும் பெண்பிள்ளைக ளெல்லாரும் ஒருவருக்கொருவர் சொந்தக்காரர்களா? சொந்த மில்லாதவர்களா?

அந்த மனிதன்:—சொந்தக்காரர்களல்ல. இதில் பல ஜாதியைச் சேர்ந்த பெண்களும் இருக்கிறார்கள்; பிராமணப் பெண்கள் இருக்கிறார்கள்; நாயுடு ஜாதிப் பெண்க ளிருக்கிறார்கள்; முதலியார் ஜாதிப் பெண்க ளிருக்கிறார்கள்; தாசி பெண்க ளிருக்கிறார்கள். எல்லா ஜாதிப் பெண்களு மிருக்கிறார்கள்.

சிவஞான:—(நயமாக) இந்த அம்மாள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பது உனக்குத் தெரியுமா?

அந்த மனிதன்:—தெரியும்; இந்த அம்மாள் ஒரு முதலியார் வீட்டுப் பெண்ணும்.

சிவஞான:—இந்த அம்மாளுடைய தாய்தகப்பன்மா ரெல்லாரும் எங்கே இருக்கிறார்கள் தெரியுமா?

அந்த மனிதன்:—இரண்டுபேரும் இந்த அம்மாளுடைய சிறு வயதிலேயே இறந்துபோய் விட்டார்களாம். யாரோ பாத்தியஸ்தர் வளர்த்துப் படிக்கவைத்தார்களாம்; பள்ளிக்கூடத்தி லிருந்தபடியே, எஜமான் இவர்களை இந்த நாடகத்தில் சேர்த்துக்கொண்டார்கள்—என்றான்.

சிவஞான:—இந்த அம்மாளுக்கு மாசம் எத்தனை ரூபாய் சம்பளம்?

அந்த மனிதன்:—அது எனக்கு நன்றாகத் தெரியாது. சுமார் ஓர் ஆயிரம் இரண்டாயிரம் கிடைக்கும்—என்றான்.

அந்த சமயத்தில், உள்ளே சென்ற மனிதன் திரும்பி விரைவாக வந்து, ஒரு திறவுகோலால் பூட்டைத் திறந்துவிட்டு, "வாருங்கள்' என்று பணிவாகக் கூற, சிவஞான முதலியார் அவனை நோக்கி, "பெட்டிவண்டியை உள்ளே கொண்டுவரலா மல்லவா?" என்றார். அந்த மனிதன், "ஆகா! கொண்டுவரலாம்" என்றான். உடனே வண்டிக்காரன், கடிவாளவாரைப் பிடித்து குதிரையை உள்ளே நடத்திக் கொண்டு சென்றான். லாந்தர் வைத்திருந்தவனும் சிவஞான முதலியாரும் வண்டிக்கு முன்னாக நடந்தனர். திறவுகோல் கொணர்ந்தவன் பின்னால் நின்று கதவை மறுபடியும் சாத்திப் பூட்டிக்கொண்டு வண்டி

யைப் பின் தொடர்ந்து வந்தான். அடுத்த நிமிஷம் பெட்டிவண்டி, கட்டிடத்தின் பக்கத்தில் போய் நின்றது. வண்டியின் கதவைத் திறந்துகொண்டு கல்யாணியம்மாள் கீழே இறங்கினாள். திறவு கோலை வைத்திருந்தவன், லாந்தரையும் தனது கையில் வாங்கிக் கொண்டு, சிவஞான முதலியாரையும் கல்யாணியம்மாளையும் அழைத் துக்கொண்டு மேன்மாடத்திற்குச் சென்றான்.

அப்போது பாலாம்பாள் என்ன நிலைமையி லிருந்தாளென்பதை கவனிப்போம். முதல்நாளிரவில் கொள்ளைக்காரர்கள் கதவைத் தள்ள, கட்டிலின்மேலிருந்த மைனர் கீழே விழுந்தபோது, அவனது உடம்பில் வலுவான அடிபட்டதாலும், திருடர்கள் உள்ளே வந்து விட்டார்கள் என்ற பெரும்பீதியில், அந்த அடி அவனது உடம்பில் உறைக்காது போனதன்றி, தான் திருடர்களது திருஷ்டியில் படா மல் எங்காகிலும் ஒளிந்துகொள்ள வேண்டுமென்ற ஒரே எண்ணம் அவனது மனத்தில் எழுந்து அவனைத் தூண்டியது. அவன் பல வகைப்பட்ட சாமான்களுக்கிடையில் கிடந்தாலதலால், அவன் தனது கையை நாற்புறங்களிலும் நீட்டித் தடவ, பெருத்த மெத்தை யொன்று கவிழ்ந்து வீழ்ந்திருந்ததை யுணர்ந்து, மெல்ல நகர்ந்து, அந்த மெத்தையின் கீழே சென்று ஒளிந்துகொண்டிருந்தான் திரு டர்கள் விளக்கைக் கொளுத்தியதற்கு முன்பாகவே, அவன் அவ் வாறு மறைந்து பதுங்கிக்கொண்டா னதலால் அவன் இருந்ததை அதன் பிறகு எவரும் கவனிக்க சந்தர்ப்பம் ஏற்படாதிருந்தது. திரு டர்கள் உள்ளே நுழைந்து விளக்கைக் கொளுத்தியது முதல், அங் கிருந்த பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு போனதுவரை யில், பாலாம்பாள் திருடர்களோடு போராடிக்கொண்டிருக்க நேர்ந்த தாகையால், அவளுக்கு அதுவரையில் மைனரைப் பற்றிய நினைவே ஏற்படவில்லை. திருடர்கள் ஓடியபோது வெளியில் மோட்டார் வண்டி வந்து நின்ற ஓசை உண்டாகவே, நாடகத்தலைவர் ஆள்க ளோடு வந்திருக்க வேண்டுமென்ற நினைவு பாலாம்பாளது மனத்தில் உண்டாயிற்று. ஜன்னலில் கட்டுப்பட் டிருந்தபடியே அவள் நாற் புறங்களிலும் திரும்பி நோக்கி, மைனர் இருக்கிறானோ என்பதை கவனித்தாள், திருடர்கள் வெளியிற் சென்ற பின்னரும், அவன் எவ்வித ஓசையும் செய்யாமல் படுத்திருந்தானதலால், அந்த அறைக் குள் அவன் இல்லை என்றும், திருடர்கள் கதவைத் திறந்தவுடனே அவன் தப்பித்து வாசல் வழியாக வெளியில் ஓடிப்போயிருக்க

வேண்டுமென்றும் உறுதியாக எண்ணிக்கொண்டாள். சிறிது நேரத்தில், நாடகத் தலைவரான கிழவரும், போலீஸாரும் உள்ளே நுழைந்து, அவளது கட்டுகளை அவிழ்த்துவிட்டபோது, மைனர் அவ்விடத்தில் இல்லையென்னும் நினைவினாலேயே, அவள் கிழவரிடம் ஓடி, "அப்பாடா" என்று ஆவலோடு அவரைக் கட்டிக்கொண்டாள். மைனர் பத்திரம் எழுதிக்கொடுத்த காலத்தில், மறுநாள் முதல் கிழவரது தொடர்பை விலகிவிட வேண்டுமென்ற உறுதியை அவள் கொண்டிருந்தாளென்பது முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மகா ஆபத்தான நிலைமையில் அவள் அந்தக் கிழவரை அலட்சியம் செய்வது உசிதமாக அவளுக்குத்தோன்றவில்லை. ஏனெனில், தனதுபொருட்டு அவர் அந்த அகாலத்தில் மோட்டார்வண்டி அமர்த்திக்கொண்டு போலீஸாரோடு வந்து தன்னை அவிழ்த்து விட்டதுமன்றி, அன்றிரவு முழுதும் அவர் தன்னைக் காப்பாற்றவேண்டுவது முக்கியமானதாக விருந்தது அதுவும் நிற்க, தன்னிடமிருந்த பொருட்களையெல்லாம் திருடர்கள் துடைத்துக்கொண்டு, தன்னை ஓட்டாண்டி ஆக்கிப் போய்விட்டனராதலால் அந்த நிலைமையில், முன்பின் தெரியாதவனும், ஆபத்து சமயத்தில் கைவிட்டு ஓடிப்போனவனுமான ஒரு மைனரை நம்பி, கிழவரது சிநேகத்தையும், தனது நாடக உத்தியோகத்தையும் விட்டுவிட அவளது மனம் ஒப்பவில்லை. ஆதலால், மைனர் ஓடிப்போனானென்ற விஷயம் அவளுக்கு மிகவும் அநுகூலமாகத் தோன்றியது; தனக்கும், மைனருக்கும் அன்றிரவு சிநேகம் ஏற்பட்டதாகவே அவள் நினையாமல், கிழவரிடத்தில் வழக்கத்திற்கும் அதிகமான வாத்சல்யத்தோடு நடந்துகொண்டு போலீஸார் இருந்ததைக் குறித்தும் லஜ்ஜைப்படாமல் அவரை அணைத்துக்கொண்டாள். ஆனால், அவர்கள் கீழேகிடந்த மெத்தையை எடுக்க, அதன்கீழிருந்து மைனர் கிளம்பியதைக் காணவே, அவள் திடுக்கிட்டு, பேரச்சமும், பெருந்திகைப்பும் கலக்கமும் கொண்டுவிட்டாள். அந்த சமயத்தில் மைனர் எப்படியும் உண்மையைச் சொல்லவேண்டியிருக்குமாதலால், அதற்குத் தானும் உத்தரம் சொல்வதோடு, தனது இரவிக்கைக்குள்ளிருந்த பத்திரத்தையும் ஒருகால் காட்ட நேருமோ என்ற கவலையும் பீதியும் கொண்டவளாய், அவள் ஒரு நிமிஷநேரம் ஒன்றும் தோன்றப்பெறாதவளாய் ஸ்தம்பித்து நின்றாளானாலும், அவளது சமயோசிதமான சாகஸபுத்தி அவளுக்கு உடனே துணைபுரிந்

தது. தான் மைனரை அறியாதவள்போல நடித்து, தனக்கு மயக்கம் வருகிறதென்று சொல்லிப் படுத்துக்கொண்டாள். அதன் பிறகு மைனர் எப்படியாவது போகட்டுமென்று நினைத்து அவள் அவ்வாறு கூறி சயனித்துத் தனது கண்களை மூடிக்கொண்டாள். ஆனால் அவள் உண்மையில் தனது ஸ்மரணையை இழக்காமல், அங்கே நிகழ்ந்தவற்றை கவனித்துக்கொண்டே படுத்திருந்தாள். போலீசார் மைனரை திருடர்களுள் ஒருவனென்று நினைத்துப் பிடித்துக்கொண்டதையும், அவன் தெரிவித்த வரலாறுகளையும், கிழவர் தனது கற்பைப்பற்றிப் புகழ்ந்து பேசியதையும், அலமாரியில் பத்திரம் தேடப்பட்டதையும், அவள் நன்றாக உணர்ந்தவளாய், அசையாமலும், பேச்சு மூச்சின்றியும் படுத்திருந்தாள். ஆனால், அவர்கள் தனது இரவிக்கைக்குள்ளிருந்த பத்திரத்தை ஒருகால் கண்டு எடுத்துவிடப் போகிறார்களே என்ற அச்சமும் கவலையும் கொண்டு, ஒருபுறமாகக் குப்புறப் படுத்து, பத்திரமிருந்த பக்கத்தை மெத்தையில் புதைத்த வண்ணம் படுத்திருந்தாள். போலீசார் மைனருக்கு விலங்கிட்டு அவனை வெளியில் அழைத்துப்போன சமயத்தில் கிழவர் அவர்களைப் பின்தொடர்ந்து பங்களாவின் வாசல்வரையில் போய், அங்கே மூர்ச்சித்துக் கிடந்தவர்களை மோட்டார்வண்டியிலே வைத்து அனுப்பிவிட்டு, மேன்மாடத்துக்குத் திரும்பி வருவதற்குள், அவள் தனது கொண்டை ஊசியை எடுத்து தான் படுத்திருந்த இடத்திற்கு அடியில் மெத்தையைக் கிழித்து அதற்குள் மைனரது பத்திரத்தைச் சொருகி, மேலே துப்பட்டியை விரித்துவிட்டு முன்போலப் படுத்திருந்தாள்.

திரும்பவும் அங்கேவந்த கிழவர் அவளுக்கருகில் மெத்தைமீது உட்கார்ந்திருந்து, அவளது முகத்தைத் தடவி, சைத்தியோபசாரம் செய்து பொழுது விடியும்வரையில் மிகுந்த துன்பமும் கவலையும் கொண்டவராக இருந்து, மறுநாட் காலையில் பிரேதங்களை சோதனை செய்வதற்காக போலீசாரோடு வந்த டாக்டரைக் கொண்டு பாலாம்பாளுக்கு ஔஷதம் கொடுக்கும்படி செய்தார். அவர் பத்துமுறை அவளை அழைத்தால், அவள் கிணற்றிற்குள்ளிருந்து பேசுகிறவள் போல மிகவும் மெலிந்து தளர்ந்துபோன குரலாகப் பேசி, பெருத்த பாசாங்கு செய்துகொண்டிருந்தாள் ஆனால் உண்மையில் அவளது மனத்தில் பலவகையான எண்ணங்கள் எழுந்து வதைத்துக்கொண்

டிருந்தன; கிழவரது நட்பு தனக்குவேண்டுமானால், மைனரைத்திருட னென்று தான் கட்டாயமாகச் சொல்லியே தீரவேண்டியிருந்தது. ஆனால், மைனரோ, பெருத்த பணக்காரனாக இருப்பதன்றி, எழுத்து மூலமாகத் தன்னிடம் ஒழுங்காக அகப்பட்டுக்கொண் டிருந்தா னாதலால், கிழவரிடத்திலிருந்து தனக்குக்கிடைக்கும் பொருளைவிட, அபாரமான செல்வத்தை அவனிடம் பறித்துவிடலாமென்ற நினை வும், தான் பெருத்த சமஸ்தானத்தின் ஜெமீந்தாரிணி ஆகிவிடலா மென்ற நினைவும் எழுந்து இடையிடையில் அவளது மனதைக் கலைத் தன. ஆனால் மைனரால் எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரம் செல் லுமோ, செல்லாதோ, செல்லாவிடில், தனது கதி அரசனை நம்பிப் புருஷனை விலக்கினவளது கதிபோ லாகுமோ என்ற ஐயமும் தோன்றி வதைத்தது. இடையில் கிழவர் ஆகாரம் உண்ணும்படி யாகவும், மருந்தை உட்கொள்ளும்படியாகவும், அடிக்கடி உப சரித்தது அவளுக்குப் பெருத்த வதையாக இருந்தது. போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மறுபடியும் அவளிடம் எல்லா விவரங்களையும் நன் றாக அறியும்பொருட்டு வாக்குமூலம் வாங்கவேண்டுமென்று இர ண்டு முறை ஜெவானை யனுப்ப, அப்போது அவள் பேச சிறிதும் வல்லமையற்றவள் போல நடித்து, வாக்குமூலம் வாங்குவது மறு நாள் ஆகட்டுமென்று சொல்லும்படி நயமாகக் கூறிவிட்டு, தான் என்ன செய்வதென்பதைப்பற்றியும், மைனரை விலக்குவதா, கிழ வரை விலக்குவதா என்பதைப்பற்றியும் சிந்தித்தவளாகப் படுத் திருந்தாள்; அன்று வி. பி. ஹாலில் நாடகம் நடத்தப்படுமென்ற விளம்பரம் வெளியிடப்பட் டிருந்தமையால், கிழவர் அன்று மாலையி லேயே அவளை விட்டுப் போகநேர்ந்தது; தனிமையிலிருக்க அவள் மிகவும் பயந்தனளாதலால், அதன்பொருட்டு, தனது ஆட்களில் நால்வரையும், வேலைக்காரிகளில் மூவரையும் வருவித்து அவளது பணிவிடையின் பொருட்டும் பாதுகாப்பின் பொருட்டும் வைத்திருந் தாராதலால் அன்றிரவில் நாடகம் முடிவடைந்தவுடன் இரண்டு மணிக்குத் தாம் அங்கே வருவதாகக் கூறிவிட்டு, கிழவர், மாலை ஐந்து மணிக்குப் புரசைப்பாக்கம் போய்விட்டார். அதன் பிறகு பாலாம்பாள் தனது புதிய வேலைக்காரர்களுள் முக்கியமான ஒருவனை அழைத்து, வெளிக்கதவைப் பூட்டிவைக்கும்படியாகவும், எவர் வந்தாலும் உள்ளேவிட வேண்டாமென்றும், போலீசார் வாக்கு மூலத்திற்காக வந்தால் இன்னம் குணமடையவில்லை யாதலால் மறு

நாள் வரும்படி சொல்லவும் ஏற்பாடு செய்துவிட்டு, தனது போஜனத்தை நன்றாக முடித்துக்கொண்டு, சயனமாளிகையின் கதவை உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டு கட்டிலில் படுத்து சிந்தனையிலாழ்ந்து கிடந்தாள். பொழுது சென்றுகொண்டே இருந்தது. துயில் வேண்டுமென்று அவள் பெரிதும் முயன்றாளானாலும், அவளது மனவெழுச்சியும், கலக்கமும் நித்திரை யுண்டாகாமல் தடுத்துக்கொண்டிருந்தன. அந்த நிலைமையில் இரவு பத்தரைமணி சமயத்தில், வேலைக்காரன் கதவை இடிக்கவே, அதைக்கேட்ட அந்த அணங்கு திடுக்கிட்டு நடுநடுங்கி, ஒருகால் அன்றிரவிலும் திருடன் வந்துவிட்டானோ என்ற நினைவும், பேரச்சமும் பெருந்திகிலு மடைந்து, "யார் அங்கே?" என்று மெதுவாகக் கேட்க, வேலைக்காரன் யாரோ சில பெரிய மனிதர் வெளியில் நின்றதாகவும், ஓர் அவசரமான விஷயத்தின் பொருட்டு தங்களைப்பார்க்க விரும்புவதாகவும் கூறவே, அவளது பெருத்த பீதி சிறிது தணிந்ததானாலும், அவர்கள் யாராயிருப்பார்களென்ற சிந்தனையும், அதனால் தனக்கு ஏதேனும் துன்பம் நேருமோ என்ற அச்சமும், அவர்கள் தன்னிடம் என்ன விஷயத்தின் பொருட்டு வந்திருப்பார்களோ என்ற ஐயமும் எழுந்து அவளது மனத்தை உலப்ப வாரம்பித்தன. மைனரது விஷயத்தில் எவ்வித முடிவிற்கும் தான் வரமாட்டாமல் சஞ்சலமடைந்து தவித்திருந்த அந்தத் துன்பகரமான நிலைமையில் இன்னம் என்னென்ன துன்பங்கள் வந்துநேருமோ என்ற கவலை கொண்டிருந்தாள் தேனும்பேட்டையிலிருந்து ஒரு ஜெமீந்தாரியம்மாளும் மைலாப்பூர் வக்கீல் ஒருவரும் வந்திருக்கிறார்கள் என்பதைக் கேட்கவே, அவளது சந்தேகம் உடனே நீங்கியது. அவர்கள் மாரமங்கலம் மைனரைச் சேர்ந்தவர்கள் என்று அவள் உடனே யூகித்துக்கொண்டாள். தான் மைனரை விலக்கலாமா, அல்லது, கிழவரை விலக்கலாமா என்பதைப்பற்றி எவ்வித முடிவிற்கும் வரமாட்டாமலிருந்த தருணத்தில் அவர்களது வருகை, அந்த விஷயத்தை தான் ஒரு வகையாகத் தீர்மானிப்பதற்கு அநுகூலமாக இருக்குமென்ற நினைவைக் கொண்டவளாய், அவர்களை அழைத்து வரும்படி சொல்லியனுப்பிவிட்டு, கதவின்தாளை மாத்திரம் விலக்கியபடி கதவை மூடியவண்ணம் வைத்துவிட்டு ஒரு பெருத்த சால்வையால் கழுத்துவரையில் மூடிக்கொண்டு, நோயாளிபோலக் கட்டிலில் படுத்திருந்தாள். அவ்வாறு 10-நிமிஷநேரம் கழிந்தது. பாலாம்பாளது மனதில் ஆவல் அபார

மாகப் பெருகிக்கொண்டிருந்த தருணத்தில், கையில் லாந்தரோடு முதலில் வந்த வேலைக்காரன், "இப்படி உள்ளே வாருங்கள். அம்மாள் இதோ கட்டிலில் படுத்திருக்கிறார்கள்" என்று பின்புறம் திரும்பி உபசரிக்க, சிவஞான முதலியார் முன்னும், கல்யாணியம்மாள் பின்னுமாக, மிகுந்த லஜ்ஜை யடைந்தவளாய், அந்த சயன அறைக்குள் நுழைந்தனர். சிவஞான முதலியார் கட்டிலை நோக்கி சிறிது தயங்கி, பிறகு வேலைக்காரனது முகத்தைப் பார்த்து, "அம்மாளுக்கு நல்ல தூக்க சமயம்போ லிருக்கிறது. நேற்றுமுதல் உடம்பும் சரியாக இல்லையென்று கேள்விப்பட்டோம். நாங்கள் சமீபத்தில் போகலாமா, பேச செளகரியப்படுமா என்று பார்; அதிகமாக நாங்கள் தொந்தரவு கொடுப்பதில்லை. இரண்டொரு வார்த்தையே பேசவேண்டும்" என்று பாலாம்பாளது செவியில் படும்வண்ணம் மிகவும் அன்பாகவும் நயமாகவும் பேச அப்போதே தனது உறக்கத்திலும், அயர்விலுமிருந்து தெளிவடைகிறவள்போல, பாலாம்பாள் திடீரென்று தனது சிரத்தை உயர்த்தி கண்களைத் திறந்து முற்றிலும் வலிமை யிழந்த குரலில், "வாருங்கள் வாருங்கள்; இப்படி வாருங்கள். இந்த நாற்காலிகளில் உட்கார்ந்துக் கொள்ளுங்கள்" என்று மிகுந்த மரியாதை, பணிவு, அன்பு முதலியவை ஒழுக உபசரித்து அவர்களை வரவேற்றவண்ணம், தனது சால்வையை அப்பால் தள்ளிவிட்டு, எழுந்திருக்க முயன்று பலஹீனத்தினால் எழுந்திருக்கமாட்டாமல் தத்தளிப்பவள்போல நடித்து அரைப்பாகம் எழுந்தவள் திடீரென்று படுக்கையில் வீழ்ந்தாள். அவளது வார்த்தையைக்கேட்ட சிவஞான முதலியாரும், கல்யாணியம்மாளும் கட்டிலிற் கெதிரில் வந்து, அங்கே கிடந்த இரண்டு ஆசனங்களில் அமர்ந்தனர். அந்தத் தருணத்தில், பாலாம்பாள் படுக்கையில் வீழ்ந்ததைக்கண்ட சிவஞான முதலியார் மிகுந்த கவலையும் உருக்கமும் காட்டி, "அம்மா! நீ எழுந்திருக்க வேண்டாம்; அப்படியே படுத்துக் கொண்டிரு; இந்த அகாலத்தில் நாங்கள் உனக்கு நிரம்பவும் சிரமம் கொடுக்கிறோம். நேற்று இரவில் கொள்ளைக்கார நாய்கள் உங்களையெல்லாம் மிகுந்த துன்பத்துக்கு ஆளாக்கிவிட்டார்களென்ற சங்கதி எங்களுக்குத் தெரியும்; உடம்பு அசௌக்கியமாக இருக்கிற சமயத்தில் நீ எழுந்து உட்கார்ந்து எங்களுக்கு உபசாரம் செய்யவேண்டு மென்பதில்லை. செளக்கியமாகப் படுத்துக்கொண்டபடியே இரம்மா" என்று தேனொழுகக் கூற, சிவஞான முதலியார்

ஒரு பெருத்த குள்ளநரி யென்பதை மிகவும் எளிதில் கண்டு கொண்ட பெண் குள்ளநரியான பாலாம்பாள், அவரதைக் காட்டி லும் அதிக நயமான குரலில், "ஆகா! நன்றாயிருக்கிறதே நியாயம்! வரக்கிடைக்காத இப்பேர்ப்பட்ட பெரிய மனிதர்களுக்கு மரியாதை செய்யாமல் இந்த உடம்பை அப்படியாவது நான் காப்பாற்ற வேண் டுமா! தக்க பிரபுக்களான தாங்கள் இருவரும் கேவலம் நாடகம் ஆடுகிற தொழிலுள்ள என்னை ஒரு பொருட்டாக மதித்து இவ்வளவு தூரம் வந்ததையே நான் என்னுடைய பூர்வ ஜென்ம புண்ணியமாக நினைக்கவேண்டும். என்னுடைய உடம்பு மாத்திரம் சரியான நிலைமையி லிருக்கும்போது தங்களை வரவேற்கும் பாக்கி யம் எனக்குக் கிடைத்திருந்தால், நானே ராஜபாட்டைக்கு ஓடி வந்து, மரியாதை செய்து தங்களை அழைத்து வந்திருப்பேனே" என்று கூறியவண்ணம் தட்டித் தடுமாறி மெதுவாக எழுந்து கட்டி லில் உட்கார்ந்துகொண்டாள். அவளது பரிபக்குவமான யௌ வனத்தையும், கண்களையும், மனத்தையும் ஒருங்கே கொள்ளைகொள் ளும் கட்டழகையும், அருமையான நற்குண நல்லொழுக்கத்தையும், எதிர்பாராது கண்ட கல்யாணியம்மாள் பெரிதும் திகைப்பும் வியப்பு மடைந்து, "ஆகா! இப்படிப்பட்ட அற்புத சிங்காரியான பெண்மயி லாள் நாடகமேடையில் தோன்றி இனிமையாகப் பாடி நடித்தால், உலகைத் துறந்த தபசிகள்கூட அவசியம் தங்களுடைய மனவுறு தியை இழந்துவிடுவார்களென்பது நிச்சயம்; அப்படி இருக்க, மைனர் இவளுடைய வலையில் வீழ்ந்தது ஓர் ஆச்சரியமல்ல" என்று தனக் குள்ளாக நினைத்துக்கொண்டவளாய், அவளது சொல்லழகிலும் பல் லழகிலும் ஈடுபட்டு அவளது வதனத்தை உற்று நோக்கிய வண்ணம் இருந்தாள். சிவஞான முதலியாரோ முன்னிலும் அதிகக் குழை வாக பாலாம்பாளை நோக்கி, "என்ன குழந்தாய்! நிரம்பவும் படித்த பெண்ணான நீகூட இப்படி பேசுகிறாயே! மனிதர் திருடக்கூடாது; பொய்சொல்லக்கூடாது; வேறே எந்தத் தொழிலைச் செய்தாலென்ன. முக்கியமான சங்கதி, நாணயமான வழியில் ஜீவனம் செய்யவேண் டியது அவசியமானது. நீ நாடகத்தில் சேர்ந்திருந்தால், அதனா லேயே உனக்கு ஓர் இழிவு உண்டாகிவிடுமா? மனிதருக்கு பணத் தின் மிகுதியாலும், அவர்கள் செய்யும் தொழிலினாலுமா மரியாதை ஏற்படுகிறது? மனிதருடைய நற்குணத்துக்கும் நல்ல நடத்தைக்கும் தக்கபடியே பெருமையும் சிறுமையும் ஏற்படுகின்றன. உன்னுடைய

அருமையான குணங்களைப்பற்றி ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிற படியே நீயும் நடந்துகொள்ளுகிறாய் நடு இரவில் போகிறோமே; மிகவும் அசௌக்கியமாகப் படுத்திருக்கையில் போகிறோமே; எப்படி இருக்குமோ, எப்படிப்பட்ட மரியாதை கிடைக்குமோ, என்று நாங் கள் தயங்கித் தயங்கி வந்தோம். இப்போது உன்னைக்கண்டு உன்னு டைய அருமையான குணத்தைப் பார்க்க, எங்களுடைய மனம் குளிர்ந்துவிட்டது. நாங்கள் கோரிவந்த காரியம் முடிவடைந்ததற்கு மேல் அதிக சந்தோஷம் உண்டாகிறது" என்று புன்னகை செய்த வண்ணம் கூற, அந்த ஸ்தோத்திர மொழியைக்கேட்ட பாலாம்பாள் மிகுந்த வெட்கமும் நாணமு மடைந்தவள்போலக் கோணிக்குனிந்து புன்னகையும் மகிழ்ச்சியும் தாண்டவமாடிய வதனத்தோடு தனது கைவிரல்களைப் பார்த்தவண்ணம், "சரி; தங்கள் சித்தம் என் பாக் கியம்; பெரியவர்களாக இஷ்டப்பட்டுக் கொடுக்கும் புகழ்ச்சியைப் பற்றி ஆக்ஷேபனை சொல்ல சிறியவர்களுக்கு அதிகாரமே இல்லை. சிறியவர்கள் அதை மிகுந்த சந்தோஷத்தோடும் நன்றியறிதலோடும் ஏற்றுக்கொள்ளுவதே கடமை; நேற்று நடுஇரவில் எனக்கு இரண்டு லட்சம் ரூபாய் களவு போனது; இன்று இரவில், மிகவும் பெரிய மனிதர்களான தாங்கள் இருவரும் வந்தது, இரண்டுகோடி ரூபாய் வந்ததுபோ லாயிற்று. நேற்றைய விசனமெல்லாம் இன்றைய சந் தோஷத்தில், இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்விட்டது. அது ஒருபுறம் இருக்க, தாங்கள் ஏதோ அவசரமான காரியத்தைப் பற்றி என்னிடத்தில் பேசவேண்டுமென்று சொன்னதாக, வேலைக் காரன் தெரிவித்தான். அதை இன்னதென்று கேட்காமல், நான் தங்களுடைய கவனத்தை வேறே விஷயத்தில் மாற்றிக்கொண்டிருக் கிறேன். அதுவும் தவிர இந்த ஏழையை இவ்வளவு தூரம் பெருமைப் படுத்தி, இந்த இரவில் வந்துள்ள தாங்கள் இன்னார் என்பதை முதலில் தெரிந்துகொள்ளவும் என் மனம் ஆசைப்படுகிறது" என்று அன்பாக மொழிந்தாள்.

உடனே சிவஞான முதலியார் புன்னகை செய்து, "எல்லா விஷயத்தையும் தெரிவிக்கிறேன். அதற்குமுன் ஒரு சிறிய விஷயம் கேட்க விரும்புகிறேன். நீ ஒவ்வொரு நாளும் ஏதாவது சமாசாரப் பத்திரிகை படிப்பது வழக்கமுண்டா?" என்றார்.

அதைக் கேட்ட பாலாம்பாள், அவரது கருத்தை உணரமாட்டாமல் சிறிது திகைப்படைந்து, "பத்திரிகைகள் படிக்க எனக்கு சாவகாசமே இருக்கிறதில்லை. ஆகையால் நான் படிக்கிறதில்லை. ஏன்? எதற்காக அப்படிக் கேட்கிறீர்கள்?" என்றாள்.

உடனே சிவஞான முதலியார் தமது சட்டைப்பையிலிருந்த சுதேசமித்திரன் பத்திரிகையை எடுத்தவண்ணம், "இது இன்றைய சுதேசமித்திரன் பத்திரிகை. நேற்று இரவில் இங்கே கொள்ளை நடந்ததைப்பற்றிய விவரம் இதில் வெளியாகி இருக்கிறது. நீ பத்திரிகை படிப்பதில்லையென்று சொன்னதிலிருந்து, இதில் வந்துள்ள சங்கதியை நீ படித்திருக்க மாட்டாயென்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆகையால் நான் இதைப் படிக்கிறேன்; கேள் என்று கூறிய வண்ணம் தமக்கு சிறிது தூரத்தில் மாட்டப்பட்டிருந்த விளக்கிற் கருகில் பத்திரிகையை நீட்டி வைத்துக்கொண்டு படிக்க முயன்றார். அவரது மொழியைக் கேட்ட பாலாம்பாள் உண்மையில் வியப்படைந்து "என்ன ஆச்சரியம்! நேற்று நடந்த கொள்ளையைப் பற்றிய சங்கதியை இதற்குள் பத்திரிகையில் போட்டுவிட்டார்களா? எங்கே? என்ன எழுதி இருக்கிறார்கள்? படியுங்கள்" என்று மிகுந்த ஆவலோடு கேட்க, சிவஞான முதலியார் பத்திரிகையிலிருந்த சாமாசாரத்தை திரும்பவும் ஒருமுறை அடியில்கண்டபடி படிக்கலானார்:—


# பெருத்த கூட்டுக் கொள்ளை!

## மூன்று படுகொலைகள்

### திருடர்களுள் ஒருவன் பிடிபட்டான்

ஆலந்தூருக் கருகில் ராஜபாட்டையின்மேலுள்ள மோகன விலாஸ் என்ற பங்களாவில் நேற்றிரவு மூன்றுமணிக்கு ஒரு பெருத்த பயங்கரமான கூட்டுக்கொள்ளை நடந்ததாம். அவ்விடத்தில் பாலாம்பாள் என்ற ஓர் அழகிய பெண் இருந்துவருகிறாள். மைசூரிலிருந்து வந்துள்ள பாலிகா மன மோகன நாடகக் கம்பெனியிலுள்ள முக்கியமான பெண் வேஷக்காரிகளுள் அவள் ஒருத்தியாம். அவளது அழகையும் திறமையையும் கண்டு மோகித்து, அவளை அடைய மாட்டாமல் ஆயிரக்கணக்கில் பெரியமனிதர்வீட்டுப் பிள்ளைகள் மதிமயங்கி அலைகிறார்களாம். அவர்களுள் ஒருவனை யௌவனப் புருஷன் ஒருவன் சென்ற இரண்டு தினங்களாக அந்த பங்களாவுக்

கருகில் காத்திருந்து அவளிடம் தனது ஆசையை வெளியிட, அவள் அதற்கு இணங்கவில்லையாம், அதனால் அவள்மீது கோபங்கொண்ட பையன் அவளை பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு போகும் கருத்தோடு சுமார் பத்து ஆள்களுடன் அவளது பங்களாவில் நுழைந்தானாம். அங்கே கூச்சலிட்ட மூன்று வேலைக்காரர்களை அவர்கள் யாவரும் அடித்துக் கொன்றும், மூன்று வேலைக்காரிகளை ஸ்மரணை தப்பிப் போகும்படி அடித்துப் போட்டுவிட்டு, பாலாம்பாளிருந்த மேன்மாடத்திற்குள் போய் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் பெருமானமுள்ள ஆடையாபரணங்களை அபகரித்துக்கொண்டு, அவளை பலவந்தமாகத் தூக்குமுன், அவளால் டெலிபோன் மூலமாக அனுப்பப்பட்ட செய்தியைக் கேட்ட ஆலந்தூர் போலீஸார் மோட்டாரில் சென்று, உள்ளே நுழைய, திருடர்கள் எல்லோரும் தப்பி யோடிவிட்டனர். அவர்களை அழைத்துவந்த யௌவனப் புருஷன் மாத்திரம் ஓடமாட்டாமல் படுக்கையின் கீழே ஒளிந்துக்கொள்ள, அவனைப் போலீஸார் பிடித்து ஆலந்தூர் ஸ்டேஷனில் கைதி செய்திருக்கிறார்கள். போலீஸார் எவ்வளவு வற்புறுத்தியும், அவன் தனது பெயரையும், தான் யாவனென்பதையும் சொல்லமாட்டேனென்கிறான். தான் அன்றிரவு இரண்டு மணிக்குத்தான் அந்த பங்களாவுக்குள் நுழைந்து அவளோடு சிநேகம் செய்துகொண்டதாக அவன் தாறுமாறாகப் பேசுகிறான். அவள் தான்மாத்திரம் தனிமையிலிருந்ததாகச் சொல்லிவிட்டு மூன்றுமணிக்கு ஸ்மரணைதப்பிப் படுத்தவள் இன்னமும் எழுந்திருக்கவில்லை; டாக்டருடைய பார்வையில் இருந்துவருகிறாள். அந்த யௌவனப் புருஷனுக்கு வயது இருபதிற்குமேலிராது; அவன் குள்ளமாகவும் கருப்பாகவும் மெலிந்தும் காணப்படுகிறான். முதுகு சிறிது கூனலாக இருக்கிறது. தலைமயிர் கிராப் செய்யப்பட்டிருக்கிறது. அவனுடைய மார்பில் மாம்பிஞ்சு போன்ற வடிவமுள்ள ஒரு மச்சம் இருக்கிறது. தேனாம்பேட்டையிலுள்ள பங்களாக்களில் அவனை எங்கேயோ பார்த்திருப்பதாக சில போலீஸ் ஜெவான்கள் சொல்லுகிறார்கள். அவன் தேனாம்பேட்டையிலுள்ள யாரோ ஒரு ஜெமீந்தாரது வீட்டுப் பையன் என்று போலீஸார் சந்தேகித்து பல விடங்களிலும் விசாரித்து வருகிறார்கள். பாலாம்பாள் வாய் பேசும்படியான நிலைமைக்கு வந்த பிறகு போலீஸார் அவளிடம் சரியான வாக்குமூலமும் வாங்கப் போகிறார்கள்.



சிவஞான முதலியார்.　　கல்யாணியம்மாள்.　　பாலாம்பாள்.　　(236-வது பக்கம்)

—என்று சிவஞான முதலியார் படித்து நிறுத்தினர். அந்த விவரங்களைக் கேட்ட பாலாம்பாள் ஒருவாறு திகைப்படைந்தாளானாலும், தனக்கு எவ்வித இகழ்வுக்கும் பழிப்புக்கும் இடமில்லாதிருந்ததைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தவளாய், மைனர் தன்னிடத்தில் நடந்துகொண்ட விவரத்தை அந்த சமாசாரத்திற்கு ஒத்தாற்போல தானும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று தனக்குள் உடனே தீர்மானம் செய்து கொண்டவளாய், அவர்களது செவியில் படும்படியாக தனக்குத்தானே பேசலானாள், "ஓகோ! அப்படியா சங்கதி! இப்போதுதான் நன்றாகத் தெரிகிறது! அந்தப் பையனே இந்தத் திருடர்களை அழைத்து வந்திருப்பானோ வென்று நானும் சந்தேகப்பட்டேன். அதுவே நிஜமாக முடிந்திருக்கிறது; சரி ஒழியட்டும்; துஷ்டனுக்கெல்லாம் இந்த கதிதான் வந்து சம்பவிக்கும்; அவன் தான் யாரென்ற விவரத்தை மறந்துவிட்டால், அதை நான் சொல்லமாட்டேனென்று நினைத்துக் கொண்டான்போலிருக்கிறது. சேவலின் தொண்டையைப் பிடித்துவிட்டால்பொழுது விடியாமல் நின்றுபோய் விடுமென்று நினைப்பதுபோல இது இருக்கிறது. ஆனால் இதில் ஒரு விஷயம் மாத்திரம் தவறாக இருக்கிறது. என்னுடைய நகைகளும் பணங்களும் ஆடைகளும் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறும்; ஆனால், இதில் ஐம்பதாயிரமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் என்னைக் கேட்காமல் வேலைக்காரிகளிடம் கேட்டு உத்தேசமாகப் போட்டிருக்கிறார்கள்போ லிருக்கிறது" என்று கூறி நிறுத்தினாள்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார் வக்கீலாதலால், மைனர் திருடனோடு வந்ததைத் தான் கண்டதாக அவள் சொல்லாததிலிருந்து, மைனர் கொள்ளையில் கலந்தவனென்பதற்கு நேரான சாட்சியமில்லை யென்பதையும் ஏதோ சம்சயத்தின்மேலேயே, அவன் சம்பந்தப்படுத்தப்பட் டிருக்கிறா னென்பதையும் யூகித்துக் கொண்டு, அவனை தாம் எளிதில் தப்பவைத்து விடலாமென்ற ஒருவகையான தைரியத்தை யடைந்தவராய், "இதில் வந்துள்ள விவரம் எப்படியாவது இருக்கட்டும். இங்கே நேற்று இரவில் நடந்த உண்மையான வரலாற்றை நீ எங்களிடம் தெரிவிக்க வேண்டும்." என்றார்.

அதைக் கேட்ட பாலாம்பாள், "இதில் வந்திருக்கும் விவரம் சரியானதுதான். நான் கொஞ்ச நேரத்துக்குமுன் சொன்னபடி,

களவுபோன பொருள் எவ்வளவென்பது மாத்திரம் சரியாகப் போடப்படவில்லை. மற்ற விவரமெல்லாம், நடந்தபடியேதான் போடப் பட்டிருக்கிறது.'' என்றாள்.

சிவஞான முதலியார் புன்சிரிப்போடு, "திருட்டின் விவர மல்லவா இதிலிருக்கிறது. நான் கேட்பது, உனக்கும் அந்தப் பைய னுக்கும் இரண்டு நாட்களாக ஏதோ தகரார் ஏற்பட்டதென்பது தெரிகிறதே; அவன் விவரத்தைக் கேட்க எங்களுக்கு விருப்பமாக இருக்கிறது'' என்று நயமாக கூறினர்.

அதைக் கேட்ட பாலாம்பாள் சிறிது தயங்கி, "தாங்கள் அந் தப் பையனுடைய வக்கீல்போ லிருக்கிறது. நான் அறியாத பெண் பிள்ளை; என்னிடம் தாங்கள் இந்த விவரங்களையெல்லாம் இப்போது கேட்டுக்கொண்டு போய், நாளையதினம் கச்சேரியில் வந்து, தாறு மாறாகக் கேள்விகள்கேட்டு என்னை அழவைத்துவிடுவீர்களோ என் னவோ! அதுதான் பயமாக இருக்கிறது. முதலில் எனக்கு ஒரு விஷயம் தெரியவேண்டும். தங்களிருவருக்கும் அந்தப் பையனுக் கும் என்ன சம்பந்த மென்பதையும் என்னிடம் தாங்கள் என்ன காரியமாக வந்தீர்கள் என்பதையும் தெளிவாகச் சொன்னல், அதன் மேல், நான் உண்மையான விவரங்களை உள்ளபடியே சொல்லிவிடுகி றேன். தாங்கள் எதிர்க்கட்சி வக்கீலாக இருந்தால், நான் எந்த விவ ரத்தையும் போலீஸாரைக் கேட்டபிறகுதான் சொல்ல முடியும். நான் இப்படிச் சொல்வதைப்பற்றி தாங்கள் வருத்தப்படக்கூடாது.'' என்று மிகவும் நயமாக மறுமொழி கூறினாள்.

சிவஞான முதலியார்:—நான் வக்கீல் என்பது உண்மைதான். ஆனல், உன்னுடைய ரகசியங்களையெல்லாம் கிரகித்துக்கொண்டு போய், கச்சேரியில் வந்து உனக்கு விரோதமாக வாதாட வேண்டு மென்னும் எண்ணத்தோடு நான் வந்தவனல்ல. இதோ இருக்கிற இந்த அம்மாள், அந்தப் பையனுடைய தாயார். நான் அந்தப் பையனு டைய போஷகர்களுள் ஒருவன். இவர்கள் நிரம்பவும் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த பெருத்த சமஸ்தானதிபதி. அந்தப் பையன் இவர்களுடைய ஒரே மகன். அவன் யௌவனப் பருவமுடையவ னகையால், உன்னைப் போன்ற நல்ல சுந்தரவதிகளைக் கண்டால், ஆசைப்படுவது இயற்கைதான். அது அவனுடைய குற்றமாகாது. உன்னுடைய அற்புதமான அழகும், திறமையும், நற்குணமே அதற்

குக் காரணம்; அதனால் பையன் உன்னிடத்தில் வந்து, ஏதாவது தகாத விஷயங்களைச் சொல்லியிருக்கலாம். அதைப்பற்றி சந்தேகமே இல்லை. ஆனால், அவன் அதற்காக திருடர்களைக் கொணர்ந்து இப்படிப்பட்ட அக்கிரமங்களைச் செய்விக்கக் கூடியவனல்ல. திருடர்கள் வந்தது தற்செயலாக நடந்த காரியமாகவே இருக்கவேண்டும். இந்தப் பையனுக்கு நாங்கள் அதிசீக்கிரத்தில் கலியாணம் நடத்த உத்தேசித்திருக்கிறோம். அப்படிப்பட்ட சமயத்தில், அவன்மேல் இவ்விதமான வழக்கு வருவது எங்களுக்கு நிரம்பவும் மானஹானியாயிருப்பதோடு, அவனுடைய கலியாணத்துக்கும், ஒரு பெருத்த இடைஞ்சலாக இருக்கிறது. அந்தப் பையனை தண்டனைக்குக் கொண்டுபோவதில் உனக்கும் எவ்விதமான லாபமும் உண்டாகப்போகிறதில்லை. ஆகையால், நாங்கள் இங்கே முக்கியமாக எதற்காக வந்தோமென்றால், அந்தப் பையன் உன்னிடத்தில் ஏதாவது தவறாக நடந்துகொண்டிருந்தால், அவனுக்காக உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதற்கும், உனக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் அதனாலேதான் ஏற்பட்டதென்று நீ அபிப்பிராயப்பட்டு, அதன் பொருட்டு ஏதாவது பணம் பெற்றுக்கொள்ள நீ ஆசைப்பட்டால், அதையும் உனக்குக் கொடுத்து, அந்தப் பையனைத் தப்புவிக்கும்படி கேட்டுக்கொள்வதற்குமேயன்றி வேறல்ல. ஆகையால், நீ எங்களைப்பற்றி வித்தியாசமாக நினைக்காதே அம்மா! எங்களுடைய பையனாலும், திருடர்களாலும், நீ எவ்வளவோ கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகி இருக்கையில், அவைகளை எங்களாலானவரையில் நிவர்த்திக்க வழி தேடவேண்டுமேயன்றி, இந்த சமயத்தில், நாங்கள் மேலும் உனக்குத் துன்பமுண்டாக்க வருவோமா? நாங்கள் அப்படிச் செய்யக் கூடியவர்களல்ல. இந்த அம்மாளுடைய சமஸ்தானம் ஒரு மகாராஜாவின் ஆதீனத்துக்கு சமமானது. இவர்கள் சாதாரணமாக இந்த இடத்துக்கு வரக்கூடியவர்களல்ல. உண்மையில் நடந்த விவரங்களைக் கொஞ்சமும் விடாமல் நீ தெரிவி. நாங்கள் உன்னுடைய பிரியப்படி நடந்துகொள்ளுகிறோம்—என்று தேனொழுக மொழிந்தார்.

பாலாம்பாள்:—(சிறிது யோசனை செய்து) ஓகோ! அப்படியா! அவர் இந்த அம்மாளுடைய பிள்ளையா! நான் பார்த்தவரையில் அவர் இப்படிப்பட்ட மேலான இடத்துப் பிள்ளையாகக் காணப்படவில்

லேயே! அவருடைய பேச்சும் நடத்தையும் சுத்தக் கேவலமாக வல்லவா இருந்தன இரண்டுமூன்று நாள்களாக அவர் என்னுடைய வேலைக்காரன் ஒருவன் மூலமாக எனக்கு ஆயிரம் பதினாயிரம் கொடுப்பதாகவும், தனக்கு வைப்பாட்டியாக இருக்கும்படியாகவும் சொல்லிச் சொல்லி யனுப்பினார். நான் குடும்ப ஸ்திரீயென்றும், அப்படிப்பட்ட கேவலமான நடத்தைக்கு உடன்படக் கூடியவளல்லவென்றும், இனி என்னுடைய நினைவையே மறந்துவிடும்படியாகவும் நான் கண்டிப்பான மறுமொழி சொல்லி அனுப்பிவிட்டேன். நேற்றிரவு ஒருமணிக்கு நான் நாடகக் கொட்டகையிலிருந்து இங்கே வந்து படுத்துக்கொண்டேன். அவர் என்ன செய்திருக்கிறார்? அந்த வேலைக்காரனைக் கைவசப்படுத்திக் கொண்டிருந்தார்போ லிருக்கிறது. என்னிடம் பேசவேண்டுமென்று யாராவது வந்தால், என்னுடைய அநுமதி யில்லாமல் உள்ளே விடவேண்டாமென்று நான் கண்டிப்பாக என்னுடைய வேலைக்காரர்களுக்குச் சொல்லிவைத்திருக்கிறேன். ஆனால் அந்த வேலைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? நேற்று ராத்திரி ஒரு மணிக்கு நான் படுத்துக்கொண்டபோது என்னுடைய படுக்கையறையின் வாசலண்டை வந்து நின்று, "அம்மா! உங்களுடைய சிநேகிதர் ஒருவரை நீங்கள் இப்போது இங்கே வரும்படி சொல்லியிருந்தீர்களாம்; அவர் இதோ வந்திருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டே, கதவைத் திறந்து, உங்களுடைய பிள்ளையை உள்ளே அனுப்பிவிட்டுப் போய்விட்டான். அவர் மளமளவென்று என்னுடைய கட்டிலண்டை வந்துவிட்டார். அந்த அபூர்வமான நிகழ்ச்சியைக் காண என்னுடைய ஆச்சரியம் பிரமாதமாகப் போய்விட்டது. என் மனதிலும் ஒருவிதமான பயம் உண்டாகிவிட்டது. எனக்கெதிரில் வந்து நின்ற மைனரைப் பார்த்து "யாரையா நீர்!" என்று நான்கேட்க, அவர் தம்முடைய பல்லைக் காட்டி நயமாக, தாம் மாரமங்கலம் மைனரென்றும், சென்ற மூன்று நாள்களாய் வேலைக்காரனிடத்தில் சொல்லியனுப்பிய சங்கதியைப் பற்றி நேரில் கேட்டுக்கொள்ளும்படி வந்ததாகவும் சொன்னார். உடனே எனக்கு சகிக்கமுடியாத கோபம் உண்டாகிவிட்டது. நான் அவரைப் பார்த்து, "ஐயா! நான் குடும்ப ஸ்திரீ என்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தும் நீர் என்னுடைய அநுமதி யில்லாமல் இந்த அகாலத்தில் என்னுடைய படுக்கையறைக்கு வந்தது கொஞ்சமும் யோக்கியமான காரியமல்ல. எனக்கு நாதன் ஒருவர் இருக்கி

ரூர். அவருடைய அபாரமான சொத்தெல்லாம் எனக்கே வந்து சேரப்போகிறது. அப்படி இருக்க, நீர் இங்கே வந்து அநியாயமாக என்னுடைய வாயில் மண்ணைப் போட்டுவிடுவீர்போலிருக்கிறது. முதலில் நீர் வெளியில் போம்; ஒரு நிமிஷம்கூட இங்கே இருக்கவேண்டாம்" என்று கண்டித்துச் சொன்னேன். அவர் இந்த இடத்தை விட்டுப்போகாமல் என்னுடைய கட்டிலண்டையில் நெருங்கிவர முயன்று, மிகவும் நயந்து கெஞ்சிக் கூத்தாடி, நான் அவருக்கு வைப்பாட்டியாக இருந்தாலல்லது, அவர் இங்கேயே உயிரைவிட்டு விடுவதாகப் பிதற்றி, அவர்மேல் இரக்கம் கொள்ளும்படியாகவும் வேண்டி, அவர் என்னை சம்சாரம்போலவே பாவிப்பதாகவும், எனக்குக் கிடைக்கும் சொத்தைக்காட்டிலும் நூறு மடங்கு அதிகமான சொத்தை அவர் தருவதாகவும் சொல்லியதன்றி, அதை ஓர் எட்டணு முத்திரைக் கடுதாசியில் எழுதிக் கொணர்ந்திருப்பதாகவும் கூறி, அவருடைய சட்டைப்பையிலிருந்த ஒரு பத்திரத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார். நான் அதைவாசிக்காமல் அலட்சியமாக அப்பால் போட்டுவிட்டு, அவரை நோக்கி, "நீர் சொல்லுவது எதுவும் எனக்கு சம்மதமில்லை. நீர் தயவுசெய்து வெளியில் போம். எனக்கு வேறொரு நாதனிருக்கிறாரென்றால், அதன்பிறகு பேசுவதே சரியல்ல" என்று கடுமையாகப் பேசினேன். அவர் முற்றிலும் பைத்தியம் கொண்டவர்போலப் பிதற்றி, என்னை அணைத்துக் கொள்ளும் எண்ணங்கொண்டு, மோகவிகாரக் குறிகளோடு என் மேல் பாய, நான் கூச்சலிட்டு வேலைக்காரர்களை அழைக்க, அதற்குள் அவர் பயந்துகொண்டு, வெளியில் போனவர், "ஓகோ! உயிரோடு உன்னை நான் விட்டுவிடுவேனென்று நினைக்காதே; ஏதோ இரண்டு வேலைக்காரர்கள் இருப்பதைப்பற்றி நான் பயந்துவிடுவேனென்று நினைக்காதே. இன்றைய இரவு முடிவதற்குள் உண்டு இல்லை யென்பது இரண்டில் ஒன்றை நான் அறிந்துவிடுகிறேன். உன்னுடைய வேலைக்காரர்கள் என்ன பாடு படுகிறார்கள் என்பதைப் பார்" என்று சொல்லிவிட்டு வெளியில் போய்விட்டார். அதன் பிறகு என்னுடைய வேலைக்காரர்களை அழைத்து, அவருக்கு உதவியாக இருந்தவன்மேல் கோபித்து அவனைக் கண்டித்துவிட்டு, பங்களாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லி யனுப்பிவிட்டு, அவர் எழுதிய பத்திரத்தை எடுத்துப் படித்துப் பார்த்தேன். அதில் மகா வேடிக்கையான சங்கதிகள் பல இருந்தன.

BOOK LOVER CIRCULATING

அவர் அப்படியும் செய்வாரா என்ற ஆச்சரிய மடைந்தவளாய் நான் அந்தப் பத்திரத்தை பந்தோபஸ்தாக வைத்துவிட்டுக் கட்டிலில் படுத்துத் தூங்கவாரம்பித்தேன்; உடனே திருடர்கள் வந்துவிட்டார்கள். கீழே இருந்த வேலைக்காரர்கள் பெருத்த கூக்குரல் செய்ய ஆரம்பித்துவிட்டனர். நான் உடனே டெலிபோன் மூலமாக என்னுடைய நாடக எஜமானருக்குச் செய்தி யனுப்பினேன். திருடர்கள் அரை நாழிகைநேரம் வரையில் கீழே இருந்த அறைகளையெல்லாம் சோதனை செய்துவிட்டு மேலே வந்து என்னுடைய அறையில் நுழைந்தனர். அவர்களுள் சிலர் என்னுடைய ஆடையாபரணங்கள் முதலிய சொத்துகளை யெல்லாம் எடுத்து மூட்டைகளாகக் கட்டினர்; வேறே சிலர் என்னுடைய வாயில் துணியை யடைத்து கைகால்களைக் கட்டி, என்னைத் தூக்கிக்கொண்டுபோக முயன்றனர். அதற்குள் போலீஸாரும் நாடக எஜமானும் வந்துவிடவே, திருடர்கள் என்னை மாத்திரம் ஜன்னலின் கம்பியில் கட்டிவிட்டு, சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டனர். என்னுடைய வாயில் துணியடைக்கப்பட்டிருந்த வேதனையாலும், கைகால்கள் கட்டப்பட்டதனாலுண்டான வேதனையாலும், என்னுடைய ஸ்மரணை தப்பிக்கொண்டிருந்தது. போலீஸார் வந்தது போலவும், மெத்தையின் கீழே ஒளிந்துகொண்டிருந்த யாரோ ஒருவரைப் பிடித்தது போலவும் எனக்கு ஒரு நினைவுண்டாகிறது; அதன் பிறகு என்ன நடந்ததென்பது எனக்கு சுத்தமாகத் தெரியாது. ஆனால், அந்த மைனரே திருடரை அழைத்துவந்து, ஓடமாட்டாமல் ஒளிந்திருந்து, கடைசியில் பிடிபட்டுப்போனா ரென்பது இப்போதுதான் நன்றாகத் தெரிகிறது" என்றாள். அவள் சொன்ன வரலாற்றைக்கேட்ட கல்யாணியம்மாளும் சிவஞான முதலியாரும், அதை உண்மையென்றே நம்பிவிட்டதன்றி, அங்கே நடந்த கொள்ளை கொலை முதலிய குற்றங்களில் மைனரும் சம்பந்தப்பட்டவனென்று கோர்ட்டார்நம்பி மைனரை தண்டிக்கப் போதுமான ருஜு இருப்பதைக்கண்டு, பெரிதும் கவலையும் அச்சமும் கொண்டவர்களாய், மேலே தாம் என்ன சொல்வதென்பதை அறியாமல் சிறிது மௌனமாக இருந்தனர். அவளை சரிப்படுத்தி தங்களது விருப்பத்திற்கு இணங்கும்படி செய்வது மிகவும் கடினமாகத் தோன்றியது. முதலில் தாம் அவளுக்கு அந்த சொற்ப விஷயத்தைக் கருதி அபாரமான தொகையான இரண்டு லட்

சம் ரூபாயைக்கொடுக்க வேண்டுமென்ற மலைப்பு அவ்விருவருக்கும் தோன்றியது; அவ்வளவு தொகையைக் கொடுக்க தாங்கள் இணங்கினாலும் அவள் தங்களது சொற்படி நடப்பாளோ என்ற சந்தேகமும் பெரிதாக எழுந்தது. என்றாலும், சிவஞான முதலியார் தமது மனோதைரியத்தை விடாமல், மறுபடியும் அவளிடம் பேசத்தொடங்கி, "குழந்தாய்! நீ சொன்ன விபரத்தைக் கேட்க, நிரம்பவும் விசனமாக இருக்கிறது. மைனர் பௌரஷம் கூறிவிட்டுப் போனதற்கு ஒத்ததாக உடனே திருடர்களும் வந்துவிட்டதிலிருந்து, அவனே அவர்களை அழைத்து வந்தவனென்று நீ நினைப்பது சகஜந்தான். நான் கச்சேரிகளில் இதைப்போல எத்தனையோ வழக்குகள் வருவதை அநுபவத்தில் பார்த்திருக்கிறேன். காக்கை உட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்ததும் ஒத்ததைப்போலவே இது நடந்திருக்கிறது. பையன் சொல்லிப்போனது உண்மையாக இருக்கலாம். ஆனால் திருடர்கள் வந்தது மாத்திரம் தற்செயலாக நடந்ததாகவே இருக்கவேண்டும். உன் விஷயத்தில் இவ்வளவு அதிகமான பிரியம் வைத்த பையன் இவ்வளவு கொடுமையான காரியத்தை ஒருநாளும் செய்திருக்க மாட்டானென்பதை நீ நிச்சயமாக நம்பலாம்; ஏனென்றால், பையனுடைய குணம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவனுக்கு இப்பேர்ப்பட்ட கொள்ளைக்காரர்களுடைய பழக்கமே கிடையாது. பையன் இதில் சம்பந்தப்பட் டிருக்கவேமாட்டா னென்பதை நாங்கள் உனக்கு ஆயிரந்தரம் உறுதிப்படுத்திச் சொல்லக்கூடும்; அவன் செய்திருக்க மாட்டானென்று உன் மனம் திருப்தியடைவதுதான் தரும நியாயமாகும்; அப்படித் திருப்தியடையாமல் அவன்தான் செய்திருப்பானென்ற சந்தேகம் இன்னமும் உன் மனதில் இருக்குமானால், நாங்கள் இவ்வளவு தூரம் கேட்டுக்கொள்வதைக் கருதியாவது, நீ அவன் விஷயத்தில் கொண்ட வருத்தத்தை விலக்கிவிடுவதன்றி, அவனுக்கும் எங்களுக்கும் மானஹானி உண்டாகாமல் அவனைத் தப்புவித்து விடவேண்டியது உன்னுடைய பொறுப்பு; நீ அவனை தண்டனைக்குக் கொண்டு போவதில், உனக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தில் ஒரு காசுகூட திரும்பி வரப்போகிறதில்லை நீ அவனைத் தப்புவித்துவிடுவதாக எங்களுக்கு வாக்குக் கொடுக்கும் பட்சத்தில், அந்த நஷ்டத்துக்கு ஈடாக, நீ எங்களிடம் நியாயத்துக்குப் பொதுவாக எவ்வளவு தொகை கேட்பதானாலும், அதை நாங்கள் இப்போதே கொடுத்து விடுகிறோம். நீ உண்மையில் மேலான குண

முடையவ ளென்பதை இந்த விஷயத்தில் நீ அவசியம் காட்ட வேண்டும்” என்று மிகவும் உருக்கமாக மொழிந்தார்.

அதைக் கேட்ட பாலாம்பாள் சிறிது யோசனை செய்தவளாய் “உங்கள் வீட்டுப் பிள்ளையின்மேல் நான் பகைமை பாராட்டவில்லை. அவர் ஜெயிலுக்குப் போவதிலும், நீங்கள் மானஹானி யடைவதிலும், எனக்கு எவ்வித லாபமாவது பெருமையாவது உண்டாகப் போகிறதில்லை. இந்த விஷயத்தில் என்னால் ஆகக்கூடிய உதவி என்ன இருக்கிறது? அவர் வந்து கொள்ளையடித்ததைக் கண்டதாக நான் பொய் சொல்லப்போகிறதில்லை. இப்போது நான் உங்களிடம் எந்த விவரத்தைச் சொன்னேனோ அதையே நான் வேறே எந்த இடத்திலும் சொல்லவேண்டும். ஆகையால் நீங்கள் ஒரு காரியம் செய்தாலென்ன? என்னை சாட்சிக்கு அழைக்காமலே இந்தக் கேசை முடிவு செய்துவிடும்படி போலீஸாரிடத்தில் ஏற்பாடு செய்துகொள்ளக் கூடாதோ? நான் இதைப்பற்றி போலீஸார்மேல் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதில்லை யென்பதை உங்களுக்கு எழுதி வேண்டுமானாலும் கொடுக்கிறேன்” என்றாள்.

சிவஞான:—சரி; சரி; அதெப்படி முடியும்? உன்னுடைய சாட்சியைத் தவிர, இதில் வேறே சாட்சியமே கிடையாதே. கொள்ளை, கொலை முதலிய பல குற்றங்கள் நடந்திருப்பதாகப் பத்திரிகை மூலமாக வெளியாகி இருக்கிறது. அதற்கு ருஜுவாக உன்னுடைய பங்களாவில் பிணங்களும் அகப்பட்டு டாக்டர் முதலியோர் கொலை நடந்திருப்பதாகத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அப்படி இருக்க, உன்னுடைய சாட்சியமில்லாமல் இந்தக் கேஸை முடிக்கக் கோர்ட்டார் இணங்குவார்களா? அதைப் போலீஸார் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள்; அவர்கள் ஒப்புக்கொண்டாலும், அவர்களுடைய உத்தியோகம் போவதுமன்றி இந்தக் கேஸும் மறுபடி விசாரணைக்கு வந்துவிடும். ஆகையால் எப்படியும் நீ வாக்குமூலம் கொடுத்தே தீரவேண்டும். அப்படிக் கொடுப்பதில் சில முக்கியமான விஷயங்களை நீ மாற்றிச் சொன்னால், அதனால் நமக்கு அநுகூலம் உண்டாகிவிடும். இதுவரையில் போலீசாரும் உன்னிடத்தில் எவ்வித வாக்குமூலமும் வாங்காமலிருப்பதால், நீ இப்போது எப்படிச்

சொன்னாலும், அவர்கள் அதைக்குறித்து உன்மேல் ஆயாசப் படவும் நியாயமில்லை—என்றார்.

பாலாம்பாள்:—அப்படியானால், என்னுடைய வாக்குமூலத்தை எப்படி மாற்றிக்கொள்ளச் சொல்லுகிறீர்கள்?

சிவஞான:—மைனர் இதற்குமுன் உனக்குப் பழக்கமானவனென்றும், திருடர்கள் வந்ததற்கு முன்பாகவே அவன் விருந்தாளியாக இங்கே வந்திருந்ததாகவும், திருடர்களுக்கும் அவனுக்கும் எவ்வித சம்பந்தமு மில்லையென்றும் நீ சொல்லிவிட்டால், அவனை விட்டுவிடுவார்கள். இதைப்பற்றி உன்னையும் கோர்ட்டார் ஒன்றும் செய்ய முடியாது.

பாலாம்பாள்:—ஆகா! நல்ல காரியம் செய்யச் சொன்னீர்களே! என்னை என்ன தாசியென்று நினைத்துக்கொண்டீர்களா? அல்லது வேசையென்று மதித்தீர்களா? ஒரு பெரிய தனவந்தர் தமக்கிருக்கும் ஏராளமான சொத்துகளையும், சம்பாத்தியங்களையும் எனக்கு எழுதிவைத்துவிட்டு என்னைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறார். கண்மணியை இமைகள் காப்பதுபோல, அவர் என்மேல் தம்முடைய உயிரையே வைத்து என்னைக் காப்பாற்றிவருகிறார். நான் இந்தமாதிரி அன்னிய புருஷனோடு சிநேகம் வைத்துக்கொண்டு, அவனோடு நடு இரவில் என்னுடைய படுக்கை அறையில் இருந்தேனென்பதை அவர் கேள்விப்படுவாரானால், அவர் இனிமேல் என்னுடைய முகத்திலும் விழிப்பாரா? தங்கள் பையனுடைய தயவினால், எனக்கு இப்போது இரண்டு லட்சம் பெறுமான சொத்துகள் போய்விட்டன. தங்களுடைய தயவினால் நான் இனிமேல் எனக்கு வரப்போகும் புருஷனையும், அபாரமான செல்வத்தையும், என்னுடைய மானத்தையும் இழந்து, இனி பிச்சை வாங்கவேண்டியதுதான் என்னுடைய கதி. எனக்கு இவ்வளவு அபாரமான பேருதவியை யார் செய்யப்போகிறார்கள்!—என்று கூறினாள்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார் ஒருவாறு ஏமாற்றமும் வெட்கமு மடைந்தாரானாலும், அவற்றை வெளியில் காட்டிக்கொள்ளாமல் சிறிது தத்தளித்தவராய், “குழந்தாய்! கோபித்துக்கொள்ளாதே; நீ இப்போது சொன்ன கலியாண விவரமெல்லாம் எங்களுக்குத் தெரியாதிருந்தமையால், நான் அப்படிச் சொல்ல நேர்ந்தது. இதனால் பெருத்த சங்கடங்கள் நேருமென்று நீ சொல்வதும் நியாய

மாகவே இருக்கிறது. ஆனால், நாம் இன்னொரு காரியம் செய்வோமே? உன்னைக் கலியாணம் செய்துகொள்ளப்போகும் அந்த தனவந்தரிடமே நாங்கள் இதைத் தெரிவித்து எங்களுடைய பையனை எப்படியாவது காப்பாற்றும்படி கேட்டுக்கொண்டாலென்ன? அவருடைய அநுமதியின்மேல் நீ உன்னுடைய வாக்குமூலத்தை நாங்கள் சொன்னபடி மாற்றிக்கொண்டால், உனக்கு எவ்விதமான சங்கடமும் ஏற்படாதல்லவா; அப்படிச் செய்தாலென்ன? அவர் உன்னிடத்தில் நிரம்பவும் அபிமான முள்ளவரென்று நீ சொல்லுகிறாயே! எங்களுக்கு உண்மையில் உதவி செய்ய வேண்டுமென்ற ஓர் அவா உனக்கிருந்தால் நீயும் இந்த விஷயத்தில் அவருடைய மனம் கோணாதபடி அவருடைய அநுமதியைப் பெறக்கூடாதா எங்களுக்காக நீ இந்த உதவி செய்யக்கூடாதா? எப்போதும் இரப்பதற்கே வாராதவர்கள் வந்துவிட்டால், அவர்களை வெறுங்கையோடு அனுப்புவது கண்ணியமாகுமா?'' என்று மகா உருக்கமாக இறைஞ்சிக் கேட்க, பாலாம்பாள், "அவர் இதற்கு ஒருநாளும் இணங்கி வர மாட்டார். தன்னுடைய சம்சாரம் சந்தேகமான நடத்தையுள்ளவள் என்பதைக் கோர்ட்டின் மூலமாக உலகத்தார் அறிவதற்கு எந்தப் புருஷனாவது இணங்குவானா? அவர் இதற்கு இணங்குவதாக வைத்துக்கொண்டாலும், முதலில், நானே இதற்கு சம்மதிக்கமாட்டேன். நான் கற்பை இழந்தவளென்று ஊரார் நினைத்துக்கொள்ளும்படி நடக்க, என் உயிர் போவதினாலும் நான் இணங்கமாட்டேன். பணம் அதிகமாகக் கிடைப்பதானால், அதன்பொருட்டு எப்படிப்பட்ட இழிவான காரியத்தையும் செய்யத்தக்க மனிதர் உலகில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். நான் அந்த வகுப்பைச் சேர்ந்தவளல்ல. என்னுடைய நல்ல நடத்தையும் தேக பரிசுத்தமுமே இணையற்ற ஆபரணம். அவைகளே பெருத்த செல்வம். உங்களுடைய பிள்ளை எழுதி என்னிடம் கொடுத்த பத்திரத்தை நீங்கள் படித்துப் பார்ப்பீர்களானால், என்னுடைய உண்மையான யோக்கியதை உங்களுக்கே தெரியவரும். அவர் எனக்கு எப்பேர்ப்பட்ட பெருத்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார் தெரியுமா? அதைப் படித்தவுடனே, அதற்கு சம்மதித்து விடலாமா என்ற ஓர் எண்ணம் என் மனதி லுண்டாயிற்று. என்னைக் கலியாணம் செய்துகொள்ள ஒருவர் ஆசைப்பட்டு என்னைக் காப்பாற்றி வருகிறாரென்று சொன்னேனல்லவா; அவருக்கு நான் இன்னமும் முடி

வான உறுதி செய்துகொடுக்கவில்லை; அதை மாற்றுவதென்றால் ஒரு நொடியில் மாற்றிக்கொள்ள எனக்கு அதிகாரமிருக்கிறது. இருந்தாலும் எனக்கு அவரைக் கலியாணம் செய்துகொள்வதே உத்தமமாகத் தோன்றுகிறது. எப்படியென்றால், மகாராஜனுக்கு வைப்பாட்டியாக இருந்து மகோன்னத போகம் அநுபவிப்பதை விட, பிச்சைக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டு சம்சாரியென்ற பெய ரெடுப்பதே பெண்பிள்ளைகளுக்கு லட்சணமென்பது என்னுடைய கொள்கை. ஆகையால், உங்களுடைய பிள்ளை எழுதிக்கொடுத்த பத்திரத்தைக்கூட நான் அலட்சியமாகப் போட்டுவிட்டேன். வேறே எவளாயிருந்தாலும், அந்தப் பத்திரத்தை வைத்துக்கொண்டு மைன ரைத் தன் வசமாக்கிக்கொள்வாள்" என்றாள்.

அதைக் கேட்ட சிவஞான முதலியாரது முகம் மிகுந்த கிலேசத் தைக் காட்டியது. மனம் தளர்வையும் ஏமாற்றத்தையும் அடைந்து விட்டது; அவள் மூலமாகப் பையனைத் தப்ப வைக்கலாமென்று தாம் நம்பிவந்தது பயனற்றுப் போய்விட்டதென்றே நினைத்தவராய், அவர் கல்யாணியம்மாளது முகத்தை இடையிடையில் இரண்டொரு முறை நோக்கினார். அவரது முகக்குறிப்பால், அவரது மன நிலைமையை ஒருவாறு யூகித்துக்கொண்ட கல்யாணியம்மாள், தான் தனது சாமார்த்தியத்தை சிறிதளவு உபயோகித்துப் பார்க்கவேண்டு மென்ற எண்ணங் கொண்டவளாய், "ஏனம்மா! மைனர் ஏதோ பத்திரம் எழுதிக் கொண்டுவந்து கொடுத்ததாகச் சொன்னாயே! அந்தப் பத்திரத்தை எங்கேயாகிலும் எறிந்துவிட்டாயா? அல்லது, அது உன்னிடத்தி லிருக்கிறதா? அதைக் கொஞ்சம் பார்க்கவேண் டும்போல ஆசையாக இருக்கிறது எங்கே? அது இருந்தால், தயவு செய்து காட்டமுடியுமா?" என்று அன்பாகவும் நயமாகவும் கூற, அதைக் கேட்ட பாலாம்பாள் தனக்குள் ஒருவாறு மகிழ்ச்சியடைந் தாள். ஏனெனில், அதுகாறும் கல்யாணியம்மாள் வாய்திற வாது அமர்த்தலாக உட்கார்ந்திருந்ததி லிருந்து, அவள் அகம் பாவமும் துஷ்டத்தனமும் துடுக்கும் நிறைந்தவளாக இருப் பாளோ என்று பாலாம்பாள் ஒருவாறு சந்தேகித்திருந்ததற்கு மாறாக, அவள் லலிதமான மனுஷியாயிருந்ததைக் கண்டது அவ ளுக்குப் பெரிதும் திருப்திகரமாக இருந்தது. உடனே பாலாம்பாள் புன்னகை பூத்த வதனத்தோடு "அந்தப் பத்திரம், இந்தக் கட்டி

7487

லில்தான் எங்கேயோ கிடந்தது. இங்கேதான் இருக்கவேண்டும். இதோ எடுத்துக் கொடுக்கிறேன்; பாருங்கள்" என்று கூறியவண்ணம் பின்புறம் திரும்பி, தலையணையைத் தூக்கி, சால்வையைப் புரட்டி, அங்குமிங்கும் சிறிது நகர்ந்து தேடுகிறவள்போலப் பாசாங்கு செய்து, துப்பட்டியை சிறுகச்சிறுக மடக்கி, அதன்கீழ் மெத்தைக்குள் சொருகப்பட்டிருந்த பத்திரத்தை மெதுவாக இழுத்து மேலே வைத்துவிட்டு, மேலும் இரண்டொரு நிமிஷம் வரையில் தேடியபின், அதை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "இதோ இருக்கிறது; ஆனால் நீங்கள் இதைப் படித்தவுடனே என்னிடம் கொடுத்துவிட வேண்டும்; ஏனென்றால், என்னுடைய எஜமானர் கேட்டால், நான் காட்டவேண்டி யிருக்கும்." என்றாள்.

கல்யாணியம்மாள் முன்னிலும் அதிகரித்த அன்போடு, அப்படியே ஆகட்டும்; பார்த்தவுடனே கொடுத்துவிடுகிறோம்" என்று மிகவும் உறுதியாகக் கூறியவண்ணம் சடக்கென்று தனது ஆசனத்தை விட்டெழுந்து விரைவாகக் கட்டிலண்டை சென்று, பத்திரத்தை வாங்கி, சிவஞான முதலியாரிடம் கொடுத்து, அதை உரக்க வாசிக்கும்படி கூற, அவர் அதை வாங்கி அடியில் வருமாறு படிக்கலானார்:—

சென்னை ஆலந்தூருக்கருகில், மவுண்டுரோட்டி லுள்ள ஜெகன் மோகனவிலாஸ் என்று பெயர்கொண்ட பங்களாவிலிருக்கும் மைசூர் பாலாம்பாள் அம்மாளுக்கு, சென்னை தேனாம் பேட்டையிலுள்ள மாரமங்கலம் மைனர் ஜெமீந்தாரான............................துரையவர்கள் எழுதிக்கொடுத்த விவாக ஒப்பந்தப் பத்திரம்.

நான் என் மனப்பூர்வமாக உன்மேல் காதல்கொண்டு, என்னுடைய ஆயிசுகால பரியந்தம் உன்னையே என்னுடைய பாரியாளாக பாவிக்க, நான் என் மனதார விரும்புகிறேன். நமது ஜாதிவித்தியாசத்தைக் கருதி, நான் உன்னை அக்கினி சாக்ஷியாகப் பாணிக்கிரகணம் செய்துகொள்ளக் கூடாதிருந்தாலும், இந்த ஒப்பந்தத்தையே அப்படிப்பட்ட கலியாணம் நடந்ததற்கு சமானமாக ஒப்புக்கொள்ள இதன் மூலமாக நான் கட்டுப்படுகிறேன். நான் உன்னைத்தவிர, என் ஆயிசுகாலத்தில், வேறே எவளையும் இனி அக்கினிசாக்ஷியாகக் கலி

யாணம் செய்துகொள்ளுகிறதில்லை. தவறி செய்துகொண்டாலும், நீயே முதல் மனைவியாகவும், உன் வயிற்றில் பிறக்கும் முதல் புத்திரனே சமஸ்தானத்துக்கு பிந்திய வார்சாகவும் ஆக, இதன் மூலமாய் உங்களுக்கு நான் உரிமை ஏற்படுத்தி இருக்கிறேன் உன்னை நான் பார்யாளாக ஏற்றுக்கொண்ட இந்த நாள்முதல் மாதம் ஒன்றுக்கு உன்னுடைய தேகபோஷணைச் செலவுக்காக ரூபாய் ஐயாயிரம் கொடுத்துவர நான் கட்டுப்படுகிறேன். உன்னுடைய வயிற்றில் குழந்தைகள் ஜனிக்குமானல் அவைகள் ஒவ்வொன்றுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்க ஒப்புக் கொள்ளுகிறேன்.

இன்னம் பத்து நாட்களுக்குள் இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு நீ கேட்கும் ஆபரணங்களை வாங்கித்தரக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன்; தவிர என்னுடைய மைனர் பருவம் நீங்கி, நான் சமஸ்தானத்தை ஒப்புக்கொள்ளும் தினத்தன்று, உனக்கு ஐந்து லக்ஷம் ரூபாய்க்கு ஆபரணங்கள் தரித்து, சமஸ்தானத்து அரண்மனையில் பட்டமகிஷியின் ஸ்தானத்தில் கொண்டுபோய் உன்னை வைத்துக் கொள்ள இதன் மூலமாக நான் கட்டுப்படுகிறேன். இந்த நிபந்தனைகளில் எதையாகிலும் நான் செய்யத் தவறுவேனாகில் நீ சிவில் கிரிமினல் முதலிய நியாய ஸ்தலங்களின் உதவியைக் கொண்டு இந்த நிபந்தனைகளை நிறைவேற்றிக்கொள்ள உனக்கு இதன் மூலமாக அதிகாரம் உண்டாக்கிக் கொடுக்கிறேன். இந்தப் பத்திரம், சட்டப்படி விவாகத்துக்கு சமதையாக ஆகாதென்று கோர்ட்டார் தீர்மானித்தாலும், அல்லது, நான் இதற்கு மாருக, அக்கினி சாக்ஷியாக இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டாலும், அதுவரையில் உன்னுடைய கற்பை யழித்ததற்காக ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு கொடுக்க இதன் மூலமாக நான் கட்டுப்படுகிறேன். இந்தப் பத்திரத்தை திரிகரண சுத்தியாக நான் நல்ல அறிவோடிருக்கையில் என் மனப்பூர்வமாக எழுதிக்கொடுத் திருக்கிறேன்.

இப்படிக்கு எழுதிய தள்பட,

மாரமங்கலம் மைனர்...................................துரை

என்று எழுதப்பட்டிருந்த பத்திரத்தை சிவஞான முதலியார் படித்தார்; அவரது மனதிலும் கல்யாணியம்மாளது மனதிலும் பெருத்த வியப்பும் திகைப்பும் எழுந்து அவற்றை முற்றிலும்

குழம்பச் செய்தன. அவ்வளவு சிறிய பையனான மைனர், பெண் மோகங் கொண்டு, எவ்வளவு அபாரமான காரியத்தைச் செய்திருக்கிறானென்பதைக் காண, அவர்களிருவரும் பெருத்த திக்பிரமை கொண்டவராய் இரண்டொரு நிமிஷநேரம் மௌனம் சாதித்தனர். அந்தப் பத்திரம் மைனரது கையினாலேயே எழுதப்பட்டதென்பதை அவர்கள் நிச்சயமாக உணர்ந்துகொண்டனர். மைனர் அவளைக் கலியாணம் செய்யக்கூடாமலிருந்த நிலைமையில் அவளைப் பட்டமகிஷியாக ஆக்க இணங்கியதிலிருந்து அவள்மீது அவன் கொண்டுள்ள காமாந்தகாரம் எவ்வளவு அதிகமானதென்பது சந்தேகமற விளங்கியதாகையால், அவள் அதற்கு இணங்காததுபற்றி அவன் பலாத்காரமாக அவளைக் கொண்டுபோக முயன்றிருப்பானென்பதும் நிச்சயமாக ஏற்பட்டது. சிவஞான முதலியாரது மனதில் உடனே ஓர் எண்ண முதித்தது அந்தப் பத்திரத்தை பாலாம்பாள் மாஜிஸ்டிரேட்டின் கோர்ட்டில் பதிவு செய்தால் அந்தக் கொள்ளைக்கும் கொலைக்கும் மைனரே காரணகர்த்தா வென்பது ருஜுவாகிவிடு மாதலால், எப்படியாவது தந்திரம் செய்து அந்தப் பத்திரத்தை பாலாம்பாளிடம் கொடாமல், தாங்கள் கொண்டு போவது நல்லதென்று நினைத்தார். ஆனால், கல்யாணியம்மாளது மனதிலோ வேறே விதமான அச்சம் தோன்றியது. தாங்கள் பத்திரத்தை அவளிடம் திருப்பிக்கொடாமல் அப்போதே கிழித்தெறிந்தாலும், அல்லது, வேறே வகையில் தந்திரம்செய்து அதைக் கொண்டுபோய்விட்டாலும், பாலாம்பாள் தங்கள்மீது பகைமை கொண்டு, பையனும் கொள்ளைக்காரர்களோடு வந்து கொள்ளை கொலை முதலியவற்றைச் செய்தானென்று தனது வாக்குமூலத்தை அவள் மாற்றிக்கொண்டால், பையனது காரியம் முன்னிலும் அதிகமாகக் கெட்டுப்போய் விடுமென்று நினைத்தவளாய், பத்திரத்தை அவளிடம் கொடுத்துவிட நினைத்து, சிவஞான முதலியாரிடத்திலிருந்து அதை வாங்கி, பாலாம்பாளிடம் திருப்பிக் கொடுத்துவிட்டாள். அவர்கள் அதைத் திருப்பிக் கொடுக்காமல், ஏதாவது மோசம் செய்துவிடுவார்களோ என்ற ஐயம் பாலாம்பாளது மனத்திலும் உண்டானதானாலும், மைனரது உயிரும், அவர்களது மானமும் தனது கையிலிருப்பதுபற்றி, அவர்கள் எவ்வித மோசமும் செய்யமாட்டார்கள் என்ற துணிபினால், அவள் பத்திரத்தை அவர்களிடம் அலட்சியமாகக் கொடுத்தாள். அவளது நினைவின்படியே கல்யாணியம்மாளும்

அதைத் திரும்பவும் அவளிடம் கொடுத்துவிடவே, அதை வாங்கிக் கொண்ட பாலாம்பாள், "பார்த்தீர்க ளல்லவா? இந்தப் பத்திரம் அவருடைய கையெழுத்துதானே?" என்றாள்.

கல்யாணி:—ஆம்; அவனுடைய எழுத்தைப்போல்தான் இருக்கிறது. இல்லாவிட்டால், நீ பொய் சொல்லவா போகிறாய்?

பாலாம்பாள்:—அவர் என்மேல் அபாரமான பிரியம் வைத்திருக்கிறாரென்பது இதிலிருந்து நன்றாகத் தெரிகிறது. அவரோ சிறுபிள்ளை; பெரிய சமஸ்தானத்தின் அதிபதியாகப் போகிறவர்; என்னை பட்டமகிஷியாக ஒப்புக்கொள்ளவும் கட்டுப்படுகிறார். அப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால், ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு கொடுப்பதாக எழுதிக் கொடுத்திருக்கிறார். இத்தனை பெருத்த நன்மைகளையும், நான் எதனால் மதிக்கவில்லை. இப்போது என்னைக் கலியாணம் செய்துகொள்வதாக இருப்பவர் நிரம்பவும் வயதானவர். அவருடைய சொத்தெல்லாம் சேர்ந்தால், நாலைந்து லட்சத்துக்கு இருக்கும். அப்படி இருந்தும், நான் ஏன் இந்த மைனருடைய ஏற்பாடுகளை அலட்சியம் செய்தேனென்றால், வீட்டிலுள்ள பெரியவர்களுக்குத் தெரியாமலும் ஒழுங்கான கலியாண மில்லாமலும் திருட்டுத்தனமாக அவருக்கு சம்சாரமாக இருக்க என் மனம் ஒப்பவில்லை. அதுவே முக்கியமான காரணம். இதனால் மானஹானியும், வழக்குகளும், வியாஜ்ஜியங்களுமே எனக்கு வந்து நேருமல்லது, உண்மையான பெருமையும் சந்தோஷமும் ஏற்படப்போவதில்லையல்லவா—என்றாள்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள் சிறிது துணிபடைந்தாள். ஏனெனில், அதுகாறும் சிறிதும் பிடிகொடாமல் பேசிய பாலாம்பாள் அப்போது, தனது முறுக்கை சிறிதளவு தளர்த்தியதைக் காணவே, கல்யாணியம்மாள் மேலும் பேசத்தொடங்கி, "எப்படியாவது ஒருயோசனை செய்து, நீதான் எங்களுடைய மானத்தைக் காப்பாற்றவேண்டும். உன்னைப் பார்க்கும்போதே நீ மகா உத்தமியென்பது நன்றாகத் தெரிகிறது. நீ எப்படிப்பட்ட பெருத்த நிதியையும் ஒரு திரணமாக நினைத்து, மானத்தையே முதன்மையானதாக மதிக்கிறவளென்பதற்கு இதைத் தவிர வேறே ருஜுவே தேவையில்லை. அப்படி இருப்பதால், உன்னிடம் தாறுமாறான ஏற்பாடுகளைப்பேச எனக்கு மனம் துணியவில்லை. நீ மாத்திரம்

எங்களுடைய ஜாதியைச் சேர்ந்தவளாக இருந்தால், இந்நேரம் நான் இவ்வளவு தூரம் தாமதிக்கமாட்டேன்; யார் எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டுமென்று உன்னையே என்னுடைய பையனுக்குக் கலியாணம் செய்து வைத்துவிடுவேன். பையனோ உன்னிடத்தில் தன்னுடைய உயிரையே வைத்திருக்கிறான். அழகிலும் நற்குண நல்லொழுக்கத்திலுமோ உனக்கு சமமானவள் இந்த உலகத்தி லிருப்பாளோ வென்பதே சந்தேகம். ஆனால், நாடகத்தில் சேர்ந்திருந்த ஒரு பெண்ணை, மாரமங்கலம் ஜெமீந்தாரினியம்மாள் தன்னுடைய பிள்ளைக்குக் கட்டிவிட்டாளென்று ஜனங்கள் அவதூறாகப் பேசுவார்கள். அதைப்பற்றி நான் கொஞ்சமும் இலட்சியமே செய்கிறவளல்ல. காரியம் பெரிதேயன்றி வீரியம் பெரிதல்ல. எப்படியாவது நீதான் பெரிய மனசு செய்து, இந்த சமயத்தில் எங்களுக்குக் கைகொடுக்க வேண்டும்" என்று மிகவும் இரக்கமாக நயந்து வேண்டிக்கொண்டாள். அப்போது கல்யாணியம்மாளது நிலைமையோ நிரம்பவும் பரிதாபகரமாக இருந்தது. சிவஞான முதலியாரோ மேலே என்ன செய்வதென்பதை அறியமாட்டாமல் சிந்தனையிலாழ்ந்தவராய், மைனரால் எழுதப்பட்டுள்ள பத்திரத்தில் கண்ட விஷயங்களெல்லாம் சட்டப்படி செல்லக்கூடியவைகளா அல்லவா என்பதைப்பற்றி மனதிலேயே சட்ட ஆராய்ச்சி செய்யலானார். என்றாலும், அவரது கவனம் மற்ற இருவரும் சம்பாஷித்ததிலும் சென்றுகொண்டே இருந்தது.

கடைசியாக, கல்யாணியம்மாள் வேண்டிக்கொண்டவுடனே பாலாம்பாள் மிகுந்த குழப்ப மடைந்தவள்போலத் தனது இடது கையால் நெற்றியை அழுத்திக்கொண்டு இரண்டொரு நிமிஷநேரம் ஏதோ யோசனை செய்தவளாய், "நீங்கள் என்னை தரும சங்கடத்தில் விட்டுவிட்டீர்களே. இப்பேர்ப்பட்ட பெரிய பிரபுக்களாகிய நீங்கள், கேவலமான நிலைமையிலுள்ள என்னிடம் ஒரு விஷயத்தை அபேக்ஷிக்க, அதை நான் செய்யக்கூடாதவளா யிருக்கிறேனே என்பதுதான் என் மனதை வதைக்கிறது. அந்தப் பிள்ளையால், மானத் தோடிருக்கும் எத்தனை பேருக்கு தீராத்துன்பம்; மீளாத அவமானம்; நான் நன்றாக யோசனைசெய்து பார்க்கப் பார்க்க, மைனர்விஷயத்திலும் எனக்குப் பெருத்த இரக்கமும் விசனமும் உண்டாகின்றன; என்னிடம் அவர் வைத்திருக்கும் பிரேமைக்கும் காதலுக்கும் கைம்மாறாக நான் அவருக்கு விரோதமாக கோர்ட்டில் வாக்குமூலம்

கொடுத்து, அவரைக் கடுமையான தண்டனைக்கு ஆளாக்க வேண்டியிருக்கிறதே என்பதுதான் என் மனதிலும் ஒரு புறத்தில் அறுத்துக்கொண்டே இருக்கிறது. நீங்கள் இவ்வளவு தூரம் கேட்டுக் கொள்வதைக் கருதி, என்னாலான உதவியை நான் செய்யத் தடையில்லை. நீங்களே ஒரு யோசனை சொல்லுங்கள்; நான் அப்படியே செய்கிறேன். ஆனால், முன்னே நீங்கள் பிரஸ்தாபித்தபடி, என்னுடைய கற்பைப்பற்றி பிறர் சந்தேகிக்கும்படியாக, நான் கோர்ட்டில் நடந்துகொள்ளாமல் வேறே விதத்தில் ஏதாவது யோசனை சொல்லுங்கள். அதன்படி செய்கிறேன்'' என்றாள். அதைக் கேட்ட கல்யாணியம்மாள் சிந்தனையிலாழ்ந்தாள். மைனரால் எழுதிக் கொடுக்கப்பட்ட பத்திரத்தை பாலாம்பாள் ஒப்புக்கொண்டு, அதன்படி மைனருக்கு வைப்பாக அவள் இருக்க விரும்பினால், அதன் பொருட்டு கடைசியில் மைனர் அவளுக்கு ஜீவனும்சமோ, அல்லது, நஷ்டஈடோ கொடுக்க நேருமன்றி, சட்டப்படி அவள் பட்டமகிஷி ஆகமாட்டாளென்று கல்யாணியம்மாள் அபிப்பிராயப்பட்டாள். தவிர, மைனருக்குக் கல்யாணம் செய்துவைக்க உத்தேசப்பட்டிருப்பவளான கண்மணியம்மாளை மிகவும் நன்றாக தண்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கல்யாணியம்மாள் மிகவும் பிடிவாதமாகக் கொண்டிருந்தவளாதலால், பாலாம்பாளை மைனருக்கு வைப்பாட்டியாக, தானே ஏற்பாடு செய்து வைத்துவிட்டால், அதனால் பல விஷயங்கள் அநுகூலமாக முடிந்து விடுமென்று அந்த அம்மாள் எண்ணினாள். முதலில் மைனர் விடுதலையடைந்து விடுவான்; அதனால், தனக்கு ஏற்படவிருக்கும் மானஹானியும் துன்பங்களும் நிவர்த்தியாகிவிடும்; மைனர், தான் நாடகப் பெண் விஷயத்தில் கொண்ட விருப்பத்தை, தனது தாயே, பூர்த்திசெய்து வைத்தாளென்று நினைத்து இனியாகிலும் தனது சொற்படி நடந்து கொள்வான். இவைகளைவிட அதிக முக்கியமான இன்னொரு பலன், மைனரை மணக்கப்போகும் கண்மணியம்மாளையும், இது பெரிதும் தண்டிப்பது போலாகும். பாலாம்பாளுக்கு பட்ட மகிஷியின் ஸ்தானமும், அவளது வயிற்றிலுதிக்கும் பிள்ளைக்கு ஜெமீந்தாரென்ற பட்டமும் உண்மையில் கிடைக்கப் போகிறதில்லையானாலும், அவற்றின் பொருட்டு பாலாம்பாளும், கண்மணியம்மாளும் பிற்காலத்தில் பலவகையில் சச்சரவுகள் செய்து கொள்ளவும், நேருமாதலால், அதனாலுண்டாகும் துன்பங்களை கண்மணியம்மாள் அநுபவிக்கவேண்டி வருமென்ற ஒரு திருப்தியை

யும் கல்யாணியம்மாள் எதிர்பார்த்ததன்றி, மைனர் பாலாம்பாளை வைப்பாக வைத்துக்கொண் டிருப்பதுபற்றி கண்மணியம்மாள் எப்போதும் தொந்தரவுப்பட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்றும் விரும்பினுள். மேற்கூறப்பட்ட இத்தனை அநுகூலங்களையும் கருதி, மைனரது விருப்பப்படி பாலாம்பாள் அவனுக்கு வைப்பாக இருக்க தான் அநுமதி கொடுத்துவிடலா மென்ற ஒருவகையான முடிவிற்கு கல்யாணியம்மாள் வந்தாளாகுலும், அதற்கு பாலாம்பாள் இணங்குவாளோ மாட்டாளோ என்ற ஐயம் அவளைப் பெரிதும் வதைத்தது. அவள் தானிருந்த நாற்காலியை விட்டெழுந்து, தானும் சிவஞான முதலியாரும் தனிமையில் இரண்டொரு நிமிஷ நேரம் பேசிவிட்டு வருவதாக பாலாம்பாளிடம் சொல்லிவிட்டு, அவரோடு அந்த அறையின் வாசற்படிக்கப்பால் மறைவாகப்போய், தாங்கள் என்ன செய்யலா மென்பதைப்பற்றி அவரிடம் கலந்து யோசனைசெய்யத் தொடங்கினுள். அவ்வாறு கால்நாழிகை நேரம் சென்றது. இருவரும் ஒருவகையான முடிவுசெய்து கொண்டு திரும்பி உள்ளே வந்து ஆசனங்களில் அமர்ந்தனர். உடனே கல்யாணியம்மாள் பாலாம்பாளை நோக்கி ஏதோ பேச வாயைத் திறந்தவள், அந்த இழிவான விஷயத்தை எப்படிப் பிரஸ்தாபிப்பதென்ற நினைவினுல் லஜ்ஜையடைந்து தயங்கி இரண்டொருதரம் கனைத்துக்கொண்டாள். அவள் தன் மனதை வெளியிடமாட்டாமல், பின் வாங்குகிறுளென்பதை யுணர்ந்து கொண்ட பாலாம்பாள் புன்சிரிப்போடு அவளை நோக்கி, மனதிலுள்ளதைச் சொல்லி விடுங்கள். அதைப்பற்றி ஏன் இவ்வளவு யோசனை? நீங்கள் எதை வேண்டுமாகுலும் கேட்கலாம். அதைப்பற்றி நான் வருத்தப்படுவேனென்று நினைக்க வேண்டாம். நீங்கள் சொல்வது என்னுடைய மனப்போக்குக்கு ஒத்ததாக இருந்தால், ஆகட்டுமென்று நான் இணங்கி விடுகிறேன்; இல்லையானுல் வேறே ஏதாகிலும் வழியுண்டாவென்று பார்க்கலாம்" என்று அந்தரங்க அன்போடு கூற, அதைக் கேட்ட கல்யாணியம்மாள் துணிவடைந்தவளாய், "நமக்குள் ஒருவருக்கொருவர் அந்தரங்கமான நட்பு ஏற்பட்டுவிட்ட பின், இனி நாம் விஷயங்களை மறைப்பது சரியல்ல. உலகத்தார் அறிய எங்களுக்கு மானஹானி வராமல் தடுப்பதாக வாக்குறுதி சொல்லியிருக்கும் உன்னிடம், நான் தவருன பிரரேபணை ஏதாவது செய்து, அதை நீ ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிடுவதனுல், எனக்கு

அவ்வளவு பிரமாதமான அவமானம் வந்துவிடுமா? அது இல்லை. விஷயம் என்னவென்றால், நாம் இருவரும் இதுவரையில் சம்பாஷித்ததிலிருந்து நம்மிருவருக்கும் அதிகமான பேதம் ஒன்றுமில்லை. நீ எனக்கு மருமகள் ஆவதற்கு வேண்டிய சகலமான சிறப்புகளும் மேம்பாடுகளும் உன்னிடத்தில் நிறைவாக இருக்கின்றன. கடைசியில் ஜாதி வித்தியாசமொன்றே நடுவில் நின்று போராடுகிறது, அதைக் கூட நான் லட்சியம் செய்யக் கூடியவளல்ல. ஆனால், ஜாதி வித்தியாசமுள்ளவர்கள் சாஸ்திரப்படி கல்யாணம் செய்துகொள்ள, புரோகிதரும் சுற்றத்தாரும் ஜனங்களும் ஆட்சேபனை சொல்லுவார்களே என்ற ஒரே அச்சத்தினால் நான் பின் வாங்குகிறேன். என்னுடைய சமஸ்தானத்துக்கு நானே ஏகசக்ராதிபதி யாகையால், நான் இந்நேரம் உன்னை என்னுடைய பையனுக்கு ஜாம் ஜாமென்று தாலிகட்டி வைத்துவிடுவேன். நீயும் என்ன சொன்னாய்; வீட்டிலுள்ள பெரிய மனிதர்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமான சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பதனால், இழிவும் துன்பங்களுமே நேருமென்று நீ சொன்னாய். அதிலிருந்து நான் தெரிந்துகொள்வதென்ன வென்றால், பெரியோர் அறிய ஒழுங்கான முறையில் ஏற்படும் பட்சத்தில், இந்த சம்பந்தத்துக்கு நீயும் ஒப்புக்கொள்ளுவாயென்றே எண்ணுகிறேன். ஆகையால், இந்த விஷயத்தில் நம்மிருவர் மனமும் ஒத்துப்போய்விட்டது. குறுக்கில் நிற்பது, ஜாதி என்ற அர்த்தமில்லாத ஆட்சேபனையொன்றே. நமக்கு ஜாதியும் வேண்டாம், கலியாணமும் வேண்டாம். இயற்கையாக நம்முடைய மனம் எந்த விஷயத்தை நாடுகிறதோ, அதை நாம் பூர்த்தி செய்வதே உத்தமமென்று நான் எண்ணுகிறேன். ஆகையால், மைனர் உனக்கு எழுதிக் கொடுத்திருக்கிற பத்திரத்தை நீ ஜாக்கிரதையாக வைத்துக்கொள். அவனுடைய தாயாராகிய நானும் போஷகர்களுள் ஒருவராகிய இந்த ஐயாவும் இதற்கு சம்மதிக்கிறோம் இன்னொரு போஷகரிருக்கிறார்; அவரும் இதற்கு சம்மதிக்கும்படி நான் செய்கிறேன். கலியாணம் நடந்து ஏற்பட்ட மருமகளைக் காட்டிலும் நூறு மடங்கு சிறந்த அருமையான மருமகளாக உன்னை நான் இன்று முதல் பாவிக்கிறேன். உனக்கு இந்தப் பத்திரமொன்றே போதுமான ஆதாரம் உனக்கு இரண்டு லட்சம் ரூபாயல்லவா நஷ்டமுண்டாயிற்று. இந்தக்ஷணம் முதல், என்னுடைய சமஸ்தானம் முழுதிற்கும் நீயே எஜமானியாக இருந்து, இரண்டு லட்சமல்ல

இருபது லட்சம் ரூபாய் வேண்டுமானாலும் நஷ்டஈடு செய்துகொள்; சம்மதம். இனி உன்னுடைய இஷ்டப்படியே நாங்கள் எல்லோரும் நடந்து கொள்ளுவோ மென்பதை நீ உறுதியாக நம்பலாம்" என்று மிகவும் குழைவாகவும் அன்பாகவும் பேதம் பாராட்டாமல் மிகவும் அன்னியோன்னியமாக நெருங்கி விட்டவள்போலவும் பேசினாள். பாலாம்பாள் அப்படிப்பட்ட பிரஸ்தாபத்தையே எதிர் பார்த்தாளா னாலும், அதை எதிர்பார்த்தவள் போல, சிறிது வியப்பும் திகைப் பும் காட்டி, குழப்பமடைந்தவள்போல திரும்பவும் தனது நெற்றி யைப் பிடித்துக்கொண்டு கீழே குனிந்தவண்ணம் இரண்டொரு நிமிஷநேரம் யோசனை செய்தவளாய், மிகுந்த நாணமடைந்தவள் போல நடித்து மெதுவாக நிமிர்ந்து, புன்னகை செய்து, "நீங்கள் கேட்டுக் கொள்வதற்கு, இன்னவிதமான மறுமொழி சொல்வதென் பது எனக்குத் தோன்றவில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட காகிதக் கலியாணம் நடப்பதும், இவ்விதமான மருமகள் ஏற்படுவதும் இப்படிப்பட்ட பிரஸ்தாபம் செய்வதும் உலகத்திலேயே இதுவரை யில் நடக்காத காரியங்களாகையால், இதற்கு இணங்குவதா, அல்லது இதை மறுப்பதாவென்பது எனக்கே தெரியவில்லை. எவ்வளவோ பெருத்த சமஸ்தானத்தின் அதிகாரியான பெருத்த சீமாட்டி தமக்கு வந்திருக்கும் துன்பத்தையும் மானஹானியையும் விலக்கும் படி இவ்வளவுதூரம் நயந்து கேட்கும்போது, கொஞ்சமும் இரக்க மின்றி நிர்தாக்ஷண்யமாகப் பேச, என் மனம் ஒப்பவில்லை. ஆனால், மைனர் என் விஷயத்தில் செய்த கொடுமையான காரியங் களை நினைத்தால், அவருடைய விஷயத்திலும் இரங்குவதா என்ற ஒரு பதைப்பு உண்டாகிறது. அதுவும் தவிர, இவ்வளவு நீண்ட காலமாக, என்னைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்னும் ஆசையோடு, என்னைத் தம் உயிர்போலப் பாதுகாத்து, ஏராளமான தம்முடைய சம்பாத்தியங்களையெல்லாம் என் விஷயத்தில் திரண மாக மதித்து வாரி இறைத்து, என்னை சந்தோஷப்படுத்துவதையே பெருத்த பாக்கியமாக மதித்திருக்கும் அந்த மனிதரை விலக்குவ தென்றால், அதற்கு என்மனம் எளிதில் இடங்கொடுக்குமா? இப் போது என்னுடைய நிலைமை மிகவும் தருமசங்கடமானதாக இருக் கிறது. தங்களுடைய பெருத்த துன்பத்தைப் பார்த்தால் தங்க ளுக்கும் உதவிசெய்ய வேண்டுமென்று இருக்கிறது; என்னுடைய எஜமானுடைய பரிதாபகரமான நிலைமையை நினைத்தால், அவரைக்

கைவிடாமல், அவருடைய வேண்டுகோளுக்கிணங்க வேண்டு மென்று மிருக்கிறது. இதை எப்படி முடிவுகட்டுகிறது? தாங்கள் வக்கீலாதலால் இதன் நியாய அநியாயங்களை எடுத்து என்மனம் திருப்தியடையும்படி சொல்லுவீர்களானால், அதன்படி நான் உடனே செய்துவிடுகிறேன்.'' என்றாள்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார் சிறிது தத்தளித்தாரானா லும், அவ்வளவு தூரம் வழிக்கு வந்திருப்பவளை விடக்கூடாதென் றும், ஏதேனும் ஒருவிதமான நியாயத்தை எடுத்துச் சொல்லி, அவ ளது சம்மதியைப் பெற்றுவிட வேண்டுமென்று நினைத்தவராய், "அம்மா குழந்தாய்! நீ தயாளகுணமும் நடுநிலை தவறாத தர்ம குண மும் உள்ள மனதைக் கொண்டவளென்பது நன்றாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட உத்தமகுணம் எல்லாரிடத்திலும் இருப்பது அருமை. உன்னைப்பற்றி நான் அடையும் சந்தோஷமும் பெருமையும் இவ்வ ளவு அவ்வளவென்று சொல்லமுடியாது. நீ இந்த ஒரு விஷயத்தை முடிவுகட்டுவதற்கு இவ்வளவு சங்கடப்படுகிறாயே! நியாயஸ்தலங் களில் ஒவ்வொருநாளும் எத்தனையோ வழக்குகளும் வியாஜ்ஜியங் களும் வந்து வாதாடப்படுகின்றன. சில வழக்குகளில் வாதி சொல் வதும் நியாயமாக இருக்கிறது; பிரதிவாதி சொல்வதும் நியாயமாக இருக்கிறது. அப்படிப்பட்ட வழக்குகளில் நியாயாதிபதி எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறது தெரியுமா! அந்த மாதிரி எத்தனையோ தரும சங்கடமான வழக்குகள் ஒரு நாளில் முடிவடைகின்றன. இரண்டு கட்சிகளுக்கும் நியாயாதிபதி அநுகூலம்செய்ய எப்படி முடியும்? ஏதாவது ஒரு கட்சிக்குத்தானே அநுகூலம் கிடைக்கும்; அதைப்போல நீயும் ஏதாவது ஒருவருக்குத்தான் அநுகூலம் செய்ய வேண்டும். ஆனால், எவருக்கு அநுகூலம் செய்கிறதென்பதை எப் படித் தீர்மானிக்கிறதென் றல்லவா என்னைக் கேட்டாய்? அதற்கு ஒரு யோசனை சொல்லுகிறேன். அதை நீ நன்றாக கவனிக்கவேண் டும். என்னவென்றால், நீ இப்போது, உன்னுடைய பழைய நண் பரையே கலியாணம்செய்து கொள்ளத் தீர்மானிப்பதாக வைத்துக் கொள்வோம்; அப்போது எங்களுக்கு நேரும் துன்பம் என்ன வென்றால், மைனர் மரணதண்டனையோ, தீவாந்தர தண்டனையோ, அல்லது, சிறைச்சாலை தண்டனையோ, அடைவது நிச்சயம். அத னால், அவனுக்கும், அவனுடைய தாயார், கலியாணமாகாத

இரண்டு சகோதரிமார் முதலியோருக்கும் என்றைக்கும் நீங்காத அவமானமும், தலைகுனிவும் ஏற்படும். அவன் சிறைச்சாலையி லிருந்து திரும்பி வந்தால், அவனுக்கு தக்க இடத்தில் கலியாணம் நடப்பதே சந்தேகமாகிவிடும். அதனால் பலவகையான துன்பங்கள் ஏற்படும். அப்படி யின்றி, நீ எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, இந்த அம்மாளுக்கு மருமகளாக வர இசைந்தால், உடனே மைனர் விடுதலையடைந்து விடுவான்; அவனுடைய குடும்பத்தாருக்கு எவ்வித துன்பமும் துயரமும் இல்லாமல் போகின்றன. ஆனால் உன்னுடைய பழைய சிநேகிதருக்கு என்ன நஷ்டமென்பதை கவனிப்போம். தாம் ஆசைப்பட்ட பெண் தமக்குக் கிடைக்கவில்லையே என்ற விசனம் அவருக்கு உண்டாகும்; அதைப்பற்றி சந்தேகமில்லை. அது சொற்ப காலத்தில் படிப்படியாக மறைந்துபோகும். உலகத்தில் வேறே எத்தனையோ அழகான பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுள் எவளையாவது கலியாணம் செய்துகொள்வது அவருக்கு எளிய காரியம். அதனால் அவருடைய ஆசை பூர்த்தியாகிவிடும்; நீ அவரைக் கலியாணம் செய்துகொள்ளாமல் போவதால், அவருக்கு பிரமாதமான துன்பம் வந்துவிடுமென்று நினைக்கவே நியாயமில்லை. அவருடைய விஷயம் முற்றிலும் சிற்றின்ப ஆசையைப் பொருத்தது. எங்களுடையதோ பிரமாதமான விபத்தை பொருத்தது. அவரை நீ கலியாணம் செய்துகொள்ள மாட்டேனென்று சொல்வதற்கு உனக்கு அதிகாரமிருக்கிறது; அப்படிச்சொல்வதால், உனக்கு எவ்விதமான இழுக்குமுண்டாகாது; ஆனால் பெருத்த ஆபத்திலிருக்கும் எங்களுக்கு, உன்னால் எளிதில் செய்யக்கூடிய இந்த உதவியை செய்ய மறுத்தால், அதனால் உனக்குப் பெருத்த பாவம் வந்து சம்பவிக்கும். நான் சொல்லும் தாரதம்மியத்தை நீ நன்றாக யோசித்துப் பார்" என்று, நியாயஸ்தலத்தில் வாதாடுவதுபோல நயமாக எடுத்துரைத்தார்.

அதைக் கேட்ட பாலாம்பாள் ஒருவாறு திருப்தியடைந்தவள் போல நடித்து, "தாங்கள்சொல்வதும் நியாயமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் பழைய அன்பு குறுக்கிட்டுப் போராடுகிறது. சரி; நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கிறதுபோ லிருக்கிறது. அக்கினி சாக்ஷியாகக் கலியாணம்செய்து கொள்ளவேண்டு மென்று நினைத்ததற்கு, காகிதம் சாக்ஷியாகக் கலியாணம் நடக்கிறதுபோலிருக்கிறது; சரி, அவரவர்கள் கொடுத்து வைத்த அளவுதானே கிடைக்

கும். தங்களுடைய விருப்பம் போலவே நடந்து கொள்ளுகிறேன். ஆனால் என்னைக் கேவலம் வைப்பாட்டியைப்போல இழிவாக மதிப்ப தாயிருந்தால், நான் இதற்கு இணங்கவே மாட்டேன். எந்த விஷய மும் இந்தப் பத்திரத்தில் எழுதப்பட் டிருக்கிறபடியே நடக்க வேண்டும். அது உங்களுக்கு சம்மதந்தானே ?' என்றாள்.

சிவஞான முதலியார்:—ஆகா ! தடையில்லை.

கல்யாணியம்மாள்:—இதுவரையில் நாங்கள் சொன்னதெல் லாம் அந்த நிபந்தனைகளின்படி நடப்பதாகவேதான் சொன்னோம்.

பாலாம்பாள்:—நிரம்ப சந்தோஷம். ஆனால் இதில் இன்னொரு காரிய மிருக்கிறது. மைனர் நிரம்பவும் சிறுபிள்ளையாகையால், அவரை நான் வஞ்சித்து மயக்கி, அவருடைய மனதுக்கு மாறாக இந்தப் பத்திரத்தை எழுதி வாங்கிக்கொண்டதாக, நாளைக்கு ஜனங் கள் என்மேல் அவதூறு சொல்ல ஆரம்பிப்பார்கள் ; அப்படிப்பட்ட துன்பமெல்லாம் எனக்கு நேராமல் தாங்கள் பார்த்துக் கொள்வீர் களா ?—என்றாள்.

சிவஞான:—அதற்கு சந்தேகமென்ன ? உன்னை நாங்களே சேர்த்து வைத்திருக்க, பிறகு நாங்கள் பிறழுவோமா ?

பாலாம்பாள்:—அப்படியானால், என்னுடைய திருப்தியின் பொருட்டு ஒரு காரியம் செய்யுங்கள். தாங்கள் இருவரும், இதற் கடியில் சாட்சிகளாகக் கையெழுத்துச் செய்துவிடுங்கள். அந்த ஓர் உறுதியே எனக்குப் போதுமானது. அந்த மைனரே ஏகதேசத் தில் எழுதியிருப்பதை வெளியில் காட்டுவதற்கே எனக்கே வெட்க மாக இருக்கிறது—என்றாள்.

அவளது சொல்லைக்கேட்ட இருவரும் திடுக்கிட்டுப் போயினர். ஏனெனில், அவள் அவ்வாறு தங்களையும் அதில் மாட்டிவிடுவா ளென்பதை அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. அந்தப் பத்தி ரத்தை ஆதாரமாக வைத்துக்கொள்ளச் செய்து, அந்த ஆபத்தை நிவர்த்தி செய்துகொண்டால், பிறகு அவளுக்கு ஏதேனும் ஜீவனாம் சம் கொடுத்துவிடலா மென்பது அவர்களது கருத்து ; ஆனால், அவள் அவர்களது கையெழுத்தையும் வாங்கிவிடவேண்டு மென்னும் நோக் கத்தோடேயே தொடக்கத்திலிருந்து அந்தப் பத்திரத்தை தான் அலட்சியமாக மதிப்பதாகவும், அவர்களது விருப்பத்திற்கு இணங்க

மனமில்லாதவள் போலவும் நடித்து வந்தவளாதலால், அவள் தந்திர மாக, அவர்களது கையெழுத்தை அவசியம் போட்டே தீர வேண்டிய நிலைமைக்கு அவர்களைக் கொணர்ந்து விட்டாள். அந்த சமயத்தில் அவர்கள் கையெழுத்துச் செய்யத் தயங்கினால், அவர்க ளது சொல் ஏமாற்றமானதென்று அவள் நினைத்து, உதவிசெய்ய மறுத்து விடுவாளோ என்ற அச்சம் பிறந்து விட்டமையால், அவர் கள் அதற்கு எவ்வித சமாதானமும் சொல்லமுடியாமல் போய்விட் டது. இருந்தாலும் சிவஞான முதலியார் அவளைப் பார்த்து, "என்ன குழந்தாய்! பெரிய மனிதர்கள் என்று ஆதியிலிருந்தே நீ எங்களைப் புகழ்ந்ததென்ன? எங்களுடைய வார்த்தையில் உனக்கு இன்னம் நம்பிக்கை ஏற்படவில்லையா? சூரியன் திசை மாறிப்போனாலும், நாங்கள் சொன்ன வாக்குறுதியை மீறமாட்டோம்." என்று தனுக் காக மொழிந்தார்.

உடனே பாலாம்பாள் புன்னகை செய்து, "எத்தனையோ ஜனங் களுக்கு முன்னால், அக்கினி சாக்ஷியாகத் தாலிகட்டும்போது கூட, ஆகாயவாணியையும் பூமாதேவியையும் சாக்ஷி வைக்கிறார்களே! இப்போது நான் அதிகமாக ஒன்றையும் கேட்கவில்லை. மகா ஜனங்க ளுடைய சாக்ஷியும் எனக்குவேண்டாம்; அக்கினியின் சாக்ஷியையும் நான் கேட்கவில்லை. ஆகாயவாணியாகிய வக்கீல் ஐயாவும் பூமாதேவி யான என்னுடைய மாமியாரும் சாக்ஷியாக இருப்பதே போது மானது; அதிகமாக ஒன்றும் வேண்டாம்." என்று வேடிக்கையாக மொழிந்தாள்.

அதன் பிறகு கல்யாணியம்மாளும், சிவஞான முதலியாரும் திருடனுக்குத் தேள்கொட்டிய நிலைமையை யடைந்து, தங்களது மனதிற்கு நேர்விரோதமாக, அந்தப் பத்திரத்தின் அடியில் தங்களது கையெழுத்தைச் செய்து கொடுத்தனர். அதை வாங்கிக்கொண்ட பாலாம்பாள், எதிர்பாராமல் தனக்கு வந்து வாய்த்த அபாரமான அதிர்ஷ்டத்தையும் மகோன்னத பதவியையும் நினைத்துக் கரைகடந்த மகிழ்ச்சியடைந்து, பூரித்துப் புளகாங்கித மெய்தியவளாய், தனது ஆநந்தப் பெருக்கைத் தாங்கமாட்டாதவளாய்த் தத்தளித்து, "சரி; இதுவரையில், எனக்கு நானே எஜமானியாக இருந்துவந்தேன். இது முதல் அந்த நிலைமை நீங்கிவிட்டது. இனிமேல் புருஷன், மாமியார் ஆகிய இருவருடைய சொல்லின்படி கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய வள் ஆகிவிட்டேன். என்னுடைய கஷ்ட சுகங்களையும் இன்பதுன்

பங்களையும் நீங்களே ஏற்றுக்கொண்டு விட்டீர்களாகையால் அதைப் போலவே, நானும் நடந்துகொள்ளத் தயாராக இருக்கிறேன்." என்று மிகுந்த பணிவோடும் நன்றியறிதலோடும் கூறினாள்.

கல்யாணியம்மாளும், சிவஞான முதலியாரும் வெளிப்பார்வைக்குச் சந்தோஷமாக அந்தப் பத்திரத்தில் கையெழுத்துச் செய்து கொடுத்தனராயினும், அவர்களது மனம் தாங்கள் செய்த பெருத்த தவறைக் குறித்து அப்போதே பெருத்த விசனமும் கவலையும் கொள்ளத் தொடங்கிவிட்டது. இருந்தாலும், அந்தச் சமயத்தில் தங்களது உண்மையான உணர்ச்சியை வெளியில் காட்டிக்கொள்ளாமல் மறைத்துக்கொண்டனர். உடனே சிவஞான முதலியார் பாலாம்பாளை நோக்கி, "இப்போது சுமார் பதினொன்றரைமணி ஆகியிருக்கலாமென்று நினைக்கிறேன். உன்னுடைய பலஹீனமான நிலைமையில் உனக்கு இப்போது இன்னமும் அநாவசியமான தொந்தரவு கொடுக்க எங்களுக்கு மனமில்லை; உன்னிடமிருந்த சொத்துகளெல்லாம் கொள்ளைபோய் விட்டனவாதலால், உனக்குப் பணவிஷயத்தில் அசௌகரிய மிருக்கலாம். அதுவும் தவிர, நீ இனி உன்னுடைய பழைய நண்பரையும் விலக்கவேண்டியவ ளாகையால், அவரிடத்திலிருந்தும், இனி நீ பணத்தை எதிர்பார்ப்பது நியாயமல்ல. ஆகையால், இப்போது உனக்கு ஏதாவது அவசரச் செலவுக்குப் பணம் தேவையானால் வாங்கிக்கொள். கொடுத்துவிட்டுப் போகிறோம்; இனி நீ எங்கே இருப்பது என்ற மற்ற விஷயங்களையெல்லாம் நாம் நாளையதினம் கலந்து பேசிக்கொள்வோம்." என்றார்.

பாலாம்பாள்:—அப்படியே பேசிக்கொள்வோம். எனக்கு இப்போது பணம் ஒன்றும் தேவையில்லை; எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் இன்னொரு விஷயம்; நேற்று இங்கே கொள்ளை நடந்த பிறகு, இரவில் இங்கே தனியாக இருப்பதற்கு நிரம்பவும் பயமாக இருக்கிறது; இன்றைப்பொழுதை எப்படியாவது இங்கேயே போக்கிவிடுகிறேன். நாளைக்கு நான் பட்டணத்துக்கே வந்துவிட வேண்டும்; தாங்கள் பார்த்து எங்கே வைக்கிறீர்களோ அங்கே இருக்கிறேன்—என்றாள்.

கல்யாணி:—எங்களுடைய பிள்ளைக்கு வேறோர் இடத்தில் பெண் பார்த்திருக்கிறோம். திடீரென்று அந்தச் சம்பந்தத்தை வேண்டாமென்று சொல்லுவது சந்தேகத்துக்கு இடமாகும். ஆகையால் சிறுகச் சிறுக அதை ஒருவகையாகப் புங்கீடு செய்யவேண்டும்,

அதன் பிறகு, நீ நம்முடைய பங்களாவுக்கே வந்துவிடலாம். அது வரைக்கும், உனக்கு வேறே தனியான நல்ல ஜாகை அமர்த்திக் கொடுக்கச் செய்கிறேன். அதில் சொற்ப காலம் நீயும் மைனரும் சந்தோஷமாக இருங்கள்.

பாலாம்பாள்:—ஆம்; அதுதான் நியாயம்; அப்படியே செய்கி றேன்—என்றாள். அதைக் கேட்ட கல்யாணியம்மாள் தனக்குள் ளாகவே பெரிதும் மகிழ்ச்சியடைந்தாள். ஏனெனில், அவள் தன்னை தங்களோடு தேனாம்பேட்டை பங்களாவுக்கு உடனே அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பாளோ என்றும், அந்த வெட்கக்கேட்டைத் தனது பெண்களும், மற்றவரும் அறிந்து கொள்வார்களே என்றும் அவள் பெரிதும் அஞ்சியிருந்தாளாதலால், முக்கியமான அந்தக் கவலை நீங்கியது. அதன் பிறகு சிவஞான முதலி யார் பாலாம்பாளை நோக்கி, "உன்னைச் சந்தோஷமாகவும் வசதியாக வும் வைக்கவேண்டிய பொறுப்பு இனி எங்களுடையது; இப்போது நாம் செய்யவேண்டிய முதல்காரியம் மைனரைப் போலீஸாரிடத்தி லிருந்து விடுவிப்பதல்லவா? அதை எப்படிச் செய்யலாம்? சப் இன்ஸ் பெக்டர் இப்போதும் கச்சேரியில் இருக்கிறார். நான் போய்ப்பார்த்து விட்டுவந்தேன். ஆனால், நான் பையனுக்குச் சம்பந்தமானவனென்ப தைச் சொல்லவில்லை. உன்னுடைய உடம்பு இன்னமும் குணப்பட வில்லையென்று அவர் தெரிந்துகொண்டிருப்பதால், நாளைக்குக் காலை யில் அவர் வாக்குமூலம் வாங்க இங்கே வருவார். இப்போது நீ நேரிலாவது ஆள் மூலமாகவாவது, மைனரைப்பற்றிய செய்தியை நீ அவரிடம் தெரிவித்தால், அவர் ஒருவேளை சந்தேகப்படலாம். ஆகை யால் நாம் காலைவரையில் பொறுத்திருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நாங்கள் இப்போது எங்களுடைய பங்களாவுக்குப் போய் விட்டுக் காலை 10 மணிக்கு இங்கே வருகிறோம்; அதற்குள், சப் இன்ஸ்பெக்டர் வந்து வாக்குமூலம் கேட்டால், நீ என்ன சொல்லப் போகிறாய்?" என்றார்.

பாலாம்பாள்:—நீங்கள் முதலில் சொல்லிக்கொடுத்தபடியே சொல்லி, அவரை உடனே விடுவிக்கும்படி செய்கிறேன். இனிமேல் அந்தப் பொறுப்பு என்னுடையதல்லவா? தாங்கள் வருவதற்குள், அவரைமீட்டு அழைத்துவந்து இங்கே இருக்கச் செய்கிறேன். இந்த அகாலத்தில் நீங்கள் தேனாம்பேட்டைக்குப் போவதுகூட எனக்குச் சம்மதமில்லை. இங்கேயே வசதியாகப் படுத்துக்கொள்ளச் சொல்லி விடுவேன். ஆனால், அதில் ஓர் இடைஞ்சலிருக்கிறது; நான் இங்கே

தனிமையில் இருக்க மிகவும் அஞ்சினேனுகையால், என்னுடைய நண்பரான நாடக எஜமான், இன்று வி. பி. ஹாலில் நாடகம் முடிவடைந்தவுடனே, இங்கே வருவதாகச் சொல்லியிருக்கிருர்; தாங்கள் இருப்பதை அவர் காணவும், தாங்கள் இன்னுரென்றும், இன்ன காரியமாக வந்தீர்களென்றும் நான் சொல்லவும் நேரும். அது என் மனதுக்குப் பிடிக்கவில்லை. ஏனென்ருல், நாளை முதல், அந்த நாடகத்தையும், அவருடைய நட்பையும் நான் விட்டொழிக்கப் போகிறவளாகையால், அவரிடம் நம்முடைய ரகசியங்களையெல்லாம் எதற்காக வெளியிடுகிறது?—என்ருள்.

சிவஞான:—சரியான காரியம். ஆனுல் இப்போது நீ சொன்னதிலிருந்து எனக்கு இன்னொரு கவலை உண்டாகிவிட்டது. உன்னுடைய பழைய நண்பரும், உனக்கு இதுவரையில் பேருபகாரியாக இருந்து வந்தவருமான அவரை நீ மறுபடியும் காணும்போது உன்னுடைய மனம் ஒருவேளை அவர் விஷயத்தில் இரக்கம் கொண்டாலும் கொண்டுவிடும். அதனுல், நீ உன்னுடைய மனதை மாற்றிக் கொள்ள நேர்ந்தாலும் நேர்ந்துவிடும். அதற்காக நீ ஒரு காரியம் செய்யவேண்டும்; இதனுல் உன்னை நான் நம்பவில்லையென்று நினைத்துவிடாதே. உன்னுடைய மனது தயாளமான மனதாகையால், அது திரும்பிவிடாமலிருக்கும்பொருட்டு முன் ஜாக்கிரதைக்காக, நான் இதைச் சொல்லுகிறேன்.—என்ருர்.

பாலாம்பாள்:—நான் ஒருதரம் வாக்குக் கொடுத்தால், இந்த உலகம் அழிந்தாலும், என்னுடைய அந்த உறுதி மாத்திரம் மாருது. இருந்தாலும், தாங்கள் அதற்காக என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?—என்ருள்.

சிவஞான—வேறென்றுமில்லை. நீ உன்னுடைய கையால் ஒரு கடிதம் எழுதி எங்களிடம் கொடுக்கவேண்டும். ஆனுல் நாங்கள் நேரில் வந்ததாகவே இருக்கக்கூடாது. இந்தப் பத்திரம் நெடு நாளைக்கு முன்னரே எழுதப்பட்டதாக இருக்கவேண்டும்; நீ இப்போதே ஸ்மரணையிலிருந்து தெளிவடைந்ததாகவும், உன்னுடைய சயன அறையிலிருந்த மைனரைப் போலீஸார் தவறுதலாகத் திருடனென்று மதித்துப் பிடித்துக்கொண்டு போயிருப்பதாக இப்போதே நீ கேள்விப்பட்டதாகவும், நாளைக் காலையில், போலீசாரிடம் உண்மையைத் தெரிவித்து அவரை விடுவிக்கப் போவதாகவும், மைனரைப்பற்றி இன்றிரவு கவலைப்படாதிருக்கும்படியாகவும் நீ இங்கிரு

ந்து எங்களுக்கு ஆள்மூலமாக இப்போது எழுதி யனுப்பியதுபோல ஒரு கடிதம் எழுதிக் கொடு. அதுவே போதும்.—என்றார்.

அதைக்கேட்ட பாலாம்பாள் அதற்கிணங்க, சிவஞான முதலியார் தமது சட்டைப்பையிலிருந்த வெறுங்காகிதங்களுள் ஒன்றையும், தமது பவுண்டன் பேனாவையும் எடுத்து பாலாம்பாளிடம் கொடுக்க, அவள் அவரது சொற்படி ஒரு கடிதம் எழுதி, அவரிடம் கொடுத்த தன்றி, பத்திரத்தின் அடியிலும், இரண்டு மாதத்திற்கு முந்திய ஒரு தேதியை சிவஞான முதலியார் போடும்படி செய்வித்தாள். கடிதத்தை வாங்கி ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டபின், சிவஞான முதலியார், தாம் போவதாகச் சொல்லிக்கொண்டு எழுந்திருக்க, கல்யாணியம்மாளும் எழுந்து பாலாம்பாளிடம் செலவு பெற்றுக் கொண்டாள். உடனே அவர்களிருவரும் அந்தச் சயன அறையை விட்டு வெளிப்பட்டு மெத்தைப் படிகளின் வழியாகக் கீழே இறங்கி வர, லாந்தரோடு ஆயத்தமாக நின்ற வேலைக்காரன், அவர்களுக்கு முன்னால் வெளிச்சம் காட்டி, பெட்டி வண்டியில் அவர்களை ஏற்றுவிக்க, வண்டிக்காரன் குதிரையைத் தட்டி ஓட்ட ஆரம்பித்தான். லாந்தர் வைத்திருந்த வேலைக்காரன் முன்னால் ஓடி இரும்புக்கம்பிக் கதவைத் திறந்துவிட, அடுத்த நிமிஷம் பெட்டிவண்டி ராஜபாட்டையை யடைந்து, சென்னையைநோக்கிச் செல்ல ஆரம்பித்தது; லாந்தரோடு வந்த வேலைக்காரன் திரும்பவும் கதவைமூடிப் பூட்டிக் கொண்டு பங்களாவிற்குள் போய்விட்டான்.

அப்போது இரவு சுமார் பதினொன்றரை மணிக்குமேல் ஆகியிருக்கலாம். அன்றிரவு சாதாரண இருளாக இருந்தமையாலும், ஆகாயத்தில் எண்ணிறந்த நட்சத்திரங்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தமையாலும், வழியும், மரங்களும், வயல்களும் நன்றாகத் தெரிந்தன. பெட்டிவண்டியின் முன்னும் பின்னும் நான்கு லாந்தர்கள் பொருத்தப்பட்டிருந்தனவாதலால், வண்டியைச் சுற்றி, நாலைந்து கஜ தூரம் வரையில், வெளிச்சம் நன்றாகப் பரவி இருந்தது. நடு இரவாகி விட்டதைக்கருதி சிவஞானமுதலியார், வண்டியை விசையாக ஓட்டும்படி சொல்ல, வண்டிக்காரன் தனது சவுக்கை மிகவும் தாராளமாக உபயோகிக்கத் தலைப்பட்டான். அவன் சற்றேறக்குறைய நாற்பது வயதடைந்த முரட்டு மனிதனாதலால், அவனது அடிகள் குதிரைக்குச் சகிக்க இயலாது போகவே, அது நாற்கால் பாய்ச்சலில் பிடுங்கிக் கொண்டு பறக்க வாரம்பித்தது. அந்த அதிர்ச்சியையும், அலட்டலையும் தாங்கமாட்டாமல் கல்யாணியம்மாள் பெரிதும் வருந்தினளேனும், நடு இரவில் தாங்கள் நிருமானுஷ்யமான பாதையில் போவ

தைக் கருதி அத்தனை துன்பங்களையும் பொறுத்துக்கொண் டிருந்தாள். வண்டி கிடுகிடாயமாகச் சென்றுகொண்டே இருந்தது. அன்றைய சம்பவங்களைக் குறித்தும், தாங்கள் பத்திரத்தில் கையெழுத்துச் செய்த விஷயங்களைக் குறித்தும், அவர்கள் ஒருவரோடொருவர் தங்களது எண்ணங்களை வெளியிட விரும்பினார்களானாலும், தாங்கள் பேசும் சங்கதிகள் வண்டிக்காரனது செவிக்கு எட்டிவிடுமோ என்ற நினைவினால் அஞ்சி அந்த விஷயங்களைப்பற்றியே பேசாமல், மெதுவான குரலில், அந்தப் பாதையைப்பற்றியும், மரங்களைப் பற்றியும், அதிக இருளில்லா திருந்ததைப்பற்றியும், அப்போதைக் கப்போது லோகாபிராமமாகப் பேசிக்கொண் டிருந்தனர்; பெட்டி வண்டி, கிண்டி ரயில்வே ஸ்டேஷனைக் கடந்து, சைதாப்பேட்டை தாலுக்காக் கச்சேரி அடையாற்றுப்பாலம் முதலியவற்றைக் கடந்து மவுண்டு ரோட்டின் வழியாகச் சென்றது. எங்கும் ஒரு மனிதராகிலும் காணப்படா திருந்தனர். உலகமே மூர்ச்சை ஒடுக்கி யோகாப்பியாசம் செய்ததோ வென்னலாம்படி எங்கும் நிச்சப்தம் குடிகொண் டிருந்தது. மரம், செடி, புல், பூண்டு, விலங்கு, பறவைகள் முதலிய யாவும் இரவாகிய போதையில் ஆழ்ந்து உணர்வற்றுக் கிடந்தன. நாய்கள் குரைப்பதும் ஒடுங்கிப்போ யிருந்தது. உலகத்திலுள்ள சகல கோடி ஆன்மாக்களும், எவரது பாதுகாப்புமின்றி நிராதரவாகத் துயில்கின்றனவே என்று நினைத்துக் கவலை கொண்டு நட்சத்திரங்களாகிய பாராக்காரர்கள் விழித்த கண் மூடாமல் மிகுந்த எச்சரிக்கையோடு காவல் புரிந்திருக்க, பெட்டிவண்டி மாத்திரம் சென்றுகொண் டிருந்தது. அவ்வாறு சென்றுகொண்டிருந்த வண்டி கலெக்டர் பங்களாவுக்கு அப்பாலுள்ள பெருத்த ஏரியின் பக்கமாக வந்தபோது, படேரென்று குதிரையின் முகத்தில் ஓர் அடிவிழுந்தது. அதே நிமிஷத்தில் வண்டிக்காரனது தலைமீது ஓர் அடி விழ, அவன், "அப்பாடா" என்று வீரிட்டுக்கொண்டு பாட்டையில் வீழ்ந்துவிட்டான். குதிரை அடியைப் பொறுக்கமாட்டாமல் துள்ளிக் குதித்து, வண்டியைச் சடேரென்றுப் பின்னால் தள்ளியவண்ணம் நின்றுவிட்டது. அதற்குள் வண்டியின் கூண்டிலும், பக்கத்திலிருந்த பலகைகளிலும், மழை பெய்வதுபோல, மூங்கில் தடிகளின் அடிகள் தடதடவென்று வந்து விழுந்தன. உள்ளே இருந்த கல்யாணியம்மாளும்; சிவஞான முதலியாரும் பெருந்திகில் கொண்டு நடுங்கி, அன்றோடு தங்களுக்கு முடிவுகாலம்

வந்துவிட்டதென்று நினைத்து, மூலைகளில் பதுங்கிய வண்ணம், "யாரப்பா அடேய்! எங்களைத் தொந்தரவு செய்யவேண்டாம். எங்களிடம் இருப்பதையெல்லாம் கொடுத்துவிடுகிறோம். அடிக்கவேண்டாம் அடிக்கவேண்டாம்" என்று கூச்சலிட்டலற, கையில் பெருத்த மூங்கில் தடிகளோடு பனைமரங்கள்போல நின்ற இரண்டு திருடர்கள், வண்டியிலிருந்த லாந்தரிலொன்றைக் கையிலெடுத்துக்கொண்டு "சரி; எறங்கு கீளே! ஒண்ணுகூட பாக்கி இல்லாமெ, எல்லாத்தியும் போடு இப்பிடி! வாயைக் கீயை தொறக்கப்போறெ, அத்தோடே மண்டைப்பூச்சு மாண்டுபூடும்" என்று அதட்டியவண்ணம், கதவைத் திறந்துவிட, சிவஞான முதலியாரும், கல்யாணியம்மாளும் கலகலத்துப் போய், உடனே கீழே இறங்கி விட்டனர். அவர்களது உடம்பு முழுதும் வியர்வை வெள்ளத்தால் அபிஷேகமாகி விட்டது. கால்கள் பூமியில் நிற்கமாட்டாமல் நடுங்குகின்றன. தங்கள்மீது அடிவீழ்ந்து விடுமோ என்ற பெரும்பீதியினால், அவர்களிருவரும் தங்களது ஆடையாபரணங்களை யெல்லாம் கழற்றிக் கொடுக்கலாயினர். சிவஞான முதலியாரது தங்க மூக்குக்கண்ணாடி முதல், கால் ஜோடு வரையிலுள்ள சகல பொருட்களும் பிரயாணம் புறப்பட்டுவிட்டன. அவர்மீது ஒரு கோவணமொன்றே செயற்கைப் பொருள் மிஞ்சியது. அதைப்போல, கல்யாணியம்மாள் கொண்டு வந்திருந்த சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமான நோட்டுகளும், அவளது தேகத்திலிருந்த அபாரமான விலையுள்ள வைர ஆபரணங்களும் ஆகிய சகலமானவற்றையும் அவள் கொடுக்கும்படி ஆகிவிட்டது. அவளது விலையுயர்ந்த பட்டுச் சேலையையும் விட்டுவிட மனமற்ற திருடர்கள் சிவஞான முதலியாரிடத்திலிருந்து பறித்த வஸ்திரமொன்றை அவளுக்குக் கொடுத்து அணியச்செய்து, சேலையையும் பிடுங்கிக் கொண்டனர். அவ்வாறு, அவர்களிருவரும் மரங்களைப் போல பிறந்த மேனியாக நிறுத்தப்பட்ட பின்னர், திருடர்கள் வண்டிக்குள் ஏறி, அங்கே ஏதேனும் பொருளை அவர்கள் போட்டிருப்பார்களென்ற நினைவினால் தேட, அங்கே ஒரு காகிதம் கிடக்கக் கண்டனர். அது பாலாம்பாளால் எழுதிக் கொடுக்கப்பட்ட காகிதமாதலால், அதை மாத்திரம் காப்பாற்றும்படி சிவஞான முதலியார் அதை உள்ளே போட்டிருந்தார். அது ஏதேனும் முக்கியமான தஸ்தாவேஜாக இருக்குமென்றும், அதனால் தங்களுக்குப் பெருத்த ஆதாயம் ஏற்படலாமென்றும் நினைத்த திருடர்கள் அந்தக் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு கீழே இறங்கினார்கள்; சிவஞான முதலியார் கல்யாணியம்மாள் ஆகிய இருவரிடத்திலும் அபகரித்த பொருட்கள் யாவும் தரையில் தாறுமாறாகக் கிடந்தமையால்

இரண்டு திருடர்கள் லாந்தரையும், கைத்தடிகளையும் தரையில்வைத்து விட்டு, ஒரு துணியை விரித்து, கீழே கிடந்த நோட்டுகள், கடிதம், ஆபரணங்கள் எல்லாம் பொருட்களையும் எடுத்து மூட்டையாகக் கட்டினர்.

முதலில் அடிபட்டுக் கீழே வீழ்ந்த வண்டிக்காரன் மூர்ச்சையடைந்தவன்போலப் பாசாங்கு செய்து, மூச்சு விடாமலும், அசையாமலும் கீழே படுத்திருந்தவன், திருடர்கள் கைத்தடிகளைத் தரையில் அலட்சியமாகப் போட்டுவிட்டு மூட்டை கட்டிய தருணத்தில், தனது கைக்கருகில் கிடந்த மூங்கில் தடிகளில் ஒன்றை ஓசையின்றி இழுத்துக்கொண்டு, குபீரென்று எழுந்து, தனது பலங் கொண்ட மட்டும் ஓங்கி, ஒரு திருடனது மண்டையில் வீச, மண்டை இரண்டாகப் பிளந்துபோய்விட்டது. அந்தத் திருடன், "அப்பாடா" என்று வீரிட்ட ஓசையோடு உணர்வற்றுக் கீழே வீழ்ந்து விட்டான். அதைக் கண்ட இன்னொரு திருடன் வீராவேசத்தோடு கைத்தடியை எடுத்துக்கொண்டு கிளம்ப, வண்டிக்காரன் அவனது மண்டையை நோக்கி அடித்த அடி அவனது உடம்பில் பட்டது. இருவரும் ஒருவருக்கொருவர் தடியால் அடித்து சடேர்படேர் என்ற ஓசையோடு பெருத்த சண்டை செய்யத் தொடங்கினர். அதைக் கண்டு, சிவஞானமுதலியாரும் கல்யாணியம்மாளும் அடி தங்கள் மீது படுமோ என்று அஞ்சி சிறிது அப்பால் விலகிக்கொண்டனர். சிவஞான முதலியார், வண்டிக்காரனுக்கு அநுகூலமாக சண்டைக்குப்போக நினைத்தாராலும், தடி முதலிய ஆயுத மில்லாதிருந்தமையால், அருகிலும் நெருங்காமல் சற்று தூரத்திலிருந்தார்; திருடனும் வண்டிக்காரனும் வீராவேசத்தோடு சிலம்பம் பழகிக்கொண்டிருந்த தருணத்தில் சமீபத்தில் குதிரைக் குளம்படி ஓசை கேட்டது. உடனே சிவஞான முதலியாரும், கல்யாணியம்மாளும் மருண்டு, பாதையின் இருபுறங்களிலும் திரும்பி நோக்க, கலெக்டர் கச்சேரிப் பக்கத்திலிருந்து, யாரோ ஒருவர் ஒரு பெருத்த குதிரைமீது வந்ததைக் கண்டனர்; காணவே திகைப்பும் வியப்பும் ஆயவு மடைந்து கல்லாகச் சமைந்து நின்றனர். இரண்டு நிமிஷநேரம் சென்றது. குதிரை அவர்களுக்கருகில் வந்துவிட்டது. அப்போதே அந்த ஓசையைக்கேட்ட திருடன் அஞ்சி அப்புறம் திரும்பி குதிரை வந்த திக்கை நோக்க, அதற்குள் சிவஞான முதலியாரது வண்டிக்காரன் தனது தடியை ஓங்கித் திருடனது காலில் அடிக்க, அவன் "அம்மாடீ" என்ற கூச்சலோடு தரையில் வீழ்ந்தான். வீழ்ந்தவன்

எழுந்திருப்பதற்குள், வண்டிக்காரன் அவன்மீது பாய்ந்து அவனது உடம்பை நன்றாகக் கட்டிப் பிடித்துக்கொண்டவண்ணம், "ஐயா! எஜமானே! பெட்டியிலே கவுறு இருக்குது எடுங்க" என்று சிவஞான முதலியாரை அழைக்க, அவர் ஓடோடியும் சென்று, பெட்டிக்குள்ளிருந்த பெருத்த மணிக்கயிற்றை எடுத்துக்கொண்டு ஓடிவர, அந்தக் கயிற்றால் வண்டிக்காரன் திருடனது கைகளை மார்போடு சேர்த்து இறுகக் கட்டிவிட்டான். அதே சமயத்தில் "பலே! சபாஷ்!" என்ற சந்தோஷ கூச்சலுடன் குதிரைப் பிரயாணி அங்கே வந்து சேர்ந்தான். அப்படி வந்தது யாரென்று யாவரும் வியப்போடு பார்க்க, அவர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கக் கண்ட சிவஞான முதலியாரும், கல்யாணியம்மாளும் பரம சந்தோஷமடைந்ததன்றி "அப்பாடா! பிழைத்தோம்" என்று கூறியவண்ணம், மிகவும் பரிதாபகரமான பார்வையாக இன்ஸ்பெக்டரது முகத்தை நோக்கினர்; அந்த ஆபத்து வேளையில் கடவுளே தங்களைக் காப்பாற்ற அவ்வாறு வந்ததாகவே நினைத்து ஈசுவரனைத் துதித்தனர். அங்கே வந்த இன்ஸ்பெக்டர் சிவஞான முதலியாரை அழைத்து, அங்கே நிகழ்ந்த சம்பவத்தின் விவரங்களையும், அவர்கள் யாரென்பதையும் கேட்டறிந்த பின்னர், "சரி; நான் சைதாப்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர். இது என்னுடைய டிவிஷனைச் சேர்ந்தது. நீங்கள் எல்லோரும் ஸ்டேஷனுக்கு வரவேண்டும். வந்து வாக்குமூலம் கொடுத்துவிட்டு, உங்கள் ஊருக்குப் போகலாம். ஏறுங்கள் வண்டியில்; அடே வண்டிக்காரா! இந்தத் திருடர்கள் இரண்டு பேரையும் வண்டிக்குள் எடுத்துப்போடு" என்று அதிகாரத்தோடு கூற, வண்டிக்காரன் செத்துப்போய்க் கிடந்த திருடனையும், கட்டப்பட்டுக் கிடந்த திருடனையும் எடுத்துப் பெட்டி வண்டிக்குள் போட்டு, கதவுகளை மூடி நன்றாகத் தாளிட்டான். வண்டியின் பின்புறத்தில், சேவகர் உட்காரும் பலகையில் சிவஞான முதலியாரும் கல்யாணியம்மாளும் உட்கார்ந்துகொண்டனர். திருட்டுச் சொத்துகளடங்கிய மூட்டையை, தாமே பந்தோபஸ்தாகக் கொண்டுவர வேண்டுமென்று கூறி, இன்ஸ்பெக்டர் தமது கையில் வாங்கிக் கொண்டார்; வண்டிக்காரன் வண்டியில் உட்கார்ந்து அதைத்திருப்பி ஓட்டத் தொடங்கினன். சிவஞான முதலியார் தங்களது ஆடைகளை மாத்திரம் தங்களுக்குக் கொடுக்கும்படி கேட்க, இன்ஸ்பெக்டர். ஸ்டேஷனுக்கு வந்துதான் எதையும் தரவேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு, குதிரை தமக்கு அடங்காமல் விரைவாகப் போகிறதாகையால், தான் முன்னால் ஸ்டேஷனுக்குப்

போவதாகச் சொல்லிவிட்டு குதிரையைத் தட்டிவிட்டு, வண்டிக்கு முன்னால் சென்று மறைந்துபோனார். அவ்வாறு அங்கே வந்து தந்திரம் செய்து மூட்டையை அபகரித்துப் போனது, முதல் நாள் அதே வேஷத்தோடு வந்த பெண்ணாகலால், அவள் அடியில் வருமாறு தன் மனதில் எண்ணமிட்டுக்கொண்டு சென்றாள். 'சரி; மாரமங்கலம் ஜெமீந்தாருக்கு நாம் பூர்வ ஜென்மத்தில் கடன் கொடுத்து வைத்தோம். அது இப்போது தானாக என்வழியில் வந்து குறுக்கிடுகிறது. நேற்று, இவளுடைய மகனை மைனர் தன்னிட மிருந்ததை யெல்லாம் கொடுத்தான். இன்று அவனுடைய தாயார் கொடுத்தாள். 'கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிரித்துக்கொண்டு கொட்டாதா' என்று தனக்குள் நினைத்து அளவளாவியவளாய் மாயமாக மறைந்துபோனாள். கால் நாழிகையில் பெட்டிவண்டி சைதாப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனை யடைந்தது. உடனே சிவஞான முதலியார் உள்ளே நுழைந்து விசாரிக்க, அந்த ஸ்டேஷனுக்கு இன்ஸ்பெக்டரே கிடையாதென்றும், சற்றுமுன் எந்த இன்ஸ்பெக்டரும் அங்கே வரவில்லை யென்றும், அவ்விடத்திலிருந்த சப் இன்ஸ்பெக்டரிடத்தில் அவர்கள் கேள்வியுற்று முற்றிலும் திகைத்து ஸ்தம்பமாக நின்றனர்.

---

## 13-ம் அதிகாரம்

## தேள்கொட்டிய திருடன்

கல்யாணியம்மாள் சிவஞான முதலியாரோடு ஆலந்தூரை யடைந்து தனக்கு ஒரு புதிய மருமகளைச் சம்பாதித்துக் கொண்டதற்கு முன் அன்றையதினம் பிற்பகலில் மீனாக்ஷியம்மாளது பங்களாவிற்குச் சென்று, மதனகோபாலனைப் பற்றி பலவகையான அவதூறு மொழிகளைக் கூறி, கண்மணியம்மாளது நிச்சயதாம்பூல முகூர்த்தத்தை மறுநாளிரவில் நடத்தவேண்டு மென்று முடிவு செய்துகொண்டு, அந்த மங்கையை விவரிக்க இயலாத வேதனைகளுக்கு இலக்காக்கி, மீனாக்ஷியம்மாளை அழைத்துக்கொண்டு தனது பந்துக்களும் நட்பினருமான பலரது பங்களாக்களுக்கும் சென்ற காலத்தில் தனிமையில் விடப்பட்ட கண்மணியம்மாளை நாம் சிறிது கவனிப்பது அவசியமாகிறது. அந்த அழகிய மடந்தையின் முக மாறுதல்களையும் துயரத்தையும் தத்தளிப்பதையும் கண்டு, அவள் மதனகோபாலன்மீது காதல் கொண்டிருக்கிறாளென்று கல்யாணியம்மாள் செய்த யூகம் தவறானதல்ல. ஏனெனில், ஒப்புயர்வற்ற

தான மனோகர வடிவத்தையும், கபடமற்ற தயாள மனத்தையும், இனிய கலியாண குணங்களையும், குளிர்ந்த நளின மொழிகளையும், அபாரமான சங்கீத ஞானப் பயிற்சியையும் பரிபூரணமாகப் பெற்றிருந்த அந்த அற்புத மோகனுங்கனான மதனகோபாலனிடம் சிறிது நேரமாகிலும் பழகுவோர், ஆண்பாலராகுனும் பெண்பாலராகுனும், அவனால் கவரப்பட்டு, அவனிடம் வாத்சல்யம் கொண்டே தீரவேண்டும். அவனது இனிய சுந்தர வடிவத்தை, அவனுக்குத் தெரியாமலே தங்களது மனத்தில் பதிய வைத்துக்கொண்டு, இரவு பகலாக அவனை நினைத்தேங்கி, ரகசியத்தில் நெடுமூச்செறிந்து உயிர் சோர்ந்த பெண்டீர் கணக்கி லடங்காதவர். அவ்வாறே அவனது தெய்வீக அமைப்பைக் கண்டு. அவனது சிறப்புகளுள் ஒன்றேனும் தங்களிடத்திலில்லையே என்று நினைத்துப் பொறுமையால் வயிறு வெடிக்கும் நிலைமையை யடைந்த ஆண்பாலரது தொகை அநந்தம். அங்ஙன மிருக்க, ஒத்த அழகும், ஒத்த குணமும், ஒத்த மனப்போக்கும் பெற்றவளான கண்மணியம்மாளது மனதில் அவனது விஷயத்தில் வாத்சல்யமும் பிரேமையும் ஏற்பட்டது விந்தையாகுமா? ஒருகாலும் ஆகாது. ஆனால், அவன் அன்னிய புருஷரிடத்திலும், ஸ்திரீகளிடத்திலும், மகா அடக்க வொடுக்கமாகவும் மரியாதை தவறாமலும் நடந்து, மனதாலும் சொல்லாலும் செயலாலும் எவ்விதமான தீமையும் கருதாமல் பரம யோக்கியனாக நடந்துவந்தா னாதலால், அவனைக் கண்ட மாதர்கள் அவன்மீது மோகங்கொண்டது அவனது நடத்தைத் தவறினால் ஏற்பட்டதாகுமோ என்று எவரும் நினைப்பது உண்மைக்கு மாறான விஷயமாகும். அவனது அற்புத அமைப்பும் இயற்கையான நற்குணங்களுமே விலக்கவொண்ணா மோகனாஸ்திரங்களாகப் பொலிந்து, காண்போரது மனதை அவ்வாறு கவர்ந்தன. காந்தங்கள் சிறிதும் முயற்சி செய்யாமல் இருக்க, இரும்புகள் எப்படித் தாமாகவே அவைகளிடம் செல்கின்றனவோ அப்படியே, மதனகோபாலன் தனது முயற்சியின்றியே பிறரது மனதை வசீகரிக்கக்கூடிய உத்தம புருஷனாக இருந்தான். ஆதலால், கண்மணியம்மாளது மனம் முற்றிலும் அவனது செளந்தரியத்திலும், நற்குண நல்லொழுக்கத்திலும், மிருதுவான அழகிய சொற்களிலும், அவனது சங்கீத வித்தையிலும் ஈடுபட்டு மாறாவகையில் லயித்துவிட்ட தாதலால், அவள், தான் மணப்பதானால், அந்தப் புருஷனையே மணக்கவேண்டுமென்றும், இல்லையானால் தான் தனது உயிரையே மாய்த்துக்கொள்ள வேண்டுமென்

றும், தனக்குள்ளாக உறுதி செய்துகொண் டிருந்தாள். அவளது கருத்தை ஒருவாறு உணர்ந்துகொண்ட மீனாக்ஷியம்மாள் நயத்தினாலும், பயத்தினாலும் அவளது மனவுறுதியை மாற்ற எவ்வளவோ முயன்றதும் வீணாயிற்று. அந்த மங்கையோ தன் மனத்திலிருந்த காதலையும் கருத்தையும் மதனகோபாலனிடம் எப்படி வெளியிடுவதென்பதையும், தான் மாரமங்கலம் மைனரையே மணந்துகொள்ள வேண்டுமென்று பிடிவாதமாகக் கூறும் தனது அத்தையின் மனதைத் தான் எப்படி மாற்றுவதென்பதையும் அறியாமல், தனது மன நிலைமையை வெளியிட, மிகுந்த லஜ்ஜை யடைந்தவளாய், பரம சங்கடமான நிலைமையிலிருந்து தவித்துக்கொண்டிருந்தாள். முதல் நாளைய பிற்பகலில், அழுது விசனித்துக்கொண்டிருந்த தனக்கு மதனகோபாலன் அன்பாகவும் உருக்கமாகவும் தேறுதல் கூறிய காலத்தில், அவள் தனது காதலை ஒருவாறாக வெளியிட நினைத்தாளானாலும் உத்தம ஜாதி ஸ்திரீகளது ஆபரணங்களான நாணம், மடம், அச்சம் என்ற உணர்ச்சிகளால் அவள் தடுக்கப்பட்டுத்தயங்கி, இன்பமோ துன்பமோ வென்று விவரிக்கவொண்ணா விதம் சஞ்சல முற்றிருந்த காலத்தில், மீனாக்ஷியம்மாளும் துரைராஜாவும் தோன்றியதும், அவர்கள் மதனகோபாலனை இழிவுப்படுத்தி, அவன் அதன் பிறகு அந்த பங்களாவிற்குள் வரக்கூடாதென்ற உத்தரவோடு, அவனை வெளிப்படுத்தியதும், பெருத்த இடிகளாக அவளது மனதைத் தாக்கின. அவள் அதே ஏக்கமாக இருந்து வருந்தி ஊணுறக்கமின்றி மன மறுகிச் சோர்ந்து கிடந்தாள். அதன் காரணம் இன்னதென்பதை உணர்ந்தவளான மீனாக்ஷியம்மாள் பலவகையில் அவளுக்கு நற்புத்தி புகட்டி அவளை அன்போடு தேற்றி வந்ததன்றி, சிலமாத காலத்தில் அவள் மதனகோபாலனை மறந்துவிடுவாளென எண்ணி யிருந்தாள்.

அந்த சந்தர்ப்பத்திலேயே மறுநாள் பிற்பகலில் கல்யாணியம்மாள் அவர்களது பங்களாவிற்கு வந்து சேர்ந்து, புண்ணில் கோலிடுவதுபோல கண்மணியம்மாளைச் சித்திரவதை செய்துவிட்டுப் போய்ச் சேர்ந்தாள். அந்தச் சீமாட்டியும் மீனாக்ஷியம்மாளும் மதனகோபாலனைப்பற்றிக் கூறிய அத்தனை சொற்களும், அத்தனை வாள்களைப்போலவும், வேல்களைப்போலவும் அவளது இருதயத்தைத் துளைத்துக்கொண்டு சென்றன. மதனகோபாலனது துர்நடத்தையைப்பற்றி அவர்கள் சொன்ன விஷயங்களையும், மறுநாள் தனக்கும் மைனருக்கும் நிச்சயதாம்பூலம் மாற்றவேண்டுமென்று அவர்கள் முடிவு கட்டியதையும் கேட்கவே, கண்மணியம்மாள் சித்தப்பிரமை

கொண்டவள்போலானாள். அவளது மூளை குழம்பியது; சிரமோ சுழன்றது. கரைகடந்த துக்கமும், அழுகையும் வெள்ளமாகப் பொங்கியெழுந்தன. அடக்க இயலாத விதம் மகா உக்கிரமாகப் பொங்கியெழுந்த மனவெழுச்சியால், அவளது மார்பு படீரென்று வெடித்துவிடும்போல இருந்தது. அவள் தனது வேதனைகளை சொல்லின் மூலமாகவேனும் அழுகையின் மூலமாகவேனும் வெளிப்படுத்தலாமென்பதற்கும், கல்யாணியம்மாளுக்கெதிரில் தான் அவ்வாறு கேவலமாக நடந்துகொள்வது அவளுக்கு அவமானமாகத் தோன்றியது. அந்த நிலைமையில் அவ்விடத்தைவிட்டு எழுந்துபோய்விடலாமாவென்ற ஓர் எண்ணமும் அவளது மனதில் எழுந்தது. ஆனால், தான் அப்படிச் செய்வதைப்பற்றி கல்யாணியம்மாள் ஏதேனும் சந்தேகம் கொள்வாளோவென்று நினைத்து, சொல்லிலடங்கா நரக வேதனை யனுபவித்தவளாய், அந்த மடமங்கை வேதனைக் குவியலாக உட்கார்ந்திருந்தாள்.

அவர்களிருவரும் வெளியிற் போனவுடனே, அப்பெண்பாவை விரைவாகச் சென்று தனது படுக்கையறையை யடைந்து கதவை மூடிவிட்டு அதற்குள்ளிருந்த தனது சயனத்தில் குப்புறப்படுத்து தனது மனதிற்குள் கரை கடந்து பொங்கி யெழுந்து கொந்தளித்து நின்ற விசனவெள்ளத்தைத் தனது கண்ணீர் மூலமாக வெளியிட்டுக் கோவெனக் கதறியழத் தொடங்கவே, பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப் பழித்த அவளது தேகத்தின் ஒவ்வோர் அணுவும், காற்றிலசையும் மாந்தளிர்போல, நடு நடுங்கின. கண்ணீர் வெள்ளமும் வியர்வை வெள்ளமும் ஒன்றுகூடி, அவளையும் அவளது உடைகளையும் கட்டில் மெத்தைகளையும் சுத்தமாக நனைத்துத் தரையிலும் பெருகி வழிந்தோடின. அதே நிலைமையில் அந்தப் பேதை மடவன்னம் பிற்பகல் நான்குமணி நேரம் முதல் மாலை ஏழுமணிநேரம் வரையில் வீழ்ந்து கிடந்து, துக்கசாகரத்தி லாழ்ந்து தேம்பித் தேம்பி அழுவதையன்றி வேறெதையும் செய்ய அறியாதவளாய் உயிர்சோர, உடல்கரைய, மன மறுக, எண்சாண் உடம்பும் ஒரு சாணாய்க் குறுக, தீயிற்கருகும் வாழைக்குருத்தென வதங்கித் துவண்டு கிடந்தாள். ஆகா! மதன கோபாலன் மீது அவள் கொண்டிருந்த காதற்பெருக்கை என்னென விவரிப்பது! அது சொல்லிலும் கணக்கிலும் அடங்கத்தக்கதோ! காட்டுத்தீயினும் வலிதாக ஜ்வலித்தெழுந்த அந்தக் காதல் தீயை ஒரு சிறிதும் பாதிக்க வல்லமையற்ற அவளது கண்ணீர் ஆறானது, தானும் நெருப்பாக மாறி உருக்காக வழிந்தது. அவ்வாறு உணர்வுகலங்கி, அறிவு பிறழ்ந்து, உடல் கருகி, உயிர் தள்ளாடி ஓய்ந்து நெடு

நேரம் கிடந்த அந்தப் பெண்பேதையின் மனம் சிறுகச் சிறுகத் தெளிவுபெற வாரம்பித்தது. அப்போது தானிருந்தது கனவு நிலைமையிலோ அல்லது நனவு நிலைமையிலோவென்று அவள் ஐயமுறலானுள். கல்யாணியம்மாள் மதனகோபாலனைப்பற்றிக் கூறிய மொழிகள் உண்மைபோலவும் தோன்றின; பொய்போலவும் தோன்றின. கல்யாணியம்மாள் மதனகோபாலன்மீது அபாண்டமான அவ்வளவு பெருத்த அவதூறைக் கற்பித்துச் சொல்ல முகாந்திர மில்லையாதலால், அதில் ஒரு பாகமேனும் உண்மையாக இருக்க வேண்டுமென்றும், கல்யாணியம்மாள் தனது வீண் பெருமையினுலும் கோபத்தினுலும் கூட்டியோ குறைத்தோ சொல்லியிருக்க வேண்டுமென்றும் அவள் நினைத்தாள். அன்னிய ஸ்திரீகளின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் நாணும் குணமுடைய மகா உத்தம புருஷனுன மதனகோபாலன் அவ்வளவு தூரம் துணிந்து, கல்யாணியம்மாளிடத்தில் தகாத வார்த்தைகளை மொழிந்திருப்பானே என்ற நினைவே எழுந்து அவளது மனதில் பெருத்த வியப்பையும் திகைப்பையும் உண்டாக்கின. தனக்கே உரியவனென்று தான் மதித்திருந்த அந்த யௌவனப் புருஷன் வேறெரு ஸ்திரீயை நாடினனே என்ற நினைவினு லுண்டான பொறுமை சகிக்கவொண்ணுததாக இருந்தது. தான் அவன்மீது காதல் கொண்டிருப்பதுபோல, அவனும் தன்மீது காதல் கொண்டிருப்பானென்று அவள் அதுகாறும் எண்ணியிருந்த பேதை யெண்ணமானது பொய்த்துப்போனது அவளது உயிரே பட்டுவரென்று தெரித்துப்போனதுபோல விருந்தது. அவளது மனதில் கோடாநு கோடி நினைவுகளும் சங்கடங்களும் எழுந்து அடக்க வொண்ணுத உரத்தோடு முரணிப் போர்புரியத் தொடங்கின. 'ஆகா! இப்படியும் நடக்குமா! என்ன அதிசயம்! கல்யாணியம்மாளிடம் இவ்வளவு கேவலமாக நடந்துகொள்ளக்கூடிய மனிதன் மற்றவரிடமெல்லாம் பரம யோக்கியனைப்போல நடக்கமுடியுமா! மேனியழகும், குணத்தழகும், நடத்தையழகும், சொல்லழகும் அபாரமாக அமைந்துள்ள மனிதன் இப்படிப்பட்ட இழிவிற்கு உடன்படுவானே! சே! இந்த நடத்தை அவனுடைய இயற்கை சுபாவத்துக்கு சிறிதும் ஒத்ததல்ல. அவன் அவ்வாறு செய்யக்கூடியவனே யல்ல. அப்படியானல் கல்யாணியம்மாள் சொன்னது பொய்யோ! இப்படிப்பட்ட கேவலமான காரியம் உண்மையில் நடந்திருந்தாலும், உத்தம குணமும், கண்ணிய புத்தியும் உடைய ஸ்திரீகள், இதை வெளியிட வெட்காரோ! அப்படியிருக்க, கல்யாணியம்மாள் இந்த விஷயத்தில் பொய்யான கற்பனை செய்து இவ்வாறு வெளி

யிட்டாளானாலும், தன் மானத்தைத் தானே கெடுத்துக்கொள்ள நினைப்பாளோ? அவளோ நல்ல உன்னத பதவியி லிருப்பவள்; மகாராணி போன்ற அதிகாரத்தைச் செலுத்துபவள்; புருஷன் இறந்து பதினைந்து வருஷகாலமாகத் தனது கற்புக்குப் பழுதுவராமல் தனது யௌவனப் பருவத்தையெல்லாம் மிகவும் எச்சரிப்பாகக் கழித்தவள். ஆகையால் அந்தச் சீமாட்டி தனக்குத்தானே இப்படிப்பட்ட இழிவையும் பழிப்பையும் உண்டாக்கிக் கொள்ளமாட்டாள். முதலில், இந்த விஷயத்தை, அவள் வெளியிடவும் விரும்பவில்லை அத்தையம்மாளுடைய வற்புறுத்தலினாலேயே அவள் வெளியிட்டாள். ஆகவே, அவள் சொன்னது கற்பனையாக இருக்காது. உண்மையிலேயே மதனகோபாலன் அப்படித்தான் நடந்துகொண்டிருக்க வேண்டும். மற்ற சிறிய பெண்களிடம், தனது எண்ணம் நிறைவேறாதென்று நினைத்து, விதவையான அந்த அம்மாளை சுலபத்தில் தனது வசப்படுத்தி விடலாமென்று நினைத்திருப்பானோ! கல்யாணியம்மாளும் நல்ல கட்டழகுள்ளவளாதலால், அவளது அபாரமான செல்வத்தையும், செல்வாக்கையும், பேரழகையும், விதவை நிலைமையையும் கருதியே, அவன் இவ்வாறு முயற்சி செய்திருக்கவேண்டும். ஆகா! இப்படிப்பட்ட மனிதரிடத்திலா என்னுடைய பிரியமெல்லாம் ஏற்படவேண்டும்! ஐயோ! நான் ஏன் அவனைப் பார்த்தேன். இப்படிப்பட்ட துன்மார்க்க நடத்தையுள்ள மனிதனை எனக்கு வீணை வாத்தியாராக ஏன் அமர்த்தினார்கள்! ஆகா! அந்த மனிதன் என்னுடைய மனதை எவ்வளவு தூரம் நிலைகுலைத்துப் பாழாக்கிவிட்டான். அடடா! அவன் என் விஷயத்தில் இவ்வளவு தூரம் வஞ்சகனாக நடந்திருந்தும், இன்னமும் அவனுடைய சிங்கார வடிவம் என் மனதை விட்டு விலகமாட்டேனென்கிறதே! என் மனதில் அவன் விஷயத்தில் முன்னினும் அதிகமான வாத்சல்யம் சுரந்து பொங்குகிறதே! அவனை இன்னொரு முறை கண்ணாரப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் துடிக்கிறதே! ஆகா, என்ன செய்வேன்! நேற்றைக்கு முந்திய நாள் அவன் இங்கே இருந்த காலத்தில் எவ்வித முகாந்தரமு மில்லாமல், அவனுக்கு இழிவு ஏற்பட்டதுபோல, நேற்றும் கல்யாணியம்மாளுடைய பங்களாவில் தற்செயலாக அவனுக்கு இப்படிப்பட்ட துன்பம் நேர்ந்திருக்குமோ! அவன் உண்மையில் குற்றமற்றவனாக இருந்தால், கல்யாணியம்மாள் வெளியிடும் அவதூறைக் கேட்க, அவனுடைய மனம் எவ்வாறு பதறுமோ! அவன் வீணை கற்றுக்கொடுக்கப் போகும் ஒவ்

வோரிடத்திலும், அவனை இகழ்ந்து வேலையைவிட்டு விலக்கி இருந்தால், ஆகா! அவனுடைய நிலைமை எப்படி இருக்காது! எந்த தெய்வமாகிலும் என் முன்னே வந்து இன்னதுதான் உண்மையான சங்கதி என்று தெரிவிக்குமானால், அது எவ்வளவு அநுகூலமாக இருக்கும்! என்னுடைய நிலைமை பாதிக்கிணற்றைத் தாண்டியவனுடைய நிலைமையைப்போல ஆகிவிட்டதே! என்னைப்போன்ற பாவி ஜென்மம் இந்த உலகத்தில் இருக்கவும் வேண்டுமா! இளம் பிராயத்திலேயே தாய்தகப்பனை இழந்ததும், எத்தனையோ நற்குண புருஷர்கள் நிறைந்த இந்த உலகத்தில் கேவலம் இழிகுணமும் துன்மார்க்க புத்தியும் துர்நடத்தையும் நிறைந்த அதமாதமனான மாரமங்கலம் மைனர் எனக்கென்று புருஷனாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும், அடாடா! நான் பூர்வ ஜென்மத்தில் செய்த மகா பாதகத்தையல்லவா காட்டுகின்றன. எவ்வளவோ அருமையான குணமும் உயர்வான நடத்தையுமுள்ள புருஷனை அந்த மதனகோபாலனிடத்தில் மகா பாவியாகிய நான் ஆசை வைத்ததனாலேதான் அவனும் கெட்டுப் போனானே! என்னுடைய அதிர்ஷ்டஹீனமே அவனையும் கெடுத்து விட்டதோ! அல்லது, அப்படிப்பட்ட விலைமதிப்பற்ற நற்குண மணியான புருஷன் எனக்கு வாய்த்துவிடப்போகிறானே என்ற பொறாமையால், என்னுடைய பூர்வவினையே அவன் விஷயத்தில் இப்படிப்பட்ட சதி செய்ததோ! ஆ! தெய்வமே! என்ன கொடுமை! என்ன கொடுமை!'' என்று கண்மணியம்மாள் பலவாறு நினைத்து நினைத் துருகிப் புரண்டு துவண்டழுதிருந்த தருணத்தில் அவளிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. கையில் பிடித்த விளக்கோடு மீனாக்ஷியம்மாள் உள்ளே நுழைந்து, "என்ன கண்மணீ! மணி எட்டாகிறதே, விளக்குக்கூட இல்லாமல் இருட்டில் படுத்துக் கொண்டிருக்கிறாயே! சாப்பிட நேரமாகிறது; எழுந்து வா'' என்று அன்போடு அழைத்தவண்ணம் அவளது நிலைமையை உற்று நோக்கினாள். அவள் மிகவும் அலங்கோலமாக அழுதுகொண்டு கிடந்ததையும், அவளது அபாரமான கேசம் அவிழ்ந்து விரிந்து தாறுமாறாகப் போயிருந்ததையும் அவளது உடைகளும், மெத்தையும் கண்ணீரினால் முற்றிலும் நனைந்து கிடந்ததையும் காணவே, மீனாக்ஷியம்மாள் பெரிதும் வியப்படைந்து, "அடாடா! என்ன விபரீதம் இது! பகலிலிருந்து இதுவரையில் அழுதுகொண்டா படுத்திருந்தாய்! இவ்வளவு மும்முரமாக அழுவதன் காரணமென்ன?'' என்றாள். அதைக் கேட்ட கண்மணியம்மாள் திடுக்கிட்டெழுந்து, மெத்தையை விட்டிறங்கி, தனது உடைகளையும் கேசத்தையும் விரை

வாக சரிப்படுத்திக்கொண்டு, ஒன்றையு மறியாதவள் போலவும், வேறு எதையோ கவனிப்பவள்போலவும், தனது பார்வையை வேறே பக்கமாகத் திருப்பிக்கொண்டு நின்றுள். உடனே மீனுக்ஷியம்மாள், "கண்மணீ! என்ன இது? நீ என்ன அறியாத குழந்தையா? இவ்வளவு நேரம் எதற்காக அழுதுகொண்டிருந்தாய்? நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டு சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று நான் எவ்வளவோ பிரயாசைப்படுகிறேன். நீ கொஞ்சமும் நன்றி விசுவாச மில்லாதவளாக நடக்கிருயே! இன்னமும் அந்த துஷ்டனுடைய நினைவு உன்னுடைய மனதைவிட்டு நீங்கவில்லையா! அடாடா! இருந்திருந்து உன்னுடைய ஆசை, மிகவும் கேவலமான ஒரு வேலைக்காரனிடத்தில் ஏற்பட்டதுதான் ஆச்சரியமாக இருக்கிறது! நீ ஆசைப்பட்ட மனிதன் என்ன காரியம் செய்தான் பார்த்தாயல்லவா? கள்ளைக் குடித்துவிட்டு கண்ட பெண்பிள்ளைகளை யெல்லாம் கையைப் பிடித்திழுக்கும் குணமுடையவனை ஒரு தாசி மகனைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைக்க, உனக்கு வெட்கம் மானம் ஒன்றுமில்லாமல் போய் விட்டதா? உன்னுடைய ஜென்மம் ஒரு ஜென்மமா? பார்ப்பதற்கு அழகா யிருக்கிறதென்று பனம்பழத்தை யாராவது ஆகாரமாகச் சாப்பிடுவார்களா? கல்யாணியம்மாள் சொன்ன வரலாற்றைக் கேட்ட பிறகாவது நீ உன்னுடைய மனசை மாற்றிக்கொண்டிருப்பா யென்றல்லவா நினைத்தேன். நீ முன்னிலும் அதிகமான சண்டித்தனம் செய்கிருயே! குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டுமென்று சொல்லுவார்கள். அதைப்போல, வாழ்க்கைப்பட்டாலும் பெருத்த சமஸ்தானுதிபதியின் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு மகோன்னத தசையிலிருந்து சுகப்பட வேண்டும். அவன் கூத்தியிடம் போனுனென்றும், குடித்தானென்றும் அவனை எவர்களாவது தூஷிக்க முடியுமா! அப்படிப் பட்ட கெட்ட காரியங்களை அவன் உண்மையிலேயே செய்திருந்தாலும், அதனுல், அவனுக்கு ஏதாவது இழிவு ஏற்படுமா! உலகத்தார் அவனை அவமதிக்க முடியுமா! குப்பையில் விழுந்தாலும் மாணிக்கம் மாணிக்கந்தானே. இப்போது பார்த்துக்கொண்டாயல்லவா வித்தியாசத்தை! மாரமங்கலம் மைனர் எத்தனையோ துன்மார்க்கமான காரியங்களைச் செய்துவருகிருனென்று நீ இவ்வளவு காலமாகச் சொல்லிவந்திருக்கிருயே! அவன் அப்படி நடப்பதால், அவனுக்கு ஏதாகிலும் இழிவு ஏற்பட்டதுண்டா? அவனை யாராவது தங்களோடு பழக யோக்கியதை இல்லாதவனென்று விலக்குகிருர்களா? இந்த மதனகோபாலனைப் பார்; அவன் செய்த

காரியத்தை அறிந்தவுடனே, கேவலமான ஒரு நாயை அடித்து ஓட்டுவதைப்போல எல்லோரும் அவனை விலக்கி தங்களுடைய வீடுகளுக்குள் அவன் நுழையக்கூடாதென்று கண்டித்துவிட்டார்கள். பிச்சைக்காரனுக்கும் மகாராஜனுக்கும் உள்ள தாரதம்மியம் இன்னதென்பது இப்போதாவது உனக்குத் தெரிகிறதா? அசடே! போ. இனிமேலாவது இந்தப் பைத்தியத்தை விட்டுவிடு. நாளையதினம் இரவில் உனக்கும் மைனருக்கும் நிச்சய தாம்பூல முகூர்த்தம் ஜாம் ஜாமென்று நடக்கப்போகிறது. பெருத்த சமஸ்தானத்துக்கே நீ ஒரு மகாராணியைப்போல இருந்து சகலமான சுகபோகங்களையும் அநுபவிக்கப் போகிறாய், நானென்ன இன்றைக்கோ நாளைக்கோ சாகப்போகிற கிழவி. எனக்காகவா நான் இந்த ஏற்பாட்டையெல்லாம் செய்கிறேன் உன்னுடைய நிரந்தரமான நன்மையையும் பெருமையையும் கருதியே, நான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன். மகோன்னத பதவியிலிருந்து சுகமடைந்து அமோகமாக வாழவேண்டிய நீ, நாளையதினம் முகூர்த்தமென்றால், அதைப்பற்றிக் குதூகலமாகப் பொங்கிப் பூரித்திருக்க வேண்டியபோது, அபசகுனமாக இப்படி அழுதுகொண்டிருக்கிறாயே! உன்னுடைய வயதுக்கும் புத்திக்கும் படிப்புக்கும் இது அழகானதல்ல. போனது போகட்டும். இனிமேலாவது சந்தோஷமாக இரு. நேரமாகிறது, சாப்பிடப்போவோம் வா!" என்று மிகவும் அன்பாகக்கூறி அவளை அழைக்க, கண்மணியம்மாள், பாவம்! என்ன செய்வாள்! மதனகோபாலனைப்பற்றிப் பரிந்து பேசுவதற்கும் வழியில்லை. அன்றி, தன் மனதிலிருந்த ஐயங்களையும், மைனரை மணக்கக்கூடாதென்று தான் கொண்டிருந்த உறுதியையும் வெளியிட்டு, அத்தையின் மனதைப் புண்படுத்தவும் அவள் விரும்பவில்லை. ஆதலால், அவள் தனது மனதை வதைத்து வாட்டிய துன்பங்களையும் துயரத்தையும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் பெரும்பாடுபட்டு மறைத்துக்கொண்டு மௌனமாக வாசலை நோக்கி நடக்க வாரம்பித்தாள். அவளுக்கு நல்ல புத்தி வந்துவிட்டதென்று நினைத்துக்கொண்ட மீனாக்ஷியம்மாள் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தவளாய் அவளைத் தொடர்ந்து சென்றாள்.

அன்றைய ராப்போஜனம் முடிப்பது கண்மணியம்மாளுக்குப் பெருத்த வாதை ஆகிவிட்டது. அவள் தனது மனதில் விசனமாகிய ஒரு பெருத்த குன்றை மறைத்து வைத்துக்கொண்டு அத்தையின் தாட்சணியத்திற்காக போஜனம் செய்ததாக நடிக்க நேர்ந்த

தாகையால், அவளது உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அடிக்கடி நடுங்கியது. இரண்டொரு வாய் கவளம் எடுத்து வாயில் போடுமுன் குமட்டல் உண்டாயிற்று. மீனாக்ஷியம்மாள் இடையிடையில் மதன கோபாலனைப்பற்றி இழிவாகப்பேசிய ஒவ்வொரு வார்த்தையும் புண்ணில் மிளகாய் விழுதை அப்பியதுபோல சகிக்கவொண்ணாத வேதனையுண்டாக்கியது. அப்படியிருந்தும், கண்மணியம்மாள் தனது வாயைத்திறந்தே பேசாமல் போஜனம் முடிந்ததாகப் பேர் பண்ணிக்கொண்டு திரும்பவும் தனது படுக்கையை யடைந்தாள். கல்யாணியம்மாளது சுடு மொழிகளினின்று தப்பி வந்தது, அவளுக்கு ஒரு பெருத்த துன்ப நிவர்த்தியாக இருந்ததானாலும் அவளது பழைய நினைவுகள் யாவும் முன்னிலும் ஆயிரம் மடங்கு அதிகரித்த உரத்தோடு எழுந்து அவளது மனதை சல்லடைக் கண்களாகத் துளைக்க வாரம்பித்தன. பரம யோக்கியனான மதனகோபாலன் அப்படியும் செய்திருப்பானோ என்ற வியப்பும் ஐயமுமே எழுந்தெழுந்து அவளது மனத்தில் சான்னித்தியம் செய்ததன்றி மறுநாள் நிச்சய தாம்பூலம் வந்துவிடுமே யென்றும், கேவலம் துர்நடத்தையும் துஷ்ட குணமுமுள்ள மைனரைத் தான் மணக்கநேருமே என்ற பெரும் பீதியும் பெருங் கவலையும் எழுந்து அவளைக் கலக்கிக்கொண்டிருந்தன. அதனால், அவள் அன்றிரவு முழுதும் நித்திரை கொள்ளாமல், தனது இமைகளைத் திறந்தபடியே விழித்திருந்து அந்த இரவுப் பொழுதைப் போக்கினாள். தான் மதனகோபாலனை மணக்கநேராது போய், தனக்கும் மைனருக்கும் கலியாண முகூர்த்தம் குறிக்கப்படுமானால், அன்றையதினம் எப்படியாகிலும் தான் தற்கொலை செய்துகொள்வதே முடிவென, அவள் அதுகாறும் எண்ணியிருந்தவளாதலால் இப்போது மதனகோபாலனும் துர்நடத்தையும், துஷ்டத்தனமும் நிறைந்தவனென்பதை உணரவே அவளது மனம் பதறியது, தான் எவரையும் மணவாமல் தற்கொலை செய்து கொள்வதே உத்தமமெனத் தோன்றியது. ஆனால், மதனகோபாலன் உண்மையிலேயே அப்படிக் கேவலமாக நடந்துகொள்ளக் கூடியவனாக இருப்பானோ என்ற பெருத்த ஐயம் அடிக்கடி எழுந்து, அவளது மன உறுதியைத் தளரச்செய்தது. எப்படியாகிலும், தான் முயற்சிசெய்து மதனகோபாலனைக் கண்டு, கல்யாணியம்மாளிடத்தில் அவன் அவ்வாறு நடந்துகொண்டது உண்மைதானாவென்பதை நேரில் கேட்டால், அவனது சொற்களிலிருந்தும் முகக் குறிகளிலிருந்தும் அவன் எப்படிப்பட்டவனென்பதை தான் எளிதில் உணர்ந்துகொள்ளலாமென்ற ஒரு யோசனைத் தோன்றியது.

ஆனால் தனது பங்களாவிற்கே வரக்கூடாதென்று மீனாக்ஷியம்மாள் அவனைத் தடுத்திருப்பதால், தான் அவனோடு எப்படிப் பேசுவது எவ்விடத்தில் சந்திப்பது என்ற கவலைகள் தோன்றின. பகல் பொழுதில் தான் அவனைச் சந்தித்துப் பேசுவது அபாயகரமாகத் தோன்றியது. மறுநாள் இரவு எட்டரை மணிக்கு தன்னை அவர்கள் சாரட்டில் வைத்து மேளதாளத்தோடு மாரமங்கலத்தாரது பங்களாவிற்கு அழைத்துப்போகப் போகிறார்களென்பதை போஜன சமயத்தில் மீனாக்ஷியம்மாள் சொன்ன வார்த்தைகளிலிருந்து உணர்ந்து கொண்டிருந்தாள். ஆகையால் எப்படியாவது தந்திரம் செய்து மறுநாள் இரவு ஏழரை மணிமுதல் எட்டு மணிக்குள் அவனைச் சந்தித்து, அவனோடு பேசி உண்மையை அறிந்துவிட வேண்டுமென்ற ஒரு வகையான முடிவு அவளது மனதில் ஏற்பட்டது. அப்போது விடியற்காலம் ஐந்துமணிநேர மிருக்கலாம். கண்மணியம்மாள் தனது சயனத்தை விட்டு எழுந்து, அந்த அறையின் கதவை உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டு, மின்சார விளக்கைப் பொருத்தி, ஒரு மூலையில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து, தனக் கெதிரிலிருந்த மேஜையின் சொருகு பெட்டியை (டிராவை) இழுத்து, அதற்குள்ளிருந்த தனது சங்கீத நோட்டுப் புஸ்தகத்தையும் பென்சிலையும் வெளியில் எடுத்து, நோட்டில் எழுதப்படாமலிருந்த பக்கங்களில் ஒன்றைப் பிரித்தெடுத்து வைத்துக்கொண்டு அதில் அடியில் வருமாறு எழுதலானாள்:—

வாத்தியார் அவர்களுக்கு அநேக நமஸ்காரம் செய்து வணக்கமாக எழுதிக்கொள்ளும் விஞ்ஞாபனம்.

ஒரு முக்கியமான விஷயத்தை நான் உங்களிடம் நேரில் தெரிவிக்க விரும்புகிறேனாகையால், நீங்கள் இன்று சாயுங்காலம் ஏழரை மணிக்குமேல் எட்டுமணிக்குள்ளாக, எங்களுடைய பங்களாவின் பின்புறத் தோட்டத்தி லிருக்கும் ஆலமரத்தடியில் வந்திருக்கும்படி பிரார்த்திக்கிறேன். தோட்டத்தின் பின்புற வேலியில் படலினால் மூடப்பட்ட வழி ஒன்றிருக்கிறது. அந்தப் படலின் கட்டை அவிழ்த்து அதைத் திறந்துகொண்டு சுலபமாக உள்ளே வரலாம். உங்களை எவரும் பார்க்கவும் மாட்டார்கள். நீங்கள் வருவதைக் கண்டாலும் தடை செய்யாமலிருக்கும்படி தோட்டக்காரனிடம் நான் சொல்லிவைக்கிறேன் இப்படி ரகசியமாக நீங்கள் உள்ளே வருவதும், நாமிருவரும் சந்திப்பதும் தவறான காரியமென்று நீங்கள் நினைப்பீர்களென்பதை நான் அறிவேன். ஆபத்து சமயத்தில்

பாவம் பார்க்கக்கூடாதென்று சொல்லுவார்கள். அதைப்போல விஷயம் அதிக அவசரமானதும், நிரம்பவும் விபரீதமானது மாதலால், நீங்கள் இதற்குப் பின்வாங்க வேண்டாம். நான் அந்த ஆலமரத்தடிக்கு வந்து அதிகநேரம் காத்திருக்க எனக்கு அவகாசம் கிடைக்காதாகையால், காலந்தவறாமல் நீங்கள் அவசியம் வந்திருக்க வேண்டுமாக மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று நீங்கள் அங்கே வரமுடியாமற் போமானால், இன்றிரவு நான் இறந்துபோய் விட்டேனென்ற செய்தியை நீங்கள் நாளைய தினம் காலையில் அவசியம் கேட்பீர்கள். உங்களுடைய மனதுக்கும் பிடிக்காத ஒரு காரியத்தைச் செய்யும்படி நான் துணிந்து கேட்டுக்கொள்வதைக் குறித்து என்னை மன்னிக்கும்படி பன்முறையும் வேண்டுகிறேன். இந்தக் கடிதத்தின் எழுத்தைக் கொண்டே, நான் யாரென்பது உங்களுக்கு எளிதில் தெரிந்துவிடுமாகையால், இதை நான் கையொப்பமில்லாமல் அனுப்பியிருக்கிறேன்.

—என்று கண்மணியம்மாள் எழுதி அதை மடித்து, தனது இடைக்குள் பத்திரமாகச் சொருகிக்கொண்டவளாய், அப்படியே நாற்காலியில் சாய்ந்து சிறிதுநேரம் சிந்தனையி லாழ்ந்தபின், எழுந்து தனது பஞ்சணையில் படுத்தவள் சிறிது நேரத்தில் துயிலில் ஆழ்ந்து விட்டாள்.

அவ்வாறு ஆழ்ந்தவள் மறுபடி தனது கண்களைத்திறந்து விழித்த போது காலை ஒன்பது மணிநேரம் ஆகியிருந்தது. தனது கட்டிலிற்கருகில் சிறிது தூரத்தில் மிகவும் கடுகடுத்த முகத்தோடு மீனாக்ஷியம்மாள் நின்றுகொண்டிருந்தாள் எப்போதும் சந்தோஷத்தையே காட்டும் தனது அத்தையின் வதனம் அன்று மிகுந்த கோபத்தைக் காட்டியதை கவனிக்க, கண்மணியம்மாளது மனதில் பெருத்த திகில் உண்டாகிவிட்டது தான் எழுதி மடியில் வைத்திருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்து, ஒருகால், மீனாக்ஷியம்மாளது கையில் அகப்பட்டிருக்குமோ என்ற ஐயமும் கவலையும் உண்டாகிவிட்டன. ஒரே நொடியில் அந்த மடமங்கையின் தேகம் கிடுகிடென்று ஆடிப் போய்விட்டது. கையுமெய்யுமாகப் பிடிப்பட்ட கள்வனைப்போல ஒன்றும் பேசமாட்டாமல் தத்தளித்தவளாய், மிகவும் பாடுபட்டுத் தனது சங்கடங்களை மறைத்துக்கொண்ட கண்மணியம்மாள் சயனத்தை விட்டிறங்கி, தனது உடைகள், கேசம் முதலியவற்றைத் திருத்திக்கொள்புவள்போலத் தனது அத்தையின் முகத்தைப்பார்க்காமல்

வேறே பொருட்களைப் பார்த்து சாகஸம் செய்துகொண்டிருந்தாள். மீனாக்ஷியம்மாள் எவ்வாறு கோபித்துக்கொள்ளுவாளோ, எவ்விதமான சொல்லம்புகளைப் பிரயோகிப்பாளோ என்ற பெரும் பீதியினால், ஒவ்வொரு நொடியும் கண்மணியம்மாளுக்குப் பெருத்த யுகமாக இருந்ததன்றி, அடிவயிற்றில் தீ வைத்ததுபோல, அவளது தேகமும் மனதும் விவரிக்க இயலாத வகையில் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தன. அவள் பாசாங்கு செய்கிறாளென்பதைக் கண்ட மீனாக்ஷியம்மாள் வெறுப்பாகவும் விரக்தியாகவும் பேசத்தொடங்கி, "சரி என்ன செய்கிறது; தலைவிதி எப்படியோ அப்படித்தானே புத்தியும் போகும். முகூர்த்தம் வைத்திருக்கிறது என்று சொன்னால் ஊரிலுள்ள பெண்கள் சந்தோஷப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனாலும் இப்படிப்பட்ட அழுமூஞ்சியை நான் பார்த்ததே இல்லை. ஓயாமல் அழுதுகொண்டே இருந்தாயல்லவா! உன் மனம்போல ஆகிவிட்டது; எதற்காகத்தான் இந்தக் காரியம் இப்படித் தடைப்பட்டுக்கொண்டு வருகிறதோ தெரியவில்லை." என்று விசனத்தோடு கூறினாள்.

அதற்குள் கண்மணியம்மாள் தனது சேலையை சரிப்படுத்திக் கொள்பவள்போலத் தனது இடையை ஆராய்ந்து கடிதம் பத்திரமாக இருந்ததைக் கண்டுகொண்டதன்றி, மீனாக்ஷியம்மாளது சொல்லும் அவள் கடிதத்தைப் பார்த்தவளென்பதைக் காட்டாமல், வேறு விதமாக ஏற்பட்ட ஏதோ ஓர் இடையூறைக் காட்டியதை உணர்ந்து கொண்டாள். ஆதலால், கண்மணியம்மாள் ஒருவாறு துணிபடைந்து தனது அத்தையிருந்த பக்கமாகத் திரும்பினாள். திரும்பவே, மீனாக்ஷியம்மாள் மேலும் இவளை உற்றுநோக்கி, "அடாடா! முகம் வெளுத்துப்போ யிருக்கிறது. கண்ணெல்லாம் குழிந்துபோ யிருக்கிறது. ராத்திரியெல்லாம் நீ தூங்காமலே அழுதுகொண் டிருந்தாப்போ லிருக்கிறதே! நீ அழ அழ உன்னிடத்தில் மூதேவிதான் வாசம் பண்ணுவாள். நேற்று ராத்திரி நீ அழுததின் பலன் கைமேல் கிடைத்துவிட்டது; இதோ இந்தக் கடிதத்தைப் பார்." என்று கூறியவண்ணம் தனது கையிலிருந்த ஒரு கடிதத்தைக் கண்மணியின்மேல் கோபத்தோடு வீசி எறிந்தாள். உடனே கண்மணி கீழே குனிந்து அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரிக்க, அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

மகா-ா-ா-ஸ்ரீ மகாகனம் தங்கிய மீனாக்ஷியம்மாள் அவர்களுக்கு அநேக நமஸ்காரம்:

நேற்றிரவு நான் உங்களை உங்களுடைய பங்களாவில் இறக்கி விட்டபின், மைனருடைய போஷகர்களுள் ஒருவரான சிவஞான முதலியாரவர்களை அழைத்துக்கொண்டு, ஆலந்தூரிலுள்ள அவர்களுடைய நெருங்கிய உறவினரான சிலரை நாளைய முகூர்த்தத்துக்கு அழைத்துவிட்டு வரவேண்டுமென்ற கருத்தோடு ஆலந்தூருக்குப் போயிருந்தேன்; போய்விட்டுத் திரும்பி வரும்போது நடுவழியில் கொள்ளைக்காரர்கள் எங்களை வளைத்துக்கொண்டு அடித்து எங்களிடமிருந்த உடைமைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். அதன் சம்பந்தமாக, நாங்கள் சைதாப்பேட்டைப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருந்து, அவர்களுக்கு வேண்டிய வாக்கு மூலங்களை யெல்லாம் கொடுத்துவிட்டு இன்று காலை ஏழு மணிக்குத்தான் பங்களாவுக்கு வந்து சேர்ந்தோம். நேற்று ராத்திரி முழுதும் கண் விழித்ததாலும், திருடர்களிடம் உபத்திரவப்பட்டதாலும் நான் இன்றைய பகல்முழுதும் எழுந்திருக்க சாத்தியப்படாதென்று நினைககிறேன். இன்றைய ராத்திரி நடத்த நாம் உத்தேசித்துள்ள விருந்திற்கும் முகூர்த்தத்திற்கும் ஆகவேண்டிய எத்தனையோ ஏற்பாடுகளில் ஒன்றுகூட இன்னமும் செய்யப்படவில்லை. நாம் குறித்துள்ள காலத்திற்குள் சகல காரியங்களும் முடிவது துர்லபமாக இருக்குமாதலால், இன்றைக்கும் நாளைக்கும் பொறுத்து, மூன்றும் நாள் ராத்திரி இந்த விருந்தையும் முகூர்த்தத்தையும் நடத்திவைக்கத் தீர்மானித்திருக்கிறேன். நேற்று நாம் அழைத்துவிட்டு வந்த ஜனங்களுக்கும் இந்த சங்கதியை சொல்லி யனுப்பிவிட்டேன்.

ஆகையால், எதிர்பாராத காரணங்களால் ஏற்பட்ட இந்த இடையூறைக் குறித்து வருத்தப்படாமல், தயவுசெய்து இந்த இரண்டு தினங்களும் பொறுத்துக்கொள்ளுங்கள். நாளையதினம் நான் நேரில்வந்து விவரங்களையெல்லாம் நன்றாகச் சொல்லுகிறேன். மன்னிக்கவும்.

LOVER CIRCULATING BOOK

இங்ஙனம் அன்புள்ள
கல்யாணியம்மாள்.

—என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை தனக்குள்ளாகவே படித்துப் பார்த்துக்கொண்ட கண்மணியம்மாளது மன நிலைமையை என்னவென்று சொல்வது! நிச்சயதாம்பூல முகூர்த்தம் அன்று நடக்காமல், இரண்டு நாட்கள் ஒத்திவைக்கப்பட்டதை யுணரவே, அவளது உள்ளம் கரைகடந்த மகிழ்ச்சியினால் பொங்கி யெழுந்தது. உட

லம் பூரித்தது. ஈசுவரன் தனது பக்கத்தில் இருந்து மறைவாக ஏதோ சூசனை செய்துவருகிறுனென்று நினைத்தவளாய், அவள் உடனே கடவுளைத் தனது மனதிற்குள்ளாகவே துதித்துக்கொண்டாள்; அந்த இரண்டு நாட்களுக்குள், தான் எப்படியும் முயன்று மதனகோபாலனை நேரில் கண்டு, தனது ஐயத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாமென்ற நம்பிக்கையும், கடவுள் வேறே ஏதாகிலும் ஓர் இடைஞ்சலை உண்டாக்கி அந்த முகூர்த்தத்தை நிறைவேற்ருமல், எப்படியும் தடுத்துவிடுவார் என்ற ஓர் உறுதியும் கொண்டாள். ஆனுல், அவள தனது மகிழ்ச்சியை வெளியில் காட்டிக்கொள்ளாமல், தனது முகக்குறி முதலியவற்றை அடக்கிக்கொண்டவளாய், அந்தக் கடிதத்தினுல் எவ்வித லாபத்தையாவது நஷ்டத்தையாவது அடையாதவள்போல முகமாறுபாடின்றி பழையபடி துயரமே வடிவாக நின்று அந்தக் கடிதத்தை மடித்து மீனுக்ஷியம்மாளிடம் கொடுத்து விட்டாள். அதன் பிறகு மீனுக்ஷியம்மாள் தனது இயற்கைப்படி அந்த விஷயத்தைப்பற்றியே பன்னிப் பன்னிப் பேசி, புண்ணில் கோலைச் சொருகுவதுபோல, அடிக்கடி தனது சொல்லம்புகளால் கண்மணியை வருத்திக்கொண்டே யிருக்க, அதன் பிறகு அவளது காலைக்கடன்களும் பகல் போஜனமும் நிறைவேறின. பகலில் மீனுக்ஷியம்மாள் தானே புறப்பட்டுப்போய், கல்யாணியம்மாளது தேகஸ்திதியைப்பற்றி நேரில் விசாரித்துவிட்டு வருவதாகச் சொல்லிப் போய் விட்டாள்.

தனிமையில் விடப்பட்ட கண்மணியம்மாள் அப்போதே சரியான மூச்சுவிடத் தொடங்கி, தான் நினைத்திருந்த காரியத்தை மீனுக்ஷியம்மாள் திரும்பி வருவதற்குள் முடித்துவிட எண்ணினுள். அவள் உடனே தனது சயன அறைக்குப் போய், மறைவாக உட்கார்ந்து, தனது மடியிலிருந்த கடிதத்தை எடுத்து அதில் சில திருத்தங்களைச் செய்யத்தொடங்கினுள். மதனகோபாலனது மேல்விலாசம், அவளது சங்கீத நோட்டுப்புஸ்தகத்தில் அவனுல் எழுதப்பட்டிருந்ததை, அவள் முன்னுகவே பார்த்திருந்தாளாதலால், அந்தக் கடிதத்தை தங்களது பங்களாவின் வேலைக்காரிகளுள் ஒருத்தியிடம் கொடுத்து, மதனகோபாலனது இருப்பிடத்தில் கொண்டு போய் அதைச் சேர்த்துவிட வேண்டுமென்று, அவள் முதலில் எண்ணி இருந்தாள். அதைத் தபாலில் அனுப்பினுல், அன்றைய மாலைக்குள் அது அவனிடம் போய்ச்சேருமோ சேராதோ வென்ற சந்தேகத்தினுல், அவள் தனது வேலைக்காரியை நம்பி அந்த ரகசிய

மான வேலையை, அவளிடம் ஒப்புவிக்க எண்ணியிருந்தாள். அந்த வேலைக்காரி ஒருவேளை அந்தக் கடிதத்தை தனது அத்தையிடத்திலாவது துரைராஜாவிடத்திலாவது கொடுத்துவிடுவாளோ, அல்லது, தான் மதனகோபாலனுக்குக் கடிதம் கொண்டுபோய்க் கொடுத்ததாக அவர்களிடம் சொல்லிவிடுவாளோ என்ற அச்சமும் கவலையும் அவளது மனத்தில் இருந்தனவாலும், வேறேவழி இல்லாமையால், அவளையே நம்பி அதை அனுப்பவேண்டுமென்று நினைத்திருந்தாள். ஆனால், கல்யாணியம்மாளது கடிதம் கிடைத்த பிறகோ, அந்த எண்ணம் மாறிவிட்டது. ஏனெனில், நிச்சயதாம்பூல முகூர்த்தம் இரண்டு நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுப் போனதாகையால், அதற்குள் மதனகோபாலனிடம் சேர்ந்துவிடும்படி, தான் அதைத் தபால் மூலமாக அனுப்பிவிடலாமென்று தீர்மானித்துக்கொண்டாள். அன்று பகலில் கடிதம் தபால் போடப்பட்டால், அது மறுநாளே அவனிடம் போகும். அவன் ஒருகால் ஊரிலில்லாமல் இருந்து அவன் மறுநாள் வரமுடியாமல் போனாலும் போகலாம். ஆகையால், மூன்றாவது நாளாகிய நிச்சயதாம்பூல முகூர்த்த தினத்தன்று மாலை ஏழரைக்குமேல் எட்டுக்குள் ஆலமரத்தடிக்கு வந்து சேரும்படி எழுதினால், அவன் தவறாமல் வரவும், தானும் சந்தேகத்திற்கு இடங்கொடாமல் ஒரே முறையாக அங்கே போகவும் ஏதோதாக இருக்குமென்று எண்ணியவளாய், கண்மணியம்மாள் கடிதத்தை அவ்வாறே திருத்தி வைத்துக்கொண்டாள். அவளால் தபாற்சாலைக்கு அனுப்பப்பட்ட வேலைக்காரி, அரையணா உறை ஒன்று வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தாள். கண்மணியம்மாள் அதை வாங்கி மேல்விலாசத்தை எழுதி, அதற்குள் கடிதத்தைப் புகுத்தி ஒட்டி அவளிடம் கொடுத்து, பங்களாவின் வாசலிலிருந்த தபாற்பெட்டியில் போட்டுவிட்டு வரும்படி கொடுத்தனுப்பினாள். அந்த வேலைக்காரி எழுத்து வாசனை யறியாதவளாதலால், யாருக்கு எழுதப்பட்டதென்பதை அவள் அறிந்துகொள்ள முடியாதென்று கண்மணியம்மாள் உறுதியாக நம்பி, அவளால் எவ்விதமான துன்பமும் நேராதென்று நினைத்து, அந்த தினத்தின் வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்தவளாய் விசனக்கடலில் ஆழ்ந்து தனக்குத் தானே மனமாழ்கிக் கிடந்தாள்.

---

# மதிப்புரை

## சுதேசமித்திரன் 22-12-1926-ல் எழுதுகிறது:—

## சௌந்தரகோகிலம்

[வடுவூர் ஸ்ரீமான் கே. துரைசாமி ஐயங்கார், பி. ஏ., எழுதியது. இரண்டாம் பாகம் விலை ரூபா **2—4—0**.]

ஸ்ரீமான் துரைசாமி ஐயங்காரை அறியாதவர்கள் தமிழ் நாட்டில் வெகு சிலரே யிருப்பார்கள். சென்ற பல வருஷங்களாக அவர் வெளியிட்டுவரும் பல நாவல்களினின்றும், அவர் தம்முடைய பெயரைத் தமிழ்மக்கள் என்றும் மறவாமற் செய்துகொண்டுவிட்டார். கேவலம் பணத்தாசையால் மனம்போனவாறு கதைகளை எழுதி, படிப்பவர்கள் மனதைக் கெடுத்துவரும் சில ஆசிரியர்களைப் போன்றில்லாது, ஜனானுகூலத்திற்கு உடந்தையான நீதிகளை ஆங்காங்கே புகுத்தி, படிக்கப் படிக்க அலுப்புத் தோன்றாத ஜலப்பிரவாயமான நடையில், உலகானுபவத்திற்கு ஒத்தவிதமாகக் கதைகளை எழுதி, தமிழ் மக்களின் மனதில் உத்தமமான குணங்களையும் தூய்மையான எண்ணங்களையும் பதியவைக்க ஸ்ரீமான் துரைசாமி ஐயங்கார் முயன்று வருவதால், அவர் எழுதும் நாவல்களை ஜனங்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருப்பது சகஜமேயாகும். அவர் சமீபத்தில் வெளியிட்ட "மாயாவினோதப் பரதேசி" என்ற மகுடமுள்ள நாவலை ஹிந்துப் பத்திரிகையில் விமரிசனம் செய்த நண்பர், ஆங்கில பிரெஞ்சு மேதாவிகள் பலர் நம்முடைய பழக்க வழக்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மேனாட்டின் அனுபவங்களை ஒட்டியும், அவர்களுடைய ஆஸ்தையைப் பூர்த்திசெய்து வைக்கக்கூடிய விதமாகவும் எழுதியுள்ள நாவல்களில் உண்மையான உட்கருத்தை உணராமல் மனம் போனவாறும், இந்த தேசத்தின் நிலைமைக்குப் பொருந்தியது போலும் சிலர் திரித்து மொழி பெயர்த்துள்ள நாவல்களைப் படித்து, தமிழ் நாவல்களிலேயே அடைந்திருந்த வெறுப்பை ஐயங்காருடைய நாவல் போக்கிவிட்டதென்று சொல்லியிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. சுமார் 2-வருஷங்களுக்கு முன் வெளியான இந்நவீனகத்தின் முதற்பாகத்தில் கண்ணபிரான் முதலியார் விவாக சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டிருந்ததைப் படித்தவர்கள் அவருடைய கதி யாதாயிற்றோ வென்றும், அவருடைய பெற்றோர்கள் யாரோ வென்

றும், அவரை விவாகம் செய்துகொள்ள இசைந்திருந்த கோகிலாம்பாள் தனது மன உறுதி தவறுதிருந்தாளோவென்றும் தெரிந்து கொள்ள வெகு ஆவலுட னிருந்திருப்பார்கள். அவர்களுடைய ஆவலை இப்பொழுது நம் முன்னிருக்கும் இரண்டாம் பாகம் பூர்த்தி செய்து வைக்கிறது.

முதற் பாகத்தைப்போலவே இரண்டாம் பாகமும் வெகு ரஸமாகவும், படிக்கப் படிக்க மேலே என்ன நடக்கிறதோ வென்னும் ஆவலைக் கிளப்பிவிடக் கூடியதாகவும் இருக்கிறது. தன்னை மணஞ் செய்துகொள்ள விருந்த கண்ணபிரான் முதலியாருக்கு எதிர் பாராத விதமாக ஆபத்து ஏற்பட்டும், அவரையே மணப்பதென்ற உறுதியுடன் கோகிலாம்பாள் அவரைப் பார்க்கச் சிறைக்குச் சென்றதும், வழியில் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய சூழ்ச்சியால் அவர் வசப்பட்டு, அவருடைய வீட்டிலிருந்து வெகு சாமர்த்தியமாகத்தப்பி வருவதும், பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல் வண்டிக்காரனுடைய மோசத்தால் மற்ருெரு ஆபத்தில் அவள் சிக்குவதும், திக்கற்றவருக்கு தெய்வமே துணையென்னும் நீதிவாக்கியம் பொய்த்துப்போகாமல், அவளிடம் மோகாவேசம் கொண்டிருந்த ஒருவர் அவளைப் பரம ஆபத்திலிருந்து மீட்டுவிடுவதும், ஸ்திரீகள் தனித்து வெளியே செல்லக்கூடாதென்பதையும், குற்றங்களை விளக்குவதற்காக ஏற்பட்டிருக்கும் போலீஸ்காரர்களிற் சிலரே தவருன வழியில் நாட்டமுடையவர்களாக இருப்பதையும் அறிவுறுத்துகின்றன. திருவாங்கூர் திவாகை இருந்தவருடைய குடும்ப வாழ்க்கையைப் பற்றிக் கதாசிரியர் செய்திருக்கும் வர்ணனையானது ஸ்திரீபுருஷர்களுக்குள் சகஜமாக இருந்துவரவேண்டிய அன்யோன்யபாவத்தை அறிவுறுத்துவதாக இருக்கிறது. அரபிக் கதைகளில் பாக்ஷா மாறு வேடத்துடன் நகர்சோதனை செய்து வருவதுபோல் இந்த திவானும் தமது மனையாட்டியுடன் வெளியே சென்றிருந்த சமயத்தில் ஒரு உத்தமிக்கு நேர்ந்த இடுக்கணைக் கண்டு கசிந்துருகி, அவளுடைய வரலாற்றை விசாரித்து அவளுக்கு நியாயம் வழங்கியது சில போலீஸ்காரர்கள் சொந்த நன்மையை உத்தேசித்து எத்தகைய தீக்காரியங்களிலும் ஈடுபட்டுவிடலாமென்பதை நிரூபணம் செய்து அவர்கள் விடும் சாக்ஷியங்களில் அதிகமாக நம்பிக்கை வைத்துவிடக் கூடாதென்பதை நீதிபதிகளுக்கு வலியுறுத்துவதாக விருக்கிறது. சதிபதிகள் எத்துணை அன்யோன்ய பாவத்துட

னிருந்தபோதிலும் உலகில் பலவித வதந்திகள் பரவிவருவது இக் கலியுகத்தில் சர்வ சாதாரணமாக இருந்துவருவதை திவான் சாகேப் உலக ஆசையை வெறுக்க நேர்ந்த சந்தர்ப்பங்கள் நிரூபணம் செய்கின்றன. இந்த நவீனகத்தின் இதர விசேஷங்களை விரித்து உரைக்கின் வளருமாதலால் இம்மட்டோடு நிறுத்திக்கொள்ளுகிறோம். இப் புத்தகத்தைக் கையிலெடுத்தவர்கள் இதிலுள்ள 376-பக்கங்களையும் படிக்காமல் இதைக் கீழே வைக்கமாட்டார்களென்பது மிகையாகாது. உத்தமமான தர்மங்களைப் பசுமரத்தாணிப்போல் படிப்பவர் மனத்தில் பதியவைக்கக்கூடிய இத்தகைய சிறந்த நவீனகங்களை வெளியிட்டுவரும் ஸ்ரீமான் துரைசாமி அய்யங்காருக்குத் தமிழ்நாடு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இதுபோன்ற இன்னும் பல நவீனகங்களை ஸ்ரீமான் துரைசாமி ஐயங்கார் வெளியிட்டு வருவதற்கு வேண்டிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தமிழ்மக்கள் அளிப்பார்களென்று நம்புகிறோம்.

## "தேசபக்தன்" எழுதி வெளியிட்டது:—

# பாலாமணி அல்லது பக்காத்திருடன்

விலை ரூபா **2—8—0.**

இது ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் அவர்கள், பி. ஏ, யால் வரையப்பெற்ற விநோதமான துப்பறியும் நாவல். இதில் தத்ரூபமாய்க் கண்ணெதிரில் நடப்பனபோல விஷயங்களை வருணிக்கும் ஆற்றலும், விரிவான உலகானுபவ முதிர்ச்சியும், இதிற் பொதிந்துள்ள அருமையான சம்பாஷணைகளின் நுட்ப விநயங்களும், இதில் தோன்றும் ஆண்பாலாரின் குணவொழுக்கங்களின் அற்புத அமைப்பும் பெரிதும் விரிவாய்ப் புகழற்குரியன. அற்புதமான குணவொழுக்கங்களைப் பெற்ற கேசவ முதலியார், நாகரத்தினம்மாள் முதலியோரைக் கற்பனு சக்தியால் நிர்மாணம் செய்த அவ்வபார வல்லமையே பெரிதும் பாராட்டற்பாலது. கூளங்காளனது கொள்ளைக் கூட்டத்தார் புரிந்த கொள்ளை, கொலை முதலிய கொடிய செயல்களும், அவர்கள் பலவாறு உருமாறிச் செல்லும் திறமையும், அவர்களைப் பிடிக்கும்பொருட்டு வந்த இன்ஸ்பெக்டர் ரஞ்சிட்சிங்கை அவர்கள் பன்முறை கொல்ல முயல்வதும், இறுதியாக அவர் பற்பல வேடந்தரித்துச் சென்று அவர்களைப்பற்றிச் சிறைப்படுத்துவதும் பெரிதும் அச்சத்தையும் வியப்பையும் ஈகின்றன. இக்கதை தொடக்க முதல் இறுதிகாறும் படிப்போர் உள்ளத்தை மிகவெளிதிற் கவர்ந்து தேனெழுகச் செய்கின்றது.

# மதிப்புரை

## சுதேசமித்திரன் 1-6-26-ம் தேதியில் எழுதுகிறது:—

## மாயா விநோதப் பரதேசி

[ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதியது:
இரண்டு பாகங்கள்: 856 பக்கங்கள்: விலை ரூபா **5.**]

ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்காரைத் தமிழ்உலகம் நன் கறியும்; அவர் ஏற்கெனவே எழுதிய பல அரிய நாவல்கள் தமிழ் நாட்டினரைப் பரவசப்படுத்தி யிருக்கின்றன வென்பதிலேயமில்லை. எனினும், மாயா விநோதப் பரதேசி யென்னும் நாவலானது, மேனுடுகளில் பலரும் நம் நாட்டிற் சிலரும் சாசுவதமான நன்மையை விளைவிப்பதில் நாட்டமின்றி, தங்களுடைய நாவல் விலையாகிப் பணம் கைக்கு வரவேண்டு மென்ற ஒரே எண்ணத்துடன் உசிதாவுசிதம், யுக்தாயுக்தம் முதலியவைகளைக் கவனியாது படிக்கும்போது மட்டில் ஒருவித இன்பத்தை விளைவிக்கக்கூடியதாகவும், சில சமயங்களில் தீய வழிகளிலும் பிரவர்த்தித்துவிடப் படிப்போரைத் தூண்டிவிடக்கூடிய வழியிலும் எழுதியிருப்பதைப் போலில்லாது நமது நூலாசிரியர் தற்காலம் நமது சமூகத்திலிருந்து வரும் குறைகளை உணர்ந்து அவைகளைப் பரிகரிக்கும் நோக்கத்துடன் படிப்பவருடைய மனதில் நல்வழியான வாழ்வில் நாட்டம்கொள்ள வேண்டுமென்ற ஆவல் சுலபமாய் உதிக்கக்கூடிய விதமாக எளிய நடையிலும் மனதை உருக்கக்கூடிய விதமாகவும் நாவல்களை எழுதிவருவதற்குத் தமிழ் மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறார்கள். நம் முன்னிருக்கும் இந்த நாவலில் மனித வாழ்வில் சுகதுக்கங்கள் மாறி மாறி வருவது இயல்பென்பதையும், "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்பதையும், "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதையும், மேனுட்டுக் கல்விமுறையினுலும் சகவாஸ தோஷத்தினுலும் ஏற்படக்கூடிய கேடுகள் இன்னவை யென்பதையும், ஸத்சங்கத்தால் எவ்விதம் சரீரத்தில் வெகு காலமாக ஊறிப்போயுள்ள கெட்ட வழக்கங்களையும் சுலபமாக விட்டுவிடக்கூடியது சாத்திய மென்பதையும், மனிதருடைய புத்தி யுக்தியால் எத்துணை விஷயங்களையும் எவ்விதம் சுலபமாகக் கண்டுபிடித்துவிடக் கூடுமென்பதையும் நூலாசிரியர் வெகு அழகாயும், தெள்ளிய நடையிலும், படிக்கப் படிக்க இன்பத்தைக் கொடுக்கக்கூடிய விதமாகவும் வர்ணித்திருக்கிறார். முன்னர் இந்நூலாசிரியர் வெளியிட்டுள்ள திகம்பர சாமியார் என்ற கதையின் தொடர்ச்சியாக இக்கதை யிருக்கிறது. அந்தக் கதையில் கண்ணப்பாவும், வடிவாம்பாளும், திகம்பர சாமியாரும் முக்கிய பாத்திரங்களாக விளங்கியதுபோல் இதில் கண்ணப்பாவின் சகோதர

ரான கந்தசாமியும், முடிவில் அவருடைய மனைவியான மனோன்மணியும், திகம்பர சாமியாரும் முக்கிய நடிகர்களாக இருக்கின்றனர். கல்வி அறிவில் கரைகடந்து மேனாட்டுப் பழக்க வழக்கங்களிலும் சம்பிரதாயங்களிலும் முழுகி, நமது புராதன தர்மங்களில் மிகுந்த வெறுப்படைந்திருந்த கதாநாயகியை கந்தசாமிக்கு மணமுடிக்க உபயகுலப் பெற்றோர்களும் தீர்மானம் செய்திருந்தும், பூர்வீக தர்மங்களில் கண்ணுங் கருத்துமுடையவனாயினும் தான் மணஞ் செய்து கொள்ள விருக்கும் பெண்ணை நேரில் கண்டு அவளுடைய குணாதிசயங்களை அறிந்துவர விரும்பிய கந்தசாமி தனது நண்பரொருவருடன் அவருடைய மனைவிபோல் வேடம் பூண்டு பெண்ணைப் பார்க்கச் செல்லுவதும், கந்தசாமியின் பெற்றோருடைய குடும்பத்தாரிடத்தில் தீராவைரம் வைத்திருந்த சிலர் தங்களுடைய க்ஷாத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளக் கருதி மணமகளைக் களவாட வருவதும், பெண்ணைப் பார்க்கவந்தவர்கள் சொல்லியபடி மணமகளின் குடும்பத்திற்கு அவர்கள் பந்துக்களல்ல வென்பதை மணமகளின் பிதா உணர்ந்ததும், அவர்களை அவர்களறியாமல் சிறைவைப்பதும், மணமகளைக் களவாட வந்தவர்கள் பெண்வேஷத்துடன் வந்திருந்த கந்தசாமியைக் களவாடிச் செல்லுவதும், அவனை சட்டநாதபிள்ளையின் சகோதரன், புருஷன் என்பதை அறியாமல் விவாகம் செய்துகொள்ளுவதும், அவனிடமிருந்து கந்தசாமி சாமார்த்தியமாக வெளிப்படுவதும், திகம்பர சாமியாருக்கு அவருடைய விரோதிகள் செய்யும் கேடுகளும், அவைகளிலிருந்து அவர் தப்பி சமயத்திற்குத் தகுந்த வேடந்தரித்து தமது நண்பர்களுக்கு உதவி செய்துவருவதும், காணமற்போன கந்தசாமி திரும்பிவர வேண்டுமென்று அவனுடைய பெற்றோரும், உற்றாரும், தெய்வப்பிரார்த்தனை நடத்துவதும், அது காலை கந்தசாமியின் தகப்பனார் செய்வத்தை தொழுத பாடல்களின் உருக்கமான தன்மையையும் அவைகளின் உட்கருத்தையும் உணர்ந்த மனோன்மணி தனது புத்தியை மாற்றிக்கொண்டு உத்தமப்பெண்மணியாக மாறிவிடுவதும், முடிவில் கந்தசாமி க்ஷேமமாகத் திரும்பி வந்தபிறகு இருவருக்கும் சுபமுகூர்த்தத்தில் விவாகம் நடைபெறுவதும் இந்த நாவலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. படிப்பவருடைய மனதில் நல்லெண்ணங்களும், தெய்வபக்தியும், சுதாவாகவே எழுந்து நவீன நாகரிகத்தில் வெறுப்பு ஏற்படக்கூடிய விதமாக இது எழுதப்பட்டிருக்கிறது. இத்துணை உயரிய நாவல்களை எழுதித் தமிழ் உலகிற்கு உதவிவரும் இந்நூலாசிரியருக்குத் தமிழ் மக்கள் தங்கள் பூர்ண ஆதரவைத் தந்து, மேன்மேலும் இத்துறையி லீடுபட அவருக்கு ஊக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட் டிருக்கிறார்கள்.

புதுவை செந்தமிழ் வாசகசாலையாரால் கொடுக்கப்பட்ட
நற்சாக்ஷிப் பத்திரமும் தங்கப்பதக்கப் பரிசும்.

கனம் வடுவூர்

# K. துரைசாமி ஐயங்கார் அவர்களுக்கு

அநேக வந்தனம்; உபயக்ஷேமம்.

கற்றோர் மணியே!

நீவிர் தற்கால நவீன முறையில் ஜனானுகூலத்திற்கு உடந்தையான நீதிகளைப் புகுத்தி ஒவ்வொரு மதிதோறும் தென்னாடெங்கும் நிலவ விடும் மனோரஞ்சனிச் செல்வியை யாம் அன்புடன் வரவேற்கின்றோம். அதன்கண் படர்ந்துவந்த மேனகா, திகம்பரசாமியார் என்னும் நாவல்களை வெகு பிரியத்துடன் வாசித்து இன்பெய்தினோம். தங்களா லெழுதப்படும் நாவல்களை யாம் வாசிக்க ஆரம்பித்துவிடின் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளையும் மறந்து அந்நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு அது வாசித்து முடிவெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படியாய் விடுகின்றது. இதை நோக்க தாங்கள் நாவல் எழுதும் ஆற்றலில் அதிகத் தேர்ச்சியடைந்திருப்பதன்றி ஜனங்களது கவர்ச்சியை முழுதும் கிரகிக்கத் தகுந்த அரிய விஷயங்களை தாங்கள் திரட்டித் தீட்டிவிடும் நவீனகமான முறையானது எம்போன்றா ரெல்லோரும் மிகுதியாய் மெச்சத்தகுந்ததாக வொளிர்கின்றது. அதில் ஒவ்வொரு பக்கத்திலுங் காணப்படும் பல நன்னீதிகளை அவசியம் கவனிப்போர்கள் நிச்சயமாக நல்லவர்க ளாவார்களென்பது உறுதி. தங்களது நவீன முறையிற் சிறந்த பேராற்றலை நோக்கித் தங்கட்குப் பலரும் பல நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க வெள்ளிப் பதக்கப் பரிசுகளும் தந்து, தங்களை உற்சாகப்படுத்தி இருக்கின்றனர். யாமும் எமது செந்தமிழ் வாசகசாலையாரும் தங்களது ஆற்றலையும் திறமையையும் வியந்து இப் பொற்பதக்கப் பரிசை மனப்பூர்வமான வந்தனத்துடன் அளிக்கின்றோம். இதைக் காணும் பல மேதாவிகளும் இன்னும் இதுபோன்ற பதக்கங்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் தந்துதவி தங்கட்கு உற்சாக முண்டுபண்ணி இன்னும் இதுபோன்ற பல நவீனகத்தை வரையத் தகுந்த பேராற்றலை அதிகப்படுத்துவார்களென்று நம்புகின்றோம்; ஆண்டவன் துணை செய்க.

செந்தமிழ் வாசகசாலை,
86-நெ. காளத்தீஸ்வரன் கோவில் தெரு,
புதுவை. 30—3—1921.

இங்ஙனம்
அ. ந. நரசிங்க முதலி,
அக்கிராசனன்.

# எமது அன்பின் சாத்துகவி

மறையவர்தம் குலமணியே! மன்னுபுகழ் ஒளிவிளக்கே!
மதிக்குஞ் சீர்த்தித்
துறையிலுயர் சீமானே! துகளறுநூல் பலவுதவும்
தோன்றலே! நன்
மருதமுள வேலிபல சூழ் வடுவூர் வருபுனித
வாழ்வே! அன்பாம்
தருமதுரை சாமியெனும் தவக்கொழுந்தே! நீடூழி
தழைத்து வாழி.

எமதுமனோ ரஞ்சனியே! எழில்வழியும் திலகநுதல்
இளைய நங்காய்!
தமிழுலகோர் போற்றி மெச்சும் தகையணங்கே
தண்கமலத் தையலாளே!
அமையுமனத் துரைசாமி யனுபவித்துப் பயந்தளித்த
அழகார் பெண்ணே!
நமதுகர தலத்திருந்து நற்போத மருளியெந்த
நாளும் வாழி

மேனகையின் காதையென்னே! மெல்லியளாம் வடிவாம்பாள்
மேன்மை யென்னும்
தேனுக்கும் திகம்பரத்தின் சரித மென்னே!
தெவிட்டா வின்ப
மோனவித்யா சாகாரின் மொழிபுனைந்த வீனகத்து
முதிர்ச்சி யென்னே!
வான் மதன கல்யாணி வளமைபுனைந் துரையாக
வகுக்கொணாதால்.

இத்தகைய நும்மாற்றல் இலங்குபுகழ்ச் சரிதமெனும்
இசைத்தேன் மாந்திச்
சித்தமிலே தெளிவுபெற்றும்; செப்பரிய பேருவகைச்
சலதி ஆழ்ந்தாம்;
புத்தமுத வாரிதியாய்ப் போதகமே நிறைந்தொளிரும்
புனித நூலாய்
ஒத்தபல கலையுதவி உயராயுள் மிகப்பெருகி
உய்க மாதோ.

S. G. செல்லப்பா ஐயர்,
Female Actor,
C. CUNNIAH COMPANY,
CAMP TRICHY,

4-1-1923,

பிரபல நாவலாசிரியரும், தங்க மெடல்கள்
பரிசுப் பெற்றவருமான
வடுவூர். K. துரைசாமி அய்யங்கார் B. A.
அவர்களால் இயற்றிய

# தேனினுமினிய தமிழ் நாவல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார் 2-பாகங்கள் | .... | 4 | 8 |
| மாயாவிநோதப்பரதேசி 2-பாகங்கள் | .... | 7 | 0 |
| மதன கல்யாணி 3-பாகங்கள் | ... | 7 | 0 |
| பூர்ண சந்திரோதயம் 4-பாகங்கள் | .... | 10 | 0 |
| மேனகா 2-பாகங்கள் | .... | 4 | 8 |
| பாலாமணி | | 3 | 8 |
| சௌந்தர கோகிலம் 3-பாகங்கள் | .... | 8 | 0 |
| வஸந்தமல்லிகா | .... | 2 | 8 |
| வித்தியாசாகரம் | .... | 2 | 4 |

கிடைக்குமிடம்:— B. இரத்தின நாயகர் சன்ஸ்,
நெ. 57. வெங்கட்ராமய்யர் தெரு, மின்ட் போஸ்டு,
சென்னை—1.

CIRCULATING LIBRARY